A. M. D. G.

மன்ரேசா

அர்ச். லொயோலா இஞ்ஞாசியார் எழுதிய

ஞான முயற்சிகளின்

பிரதான சில முயற்சிகளை விவரிக்கும்

தியானப் பிரசங்கங்கள்

இஃது

காலஞ்சென்ற

சேசுசபை சந்தியாகப்பர் சுவாமியவர்களால்

இயற்றப்பட்டு

சேசுசபை மரிய இஞ்ஞாசியார் சுவாமியவர்களால்

பரிசோதித்துத் திருத்தப்பட்டது

ஆறாம் பதிப்பு

Printed and Published by Rev. Fr. A. Susai Regis, Superintendent,
St. Joseph's Industrial School Press,
Trichinopoly.
Q. H. No. Ty. 1, 1948.



Imprimatur :

✠ JAMES,

Bishop of Trichinopoly.

IN MEMORIAM

—//—

IN AFFECTIONATE REMEMBRANCE

OF

THE VERY REV. FATHER LEO BARBIER, S.J.,

THE FORMER SUPERIOR OF THE MADURA MISSION

AND

THE RECTOR OF ST. JOSEPH'S COLLEGE, TRICHINOPOLY,

THIS BOOK, WHICH OWES ITS ORIGIN

TO HIS SUGGESTION AND ENCOURAGEMENT,

IS INSCRIBED BY

THE AUTHOR.

APPROBATION

Letter from
His Lordship MGR. BARTHE S.J.,
Bishop of Trichinopoly

To the Author

KODAIKANAL :
16th September, 1911.

REV. FATHER,
P.C.

You are about to publish in Tamil a book called **Manresa** or *The Spiritual Exercises* of our Holy Father, *St. Ignatius.* I congratulate you on the work you have undertaken and invoke God's blessing on the book.

It is my belief that this book will serve to make known the worth and use of the golden book of our Holy Father and thus procure the greater glory of God and the salvation of souls.

I am, Rev. Father,
Yours sincerely in Jesus Christ,
✠ JOHN MARY, S.J.
Bishop of Trichinopoly.

Letter from

His Lordship the Bishop of Kumbakonam

BISHOP'S HOUSE,
Kumbakonam
7th October, 1911.

Bien cher et Révérend Frère,

Le "**Manrésa**" que vous venez de publier en langue Tamile est destiné à faire un bien immense parmi les Chrétiens du pays.

Le volume est bien imprimé : ce qui lui attirera beaucoup de lecteurs.

Je vous remercie de me l'avoir envoyé, et je fais mes compliments au R. P. Santiago, S.J., d'avoir été choisi de Dieu pour cette bonne œuvre que je lui envie.

En N. S. Votre bien dévoué,
✠ H. M. BOTTERO, ÉV.

முகவுரை

நமது தேவ இரக்ஷகரான சேசுநாதர்சுவாமி படிப்பித்த சத்திய வேதத்தை அநுசரித்து நடக்கும் கத்தோலிக்கு கிறீஸ்துவர்கள், நாம் வாழும் இந்த செந்தமிழ் நாட்டில் அநேகம் பேர்கள் இருக்கிறார்கள். கிறீஸ்துவர்களின் சபையும் தேவ உதவியால் நாளளவில் பல இடங்களில் விர்த்தியாகி ஸ்திரங்கொண்டு செழித்து வளருவதை நாம் எல்லோரும் சந்தோஷத்தோடு பார்த்து வருகிறோம்.

கிறீஸ்துவ ஜனங்களைச் சத்திய வேத அநுஷ்டான முறைமைகளில் ஸ்திரப்படுத்தி, அவர்கள் நல்லொழுக்கத்திலிருந்து தவறிப் பிசகி விழாதபடி, அவர்களைக் காப்பாற்ற ஏதுவாயிருக்கும் பல அற்புத ஞான உபாய வழிகளுக்குள்ளே, சேசுசபையை ஏற்படுத்திய அர்ச். இஞ்ஞாசியார் எழுதித் தந்த **ஞான முயற்சிகள்** மகா முக்கிய சாதனம் என்று சமஸ்தரும் ஒரே சம்மதமாய் ஏற்றுக்கொள்ளுவார்கள்.

இதின் நிமித்தம் மேற்றிசை கிறீஸ்துவ தேசங்களில் நடப்பதுபோல், நமது நாட்டிலும் இரட்சணிய அநுகூலமான **ஞான முயற்சிகளைப்** பல இடங்களில் இந்தக் காலத்தில் பிரசங்கித்து வருகிறார்கள். இந்த அற்புத **ஞான முயற்சிகளைக்** கிறீஸ்துவர்கள் செய்யுங்காலத்தில் தனியேயாவது, எல்லாருக்கும் பொதுவிலாவது வாசிக்கும்படியாய் ஏற்ற புஸ்தகங்கள் தமிழில் இருக்கின்றன. இவைகளில் அர்ச். இஞ்ஞாசியார் எழுதிய **ஞான முயற்சிகளை,** அவர் கருத்துக்கிசைந்தவண்ணமாய், சாமானிய ஜனங்களும்

எளிதில் அறிந்து மனதில் சார உணரும்படியான வகையில், விரிவாயும், இனிய தமிழ் மொழியினும் விவரிக்கும் புஸ்தகங்களிருக்கலாம். ஆனால் நான் அறிந்தமட்டும் இவ்வித புஸ்தகங்கள் இருப்பதாகத் தோன்றவில்லை.

இதுகாரணம் நிமித்தமோ வேறு எது காரணத்தை முன்னிட்டோ, இறந்துபோன அதிசிரேஷ்டர் **லேயோ பார்பியே** சுவாமியார், **ஞான முயற்சிகளைக்** கிறீஸ்துவ ஜனங்களுக்கு விரிவாயும், பிரயோசனமும் இன்பமுங் கலந்த வகையிலும், விவரித்து விளக்கும் ஓர் புஸ்தகத்தை எழுதும்படியாய் என்னைக் கேட்டார். அவர் சொல்லை ஓர் கட்டளையாக நான் மதித்து, இந்தப் புஸ்தகத்தை எழுதத் துவக்கினேன்.

பல வேலையாலும், பல காரணங்களாலுந் துவக்கின வேலையைத் தொடர்ந்து செய்து முடிக்கும்படிக்கான சாவகாசமும், சந்தர்ப்பமும், நேரமும் இல்லாததால் இவ்வளவு தாமதஞ் சென்றது.

இப்போது பிரசுரமாய் வெளிவரும் இந்தப் புஸ்தகத்தில் எட்டுநாள் அளவும் **ஞான முயற்சிகளைச்** செய்ய ஏதுவான தியானங்களும், ஞான போதகங்களும், இவைகளைச் சேர்ந்த ஒழுங்குகளும், விவரங்களும் அடங்கியிருக்கின்றன. சர்வேசுரனுடைய விசேஷ கிருபையால், சேசுசபையின் பிள்ளையாய் நான் நாற்பது வருஷங்களுக்கு அதிகமாயிருந்த பாக்கியமான அதிர்ஷ்ட காலத்தில், வருஷந்தோறும் **ஞான முயற்சிகளைத்** தேவ ஞான அறிவில் தேர்ந்த குருக்களின் வாயிலிருந்து படித்தும், நானே பல இடங்களில் போய் பல சபையோருக்கு இந்த **ஞான முயற்சிகளைப்** பிரசங்கித்தும் வந்ததால், இதில் கொஞ்சம் அநுபவமும் அப்பியாசமும், எனக்கு இருக்கக்கூடுமென்று

நான் சொன்னால், இப்படிச் சொல்வதற்கு தகுந்த ஆதாரம் இருக்கின்றதென்று புத்தியுள்ளவர்களுக்குச் சொல்லாமலே விளங்கும்.

இவ்வளவு அநுபவம் எனக்கிருந்தும் இந்தப் புஸ்தகத்தில் பல குறைகளிருப்பதாக பலபேர்கள் காண்பார்கள். நானும் இதில் பல குறைகளிருக்கின்றதென்று மனப்பூர்வமாய் அங்கீகரிக்கிறேன். சிலர் இதிலுள்ள தியானங்கள் வெகு விரிவாய் அகன்று விரிந்திருக்கின்றதென்பார்கள். சிலர் இதில் அநாவசியமான சங்கதிகளைச் சேர்த்திருக்கின்றதென்று சொல்லுவார்கள். வேறு சிலருக்கு வசன நடையும் வார்த்தைகளும் வெகு விநோதமாயும் விகாரமாயும் இருப்பதாகத் தோன்றும். இப்படியாய் பலபேர்கள் பலவகையாய் தங்கள் அறிவுக்கும் படிப்புக்குந் தகுந்தாப் போல் பல குறைகளை எடுத்துக் குறைகூறுவார்கள்.

எல்லாருக்கும் பரிபூரண திருப்தி உண்டாகும்படியாய் புஸ்தகம் எழுதுவது இந்த உலகத்தில் எவராலும் கூடுமான காரியமல்ல. அதிலும் அர்ச். இஞ்ஞாசியார் எழுதிய **ஞான முயற்சிகளை** அவர் கருத்துக்கிசைந்தவண்ணம் விவரிப்பது அவர் காலத்திலேயே கஷ்ட சாத்தியமாயிருந்ததாக அவர் சரித்திரத்திலிருப்பதை வாசிக்கலாம். சர்வேசுரனுடைய அதி உத்தம மகிமையையும், பிறருடைய ஆத்தும இரக்ஷணியத்தையும் பிரதான நோக்கமாய் என் கண் முன் வைத்து, உடலில் உயிர் தங்கும் நாள்மட்டும், என்னால் செய்யக்கூடுமானதெதுவோ, அது எவ்வளவு சொற்பமாயினும், அதை மூத்தோர் சொல்லுக்கிணங்கிச் செய்து கடைசியில் சாவது என் பெரிய பாக்கியமாக நான் என்றும் மனதில் எண்ணிவந்திருப்பதால், இந்த **ஞான முயற்சிகளின்** வியாக்கியானத்தை எழுதுவதில் பலவகையில் வந்த

பல சங்கடங்களைக் கவனியாமல், சந்தோஷமும் உற்சாக மும் உள்ள மனதோடு இதை எழுதி முடித்தேன். இத ஞல் சர்வேசுரனுக்கு மகிமையும் ஸ்துதியும் உண்டாஞல் அதுவே போதும்.

அர்ச். இஞ்ஞாசியார் இஸ்பானியா தேசத்திலுள்ள **மன்ரேசா** என்ற கெபியில் ஜெபமும் தபமும் செய்து வரும்போது தேவ ஏவலாலும் தேவதாயின் விசேஷ உதவியாலும் இந்த **ஞான முயற்சிகளை** எழுதிஞர். இதின் நிமித்தம் நான் எழுதிய **ஞான முயற்சிகளின்** வியாக்கியா னத்திற்கு **மன்ரேசா** என்ற சிறப்புப் பெயர் கொடுத்து இந்தப் புஸ்தகத்தை, என் ஞானத் தந்தையான அர்ச். இஞ்ஞாசியார் பாதத்தில், ஓர் தக்ஷணையாக நேர்ந்து வைக் கின்றேன்.

சேசுசபை, **J. சந்தியாகப்பர்.**

மூன்றும் பதிப்பின் முகவுரை

1926-ம் ஷூ ஜனவரி-மீ 22-ம் உ முற்பகல், மிக. வந். திருச்சி மேற்றிராணியார் ஆண்டவரவர்களும், சேசு சபை சுவாமிமார் பலரும் சூழ்ந்து நிற்க, மரண பயங்கரம் யாதுமற்றவராய், அமைதியாய் நித்திரை செய்பவர்போல், பரலோக பிராப்தியானூர் எழுபத்தெட்டு வயது முதிர்ந்த சங்கைக்குரிய வயோதிகர் சேசுசபை **சந்தியாகப்பர்** சுவாமியவர்கள். சந்தியாகப்பர் என்றூல்,—இவருடைய தூய்மையும் வாய்மையும், கல்வித் திறமையும், பிரசங்க வல்லமையும், தெய்வ பக்தியும் இத்தமிழ்நாட்டில் அறியாதார் யாவர்! இவருடைய ஜீவிய வரலாறு சமீபத்தில் தனிப் புத்தகமாய்ப் பிரசுரிக்கப்படுமென்பதால், அதனை இங்கு விரித்துரைத்தல் அனுவசியம்.

அமிர்தமாரி பொழிந்தாற்போல், தமிழ்நாடெங்கும் சந்தியாகப்பர் மொழிந்துவந்த இனிய பிரசங்கமாரி நின்று விட்டதென்றூலும், அவர் எழுதித் தந்த சில நூல்கள் தமிழ் மக்களுக்கு எக்காலமும் சிறந்ததோர் பிதிரார்ஜிதமாம்! இப்பிதிரார்ஜிதத்தின் நற்பாகம் ஒன்று **மன்ரேசா** என்ற பிரபந்தமாகும்! இரு பதிப்புப் பிரதிகள் யாவும் முற்றிலும் விற்பனையாகி, சில வருஷங்களாகப் பற்பல இடங்களிலிருந்து அநேகர் இப்புத்தகம் வேண்டுமென்று விரும்பிக் கேட்டுவந்ததால், மறு பதிப்பு அவசியமாயிற்று. காலஞ்சென்ற சந்தியாகப்பர் சுவாமியவர்கள் தாமே தமது புத்தகத்தை மூன்றும் பதிப்புக்குத் திருத்திக்கொடுக்க ஆவல் நோக்கமுடையவராய், ஏற்கனவே அந்தப்படிக்கு ஆரம்பித்துமிருந்தனர். வயோதிக திசையில் அவர் எடுத்த சிரமம் நிறைபெறவில்லை.

பெரியோர்கள் விருப்பத்துக்கிசைந்து, இப்புத்தகத்தை நாம் ஆதியோடந்தம் ஆராய்ந்து பரிசோதித்ததில், ஆங்காங்கு சிற்சில விஷயங்கள்தான் திருத்தவோ மாற்றவோ நேர்ந்தது. அத்துடன் இரண்டொரு குறிப்புகளும் அடிப்பாகத்தில் பிரத்தியேகமாய் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மற்றப்படி, இந்நூல் சந்தியாகப்பர் சுவாமியவர்கள் அமைத்துத் தந்தபடியே, உருமாற்றமின்றி மூன்றாந்தரம் பிரசுரமாகின்றது. நீடித்த காலம் சந்தியாகப்பர் சுவாமியவர்கள் அயராது செய்துவந்த எண்ணிறந்த தியானப் பிரசங்கங்களின் பிரதான பிரசங்கங்கள் ஓர் கோர்வையாக ஒன்றுசேர்க்கப்பட்ட சிறந்த பொக்கிஷமாம் **மன்ரேசா** என்ற இப்பிரபந்தம்! மூன்று நாளோ, நான்கு நாளோ, எட்டு நாளோ, உள் தியானம் செய்யவோ அல்லது தியானப் பிரசங்கங்கள் கேட்கவோ கூடிவரும் இல்லறவாசிகளுக்கு இன்றியமையாத ஞானச்சாதனம் இந்த **மன்ரேசா!** மேலும் மானிடன் மனதில் நற்சிந்தனை, நற்பற்றுதல், தெளிந்த புத்தி, தெய்வ பத்தியைப் புகட்டுதற்கு எச்சமயத்திலும், எடுத்து வாசிக்கவோ, வாசிக்கக் கேட்கவோ நன்கமைந்த ஞானக் களஞ்சியம் இந்த **மன்ரேசா!** விசுவாசிகள் ஒவ்வொருவர் இல்லத்திலும் **மன்ரேசா** என்ற அருமையான இப்புத்தகம் சதா காப்பாற்றப்பட்டு சமயத்துக்குச் சமயம் கையாடப்பட்டுவருதல் வெகுவாய் விரும்பத்தக்கதாம்.

போ! **மன்ரேசா!** எழுந்து போ! உன் தந்தை சந்தியாகப்பரின் நல்மைந்தன், நற்றாதனைப், அவருடைய இனிய குரலொலியாய், ஞானம் விதைத்து, நன்மை விளைவிக்கத் தமிழ்நாடெங்கும் அயராது சுற்றித்திரிவாயாக!

சேசுசபை, **வி. மரிய இஞ்ஞாசியார்.**

பொருள் அட்டவணை

பொருள் பக்கம்

தியான ஆரம்பப் பிரசங்கம் 1

தியானம் செய்கிறவர்கள் கவனிக்கவேண்டிய சில விஷயங்கள்

முதலாவது : தியானம் நன்றாய்ச் செய்ய ஏதுவான புத்திகள் 11

இரண்டாவது : தியான யோசனை செய்யுமுன்னும் செய்யும்போதுங் கவனிக்கவேண்டிய விவரங்கள் 15

மூன்றாவது : தியான முயற்சிகளை நன்றாய்ச் செய்யும்படி ஒவ்வொருவருஞ் செய்யவேண்டிய பிரதிக்கினைகள் 18

தியானப் பிரசங்கங்கள்

முதல் வாரம்

ஆத்துமத்திலுள்ள பாவ துர்க்குணங்களை நீக்குவதற்கு ஏதுவான தியானங்கள்

முதல் நாள்

முதல் தியானம் : நல்லொழுக்கத்திற்கு மூலாதாரமான சத்தியம் : மனிதன் கதி 23

இரண்டாம் தியானம் : சிருஷ்டிகளின் கதி, அதாவது சிருஷ்டிகள் இருப்பதின் காரணம் ... 36

மூன்றாம் தியானம் : ஆத்தும இரக்ஷணியம் மகா முக்கிய அலுவல் 47

ஞான போதகம் : ஆத்தும இரக்ஷணிய அலுவலில் காலதாமதம் மோசமுள்ளது 60

பொருள் பக்கம்

இரண்டாம் நாள்

முதல் தியானம் : மூன்றுவகைப் பாவம் ... 73
இரண்டாம் தியானம் : ஒவ்வொருவரும் தானே செய்த பாவங்கள் 87
மூன்றும் தியானம் : நரகவேதனை 96
ஞானபோதகம் : பாவங்களுக்குள் மகா விஷம் நிறைந்த பாவம் 111

மூன்றும் நாள்

முதல் தியானம் : நரகவேதனை 127
இரண்டாம் தியானம் : சாவு 140
மூன்றும் தியானம் : ஒவ்வொருவனுடைய ஜீவிய நாட்களின் கடைசி நாள் 153
ஞானபோதகம் : பாவசங்கீர்த்தனம் 168

நாலாம் நாள்

முதல் தியானம் : உலகத்தின் கடைசிநாளில் நடக்கும் விசாரணையும் தீர்ப்பும் 180
இரண்டாம் தியானம் : பாவத்துக்கு ஏதுவான சமயங்களை விலக்குதல் 192
மூன்றும் தியானம் : ஊதாரிப் பையன்... ... 205
ஞானபோதகம் : பாவசங்கீர்த்தனத்துக்கு அவசியமான குணங்கள் 217

தியானப் பிரசங்கங்கள்

இரண்டாம் வாரம்

சேசுநாதர்சுவாமியின் சுகிர்த நடத்தையை நமது கண்முன் வைத்து அவரைப்போல் நடப்பதற்கு உதவியான தியானங்கள்

இரண்டாம் வாரம் : விவரங்கள் 231

பொருள் பக்கம்

ஐந்தாம் நாள்

முதல் தியானம் : சேசுநாதரின் அரசாட்சி ... 233
இரண்டாம் தியானம் : சேசுநாதர் மனுஷாவதாரம் எடுத்துப் பிறந்த வர்த்தமானம் ... 241
மூன்ரும் தியானம் : தேவ பாலகனை மூன்று இராஜாக்கள் ஆராதித்த வர்த்தமானம் ... 251
ஞானபோதகம் : வேத சத்திய விசுவாசம் ... 259

ஆறும் நாள்

முதல் தியானம் : இரு யுத்தக் கொடிகள் ... 272
இரண்டாம் தியானம் : சேசுநாதருடைய பிரசித்த ஜீவியம் 281
மூன்ரும் தியானம் : சேசுநாதருடைய கடைசி இராப்போஜனம் 292
ஞானபோதகம் : தன் ஜீவிய அந்தஸ்தில் தேவ சித்தம் இதுவென்று அறிந்து தன் நடத்தையைச் சீர்ப்படுத்தல் 303
தாழ்ச்சியின் மூன்று வகைகள் 308
மூன்று வியாதிக்காரரின் உபமானம் ... 310

தியானப் பிரசங்கங்கள்

மூன்ரும் வாரம்

சேசுநாதர்சுவாமி பட்ட பாடுகளைத் தியானித்து நாம் செய்த பிரதிக்கினைகளை ஸ்திரப்படுத்த ஏதுவான தியானங்கள்

மூன்ரும் வாரம் : விவரங்கள் 315

ஏழாம் நாள்

முதல் தியானம் : சேசுநாதர் ஜெத்சேமனி தோட்டத்தில் அவஸ்தைப்பட்ட வர்த்தமானம் ... 316

பொருள் *பக்கம்*

இரண்டாம் தியானம்: *நியாய சபையில் சேசுநாதருக்கு நடந்த விசாரணை* 328

மூன்றும் தியானம்: *கல்வாரி மலை* 337

ஞானபோதகம்: *சேசுநாதர்சுவாமியின் பின் நாமும் நமது சிலுவையைச் சுமந்துபோகவேண்டும்.* 345

தியானப் பிரசங்கங்கள்

நான்காம் வாரம்

சேசுநாதர்சுவாமி உயிர்த்த வர்த்தமானத்தைச சார்ந்த சத்தியங்களை யோசித்து அவருடைய ஊழியத்துக்கு நம்மை முழுதும் நேர்ந்து கொடுக்க ஏதுவான தியானங்கள்

நான்காம் வாரம்: *விவரங்கள்* 357

எட்டாம் நாள்

முதல் தியானம்: *சேசுநாதர்சுவாமி உயிர்த்த வர்த்தமானம்* 358

இரண்டாம் தியானம்: *சேசுநாதர்சுவாமி மோக்ஷத்துக்கு எழுந்தருளிய வர்த்தமானம்* ... 363

மூன்றும் தியானம்: *தேவ சிநேகம் நம்மிடத்தில் உண்டாக ஏதுவான யோசனை* 371

ஞானபோதகம்: *இஷ்டப்பிரசாதத்தில் முற்றும் முடிய நிலைநிற்கும் வரம்* 380

தியான ஆரம்பப் பிரசங்கம்

இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரன் வேதத்தில் சொல்லும் வாக்கியமாவது : உலகமெல்லாம் பாழாய் அழிந்து கெட்டுப்போகின்றது. இதின் காரணமேதெனில், மனிதருக்குள் எவனும் தன் மனதில் ஆழ்ந்து யோசித்து தியானிக்கிறதில்லை.* இந்த தேவ வாக்கியத்தின் அர்த்தத்தை தியானந் துவக்குமுன் நன்ருய் நீங்கள் கண்டு பிடிப்பது அவசியம். ஆனதால் நாம் சொல்வதைக் கவனமாய்க் கேளுங்கள்.

மனிதர்கள் தங்கள் கண்முன் தோன்றும் உலக அநித்திய வாழ்வை சதமென்று எண்ணி, அவைகளிலே தங்கள் கருத்தையும் ஆசையையும் செலுத்தி, அவைகளைத் தேடி அநுபவிக்கும்படியாய் தங்கள் வாழ்நாட்களையெல்லாம் வீண் நாளாக்குகிருர்கள். இதினிமித்தம் மனிதர்களுக்குள் தங்கள் ஆத்தும இரக்ஷணிய அலுவலைக் கவனித்து யோசித்து, அதற்கு இசைந்த வழியில் நடப்பவர்கள் எவ்வளவோ சொற்பப்பேர்! இப்படி யோசியாத குறையால்தான் அநேகர் தங்கள் இரக்ஷணியத்தை இழந்து, அர்ச். சவேரியார் சொல்வதுபோல, நரகத்தின் பயங்கரமான பாதாளத்தில் விழுந்து சேதமாய்ப் போகிருர்கள். யோசித்து நடப்பவன் முன் பின் பார்ப்பான்; ஆபத்து வருமுன் அதைத் தடுப்பான். யோசியாதவனே குருடனைப்போல் ஒன்றுங் கவனியாமல் நடந்து, ஆபத்தில் விழுந்தபின், ஐயோ விழுந்தேனே, என்று தன் வாயில் அடித்துக்கொள்ளுவான்.

மனிதருடைய இந்த நிர்ப்பாக்கிய ஸ்திதியை, சேசு சபையை ஸ்தாபித்த நமது ஞானப்பிதாவான அர்ச். இஞ்ஞாசியார் பார்த்து, சர்வேசுரனுடைய விசேஷ ஏவுதலி

---

* "Desolatione desolata est omnis terra, quià nullus est qui recogitet corde"—"நாடெல்லாம் பாழால் பாழாக்கப்பட்டுக் கிடக்கின்றது ; ஏனெனில் இருதயத்தில் சிந்திப்பவன் ஒருவனுமில்லை." (ஜெரேமியாஸ் xii, 11.)

ளூலே, அற்புத ஞான புத்திப் போதகங்கள் அடங்கிய ஞானத்தியான முயற்சிகளைத் தாமே எழுதித் தந்திருக்கிறார். சேசுநாதர் ஸ்தானத்திலிருந்து திருச்சபையை ஆளும் பாப்புமார்களும், வேதசாஸ்திரிகளும், இந்தத் தியான புஸ்தகத்தை ஆராய்ந்து பரிசோதித்தபின், இதை வெகுவாய்ப் புகழ்ந்து, இது உன்னத ஞானம் நிறைந்த புஸ்தகமென்றும் கிறீஸ்துவர்களுக்கு வெகு பிரயோசன முள்ளதென்றும் தீர்மானித்து நிரூபித்தார்கள்.

இந்தத் தியான முயற்சிகளைச் செய்வதால் வரும் பிரயோசனம் எம்மாத்திரமென்று இவைகளை ஒழுங்கோடு செய்துவருங் கிறீஸ்துவர்கள்தான் கண்கூடாக அறிவார்கள். இவைகளால் கிறீஸ்துவ சபையாருக்கு வந்த பொது நலம் எவ்வளவென்று உலகத்தின் கடைசிநாளிலே மாத்திரம் சர்வேசுரன் எல்லாருக்கும் அறிவிப்பார்.

அவிசுவாசமும் அஞ்ஞானமுமாகிற காரிருள் எங்கும் அடர்ந்து சூழப் பரம்பும் இந்தக் காலத்தில், கிறீஸ்துவர்கள் சத்தியவேத ஒழுக்கநெறியில் தவருமல் நடந்து, தங்கள் ஆத்துமத்தை ஈடேற்ற ஏதுவான உத்தம உபாயம் ஏதென்ருல், அர்ச். இஞ்ஞாசியாருடைய ஞானத் தியான முயற்சிகளை வருஷத்தில் எட்டுநாள் அல்லது குறைந்தது மூன்று நாளாவது தனிவாசமாயிருந்து மௌனங்காத்து செய்வதுதான். இதுவே ஆத்தும இரக்ஷணியத்துக்கு ஏற்ற உபாயம் என்பது நாம் நாற்பது வருஷங்களுக்கு அதிகமாய் இந்தத் தியான முயற்சிகளை நாமே செய்தும், கிறீஸ்துவர்களுக்குப் பல ஊர்களில் பிரசங்கித்தும் வந்த போது அநுபவ வாயிலாய்க் கண்டு அறிந்த விஷயம்.

கிறீஸ்துவர்களுக்கு இதனுல் உண்டாகும் இவ்வளவான சுகிர்த நன்மையைக்கண்டு சேசுநாதர் சுவாமியின் பிரதிநிதிகளான பாப்புமார்கள், பலமுறை தங்கள் நிருபங்களாலும், ஆலோசனை, அபிப்பிராயம், ஏவுதலாலும் கிறீஸ்துவர்கள் அர்ச். இஞ்ஞாசியாரின் தியான முயற்சிகளை வருஷந்தோறும் செய்யும்படியாகத் தங்களுடைய எண்ணத்தையும் ஆசையையும் காட்டியிருக்கிருர்கள்.

அப்படியே நீங்களும், கிறீஸ்துவர்களே, தியானஞ் செய்து உங்கள் ஆத்துமத்தை ஈடேற்றும்படியாய், இதை நன்றாய்ச் செய்வதற்கு உதவியான புத்தி யோசனைகளை யும், ஒழுங்கு விவரங்களையும், இங்கே விரிவாய் விவரித்துக் காட்டப்போகிறோம். கற்றோரும் கல்லாதவரும், ஆண் பெண், சிறுவர் பெரியவர், விருத்தாப்பியர் ஆகிய அனை வோரும் பிரயோசனம் பெறும்படியாய் இந்தத் தியானப் பிரசங்கங்களை விரிவாய் விவரித்தும், ஏற்ற இடங்களில் பற்பல வர்த்தமானங்களும் சரித்திரங்களும் உதாரணங்க ளாகச் சேர்த்தும் வைத்திருக்கிறோம்.

பாவிகளுக்குத் தஞ்சமான தேவதாய் நம்மெல்லோ ரையும் ஆசிர்வதித்து, நாம் துவக்கும் ஞானத் தியான முயற்சிகள் அநுகூலமாய் முடிந்து எல்லோருக்கும் பிர யோசனம் தரும்படி கிருபைசெய்வாளாக!

முதற் பாகம்

'செய்வன திருந்தச்செய்தால் தேடிய பலன் கைகூடும்' என்ற நீதி மொழிப்படி ஞானத்தியானஞ் செய்வதால் உண் டாகும் மேலான பலனை நாம் அடையும்படியாக இந்தத் தியான முயற்சிகளை நாம் **நன்றய்ச்** செய்வது அவசியம். இப்படி நன்றாய்ச் செய்ய மனசுள்ள கிறீஸ்துவர்கள் பின்வரும் மூன்று விஷயங்களை முக்கியமாய்க் கவனித்து யோசிப்பார்களாக. தியானஞ் செய்யும்படி இங்கே வந் திருக்கும் ஒவ்வொருவனும் தன்னைப்பார்த்து சொல்ல வேண்டியதேதெனில்: முதலாவது, நான் ஞானத்தியான முயற்சிகளை நன்றாய்ச் செய்வது எனக்கு மகா அவசியம். இரண்டாவது, ஞானத்தியான முயற்சிகளை நன்றாய்ச் செய்ய என்னால் கூடும். மூன்றாவது, ஞானத்தியான முயற்சிகளை நன்றாய்ச் செய்ய எனக்கு மனசு இருக்கின் றது. இங்கே சொன்ன இந்த மூன்று விஷயங்களையும் ஒவ்வொன்றாய் எடுத்து விவரித்துக் காட்டுவோம். நீங்க ளும் கருத்தாய்க் கேளுங்கள்.

ஆதிமுதலில் ஞானத்தியான முயற்சிகளை நன்முய்ச் செய்வது சகல கிறீஸ்துவர்களுக்கும் மகா அவசியம். ஏனென்முல் கிறீஸ்துவர்கள் அனைவரும் தங்களுடைய ஆத்துமத்தை எவ்வகையாலாயினும் இரட்சிக்கப் பிரயாசப் படவேண்டும். கிறீஸ்துவன் தன் ஆத்துமத்தை இரட்சித்து ஈடேற்றும்படியாய் திருச்சபையில் வழங்கிவரும் பற்பல வழி வகை ஏற்பாடுகளுக்குள் ஞானத்தியான முயற்சிகள் முதல்தரமானவைகளென்பது எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்ட விஷயம். எப்படியெனில்: இந்தத் தியான முயற்சிகளிலேதான் கிறீஸ்துவர்கள் தங்களைச் சார்ந்த பற்பல கடமைகள் இனனவையென்றும், அந்தக் கடமைகளை எவ்வித ஜாக்கிரதை பிரமாணிக்கத்தோடு அநுசரித்து வருகிருர்கள் என்றும், சர்வேசுரனுடைய கற்பனைகளின் பாதையில் நேரே நடக்கிருர்களோ அல்லது வழிதப்பி பிசகிப்போனுர்களோவென்றும் தெளிவாய் அறியலாம். அன்றியும், ஒவ்வொரு கிறிஸ்துவனும், தனக்கு சர்வேசுரன் குறித்த அந்தஸ்து எது என்றும், அல்லது தான் இருக்கும் அந்தஸ்திலே எப்படி நடப்பது சர்வேசுரன் சித்தம் என்றும், தியான காலத்தில் தனிவாசமாயிருக்கும் போது, சர்வேசுரன் அவன் மனதில் பேசுவதால் அறிவான். இதுவுடன்றி நம்மைச் சூழ்ந்திருக்கும் நமது ஆத்தும சத்துருக்கள் யார், எவர், எப்பேர்பட்டவர்களென்றும், அவர்களுடைய கபடநாடக, தந்திர மாய்கை நிறைந்த செய்கைகள் இன்னதென்றும், இவர்களோடு நாம் யுத்தம் செய்யும் வகையும், இதற்கு ஏற்ற ஞான ஆயுதங்களும், இவைகளைக் கையாடும் வகையும், எல்லாம் தியான முயற்சிகளைச் செய்யும்போது நாம் தெளிவாய்க் கண்டு அறிவோம். அன்றியும் நமது நடத்தையை நன்முய் சீர்படுத்தவேண்டுமானுல், இதுமட்டும் நாம் நடந்த வகையும், இனிமேல் நடக்கவேண்டிய விதமும் கவனித்து, விதி விலக்குகள் இன்னவையென்று யோசித்து அறியவேண்டுமல்லவா? உலக கவலை எல்லாம் நீக்கி தனிவாசமாயிருந்து சர்வேசுரன்முன் தியானித்து யோசிக்கும்போதுதான் இந்தத் தெளிந்த அறிவு வருமென்பதற்குச் சந்தேக

முண்டோ? வேதாகமத்தில் சொல்லியிருக்கிறபிரகாரம், சர்வேசுரன் ஆத்துமத்தை ஏகாந்தமான ஸ்தலத்துக்கு அழைத்துப்போய் அங்கே இருதயத்திலே பேசுவார்.

வர்த்தகஞ் செய்யும் வியாபாரி வருஷத்தில் அநேக விசை தன் வரவுசெலவுகளைக் கணக்கிட்டு, இலாபமோ நஷ்டமோவென்று தன் கணக்குகளைக் கவனமாய் சோதித்துப் பார்த்து வியாபாரத்தை நடத்தாதேபோனால், கண்ணை மூடிக் காட்டில் அலையும் மனிதன் கல்லில் இடறி, முள்ளில் விழுந்து, காயம்பட்டு வருந்துவதுபோல, இவனும் பெருந் துன்பமும் நஷ்டமும்பட்டு, போட்ட முதலும் போக, அடுப்பு நெருப்பும் வாய்த் தவிடும் இழந்த கிழவியைப் போல், ஆறாத் துன்பப்படுவான். இதுபோலவே ஆத்தும இரக்ஷணிய அலுவலாகிற ஞான வர்த்தகஞ் செய்யும் நீ, வருஷத்தில் ஒருவிசையாகிலும் உன் ஆத்துமத்தின் எதார்த்த ஸ்திதியைப் பரிசோதித்து, புண்ணியமாகிற இலாபமோ, பாவமாகிற நஷ்டமோ, உனக்கு வந்ததென்று கவனியாமல், கண் இல்லா குருடன்போல் நீ நடந்தால், பெரும் ஆபத்துக்குள்ளாகி ஆத்தும நஷ்டம் தப்பாமல் அடைவாய் என்பதற்கு ஆக்ஷேபனையோ?

ஆத்தும இரக்ஷணியத்துக்கு அவசியமான ஞானத் தியான முயற்சிகள், கிறீஸ்துவர்களாகிற சமஸ்தருக்கும், அவர்கள் எவ்வித அந்தஸ்திலிருந்தாலும் தேவையானவைகள். மேலான உத்தியோகத்திலிருப்பவர்களும், கூலி வேலை செய்து ஜீவனம்சம் தேடுகிறவர்களும், திரவிய சம்பன்னரும், பரம ஏழைகளும், சாஸ்திர கலைக்கியான நூல் கற்றுத் தேர்ந்த வித்வான்களும், கல்வி கற்றறியாத அறிவிலிகளும், வயதில் முதிர்ந்த பெரியோரும், வாலிபரும், சிறுவரும், எவ்வித அந்தஸ்தில் உள்ளவர்களும், எல்லாரும் தங்கள் சொந்த ஆத்துமத்தை இரட்சிப்பது அவரவர்களைப் பொறுத்த கடமையாதலால், ஆத்தும இரக்ஷணியத்துக்கு வெகு அநுகூலமான ஞானத் தியான முயற்சிகளைச் செய்வது அவர்களுக்குப் பிரயோ

சனமும் சில சமயங்களில் கடமையுமாகும். இப்படியானல் தியானஞ் செய்யும் பாக்கியம் உங்களுக்கு இப்போது வந்திருக்கையில், ஒவ்வொருவனும் நான் தியானம் நன்ருய்ச் செய்வது எனக்கு மகா அவசியமென்று மனதில் ஸ்திரமாய் எண்ணி, அந்த எண்ணத்தோடு தியானத்தைத் துவக்குவாஞக.

இரண்டாம் பாகம்

ஞானத்தியானம் நன்ருய்ச் செய்வது உங்களில் ஒவ்வொருவனுக்கும் அவசியமென்று நீங்கள் இப்போது கண்டு பிடித்திருக்கிறீர்கள். இந்த இரண்டாம் பாகத்தில் தியான முயற்சிகளை **நன்றய்ச் செய்ய உங்களாலே கூடுமென்று** விவரிக்கப்போகிருேம். முன்னிலும் கவனமாய் கேளுங்கள். தியானம் நன்ருய்ச் செய்ய உங்களால் கூடுமென்று நாம் சொல்லும்போது, நீங்களே உங்கள் சுய பலத்தால் நன்ருய்ச் செய்வீர்களென்று எண்ணவேண்டாம். மனிதன் தன்ஞல் நன்மையானதெதுவும் சரியாய்ச் செய்ய சக்தி அற்றவன், புண்ணியஞ் செய்ய துர்ப்பலன் உள்ளவன். ஆஞல் சர்வேசுரன் சர்வ வல்லபமுள்ளவர். அவர் தம்முடைய உதவியின் அநுக்கிரகஞ் செய்ய எப்போதும் தயாராய் காத்திருப்பவர். கொடுத்த வாக்குப் பிசகாதவர். கேளுங்கள் கேட்டதைக் கொடுப்போமென்று சத்தியப் பிரமாண வாக்களித்தபின், தமது சொல்லை மீறி மறுத்து நடப்பது அநந்த ஞான சுரூபியான அவருக்கு இயல்பல்ல. ஆனதால் தியான முயற்சிகளை நீங்கள் நன்ருய்ச் செய்து உங்கள் ஆத்துமத்தை ஈடேற்றுவது சர்வேசுரனுடைய சித்தமானதால், நீங்கள் இவைகளை நன்ருய்ச் செய்யும்படிக்கு ஏதுவான உதவி வரங்களை உங்களுக்கு அவர் தப்பாமல் கொடுப்பாரென்று நீங்கள் உங்கள் மனதில் திண்ணமாய்ப் பதியச் செய்து இதில் ஊன்றிய நம்பிக்கையுடன் ஞானத்தியான முயற்சிகளை நன்ருய்ச் செய்ய என்ஞல் கூடும் என்று ஒவ்வொருவரும் சொல்லலாம்.

இதின்மட்டில் இன்னம் உங்களுக்குச் சந்தேகமுண்டோ? "எனக்கு என்ன தெரியும்? தியானம் எப்படி நான் நன்றாய்ச் செய்வேன்? சிட்டுக்குருவி கருடனைப்போல் உயரப் பறக்குமா? அற்ப மனிதனாகிய நான் உன்னத வேத சத்தியங்களைப்பற்றி தியானிக்கத் துணிவது சரியோ? என்னால் இயலுங் கருமமோ இது?"— என்று இப்படியாய் சொல்லுவீர்களாக்கும். இவ்வித சந்தேகத்தால் கலங்கிப் பயப்படவேண்டாம். உங்களுக்கு முன் எத்தனையோ பேர், உங்களைப்போல் இருந்தவர்கள், இந்த அற்புத தியான முயற்சிகளை நன்றாய்ச் செய்து தங்கள் ஆத்தும இரட்சணியமடைந்து இப்போது திருச்சபையில் அர்ச்சியசிஷ்டவர்களாக வணங்கப்படுகிறார்கள். இவர்களுக்குச் சர்வேசுரன் உதவியால் கூடுமானது உங்களுக்குமாத்திரம் ஏன் கூடாது? சர்வேசுரன் கொடுக்கும் உதவியின் பலன் உங்கள் மட்டில் பலிக்காதோ? கருங்கல்லிலும் அமிர்தமான ஜலம் சுரந்து ஓடும்படி செய்ய வல்லவர், உங்கள் இருதயம், கல்லாயிருந்தாலும், அது இளகி கரைந்து உருகும்படி செய்ய அவரால் கூடாதோ? அவர் கையின் பலன் இப்போது குறைந்து போனதோ? அப்படியல்ல. ஆனதால் முழு நம்பிக்கையுடன் ஞானத்தியான முயற்சிகளை நன்றாய்ச் சர்வேசுரன் கிருபையால் செய்ய என்னால் கூடுமென்று ஸ்திரமான மனதோடு சொல்லி ஒவ்வொருவரும் தியானத்தைத் துவக்குங்கள்.

மூன்றும் பாகம்

தியானம் நன்றாய்ச் செய்யும்படி இதுமட்டுஞ் சொன்ன குணங்கள் அன்றி இன்னமோர் முக்கியமான இலக்ஷணமிருக்கின்றது. தியான முயற்சிகள் எவ்வளவு மேன்மையும் பிரயோசனமும் உள்ளவைகளாயினும், அவைகள் உனக்கு எவ்வளவு அவசியமென்று நீ மனதில் சார உணர்ந்தபோதிலும், அவைகளைச் செய்யும்படி உனக்கு **ஸ்திரமான மனசு** மாத்திரம் இல்லாதேபோனால், மற்ற

யோசனை நியாயங்கள் எல்லாம் 'விழலுக்கிறைத்த நீர் போலுங், கடலிற் கரைத்த புளிபோலும்,' ஓர் பயனுங் கொடுக்காது. **மனசின் வலிமை காரியசித்திக்கு முக்கிய சாதனம்.** மனம் உண்டானால் வருத்தமும் பிரயாசையும் ஒன்றும் தோன்றமாட்டாது. மனம் உண்டானால் சாக்கும் போக்கும் வாயில் வரமாட்டாது. மனமுண்டானால் சலிப்பும், அயர்வும், முறைப்பாடும் நினைவிலும் அண்டாது. ஞானத்தியான முயற்சிகளை நன்றாய்ச் செய்ய எனக்கு மனசுண்டு என்று எதார்த்தமாய் மனசறியச்சொல்லித் துவக்குகிறவன் தேவ கிருபையால் நன்றாய்ச் செய்துமுடிப்பான்.

இவ்வித எதார்த்தமான மனவலிமை யாரிடம் இல்லையோ அவன் ஒன்றுந் துணிந்து செய்யான். எல்லாம் இவனுக்கு பிரயாசையாய்த் தோன்றும். ஆயிரம் போக்குகள் அவன் ஞாபகத்தில் வரும். "அப்பா! வாய் பேசாமல் மௌனங் காக்க யாரால் கூடும்? நாக்கரிப்பை அடக்க மருந்துண்டா? இங்குமங்கும் கண்ணைத் திருப்பி பார்க்காமல், நட்டுவைத்த கல்லைப்போல் நிற்க, மனுஷனால் கூடுமா? எட்டுநாள்மட்டும் வீட்டு வேலையைக் கவனியாமல் பெட்டிப்பாம்புபோல் அடங்கி இருக்க யார் சம்மதிப்பார்? நாள் முழுதும் யோசித்து யோசித்து தியானித்தால் மண்டை தெறித்து பிளந்துபோகாதா? மூளை கலங்கி பித்துக்கொள்ளாதா? அன்றியும் நான் என்ன, உலகத்தை வெறுத்த சந்நியாசியா? வனவாசியா?"—என்று இவ்விதமாய் வீணாய்ப் புலம்பி தவிப்பார்கள். தியானப் பிரசங்கஞ் செய்பவர் எவ்வளவு பிரயாசையுடன் விவரித்துப் பேசினாலும், அவர் சொல்லும் வார்த்தை இப்பேர்ப்பட்டவர்களுக்கு, மனித சஞ்சாரமில்லாத நெடுங்காட்டில் உரத்திப் பலமாய் கத்தி வீணாய்ப் பேசும் குரலுக்குச் சமானமாகும். கண்ட பலன் ஒன்றுமில்லை. கால நஷ்டம் வேலை நஷ்டத்தோடு ஆத்தும நஷ்டமாய் முடியும்.

எதுக்கும் மனசு வேண்டும். அதிலும் ஆத்தும இரட்சணிய விஷயமாய்ச் செய்யும் தியான முயற்சிகளுக்கு உறுதியான மனசு இல்லாவிட்டால் நன்மையான காரியம்

யாதொன்றும் செய்வதும் அரிது. "வினைத்திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம், மற்றவை எல்லாம் பிற" என்பது சிறந்த வாக்கு. இதன் கருத்தேதென்றால்: எந்தச் செய்கையும் திண்மைபெற்று நலந்தரவேண்டுமானால் அதற்கு மனதின் திண்மையே இன்றியமையாத சாதனம், மற்றதெல்லாம் இதற்குப்பின். இதனால், தியானஞ்செய்ய வருகிறவர்கள் தியானத்தின் பலனை பூரணமாய் அடைய ஆசையாயிருந்தால் இந்தத் தியான முயற்சிகளை நன்றாய்ச்செய்ய நான் மனசாயிருக்கிறேனென்று துணிந்து சொல்வார்களாக.

இந்த ஸ்திரமான மனவலிமை உண்டானால், தியானத்தின் அநுகூலத்துக்கு உதவியாயிருக்கும் உபாயங்களை எல்லாம் பிரமாணிக்கமாய் வஞ்சகமின்றி நீங்கள் பிரயோகிப்பீர்கள். இந்த உபாயங்கள் இன்னவை என்று போகப்போகச் சொல்லிக்காண்பிப்போம். ஆனால் இப்போது அவைகளில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியதை மாத்திரம் இங்கே சுருக்கமாய்ச் சொல்லுகிறோம்.

தியான நாட்களில் அடிக்கடி சேசுநாதரையும், தேவமாதாவையும் பார்த்து, புத்திக்குப் பிரகாசமும், மனசுக்கு உறுதியுங் கொடுக்கும்படி பிரார்த்திப்பது **முதற்காரியம். இரண்டாவது,** தியானப் பிரசங்கங்களை வாசித்தாலுங் கேட்டாலும், கருத்தோடுங் கவனத்தோடும் சாவதானமாய்க்கேட்டு, கேட்ட தியானத்தின் பொருள் தன் மனசில் பதிந்து நன்றாய்ச் சாரும்படியாய் அதன்பேரில் தானே பலமுறை சிந்தித்து யோசிப்பது அவசியம். நீ சாப்பிட்ட போஜனம் நன்றாய்ச் செரிமானமானால்தான், அது உன் உடலில் சார்ந்து உனக்கு இரத்தப்பசை ஊட்டி சௌக்கியங் கொடுக்கும். **மூன்றவது,** தியானஞ் செய்கிறவர்களுக்காகக் குறித்திருக்கும் ஒழுங்குகளை எல்லாம் வஞ்சனையின்றி எதார்த்தமுள்ள குணத்தோடு ஜாக்கிரதையாய் அநுசரிக்க தீர்மானிக்கவேண்டும், **நாலாவது,** ஒரு நாளில் பலமுறை தேவநற்கருணை சந்திக்கப்போய்ச், சேசுநாதர்சுவாமியிடத்தில் தன் குறைகளைச்சொல்லி, இரந்து

மன்றுடி, ஆறுதலும், உதவியும், புத்தித்தெளிவும், உறுதியுள்ள மனசும் கேட்கவேண்டும். இவைகளையெல்லாம் ஒழுங்காய் உங்களால் இயன்றவரையில் நீங்கள் செய்தால், சேசுநாதர்சுவாமி, தியான முயற்சிகள் அநுகூலமாய் முடிந்து, உங்கள் ஆத்தும இரக்ஷணியம் கடைசியில் நீங்கள் பெறும்படி கிருபை செய்வார்.

பாவிகளின் தஞ்சமும் நமது அன்புள்ள தாயுமாகிய தேவ ஆண்டவள் இந்தத் தியான காலத்தில் உங்களுக்குத் தேவையாயிருக்கும் வரங்களும் உதவியும் பூரணமாய் உண்டாகும்படி தம்முடைய தேவகுமாரன் சேசுநாதரிடத்தில் மன்றுடுவாளாக!

தியானம் செய்கிறவர்கள் கவனிக்கவேண்டிய சில விஷயங்கள்

முதலாவது: தியானம் நன்றய்ச்செய்ய ஏதுவான புத்திகள்

ஞானத்தியான முயற்சிகள் இன்னதென்றும், தியானஞ் செய்கிறவர்கள் தியானகாலத்தில் அநுசரிக்கவேண்டிய ஒழுங்குகள் இவையென்றும், இதில் விவரித்துக் காட்டுவோம். இவைகளைத் தியானநாட்களில் பலமுறை வாசிப்பது வெகு பிரயோசனமாயிருக்கும்.

1. ஞானத்தியான முயற்சிகள் என்ருல், ஒவ்வொருவனும் தன் ஞாபகசக்தி, புத்தி, மனசு ஆகிய தத்துவங்களைத் தூண்டி முயலும்படி பிரயோகித்து, தன் ஆத்துமத்தைச் சோதித்தல், யோசனை செய்தல், மனசாலும் வாயாலும் ஜெபித்தல் ஆகிய இவ்விதமான ஞானக்கிருத்தியங்களைச் செய்வதாம். இவைகளைச் செய்வதிலிருக்கும் உட்கருத்தேதெனில், ஒவ்வொருவனுந் தன்னிடத்தில் உள்ள கிரமந்தப்பின பற்றுதல், உணர்ச்சி, ஆசை ஆகிய இவைகளை எல்லாம் நீக்கி தன் தொழில்மட்டில் சர்வேசுரனுடைய சித்தம் இன்னதென்று அறிந்து அதின்பிரகாரம் நடக்கத் துணியும்படி பிரதிக்கினை செய்வதேயாம்.

2. தியானகாலத்தில் ஒவ்வொருவனும் தானே தன் சுய புத்தியையும் மனசையும் தூண்டி முயற்சிசெய்ய வேண்டுமென்பதால், தியானப் பிரசங்கஞ் செய்பவரே எல்லாஞ்செய்ய, நீயோ யாதோர் முயற்சியுமின்றி முழு மந்தமாயிருந்தால், தியானம் உனக்குப் பிரயோசனமாயிராது. நீ பசியாயிருக்கும்போது உன் பசிதீர நீ சாப்பிட்டால், உன் களை தீர்ந்து பெலன் உனக்கு வருமேயன்றி, இன்னொருவன் பசியோடு சாப்பிட்டால் அதிஞல்

உனக்குப் பிரயோசனம் வருமோ? வியாதியாயிருக்கிறவன், மருந்து கசப்பாயிருந்தாலும், தானே அதை சாப்பிடவேண்டுமே அன்றி, அவனுக்காக வைத்தியன் அதைச் சாப்பிட்டால் வியாதியஸ்தனுக்கு சௌக்கியம் வரமாட்டாது.

அன்றியும், நீ கேட்ட சத்தியத்தின்பேரில், தனியே இருக்கும் நேரத்தில் யோசித்து அதிலுள்ள உண்மையை நன்றாய்க் கண்டுபிடித்து, உன் மனதில் சார உணரும்படியாய், நீ ஜாக்கிரதையாய்ப் பிரயாசையுடன் முயலவேண்டும்.

பசுமாடு இரை தின்றபின் ஓரிடத்தில் அமர்ந்து படுத்திருந்து, தின்ற இரையைத் திரும்பவும் மென்று அசைபோட்டு அது ஜீரணமாகச் செய்யும். அப்படியே நீயும், தியானங் கேட்டபின், கேட்டதை உன் நினைவில் வரச் செய்து அதின்பேரில் சாவதானமாய் யோசித்தால் அதின் பலனை அடைவாய்.

3. ஞானத்தியான முயற்சியானது முக்கியமாய் அவனவன் புத்தியையும் மனசையுஞ் சார்ந்தது. **புத்தியானது,** தியானப்பொருளை நன்றாயுந் திருத்தமாயும் தெளிவாயும் கண்டுபிடிக்கத்தேடும். **மனசானது,** இவ்விதம் புத்தியினால் தேடி அறிந்த அறிவுக்கு ஏற்றதும் இசைந்ததுமான பற்றுதல். உணர்ச்சிகளாகிற பயம், துக்கம், சிநேகம், நன்றியறிதல், நம்பிக்கை, விசுவாசம் முதலியவைகளைப் பிறப்பிக்கும். இவ்வித உணர்ச்சிகள் உன் மனசில் பிறந்து, சர்வேசுரனோடு நீ ஜெபத்தால் பேசி பிரார்த்திக்கும்போது, தேவ மகத்துவ சந்நிதிக்குக் காட்டவேண்டிய உள்வணக்கமும் வெளிவணக்கமும் குறைவின்றி காட்டுவது உன் கடமை. ஆனதால் நீ தியானத்தில் ஜெபஞ்செய்து சர்வேசுரனோடு பேசும்போது முழங்காலிலிருந்து ஜெபிப்பது யோக்கியம.

4. அர்ச். இஞ்ஞாசியார் தமது தியான முயற்சிகளை நான்கு வாரங்களாக வகுத்து, ஒவ்வொரு வாரத்துக்கும்

ஒரு விசேஷ கருத்தை அதின் முக்கிய பிரயோசனமாக குறித்திருக்கிறார். **முதல் வாரத்தின் தியான முயற்சிகளால்,** ஒவ்வொருவனும் தன் ஆத்துமத்தைப் பாவங்களிலிருந்து நல்ல பாவசங்கீர்த்தனத்தால் சுத்தஞ்செய்வதும், **இரண்டாம் வாரத் தியான முயற்சிகளால்,** சேசுநாதருடைய ஜீவியத்தின் தர்ம ஒழுக்கத்தை ஓர் மேல்வரிச் சட்டம்போல் தன் கண்முன் வைத்து, தான் எந்த அந்தஸ்தில், எவ்விதம், சேசுநாதரைப்போல் ஜீவித்து நடப்பது தேவசித்தம் என்று அறியத் தேடுவதும், **மூன்றும் வாரத் தியான முயற்சிகளால்,** சேசுநாதருடைய பாடுகளை யோசித்து தான் செய்த நல்ல பிரதிக்கினைகளில் தன்னை ஸ்திரப்படுத்துவதும், **நான்காம் வாரத்தில்,** உயிர்த்த சேசுநாதர்சுவாமியின் ஆனந்த சந்தோஷத்தை யோசித்து, அவரை அதிகம் அதிகமாய் சிநேகித்து, அவர் காட்டின பாதையில் பிரமாணிக்கமாய்க் கடைசிமட்டும் நடக்க பிரதிக்கினை செய்வதும் ஆகிய இவைகளே ஞானத்தியான முயற்சிகளின் நாலு வாரங்களுக்குமுள்ள உன்னத கருத்து. இவைகள் மனிதருடைய இரட்சணியத்துக்கும், உத்தம ஞான ஒழுக்கத்துக்கும் மகா அநுகூலமானவைகளென்று சொல்லவும் வேண்டுமோ?

5. தியானஞ்செய்கிறவன், துவக்கத்திலேயே சர்வேசுரனிடம் வெகு தாராளமான மனசோடு வந்து, தன் மனஸ்வாதீனம், ஆசை, விருப்பம், எல்லாவற்றையும் தன் ஆண்டவர் வசம் ஒப்புவித்து, அவர் தமது அநந்த ஞான சித்தப்பிரகாரம் தன்னையும் தன்னைச்சேர்ந்த யாவற்றையும் நடத்தும்படியாக சம்மதிப்பானாகில், அவனுக்கு ஞானத் தியான முயற்சிகள் யாவும் எளிதாகவும், மனசுக்கு இசைந்ததாகவும் தோன்றும். சர்வேசுரனும் தாராளமாய் தமது உதவியைக் கொடுப்பார். தேவாநுக்கிரகம் பூரணமாய் உண்டாகும்.

6. தியான நாட்களில் சில சமயம் ஆறுதலின்றி சலிப்பும் ஆயாசமும் வருத்தமும் உண்டாகி, இருதயம் யாதோர் உணர்ச்சியின்றி வரண்ட பூமிபோல் தோன்றுமா

கில், நீ மனதில் கலங்கவேண்டாம். அந்த சமயத்தில் நீ தியானத்தின் பல முயற்சிகளை எப்படி செய்துவருகிறு யென்று கவனமாய்ச் சோதித்துப்பார். குறித்த நேரத்தில் அந்தந்த ஞானக்கிருத்தியங்களை, குறித்தபிரகாரம், பிரமாணிக்கத்தோடு செய்கிருயோ அல்லவோ என்று ஆராய்ந்துபார். ஏதேனும் அசமந்தமும் குறையும் இருப்பதாக நீ கண்டால், அதுக்காக மனதில் துக்கப்பட்டு, அதைத் திருத்தி உன் நம்பிக்கை யாவும் சர்வேசுரன்மேல் வைத்து, சந்தோஷமாய்த் தொடர்ந்து நன்ருய்ச் செய். தைரியமிழந்து மனஞ் சோம்பாதே.

7. தியானஞ் செய்கிறவன் அந்தந்த நாளிலே தனக்கு விவரிக்கப்படும் பொருளைப்பற்றி கவனிக்கவேண்டுமேயன்றி, இனி வரப்போகிற தியானத்தின் பொருள் ஏதென்றறிய கவலைப்படாதிருப்பது நலம். அன்றியும், அந்தந்த தியான முயற்சிக்குக் குறித்த நேரமுழுவதையும் குறைக்காமல் அதிலே செலவழிக்கவேண்டும். குறித்த நேரத்தைக் குறைக்கும்படி பசாசின் சோதனை உனக்கு வரும்போது, சோதனையை ஜெயிப்பதற்காக, நேரத்தைக் குறைப்பதற்குப் பதில், கொஞ்சம் நீட்டி கூட்டிஞல் பசாசு தோல்வியடைந்து வெட்கி ஓடும்.

8. தியானஞ் செய்பவன் தன் ஆத்தும குருவிடம் தன் ஆத்துமத்தின் ஸ்திதியையும், தான் தியான முயற்சிகளைச் செய்யும் வகையையும், தனக்குண்டாகும் மன ஆறுதல் அல்லது மனவரட்சி, சலிப்பு முதலிய கூறுபாடுகளையும் திறந்து காட்டி, அவருடைய ஆலோசனையைக் கேட்டு நடப்பது சுகிர்தமான புத்தி.

9. தியான முயற்சிகளின் பலனைப் பூரணமாய் அடையும்படி ஆசையாயிருக்கிறவர்கள் தியானகாலத்தில் தங்கள் வீடு, ஜனம், வேலை, அலுவல் முதலிய இலௌகீக சம்பந்தமான சகல கவலையையும் நீக்கிவைத்து, தனிவாசமாய் ஏகாந்தத்திலிருந்து, என் ஆத்துமமும் சர்வேசுரனுந் தான் என்று சொல்லும்படியாய் இருப்பது மகா அவசியம்.

மனதில் உலக சம்பந்தமான கவலையும் விசாரமும் இல்லாவிட்டால், தன்னையும் சர்வேசுரனையும்பற்றி யோசிக்க புத்தியும் மனசும் தாராளமாய் தடையின்றிச் செல்லும்.

10. தியானப் பிரசங்கஞ் செய்பவர்க்கும் அதைக் கேட்பவர்களுக்கும் சமாதான ஒற்றுமை உண்டாகி, எல்லாம் சீராயும் ஒருமனமாயும் நடக்கும்படியாய், தியானங் கொடுப்பவர் கிறீஸ்துவர்களின் ஆத்தும இரட்சணியத்தையே எண்ணிப் பிரசங்கம் செய்வதால், அவர் சொல்லிலும் வசன நடையிலும் குறையிருந்தாலும் அல்லது ஞாபகப் பிசகாய்ப் பேசினாலும், எவனும் அதில் குற்றம் பிடிக்காமலும் அல்லது அவர் தன்னைச் சுட்டிப் பேசுகிறாரென்று விபரீதமாய் எண்ணாமலும், கபடற்ற மனசோடு கேட்பது தியானஞ் செய்கிறவர்களுக்கு அழகு.

இரண்டாவது: தியான யோசனை செய்யுமுன்னும், செய்யும்போதும் கவனிக்கவேண்டிய விவரங்கள்

1. தியான யோசனையாவது ஏதென்றால்: யாதொரு தேவ இரகசியம், வேத சத்தியம், சுவிசேஷ வர்த்தமானம், நீதி வாக்கியம் இவை முதலியவைகளைப் புத்தியின் சமுகமுன் ஸ்தாபித்து அதின் அர்த்தம், உண்மை, பிரயோசனம், நலம் முதலிய விசேஷங்களைப்பற்றி யோசிப்பதும், அந்த யோசனைக்குத் தக்கதுபோல் நல்லுணர்ச்சி பிறப்பிப்பதும், அதற்கு இசைவாய் தன் நடத்தையைச் சீர்படுத்துவதும் ஆகிய இவ்வித முயற்சியே தியான யோசனையாகும். உதாரணமாக: சம்மனசுக்கள் உலக ஆதியில் மோக்ஷத்தில் செய்த பாவத்தைப்பற்றி நீ தியானித்தால் அவர்கள் செய்த ஒரே பாவத்தால் மோக்ஷ பாக்கியத்தை இழந்து நரகத்தில் எப்படி விழுந்தார்களென்று யோசித்து, நீ எத்தனையோ பாவங்களைச் செய்திருக்கிறாயென்றும், அவைகளுக்காக எவ்வளவு ஆக்கினைப்படவேண்டியதென்றும் நினைத்து, உன் பாவங்களுக்காக நீ வெட்கப்பட்டு நாணி, பயந்து, இனி பாவத்தைச் செய்யமாட்டேனென்று பிரதிக்கினை செய்தால் இதுவே தியான யோசனையாகும்.

2. நீ தியானந் துவக்குமுன் தியானிக்கவேண்டிய பொருளை முன்னிதாய் வாசித்து அல்லது ஒருவன் வாசிக்க அல்லது சொல்லக்கேட்டு அதை இரண்டு அல்லது மூன்று பிரிவாய் வகுத்து உன் ஞாபகத்தில் குறிப்பாய் வைத்துக்கொள்.

3. தியானஞ் செய்யும் நேரம் வந்தால், தகுந்த இடத்தில், சர்வேசுரன் சமுகத்தில் உன்னை நிறுத்தி, சற்று நேரம் நின்று, பின் முழங்காலிலிருந்து நமஸ்காரம் செய்து ஆராதிப்பாயாக. உன் தாழ்மையைக் காட்ட தரையை முத்தி செய்.

4. அதன்பின் உன் புத்தி, மனது, ஞாபகம், உன் சத்துவம், நீ செய்யும் முயற்சிகள் எல்லாவற்றையும் சர்வேசுரனுடைய ஸ்தோத்திர மகிமைக்காக ஒப்புக்கொடு.

5. நீ தியானிக்கும்படி தெரிந்த பொருளை உன் ஞாபகத்தில் சுருக்கமாய் வரச்செய். இது தியான ஆரம்ப முதல் கிருத்தியம். அதன்பின் நீ தியானிக்கும் பொருள் உன் மனதின் கண்முன் தெளிவாயிருக்கும்படி அந்தப் பொருளுக்குரிய இடத்தை நீ உன் கண்ணால் பார்ப்பதாகத் தியானித்துக்கொள். உதாரணமாக: சேசுநாதர் பிறந்ததை நீ தியானித்தால், அவர் பிறந்த மாட்டுத்தொழுவையும், வைக்கோல்மேல் படுத்திருக்கும் தேவ குழந்தையையும், நீ உன் கண்ணால் பார்ப்பதாக உத்தேசித்துக்கொள்.

6. நீ தியானிக்கும் பொருள் வேத வாக்கியம், நீதி வசனம், சத்திய சுலோகமானால் அது உன் கண்ணுக்குப் புலப்படும்படி ஓர் வகையான ரூபகம் அதற்குக் கொடுக்கலாம். அப்படியே பாவத்தின்பேரில் தியானிக்கையில், உன் ஆத்துமம், சரீரமாகிற சிறைக்குள்ளே அடைப்பட்டு, புத்தியில்லா மிருகங்களோடு கூடி இருந்து, அழுது பிரலாபிப்பதாக உத்தேசிக்கலாம். இது தியான ஆரம்ப இரண்டாம் கிருத்தியமாகிற **இடரூபிகரம்.** இதினால் உண்டாகும் பிரயோசனமேதென்றால், நமது கருத்தும், கவனமும் சிதறிப்போகாமல் கிரகித்த இடத்தைச் சுற்றியே நிற்கும்.

இப்படி கிரகிப்பது சிலருக்கு எளிதும் வேறு சிலருக்குப் பிரயாசையுமாயிருக்கும். ஆனதால் அவரவர் தங்கள் சுபாவ இயற்கைக்குத் தக்கபடி வலுவந்தமின்றி, இதைச் செய்வது கிரமம். மனோபாவனையாகிற சக்தியின் துர்ப் பலனால் உனக்கு இடரூபிகரிப்பது கூடாதென்று தோன்றினால், இதில் வீணாய் நேரத்தைச் செலவழிக்கத் தேவையில்லை.

7. எந்தப் பொருளைப்பற்றி நீ தியானித்தாலும், நீ உன் சொந்த ஆத்தும நன்மையையே தேடி, உன்னிடத்திலுள்ள துர்க்குணங்களை அடக்கி, உன் நடத்தையை சீராக்கி, நல்லொழுக்கத்துக்கு உன்னைக் கொண்டுவருவது உன் நோக்கமாயிருக்கவேண்டுமேயன்றி வீணான மனோராஜ்யம் செய்து, பிறர் நடத்தையைச் சீர்திருத்த உன்னை மறந்துபோவது பெரும் மோசமான தப்பிதம்.

8. தியான யோசனை முடிய பத்து நிமிஷத்துக்கு முன், புத்தியின் யோசனையெல்லாம் நீக்கி சர்வேசுரனுடன் பிரார்த்தித்துப் பேச முழங்காலிலிரு. அப்போது தகப்பனோடு பிள்ளையும், எஜமானன்முன் ஊழியனும், சிநேகிதனோடு சிநேகிதனும், பேசுவதுபோல் உன் குறைகளைச் சொல்லியும், உன் பிரியத்தைக் காட்டியும் சர்வேசுரனோடு பேசு. சில சமயம் நியாயாதிபதிமுன் குற்றவாளி பயந்து நடுங்கி நிற்பதுபோல் உன்னைச் சர்வேசுரன் முன் நிறுத்தி அவருடைய தேவ நீதியின் கோபத்தைத் தணிக்க தாழ்மையாய் நீ மன்றாடு. இவ்வகையான ஜெபத்தை சேசுநாதர், தேவமாதா, உனக்குப் பாதுகாவலான அர்ச்சியசிஷ்டவர்கள், இவர்களை நோக்கிச் செய்யலாம்.

9. தியானம் முடிந்தபின் பரமண்டல மந்திரம், அல்லது பிரியதத்த மந்திரம், அல்லது கிறீஸ்துவின் ஆத்துமமானதே என்ற ஜெபம் சொல்வது வழக்கம்.

10. ஒருவிசை யோசித்த தியானத்தின் பொருளைத் திரும்பவும் மறுவிசை யோசிப்பது சில சமயங்களில் வெகு

பிரயோசனமுள்ளது. முதல்விசையில் மனதில் படாதது மறுவிசை நன்றாய்ப் படலாம். இவ்வித தியானத்தில் புத்தியின் யோசனையைக் குறுக்கி, மனதை முக்கியமாய் முயலும்படி செய்து, நல்லுணர்ச்சியும் மன உருக்கமும், பற்றுதலும் உண்டாகப் பிரயாசைப்படுவது நலமாயிருக்கும்.

11. எந்த விஷயத்தின்பேரில் நீ யோசிக்கும்போது உன் மனதில் உருக்கமும், உணர்ச்சியும், பற்றுதலும் உண்டாகின்றதோ அதிலே நீ ஊன்றி நில். அடுத்த விஷயத்தை நினைக்கக் கவலைப்படாதே. பசியுள்ளவன் பசியை ஆற்றும் போஜனங் கண்டால் அதைப் பசியாற உட்கார்ந்து சாப்பிடுவதுபோல் நீயும் உன் தியான யோசனைமட்டில் செய். ஆத்திரமும், கவலையும், படபடப்பும் உதவாது. அமர்ந்து மெதுவாய் மனதுங் கருத்தும் சிதறாமல் செய்.

மூன்றவது: தியான முயற்சிகளை நன்றாய்ச் செய்யும்படி ஒவ்வொருவரும் செய்யவேண்டிய பிரதிக்கினைகள்

தியானம் முடிந்தபின் பத்து நிமிஷமாகிலும், இந்தப் பிரதிக்கினைகளின்படி தியானத்தை நீ செய்தாயோ வென்று சோதிப்பது தியான அநுகூலத்துக்கு உத்தம உபாயம்.

1. நான் இரவில் படுக்குமுன் மறுநாள் காலமே செய்யவேண்டிய தியானத்தின் பொருளைச் சுருக்கமாய் என் ஞாபகத்தில் வரச்செய்வேன்.

2. காலமே எழுந்திருந்தவுடனே வீண் நினைவுகளை நீக்கி, நான் தியானிக்கும் பொருளை நினைத்து, அதற்கு இசைந்த உணர்ச்சிகள் மனதில் உண்டாகச் செய்வேன்.

3. தியானந் துவக்குமுன் நான் இருக்குமிடத்துக்கு இரண்டடி அப்பால் நின்று சர்வேசுரன் என்னைப் பார்க்கி

ருமென்று விசுவசித்து வணக்கத்தோடு அவரை ஆரா தித்துத் தரையை முத்தி செய்வேன்.

4. தியானத்துக்குமுன் தியான ஆரம்பக் கிருத்தி யங்களை மறந்துபோகாமல் ஒழுங்காய்ச் செய்வேன்.

5. தியானம் முடிந்தபின் பத்து நிமிஷமாகிலும் தியா னஞ்செய்த வகையைப்பற்றி சோதித்து, நன்ருய்ச் செய் தால் சர்வேசுரனுக்கு ஸ்தோத்திரம் செய்வேன்; குறை வாய்ச் செய்தால் துக்கப்பட்டு, அதின் காரணமின்ன தென்று விசாரித்து, அடுத்தவிசை குறைவின்றி செய்ய தீர்மானிப்பேன்.

6. முதல் வாரத்தின் தியானஞ் செய்யும்போது சூரியப் பிரகாசம், விநோதகாட்சி முதலிய சந்தோஷகர மானவைகளைப் பார்க்கமாட்டேன்.

7. தியான நாட்களில் சிரிப்பையும் சிரிப்புண்டாக் கக்கூடிய எதையும் நீக்கி மரியாதை அடக்கத்துடன் இருப் பேன்.

8. தகுந்த காரணமின்றி எவரோடும் பேசாமல் மௌனமாயிருப்பேன்.

9. பாவத்தையும் சேசுநாதர் பாடுகளையும்பற்றி தியா னிக்கும் நாட்களில் என் ஆத்தும குருவின் உத்தரவோடு சில தபசு முயற்சிகள் செய்வேன்.

10. தேவநற்கருணையிலிருக்கும் சேசுநாதர்சுவாமியை அடிக்கடி சந்திக்கப் போவேன்.

11. தேவமாதாவின் உதவியை ஒருநாளில் பலமுறை சலியாமல் கேட்பேன்.

12. மனதில் கலக்கமும், பயமும், சலிப்பும் உண்டா கும்போது என் ஆத்தும குருவிடம் போய் அவருக்கு

என் மனதைத் திறந்து காண்பித்து, அவர் கொடுக்கும் ஆலோசனைப் பிரகாரம் நடப்பேன்.

விபரம்:—தியான நாட்களில் செய்யத்தகும் தனி ஆத்தும சோதனை, இங்கே குறித்திருக்கும் 12 விஷயங்களைச் சார்ந்தது. இவைகளை நீ சரியாய்ச் செய்தாயோ அல்லவோ என்று நீ ஆத்தும சோதனை செய்யும் வேளையில் சோதிக்கவேண்டும். அப்படியே, முதலாவது: நான் இரவில் படுக்குமுன் மறுநாள் செய்யவேண்டிய தியானத்தின் பொருளைச் சுருக்கமாய் என் மனதில் வரச்செய்தேனோ? இப்படியே மற்ற விஷயங்களைப்பற்றி உன்னையே நீ கேட்டு விசாரித்து உன்னைத் திருத்துவாயாக.



தியானப் பிரசங்கங்கள்

முதல் வாரம்

ஆத்துமத்திலுள்ள பாவ துர்க்குணங்களை நீக்குவதற்கு ஏதுவான தியானங்கள்

முதல் வாரம்

ஆத்துமத்திலுள்ள பாவ துர்க்குணங்களை நீக்குவதற்கு ஏதுவான தியானங்கள்

முதல் நாள்—முதல் தியானம்

நல்லொழுக்கத்திற்கு மூலாதாரமான சத்தியம்:

மனிதன் கதி

இங்கிலீஷ் இராச்சியத்தார் அஞ்ஞானிகளாயிருந்த பூர்வீக காலத்தில், அவர்களுக்குச் சத்திய வேதத்தைப் போதிக்கும்படி அர்ச். அகுஸ்தீன் என்பவரும், அவரோடு சில குருக்களும் போனார்கள். அத்தேசத்திலிருந்த அஞ்ஞான அரசன் தன் மந்திரி பிரதானிகள் முதலிய இராஜ சமஸ்தானம் முன்பாக அகுஸ்தீன் என்பவரை அழைத்து அவர் செய்த பிரசங்கத்தைக் கேட்டான். அந்தப் பிரசங்கத்தில், அகுஸ்தீன் மனிதன் யாரென்றும், அவன் உலகத்தில் வந்த காரணம் எதுவென்றும், மனிதனுக்கு இரட்சணியம் சேசுநாதரால் எப்படி வந்ததென்றும், மனிதன் இறந்தபின் அவனுக்கு வரும் கதி ஏதென்றும் விரிவாய் விவரித்தார். இராஜனும் அங்கு கூடிய சபையோர் எல்லாரும் கவனமாய் இந்த நவமான பிரசங்கத்தைக் கேட்டார்கள். பிரசங்கம் முடிந்தபின், அரசன் தன் மந்திரிகளிடம் இந்த நூதன வேதத்தின்மட்டில் அவர்கள் கொள்ளும் அபிப்பிராயம் என்னவென்று வினவினான். பலபேர் பலவிதமான அபிப்பிராயங்கொண்டார்கள். ஆனால் அவர்களுக்குள் நரை திரை விழுந்த மதியூகியான மந்திரி எழுந்து அரசனை வணங்கிச் சொல்வான்: மகா

இராஜ்! அதோ அங்கே நிற்கும் மரத்தைப் பாருங்கள். அதன்மேல் பறவை ஓர் கூடு கட்டியிருக்கிறது. அந்தக் கூட்டுக்குள் இப்போது பட்சி பிரவேசித்தது. இதோ பாருங்கள் அந்தப் பட்சி வெளியே பறந்துபோகின்றது. மகா இராஜ்! இந்தப் பறவை எங்கேயிருந்து பறந்து வந்து கூட்டுக்குள் பிரவேசித்தது? கூட்டுக்குள் போன பின் அது என்ன செய்தது? இப்போது எங்கே பறந்து போனது? இந்தக் கேள்விகளுக்கு உத்தரஞ் சொல்ல யார் தரம்? இதுபோல, இந்த மானிட ஜென்மத்துக்கு எங்கே யிருந்து உயிராகிற ஆத்மா வந்தது? ஆத்மா சரீரமாகிற கூட்டுக்குள் இருக்குமட்டும் அதின் வேலையென்ன? இனி சரீரத்தைவிட்டு ஆத்மா எங்கே போகும்? அதற்கு என்ன கதி? ஓ மகத்துவ இராஜ்; இந்தக் கேள்விகளுக்கு தக்க மறுமொழி சொல்பவனே புத்திமான். எந்த வேதம் இவைகளைத் திருத்தமாய்ப் படிப்பிக்கின்றதோ அதுவே சத்திய வேதம். பிறதேசத்தாரான இவர்கள் போதிக்கும் வேதம் இவைகளைப் படிப்பிப்பதால் இதுதான் சத்தியவேதமாக என் புத்திக்கு தோன்றுகின்றதென்று சமயோஜிதமாய் உத்தாரம் சொன்னான்.

இராஜாமுதல் சகலரும் இந்த ஞாயத்தால் மனந்திரும்பி சத்தியவேத கிறீஸ்துவர்களானார்கள். இந்த தீட்சண்ணிய புத்தியுள்ள மந்திரி சொன்ன மறுமொழியில் மேலான ஞானம் அடங்கி இருக்கின்றது. நான் எங்கே இருந்து வருகிறேன்? எதுக்காக இந்தப் பூமியில் நான் இருக்கிறேன்? இனி நான் பூமியைவிட்டு எங்கே போவேன்? என்ற இந்த மூன்று கேள்விகளுக்கும் தகுந்த மறுமொழி அறிவது: அதுதான் அறிவு, அதுதான் ஞானம், அதுதான் புத்தி. இந்த மூன்று சத்தியங்களின் பேரில் முதல் பிரசங்கம் செய்யப்போகிறோம். இந்த சத்தியம் நல்லொழுக்கத்திற்கு மூலாதாரமான அஸ்திவார சத்தியமென்று அர்ச் இஞ்ஞாசியார் குறித்துக்காட்டியிருக்கிறார். இனிமேல் நீங்கள் கேட்டுத் தியானிக்க வேண்டிய சத்தியங்களெல்லாம் இந்த முதல் தியானத்திலிருக்கும் சத்தியத்திலே ஆதாரமாய் தங்கி ஊன்றி நிற்

கின்றன. மூலாதார சத்தியத்தை எவன் நன்ருய் ஆழ்ந்து யோசித்து கண்டுபிடிக்கிருனே, அவன் இனி வரும் சத்தியங்களையும் நன்ருய்க் கண்டுபிடிப்பான். அவைகளால் பெறக்கூடுமான நன்மை எல்லாம் பெறுவான்.

நான் இப்போது விவரிக்கும் சத்தியத்தை நீங்கள் கவனமாய்க் கேட்டு, பின் அதன்பேரில் கருத்தாய் யோசிப்பீர்களாகில் அப்போதுதான் இந்தப் புத்தி உங்கள் மனதில் சார்ந்து பதியும்.

ஓ! மரியே! இஷ்டப்பிரசாதத்தின் மாதாவே! ஞானத்தியான முயற்சிகளை அர்ச். இஞ்ஞாசியாருக்குப் படிப்பித்தது நீர்தான் ஆனபடியால், நீர் சொல்லிக் கொடுத்த புத்திகளை நாங்கள் தியானித்து நன்ருய்க் கண்டுபிடிக்கக் கிருபை செய்யும். எங்கள் புத்திக்குப் பிரகாசமும், மனதுக்கு உறுதியும் உண்டாக உமது தேவகுமாரன் சேசுநாதரிடத்தில் எங்களுக்காக மன்ருடும் தாயே.

முதல் பாகம்

உலகத்தில் மனிதனுடைய கதி இன்னதென்று தெளிவாய் நாம் அறியும்படியாக இதில் மூன்று விஷயங்களை நாம் கவனிக்கவேண்டும். ஆதிமுதலில் நாம் அறியவேண்டியது: நாம் எங்கேயிருந்து வருகிருேம்? அதன்பின் உலகில் நாம் இருக்கும்போது யாருக்கு சொந்தமானவர்கள்? மூன்ருவது நாம் எதுக்காக இங்கே இருக்கிருேம்? இந்த மூன்று கேள்விகளுக்கும் மூன்று வார்த்தையில் மறுமொழி ஏதென்ருல்: (1) நாம் சர்வேசுரனிடத்திலிருந்து வருகிருேம்; ஆனதால் சர்வேசுரனே நமக்கு **ஆதிகாரணமானவர்.** (2) நாம் சர்வேசுரனுக்குச் சொந்தம்; ஆனதால் சர்வேசுரனே நமக்கு **எஜமான்.** (3) நாம் சர்வேசுரனுக்காக இருக்கிருேம்; ஆனதால் சர்வேசுரனே, நமக்கு **கடைசிக்கதி.** சர்வேசுரனே நமக்கு ஆதியும் நடுவும் முடிவுமானவர். அவரிடத்திலிருந்து நாம் வந்து, அவருக்கு நாம் ஊழியஞ்செய்து, கடைசியில் அவ

ரிடம் சேரவேண்டியவர்கள். சர்வேசுரனே நமக்கு ஆதி காரணமான சிருஷ்டிகர். அவரே நம்மை நடத்தி ஆளும் ஆண்டவர். அவரே நமக்கு நித்திய பாக்கிய சம்பாவனை யாயிருப்பவர்.

நாம் சர்வேசுரனிடத்திலிருந்து வருகிறோம். **அவரே நமக்கு ஆதிகாரணமான சிருஷ்டிகர்** என்ற இந்த சத்தியத்தை யார் மறுப்பார்? இதற்கு நூறு வருஷங்களுக்குமுன் நீங்கள் எங்கே இருந்தீர்கள்? இந்த விஸ்தார மான பூமியும், வானத்தில் பிரகாசிக்கும் சூரிய சந்திர நட்சத்திரங்களும் அப்போது உண்டாயிருந்தன. நீங்களோ, எங்கே இருந்தீர்கள்? உங்களைப்பற்றி எவனும் பேசவுமில்லை, நினைக்கவுமில்லை. உங்கள் ஊரும் பேரும் ஒருவருக்குந் தெரியாது. உங்கள் காலில் மிதிபடும் அந்த மண் நூறு வருஷங்களுக்குமுன்னே ஓர் பொருளாயிருந்தது. நீங்களோ, அது முதலாயில்லை. அந்த அணுப்பிரமாண மண் உங்களிலும் மேலான பொருளாக அப்போது இருந்தது. ஆ! மனிதன் எவ்வளவு அற்ப வஸ்து!

இப்படி நூறு வருஷங்களுக்கு முன் சுத்த சூனியமாய் ஒன்றுமாயில்லாதிருந்த நீங்கள் இப்போது உயிர் பெற்று இருக்கிறீர்கள். இருக்கிறீர்களென்றால், உங்கள் காலில் மிதிபடும் அசைவற்ற அந்த மண்ணைப்போலவோ? அல்லது உணர்வற்ற மரக்கட்டையைப்போலவோ? அல்லது புத்தியில்லாத மிருகத்தைப்போலவோ? அல்ல, அல்ல. உயிரும், உணர்ச்சியும், அறிவும், புத்தியும் உள்ள மனிதர்களாக நீங்கள் இப்போது இருக்கிறீர்கள். மனிதனென்றால், கண்ணுக்கு, இந்த விஸ்தாரமான பூமியில், புலப்படும் ஜீவகோடிராசிகளுக்குள் மகா மேன்மை பெற்றவன். அதிசய மனோதத்துவ இலக்ஷணங்களோடுகூடிய புலன்களை அமையப்பெற்ற நரஜீவன். கண் காது வாய் முதலிய பஞ்சேந்திரியங்களால் பார்த்து, கேட்டு, பேசும்படிக்கான சக்தியுள்ளவன். பொருட்களின் இயல்பும் குணமும் ஒன்றுக்கொன்றுள்ள சம்பந்தமும் பகுத்தறியும்படிக்கு ஏதுவான புத்தியும், நுண்ணறிவும்,—வேண்டும்

வேண்டாம் என்று தன் இஷ்டப்படி நடக்க வரம்பெற்ற மனஸ்வாதீனமும் அற்புதவகையில் பெற்றவன்.

இவ்வித சிறந்த மனோதத்துவ இலக்ஷணங்களால் அலங்காரம்பெற்று, உலகத்தில் வாழும் சகல ஜீவகோடிகளுக்கெல்லாம் அதிபதியாய் நிமிர்ந்த முகத்தோடும், இராஜ கௌரவ மேன்மையோடும் நடந்து, சுவேச்சையாய்த் திரியும் மனிதனாகிற நீ எங்கேயிருந்து இவ்வித இலட்சணங்களை அலங்கார அணியாய்ப் பூண்டு வந்தாய்? தற்செயலாய் காட்டில் புல் முளைப்பதுபோல் நீயும் முளைத்துத் தோன்றினாயோ? அல்ல. தற்செயல் என்பது அர்த்த சாரமற்ற வார்த்தை. ஓர் புல்லும் தானே வித்தின்றி முளையாது. வித்தில்லா சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை என்பது நீதி வாக்கியம். உன் தாய்தந்தை உன்னை மனிதனாய் சிருஷ்டித்தார்களோ? சிருஷ்டிக்குந் தொழில் சர்வேசுரனைச் சார்ந்தது; மனிதனால் எதையுஞ் சிருஷ்டிக்க ஏலாது. அரூபியான ஆத்துமத்தை தாய் தகப்பன் உனக்குக் கொடுக்கவில்லை. அல்லது நீயே உன்னை உருவாக்கி உலகில் வந்தாயோ? ஒன்றுமில்லாமையாயிருந்த நீ, எப்படி உன்னை உருவாக்கலாம்? ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றும் உண்டாகாது என்பது நீதிவாக்கியம்.

இவ்விதம் தற்செயலாய் நீ வராமலும், தாய் தந்தையால் மனிதனாகாமலும், நீயே உன்னை உருவாக்கக் கூடாமலுமிருக்க, எப்படி நீ உலகத்தில் வந்திருக்கிறாய்? இதற்கு ஒரே ஒரு மறுமொழிதான் உண்டு. சர்வேசுரனே உனக்கு ஆதித் துவக்கமானவர். அவரே உன்னை மனிதனாய் உருவாக்கி சிருஷ்டித்து உலகத்தில் அனுப்பினவர். சர்வேசுரன் ஒருவரே உனக்கும் உலகத்திலுள்ள சகல ஜீவப்பிராணிகளுக்கும் ஆதிகாரணம். சர்வேசுரன் அல்லாத சகலமும் சர்வேசுரனிடத்திலிருந்து வருகின்றன. சர்வேசுரன் ஒருவர்மாத்திரம் தம்மில் தாமாயிருப்பவர்.

இந்த மூலாதார சத்தியத்தை மறுப்பது அபத்தத்திலும் அபத்தம். நான் சர்வேசுரனிடமிருந்து வருகிற

தில்லையென்றும், சர்வேசுரனே இல்லையென்றும் சொல்லு வது முதிர்ந்த பயித்தியம். புத்தியில்லாப் பேதைதான் சர்வேசுரன் இல்லையென்று தன் மனசுக்குள் சொல்வான் என்று வேத வாக்கியஞ் சொல்லுகின்றது.

ஆண்டவரே! நீர்தான் என்னைச் சிருஷ்டித்த சர்வே சுரனென்று நான் மனப்பூரணமாய் அங்கீகரிக்கிறேன். ஒன்றுமில்லாமையினின்று என்னை உருவாக்கி மனிதனாய்ச் செய்தவர் நீர்தான். உமக்கு நித்திய ஸ்துதியும் நன்றி யறிந்த ஸ்தோத்திரமும் உண்டாவதாக.

சர்வேசுரனே உன்னை உண்டாக்கி உலகத்தில் வைத் தாரென்று இப்போது நீ கண்டுபிடித்திருக்கிறாய். அவர் உன்னை சிருஷ்டித்ததற்கு அடுத்த பல விஷயங்களை சற்று ஆராய்ந்து பார். சர்வேசுரன் உன்னை மனிதனாய் சிருஷ் டிக்க ஏது காரணம்? நீ சர்வேசுரனுக்குத் தேவையோ? சிருஷ்டி யாதொன்றும் இல்லாவிடில் சர்வேசுரனுடைய பாக்கியானந்தத்துக்கு ஏதும் குறைவருமோ? சர்வேசுரன் சர்வேசுரனாயிருக்கமாட்டாரோ? ஓ! அற்ப மனிதா, கேள், அனந்த ஞான சுரூபியாய், அளவில்லா வல்லமை யுள்ள கர்த்தாவாய், சகல பாக்கிய நன்மை யாவும் சம் பூரணமாய்த் தம்மில் உள்ளவராய், கோடாகோடி நித் தியகாலம் தம்மில் தாமாயிருக்கும் சர்வலோக ஆண்டவ ருக்கு, நீயும் நானும், இவனும் எவனும், எந்தப் பிராணி யும், சற்றும் அவசியமே இல்லை. உலகங்களெல்லாம் இருந் தாலும், கெட்டாலும், அழிந்தாலும், வாழ்ந்தாலும், சர் வேசுரனுக்கு இயல்பில் உள்ள பாக்கியானந்தத்தில் ஓர் அணுப்பிரமாணமும் குறைவராது.

இவ்வித மகத்துவ பாக்கிய சம்பூரணரான சர்வே சுரன் உன்னைச் சிருஷ்டித்ததற்குக் காரணம், அவருடைய அணைகடந்த சிநேகமே அன்றி வேறொன்றுமில்லை. சகோ தரனே! நாம் சொல்லுவதைக் கவனித்துக் கேள். நீ ஒன்றுமில்லாதபோதே, உன்னைப்பற்றி யாரும் நினையாத போதே, சர்வேசுரன் உன்னை நினைத்து உன்னைச் சிநேகித் தார். இந்த சிநேகம் நித்தியமான சிநேகம். நித்திய

மான சிநேகத்தோடு உன்னைச் சிநேகித்து, நித்தியமான பாக்கியம் உனக்குக் கொடுக்கத்தக்கதாக, தாம் தமது சர்வ வல்லமையால் உண்டாக்கக்கூடிய கோடாகோடி மனுஷர்களிலிருந்து உன்னை விசேஷ அன்பால் தெரிந்து, தகுந்த காலத்தில் உன்னைச் சிருஷ்டித்து உலகில் வைத்தார். இவ்வளவு பட்சம் உனக்கு காட்டும்படி சர்வேசுரனுக்கு என்ன கடனிருந்தது? கடன் என்பது ஒன்றுமில்லை. இவ்வளவு சிநேகம் உனக்கு அவர் காட்ட சிநேகமே காரணமாயிருந்தது.

இன்னங்கேள். உன்னைச் சிருஷ்டிக்க சித்தமான சர்வேசுரன் உன்னை மிருகமாய் சிருஷ்டிக்கவில்லை. நொண்டியாய், முடமாய், ஊமையாய், செவிடனாய், அங்கவீனனாய்ச் சிருஷ்டியாமல், அவயவங்கள் பூரணமாய் அமையப்பெற்ற தேகமுள்ளவனாய் உன்னைச் சிருஷ்டித்தார். உன்னை மனிதனாய் உண்டாக்கிய பின்னும், நீ அஞ்ஞானியாயும், துலுக்கனாயும், பதிதனாயுமிருக்கும்படி செய்திருக்கலாம். அப்படி ஒன்றும் செய்யாமல் நீ சத்தியவேதத்தில் கத்தோலிக் சபையில் கிறீஸ்துவனாய் பிறக்கும்படி செய்தது சொற்ப நன்மையோ?

இதுமாத்திரமோ சர்வேசுரன் உன்னைச் சிருஷ்டித்த சிநேகத்தின் அற்புத இலக்ஷணம்? உன்னை ஒருவிசை மனிதனாய்ச் சிருஷ்டித்தது போதாதென்று, தமது சிருஷ்டிப்பின் அலுவலை க்ஷணத்துக்கு க்ஷணம், எந்த நிமிஷத்திலும் புதுப்பித்து, தமது தேவ பராமரிப்பின் செயலால் உன்னைக் காப்பாற்றிவருகிறார். உன்னை முதல் விசை சிருஷ்டிக்கும்போது எவ்விதம் தமது சர்வ வல்லமையின் செயலைப் பிரயோகித்தாரோ, அவ்விதமே நீ உயிரோடிருக்கும் ஒவ்வொரு நிமிஷத்திலும் அதே சர்வ வல்லமையைப் பிரயோகித்து, உனக்கு இயல்பான, நீ முன்னிருந்த ஒன்றுமில்லாமைக்குத் திரும்பி நீ போகாதபடி உன்னைத் தமது கையில் காப்பாற்றிவருகிறார். அதோ உயர இருந்து கட்டித்தொங்கும் அந்தப் பளிங்கு விளக்கைப் பார். அது கீழே விழுந்து உடைந்து நொருங்கிப் போகாதபடி

அதைத் தாங்கும் கம்பி எப்போது எந்த நிமிஷத்திலும் அவசியம். விளக்கை முதல்விசை உயரத்தூக்கி தொங்கப் போடும்போது கம்பி அவசியமாயிருந்தாற்போல் எந்த க்ஷணத்திலும் அது விளக்குக்கு அவசியம். கம்பி அறுந்தால் விளக்கும் விழுந்து உடையும். அதுபோலவே சர்வேசுரனால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் விழுந்து கெட்டழியாதபடி சர்வேசுரனுடைய விசேஷ பராமரிப்பு எந்த நிமிஷத்திலும் அவனுக்குத் தேவை.

சகோதரரே! நாம் இங்கே விவரித்துக்காட்டிய சத்தியம் உங்கள் மனதில் பதிந்ததோ? இது உண்மைதான் என்று நீங்கள் அங்கீகரிக்கிறீர்களோ? நல்லது. இப்போது சர்வ மகத்துவ சர்வேசுரன் சமுகமுன் சாஷ்டாங்கமாக விழுந்து சொல்லுங்கள்: சுவாமீ! நான் ஒன்றுமில்லாமை, இதுதான் என் சுய அந்தஸ்து. தூசியிலும் நான் தாழ்ந்தவன். தேவரீர் என்னை ஓர் பொருளாக மதித்து உமது கையால், என்னைப் புத்தியுள்ள மனிதனாய்ச் சிருஷ்டித்தீர். சிருஷ்டித்தபின் என்னை இதுமட்டுங் காப்பாற்றி வந்தீர். இந்த நன்மைக்கெல்லாம் தேவரீருடைய சிநேகமே காரணம். உமக்கு நான் நன்றியறிந்திருக்கிறேன். உம்மை நான் என் சிருஷ்டிகராக அங்கீகரித்து சாஷ்டாங்கமாக விழுந்து உம்மை ஆராதிக்கிறேன்.

இரண்டாம் பாகம்

நாம் எல்லாரும் சர்வேசுரனுடைய கையிலிருந்து வருகிறோம். ஆனதால் அவரே நமக்கு ஆதிகாரணமானவரென்று முதல் பாகத்தில் விரிவாய்க் காண்பித்தோம். இப்போது **நாம் சர்வேசுரனுக்குச் சொந்தமானவர்கள், ஆனதால் அவரே நமக்கு எஜமான்** என்று விவரிக்கப் போகிறோம். கவனமாய்க் கேளுங்கள்.

நாம் சர்வேசுரனிடமிருந்து வருவது சத்தியமானால் அவருக்கு நாம் சொந்தமாயிருக்கிறோம் என்பதும் சத்தியம். பட்டப்பகல்போல் தெளிவான இந்த சத்தியத்தை ஞாயாதாரங்களால் ஒப்புவிப்பதும் அவசியமோ? தேசத்

துக்கெல்லாம் அதிபதியாகிய இராஜாவுக்கு, அத்தேச பிரஜைகளெல்லாரும் சொந்தமல்லவா? எஜமானனுக்கு ஊழியஞ்செய்யும்படி அமர்ந்திருக்கும் ஊழியர்கள் எஜமான் சொற்படி பணிந்து நடப்பது கிரமம் அல்லவா? பிள்ளைகள் தங்களைப் பெற்று வளர்க்கும் தகப்பன் சொற் கேட்டு வணங்கி நடப்பது பிள்ளைகளின் கடமை அல்லவா? தச்சன் மரத்தை விலைக்கு வாங்கி பலகையாய் அறுத்து தன் கையால் ஓர் பெட்டி செய்தால் அந்தப் பெட்டிக்குத் தச்சன் அல்லோ சொந்தக்காரன்? குயவன் மண்ணால் பானை வனைந்து செய்துமுடித்தால் அந்தப் பானை குயவனுக்கன்றி வேறு யாருக்குச் சொந்தம்?

அப்படியானால் சர்வேசுரன் தமது கையால் உன்னை உருவாக்கி சிருஷ்டித்து, உனக்குள்ள யாவற்றையும் தாமே கொடுத்து உன்னை உலகத்தில் வைத்தவராதலால் நீ அவருக்கு முழுதுஞ் சொந்தமானவன். அவரே உனக்கு ஏக எஜமான். அரசனுக்கு அவன் பிரஜைகளும், எஜமானனுக்கு அவன் ஊழியனும், தகப்பனுக்கு அவன் பிள்ளையும் சொந்தமாயிருட்பதைப்பார்க்கிலும், உன்னைச் சிருஷ்டித்து காப்பாற்றிவரும் சர்வேசுரனுக்கு நீ அதிக சொந்தமானவன். சர்வேசுரனுக்கு உன்பேரில் உள்ள சுதந்தர உரிமை மற்றெவர்க்குமுள்ள சுதந்தர உரிமையைப்பார்க்கிலும் உயர்ந்ததும் ஸ்திரமுமானது. கேள், சர்வேசுரனுக்குச் சொந்தமில்லாத ஏதாவது உன்னிடத்திலிருக்கிறதா? சர்வேசுரனிடமிருந்து நீ பெறாத ஓர் அணுப்பிரமாணமான பொருள் முதலாய் உன்னிடத்தில் நீ காட்டுவாயா? சர்வேசுரன் உனக்குத் தந்தவைகளை எல்லாம் திரும்பவும் அவர் எடுத்துக்கொள்வாரானால் உன்னிடம் எது மீதியாயிருக்கும்? உன் புத்தியை அவர் எடுத்துக்கொண்டால் நீ மிருகமாவாய். உன் உயிரை எடுத்தால் நீ மண்ணாவாய். அந்த மண்ணையும் எடுத்துக்கொண்டால் நீ ஆதிமுதலிலிருந்த ஒன்றுமில்லாமை ஆவாய். ஆனதால் நம்மிடத்திலிருப்பதெல்லாம் சர்வேசுரனே நமக்குக் கொடுத்தார். அவருக்கே நாம் சொந்தமானவர்கள். அவரே நமக்கு எஜமான். **நமதுபேரில் அவருக்குப் பூரண சுதந்தரமுண்டு.**

இந்தப் பூரண சுதந்தர உரிமையின் பல இலக்ஷணங்களை உங்களுக்குக் காட்டுவோம். இன்னுங் கவனமாய்க் கேளுங்கள். யாதொரு பொருள் எவனுக்குச் சொந்தமோ அவனுக்கு அதின்பேரில் சுதந்தர உரிமை உண்டென்பது சத்தியம். இந்தச் சுதந்தரம் சொத்தின் இயல்புக்குத் தகுந்ததுபோலவே குறைவாயும் நிறைவாயும் பூரணமாயும் இருக்கலாம். சர்வேசுரனுக்கு நமதுமட்டிலுள்ள சுதந்தரமோ, **இயல்பிலே அவசியமான சுதந்தரம்.** அதெப்படியெனில்: ஒன்றுமில்லாமையினின்று நம்மை உண்டாக்கவும் அல்லது உண்டாக்காதிருக்கவும் ஸ்வதந்திரியமுள்ள சர்வேசுரன், நம்மை ஒருவிசை உண்டாக்கியபின், சிருஷ்டியின்பேரில் சிருஷ்டிகருக்கு அவசியமான சுதந்தர உரிமை ஏற்படுகின்றது. அந்த உரிமையை எவ்வகையாலுங் குறைக்கவும் நீக்கவும் சர்வேசுரனுங் கூடாது. சர்வேசுரன் சர்வேசுரனாயிருக்குமட்டும் அவர் நமக்கு ஆண்டவரும் எஜமானுமாயிருப்பது அவசியம்.

அன்றியும் சர்வேசுரனுக்குள்ள இந்தச் சுதந்தரம் மற்ற எந்த வகை சுதந்தரத்துக்கும் **மேலானதும் பூரணம் பெற்றதுமான சுதந்தரம்.** உலகத்தில் மனிதருக்குள் ஒருவர்மேல் ஒருவருக்கு இருக்கக்கூடிய சகல சுதந்தர உரிமை எல்லாம் சர்வேசுரனிடத்தில் பூரணமாய் ஓர் குறைவுமின்றி இருக்கின்றது. தாய் தகப்பன் எஜமான் முதலியவர்களுக்கு நாம் சொந்தமாகுமுன், சர்வேசுரனுக்குச் சொந்தம். மனிதருக்குள்ள சொந்தம் சுதந்தர உரிமை எல்லாம், சகலத்துக்கும் ஆதிகாரணரான சர்வேசுரனிடமிருந்தே வருகின்றது. அவர் எவ்வளவான சுதந்தர உரிமை மனிதருக்குக் கொடுப்பாரோ, அவ்வளவுதான் அவர்களுக்கும் உண்டு. ஆனதால் தாயும் தகப்பனும், சுற்றத்தார், சிநேகிதர், எவரும் சர்வேசுரனுக்கு நமதுபேரிலுள்ள சுதந்தர உரிமையைத் தடுக்கமுடியாது, குறைக்கமுடியாது, நீக்கமுடியாது.

இப்படி இயல்பாயிருக்கும் சுதந்தரம் சர்வேசுரனுக்கு **நித்தியமாயிருக்கும் சுதந்தரம்.** ஒருவிசை இது நம்

மோடு துவக்கினபின், நாம் உயிரோடிருக்குமட்டும் சற்றும் மாருமல் நிலைத்திருக்கும். மரணம், மற்றெதுக்கும் ஓர் முடிவு உண்டாக்குமாஞலும், சர்வேசுரனுக்கு நமதுபேரி லிருக்குஞ் சுதந்திர உரிமைக்கு ஒரு முடிவுங்கட்டாது.

அன்றியும் இந்தப் பரிபூரணமான சுதந்திரத்தின் ஆளுகைக்குத் தப்பித்துக்கொள்ளலாமென்ருலோ, அது வும் எவனுலுங் கூடாது. உனக்கு இஷ்டமோ அல்லவோ நீ அதற்கு உட்பட்டவன். உலகில் நீ உயிரோடிருக்குங் காலத்தில் அவருடைய சிநேகத்தின் ஆளுகைக்குள் அமைந்து இருக்க மனமுண்டானல் இருக்கலாம். பாக்கிய மாய் சுகம் பெற்று வாழ்வாய். அப்படி இல்லையோ, சர் வேசுரனுடைய நீதி கோபத்தின் அரசாட்சியில் அடிமை யாய்க் கீழ்ப்பட்டு அவர் விதிக்கும் நித்திய ஆக்கினைக்கு ஆளாய்க் கிடப்பாய்.

மனிதனுக்குள்ள இந்த ஸ்திதியைக் கவனித்து யோசித்தால், எவன் ஆங்காரம் பொங்கி, தன்னைப் பெரி தாய் எண்ணி, தலையை உயர்த்தி, ஆட்டி அசைத்து நடப் பான்? ஆ! அற்ப மனுஷா! சர்வேசுரனல் உருவான உருவே! நீயா சர்வேசுரனை எதிர்த்து விரோதிக்கத் துணி கிருய்? சர்வ வல்லப சர்வேசுரனை எதிர்க்க யார் தாம்? சர்வேசுரன் கையில் தங்கி இருந்துகொண்டே அவரை விரோதிப்பது வெகு ஆபத்தான காரியம் என்பது உனக் குத் தெரியாதா? ஆண்டவரே! நீரே என் சிருஷ்டிகர், நீரே என் எஜமான், நான் உமக்கு அடிமை. உமக்கு நான் தொண்டு செய்வது என் தொழில். அதுவே என் கடமை. உமக்குத்தான் மகிமையும் பெருமையும் பலமும் செல்லும். சகல சிருஷ்டிகளாலும் ஆராதித்து ஸ்துதிக்க பாத்திரம் உள்ளவர் நீர்தான். உமக்கு என்றும் நித்திய ஸ்தோத்திரம் உண்டாவதாக!

மூன்றும் பாகம்

சர்வேசுரன் நமது சிருஷ்டிகர் என்றும், எஜமான் என்றும் இதுமட்டும் விவரித்தோம். இனி அவர் நமது

கடைசிக் கதி யென்பதை எடுத்துக்காட்டப்போகிறோம். புத்தியுள்ள எந்த ஜீவப்பிராணியும், எதைச் செய்தாலும், அதற்கு ஓர் கருத்து, காரணம், நிமித்தம், நோக்கம் அல்லது கதி இருக்கவேண்டும். குடியானவன் வயலை உழுகிறான். உழுவதில் அவன் கருத்தென்ன? பயிர் விளைவு உண்டாக்குவது. வர்த்தகன் வியாபாரஞ் செய்கிறான். எதின் நிமித்தம்? வியாபாரத்தில் அவன் தேடும் கதி என்ன? இலாபஞ் சம்பாதிக்க. அப்படியே அளவற்ற ஞானமுள்ள சர்வேசுரன் மனிதனை உண்டாக்கும்போது, ஓர் காரணத்தை உத்தேசித்து, அவனை அந்தக் கதிக்காக சிருஷ்டித்தார். சர்வேசுரன் அளவில்லா உத்தமர்; ஆனதால் தாம் செய்யுஞ் சகல கிரியைக்கும் தமது உத்தம மகிமையையே காரணமாக வைத்து சகலத்தையும் தமது மகிமைக்காக சிருஷ்டிக்கிறார். ஆதலால் மனிதனையுஞ் சர்வேசுரன் தமது மகிமைக்காகவே சிருஷ்டித்து உலகில் வைத்திருக்கிறார்.

சர்வேசுரனுடைய மகிமைக்காக நாம் இருக்கிறோமென்றால், நாம் சர்வேசுரனை **அறிந்து ஸ்துதித்து** அவரை வணங்கி நேசித்து, **அவருக்கு** ஊழியஞ் **செய்யும்படியாய்** இருக்கிறோமென்று அர்த்தமாகும். **இதுவே மனிதன் கதி.** இதற்காகவே நாம் உலகத்தில் மனிதராயிருக்கிறோம்.

சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்வது நமது முக்கிய தொழில். ஆனால் ஊழியஞ் செய்யும்படி நாம் அவரை முந்தி அறியவேண்டும். நமது ஊழியம் அவருக்குப் பிரியமாயிருக்க அவரைச் சிநேகிக்கவேண்டும். அறிவோடும், சிநேகத்தோடுஞ் செய்யும் ஊழியமே சிறந்த ஊழியம்.

இந்த ஊழியஞ் செய்வது மனிதனுடைய முதல் கடமை. இதற்காகவே சர்வேசுரன் நம்மை மனிதர்களாய்ச் சிருஷ்டித்தார். இந்த ஊழியத்தை நாம் சரியாய்ச் செய்ய, சர்வேசுரன் நமக்குப் புத்தி மனது சரீர அவயவங்கள் எல்லாம் துணைக்கருவிகளாகக் கொடுத்திருக்கிறார். ஆகை

யால் புத்தியுள்ள மனிதன் சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்யாதிருப்பது எதற்கு ஒக்கும் என்றால்: மரங்கள், இலை பூ காய்கனி கொடாமல் வெறுமனே கட்டையாய் நிற்பதற்கும், சரீரம் அசைவின்றிக் கிடப்பதற்கும் சமானமாகும். அன்றியும் சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்வது மனிதனுக்கு நிகரற்ற பெருமை, ஏனென்றால் சர்வேசுரன் இராஜாக்களுக்கு இராஜா, அதி உன்னத தேவன், சர்வ வல்லமை அவருக்கு இயல்பு. இவ்வித மகத்துவ பெருமையுள்ள ஆண்டவருக்கு ஊழியஞ் செய்வது, இராஜாக்களைப் போல அரசாளுவதற்குச் சமானம் என்று வேத சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள்.

சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்வது மனிதனுக்கு பெருமைமாத்திரமல்ல. அதுவே அவனுக்கு உண்மையான பாக்கியம், பூரணமான திருப்தி, கலப்பில்லா சந்தோஷம். சர்வேசுரனுடைய மகிமையும் நமது ஊழியமும் இணைபிரியாமல் சேர்ந்திருப்பதால், அவருக்கு நாம் ஊழியஞ் செய்யும்போது, அவர் மகிமையை நாம் தேடுகிறோம் சர்வேசுரனும் நமக்குச் சம்பாவனையாக பாக்கியானந்தம் இந்த உலகத்திலும் மறு உலகத்திலும் கொடுக்கிறார்.

உலக இராஜாக்கள் தங்களுக்கு ஊழியஞ் செய்கிறவர்களை, கடைசிகாலத்தில் சில சமயம் மறந்துபோவார்கள், அல்லது அவர்கள் செய்த ஊழியத்துக்கு தக்க சம்பாவனை கொடுக்க ஏலாதவர்களாயிருப்பார்கள். அப்படியே ஊல்சி (Wolsey) என்ற மந்திரி ஒருவர் ஆங்கிலேய அரசனுக்கு வெகு வருஷம் பிரமாணிக்கமாய் ஊழியஞ் செய்தாலும், கடைசியில் நன்றியில்லாத அரசன் அவரைக் கைவிட்டு பரதேசியாக்கி அவர் சொத்துக்களைப் பறிமுதல் செய்தான். மந்திரி, கொடுங்கோலன் செய்த நன்றியில்லாச் செய்கையை சாகுந்தருணத்தில் நினைத்து கண்ணீர் விட்டு: ஐயோ! இதென்ன காலக்கொடுமை! நான் என் இராஜாவுக்கு ஊழியஞ்செய்வதில் காண்பித்த ஜாக்கிரதையில் பாதிமாத்திரம் என் சர்வேசுரன் ஊழியத்தில் காண்பித்திருந்தால், அவர் என்னை இந்த விர்த்தாப்பிய தசை

யில், நரைதிரை விழுந்து கஷ்டப்படுங்காலத்தில், இப்படி கைவிட்டிருக்கமாட்டாரே! என்று இவ்விதமாய் அழுது புலம்பினார்.

சகோதரரே! இப்படி அழுங்காலம் வருமுன்னே, சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்யத் துவக்குங்கள். இதுவே உங்கள் சீவிய நாட்களின் முக்கிய வேலையாய் இருக்கக் கடவது.

ஓ! ஆண்டவரே! என் சர்வேசுரா! இதுமட்டும் கண்ணில்லாக் குருடன்போல் உம்மை அறியாமலும் உம்மைத்தேடி வராமலும் அலைந்து திரிந்தேன். உமக்கு ஊழியஞ் செய்வதை மறந்துபோய் ஈன சுபாவமுள்ள எஜமான்களை அண்டி அவர்களுக்கு அடிமைபோல் தொண்டு செய்தேன். இனிமேல் அப்படிச் செய்யமாட்டேன். சுவாமி, தேவரீர்தான் என் ஆண்டவர், எனக்கு எஜமான். உமக்கு ஊழியஞ் செய்வதே இனி எனக்கு மகிமையாகவும், சந்தோஷமாகவும், பாக்கியமாகவுமிருக்கும். என் உயிர் பிரியுமட்டும், உமக்கு நான் பிரமாணிக்கமாய் ஊழியஞ் செய்யும்படி எனக்கு உமது வரப்பிரசாதத்தின் உதவியைத் தருவீராக. ஆமென்சேசு.

முதல் நாள்—இரண்டாம் தியானம்

சிருஷ்டிகளின் கதி,

அதாவது சிருஷ்டிகளிருப்பதின் காரணம்

யாதோர் எஜமான் தன் தோட்டத்தில் வேலை செய்யும்படி வேலையாளை அமர்த்தினால் அவன் வேலை செய்வதற்கு ஏதுவான ஆயுதங்களும் தளபாட சாமான்களும் எஜமான் கொடுப்பான். தோட்டக்காரனும் தன் எஜமான் கருத்துப்போல் ஆயுதங்களைப் பிரயோகித்து எஜமானுக்காக வேலை செய்வது அவன் கடமை. அப்படியே சர்வேசுரன் மனிதர்களைச் சிருஷ்டித்து அவர்கள் தமக்கு

ஊழியஞ் செய்யும்படியாக இந்த உலகில் அவர்களை வைத்திருக்கும், இந்த மூலாதார சத்தியத்தின்பேரில் முதல் தியானம் காலையில் செய்தோம். அதிலே, நாம் எல்லாரும் சர்வேசுரனிடமிருந்து வருகிறோமென்றும், சர்வேசுரனே நமக்கு எஜமான் என்றும், சர்வேசுரனுக்காகவே நாமிருக்கிறோமென்றும் விவரித்ததைக் கேட்டீர்கள்.

சர்வேசுரன் தமக்கு ஊழியஞ்செய்ய மனிதனைச் சிருஷ்டித்தபின்பு, இந்த ஊழியத்துக்கு ஏதுவான பல சிருஷ்டிகளையும் உண்டாக்கி உலகத்தில் வைத்திருக்கிறார். இதற்காகவே பலவகையான சிருஷ்டிகளை, நாம் வானமண்டலத்திலும் இந்தப் பூமியிலும் பார்க்கிறோம். சூரிய சந்திர நட்சத்திரங்களும், புல், பூண்டு, செடி, மரம், மிருக ஜாதிகள் முதலிய உயிருள்ளதும் உயிரற்றதுமானவைகளும், பொன்மணி, திரவியம், பெருமை, மகிமை, பெயர், கீர்த்தி, வியாதி, துன்பம், செல்வம, வறுமை முதலிய சகல வகை பொருட்களும், ஸ்திதிகளும், சம்பவங்களும், எல்லாம் சிருஷ்டிகள் என்ற பொதுமொழியில் அடங்கியுள்ளன. இவைகள் எல்லாம் எங்கேயிருந்து வருகின்றன? இவைகளுக்கு யார் எஜமான்? எதற்காக இவைகள் இருக்கின்றன? என்று முன் மனிதனைப்பற்றிக் கேட்ட இம்மூன்று கேள்விகளையும் சிருஷ்டிகளைப்பற்றி, அவைகளின் கதி இன்னதென்றறிய கேட்கப்போகிறோம். கேட்டால், மறுமொழி முன்போலவே சிருஷ்டிகள் எல்லாம் சர்வேசுரனிடமிருந்து வருகின்றனவென்றும், சர்வேசுரனே இவைகளுக்கு எஜமான் என்றும், சர்வேசுரனுக்காகவே இவைகள் இருக்கின்றனவென்றும் அறிவோம். சிருஷ்டிகள் இருக்கும் காரணத்தை அறிந்தால் அவைகளைத் தகுந்த வகையில் நாம் பிரயோகிக்கலாம். இதை அறியாததினாலே அல்லோ அனேகம்பேர் சிருஷ்டிகளைக் கிரமந்தப்பிப் பிரயோகித்து, மோசம்போய் கெட்டழிகிறார்கள். நாம் இங்கே விவரிக்கப்போகும் சத்தியம் மூலாதாரச் சத்தியத்தைச் சேர்ந்தது. இதை நீங்கள் நன்றாய்க் கண்டுபிடிக்கும்படி இஷ்டப்பிரசாதத்தின் மாதாவாகிற தேவதாய் கிருபை செய்வாளாக!

முதல் பாகம்

நம்மைச் சுற்றிலும், நமக்கு மேலும் இருக்கும் கோடாகோடி சிருஷ்டிகளை யார் உண்டாக்கி உலகத்தில் வைத்தார்? இவைகள் தங்களாலேயே உண்டானதோ அல்லது மனிதர்களில் எவனாயினும் இவைகளை உண்டாக்கினனோ? தானாய் ஒரு சிறு புல்லும் உண்டாகாது. மனிதரில் எவனும் ஓர் பசும்புல்லையும் சிருஷ்டிக்க சக்தி அற்றவன். சிருஷ்டிக்கப்பட்ட எந்த வஸ்துவும், எவ்வளவு அறிவு சாமர்த்திய திறமை உள்ளதாயினும், ஒன்றை வேறொன்றாக மாற்ற மாத்திரம் கூடுமே அன்றி, ஒன்றுமில்லாமல் ஒன்றை உருவாக்குவது அளவுள்ள வல்லமையால் இயலுந் தொழில் அல்ல. சர்வ வல்லப சர்வேசுரன் ஒருவரே ஒன்றுமில்லாதபோதே ஒன்று உண்டாகும்படி செய்ய அவருடைய வாக்குக்கு வல்லமையுண்டு. ஆகையால் நம்மை எப்பக்கத்திலுஞ் சூழ்ந்திருக்கும் ஜீவகோடிகள் யாவையுஞ் சிருஷ்டித்தவர் சர்வேசுரன். அவரிட மிருந்தே சகலமும் வருகின்றன.

சகல சிருஷ்டியுஞ் சர்வேசுரனிடமிருந்து வருவதால் இவைகள் எல்லாம் சர்வேசுரனுக்குச் சொந்தம். சர்வேசுரன் இவைகளுக்கு எஜமான். எஜமானனதால் இவைகளின்பேரில் பூரண சுதந்தர உரிமை சர்வேசுரனுக்கு உண்டு. இந்த சுதந்தரத்தால் தமது இஷ்டம்போல் இவைகளை எவனுக்கும் கொடுக்கலாம், கொடுத்ததை எடுத்துக்கொள்ளலாம், அல்லது குறைக்கலாம். ஒருவனை திரவியவானையும் வேறொருவனை தரித்திரனையுஞ் செய்வார். இவன் தேகசௌக்கியமுள்ளவன், அவன் வியாதியஸ்தன். இவன் லக்ஷப்பிரபு, அவனோ பரம ஏழை; ஒருவன் புத்திமான், வேறொருவன் மூடன்; இப்படியாய் சர்வேசுரன் தமது பிரியம்போல் செய்கிறார். ஓரிடத்தில் நிறையக் கொடுக்கிறார், வேறிடத்தில் குறையக் கொடுக்கிறார். இன்னோரிடத்தில் கொடுத்ததை எடுத்துக்கொள்ளுகிறார். இதினால் மனிதனுடைய ஸ்திதி, கடலின் அலைபோல் பெருகியும் குறைந்தும் மாறியும் மங்கியும் வருகின்றது.

சர்வேசுரன் இப்படிச் செய்வதைப் பார்த்து, எவனும் எதிர்த்துப் பேசி ஏன் இப்படி மாறுபாடாய்ச் செய்கிறீர் என்று சர்வேசுரனைக் கேட்கலாமா? குயவன் வித்தியாசமுள்ள அளவிலும் நிறத்திலும் பல பாத்திரங்களைச் செய்கிறான். கோலமிட்ட குடமுமுண்டு, கோலமில்லாத வேறும் பானையுமுண்டு. பெரிதான குடமுமுண்டு, வெகு சிறிதான சட்டியுமுண்டு. கோலமில்லாப் பாத்திரம் ஏன் எனக்குக் கோலம் போடவில்லையென்றும், சிறிய குடம் ஏன் என்னைப் பெரிதாய் செய்யவில்லையென்றும் குயவனைப் பார்த்து முறையிட்டுக் கேட்குமோ? கேட்டால் குயவன்: என் இஷ்டம், என் மனம்போல் கோலமிடுவேன், சிறியதாய்ச் செய்வேன். ஏன் என்று, சீ! மண்ணே! என்னைக் கேட்க உனக்கும் வாயுண்டா? என்று சொல்வான். அப்படியே சர்வேசுரன் நிறையக் கொடுத்தாலும், குறையக் கொடுத்தாலும் அல்லது கொடுத்ததை எல்லாம் எடுத்துக்கொண்டாலும், யோப் என்கிற மகாத்துமாவைப்போல், **ஆண்டவரே இவைகளை எனக்குக் கொடுத்தார்; அவர் கொடுத்ததை எடுத்துக்கொண்டார்; அவருடைய திரு நாமத்துக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக** என்று சொல்லுவது நமது கடமை.

இவ்விதம் சந்தோஷமாய் தேவசித்தத்துக்கு அமைந்து சொல்லும்படி காரணமேதெனில், நமக்கு எது வந்தாலும் அது சர்வேசுரனுடைய திவ்விய சித்தப்பிரகாரம் வரும். அவருடைய பரிசுத்த சித்தப்பிரகாரம் வருவதெல்லாம் நம்முடைய நன்மைக்காகவே வரும் என்பது சத்தியம். அளவில்லா அன்போடு நம்மைச் சிநேகிக்கும் தகப்பன் சர்வேசுரனாதலால், அவர் நமக்கு அனுப்புவதெல்லாம் நம்முடைய பிரயோசனத்துக்காகவே அனுப்புவாரென்று நாம் திண்ணமாய் மனதில் எண்ணவேண்டும்.

அன்றியும், **சிருஷ்டிகள் எல்லாவற்றையும், மனிதன் சர்வேசுரனுக்கு ஊழியஞ்செய்ய எத்தனமாகவும் உபாயமாகவும் வழியாகவும்** அவர் உண்டாக்கி இருந்

தாலும், இவைகள் ஒரே சீராய், எல்லார் கையிலும், எந்தக் காலத்திலும், எப்போதும், தக்க எத்தனமாகாது. ஆனதால் சிருஷ்டிகளைத் தகுந்த காலத்தில், தக்க வகையில், சீரான அளவில், அததன் சுபாவத்துக்கு இசைந்த முறையில் அவரவருக்கு ஏற்ற அளவில் பிரயோகிப்பது அவசியம். மனிதன் புத்தி, பாவத்தால் மங்கிப்போய், அவன் மனசு துர்க்குணத்துக்குச் சார்புள்ளதாயும் அவன் சுபாவமே பலவீனப்பட்டுப்போயும் இருப்பதால், அநேக சிருஷ்டிகளை முழுதும் பிரயோகியாமல் நீக்கிவைப்பதில், அவைகளின் கிரமமான பிரயோகம் அடங்கியிருக்கிறது. பால் தன்னிலே அமிர்தமாயினும் சுரங்கொண்டவன் அதைச்சாப்பிட்டால் அது நஞ்சாகலாம். நெருப்பு பிரயோசனமுள்ளதாயினும் அதில் நீ உன் கையை வைத்தால் உன் கை வழுன்றுபோம். ஆதலால் சிருஷ்டிகளின் பிரயோகத்திற்கு ஏற்ற ஒழுங்கேதெனில்: **எவ்வளவுக்கு ஓர் சிருஷ்டி, மனிதன் சர்வேசுரனுக்கு ஊழியம் செய்யும்படி அவனுக்கு ஏதுவாயிருக்குமோ, அவ்வளவுக்கு அதைப் பிரயோகிப்பதும், எவ்வளவுக்கு அது விக்கினமாயிருக்குமோ அவ்வளவுக்கு அதை நீக்கி வைப்பதும்** ஆகிய இதுவே தங்கமான ஒழுங்கு. அப்படித்தான், தோட்டக்காரனும் தன் வேலைக்குத் தகுந்த ஆயுதங்களைக் கொண்டே வேலை செய்வானல்லாமல் அந்த வேலைக்கு உதவாத ஆயுதங்களைத் தொடமாட்டான். கோடாலி எடுத்து மரத்தை வெட்டுவதற்குப் பதில், மண்வெட்டியோடு வெட்டப்போனால் மரம் விழுமா? கலப்பை எடுத்து உழுவதற்குப்பதில் அரிவாள் எடுத்துப் போனால் பூமியை உழுவாயோ? வேஷத்துக்குத்தக்க ஆட்டமும், ஆட்டத்துக்குத் தகுந்த பாட்டும், கூலிக்குத் தகுந்த வேலையும், வேலைக்குத் தகுந்த ஆயுதமும் வேண்டும். சிருஷ்டிகளைப் பிரயோகிப்பதிலும் இதே ஒழுங்கை அநுசரிப்பது யுக்தம். நீ உன் ஜீவனும்சத்துக்காக ஓர் வேலையிலிருப்பதால் பணம் வந்தாலும், அது சர்வேசுரனுக்கு நீ ஊழியஞ்செய்வதற்கு தன்னிலே பெரும் விக்கினமாயிருக்கின்றதா? அப்போது அந்த வேலை உன் ஆத்தும இரட்சணியத்துக்கு விக்கின

மான வேலை. அதை நீக்கிவைப்பது உன் கடமை. நீ ஒருவன் வீட்டுக்குப் போவது உனக்குப் பிரியமாயினும், அங்கே போவதால் பாவம் எப்போது வருகின்றதென்று நீ கண்டால் அந்த வீட்டுக்கு நீ போகக்கூடாது.

மேலும் சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்ய சிருஷ்டிகளைப் பிரயோகிக்கும்போது, அது உன் சுபாவத்துக்குப் பிரியமானதோ, அல்லது உனக்கு வருத்தமுள்ளதோ வென்று பாராமல், சர்வேசுரனுக்கு நீ பிரமாணிக்கமாய் ஊழியஞ்செய்ய எது அநுகூலமுள்ளது, எது விக்கினமானது என்பதொன்றையே கவனிக்கவேண்டும். வைத்தியன் வியாதியஸ்தனுக்கு மருந்து கற்பிக்கும்போது அவன் நாவுக்கு எது ருசியுள்ளதென்பதை கவனிப்பானே, அல்லது எது குணங்கொடுக்கும் என்பதை கவனிப்பானே? மருந்து கசந்தாலும், அது உன் வியாதியை நீக்கும் ஔஷதமானால் நீ அதைச் சாப்பிடுவாயே. அப்படியே சிருஷ்டிகளைப் பிரயோகிப்பதிலும், உன் சுபாவப் பிரியத்தையும் உனக்கு வரும் வெறுப்பு அரோசிகத்தையும் நீ பாராமல், சர்வேசுரனுடைய ஊழியம் ஒன்றைமாத்திரம் உன் கண்முன் வைக்கவேண்டும்.

இது மட்டும் இந்தப் புத்திப் பிரகாரம் நீ நடந்தாயா? இப்போதாகிலும் சிருஷ்டிகளின் பிரயோகத்தைப் பற்றிய இந்தப் புத்தியை நீ கண்டுபிடிக்கிறாயா? கண்டுபிடித்தால் இனி எவ்விதம் உன் நடத்தையை சீர்படுத்தலாமென்று யோசித்துப் பார்.

இரண்டாம் பாகம்

சிருஷ்டிகள் எல்லாவற்றையும் சர்வேசுரனே உண்டாக்கினாரென்றும், அவைகள் யாவும் அவருக்கே சொந்தமென்றும், அவைகளை சர்வேசுரன் ஊழியத்துக்காக உபயோகிக்கவேண்டுமென்றும், அப்படி உபயோகஞ் செய்வதில், எது தக்கது எது தகாதது என்று சோதித்து புத்தியோடு நடக்கவேண்டுமென்றும் முதற் பாகத்தில்

விவரித்துக் காண்பித்தோம். இதில் அடங்கியிருக்கும் விசேஷம் ஒன்றை இரண்டாம் பாகத்தில் விவரிக்கப்போகிறோம்.

சர்வேசுரன் கோடாகோடி நவமான சிருஷ்டிகளை மனிதனுக்காகவும் மனிதனைத் தமக்காகவும் சிருஷ்டித்திருக்கிறார். இந்தச் சிருஷ்டிகள், நாம் சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்யும்படி, நமக்கு எத்தனமாகவும், உதவியாகவும், ஏதுவாகவுங் கொடுக்கப்பட்டனவேயன்றி இவைகள் நமக்கு ஆதிகாரணமான கதி அல்ல. கதி அல்லாத போதே இவைகளில் நமக்குத் திருப்தியும் பாக்கியமும் சந்தோஷமும் இருக்கமாட்டாது. தன் ஜென்ம தேசத்துக்குப் பிரயாணஞ் செய்கிறவன், போகிற வழியில் குளிர்ந்த நிழல் கொடுக்கும் பூஞ்சோலையும், அழகிய தோட்டங்களும், சிறந்த வீடும், அமிர்தமான தண்ணீரும் இருந்தாலும், இவைகள் தன் ஊருக்குப் போகும் வழியின் தோற்றமே அன்றி தன் ஜென்ம ஊர் அல்லவென்பதால், இங்கே பாதையிலே சுகமே இருக்கலாமென்று எண்ணி அங்கே தங்கமாட்டான். பாதை வழியாய் நடந்துபோய், தன் ஜென்ம ஊரில் பெற்றோர் சுற்றம் தாய் பிள்ளை இருக்கும் வீட்டில் சேர்ந்தால் மாத்திரம் அவனுக்கு திருப்தியும் சந்தோஷமும் உண்டாகும். அதுபோல் இந்த உலகத்தில் பணங்காசு, மகிமை பெருமை, இன்பசுகம் முதலியவைகள் எவ்வளவு மனோரஞ்சிதமாய்த் தோன்றினாலும், இவைகளில் நமது மனது தங்கிநின்று, பாக்கிய சுகத்தைத் தேடும்படி விடக்கூடாது. ஏன் போகிற வழியிலே நிற்க வேண்டும்? மலையின் உச்சியிலிருந்து ஓடிவரும் ஆறானது தான் சேரவேண்டிய சமுத்திரத்தை நோக்கி வழியில் நில்லாமல் ஓடுவதுபோல, சர்வேசுரனுக்காக சிருஷ்டிக்கப்பட்ட நாம், சர்வேசுரனைத் தேடிப்போய், அவரிடத்தில் சேர்ந்து தங்கி இருக்குமட்டும் நடுவழியில் சிருஷ்டிகளிடம் தங்காமல் நடந்து செல்லவேண்டும்.

இதில் கவனிக்கவேண்டிய இன்னும் ஓர் விஷயம் உண்டு. நாம் சர்வேசுரனுக்காகமாத்திரம் சிருஷ்டிக்கப்

பட்டிருப்பதால் சர்வேசுரனிடத்தில்மாத்திரம் நமக்குப் பூரண திருப்தி கொடுக்கும் பாக்கிய சந்தோஷமிருக்குமேயன்றி சிருஷ்டிக்கப்பட்ட எந்த வஸ்துவிடத்திலும் இருக்கமாட்டாது. அர்ச். அகுஸ்தீன் சர்வேசுரனைப் பார்த்து: ஆண்டவரே! எங்களை உமக்காகவே சிருஷ்டித்தீர். உம்மிடம் நாங்கள் வந்து தங்குமட்டும் எங்கள் மனசு கலங்கி அலையும் என்று பிரார்த்திப்பார். இதின் நிமித்தம், சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்யாமல் சிருஷ்டிகளைத் தேடிப்போய் அவைகளை அநுபவிப்பதால் தனக்குப் பாக்கியமும் திருப்தியும் உண்டாகுமென்று எண்ணுவது முதிர்ந்த பயித்தியம். உலகத்தில் மகிமையும் பெருமையும் தனக்கு வரவேண்டுமென்றும், தன் பெயருங் கீர்த்தியும் எங்கும் பிரபல்யமாகவேண்டுமென்றும், எல்லாருந் தன்னைக் கனமாய் எண்ணி மதிக்கவேண்டுமென்றும் ஆசைப்பட்டு அதற்காகத் தன் ஜீவிய நாட்களைச் செலவழித்து திரிவது முதிர்ந்த பயித்தியம். ஆஸ்தி திரவிய சம்பத்துள்ளவனே பாக்கியவான். பணமில்லாதவன் பிணம்போலாவான் என்று எண்ணி, இராப்பகலாய் பணத்துக்காக உழைத்து, திரைகடலோடியுந் திரவியந் தேடிவருவதும் முதிர்ந்த பயித்தியம். இன்ப சுக சந்தோஷங்களைத் தேடி காமாதுரனாய் சிற்றின்பத்தில் அமிழ்ந்தி சரீர சுகபோகத்தில் பாக்கியமும் திருப்தியும் உண்டென்றெண்ணி தன் வாழ்நாட்களைச் செலவழிப்பதும் முதிர்ந்த பயித்தியம்.

ஓ! கிறீஸ்துவர்களே! நாம் சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள். ஒருவனுக்கு எவ்வளவுதான் திரவிய சம்பத்தும், மகிமை பெருமையும், இன்பசுகமும் இருந்தாலும், இவைகளால் அவனுக்கு ஒருபோதும் திருப்தி என்பதே வரமாட்டாது. எவனும் இவைகளை நான் அநுபவித்ததில் திருப்தி அடைந்தேன்; இவ்வளவு எனக்குப் போதும் என்று ஒருபோதும் சொல்லமாட்டான். அக்கினி தனக்கு இரையாய்ப்போட்ட விறகு கட்டைகள் போதும் என்று சொல்லுமோ? சலோமோன் என்ற மகா ஞானியைப்போல் திரவிய சம்பத்துள்ளவன் யார்?

பொன்னும் தங்கமும் நவரத்ன மணிகளும் இவர் அரமனை யில் அளவற்ற அம்பாரமாய்க் குவிந்திருந்தன. அவருக் கிருந்த புத்தியும் யுக்தியும் விவேக விளக்கமும் மனிதன் புத்தி எல்லையைக் கடந்தது. அவருடைய சாமர்த்திய திறமையும், சாஸ்திர விஸ்தாரமும் உலகப்பிரசித்திபெற் றது. இவ்வளவு பிரக்கியாதிபெற்ற மகா ஞானி மதி தப்பி சிற்றின்ப சுகபோகத்தையும் நுகரவேண்டுமென்று தன்னை மறந்து, தன்னைச் சிருஷ்டித்த சர்வேசுரனை மறந்து, மிருக சுபாவத்துக்கியல்பான நீச சுகபோகத்தை அநுபவித்துப் பார்த்தார். இவையெல்லாம் இஷ்டம்போல் அநுபவித்த பின், தன் மனதில் திருப்தியான சந்தோஷம் காணவில்லை. சலிப்பும் கவலையும் துயரமும் மனக்குத்தும் கடல்போல் பெருகிக் கொதித்தது. பகலில் மதிமயக்கமும் இரவில் கண் மயக்கமும் உண்டாக செய்வதின்னதென்றறியாமல் திணறினர். கடைசியில் சாகுமுன் புத்தி தெளிந்து, தானே பட்டு அறிந்த புத்தியை உலகமெல்லாம் அறியும் படி எழுதி வைத்ததாவது: எல்லாம் வீணிலும் வீண், எல்லாம் விழலிலும் விழல். இதுதான் மதிநுட்பம் பெற்ற அதி விவேகி சலோமோன் ஞானியின் அநுபவ வாக்கியம்.

சலோமோன் தன்மட்டில் அறிந்த இந்த விஷயத்தை உலகத்திலிருக்கும் மனிதரெல்லோரும் தங்களிடத்திலும் பிறரிடத்திலும் பலமுறை கண்கூடாய்க் கண்டிருக்கிறார் கள். சகோதரனே கேள். நீ உலகத்துக்கெல்லாம் அதி பதி இராஜாவாயிருந்தாலும், சலோமோனிடமிருந்த திர விய சம்பத்துக்களிலும் பதின்மடங்கு அதிகம் உன் கையி லிருந்தாலும் உன் மனசுக்கு இவைகளால் திருப்தி வருமா? வரமாட்டாது. சலிப்புங் கவலையுந்தான் உண்டாகும். இதற்குக் காரணமென்ன? இதின் காரணமின்னதென்று மூன்றும் பாகத்தில் விவரிப்போம். கவனமாய்க் கேள்.

அனந்த ஞான சுரூபியான சர்வேசுரன் சிருஷ்டிகளை உண்டாக்கும்போதே, ஒவ்வொன்றுக்கும் உரிய சுபாவ இயல்பு இன்னதென்றும், அந்த இயல்புக்குத் தகுந்தது இது, தகாதது இதுவென்றும் ஆதிகாலத்திலேயே திட்

டஞ் செய்தார். அந்த ஒழுங்குப்பிரகாரம் ஒவ்வொரு வஸ்துவும் தன் சுபாவ இயல்புக்கு உரியவைகளைத் தேடி அநுபவித்தால், அதற்கு சர்வேசுரன் குறித்த பாக்கியானந்தத்தை அநுபவிக்கலாமேயன்றி, சுபாவ இயல்புக்கு சர்வேசுரன் நியமிக்காதவைகளைத் தேடினால், பாக்கியம் அதில் தோன்ருது. இந்த ஏற்பாட்டால், தாகக்கொடுமையால் வருந்தி நாவறண்டு இருக்கும்போது தாகந்தீர விஸ்தாரமாய்ப் பெருகி இருக்கும் சமுத்திரத்தின் ஜலத்தைக் கையால் அள்ளி எவ்வளவு நீ குடித்தாலும் உன் தாகந் தீருமோ? தீராததுமன்றி தாகம் முன்னிலும் அதிகமாகும். இதற்குக் காரணமென்ன? நீ அள்ளிச் சாப்பிட்டது தண்ணீரல்லவா? தண்ணீராயினும் சர்வேசுரன் ஆதியிலே மனிதன் தாகத்தைத் தீர்க்குங் குணத்தைக் கடல் தண்ணீராகிற உப்புத் தண்ணீருக்குக் கொடாமல், தெளிந்த ஊற்றின் ஜலத்துக்குக் கொடுத்திருக்கிருர். இந்த விதிப் பிரகாரம் தாகமுள்ளவன் தாகம் தணிய ஓர் சிரங்கை நல்ல தண்ணீர் சாப்பிட்டாலும் அவன் தாகம் அதனுல் தணியும். புலி பசித்தாலும் புல்லைத் தின்காதாம். பசுவோ புல்லைத் தின்று பசியை ஆற்றும். ஏன் இந்த வித்தியாசம்? ஏனெனில் சர்வேசுரன் ஆதியிலே அந்தந்தப் பிராணிக்கு குறித்த பொருளே அதற்குச் செல்லுமேயன்றி அவர் குறியாதது செல்லமாட்டாது.

இதுபோலவே சர்வேசுரன் ஆதியிலே அரூபியான ஆத்துமத்தைத் தமது சாயலாய்ச் சிருஷ்டித்து சரீரத்தோடு சேர்த்து மனுஷனைச் செய்தபோது, தமக்கு எது பாக்கியானந்த திருப்தி கொடுக்குமோ அதுவே தமது சாயல் பெற்ற மனிதனுக்கும் திருப்தி தருமென்று தீர்மானித்தார். அதினுலே சர்வேசுரனுக்குப் பாக்கியானந்தம் கொடுக்கக்கூடுமானதெதுவோ அதுவே மனிதனுக்கும் பாக்கியங்கொடுக்கும். சர்வேசுரன் பிறவஸ்துக்களில் தங்காமல் தாமே தமக்குப் போதுமான பாக்கியானந்தமாயிருப்பதுபோல், மனிதனும் சிருஷ்டிகளில் தங்காமல், சர்வேசுரனிடத்தில் தங்கி நின்ருல் மாத்திரம் தனக்குத் திருப்தியான பாக்கியம் அடைவான். இதைக் காட்டும்படி

சர்வேசுரன் வேதாகமத்தில்: நாமே உன் ஆசை அளவுக்கு மேலான சம்பாவனையாய் உனக்கு இருப்போமென்று சொல்லுகிறார்.

புண்ணியவான்களும் அர்ச்சியசிஷ்டவரும் இந்த உண்மையை அறிந்ததினாலேதான் உலகத்தின் ஆஸ்தி திரவியம், மகிமை பெருமை, இன்ப சுகம் எல்லாம் அறவே வெறுத்து, துறவறம்பூண்டு, வனாந்தரங்களிலும் மடங்களிலும் பிரவேசித்து, சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்வதாலுண்டாகும் பேரின்ப பாக்கியத்தை அநுபவித்து வருகிறார்கள்.

சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்வதால் இந்த உலகத்திலே முதலாய் இவர்கள் மனதில் அநுபவிக்கும் சமாதானம், ஞானானந்தத்தை உலகத்துக்கு அடிமையாய் ஊழியஞ் செய்கிறவர்கள் அறியவேமாட்டார்கள். பரிசுத்தவான்களில் சிலர் இந்த ஞானானந்த சந்தோஷத்தின் பெருக்கத்தைச் சில சமயங்களில் பொறுக்கமாட்டாமல், சுவாமி! போதும், இவ்வளவு போதும் என்பார்கள்.

கிறீஸ்துவர்களே! சர்வேசுரன் உங்களுக்குக் கடைசி சம்பாவனையாக நியமித்திருக்கும் பேரின்ப பாக்கியம் எத்தன்மைத்தென்று சற்று கவனித்துப்பாருங்கள். உங்களுக்கும் தமக்கும் ஒரே விதமான பாக்கியத்தை ஏற்படுத்தியிருக்கிறார். உங்களைத் தம்மோடு ஒருவாறு ஒரே சமமான நிலையில் ஸ்தாபித்திருக்கிறார். சர்வேசுரனுக்குத் திருப்தியும் ஆனந்தமுமாயிருப்பதே உங்களுக்குத் திருப்தியும் ஆனந்தமுமாகும். சிருஷ்டிகளில் எந்த வஸ்துவும் உங்களுகக்கு மெய்யான பாக்கியங் கொடாது. அவைகள் எல்லாம் உங்களுக்குத் தாழ்ந்தவைகள். நீங்களோ சர்வேசுரன் ஒருவருக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறீர்கள். அவர் ஒருவர் மாத்திரம் உங்களுக்குத் திருப்தி தரும் பாக்கியம். இதுவெல்லாம் நன்றாய்க் கண்டுபிடிக்கிறீர்களோ? உங்களுடைய உயர்ந்த கதி இன்னதென்று இப்போது உங்களுக்குத் தெரியும்.

ஓ! அன்பு நிறைந்த ஆண்டவரே! என்னை எவ்வளவு மேன்மைப்படுத்தி ஓர் வகையில் உமக்கு நான் சமானமுள்ளவனைச் செய்திருக்கிறீர்! சுவாமீ! உமக்குப் பாக்கியம் எதுவோ அதுவே எனக்கும் பாக்கியம். உமக்குத் திருப்தி தருவதெதுவோ அதுவே எனக்கும் திருப்தி தரும். உமக்கு இயல்பாயுள்ள கதியும், எனக்கு தேவரீர் குறித்த கதியும் ஒன்றுதான். ஆனால் ஐயோ! இதுமட்டும் என்னுடைய உன்னத கதியை நான் மறந்துபோய், புத்தியில்லா மிருகம்போல், சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களில் பாக்கியமும் திருப்தியுந் தேடி அலைந்தேன். கடல் நீரைக் கையால் அள்ளி என் பாக்கிய ஆசையாகிற தாகம் தீருமென்று சாப்பிட்டேன். தேவாமிர்த ஜலம் நிறைந்த உம்மிடத்தில் வராமல் சாக்கடைத் தண்ணீரைச் சாப்பிட்டேன். ஆனால் என் தேவனே! இன்று தேவரீர் உதவியால் பாக்கியம் உம்மிடத்தில்தான் இருக்கிறதென்று கண்டுபிடித்தேன். உம்மிடத்தில்தான் சம்பூரணமான பாக்கியம் எனக்கு இருக்கிறதென்று சிருஷ்டிகளெல்லாம் கூவி இரைந்து விடாமல் சப்திக்கின்றன. **இதோ இன்று நான் துவக்குகின்றேன். உமது ஊழியமே எனது பாக்கியம். நான் ஜீவித்தாலும் மரித்தாலும் உமக்கு நான் சொந்தமானவன்.** ஆமென்சேசு.

முதல் நாள்—மூன்றும் தியானம்

ஆத்தும இரட்சணியம் மகா முக்கிய அலுவல்

அமெரிக்கா தேசத்துக்குச் சமீபத்தில் பல தீவுகள் இருக்கின்றன. அங்கே ஒரு காலத்திலிருந்த குடிகள் எல்லாரும் அஞ்ஞானிகள். இவர்களுக்குச் சத்திய வேதத்தைப் பிரசங்கிக்க ஓர் குரு போனார். தேவாநுக்கிரகத்தால் ஓர் தீவாரும் அவர்களுடைய சிற்றரசனும் மனந்

திரும்பி ஞானஸ்நானம் பெற்று பத்தி விசுவாசமுள்ள கிறீஸ்துவர்களானார்கள். இவர்களை வேதத்தில் ஸ்திரப் படுத்தியபின், குருவானவர் இந்தத் தீவைவிட்டு வேறொரு தீவுக்குப் போனார். இவர் போன சமயம்பார்த்து, ஒரு புரோட்டெஸ்டாண்டு பாதிரி நல்ல பயிரிலே திருடன் களைகளை விதைத்ததுபோல, இந்தத் தீவில் நுழைந்து, புதிதாய் ஞானஸ்நானம் பெற்ற தீவாரை எளிதில் மயக்கி பதிதர்களாக்கலாமென்று எண்ணித் துணிந்தார். துணிந்த பாதிரியார் அரசனிடம் நேரேபோய், தன் மத்மே கிறீஸ்துமதமென்றும், கத்தோலிக் வேதமோ தவறி விழுந்த பொய்வேதமென்றும் இப்படியாய், தன் வாயில் வந்ததெல்லாம், பதிதர்கள், எந்தநாளிலும் கக்குவது போல் பிதற்றினார். தீவரசன் புதுக்கிறீஸ்துவனாயினும் புத்திசாலி. சத்தியவேதத்தின் உண்மையைப் பரிஷ்கார மாய் அறிந்தவன். பாதிரியார் சொன்ன குருட்டு ஞாயங் களை இவன் மறுத்துப்பேசினான். பாதிரியார் எல்லா நியாயத்துக்குமேலாய், பண ஆசையாகிற நியாயத்தை தமக்கு கடைசி ஆதாரமாக வைத்திருந்தார். ஆகையால் அரசனை நோக்கி: பிரபு! நீங்கள் புரோட்டெஸ்டாண்டு வேதத்தில் சேர்ந்தால் எங்கள் மிஷன் சங்கத்தாருக்குச் சொல்லி உங்களுக்கு மாசம் ஆயிரம் ரூபாய் கோவில் தர்ம விஷயமாய் கொடுக்கும்படிச் செய்வேன் சம்மதமோ! என்று கேட்டார். அரசன் புன்னகை காட்டி அது போதாது என்றான். அதற்குப் பாதிரியார்: பிரபு ஈராயிரம் ரூபாய் கொடுத்தால் சம்மதிப்பீரோ? என்று கேட்க, அது வும் போதாதென்று அரசன் சொல்ல, பாதிரியார் கலங்கி இரண்டாயிரம் ரூபாய்க்குச் சம்மதியாதவன் எதுக்கு சம்மதிப்பானோவென்று சந்தேகப்பட்டு: மகா இராஜ! கடைசி வார்த்தையாய் எவ்வளவுதான் நீங்கள் கேட்கிறீர் கள்? என்றதற்கு அரசன் சொல்வான்: ஓ பாதிரியாரே, கேளும். நான் இப்போது சத்தியவேத கத்தோலிக் கிறீஸ்துவன். நான் இதை மறுத்து புரோட்டெஸ்டாண்டு ஆகும்படி எனக்கு எத்தனை ரூபாய் தேவையென்றோ கேட் கிறீர். நீர் கேட்கும் இந்தக் கேள்விக்கு, நாங்கள் சுதேச

பாஷையில் அர்த்தமேதென்றால்: என் ஆத்துமத்தை உமக்கு நான் எந்த விலைக்கு விற்க சம்மதிக்கிறேன் என்றாற் போலாயிற்று. என் ஆத்துமத்தின் விலையா? கேளும் பாதிரியாரே! சேசுநாதர்சுவாமி தமது இரத்தத்தைக் கிரய மாய்க் கொடுத்து என் ஆத்துமத்தை வாங்கியிருக்கிறார். ஆனதால் சர்வேசுரனுடைய இரத்தந்தான் என் ஆத்துமத் தின் விலை. நீர் இதிலும் மேலான கிரயங் கொடுத்தால்மாத் திரம் நான் என் ஆத்துமத்தை உமக்கு விற்பேன். இல்லா விடில் நீர் வந்த வழியைப் பார்த்துக்கொண்டு வாயை மூடி சீக்கிரம் போய்விடும், என்று சிற்றரசன் இப்படிப் பேசின தைக் கேட்ட பாதிரியார், தலையைக் கவிழ்ந்து, வாய்க்குள் முணங்கிக்கொண்டு, மறுமொழி பேசாமல் போய்விட்டார்.

புதுக் கிறீஸ்துவனான இந்த அரசன், ஆத்துமம் எவ்வ ளவு மேலானதென்றும், அதை எப்படியாகிலும் இரட்சிப் பது எவ்வளவு அவசியமென்றும் நன்றாய் கண்டுபிடித்திருந் தான். அப்படியே நீங்களும் ஆத்துமத்தை இரட்சிப்பது எவ்வளவு அவசியமென்று கண்டுபிடிக்கும்படியாய் இந்தத் தியானப் பிரசங்கஞ் செய்வோம்.

இதற்குமுன் செய்த இரண்டு தியானப் பிரசங்கத்தில், சர்வேசுரன், மனிதன் தமக்கு ஊழியஞ்செய்து, தன் ஆத்து மத்தை இரட்சிக்கும்படி, அவனைச் சிருஷ்டித்தாரென்றும், சிருஷ்டிகள் யாவும், அந்த ஊழியம் நன்றாய் மனிதன் செய்ய ஏதுவான உபாய எத்தனங்களாக உண்டாக்கப்பட் டனவென்றும் விவரித்துக் காண்பித்தோம். இந்தப் பிர சங்கத்தில் மனிதன் தன் ஆத்துமத்தை இரட்சிப்பது எவ் வள்வு முக்கியமும் அவசியமுமான அலுவல் என்று விவரிக் கப்போகிறோம். சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்வதும் தன் ஆத்துமத்தை இரட்சிப்பதும் ஒன்றுதான். இவ் விரண்டும் இணைபிரியாமல் சேர்ந்து ஒன்று ஒன்றுக்கு ஆதாரமாயிருக்கின்றது. தேவதாய் நாம் இந்தச் சத்தி யத்தை உங்களுக்கு நன்றாய் விவரித்து காட்டும்படி நமக் குத் துணைசெய்வாளாக!

முதல் பாகம்

ஆத்தும இரட்சணியம் மனிதனுடைய முக்கிய அலுவல். ஆனால் ஆத்துமத்தை இரட்சிக்கிறதென்றால் என்ன அர்த்தம்? ஓ! கேளுங்கள் சகோதரரே! ஆத்துமத்தை இரட்சிக்கிறதென்றால், சர்வேசுரன் உங்களை எந்தக் கருத்தோடு சிருஷ்டித்தாரோ, அந்தக் கருத்து அநுகூலம் பெறும்படிச் செய்வது. ஆத்துமத்தை இரட்சிப்பதென்றால், சர்வேசுரனுக்குப் பிரமாணிக்கத்துடன் ஊழியஞ் செய்து, அதற்குப்பின் சம்பாவனையாக சர்வேசுரனையே நித்தியகாலம் பார்த்து சிநேகித்து வாழ்வது. ஆத்துமத்தை இரட்சியாதவனோ அதை இழந்துபோகிறவன்.

ஆத்துமத்தை இழந்துபோவதென்றால், சர்வேசுரனுக்குக் கீழ்ப்படியாமல் விரோதியாய் நடந்தபின்பு நித்தியமான துன்பங்கள் நிறைந்த நரகத்திலே நீடூழிகாலம் விழுந்து சகல ஆக்கினைகளையும் அநுபவிக்கிறது. இது இப்படியானால் தன் ஆத்துமத்தை இரட்சிப்பது எவ்வளவு முக்கியமான அலுவல்! நித்திய பாக்கியம் அல்லது நித்திய நிர்ப்பாக்கியம், இவ்விரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்வது அற்பமான காரியமா?

இதின் முக்கியமும் அவசியமும் இம்மாத்திரம் என்று அறியும்படி முக்கியமான அலுவலுக்குள்ள மூன்று குணங்கள் இன்னதென்று கேளுங்கள். யாதோர் அலுவல் தன் சுபாவ இயல்பிலே அவசியமுள்ளதாயும், அதைச் செய்யும்படி தடுக்கமுடியாத கடமை உள்ளதாயும், அதைச் செய்யாமல் விடுவதால், உண்டாகும் நஷ்டம் எவ்வகையாலும் பரிகரிக்கக்கூடாத நஷ்டமுமானால் அந்த அலுவல் மகா முக்கிய அலுவலென்று எவரும் அங்கீகரிக்கவேண்டும். ஆத்தும இரட்சண்ய அலுவலுக்கு இந்த மூன்று குணங்களும் பூரணமாய் உண்டு. எப்படியெனில் ஆத்தும இரட்சண்யம் தன் இயல்பிலே அவசியமானது. அதைச் செய்யும்படி எல்லா மனிதருக்கும் தடுக்க முடியாத கடமை இருக்கிறது. இதைக் கவனியாதிருந்து நஷ்டம் அடைந்

தால் வரும் நஷ்டம் பரிகரிக்கக்கூடாத நஷ்டமாகும். இந்த மூன்று விஷயங்களையும் ஒவ்வொன்றாய் விளக்கிக் காட்டப்போகிறோம். கவனமாயிருந்து கேளுங்கள்.

ஆத்தும இரட்சணிய அலுவல் **தன்னிலே இயல்பாய் முக்கியமானது:** சலோமோன் என்ற மகா ஞானியின் வாக்குப்பிரகாரம்: சர்வேசுரனுக்குப் பயந்து அவர் கட்டளைப்பிரகாரம் நடப்பதொன்றே முழு மனிதனுகும். இதின் பொருளேதெனில், ஒருவன் மனிதனென்று எண்ணப்படும்படி அவன் சர்வேசுரனுடைய கட்டளைகளை அறிந்து அநுசரிப்பது அவசியம். இதுவே மனிதனுக்கு இயல்பாயிருக்கவேண்டிய இலட்சணம். சர்வேசுரனுக்கு ஊழியஞ்செய்பவனே மனுஷன். ஆனதால் சர்வேசுரனுக்கு ஊழியஞ்செய்து தன் ஆத்துமத்தை இரட்சிப்பது மனுஷ சுபாவத்துக்கு அவசியமான குணமாகும். இது தான் புருஷோத்தமம் என்று சொல்லப்படுவது.

இது ஒன்று நீங்க, மற்ற எந்த அலுவலும், அததிலிருந்து உண்டாகும் பிரயோசனத்திநிமித்தம் அவசியமாகுமே அன்றி, தன் சுய இயல்பிலே அவசியமாகமாட்டாது. அப்படியே சாஸ்திர நூல் கற்பதும், உத்தியோகம் வகிப்பதும், வியாபாரஞ் செய்வதும், வயலை உழுது விதைப்பதும், இவை முதலிய பல வேலைகளெல்லாம், அவைகளால் உண்டாகும் பலனின் நிமித்தம், அதைச் செய்பவர்க்கு அவசியமாகுமே அன்றி, எல்லாருக்கும் ஒரே சீராய்த் தன் இயல்பிலே அவசியமாகாது. ஆத்தும இரட்சணியமாகிற அலுவலோ, மனிதனாய்ப் பிறந்த சகலருக்கும் மகா முக்கிய அவசியமான தொழில். இதை மறந்து கவனியாது நடப்பவன் மதிகெட்டுத் தன் சுபாவ முறை தப்பி நடக்கிறவனென்று சொல்லவேண்டும்.

மனிதருக்குள் அநேகம் பேர், அந்தந்தப் பொருட்களின் சுபாவத்தையும், அவைகளின் கூறுபாடு குணங்களையும் அறிவதில் தாங்கள் சாஸ்திரிகளென்று, பல வே...

களை சாமர்த்திய திறமையோடு நடத்தி அநுகூலமாய் முடிப்பதில் சமர்த்தர்களென்றும் பெருமை பேசித் தங்களை மெச்சிப் புகழ்ந்து பாராட்டி வருகிறார்கள். இவர்கள் ஆத்தும இரட்சணியத்தின் விஷயத்திலேயே, அற்பமும் அறிவின்றி மூடாத்துமாக்களாயிருக்கிறார்கள். இவ்வகை மதியீனரைக் குறித்து இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் வேதாகமத்தில் கேட்பதேதெனில்: ஓ மானிடப்பிறவிகளே! எத்தனை காலம் இப்படி மதிகெட்டு அலைந்து, உங்கள் ஆத்துமத்தைக் கவனியாமல் அற்ப சுகங்களைத் தேடுவீர்கள்? நீங்கள் சிறு பிள்ளைகளைப்போல், விளையாட்டுப் புத்தியாய் இன்னும் எவ்வளவுகாலம் நடப்பீர்கள்? சிறுபிள்ளை மணலால் வீடுகட்டி விளையாடும் போது, இன்னொருவன் அந்த மண்வீட்டைக் காலால் அழித்தால், அல்லது பிள்ளை கையில் வைத்திருக்கும் பொம்மையைப் பறித்தால், குழந்தை அலறி அழுது கூக்குரலிடும். ஆனால் திருடன் வீட்டில் புகுந்து நகை நாணயங்களைத் திருடிக்கொண்டு ஓடிப்போனால், அல்லது குடியிருக்கும் வீடு இடிந்து விழுந்து குட்டிச்சுவரானால் பிள்ளை அழமாட்டாது. அப்படியே, மனிதர்கள் அற்பப் பொருளை இழந்துபோனால் அல்லது தங்கள் வேலையில் யாதொரு நஷ்டம் வந்தால், துக்கப்பட்டு கண்ணீர் சிந்தி, உடனே தக்க பரிகாரம் தேடுவார்கள். வந்த நஷ்டத்தை எவ்வகையாலும் பரிகரிக்க வழி பார்ப்பார்கள். ஆனால் ஆத்துமம் கெட்டுப்போனாலோ, சர்வேசுரனுடைய இஷ்டப்பிரசாதத்தை இழந்தாலோ, இவர்கள் கண் கலங்காது, மனதில் துக்கமிராது, எவ்வித முயற்சியும் செய்யார்கள். இந்த வித்தியாசத்துக்குக் காரணமென்ன? இவர்களுக்கு ஆத்தும இரட்சணியம் எவ்வளவு மேலானதென்று அற்பமுந் தெரியாது. இவர்கள் மதிப்புப்பிரகாரம் ஆத்தும இரட்சணிய அலுவல் எல்லா அலுவலிலுங் கடைசி; ஓர் அற்பக் காரியம். இதைச் செய்யலாம், செய்யாமல் விடலாம்: மோசம் ஒன்றுமில்லை. இதில் மோசம் இருந்தாலும் கவையில்லை. இதைச் செய்யவும் கடமையில்லை என்று எண்ணுவார்கள்!

சகோதரா! உன் ஆத்தும இரட்சணிய அலுவலைச் செய்ய உனக்குக் கடமை இல்லையா? யார் இதை உனக்குச் சொன்னவன்? நாம் இரண்டாம் பாகத்தில் சொல்லப் போவதைக் கவனமாய்க்கேள்.

இரண்டாம் பாகம்

ஆத்தும இரட்சணியமாகிற தொழில் தன் இயல்பிலே முக்கியமானது மாத்திரமல்ல, அதைச் செய்யும்படி மனிதனுக்கு **விசேஷ கடமையும்** உண்டு. அதெப்படியெனில்: சர்வேசுரன் மனுஷனைச் சிருஷ்டித்தபோது அவனுக்குப் பத்தி அறிவுள்ள ஆத்துமத்தைக் கொடுத்தார். இந்த ஆத்துமம் சர்வேசுரனிடமிருந்து வந்த ஆத்துமமானதால் சர்வேசுரனிடம் திரும்பவும் அது போய்ச் சேரவேண்டும். சர்வேசுரனிடத்தில் திரும்பவும் ஆத்துமத்தைச் சேர்க்கும் தொழிலைச் சர்வேசுரன் ஒவ்வொருவனுக்குங் கடமையாய் நிருபித்திருககிறார். கடலிலிருந்து தண்ணீர் ஆவியாய் எழும்பி மேகமாய் மேலே போனாலும், அது திரும்பவும் பூமிமேல் மழையாய் விழுந்து தானிருந்து போன கடலிலே மறுபடியும் விழும். அப்படி விழுவது சுபாவ ஒழுங்கின் கிரமம். அதுபோலவே மனிதனும் சர்வேசுரனிடமிருந்து வந்த ஆத்துமத்தை சர்வேசுரனிடத்தில் திருமபவும் சேர்ப்பது அவனுடைய கடமை. இதற்காகவே அவன் உலகத்திலிருக்கிறான். எந்தெந்த வேலைகள் செய்தாலும், என்ன அந்தஸ்திலிருந்தாலும் ஆத்தும இரட்சணிய வேலை அவன் கண்முன் எப்போதுமிருக்கவேண்டிய வேலை. இரத்னமிழைத்த பொன்மயமான சிம்மாசனமீதிருந்து தேசங்களை ஆளும் இராஜன் முதல், கையில் ஓடெடுத்து வீட்டுக்குவீடு பிச்சை எடுத்து பிழைத்துவரும் எளியவன்மட்டுமுள்ள சகலரும் எந்த அலுவலை இஷ்டம்போல் செய்தாலும், இந்த ஆத்தும இரட்சணிய அலுவலை அவசியம் செய்வது அவர்கள்மேல் பொறுத்த கடன். உலகில் அவர்கள் மனிதராயிருப்பதற்கு அதுவே காரணம்.

ஆனால் ஆத்தும இரட்சணிய அலுவல் எல்லா அலுவலிலும் முக்கியமானதென்று நாம் சொல்லும்போது மற்ற அலுவல்களைக் கவனிக்கத் தகாதென்பது நமது கருத்தல்ல. வேதசாஸ்திரியான அர்ச். அகுஸ்தீன் சொல்வது போல, சர்வேசுரனைச் சார்ந்த அலுவலாகிற ஆத்தும இரட்சணிய அலுவலை முந்தி கவனித்து, மற்ற உலக சம்பந்தமான வேலைகளை இந்த மேலான அலுவலுக்குச் சார்புள்ளவைகளாகச் செய்து, எல்லா அலுவல்களையும் சர்வேசுரனுக்காகச் செய்வதுதான் கிரமம். சர்வேசுரனுக்கு ஒன்று உலகத்துக்கு ஒன்று என்று உன் வேலைகளைப் பாகஞ் செய்து பிரிக்காமல், எல்லாவற்றையும் சர்வேசுரனைப்பற்றி உன் ஆத்தும இரட்சணிய அலுவலின் அநுகூலத்துக்காகச் செய்வதே ஒழுங்கு. நீ செய்யும் பல வேலைகளில் யாதொன்று ஆத்தும இரட்சணியமாகிற முதல் முக்கிய வேலைக்கு விரோதமானால் அதை முழுதும் நீக்கிவைப்பது உன் கடமையாகும். அந்த வேலை உனக்கு எவ்வளவு லாபமுள்ளதாயினும், அதை விட்டு நீங்குவது கஷ்டமாயினும், இதெல்லாங் கவனியாமல் ஆத்தும இரட்சணியத்துக்காக அதை நீக்கிவிடவேண்டும். ஆத்தும இரட்சணியம் ஒன்றுமாத்திரம் செய்யக் கடமையுள்ள அலுவலானதால், வேறு அலுவல் இதற்கு அமைந்து கூடிச் சேர்ந்து வரக்கூடாதானால் அது உனக்குத் தகாத அலுவல்.

வேதசாட்சிகள் இந்தச் சத்தியத்தை நன்றாய் அறிந்ததினாலேதான், சர்வேசுரனுக்குத் துரோகஞ்செய்து தங்கள் ஆத்துமத்தை இழந்துபோவதைவிட துன்ப வேதனைப்பட்டு, இரத்தத்தைச் சிந்தி உயிரைக் கொடுப்பது உத்தமம் என்று எண்ணி துணிவோடு மரித்து வேதசாட்சி முடிபெற்றார்கள்.

திருச்சபையின் ஆதிகால சரித்திரத்தில் ஓர் வாலிபனைப்பற்றி சொல்லியிருக்கும் வர்த்தமானத்தைக் கேளுங்கள். கொடுங்கோலனான அரசன், மேன் குலத்தில் பிறந்த ஓர் கிறீஸ்துவ வாலிபனைப் பிடித்து, அவன் வேதத்தை

விடும்படி தன்னுல் கூடுமான உபாயமெல்லாம் செய்தான். வாலிபன் மனம் அசையவில்லை. அரசன் கேட்ட பல கேள்விக்கெல்லாம் வாலிபன் ஒரே மறுமொழியாக: நான் கிறீஸ்துவன், என் ஆத்துமத்தை நான் இரட்சிக்கவேண்டும் என்றே சொல்வான். அரசன் கோபங்கொண்டு கூர்மையுள்ள ஆணிகள் நிறைந்த சக்கரத்தில் இளைஞனைச் சேர்த்துக்கட்டி, உருளையை விசையுடன் சுற்றிச் சுழற்றும்படி செய்தான். இரத்தம் தெரித்து பாய்ந்தது. சதை துண்டு துண்டாய்க் கீழே விழுந்தது. கல் நெஞ்சுள்ள அரசன் கிறீஸ்துவனை நோக்கி, ஆ! ஆ! உறைக்குதா? இனியாகிலும் புத்தி வருமா? உன் வேதத்தை விடமாட்டாயா? என்று கேட்கையில், கிறீஸ்துவ பாலியன் அரசனைப் பார்த்து நகைத்து, ஓ! ஓ! இதற்கெல்லாம் பயந்தவனு? என் ஆத்துமத்தை நான் இழந்து நரகத்தில் விழவோ? வேண்டுமானுல் இன்னும் மீதியாயிருக்கும் இரத்தத்தையும் தாராளமாய்ச் சிந்து. என் ஆத்தும இரட்சணியத்துக்குத் துரோகம் செய்யமாட்டேனென்று துணிவாய்ச் சொன்னுன். இதைக்கேட்ட கொடுங்கோலன், கோபம் மனதில் பொங்க: அப்படியா! நல்லது நல்லது. நீ உன் ஆத்துமத்துக்குத் துரோகஞ்செய்து அதைக் கட்டாயமாய் நீ இழந்துபோகும்படி நான் செய்வேன் பார் என்று சபதங் கூறி, வாலிபக்கிறீஸ்துவனை பாவத்தில் விழும்படி செய்ய ஓர் கெட்ட ஸ்திரீயை இவனிடம் ஏவிவிட்டான். வெட்கமும் நாணமும் இழந்த துன்மார்க்க மோகினி தன் கிட்ட வருவதைப் பாலியன் பார்த்து, அவளை அடித்துத் துரத்தவும் அல்லது தப்பித்து ஓடவும் கட்டப்பட்டிருந்ததினுல் கூடாதென்று கண்டு, அவள் தன் சமீபம் வந்தமாத்திரம் தன் நாக்கை கண்ட துண்டமாய் கடித்து அந்தத் துண்டுகளை அவள் முகத்தில் துப்பி, பாதிநாக்கோடு அவளைப் பார்த்து: சீ, நரகப் பிசாசே! கிட்ட வாராதே. நான் சர்வேசுரனுடைய பிள்ளை, அப்பாலே போ என்று அவளை விரட்டினுன். அவளும் இவ்வளவு மனத்துணிவைக் கண்டு வெட்கி நாணி ஓடிப்போய்விட்டாள்.

கிறீஸ்துவர்களே! இந்த வாலிபன் செய்ததைக் கேட்டு ஆச்சரியப்படாதவர் யார்? தன் ஆத்துமத்தை எப்படியாகிலும் இரட்சிக்கவேண்டுமென்று இவன் துணிந்திருந்தான். இந்தத் துணிவு, சகோதரா! உனக்கு இருக்கின்றதா? கேள். நீயே உன் ஆத்துமத்தை இரட்சியாவிடில், உன் தாயும் தகப்பனும், சுற்றத்தார் சிநேகிதரும், குருவும் உபதேசியும் இரட்சிக்கமாட்டார்கள். சர்வேசுரன் முதலாய், உன் சம்மதமின்றி உன்னைச் சிருஷ்டித்தாலும், உன் சம்மதமின்றி உன்னை இரட்சிக்கமாட்டார். உன் ஆத்துமத்துக்கு நீயே உத்தரவாதி. அதின் லாபமும் நஷ்டமும் உன்னையே சார்ந்தது. இந்த சத்தியத்தை இப்போதாகிலும் கண்டு பிடிக்கிறாயா? இதைத் துணிந்து செய்ய உனக்கு மனம் வந்ததா? இன்னும் நாம் மூன்றும் பாகத்தில் சொல்லப்போவதைக் கவனமாய்க் கேள்.

மூன்றும் பாகம்

இதற்கு முந்திய இரண்டு பாகங்களில் ஆத்தும இரட்சணியமாகிற அலுவல் தன் இயல்பிலே அவசியமுள்ளதென்றும் அதை அனுகூலமாய்ச் செய்யும்படி விசேஷ கடமை உண்டென்றும் விரிவாய் விவரித்தோம். இனி இதைக் கவனியாது அசட்டை செய்வதால் வரும் **நஷ்டம்** எம்மாத்திரமென்று காண்பிக்கப் போகிறோம். இதில் நாம் சொல்லும் விஷயம் உங்கள் மனதில் ஸ்திரமாய் பதியுமேயாகில், வெகு ஜாக்கிரதையுடன் உங்கள் ஆத்துமத்தை எவ்வகையாலாயினும் இரட்சித்துக் காப்பாற்றும்படி துணிவீர்கள்.

ஆத்தும இரட்சணியத்தை மனிதன் ஒரே ஒரு விசை மாத்திரம் இழந்துபோவானாகில், இதனால் அவனுக்கு வரும் நஷ்டமா, முழு நஷ்டம், சர்வ நஷ்டம், எவ்வகையாயினும் பரிகரிக்கக்கூடாத நஷ்டமாகும். இது ஏன் என்பீர்களோ? உங்கள் ஆத்துமத்தை நீங்கள் ஒருவிசை இழந்து அது நரகில் வீழ்ந்தால், நித்தியமாய் சர்வேசுரனை

இழந்து போகிறீர்கள். சர்வேசுரனை இழக்கிறவன் சகல நன்மை பாக்கியத்தையும் இழக்கிறான். இது எப்படி என்று நீங்கள் இப்போது சில விசை நன்றாய் கண்டுபிடிக்கிறதில்லை. இந்த உலகத்தில் எங்கும் அடர்ந்திருக்கும் மாயையின் மயக்கத்தால் சர்வேசுரனை இழப்பது மகா அற்பக் காரியமென்று உங்களுக்குத் தோன்றுகின்றது. உங்களைச் சூழ்ந்திருக்கும் மாயாசுகபோக வஞ்சனைகளின் மத்தியில் சர்வேசுரன் யாரென்றும் அவரை இழந்துபோவது எவ்வளவு நிர்ப்பாக்கியம் என்றும் நீங்கள் கண்டுபிடிக்கிறதில்லை. ஆ! நரகத்திலிருக்கும் அந்த பாவாத்துமாக்களைக் கேளுங்கள். ஏன் இவ்வளவு கண்ணீர்? ஏன் இத்தனைத் துயரம்? ஏன் இப்படி கூக்குரலிட்டு அழுகிறார்கள்? ஏனென்றால் சகல நன்மை சுரூபியாகிய சர்வேசுரனை இழந்துபோனார்கள். சர்வேசுரனை இழந்ததால் சர்வ பாக்கியானந்தத்தையும் இழந்தார்கள். நரக அக்கினிக்குள் விழுந்தபின்புதான், இந்த நிர்ப்பாக்கியர் சர்வேசுரனை இழப்பது எவ்வளவான நிற்பாக்கியமென்று கண்டுபிடித்தார்கள். ஆனால் ஆபத்துவருமுன் அதைத் தடுக்க பிரயாசைப்படுவதல்லோ புத்தி? வருமுன் காப்பவனே மதியூகி, வந்தபின் காப்பவன் மதியீனன். ஏரியின் தண்ணீர் கரையை உடைத்து நாலாபக்கத்திலும் பிரளயமாய் ஓடும்போது, ஐயோ! ஐயோவென்று வாயில் அடித்துக்கொண்டால், ஓடுகிற தண்ணீர் நிற்குமோ? தண்ணீர் வருமுன் கரையை ஸ்திரப்படுத்துவதே புத்திமான் தொழில். அப்படி நீயும் உன் ஆத்தும விஷயத்தில் நடப்பாயாக.

ஆத்துமத்தை இழந்துபோவது பெரிய நஷ்டம். அதுவும் எவ்வகையாலாயினும் பரிகரிக்கக்கூடாத நஷ்டம். இந்த நஷ்டத்தை மாற்றவாகிலும், குறைக்க என்கிலும் கூடாது. ஓர் வியாச்சியம் நீ செய்யும்போது ஓரிடத்தில் நீ அபஜெயம் அடைந்தால், வேறோரிடத்தில் அல்லது இன்னொரு விசையில் அநுகூலம் பெறலாம். அப்படி அநுகூலம் பெறாவிட்டாலும் வேறே வகையால் வந்த நஷ்டத்தை பரிகரிக்கலாம். விவசாயவேலை செய்பவர்கள் ஒரு வருஷம் நல்ல விளைவு இல்லாதே போனால் இன்னொரு வருஷம் நல்ல

விளைவு உண்டாக, நஷ்டப்பரிகாரம் பெறுவார்கள். நீ செய்யும் வியாபாரத்தில் ஒரு விசை உனக்கு மோசம் வந்தால் மறு விசை லாபம் அடையும்படி வழிதேடுவாய். அதற்கு ஆயிரம் வழிகளுண்டு. ஆத்தும இரட்சணிய அலுவலிலேயோ, ஒரு விசை நஷ்டம் அடைந்து, உன் ஆத்துமம் நரகத்துக்குப்போனால் இந்த நஷ்டம் எந்த வகையாலாகிலும் பரிகரிக்கக்கூடாத நஷ்டமாகும். இதற்கு ஈடாக யாதொன்றும் கொடுக்க உன்னாலுங் கூடாது, எந்த சிருஷ்டியாலுங் கூடாது. அன்றியும் உனக்கு ஒரே ஆத்துமம் மாத்திரம் இருப்பதால், அது கெட்டுச் சேதமானால் எல்லாம் கெட்டுச் சேதமாய்ப்போகும். ஒரு கண் போனால் இன்னொரு கண்ணால் பார்க்கலாம். ஆனால் ஒரே ஒரு கண் மாத்திரமிருக்கிறவனுக்கு, அந்த ஒரு கண் போனால், பார்வை முழுதும் அற்றுப்போம்.

ஓ! கிறீஸ்துவர்களே! இந்த சத்தியத்தை நீங்கள் கண்டுபிடிக்கிறீர்களா? இப்போது கண்டுபிடியாதே போனால் இனி எப்போது கண்டுபிடிப்பீர்கள்? ஐயோ! கிறீஸ்துவர்களுக்குள்ளே எத்தனையோபேர் அவசியமான இந்த ஒரே அலுவலைக் கவனியாமலும், இதில் அநுகூலம் பெறும்படி வேண்டிய உபாய வழிகளைத் தேடாமலும், கவலையற்று இருக்கிறார்கள்! எத்தனை கிறீஸ்துவர்கள் தங்களுக்கு ஆத்துமமே இல்லை என்றாற்போலே அதைப்பற்றி நினையாமல் அஞ்ஞானிகளிலும் கடையராய் காலம் போக்குகிறார்கள்! சகோதரரே! உலக வியாபாரத்துக்காக நீங்கள் செய்யும் முயற்சிகளையும் உங்களுடைய சொந்த ஆத்தும இரட்சணியத்துக்காக நீங்கள் செய்யும் முயற்சிகளையும் சீர்தூக்கி ஒப்பிட்டுப் பாருங்கள். உங்களுடைய ஆத்துமத்துக்காக நீங்கள் செய்வது எவ்வளவு சொற்பம்! இந்தச் சொற்பமும், எவ்வளவோ அசமந்தத்தோடும், வலுவந்தத்தோடும் அரைகுறையான மனதோடும் செய்துவருகிறீர்கள்! இதென்ன காலாகோலம்! இதென்ன புத்தியீனம்! உங்கள் ஆத்துமத்தை ஈடேற்றினால் வரும் பலனும் பாக்கியமும் உங்களுக்கல்லவா நித்தியகாலமிருக்கும்? உங்கள் ஆத்துமத்தை இழந்துபோனால் நீங்கள்தானே நித்திய

மான துன்பம் அனுபவிக்கவேண்டும். லாபமும் நஷ்டமும் எல்லாம் உங்களை அல்லவா சாரும்? இதோ நல்ல சமயம்! அதிர்ஷ்டகாலம்! சமயம் வாய்க்கும்போதே அதை வீணில் இழந்துபோகாமல் நல்ல மனசோடு துணிந்து, என் ஆத்துமத்தை எவ்விதமாகிலும் நான் இரட்சிப்பே னென்று துவக்குங்கள். எவன் எப்படி நடந்தாலும், எப்படிப் பேசினாலும் நீ கவனிக்காதே. பேசுகிறவன் பேசட்டும்; சிரிக்கிறவன் சிரிக்கட்டும். உன் ஆத்துமம் உன் கைப்பொருள். அதை இரட்சிக்க நீயே முயலவேண்டும். நீ முயலாவிட்டால் வேறெவனும் உனக்காக அந்த வேலையைச் செய்ய வரமாட்டான். செய்ய மனமிருந்தாலும் அவனால் கூடாது. அவனவன் ஆத்துமத்துக்கு அவனவனே உத்தரவாதி.

ஓ! சர்வேசுரா! என் ஆத்துமத்தை நானே இரட்சிக்கும்படியாய் என்னை மனிதனாய் சிருஷ்டித்தீர். உமது சாயலான ஆத்துமத்தை எனக்குக் கொடுத்தீர். தேவ தூதர்களை எனக்குக் காவல் சம்மனசுகளாக நியமித்தீர். நீரே என்னைத் தேடிவந்து எனக்காக மனிதனாய்ப் பிறந்தீர். உமது திரு இரத்தத்தை என் ஆத்துமத்தின் கிரயமாய்த் தந்தீர். என்னைச் சூழ்ந்திருக்கும் சகல சிருஷ்டிகளும், நான் உமக்கு ஊழியஞ்செய்து என் ஆத்துமத்தை இரட்சிக்கும்படி இடைவிடாமல் எனக்குப் புத்தி போதிக்கின்றன.

ஆனால் ஐயோ! இதுமட்டும் நான் இந்த உன்னத அலுவலை மறந்து, மற்றதெல்லாம் செய்துவந்தேன். ஓ! அக்கிரமமாய் நடந்தேன். இனிமேல் சுவாமி இப்படி நடக்க மாட்டேன். எனக்கு இன்னும் மீதியாயிருக்கும் நாட்களை உமக்கு ஊழியஞ்செய்து என் ஆத்துமத்தை ஈடேற்றுவதில் செலவழிப்பேன். இதுவே என் ஸ்திரமான மனசு. இதுவே என் மாறாத ஆசை.

அர்ச். மரியே, பாவிகளின் தஞ்சமான தாயே! என் பிரதிக்கினையை ஆசீர்வதித்தருளும். என் ஆசையை ஏற்றுக்கொள்ளும். என் மனசை ஸ்திரப்படுத்தும் தாயே.

ஆமென் சேசு.

முதல் நாள்—ஞான போதகம்

ஆத்தும இரட்சணிய அலுவலில் காலதாமதம் மோசமுள்ளது

போர்களத்தில் மகா பராக்கிரம வீரனும் எதார்த்த குணமுள்ளவனுமான சேனாதிபதி ஒருவன் இருந்தான். 'எதார்த்தவாதி வெகுஜன விரோதி' என்ற சுலோகத்துக் கொப்பாய், சிலர் இவனை வஞ்சித்து துரோகமாய்க் கொல்லும்படி சமயம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒருநாள் இவன் விருந்துண்டு சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில், ஓர் அந்நியன் துரிதமாய் அங்கே வந்து, இரகசியத்தில் தளவாய்க்கு ஓர் கடிதங்கொடுத்து அதில் முக்கியமான சங்கதி இருக்கிறதென்றும், உடனே தாமதமின்றி வாசிக்கவேண்டுமென்றுஞ் சொல்லிப் போய்விட்டான். சேனாதிபதி நல்லது என்று வாங்கி, உடனே வாசிக்காமல் பிற்பாடு எல்லாரும் போனபின் சாவகாசமாய் வாசிக்கலாமென்று சும்மா இருந்துவிட்டான். வீட்டைவிட்டு வெளியே போகுமுன், அவன் விரோதிகள் சதிதுரோகமாய் அவனைக் கொன்றுபோட்டார்கள். வந்த கடிதத்தைத் தாமதமின்றி உடனே வாசித்திருந்தால் கொலைக்குத் தப்பித்திருப்பான். இதனால் முக்கியமான எந்த அலுவலையும் செய்ய சமயம் வாய்க்கும்போது உடனே செய்யாமல் காலதாமதஞ் செய்வது எவ்வளவு மோசமான காரியம் என்று அறியலாம.

ஆத்தும இரட்சணிய அலுவல் எந்த அலுவலினும் மகா முக்கிய அலுவல். இது ஒன்றே நாம் செய்யக் கடமைப்பட்ட அலுவல். இது ஒன்றைச் செய்யும்படியாகவே நாம உலகத்தில் மனிதராயிருக்கிறோம். இதைச் செய்வதில் நஷ்டம் வந்தால் அது பரிகரிக்கக்கூடாத பெரும் நஷ்டமென்று இவை முதலிய சத்தியங்களை முந்தின பிரசங்கத்தில் விவரித்தோம். இதைக் கேட்டவர்களில் சிலர் நினைப்பதேதென்றால்: இங்கே சொன்னதெல்லாம் ஞாயந்தான். என் ஆத்துமத்தை நான் கவனிக்கவேண்டியது மெய்தான்.

ஆனால் இப்போது என்ன ஆத்திரம்? அதற்கு நல்ல சமயம் வரும். இது தக்க காலமல்ல. அன்றியும் நான் இன்றைக்கா சாகப்போகிறேன்? இப்போது எனக்கு வாலிபப் பிராயம். இனி வயசு வரும். அப்போது பார்த்துக்கொள்ளலாம் என்று தங்கள் மனதுக்குச் சமாதானஞ் சொல்லி, உடனே துவக்காமல் இனிமேலாகட்டுமென்று காலதாமதஞ் செய்வார்கள்.

இவ்விதம் உடனே சமயம் வாய்த்தபோது மனந்திரும்பாமல் காலதாமதஞ் செய்வது எவ்வளவு மோசமானதும் ஆபத்துள்ளதுமென்று இப்போது உங்களுக்கு விவரித்துக் காட்டப்போகிறோம். நீங்கள் கவனமாய் நாம் சொல்வதைக் கேளுங்கள். தேவதாய் உங்கள் புத்திக்குத் தெளிவும் மனசுக்கு உறுதியும் தமது திவ்விய குமாரன் சேசுநாதரிடம் பெற்றுக் கொடுப்பாளாக.

முதல் பாகம்

ஆத்தும இரட்சணிய அலுவலைச் செய்யும்படி மனசு சர்வேசுரன் பக்கம் திரும்புவது இன்றியமையாத முதல் காரியம். இப்படி மனந்திரும்ப உண்டாகும் முதல் யோசனை சர்வேசுரனுடைய குரல் சத்தம். இந்தச் சத்தத்தைக் கேட்டவுடனே, இனிமேலாகட்டுமென்று தாமதஞ் செய்யாமல் உடனே துவக்குவதுதான் புத்திமானுடைய இலக்ஷணம். இந்தச் சமயம், சர்வேசுரன் குறித்தனுப்பும் உஜித சமயமாதலால், உடனே துவக்கினால் அநுகூலமாயும் சுலபமாயும் முடியும். அப்படியின்றி வந்த நல்ல சமயம் வீணிலே கடந்துபோகும்படி விட்டால், இனிமேல் இப்படிப்பட்ட உஜித சமயம் வருமோ என்பது வெகு சந்தேகம்.

ஏனென்றால் சர்வேசுரனிடம் மனது திரும்பும்படி மூன்று முக்கிய குணங்கள் ஒன்றாய்ச் சேர்ந்து கூடவேண்டும். காலமும், தேவாநுக்கிரகமும், மனதும் ஆகிய இம் மூன்றும், மனந்திரும்ப இன்றியமையாத சாதனங்கள்.

இம்மூன்றில் ஒன்றுமாத்திரம் குறையுமாகில் மனந்திரும்புவது கூடாத காரியம். எப்படியெனில்: நீ மனந்திரும்ப நேரம் இல்லாவிடில், அல்லது காலமிருந்தாலும் தேவாநுக்கிரகம் இல்லாவிடில், அல்லது தேவாநுக்கிரகமிருந்தாலும் உனக்கு மனது வராதேபோனால், நீ மனந்திரும்ப முடியாது. அன்றியும் இம்மூன்று குணங்களும் உன் கையில் இல்லாததால் இவைகளை உன் இஷ்டம்போல் எந்தக் காலத்திலும் நீ சேர்த்துப் பிரயோகிக்க உன்னால் கூடாது.

இதை நீ நன்றாய் அறியும்படி நாம் சொல்லும் உவமையைக் கேள். நகைகளுந் தங்க நாணயங்களுமுள்ள இருப்புப் பெட்டியைத் திறக்கும்படி மூன்று வித்தியாசமுள்ள திறவுகோல், மூன்றுபேர் கையில் இருக்கிறதென்று வைத்துக்கொள். இந்த மூன்றுபேரும் பற்பல பட்டணங்களில் பற்பல அலுவல் பார்த்துவருகிறவர்கள். இப்படியிருக்கப் பணப்பெட்டியை நீ எந்த நாளிலும் உன் இஷ்டப்படி திறக்க உன்னால் கூடுமா? கூடாது. ஏன்? ஏனென்றால் மூன்று திறவுகோல்களை வைத்திருக்கும் மூன்றுபேரும் ஓரிடத்தில் ஏககாலத்தில் வந்து கூடினால் மாத்திரம் பெட்டியைத் திறக்கலாம். மூன்றுபேரில் ஒருவன் மாத்திரம் வராதேபோனால், இரண்டு திறவுகோல் போதாது. அதுபோல சர்வேசுரனிடம் மனந்திரும்ப, நாம் முன் சொன்ன மூன்று குணங்களும் நம்மிடத்தில் ஏககாலத்தில் ஒன்றாய் வந்து இருக்கும் சமயம் எதுவோ அதுவே உஜித சமயம். அப்படிப்பட்ட சமயம் நீங்கள் தியானஞ்செய்ய வந்திருக்கும் இந்த அதிர்ஷ்ட சமயம். இது தப்பினால் வேறே உஜித சமயம் நினைத்தாற்போல வருமா? வராமாட்டாது. ஏனென்றால் இந்த மூன்று விஷயங்களில் ஒன்றாவது உங்கள் கையிலிருக்கிறதென்று சொல்லக்கூடாது. இம் மூன்றில் ஒன்றும் உங்களுக்குச் சொந்தமல்ல. அப்படியே முதல் விஷயமாகிற **காலம்** யாருக்குச் சொந்தம்? காலத்துக்கு யார் எஜமான்? ஒரு நிமிஷமுதலாய் நமக்குச் சொந்தமல்ல. சர்வேசுரனுக்கு எப்போது சித்தம் வந்ததோ அப்போது

நாம் உலகத்தில் வந்தோம். இனி அவருக்கு எப்போது சித்தம் வருமோ அப்போதுதான் நாம் இதை விட்டுப் போவோம். நமது காலத்தின் ஸ்திதி இப்படியிருக்கையில் இனிமேலாகப் பார்ப்பேனென்று சொல்லுவது புத்தியோ? இன்னும் நாம் சொல்லப்போவதை கவனமாய்க் கேள். காலத்தில், இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலமென்று மூன்று பாகங்களுண்டு. இம் மூன்று பாகங்களில் நீ மனந் திரும்பும்படி உனக்கு உரியது நிகழ்காலமாத்திரந்தான். நிகழ்காலமென்றால் இன்று, இந்த நாள் என்று சொல்லும் இந்த நிமிஷ நேரமாத்திரம் உனக்குச் சொந்தம். ஆனதால் நீ அவசியம் செய்யவேண்டிய வேலையை உனக்குச் சொந்தமாய் உன் கையிலிருக்கும் நிகழ்காலமாகிற இந்த நேரத்தில் நீ செய்யாமல், உனக்குச் சொந்தமில்லாத நேரமாகிற இனிமேல் என்ற எதிர்காலத்தில் செய்வேனென்றால்: கையிலிருக்கும் நெல்லை காற்றில் தூற்றிவிட்டு, இனிமேல் காட்டை வெட்டி உழுது பயிர்செய்து நெல் சேர்ப்பேன் என்று சொல்லும் பேதமைக்குச் சமானம். கைக்கு எட்டினதும் சில சமயம் வாய்க்கு எட்டாமல் தப்பிப்போயிருக்க, எப்படி நீ இப்போது உன்னால் செய்யக்கூடியதை இனிமேல் என்ற நிச்சயமற்ற காலத்தில் செய்வேன் என்று சொல்லலாம்?

ஓ! மனந்திரும்பும் பாவிக்குச் சர்வேசுரன் பொறுத்தல் கொடுப்பதாய் வாக்குக் கொடுத்திருக்கிறார் என்று நீ சொல்வாயாக்கும். மெய்தான். ஆனால் பொறுத்தல் கொடுக்க வாக்குத்தந்த சர்வேசுரன் அந்தப் பொறுத்தலை பாவி கேட்பதற்கு நேரம் அவனுக்குக் கொடுப்பதாக ஓரிடத்திலும் சொல்லவில்லையே. ஓ! இனிமேலாகட்டும் அடுத்த திருநாள் வரும்போது பாவத்தைவிட்டு நான் மனந்திரும்புவேன் என்று சொல்லுங் கிறீஸ்துவனே கேள். அடுத்த திருநாள் வரும், ஆனால் உனக்கு அது வருமோ? இன்றைக்கு உயிரோடிருப்பதே அநிச்சயமாயிருக்க அடுத்த திருநாளைப்பற்றி யோசிப்பானேன். எத்தனையோபேர் அடுத்த திருநாளில் மனந்திரும்பி பாவசங்கீர்த்தனஞ் செய்வேனென்று காலதாமதஞ் செய்து

வந்தவர்கள் அடுத்த நாளைப் பாராமல் பாவத்திலே மரித்தார்கள்!

உலக சம்பந்த விஷயங்களில் வெகு புத்தி யுக்தி யோசனையோடு, முன்பின் பார்த்து நடக்கும் மனிதர்கள் ஆத்தும விஷயத்தில் மாத்திரம் அந்தப் புத்தியைக் காலால் மிதித்து, சற்றும் யோசனையின்றி நடக்கிறார்கள். நீ குடியிருக்கும் வீட்டுக்குள் விஷமுள்ள நாகப்பாம்பு நுழைந்தால், அல்லது அந்தப் பாம்பே உன்னைத் தீண்டினால், நாளை பார்ப்போமென்று பாம்பை கொல்லாமலும், அதின் விஷத்தைக் கெட்கும் மருந்தைச் சாப்பிடாமலும் நீ இருப்பாயோ? தன் பிள்ளைக்குக் கொடிய சுரநோய் கண்டால் நாளை வைத்தியனைக் கூட்டிவந்து மருந்து கொடுப்பேனென்று, கையைக் கட்டிக்கொண்டு இன்றைக்கு சும்மா இருப்பவன் எங்கும் உண்டோ? சுய அறிவில்லாமல் பித்துக்கொண்டவன் இப்படிச் செய்வானேயன்றி, புத்தியுள்ள எவனுஞ் செய்யமாட்டான். உலக சம்பந்தமான விஷயங்களில் செய்யும் யோசனை ஆத்தும விஷயத்தில் செய்ய வேண்டாமா?

சகோதரரே! சர்வேசுரன் உலகத்துக்கு இரட்சணியமான தமது திவ்விய மகனை தாம் குறித்த காலத்தில் அனுப்பினதுபோல், உங்களுக்கும் இரட்சணியமாக அவர் தெரிந்து அனுப்பும் இந்தக் காலத்தில்தான் நீங்களும் இரட்சணியம் பெறலாம். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்பது பழமொழி அல்லவா? எப்போது அநுகூலமான சமயம் வாய்க்குமோ அப்போது அதைப் பிரயோகிப்பது புத்திமான் கடமை. அந்த நல்ல சமயம் இதுதான். சர்வேசுரன் இன்று உன்னைக் கூப்பிடும்போது உன் மனதைக் கல்லாக்கி, இனிமேலாகட்டுமென்று சொல்லாதே. நீ மனந்திரும்ப இப்போது நேரமிருக்கிறது. ஆனால் நேரமாத்திரம் போதாது. நேரத்தோடு தேவாநுக்கிரகமும் அவசியம். அது எப்படி என்று இரண்டாம் பாகத்தில் விவரிக்கப்போகிறோம். கவனமாய்க் கேளுங்கள்.

இரண்டாம் பாகம்

சர்வேசுரன் கொடுக்கும் உதவியாகிற **தேவாநுக்கிரகம்** எந்த நல்ல காரியமுஞ் செய்யும்படி மகா அவசியம். அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பர் சொல்வதுபோல தேவாநுக்கிரக உதவியின்றி நாம் சேசுநாதருடைய திருநாமத்தை முதலாய் தக்க வகையாய் உச்சரிக்க முடியாது. இது எப்படியானால், உலக கவலையில் அமிழ்ந்தி, பாவ வலையில் சிக்கி, துர் இச்சைகளுக்கு அடிமையாய், துர்ப் பழக்கங்களென்னும் சங்கிலிகளால் கட்டப்பட்டு கிடக்கும் பாவி தன் பாவத்தை விட்டு முழுதும் மனந்திரும்பும்படி, சர்வேசுரனுடைய உதவி, அதுவும் விசேஷித்த உதவி, அவசியமென்பது நிச்சயமான சத்தியம். நம்மையன்றி உங்களால் நன்மையானதெதுவும் செய்ய ஏலாதென்று சேசுநாதரே சொல்லியிருக்கிறார். பட்சி உயர எழும்பிப் பறக்கும்படி அதற்கு ஆதரவாக எப்படி ஆகாயம் அவசியமோ, அப்படியே மனிதனும் இந்தப் பூலோக சம்பந்த கவலையிலிருந்து சர்வேசுரனிடம் எழுந்து செல்லவேண்டுமானால் அவனுக்கு தேவாநுக்கிரக உதவி அவசியம்.

இவ்விதம் மனிதனுக்கு அவசியமான அநுக்கிரக உதவியைச் சர்வேசுரன் கொடுக்கச் சித்தமாயிருக்கிறாரென்பது மெய்தான். ஆனால் இந்த உதவியைச் சர்வேசுரன் தமது தேவ நீதியின் கிரம ஒழுங்குக்கு விரோதமாகக் கொடுப்பாரோ? அப்படியானால், யாதொருவன் தனக்கு சர்வேசுரன் உதவி செய்வாரென்று நம்பி, பாவ வழியில் பயமின்றி நடப்பானாகில், அப்படிப் பாவஞ்செய்து தம்மை நிந்திக்கிறவனுக்குச் சர்வேசுரன் அநுகூலமாயிருக்கிறாரென்று சொல்வதுபோலாகும். இவ்வளவுதானோ? இன்னும் சர்வேசுரனே பாவத்துக்குத் துணையாயிருந்து மனிதனை அதற்குத் தூண்டி ஏவுகிறாரென்றுஞ் சொல்லவேண்டும்! ஓ! இப்படிச் சொல்வது தேவதூஷணம்! அன்றியும் சர்வேசுரன், உன்னை இப்போது தமக்கு ஊழியஞ்செய்து உன் ஆத்துமத்தை இரட்சிக்கும்படியாகக் கூப்பிட்டு, அதற்கு வேண்டிய வரப்பிரசாத உதவியைக்

கொடுக்கும்போது, நீ அதை அவமதித்து ஏற்றுக்கொள்ளாமல் இனிமேல் வயது வந்தபின் பார்க்கலாம் என்று சொல்வது, சர்வேசுரனுக்குப் பெரும் நிந்தையென்று உனக்குத் தோன்றவில்லையா? உன் சீவிய நாட்களில் நல்ல பாலிய பிராயத்தைச் சர்வேசுரனுக்காகச் செலவழியாமலிருந்து, இனி முதிர்ந்த வயது வந்த பின்போ சர்வேசுரனைத் தேடிப்போவாய்? தோட்டத்திலிருக்கும் பூஞ்செடியில், புதிதாய் மலர்ந்து, சுகந்த பரிமள வாசனை வீசி, கண்ணுக்கு ரமணீயமாயிருக்கும் புஷ்பத்தை உன் தகப்பனுக்குக் கொடாமல், அது காய்ந்து வாடி வாசனையின்றி இதழ்கள் சுருங்கி விழப்போகும்போது அவருக்கு அதைக் கொடுப்பது பிள்ளைக்கு அழகோ? நன்றாய் ஊழியஞ்செய்ய ஏதுவான இளம் பிராயத்தை உன்னைச் சிருஷ்டித்தவருக்குக் கொடாமல், இனி வயதில் முதிர்ந்த கிழவனானபின், உடலில் உயிர் குறைந்து, புத்தி தடுமாற்றமாகி, கால் கை ஊன்றி, நடக்கவும் இருக்கவும் சக்தியின்றி, அடியற்ற மரம் போல் விழுந்து கிடக்கும்போது, உலக சிற்றின்ப சுகங்களை நீ அநுபவிக்கக்கூடாததால், உலகமே உன்னை ஒன்றுக்கும் உதவாத வெறும் பதரென்று பகைத்து வெறுத்துத் துரத்த, அப்போதுதானா, உன் சிருஷ்டிகரான சர்வேசுரனுக்கு ஊழியஞ்செய்து உன் ஆத்துமத்தை இரட்சிக்கப் போகிறாய்? இவ்வித ஊழியம் சர்வேசுரனுக்கு மகிமையோ? உனக்கும் இது யோக்கியமோ?

ஆனால் சர்வேசுரன் நல்லவர். மெத்த தயாள குணமுள்ளவர். நான் கொடுப்பது அற்பமாயினும், அதை எப்போது கொடுத்தாலும் அவர் தயவாய் ஏற்றுக்கொள்ளுவார் என்று நீ இன்னும் சொல்வாயாக்கும். ஆ! ஆ! சர்வேசுரன் நல்லவரானதால் நீ கெட்டவனாகவேயிருக்கலாமா? சர்வேசுரனுக்கு இரக்கம் மிகுதியாயிருக்கின்றதென்று நீ அவரை உன் பாவத்தால் நிந்திக்கவோ போகிறாய்? சர்வேசுரனுடைய உத்தம இலட்சணங்களை, நீ உன் பாவத்துக்கு ஆதாரமாக ஸ்தாபிக்கவோ எண்ணுகிறாய்? கிறீஸ்துவனே! ஆழமறியாமல் காலை விடாதே, அறியா

முன்னே குறி பாராதே. சர்வேசுரன் இரக்கமுள்ளவர்: மெய்தான். ஆனால் நீதியும் உள்ளவர். அவர் நீதியோ அநந்த நீதி, பாரபட்சமற்ற நீதி, கோணாத நீதி; ஆன தால் அவர் எவனும் தம்மைத் தன் இஷ்டம்போல் நிந்தித் துப் பழிக்கவிடமாட்டார். இன்று இரக்கம் காண்பித் தால் எப்போதும் இரக்கங் காண்பிப்பாரென்று எண் ணாதே. இதோ அவர் உன்னைக் கூப்பிட்டு, நீ மனந்திரும்பு வதற்கு ஏதுவான அநுக்கிரக உதவி செய்ய காத்திருக்கிற இந்தச் சமயமே, உன் இரட்சணியத்துக்கு அநுகூலமான சமயமென்று நினைத்து அவருக்கு ஊழியஞ்செய்ய கால தாமதமின்றி இப்போதே துவக்கு. என் ஆண்டவரே! இப்போதே, இதோ துவக்குகிறேன் என்று சொல். ஆகிலும் நீ மனந்திரும்பும்படி நேரமும் காலமும், தேவாநுக் கிரக உதவியும் இருந்தாலும், இன்னும் உனக்கு அவசிய மான மூன்றாங் குணம் ஒன்றுண்டு. அது இன்னதென்று பின்வரும் மூன்றாம் பாகத்தில் விவரிக்கப்போகிறோம். கவனமாய்க் கேள்.

மூன்றாம் பாகம்

பாவத்தைவிட்டு மனந்திரும்பி சர்வேசுரனுக்கு ஊழி யஞ் செய்ய இப்போது உனக்கு இருக்கும் சமயமே உசித சமயமாயிருக்க, அதை நீ தப்பவிட்டு இனிமேல் ஆகட்டு மென்று சொல்லுதல் எவ்வளவு மதியீனமான செய்கை. இனிமேல் மனந்திரும்புவேனென்றால், மனந்திரும்ப நேரம் அவசியம். அந்த நேரம் உனக்கு இருக்குமோ இராதோவென்பது மெத்த சந்தேகமென்று முதற் பாகத் தில் விவரித்தோம். நேரமிருந்தாலும் தேவாநுக்கிரக உதவி தேவையென்றும், அதுவும் நீ நினைத்த சமயத்தில் வருமோ வாராதோ என்பது வெகு அநிச்சயமென்றும் இரண்டாம் பாகத்தில் சொல்லிக்காட்டினோம். அப்படி தேவாநுக்கிரகம் இருந்தாலும் இன்னும் மூன்றாம் இலக்ஷ ணமாகிற **மனம்** உனக்கு வேண்டும். இந்த மனசு இப் போது உனக்குத் தியான காலத்தில் எளிதாய் வரலாம். அந்தக் கவனியாமல் இனிமேலும் உனக்கு மனசு இருக்கு

மென்று நீ எண்ணி இன்று செய்யவேண்டியதை இனி மேல் செய்வேனென்றால் மோசம் போவாய்.

இதின் காரணமேதெனில் மனிதனுடைய மனசு வெகு நிலையற்றது. பாசிபோல் என்றும் தளம்பும். ஒரே நிலையில் செல்லாது. வேண்டும், வேண்டாம், என்பதும், சந்தோஷமும் துக்கமும், வெறுப்பும் விருப்பமும், ஆவலும் அரோசிகமும், சலிப்பும் உற்சாகமும், இவையெல்லாம் சக்கரம்போல் சுற்றிச் சுழன்று மாறி மயங்கி வரும். மனிதன் மனது ஒரு நாளையில் எழு விசையாகிலும் மாறி வருமென்று வேத வாக்கியம் முறையிடுகின்றது. நாமும் அநுபவ வாயிலால் நாள்தோறும் இது மெய் என்று கண்டுவருகிறோம். மனிதன் மனசு காற்றாடிபோல, மாறி மயங்கி, அற்ப விஷயத்தாலும் அலைந்து சுழல்வதை யார் அறியார்? ஒரு நிலையும் அற்ற மனசு; இப்படி நிலையற்ற மனசை, நீ நிலையுள்ள மனமாக எண்ணி இன்று செய்ய மனமில்லாததை இனிமேல் செய்வேனென்று சொல்லுகிறாய். துர் அப்பியாசமும், துர்க்குணங்களும், பாவ நாட்டமும் உன்னிடத்தில் இன்னும் பலங்கொள்ளாமல் இப்போதுதான் துவக்கி இருக்கும்போது, அவைகளை முழுதும் நீக்கி, உன் ஆத்தும இரட்சணிய அலுவலைக் கவனிக்க தைரியமில்லாத நீ, இனி இவைகள் நன்றாய் பலங்கொண்டு, மனதில் ஆழமாய் இறங்கி, ஆணிவேர் பாய்ந்து, நாலு பக்கமும் உன்னைச் சேர்த்துக்கட்டி இறுக்கும்போதோ, நீ மனந்திரும்பப் போகிறாய்? ஆலமரம் இளங்கன்றாய் இருக்கையில் அதைப் பிடுங்கிப்போட துணிவில்லாதவன், அது பெரிய விருக்ஷமாய் வளர்ந்து, நாலு திசையிலும் வேரோடி ஒரு அடிமரத்துக்குச் சார்பாய் ஒன்பது அடி மரங்கள் விழுதுகளில் இறங்கி, பலப்பட்டு, கிளைகளும் கொம்புகளும் எங்கும் படர்ந்து, பெருஞ் சோலைபோல் விரிந்து வளர்ந்த பிற்பாடோ, எளிதில் அதை வெட்டலாமென்று சொல்லுகிறாய். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? ஒரு கால் மாத்திரம் கொஞ்சம் சேற்றுக்குள் பதிந்திருக்கும்

போது அதை வெளியே இழுக்க மனமில்லையென்று, இரண்டு காலையும் ஆழமாய் சேற்றுக்குள் உன் இடுப்பு மட்டும் புதைத்தபின்பு, அவைகளை எளிதாய் வெளியே யிழுக்கும்படி உனக்கு மனது வருமென்று சொல்வது புத்திமான் சொல்லா?

ஆனால் நான் கிறீஸ்துவனானதால் சர்வேசுரன் கிருபை யால் நான் சாகும்போது பாவசங்கீர்த்தனஞ் செய்து அவஸ்தைப்பூசுதல் பெற்று சாவேனென்று எனக்கு பூரண நம்பிக்கை இருக்கின்றது. குருவும் அந்த சமயத்தில் தப்பாமல் வருவார் என்று நீ சொல்வாயாக்கும்.

ஆனால் சகோதரா! நீ சாகும் சமயத்தில் குருவான வர் சமீபத்திலிருப்பாரென்று உனக்கு எந்த சம்மனசா வது வந்து சொன்னதுண்டா? நாம் அறிய எத்தனை பேர் கள், குரு வீட்டுக்கு வருமுன்னே இறந்துபோனார்கள். நல்லது, நீ சொல்வதுபோலாகட்டும். குரு வந்தாலும் நீ அவஸ்தையில், பேச்சுமூச்சின்றி புத்தித் தெளிவின்றி இருந்தால், அது பாவசங்கீர்த்தனஞ்செய்ய நல்ல சமயமா? உனக்கு அப்போது மனது வருமா? நீ நன்றாய் புத்தி ஸ்வாதீனத்தோடு இருக்கும் இப்போது, மனந்திரும்பி பாவசங்கீர்த்தனஞ் செய்வது உனக்குப் பெரிய மலைபோல் தோன்றுகிறதே. அந்தக் கடைசி நாளில் எப்படி நீ எளிதாய் வருத்தமின்றி பாவசங்கீர்த்தனஞ் செய்வா யென்று எண்ணுகிறாய்? அதற்குத் தகுந்த அறிவும் புத்தி தெளிவும் அப்போது உனக்கு இருக்குமோ? இப்போது இல்லாத மனம் அப்போது எப்படி வரும்? நல்ல பாவ சங்கீர்த்தனத்துக்கு அவசியமான குணங்கள் இன்ன தென்று இப்போது அறியாத நீ, உன் அவஸ்தை வேளை யில் அறிவாயோ?

கடைசி நாளில் எல்லாம் சரியாய் முடியுமென்று வீணாய் இப்போது மனோராஜியம் பண்ணாதே. மகா முக் கிய அலுவலை, செய்யக்கூடும்போது செய்ய மனமில்லாமல் கடைசி நாள் மட்டும் விடுவது புத்தியீனமான செய்கை.

மனிதன் ஜீவிக்கும் நாட்கள் எப்படியோ அப்படியே அவன் மரண நாளுமிருக்கும். வடபக்கம் சாய்ந்த மரம் வெட்டும்போது தென்பக்கம் விழமாட்டாது. வேப்பமரத்தில் விளாங்கனி பழுக்காது, அவரை விதைத்தால் துவரை விளையாது, சாமை விதைத்த வயலில் சம்பா முளையாது. விதைத்ததெதுவோ அதுவே அறுப்பான். நீ உன் சீவிய நாளில் பாவ துர்க்கந்தத்தை விதைத்தால் பாவத்தின் ஆக்கினையைப் பலனாக அறுப்பாய். ஒருவரிருவர் பாவிகளாய் ஜீவித்தவர்கள் சாகும்போது மனந்திரும்பி நல்லவர்களாய் மரித்தால், இது ஓரோரிடத்தில் சர்வேசுரன் செய்யும் விசேஷ தயை. உன் மட்டிலும் இப்படிச் செய்வாரென்று நீ எண்ணி நடந்தால் மோசம் போவாய். மரத்தின உச்சியி லிருந்து கீழே விழுந்தவர்களில் ஒருவரிருவர் தேவாதீனமாய் தப்பிப்பிழைத்தார்களென்று, நீயும் மரத்தின் உச்சியிலிருந்து விழுந்தால் தப்பிக்கலாமென்று விழுந்து பார்ப்பாயா ?

கிறீஸ்துவனே ! சர்வேசுரன் உன்னைக் கூப்பிடும் இந்த சமயம், இதுதான் உனக்கு இரட்சண்ய நாள். பாவத்தைவிட்டு மனந்திரும்பும்படி இதுதான் தகுந்த நாள். எல்லாம் உனக்கு இப்போது அநுகூலமாயிருக்கிறது. காலமும், தேவாநுககிரகமும் இப்போது உண்டு. மனசு ஒன்றுதான் வேணும். அந்த மனசும் இப்போது உன் கையிலிருக்கிறது. ஆகையால் எனக்கு மனசிருக்கிறது. நான் என் ஆத்துமத்தை இரட்சிக்கும்படியாய் சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்வேன். இதோ நான் துவக்குகின்றேன் என்று துவக்கு. துணிந்து துவக்கி ஒரு காலெடுத்து வைத்தால், எல்லாம் சுளுவாய் முடியும்.

இங்கே தியானஞ்செய்ய வந்திருப்பவர்களுக்குள், யாராவது இதுமட்டும் இரட்சணிய வழி தப்பிப் பிசகிப் போய் நடந்தால், பாவசங்கீர்த்தனமின்றி பல நாள் பாவத்தில் அமிழ்ந்திக்கிடந்தால், துர் நடத்தை, குடிவெறி, அநீதம், ஆங்காரம் என்னும் பாவங்களுக்கு அடிமையாய் நரக பாதாளத்தின் ஓரத்தில் நித்திரை செய்தால், ஓ! இச்

சணமே எழுந்திருங்கள். காலதாமதஞ் செய்யவேண்டாம், தாமதித்து, ஓர் அடி மாத்திரம் அப்பால் வைப்பீர்களேயாகில் நரகத்தில் விழவேண்டியிருக்கும். அப்படி விழுமுன்னே விழித்து எழுந்து, பாவத்தை விட்டு சர்வேசுரனிடம் வந்து சேருங்கள். நாளைக்கென்று சொல்லாமல், இன்றைக்கே, இச்சணமே இதோ வருகிறேனென்று சேசுநாதர்சுவாமி பாதத்தில் வாருங்கள்.

கால தாமதம் எவ்வளவு மோசமான தோஷம் என்று நீங்கள் உங்கள் மனதில் சார உணரும்படி ஓர் வர்த்தமானத்தைக் கேளுங்கள். மேன்குலத்தில் பிறந்த ஓர் வாலிபன் துஷ்டர் சகவாசத்தால் துன்மார்க்கத்தில் விழுந்து கெட்டுப்போனான். அவன் தாய் புண்ணியவதி வெகு துக்கப்பட்டு பலமுறை அவனுக்குப் புத்தி சொல்லுவாள். நல்லதென்று சமயத்துக்கு இசைந்தாற்போல் மறுமொழி சொல்வானேயன்றி சொன்னதுபோல் செய்ய அவனுக்கு மனத்துணிவில்லை. அவனை அறிந்த ஓர் குரு அந்த ஊருக்கு வந்தார். வந்தவர் அவனைக் கூப்பிட்டு புத்தி சொல்லி, அன்றே பாவசங்கீர்த்தனஞ்செய்து தன் நடத்தையை சீர்படுத்துவது நலமென்று வற்புறுத்தினார். வாலிபனும் மனந்திரும்பி: நல்லது சுவாமி, ஆனால் பாவசங்கீர்த்தனஞ் செய்யுமுன் சில காரியங்களை ஒழுங்குப்படுத்துவது அவசியம். இன்று எல்லாம் முடித்து நாளை அதிகாலமே உங்களிடம் பாவசங்கீர்த்தனஞ் செய்ய வருவேனென்று வாக்குக் கொடுத்து வீட்டுக்குப் போனான். அன்று இராத்திரியில் அவன் உடன் தோழனான ஓர் துஷ்டன் அவனிடம் வந்து, நயவஞ்சகங் காட்டி: சிநேகிதா! நாளையோடு நீ நல்லவனாகப்போகிறாயே. ஆனதால் இந்த இராத்திரி நாம் போகும் வீட்டுக்கு கடைசி விசை போகலாம். அதோடு எல்லாம் முடிந்துபோகும் என்று அவனை ஓர் கெட்ட ஸ்திரீ வீட்டுக்குக் கூட்டிப்போனான். அந்த இராத்திரியில் மின்னலும் இடி முழக்கமும் அகோரமாயிருந்தது. நடுச்சாமத்தில் படீர் என்று பயங்கரமான இடி அந்த ஊரில் விழுந்தது.

ஊரெல்லாம் நடுங்கி அரண்டுபோயின. மறுநாள் காலையில் குரு, பையன் வருவானென்று அவனுக்காகக் காத்திருந்தார். தாமதமானதால் ஆள் அனுப்பி விசாரித்தபோது அவன் அந்த இராத்திரியே ஓர் துன்மார்க்க ஸ்திரீ வீட்டில் இடி விழுந்து செத்துக்கிடக்கிறான் என்று சேதி வந்தது. நாளைக்கென்று தாமதஞ் செய்ததால் வந்த பலன் இதுதான்; நாளை வருமுன்னே அவலமாய்ச் செத்தான்.

ஓ தயையும் அன்பும் நிறைந்த என் சர்வேசுரா! எவ்வளவோ பொறுமையோடு இவ்வளவு காலம் எனக்காக காத்திருந்தீர்! ஆண்டவரே! இனிமேலும் காத்திருப்பீரென்று புத்தியில்லாமல் எண்ணி நான் பாவவழியில் நிற்க மாட்டேன். இதோ! நான் என் நிர்ப்பாக்கியத்தையும் எனக்கு வர இருந்த ஆபத்தையும் அறிந்து, தாமதமின்றி உம்மைத் தேடி வருகிறேன். சுவாமீ, என் மனதை ஸ்திரப்படுத்தும். உமது விசேஷ அநுக்கிரக உதவியைத் தந்தருளும். எனக்கு இன்னும் மீதியாயிருக்கிற நாட்களை எல்லாம் உமது ஊழியத்திலேயே நான் செலவழிப்பேன். ஓ மரியே! பாவிகளின் தஞ்சமே! இதோ உம்மைத்தேடி உமது அடைக்கலத்தில் வரும் இந்தப் பெரும் பாவியை கிருபையாய்ப் பார்த்து, நான் தாமதமின்றி மனந்திரும்பி சேசுநாதரிடத்தில் வந்துசேரும்படியாய் எனக்காக உம்முடைய தேவகுமாரனிடத்தில் மன்றாடுவீராக. ஆமென் சேசு.

இரண்டாம் நாள்—முதல் தியானம்

மூன்றுவகைப் பாவம்

சமஸ்த ஞான சுரூபியான சர்வேசுரன் மனிதர்களைத் தமது சாயலாக உண்டாக்கச் சித்தமானபோது, அவர்கள் தம்மை ஸ்துதித்து வணங்கி, தமக்கு ஊழியஞ்செய்து அதனால் தங்கள் ஆத்தும இரட்சணியமடையத் தீர்மானித்தார். ஆகையால் சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்பவன் தன்னை இரட்சிப்பவன். ஊழியஞ் செய்யாதவனோ, சர்வேசுரனை விரோதிப்பவன். அவன் விரோதித்துச் செய்யும் துர்ச்செய்கையே பாவமென்று சொல்லப்படும்.

சர்வவல்லப சர்வேசுரனை விரோதிக்கும் துர்ச்செய்கையாகிற பாவம், எவ்வளவு விஷம்நிறைந்த செய்கையென்றும், அந்தச் செய்கையைச் சர்வேசுரன் எவ்வளவு பகைக்கிறாரென்றும், அதைத் துணிந்து செய்பவர்களை எப்படி கடினமாய்த் தண்டிக்கிறாரென்றும் நன்றாய் மனதில் சார உணர்வது மகா அவசியம். பாவத்துக்குள்ள விஷமும், தோஷமும், அதற்கு வரும் ஆக்கினையும் எம்மாத்திரம் என்று நீங்கள் அறிந்தால் பாவத்தை வெறுத்துப் பகைப்பீர்கள். இதுமட்டும் செய்த பாவங்களுக்காக மனஸ்தாபப்படுவீர்கள். இனி பாவத்துக்குப் பயந்து அதைச் செய்யாதபடி பிரயாசப்படுவீர்கள்.

இந்தச் சுகிர்த பலன் அடையும்படியாக, சம்மனசுகளும், ஆதித்தாய் தகப்பனும் செய்த முதல் பாவத்தைப் பற்றி இந்த தியானப் பிரசங்கஞ் செய்யப்போகிறோம். நீங்கள் இதைக் கவனமாய்க்கேட்டு, கேட்டதின்பேரில் மனதில் நன்றாய் யோசித்தால், பாவத்தின்பேரில் பயமும் பகையும் உங்கள் மனதில் பிறக்கும். இந்த இரண்டாம் நாள் தியானங்களின் பிரயோசனமிதுதான். ஜென்மப் பாவத்தின் தோஷமின்றி, அமலோற்பவமாய் வந்த தேவ ஆண்டவள் நமக்குத் துணையாய் முன் நிற்பாளாக.

முதல் பாகம்

தம்மிலே தாமாயிருந்து சகல நன்மை பாக்கியம் யாவும் சம்பூரண்மாய் நிறைந்த சர்வேசுரன் தமது அளவில்லாத வல்லமை, ஞானம், தயாளம், நீதி முதலிய தேவ இலட்சணங்கள் வெளியில் தோன்றி விளங்கும்படி சித்தமாகி, ஆதியிலே, அசரீரிகளாகிய கோர்டானகோடி சம்மனசுகளைச் சி ரு ஷ் டி த் தா ர். இவர்கள் சிருஷ்டிகளுக்குள்ளே மகா சிரேஷ்டம்பெற்ற, ஜேஷ்ட புத்திரர். இவர்களுக்கு மனிதருக்கிருப்பதுபோல சரீரமில்லை; ஆனால் அசரீர சுபாவ இலட்சணங்களும், தேவ இஷ்டப்பிரசாதமும் நன்கு அமையப்பெற்றவர்கள். தெளிந்த ஞானம், விரிந்த அறிவு, தீட்சண்ய புத்தி, இவை முதலிய மனோதத்துவ இலட்சணங்கள் இவர்களிடத்தில் மகா சிறந்த விதமாய் இருந்தன. இவர்கள் மனது மாசற்றதாயும், நன்மைக்குச் சார்புள்ளதாயுமிருந்தது. இவர்களுடைய விருப்பமும் கருத்தும் பற்றுதலும் சகல நன்மை சுரூபியான சர்வேசுரனிடம் இயல்பாய் சார்ந்திருந்தன. சர்வ மகத்துவ சர்வேசுரனுடைய மந்திரிகளாய் அவர் சிம்மாசனத்துக்குமுன் சதாகாலமும் அநந்த பேரின்பபாக்கியம் அநுபவித்துவரும் படியாய் சிருஷ்டிக்கப்பட்டார்கள்.

இத்தனை கோடி சம்மனசுகளுக்கெல்லாம் அதிபதி தலைவனுய் **லூசிபேர்** என்ற அசரீரி எல்லா அரூபிகளினும் மேலாய்ச் சிறந்து விளங்கி மேலான நன்மை வரங்களால் அலங்கரிக்கப்பட்டு, வானமண்டலத்தில் வடிவுள்ள பிரகாசம் வீசும் நக்ஷத்திரம்போல் விளங்கினான்.

இந்த சம்மனசுகளைச் சர்வேசுரன் தேவ இஷ்டப் பிரசாத அந்தஸ்தில் உறுதிப்படுத்துமுன், இவர்களுக்கு மனஸ்வாதீனங்கொடுத்து, மோட்ச பதவியைப் பெறுவதற்கான பேறு இவர்களுக்கு உண்டாகும்படி செய்தார். இப்படியிருக்க, இவர்களில் மூன்றில் ஒரு பங்கு, தங்களுக்கிருந்த அதி உன்னத குணாதிசயங்களைக்கண்டு, கர்வங்கொண்டு, தாங்கள் சர்வேசுரனாலே சிருஷ்டிக்கப்பட்டவர்க

ளென்கிற ஆதிச் சத்தியத்தை மறந்து, வீண் பெருமை பாராட்டி, சர்வேசுரனுக்குத் தாங்கள் சமானமானவர்க ளென்று மனதில் எண்ணி: நாங்கள் இனி சர்வேசுரனுக் குக் கீழ்ப்படியோம், என்று அகங்காரம் பொங்கி மனதுக் குள் சொன்னார்கள்.

இப்படி மனதில் பெருமையாய் நினைத்த அதே க்ஷணத்தில், சர்வேசுரன், எங்கும் நிறைந்த சுடராய் நின்று, இருளினு மருளிலாதெல்லாவற்றையும் பார்த்து அறிபவராதலால், துரோகிகளான அசரீரிகள் தங்கள் மனதில் பாவத்தை நினைத்து முடித்த அதே நேரத்தில், தேவ கோப நீதியால் அக்கினி பிரளயம் நிறைந்த ஆக்கினை ஸ்தலமாகிற நரகத்தை சிருஷ்டித்து, தம்மை விரோதித்து எதிர்த்து கீழ்ப்படியோம் என்ற மூன்றிலொரு பெரும் பாகமான கணக்கில்லா அரூபிகளை நரக பாதாளத்திலே தள்ளி பசாசுகளாக்கினார்.

ஒரு நிமிஷத்துக்குமுன் மோட்சத்தில் சர்வேசுரன் சமூகமுன் சம்மனசுகளாய் சம்பூரண பாக்கியம் அநுபவித் தவர்கள், மறுநிமிஷத்தில் எல்லாம் இழந்து பசாசுகளாய் நரகத்தின் பாதாளக்குழியில் விழுந்தார்கள். இவர்கள் தாங்கள் செய்த பாவத்தின் கனம் இன்னதென்று அறிய வும், அதற்கு மனஸ்தாபப்படவும் நேரம் கொடாமல், அவர்கள் பாவத்தை மனதில் செய்து முடித்த க்ஷணத் திலே மின்னுமல் விழும் கோடை இடிபோல், தேவ கோப நீதி இவர்கள் தலைமேல் விழுந்து நரகத்தில் இவர்களைத் தள்ளினது. இவர்களுக்குச் சடுதியில் உண்டான இந்த மாற்றத்தைப்பற்றி வேதவாக்கியம் அதிசயப்பட்டாற்போல: ஓ வானமண்டலத்தில் பிரகாசம் வீசிய நட்சத்திரங்களே! நீங்கள் எப்படி ஒளி மங்கி இடம் பெயர்ந்து கீழே விழுந்தீர்கள்? என்று கேட்கின்றது.

இந்த துஷ்ட அரூபிகள் செய்த பாவமோ, ஒரே ஒரு பாவந்தான். அதுவும் முதல் பாவம். அந்த முதல் பாவமும் மனதால் மாத்திரஞ் செய்த பாவம். இந்த ஒரே பாவத்துக்காக அவர்கள் நரகத்தில் விழுந்தார்கள்.

இப்போது நரகத்தில் வேதனைப்படுகிறார்கள். இன்னும் நித்தியகாலமட்டும் நரக நெருப்பிலே ஆக்கினைப்பட்டு வேவார்கள். இவர்களுக்குச் சர்வேசுரன் இந்த ஒருவிசை மாத்திரம் பொறுத்தல் கொடுத்திருந்தால், இத்தனை ஆயிரம் அசரீரிகளெல்லாரும் மோட்சத்தில் சர்வேசுரனுக்கு நித்தியமான ஊழியஞ்செய்து, அவரைப் புகழ்ந்து வாழ்த்தி ஸ்துதித்திருப்பார்கள்.

அநந்த நீதியுள்ள சர்வேசுரன் அத்தனை லட்சம் பேர்கள் தமக்கு முந்திச் செய்த ஊழியத்தையும், இனிமேல் செய்யக்கூடுமான ஊழியத்தையும் பாராமல், பாவத்தை அவர்கள் செய்த க்ஷணமே, பாரபட்சமின்றி, அவர்களை நரகத்திலே தள்ளினார்.

சகோதரரே! இந்தப் பயங்கரமுள்ள வர்த்தமானத்தைச் சற்றுக் கவனமாய் யோசித்தால், எவன் சர்வேசுரனுடைய பயங்கரமான நீதியைக்கண்டு பயந்து நடுநடுங்காமலிருப்பான்? எவன் சர்வேசுரனை விரோதித்து பாவஞ் செய்யத் துணிவான்? தமது மோக்ஷ அரமனையில் மந்திரி பிரதானிகளாயிருந்த செல்வ ஜேஷ்ட புத்திரர்களை இப்படி தாக்ஷணியமின்றித் தண்டித்தால், அற்ப மனிதனைத் தண்டியாமல் விடுவாரோ? நீங்கள் செய்த பாவங்களையும் இந்த அரூபிகள் செய்த பாவத்தையும் சற்று சீர்தூக்கி ஒப்பிட்டு பாருங்கள். ஆ! எவ்வளவு பாரதூர வித்தியாசமிருக்கின்றது? அவர்களா, ஒரே ஒரு பாவம், அதையும் மனதால் மாத்திரம் செய்தார்கள். நீங்கள் செய்த பாவங்களுக்கோ மட்டுமில்லை அளவுமில்லை. உங்கள் ஜீவிய நாட்களில் பாவமில்லாத நாள் ஏதாகிலுமுண்டா? இந்தப் பாவங்கள், மனதால் மாத்திரமோ? வார்த்தையாலும் செய்கையாலும் உண்டான பாவங்கள் பெருமலைபோல் உங்கள் கண்முன் வளர்ந்து நிற்கிறதை நீங்கள் பார்க்கிறதில்லையா? முதல் விசை புத்தி அறிவு வந்தபின் ஒரு பாவத்தைச் செய்தது போதாதென்று அதே பாவத்தை எத்தனைவிசை செய்திருக்கிறீர்கள்? அரூபிகள் செய்யும் பாவம் விஷமுள்ளது. மனிதன் செய்யும் பாவம் விஷமற்றது என்று எண்ணு

கிறீர்களோ? அரூபிகளை மாத்திரம் சர்வேசுரன் தண்டிப்பார் மனிதனைத் தண்டிக்கமாட்டாரோ?

ஓ! சகோதரரே! பாவத்தை யார் செய்தாலும், பாவம் எப்போதும் பாவம். பாவம் எப்போதும் சர்வேசுரனுக்குத் துரோகமான செய்கை. பாவத்தை சர்வேசுரன் எப்போதும் தண்டிப்பார். ஆகையால் அரூபிகளைப் பாவத்துக்காகத் தண்டித்த சர்வேசுரன், பாவஞ் செய்யும் மனிதர்களையுந் தண்டிப்பாரென்பது நிச்சயம். அவருடைய நீதி கோணாத நீதி. எல்லாருக்கும் ஒரே அளவு. பாரபட்சம், ஓரவஞ்சனை, முகநட்பு அவரிடமில்லை.

ஆனால் சிலர், நான் செய்தது ஒரே ஒரு பாவமாத்திரம். நானோ, இவன் அவனைப்போல் பாவத்தில் பழகுகிறதில்லை, என்று சொல்வார்கள். ஒரே ஒரு பாவந்தானோ? இருக்கட்டும், ஒரே ஒரு நாகப்பாம்பு உன்னைத் தீண்டினாலும், ஒன்பது நாகம் தீண்டினாலும் விஷம் விஷந்தானே. துஷ்ட அரூபிகள் செய்ததும் ஒரே ஒரு பாவமல்லவா? ஒரே ஒரு பாவமானாலும் சர்வேசுரன் அவர்களை நித்திய ஆக்கினையால் இன்னும் தண்டிக்கிறார். ஆனதால் ஒரே ஒரு பாவந்தான் நான் செய்தேனென்று சொல்லி உன் பாவத்தின் கனத்தை குறைக்காதே. ஆனால் நான் பழைய கிறீஸ்துவன்; நேற்று முந்தை நாள் மனந்திரும்பினவன் அல்ல. என் தாதை மூதாதை சத்தியவேத விர்த்திக்காக வெகுவாய்ப் பிரயாசைப்பட்டு உழைத்திருக்கிறார்கள். அநேக தர்மங்கள் செய்திருக்கிறார்கள். கோவில் கட்டியிருக்கிறார்கள்; நானும் கோவிலுக்காக நிலம் பூமி சர்வமானியமாய் விட்டிருக்கிறேன். சத்திரங்கள் பல இடங்களில் கட்டியிருக்கிறேன். ஏழைகளுக்கு வருஷா வருஷம் அன்னதானங் கொடுக்கிறேன். திருநாள் உற்சவங்கள் என் கைச் செலவில்தான் நடக்கின்றது. என் முயற்சியாலேதான் தேவாலயச்சிறப்பும், திருநாட்களின் ஆடம்பரமும், குருக்களின் சம்ரக்ஷணையும் சீராய் நடந்துவருகின்றது. இன்னும் சர்வேசுரன் எனக்கு தீர்க்காயுசும் ஐஸ்வரியம் கொடுத்தால் கோவிலுக்காக நிரம்பவும் செய்யக் காத்திருக்கிறேன் என்று சில கிறீஸ்துவர்கள் தாங்கள்

செய்த ஊழியத்தைப் பிரமாதமாய் மதித்துப்பேசி இதின் நிமித்தம் மிதந்தப்பின நம்பிக்கைக்கொண்டு சர்வேசுர னுடைய கற்பனைகளையும், திருச்சபையின் சட்டத்தையும் மீறி நடப்பார்கள்.

கிறீஸ்துவனே! நீ சர்வேசுரனுக்காக ஏதோ வெகு வாய் செய்ததுபோல் மதங்கொண்டு வீணாய்ப் புலம பாதே! சம்மனசுகள் தமக்கு பலகாலம் செய்த ஊழியத் தையும், இனி அவர்கள் நித்திய காலஞ் செய்யக்கூடுமான ஊழியத்தையும், சர்வேசுரன் பாராமல் அவர்களை உடனே தண்டித்தாரல்லவா? ஏன்? ஏனென்றால், எவனுடைய ஊழியமும் சர்வேசுரனுக்கு அவசியமோ? உன் பணமும் காசும் சர்வேசுரனுக்கு நீ படைப்பதால், உன் இஷ்டம் போல் சர்வேசுரனை நீ நிந்திக்கலாமென்றோ எண்ணு கிறாய்? எத்தப் பிச்சைக்காரனும், உன்னிடத்திலிருந்து அரைககாசு தர்மமாய் வாங்கும்படியாக, நீ அவன் முகத் திலே காறி உமிழும்படி சம்மதிப்பானோ? ஆ! ஆ! நீ சர்வேசுரனை யாரென்று எண்ணுகிறாய்? மோசம் போகாதே. சர்வேசுரன் பாவத்தை சர்வ பகையோடு பகைக்கிறார். பாவஞ்செய்கிறவன், யாராயினும் சரி, அதி உன்னத அசரீரியாயிருந்தாலும் அவனைத் தண்டிப்பார். இதை நன்றாய் மனதில் வைத்துக்கொள். நான் இதை அதைச் செய்தேன், நான் இதை அதை இனிச் செய் வேன் என்று சர்வ ஞான சுரூபியான சர்வேசுரனை மயக்கி உன் பக்கம் இணக்கலாமென்று கனவிலும் நினையாதே. பாவம் இன்னதென்றும், சர்வேசுரன் அதை எவ்வளவு பகைக்கிறார் என்றும் இப்போது அறிந்தாய். பாவம் எப்படி வருமென்று இரண்டாம் பாகத்தில் அறிவாய். கவனமாய்க் கேள்.

இரண்டாம் பாகம்

சர்வேசுரன் அசரீரிகளாகிய சம்மனசுகளைச் சிருஷ் டித்தபின்பு, சரீரமுள்ள மானிட ஜென்மத்தை சிருஷ்டிக் கச் சித்தமானார். ஆதியில் ஆதாம் ஏவை என்ற இரு

வரைத் தமது சாயலாக உண்டாக்கி, பூலோக பரகதி யென்ற சிறந்த சிங்காரத் தோட்டத்தில் இவர்களை வைத்தார். இவ்விருவரையும் தேவ இஷ்டப்பிரசாத வரத்தால் தமது பிள்ளைகளாக்கி அவர்களுக்குச் சுபாவ நன்மைகளும் சுபாவத்துக்கு மேலான நன்மைகளும், ஆசை அளவுக்கு மேலாய் தாராளமாய்க் கொடுத்து கனப்படுத்தினார். இவர்களுக்குத் தெளிந்த அறிவும் சிறந்த மனதும் இருந்தது. சரீரத்தின் ஐம்புலன்கள் யாவும் புத்திக்கு அமைந்ததும், புத்தி தேவ சித்தத்துக்கு கீழ்ப்பட்டதுமாய் இருந்தது. அவர்களுடைய ஆசை பற்றுதல், பிரியம் எல்லாம் கிரமமாயிருந்தன. மனதில் பூரண சமாதானம் நிலையாயிருந்தது. இவர்கள் உலகிலுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் எஜமான்களாய் மேன்மை பெற்றிருந்தார்கள்.

சர்வேசுரன் இவர்களுக்குத் தரிசனமாவார். அவரோடு பிள்ளைகள் தங்கள் தகப்பனுடன் கலந்து பேசுவது போல, இவர்கள் பேச அவரும் முகங்கொடுத்து அன்பாய் பேசுவார். சர்வேசுரன் தாமே இவர்களுக்கு ஆதி கர்த்தரான ஆண்டவரென்றும், அவருக்குப் பணிந்து நடந்தால மாத்திரம் இந்தப் பாக்கிய அந்தஸ்தில் நிலைநிற்பார்களென்றும் இவ்விருவருக்குங் காண்பிக்க, அந்தத் தோட்டத்தில் வளர்ந்திருந்த பல மரங்களில் ஒன்றைக் காட்டி அதன் கனியைச் சாப்பிட வேண்டாமென்று கற்பித்து, அப்படிச் சொல்லை மீறிச் சாப்பிட்டால், சாகவே சாவீர்கள் என்று தெளிவாய்ச் சொல்லியிருந்தார்.

இப்படியிருக்கும்போது, மோட்சத்தைவிட்டு துரத்தப்பட்ட பசாசு கர்வங்கொண்டு தான் இழந்த மோட்ச பாக்கியத்தை நீசமனிதர் அனுபவியாதபடி தடுக்கவேண்டுமென்று, பாம்பின் வேஷம் எடுத்து வந்து, ஆதி மனுஷியை நோக்கி: "சிங்கார வனத்திலுள்ள எல்லா விருட்சத்தின் கனிகளைப் புசிக்கவேண்டாமென்று கடவுள் ஏன் உங்களுக்குக் கற்பித்தார்" என்று கேட்டது. அதற்கு ஏவை: "சிங்கார வனத்திலுள்ள மரங்களின் கனியைப் புசித்தே வருகிறோம். ஆனால் வனத்தின் நடுவேயிருக்

கும் விருக்ஷத்தின் கனியை நாங்கள் புசிக்கவும்படாது தொடவும்படாது, தீண்டினால் செத்துப்போவோமென்று கடவுள் கட்டளையிட்டிருக்கிறார்" என்று பதில் உரைத்தாள். சர்ப்பமோவென்றால் ஸ்திரீயைப்பார்த்து: "நீங்கள் பரிச்சேதம் சாகவே சாகமாட்டீர்கள், நீங்கள் என்றைக்கு அக்கனியைப் புசிப்பீர்களோ அன்று உங்கள் கண்கள் திறக்கப்பட்டு, நன்மை தின்மை அறிந்து தேவர்களைப் போலிருப்பீர்களென்று சர்வேசுரனுக்குத் தெரியும்"* என்று சர்ப்பரூபமாய் வந்த வஞ்சகப் பசாசு இங்கிதமாய்ச் சொல்லிற்று. அதினால் மதிமயங்கிய ஏவை விலக்கப் பட்ட கனியின்மேல் ஆசைகொண்டு அதைப் பறித்துப் புசித்தாள். தான் புசித்ததும் போதாமல் தன் புருஷன் ஆதாமுக்கும் கொண்டுபோய்க் கொடுத்தாள். ஆதி மனிதனும் அதை வாங்கிப் புசித்தான். இருவரும் தேவ கட்டளையை மீறிப் பாவம் செய்தார்கள்;—தேவ இஷ்டப் பிரசாதத்தையிழந்து பாவிகளானார்கள்.

சர்வேசுரன் இருவரையும் அவர்களோடு மனுஷ ஜென்மத்தையும் சபித்தார். அவர்களுக்குக் கொடுத்திருந்த சுபாவத்துக்கு மேலான தேவவரங்களைப் பறித்துக் கொண்டு, தோட்டத்தை விட்டு வெளியே துரத்தி அவர்கள் திரும்பி உள்ளே வராதபடி உருவின வாளேந்திய தேவ தூதனைக் காவலாக தோட்டத்தின் வாசலிலே நிறுத்தினார். பாவம் இவ்விதமாய் உலகத்தில் ஆதி முதலில் வந்தது. பாவத்தோடு அதின் துணைகளும் பரிவாரமுமாகிற சாவும் நோவும், துன்பமும் துயரமும், கவலையும் கண்ணீரும், சண்டையும் யுத்தமும், அநியாயமும் அக்கிரமமும், பெரும் வெள்ளம்போல் உலகத்தில் மொய்த்தன. மோக்ஷம்போலிருந்த இந்தப் பூமி, கண்ணீர் கணவாயாய் மாறினது. மனிதன் சுபாவமே கெட்டுப்போனது. பஞ்சேந்திரியங்கள் புத்தியை விரோதித்து, நன்மை செய்ய வெறுப்பும், தீமை செய்ய ஆசையும் மேலிட்டு, நித்தம் யுத்த போராட்டமாய் நிற்கின்றது. மானிட ஜென்மம்

* ஆதியாகமம் 3-ம் அதி.

மாசுபட்டுக் கெட்டுப்போனது. நாம் இதைக் கண்ணுல் பார்த்து பட்டறிந்து வருகிருேம். பிள்ளை பிறக்கும்போதே அழுதுகொண்டு பிறக்கின்றது.

சகோதரரே! இத்தனை நிர்ப்பாக்கிய துன்பத்துக்கெல்லாம் காரணம் யாது? ஒரே ஒரு பாவம். அப்படியாஞல் பாவத்துக்கு எவ்வளவோ தோஷமும் விஷமும் இருக்கவேண்டும். இந்தப் பாவம் உலகத்தில் ஆதி முதலில் வரும்போது அதற்குண்டாயிருந்த பல விஷயங்களை ஆராய்ந்து பார்க்கலாம். அதே விஷயங்களை இன்னமும் நீங்கள் செய்யும் பாவங்களில் காண்பீர்கள். பாவம் வரும் வழி இன்னதென்று அறிந்தால் அது வாராதபடி வழியை அடைத்துத் தடுக்கலாம்.

ஆதித் தாயாகிய ஏவை இங்கும் அங்கும் போய் எல்லாம் பார்க்கவேண்டுமென்கிற விநோதப் பிரியத்தால் தன்னந்தனியே புறப்பட்டாள். பாவத்துக்கு இதுதான் பிரதான வழி. வீட்டில் தங்கியிருந்து தன் வேலையைக் கவனித்து செய்வது அநேகம்பேர்களுக்கு மகா வருத்தம். வெளியே போய் சுற்றித் திரிந்து நடக்கிறதெல்லாம் பார்க்கவேண்டும். எல்லாரையும் பார்த்து எல்லாருக்குந் தன்னைக் காட்டவேண்டும். எங்கே ஜனசந்தடி, எங்கே சண்டை இரைச்சல், எங்கே கூத்து வேடிக்கை, எங்கே நாடகம் நடனம் இருக்கின்றதென்று விசாரித்து அங்கே போவார்கள். இந்தக் கூட்டங்களிலெல்லாம் பசாசு தன்னை மறைத்து வேஷமெடுத்துக் காத்துக்கொண்டிருக்கிறது. உங்களுக்கு இது நன்ருய்த் தெரியும். முன்னெரு விசை அங்கே போனீர்கள். விலக்கின பழத்தை சாப்பிட்டீர்கள். சர்வேசுரன் சத்தம் உங்கள் மனதில் சத்தித்தது. இதையெல்லாம் மறந்துபோய் திரும்பவும் அங்கே போகிறீர்கள். ஓ! காலம் எவ்வளவு கெட்டுப்போயிருக்கிறது! பெண்பிள்ளைகளும் சிறுவரும், தங்கள் இனத்துக்கு அலங்காரமான நாணத்தை மறந்து, ஊர் சுற்றிப்பார்க்கப்போய், பார்க்கத் தகாததை பார்த்தும், கேட்க யோக்கியமற்றதைக் கேட்டும், வீட்டுக்குத் திரும்பிவருகி

றார்கள். மகா ஞானி சலோமோன் சொல்லும் வேதவாக்கியத்தைக் கேளுங்கள். கண் பார்த்து திருப்தியடையாது, காது கேட்டபின் போதுமென்காது. ஆனதால் பார்த்து பார்த்து திருப்தி அடையலாம் என்று எண்ணினால் மோசம் போவீர்கள். பஞ்சேந்திரியங்களின் நாட்டத்தையும், விநோதப்பிரியத்தையும் அடக்குவது பாவம் வராதபடி தடுக்கும் முதல் வழியாகும்.

அன்றியும் ஆதி மனுஷன் பாவத்தை எவ்வளவு இழிவாய்ச் செய்தான் என்று யோசித்தால், பாவம் வரும் வேறொரு வழி இன்னதென்று அறிவீர்கள். சர்வேசுரன் விலக்கின கனியைச் சாப்பிடுவது தகாதென்று அவனுக்கு நன்றாய்த் தெரிந்திருந்தது. தெரிந்தும் தன் பெண்சாதி சாப்பிடச் சொன்னதால், அவளுக்குப் பயந்தோ, அவள் பிரியத்தைப்பற்றியோ, வாங்கிச் சாப்பிட்டான், மறுத்து கண்டித்துப்பேச அவனுக்கு நாவெழவில்லை.

எத்தனையோ ஆண்பிள்ளைகள் வெளியில் வீரசூரர் போல தாண்டிக் குதித்துப் பேசுவார்கள். வீட்டிலே ஓர் பெண்பிள்ளை சொல்லும் நயவஞ்சக வார்த்தையைக் கேட்டு, அவள் பார்வையால் மயங்கி, வலையிற் சிக்கி, மனத் துணிவில்லா கோழைகளாய், தங்கள் சுய புத்தி யுக்தியைக் காலில் மிதித்து, செய்யத்தகாத காரியத்தைச் செய்து, நஷ்டப்பட்டு நாணமிழந்து, நாலுபேர் சிரிக்க, பழிச்சொற் குட்பட்டு, சீரழிந்து ஊரெல்லாம் இவன்தான் அவன் என்று சுட்டிக்காட்ட நடந்துவருகிறார்கள். சில பட்டணங்களிலும் ஊர்களிலும், கிறீஸ்துவர்களின் சபையில் ஆவலாதியும் அயோக்கியமுமுள்ள சங்கதிகள் இருப்பதற்குக் காரணமென்ன? ஏன் சில குடும்பங்கள் ஓர்காலத்தில் நன்றாய்ச் செல்வமாயிருந்தவர்கள் இப்போது பாழாய்க் கிடக்கின்றன? ஏன் சில வீடுகளில் சண்டையும் மனஸ்தாபமும் ஓயாமல் குடும்பப்பூர்வமாய் வளர்ந்து வருகின்றன? ஏன் என்று வீட்டிலுள்ள பெரிய மனுஷனைக் கேள். வீட்டிலிருக்கும் இவனும் அவனும் பரம துஷ்டர். ஓர் பெண்பிள்ளைக்கு அடிமைப்பட்டு அவளுக்குத்

தொண்டுசெய்கிறார்கள். அவள் சொல்லைக்கேட்டு அக்கிரமஞ் செய்கிறார்கள். இதினாலே இவ்வளவு துன்பமுண்டாகின்றதென்று சொல்லுவான்.

சகோதரர்களே! என்றும், எங்கும் தன் புத்தி ஸ்வாதீனமுள்ள மனிதனைப்போல் நடக்கவேண்டுமேயன்றி, அடிமையைப்போல் பெண்பிள்ளையின் இங்கித வார்த்தையை நம்பி, மதிகேடனாய் நடக்கக்கூடாது. சர்வேசுரனுடைய கட்டளைப்பிரகாரம் உங்கள் மனச்சாக்ஷியின் சொல்லைக்கேட்டு யோக்கியமாய் நடப்பது, அதுதான் புருஷோத்மம். அதுதான் மனுஷனுக்கு உரிய இலக்ஷணம்.

ஆதி மனுஷர் செய்த பாவத்தில் கவனிக்கவேண்டிய இன்னம் ஒரு விசேஷமிருக்கிறது. இவர்கள் பாவத்தை அறிந்த சர்வேசுரன் இருவரையுங் கூப்பிட்டு, தமது சமுகமுன் நிறுத்தி, விசாரணை செய்து ஏன் இப்படி நமது கட்டளையை மீறினீர்களென்று கேட்கும்போது, இருவரும் ஆண்டவர் பாதத்தில் விழுந்து: "சுவாமி! நாங்கள் புத்தியில்லாமல் செய்தோம். எங்களைச் சிருஷ்டித்த தகப்பனே! எங்களைப் பொறுத்துக்கொள்ளும். முதல்விசை இது. இனிமேல் எச்சரிக்கையாய் நடப்போம்" என்று சொல்லாமல், ஒருவர்மேலொருவர் குற்றஞ்சாட்டி, ஆதாம், ஏவை தன்னை ஏய்த்தாளென்றும், ஏவை, பசாசு தன்னை ஏய்த்ததென்றும், இப்படியாய் வீண்போக்குச்சொல்லி செய்த குற்றத்தை அங்கீகரிக்கவில்லை. கிறீஸ்துவர்களும் இப்படியே செய்துவருகிறார்கள். தன்மேல் தான்செய்த குற்றத்தைச் சாட்டி, நான் இந்தப் பாவத்தைச் செய்தேன் என்று சொல்பவர்கள் வெகு சொற்பப்பேர். பிறர்மேல் பழியைச் சுமத்துபவர்கள் அனந்தம்பேர். நான் ஒன்றும் அறியேன்: அவன்தான் செய்தவன்; அவள்தான் கெடுத்தவள் என்று எல்லார் வாயிலும் சகஜமாய் வரும். இது வெகு நீசமான செய்கை. தப்பிதஞ்செய்தபின் அதை நல்ல மனசோடு அங்கீகரித்து, நான்தான் இதைச் செய்தவன் என்று சொல்வது கௌரவ நிறைந்த

மனதின் குணம். பெரியோர் தன்மை. மனிதன் எவ்வளவு துர்ப்பலனுள்ளவனென்று சர்வேசுரன் அறிந்திருக்கிறார். பாவத்தை நீ செய்தபின் அவர் பாதத்தில் விழுந்து உன் தப்பிதத்தை அங்கீகரித்து தாழ்மையாய்ப் பொறுத்தல் கேட்கும்போது அவர் தப்பாமல் பொறுத்தல் உனக்குக் கொடுப்பார். வானத்திலிருந்து விழும் மழை தாழ்ந்த நிலத்தில் ஓடி விழுமேயன்றி உயர்ந்து எழும்பிய பூமியில் ஏறுமா?

மூன்றும் பாகம்

ஆதிமனுஷன் செய்த பாவத்தையும், பாவத்தோடு கூடிய விஷயங்களையும், பாவத்துக்காக அவனுக்கும், மனுஷ சந்ததியார் எல்லாருக்கும் வந்த துன்ப நிர்ப்பந்தங்களையும் இரண்டாம் பாகத்தில் யோசித்தீர்கள். பாவம் எவ்வளவு தீமை உள்ளதென்று உங்களுக்கு கொஞ்சமாகிலுந் தெரியவேண்டும். இன்னம் பாவத்தின் தோஷத்தை அறியும்படி பின்வரும் சங்கதியைக் கவனமாய்க் கேளுங்கள். ஒரு மனிதன் பாவமின்றி பல வருஷம் நடந்தவன், ஒருநாள் நிர்ப்பாக்கியமாய் ஓர் சாவான பாவத்தைச் செய்தான். செய்தபின் பொறுத்தலடையுமுன் செத்தான். இப்போது நரகத்தில் நித்திய ஆக்கினை அநுபவிக்கிறான். இது எவ்வளவு பயங்கரமுள்ள சங்கதி! பாவத்தைச் செய்யுமுன் அவன் தேவ இஷ்டப்பிரசாதம் உள்ளவனாய், சர்வேசுரனுடைய பிள்ளையாய், மோக்ஷ சுதந்தரம்பெற்றவனாயிருந்தான். பேறுபலன்கள் நிறைந்தவனாயிருந்தான். ஒரே ஒருவிசைமாத்திரம் சாவான பாவத்தைச் செய்தான். மனஸ்தாபப்படுமுன் மரணமும் வந்துவிட்டது. தேவநீதியின் கோபம் இடிபோல் அவன் தலைமேல் விழுந்தது. அந்த ஆத்துமம் இப்போது நரகத்திலிருக்கிறது. நித்தியகாலம் நரகத்தில் துன்பம் அநுபவிக்கும். பாவம் செய்வதற்கு ஒரு நிமிஷத்திற்குமுன் அவன் செத்திருந்தால் அவனுடைய ஆத்துமம் சர்வேசுரனுடைய சமுகத்தில் சம்மனசுகளுடன் ஒன்றாய் நித்தியகாலம் சகல பேரின்ப பாக்கியம் அநுபவித்திருக்கும். மறு நிமிஷமட்

டும் உயிரோடிருந்து பாவத்தைச்செய்து மனஸ்தாபமின்றி செத்தான். செத்தவன் நரகத்தில் விழுந்தான்.

ஏன்? ஏனென்றால் சாவானபாவம் அந்த ஒரே நிமிஷத்தில் அவன் ஆத்துமத்தில் விழுந்தது. விழுந்தவுடனே, பசாசுக்கடிமையானான். பசாசு தனக்கடிமையானவனை நரகத்துக்கு இழுத்துக்கொண்டுபோக சர்வேசுரன் விட்டுவிட்டார். ஆ! சர்வேசுரனுடைய நீதியின் அகோரத்தை நினைக்கும்போது யார் பயந்து நடுங்கமாட்டான்?

கிறீஸ்துவனே! நீ முதல் சாவானபாவஞ் செய்து இப்போது எத்தனை வருஷமாகின்றது? அந்த முதல் பாவத்தை நீ செய்த க்ஷணத்திலே உன்னை சர்வேசுரன் ஏன் நரகத்தில் தள்ளவில்லை? பல நூறு பேர்களுக்குக் காட்டாத சிநேகமும் இரக்கமும் உனக்குமாத்திரம் காட்டும்படி நீ சர்வேசுரனுக்கு என்ன செய்தாய்? அந்த முதற் பாவத்தோடாவது போதுமென்று நின்றாயா? இரண்டாம் விசை, மூன்றாம்விசை பாவத்தை நீ செய்தபிற்பாடாவது உனக்கு புத்திவந்ததா? ஆ! பாதகா! உன் சிறு பிராயத்திலும், வாலிப வயதிலும், முதிர்ந்த பிராயத்திலும், நீ செய்த பாவங்கள் எத்தனை என்று கணக்கிட உன்னால் கூடுமா? நீ எத்தனைவிசை சாவான பாவத்தைச் செய்தாயோ அத்தனை விசையும் நரகத்துக்குப் போகவேண்டியவன். அத்தனை விசையும் நல்ல அதிர்ஷ்டமாய் நரகவாயிலிருந்து தப்பி ஓடிவந்தவன். இதை நினைத்து சர்வேசுரன் முன் சாஷ்டாங்கமாக விழுந்து கண்ணீர் சிந்தி பின்வருமாறு பிரார்த்திப்பாயாக:

ஓ என் சர்வேசுரா! அந்த நாளிலே நான் சாவான பாவஞ்செய்த க்ஷணத்திலே என்னை உமது நீதி சிம்மாசனத்தின் முன் நிறுத்தித் தீர்ப்பு சொல்லியிருந்தால் நான் இப்போது சபிக்கப்பட்ட நரகத்திலே பசாசுகளோடு இருக்கவேண்டும். அங்கே எவ்வளவு கண்ணீர் சிந்தினாலும் பலன் ஒன்றுமிராது. ஆனால் தேவரீர் என்மேல் தயவாயிருந்து என்னை இதுமட்டுங் காப்பாற்றினீர். இன்

ணம் நான் பூமியிலிருக்கிறேன். இங்கே நான் என் பாவங்களுக்காக சிந்துங் கண்ணீர் பிரயோசனமுள்ள கண்ணீர். இதோ என் கண்ணீரை ஏற்றுக்கொள்ளும். இனி நான் பாவத்தைச் செய்யமாட்டேன். உமது நீதியின் கோபத்தை இனிமேலும் தூண்டி எழுப்பமாட்டேன். இதுமட்டும் புத்தியில்லாமல் நான் நடந்தது போதும். எனக்கு இனி மீதியாயிருக்கும் நாட்களை உமக்குப் பிரமாணிக்கமாய் ஊழியஞ்செய்வதில் செலவழிப்பேன். இதுவே என் மாறாத தீர்மானம். ஓ தேவ மரியே! பாவிகளின் தஞ்சமே! என் மனதை ஸ்திரப்படுத்தும்படி உம்மை நான் கெஞ்சி மன்றாடுகிறேன். ஆமென்சேசு.

விபரம். இந்தத் தியானத்துக்குப் பின்னும் இனி வரும் தியானங்களுக்குப் பின்னும், பின்வரும் ஜெபங்களைக் கூடியமட்டும் முழங்காலிலிருந்து செய்வது ஒழுங்கு. முதல் ஜெபத்தில்: பரலோக ஆண்டவளும் நம்முடைய இரக்ஷகரின் தாயுமான தேவ கன்னிமரி, தமது திருக்குமாரனிடம் மன்றாடி, மூன்று வரங்களைக் கேட்கும்படி அவளைப் பிரார்த்திப்பாயாக. முதலாவது நமது பாவங்கள் இவையென்று நாம் நன்றாய் அறிந்து அவைகளைப் பகைக்கவும், இரண்டாவது நமது நடத்தையை ஒழுங்காய் சீர்திருத்தி சர்வேசுரனுடைய சித்தப்பிரகாரம் நடக்கவும், மூன்றாவது உலகத்திலிருக்கும் பாவாக்கிரமங்கள் எவ்வளவென்று அறிந்தபின், அந்த உலகத்தையும் அதின் வீண் கோலத் தோற்றத்தையும் முழுதும் பகைத்து வெறுக்கவும் ஆகிய இந்த மூன்று விண்ணப்பங்களைச் செய்வது முறை. இது முடிந்ததும் **பிரியதத்த மந்திரஞ்** சொல்.

அதன்பின் சேசுநாதரிடத்தில் இதே மூன்று மன்றாட்டுகளைக்கேட்டு **கிறீஸ்துவின் ஆத்துமமானதே** என்ற ஜெபம் சொல். கடைசியில் பிதாவாகிய சர்வேசுரனிடம் இந்த மூன்று விண்ணப்பங்களைச்செய்து முடிவில் **பரமண்டல மந்திரம்** சொல்.

இரண்டாம் நாள்—இரண்டாம் தியானம்

ஒவ்வொருவரும் தானே செய்த பாவங்கள்

கொன்ஸ்தந்திநோப்புலி பட்டணத்திலிருந்த அரசன், அந்நகரத்தின் மேற்றிராணியாரான கிரிசோஸ்தோம் என்பவர், தன் இஷ்டப்பிரகாரம் எதையும் செய்யாதபடி எப்போதுந் தடுக்கிறுரென்று விசனப்பட்டு, ஒருநாள் தன் மந்திர ஆலோசனை சங்கத்தாரை அழைப்பித்து: மந்திரிகளே! அந்த கிரிசோஸ்தோம் மேற்றிராணி என் காலில் தைத்த முள்ளைப்போல் எனக்கு எப்போதுந் துன்பஞ் செய்கிறுன். இவன் கர்வத்தை அடக்கும்படி வழியில்லையா? என்று கேட்டான். அதற்கு மந்திரிகளிலொருவன்: அரசனே! சுலபமான வழி ஒன்று உண்டு. அந்த மேற்றிராணியைப் பிடித்து, கைகாலில் விலங்கிட்டு சிறையில் அடைத்தால் அவன் கர்வமெல்லாம் அடங்கிப்போகுமே, என்று சொன்னுன். வேறொரு மந்திரி: அரசனே! நான் ஒரு வழி காண்பிக்கிறேன். அவனைப் பிடித்துக் கப்பலிலேற்றி பிறதேசத்துக்கு அனுப்பிவிட்டால் அவன் வாய்க்கிருது நின்றுபோம், என்று சொல்ல, மூன்றும் மந்திரி: மகா இராஜ! இந்த உபாயங்களெல்லாவற்றையும் பார்க்க நான் சொல்லுவதுதான் உத்தமமானது. கிரிசோஸ்தோம் தலையை வெட்டிக் கொன்றுபோட்டால், சுடுகாட்டுப் பிணம் திரும்பாது என்றதால், அவன் ஆட்டமும் பாட்டமும் எல்லாம் அமர்ந்துபோகும். தாங்கள் கவலையின்றி வாழலாம், என்று இவ்விதமாய் ஒவ்வொருவனும் தன் தன் புக்திக்கேற்றவண்ணம் ஆலோசனை கொடுத்தான். அவர்களுக்குள் வெகு விருத்தாப்பியனும் புத்திசாலியுமான மந்திரி ஒருவன் கடைசியில் எழுந்து அரசனை வணங்கிச் சொல்வான்: மகா இராஜ! கிரிசோஸ்தோம் என்பவனைத் தண்டிக்கவேண்டுமானுல், இவர்கள் காட்டிய உபாயங்களெல்லாம் பலிக்காது. எப்படி என்று கேட்பீர்களோ? அவன் கைகாலில் விலங்கிட்டு, சிறையில் அடைத்தால், அவன் ஆனந்த பூரிப்புடன் விலங்கை எடுத்து முத்தி

செய்வான். பிறதேசத்துக்கு அவனை அனுப்பினுல், அவனுக்குப் பிறதேசமென்றும் தன்தேசமென்றும் வித்தியாசமில்லாததால், அவன் எங்கே போனுலும் சிறப்புப் பெறுவான். அவன் தலையை வெட்டினுல், ஜனங்களெல்லோரும் அவனை வேதசாட்சியாக வணங்கி வாழ்த்துவார்கள். அரசே! நீங்கள் பழிவாங்கும்படி செய்யவேண்டியது இதுவல்ல, இதற்கெல்லாம் மேற்றிராணி பயப்படான். நான் ஒன்று சொல்லுகிறேன், கேளுங்கள்: கிரிசோஸ்தோம் ஒரே ஒரு பாவஞ்செய்யும்படி அவனுக்கு வலுவந்தஞ் செய்யுங்கள். இவன் பாவம் ஒன்றுக்குமாத்திரம் பயப்படுகிறதேயன்றி வேறெதுக்கும் பயப்படான்.

சகோதரமே! விர்த்தாப்பிய மந்திரி சொன்னது மெய்தான். மனிதன் பயப்படத்தக்கது பாவம் ஒன்றுதான். பாவம் ஒன்றுமாத்திரம் உலகத்தில் பொல்லாப்பு. பாவம் நீங்கலாக, மற்ற யாவும், தரித்திரமோ, வியாதியோ, நிந்தையோ, பழிச்சொல்லோ, சாவோ, இவை எல்லாம் துன்பமல்ல. இவைகளைத் தக்கவகையில் பிரயோகித்தால் மனிதனுக்கு நன்மையாக மாறிப்போகலாம். சர்வேசுரனும் பாவம் ஒன்றைமாத்திரம் பகைக்கிருர். பாவத்தைச் செய்கிறவர்களைமாத்திரம் சர்வேசுரன் கொடுமையாய்த் தண்டிக்கிருர். போன தியானத்தில் சர்வேசுரன் பாவத்தைச் செய்த அசரீரிகளையும், மனிதரையும் எப்படித் தண்டித்தார் என்று கேட்டீர்கள். அதைக்கேட்டபின், பாவத்தின்பேரில் உங்கள் மனதில் பகையும் பயமும் உண்டாயிருக்கவேண்டும். ஆகிலும் பிறர் செய்த பாவங்களையும் அவர்களுக்கு வந்த ஆக்கினைகளையுங் கேட்கும்போது, சில பேர்கள் அது எனக்கென்னவென்று சொல்வார்கள். ஆனபடியால் இப்போது உங்களில் ஒவ்வொருவனும் தானே செய்த பாவங்களின்பேரில் யோசிக்கவேண்டும். பிறர் செய்த பாவத்தைப்பற்றி யோசிக்கும்போது பயமும் துக்கமும் வாராதபோது தானே செய்த பாவத்தைப்பற்றி நினைத்தால் பயமும் அச்சமும் எளிதில் உண்டாகும். மிளகை உரைத்து இன்னொருவன் கண்ணில் போட்டால் உனக்கு அதின் காரந் தோன்றுமா? உன் கண்ணில் கொஞ்

சம் போட்டுப்பார், காரந் தெரியும். அதுதான் இப்போது நாம் செய்யப்போகிறோம்.

நீங்கள் எல்லாரும் சர்வேசுரனுடைய நீதி சிம்மாசன முன் குற்றவாளிகளைப்போல் நடுங்கி நிற்பதாகவும், பசாசு நீங்கள் செய்த பாவங்களை, ஒவ்வொன்றாய் எடுத்துக்காண்பித்து உங்கள்மேல் குற்றஞ்சுமத்துவதாகவும் சிந்தித்துக் கொள்ளுங்கள்.

ஓ! தேவமரியே, இரக்கமுள்ள தாயே, நான் என் பாவங்களை எல்லாம் அறிந்து, அவைகளின் கனம், தோஷம், அக்கிரமம் எம்மாத்திரமென்று நன்றாய்க் கண்டுணர்ந்து அவைகளுக்காக மனஸ்தாபப்பட்டு கண்ணீர் சிந்தி அழும்படியாய் உமது தேவமகன் சேசுவிடத்தில் மன்றாடும் தாயே.

முதல் பாகம்

கிறீஸ்துவர்களில் அநேகம்பேர்கள், உலகமத்தியில், பாவச்சோதனை ஆபத்துகள் நடுவில் பல வருஷம் ஜீவித்து வருபவர்கள், மனம் வாக்கு கிரியையால் பலமுறை பாவங்களைச் செய்துவந்தாலும், தாங்கள் செய்த பாவங்களைப் பற்றி யோசிக்கவேண்டுமென்று சொல்லும்போது, எனக்கு என்ன பாவமிருக்கிறது? நான் என்ன பாவஞ்செய்தேன்? ஒன்றும் அறியேனே என்று கையை விரிப்பது வழக்கம். கோரரூப முகமுள்ளவன் தன் முகத்தைக் கண்ணாடியில் கண்ணைப் பாதி மூடிக்கொண்டு பார்த்து மகிழ்ந்தாற்போல், இவர்கள் செய்கிறார்கள். இப்படி தன்னைத் தானே ஏய்க்காதபடி, தான் செய்த பாவங்களை வஞ்சனையின்றி உள்ளது உள்ளதுபோல் ஒவ்வொருவரும் பார்ப்பது சுகிர்தம். இப்படி தன் பாவங்களை எல்லாம் அறிந்தால் மாத்திரம் சர்வேசுரனுடன் சமாதானமாகித் தன் நடத்தையை ஒழுங்குபடுத்தக்கூடும்.

ஒவ்வொருவரும் தான் புத்தி விபரம் அறிந்த நாள் முதல் இதுவரையில் செய்த பாவங்களையெல்லாம் சுருக்கமாய் ஞாபகத்தில் வரும்படி செய்யவேண்டும். இந்த

சோதனை கலக்கமின்றி ஒழுங்காய் நடக்கும்படி, நீ உன் சிறு பிராயத்திலும், வாலிப வயதிலும் முதிர்ந்த பிராயத்திலும், போன ஊர், இருந்த இடம், கூடிய தோழர், செய்த தொழில், இவைகளில் வந்த பாவங்களை வகை வகையாய் யோசித்துப்பார். இப்படி யோசித்தால், நீ உன் ஜீவிய நாட்களில், மனதாலும், சொல்லாலும், செய்கையாலும் செய்து முடித்த பாவங்கள் எத்தனையென்று கணக்கிட முடியுமா? எத்தனைபேர்கள் வயதில் சிறுவர், பாவத்தில் முதிர்ந்தவராக இருக்கிறார்கள். புத்தி அறிந்த நாள்முதல், நீ பாவஞ்செய்யாத நாளுண்டோ? உன் தகப்பன் வீட்டிலே, படுக்கப்போன இடத்திலே, திருநாள் கூட்டத்தில், விளையாடும்போது, கூத்துநாடக சாலையிலே, பரிசுத்த ஸ்தலத்திலே முதலாய், நீ பாவஞ் செய்யவில்லையா? உனக்கு வயது வந்து நீ பல அலுவல் செய்யும்போதும், வியாபாரத்திலே, பணம் வாங்குகிற கொடுக்கிற விஷயங்களிலும் பாவம் வராத வழியுண்டா? உன்னுடைய கண் காது முதலிய இந்திரியங்கள் உன் மனதுக்குள் பாவம் பிரவேசிக்க வழியாயிருந்ததல்லவா?

ஓ! என் சர்வேசுரா! எவ்வளவு மிதந்தப்பி பாவங்களைச் செய்திருக்கிறேன். என் பாவங்கள் எண்ணிக்கையெல்லாம் கடந்துபோயின. பெருங் குற்றவாளியைப் போல் உமது சமுகமுன் வெட்கி நாணி நிற்கின்றேன். என் முகமோ வெட்கத்தால் வாடிக் கவிழ்ந்து விழுந்து போனது. உமது தயையின் பெருக்கத்திற்கும் இரக்கத்தின் விசாலத்திற்கும் அளவாய் என்மேல் கிருபையாயிரும் சுவாமி.

இரண்டாம் பாகம்

பாவங்களையெல்லாம் சுருக்கமாய், உங்கள் ஞாபகத்தில் வருவித்தபின், இவைகளுக்குள்ள அக்கிரமம், தோஷம், விஷம் எவ்வளவென்று யோசித்துப்பாருங்கள். கிறீஸ்துவனே! நீ செய்த பாவங்கள் சர்வேசுரனுக்கு

'பெரும் நிந்தையல்லவா? நீ உன் பாவத்தால் நிந்தித்த சர்வேசுரன் யார் என்று நீ எப்போதாகிலும் நினைத்த துண்டா? சர்வேசுரன் யார்? அநந்த ஞானமும், அள வற்ற வல்லமையும், வரம்பில்லா நன்மையும் உள்ளவர். சர்வ பரிசுத்தமும் அமைந்த தேவன். பாவம் அவருக்குப் பொருந்தாத துரோகம். சம்மனசுகள் இவ்வளவு பரி சுத்தமுள்ள தேவ சிம்மாசனமுன் பயந்து நடுங்கி, பரி சுத்தர், பரிசுத்தர்' என்று நித்திய நமஸ்காரஞ் செய்து ஆராதிக்கிறார்கள். இந்த அதி உன்னத தேவன் சந்நிதி முன், நீ எம்மாத்திரம். காலில் மிதிபடும் புழுவோ? காற்றால் எழும்பிச் சுழன்று சுற்றும் காய்ந்த சருகோ? வெறும் தூசியோ? ஆகாயத்தில் இருக்கும் இடந்தெரியா மல் அசையும் அணுவோ? இவை எல்லாவற்றிலும் நீ அற்பமானவன். இன்னம் நாம் சொல்லும் ஒப்புவமையை கவனமாய்க் கேள். சர்வேசுரன் சமுகமுன் லட்சக்கணக் கான சம்மனசுகளின் ஒன்பது சபைகளும் எம்மாத்திரம்? ஒன்றுமில்லாதவர்கள் போலிருக்கிறார்கள். அனந்த கோடானகோடி சம்மனசுகளின்முன், மனித ஜென்மம் எல்லாம் கூட்டினாலும் எவ்வளவு அற்பம்? பல் கோடி கணக்கான மனிதர்கள்முன், நீ ஒரு பிராணி எவ்வளவு நீச வஸ்து. சோலைகள் அடர்ந்து நெருங்கிய பெருங் காட்டிலே ஓங்கி வளர்ந்த மரங்களின் கிளைகளிலுள்ள இலைகளில் நீ ஒரு இலைக்கு சமானமாவாயோ? இருகரை நிறையப் பெருகி ஓடும் ஆற்றின் பிரவாகத் தண்ணீரில் நீ ஒரு துளிக்குச் சமானம என்போமோ? சமுத்திரக் கரையில் பரவி கிடக்கும் மணல் மணிகளில் நீ ஒரு மணல் மணி ஆவாயோ? இவை எல்லாவற்றிலும் நீ அற்பமான வன். இவ்வளவு அற்பப் பிராணியாகிய நீயா, அணு விலும் சொற்பமாகிற நீயா, சர்வ மகத்துவமுள்ள நித்திய சர்வேசுரனைப் பகைத்து, விரோதித்து, எதிர்த்து, உன் தலையை உயர்த்தி, சற்றும் உன் மனதில் பயமின்றி நான் உமக்குக் கீழ்ப்படியமாட்டேன், என்று சொல்லத் துணிந் தாய். என்ன அகங்காரம்! என்ன பேதமை! என்ன மதிகேடு!

மூன்றும் பாகம்

பாவம் சர்வேசுரனுக்கு எவ்வளவு நிந்தையானதென்று இரண்டாம் பாகத்தில் விவரித்தோம். இன்னம் நீ செய்த பாவங்களின் அக்கிரமம், அவைகளின் தோஷம், இம்மாத்திரமென்று நீ நன்றாய் அறியும்படி அந்தப் பாவமாகிற செய்கையிலுள்ள விஷம் இன்னதென்று யோசித்துப்பார். பாவம் தன் இயல்பிலே மகா கெட்டது. சர்வாலங்கார சுகுண இலக்ஷணம் நிறைந்த சர்வேசுரனுக்கு பாவம் முழுதும் நேர் விரோதமாயிருப்பதால், அந்தப் பாவம் இயல்பிலே தூர்க்கந்த அவலட்சணமுள்ளதாயிருக்கவேண்டும். இதனால் மனிதன் பாவத்தை செய்யவேண்டாமென்று சர்வேசுரன் கட்டளை ஒன்றும் இல்லாதிருந்த காலத்தும், புத்தியுள்ள மனிதன் பாவத்தைச் செய்யாதிருப்பது அவனுக்கு அழகாகும்.

அன்றியும் மனிதன் செய்யும் பாவத்தில் எவ்வளவு நன்றியறியாமை இருக்கிறதென்று யோசித்துப்பார். நமக்குள்ள ஆத்துமமும் சரீரமும், இந்திரிய புலன்களும், அவைகளின் குணங்களும், சக்தியும், இன்னும் நம்மைச் சூழ்ந்திருக்கும் யாவும் சர்வேசுரனே நமக்குக் கொடுத்தவர். அவரிடத்திலிருந்து நாம் பெருதது ஏதாவது நம்மிடம் உண்டா? இது இப்படியானால், நாம் நமது சர்வ உபகாரரானவரை மறந்து, அவர் நமக்குக் கொடுக்கும் உதவி எத்தனங்களையே அவருக்கு விரோதமாய்ப் பிரயோகித்து, அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கமாட்டோமென்று துணிந்து சொல்லி, பாவத்தைச் செய்வது எவ்வளவு நன்றியில்லாச் செய்கை.

இன்னம், சர்வேசுரனை இவ்விதமாய் விரோதித்துப் பாவஞ் செய்வது எவ்வளவு மதிகேடான துணிவென்று கேள். நீ உயிரோடிருக்கும் எந்த நிமிஷத்திலும் சர்வேசுரனே தமது அளவில்லா வல்லமையின் கரத்தால் உன்னைத் தாங்கிக்கொண்டிருக்கிறார். நீ, நரகத்தின் பாதாளக் குழியில் உருண்டு பிரண்டு எந்த நிமிஷத்திலும் விழாதபடி, நூல் இழைபோல் தொங்கும் உன் உயிரைக் காப்

காற்றிக்கொண்டு வருகிறவர் சர்வேசுரன். அவருடைய தேவ கையிலிருந்துகொண்டே, தோளிலிருந்து செவியைக் கடித்தாற்போல், நீ அவரை உன் பாவத்தால் நிந்திப்பது மூடத்தனமும், முதிர்ந்த பைத்தியமும் என்று உனக்கே தோன்றவில்லையா?

நீ உன் மனம் அறியப் பாவஞ் செய்யும்போது உன் செய்கையால் நீ சர்வேசுரனைப் பார்த்து சொல்வதின்னதென்று நீ எப்போதாவது கவனித்துக் கேட்டதுண்டா? நீ சொல்வது இதுதான்: "சுவாமி, நான் இந்த துர்ச்செய்கையைச் செய்யத்தகாதென்று நீர் கற்பித்திருப்பது மெய்தான். ஆனால் பரவாயில்லை. நான் செய்வேன். என்னுடைய மனச்சாட்சியும் உமது பக்கம் சார்பாயிருந்து இதை நான் செய்தால் ஆக்கினை வருமென்று எனக்குப் பயம் உறுத்துகின்றது. எல்லாம் வீண் பயம். இதற்கு நான் அஞ்சேன். இந்தச் செய்கை எனக்குப் பிரியமானது. என் சரீரம் இதைக் கேட்கின்றது. சரீரந்தான் என் தெய்வம். இதற்குத்தான் தூபதீபங்காட்டி மாலை சூட்டுவேன். இந்தச் சரீர சந்தோஷம் இழிவானதென்று எனக்கு நன்றாய்த் தெரியும். மின்னலைப்போல் பளிச்சென்று தோன்றி மறைந்துபோகும் என்பது நிசம். ஆகிலும் நீர் கொடுப்பதாகச் சொல்லும் நித்தியமான பாக்கியத்தைப் பார்க்க, இந்தச் சரீர சந்தோஷம் எனக்கு அதிகப் பிரியம். காட்டில் இனிமேல் பழுக்கும் பலாக் கனியைப்பார்க்கிலும், கையிலிருக்கும் கிளாக்காய் பெரிதென்ற பழமொழி எங்களுக்குள்ளே உண்டு. இந்தப் பழமொழிக்கிசைவாய் நான் நடக்கிறேன்." இவ்விதமாய் நீ பாவம் செய்கையில் சர்வேசுரனோடு வாதாடி வழக்குப் பேசி, சர்வ ஞான சுரூபியானவரிலும் நீ மகா ஞானி என்றாற்போலே நடக்கிறாய். இவ்வித நடத்தை சர்வேசுரனுக்கு எவ்வளவு நிந்தை வருவிக்கின்றதென்று இப்போதாகிலும் உன் மனதில் சார உணருகிறாயா?

பாவத்தை இப்படித் துணிந்து செய்யும் பாவி, என்ன காரணத்தை முன்னிட்டு சர்வேசுரனை எதிர்க்

கிறன்? இலட்சாதிபதியாய் அரசாளவோ? இல்லை, இல்லை. அரைக்காசுக்காக, அற்ப ஈன சந்தோஷத்துக்காக, ஒரு கண்ணிமைப் பொழுதில் தோன்றி மறையும் நீச சுகத்துக்காக சர்வேசுரனைப் பாவி விரோதிக்கிறன். என்ன மதியீனம்! இதிலும் பேதமை உண்டா?

இதுமட்டுஞ் சொன்ன காரணங்களால் பாவம் எவ்வளவு இழிவும், நீசமும், மோசமும் உள்ளதென்று ஒருவாறு நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆகிலும் இன்னம் இவைகளிலும் ஸ்திரமான ஓர் காரணம் வேண்டுமோ? அதோ பாருங்கள். சிலுவை மரத்தில் அவமான கோலத்தோடு அறையுண்டு, பார்த்தவர் எல்லாரும் பழித்து நகைக்கும்படி, பெரும் பாதகனைப்போல் தொங்கி நிற்கும் அவர் யார்? சகல சிருஷ்டிகளும், அவர்தான் தங்களைப் படைத்த சர்வ வல்லப சர்வேசுரனென்று ஒரே வாய்மொழியாய் முறையிடுகின்றன. அவர் சர்வேசுரஞ? இது மெய்யா? சர்வேசுரன் ஆனுல் ஏன் இப்படி வேதனையுடன் அவமானமாய்ப் பாதகனைப்போல் இவர் சாகவேண்டும்? ஏனென்றல், இவர் மனிதர் செய்த பாவங்களுக்கு ஓர் பலியாய் தம்மை நேர்ந்தார். பாவம் இவர் சரீரத்தில் தன் விஷத்தைக் கக்கினது. அந்த நரக விஷம் இவருடைய மாசற்ற தேவ சரீரத்தை குஷ்டரோகியின் சரீரமாக்கி, உழுதநிலம்போல் பிளந்து வெடித்து கமர் விடும்படி செய்தது.

ஓ பாவமே! நரக ஜென்மமே! ஆத்துமத்தின் உயிரைக்கொல்லும் கொடிய விஷமே! தேவகுமாரன் உயிரையே தீண்டத் துணிந்த நரகத்தின் கொடிய நஞ்சே! இதுமட்டும் உன்னை நான் அறியாதிருந்ததால் உன்னைச் சிநேகித்துவந்தேன். உன்னை என் இருதயத்தின் மத்தியில் வைத்து வணங்கிவந்தேன். இப்போது நான் உன்னை அறிவேன். இனிமேல் உன்னைப் பகைத்து வெறுப்பேன். நீ என்றும் சபிக்கப்படக்கடவாய்.

ஓ! புத்தியில்லாமல் இதுமட்டும் நான் நடந்தேனே. இத்தனை பாவங்களை நான் செய்திருக்க, சிருஷ்டிகளெல்

லாம் என்னை ஏன் பழிவாங்கவில்லை? இந்தப் பூமி என்னை ஏன் உயிரோடு விழுங்காமல் இதுமட்டும் என்னைத் தாங்கி வந்தது? சூரியன் தனது உக்கிரம அக்கினிக் கதிர்களை என்மேல் சரமாரியாய்ப் பொழிந்து, என்னை ஏன் சாம்பலாய் எரித்துப்போடவில்லை? வானத்திலிருந்து மேகத்தின் இடி என் தலைமேல் விழுந்து, என்னை ஏன் இதுமட்டும் கொல்லாமல் விட்டது? சர்வேசுரனுடைய நீதியின் கோபம் பொங்கி என்மேல் பாய்ந்து என்னை நித்திய நரகாக்கினைக்குத் தள்ளவேண்டியபோது இதுமட்டும் இந்த மோசம் வராதபடி யார் என்னைக் காப்பாற்றினது?

ஓ! கிறீஸ்துவனே! திறந்திருக்கும் இந்த தேவ இருதயத்தைப் பார். அதிலிருந்து சுவாலைவிட்டெரியும் சிநேகாக்கினி உன் பக்கமாய் தாவுகின்றது. சேசுவின் திரு இருதயத்தின் அணைகடந்த சிநேகந்தான், நீ நரகத்துக்கு இதுமட்டும் தப்பும்படி காரணம். சேசுநாதர் நீ பாவம் செய்துவரும்போதும் உன்னை சிநேகித்தார். இவ்வளவு சிநேகம் நிறைந்த தகப்பன்முன் சாஷ்டாங்கமாய் விழுந்து உன் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு அவருடைய தயாள இரக்கத்துக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் எல்லாருஞ் சொல்லுங்கள்.

ஆண்டவரே! அறியாமல் செய்தேன் நான் பாவி. இந்தப் பாவியின்பேரில் தயவாயிரும். என் பாவங்களைப் பொறுத்துக்கொள்ளும். எனக்காக நீர் சிலுவையில் பட்ட துன்ப அவஸ்தையை நினைத்தருளும். எனக்காக தேவரீர் சிந்தின இரத்தம், அபயமிட்டுப் பொறுத்தல் கேட்கும் சத்தம் உமது காதில் விழவில்லையா? உமது இருதயம் எனக்காக அல்லவோ திறந்திருக்கின்றது. ஆண்டவரே! உமது இரத்தத்தில் ஒரு துளி மாத்திரம் பாவ அசுத்தம் நிறைந்த என் ஆத்துமத்தில் விழுமானால் போதும். என் இருதயம் பனிக்கட்டியிலும் அதிக தூய வெண்மையாய் மாறிப்போகும். சுத்தமான இருதயத்தோடு உமக்கு நான் ஊழியஞ் செய்வேன்.

ஓ! மரியே! தயைநிறைந்த தாயே! தேவ கோபாக் கினைக்கு இதுமட்டும் நான் தப்பிப்பிழைப்பதற்கு, சேசு நாதருக்குப்பின், நீரே காரணமாயிருந்த தஞ்சம். அன் புள்ள தாயாகிய நீர், உமது தேவ மகனுடைய நீதியின் கோபத்தை அமர்த்தி எனக்கு அவர் தயையும் இரக்கமும் காட்டும்படி செய்தீர். தாயே இந்த உதவிக்காக நான் மெத்தவும் நன்றியறிந்திருக்கிறேன். என் உடலில் உயிர் இருக்குமட்டும் உமது தயவை நான் மறக்கமாட்டேன். என்னை உம்முடைய பிள்ளையாக இன்னமும் ஒருவிசை ஏற்றுக்கொள்ளும். இனிமேல் நான் சோதனை தந்திரங் களில் அகப்பட்டு பாவத்தைச் செய்யாதபடி எனக்கு உறுதிகொடுக்கும் அனுக்கிரகப்பிரசாதத்தை உம்முடைய திருக்குமாரனிடம் பெற்றுத் தந்தருள உம்மை நான் கெஞ்சி மன்றாடுகிறேன் தாயே! ஆமென்சேசு.

இரண்டாம் நாள்—மூன்றும் தியானம்

நரக வேதனை

சேசுநாதர்சுவாமி சுவிசேஷத்தில் சொல்லும் வர்த்த மானமாவது: அபாரமான ஐசுவரிய சம்பத்துள்ள திர வியவான் ஒருவனிருந்தான். இவன் நாள்தோறும் நன்றாய் விருந்துண்டு செல்வமாய் வளர்ந்துவந்தான். பட்டு வஸ் திரம் அணிந்து, ரத்ன கஜித மஞ்சத்தில் படுத்து உல்லாச மாய் உலகத்தில் ஜீவித்துவந்தான். இவன் வீட்டின் வாசலில், லாசர் என்ற ஓர் ஏழை குஷ்டரோகி, எச்சிலைப் பொறுக்கி எடுத்து சாப்பிட்டுவருவான். திரவியவானுஞ் செத்தான். ஏழை லாசரும் செத்தான். லாசர் இறந்த உடனே, மோக்ஷபதவியை அடைந்தான். தனவந்தன் நரக நெருப்பிலே புதைக்கப்பட்டான்.

நெருப்பில் விழுந்து அமிழ்ந்தி வெந்தவன், மோட் சத்தை அண்ணாந்து பார்த்தான். அங்கே லாசர் பேரின்ப பாக்கியானந்தத்தில் இருப்பதைக் கண்டு, அபிரகாம் என்ற

பிதாப்பிதாவைக் கூப்பிட்டு: ஓ பிதாவே! நான் இந்த அகோர நெருப்பில் கிடந்து வேகின்றேனே! ஐயோ! தாகம் என்னால் பொறுக்க முடியவில்லையே! அந்த லாசர் தன் சுண்டு விரலையாகிலும் தண்ணீரில் நனைத்து என் நாவில் வைக்கும்படி அவனை அனுப்பமாட்டீரா? என் நா வரண்டுபோகிறதே, என்றதற்கு அபிரகாம் சொல்லுவார்: அப்பா, நீ கூடாத காரியத்தைக் கேட்கிறாய். இங்கே இருப்பவர் அங்கே வரமாட்டார், அங்கே இருப்பவரும் இங்கே வரக்கூடாது. இதற்கு திரவியவான், அப்படியானால் லாசரைப் பூலோகத்துக்காகிலும் அனுப்பும்படி தாழ்மையாய்க் கேட்கிறேன். என் கூடப்பிறந்த சகோதரர் உலகத்தில் இன்னும் உயிரோடிருக்கிறார்கள். அவர்களும் என்னைப்போல் இந்த அக்கினி ஸ்தலத்துக்கு வராதபடி, அவர்களுக்கு அறிவித்தால் மெத்த உபகாரமாயிருக்கும் என்று சொல்ல, அபிரகாம் அவனுக்கு மறுமொழியாக: உலகத்திலிருப்பவர்களுக்கு புத்தி கற்பிக்கும்படி வேதாகமங்களும் குருக்களுமிருக்கிறார்கள். தங்கள் மத்தியில் உயிரோடிருப்பவர்களின் சொல்லைக் கேளாதவர்கள், இந்த மேல் உலகத்திலிருந்து அங்கே போய் புத்தி சொல்பவர்களின் வார்த்தையைக் கேட்கமாட்டார்கள் என்றார்.

சகோதரரே! சத்திய சுரூபியான சர்வேசுரன் சொல்லிய இந்த வர்த்தமானத்தில் அடங்கிய பற்பல விஷயங்களின்பேரில் சந்தேகப்பட இடமில்லை. இங்கே சொன்ன திரவியவான் உலகத்திலிருக்கும்போது நன்றாய்ச் சாப்பிட்டு குடித்து சுகமே வாழ்வதே மனிதன் அலுவல் என்று எண்ணி வந்தானேயன்றி, தனக்கு ஓர் ஆத்துமம் உண்டென்றும், அதை இரட்சிப்பது தன் அலுவலென்றும், அதற்காகவே உலகில் சிருஷ்டிக்கப்பட்டானென்றும், கனவிலும் நினைத்ததில்லை. இவ்விதம் தன் ஆத்துமத்தையும் சர்வேசுரனையும் நினையாமல் நடந்தவன் சடுதியில் இறந்தான். இறந்த நிமிஷத்தில் நரக நெருப்பிலே விழுந்தான். உங்களுக்குள்ளே எத்தனைபேர்கள் இந்தத் திரவியவானைப் போல் நடந்துவருகிறவர்களிருக்கிறார்கள்: இவர்கள்

பாவத்தைப் பயமின்றிச் செய்வார்கள். செய்தபின் சபதங்கூறி நான் பாவஞ் செய்தேன், எனக்கென்ன கேடு வந்ததென்று வீரியம் பேசுவார்கள். இவர்களுடைய கர்வத்தை அடக்கி சர்வேசுரனுடைய கோரூத நீதியை ஸ்தாபிக்கும்படி பாவத்தை சர்வேசுரன் மறு உலகில் எவ்வளவு அகோரமாய்த் தண்டிக்கிறாரென்று உங்களுக்குக் காட்டவேண்டும். இந்தப் பயங்கரமான சத்தியத்தின் பேரில் நன்றாய்த் தியானித்து யோசிப்பது வெகு பிரயோசனமாயிருக்கும். கிருபையின் ஊற்றும் இஷ்டப்பிரசாதத்தின் தாயுமாகிய பரம தேவதாய் நமக்கு உதவி செய்வாளாக.

முதல் பாகம்

நரகமாவது என்ன? சர்வ வல்லப சர்வேசுரன் தம்மை எதிர்த்து பகைத்து விரோதிக்கும் துரோகிகளைத் தண்டிக்கும்படியாய் ஏற்படுத்திய ஆக்கினை ஸ்தலம். வேத வாக்கியத்தின் பிரகாரம் சகல துன்பங்களுங் குடியாயிருக்கும் இடம். அந்தகாரம் அடர்ந்த சிறைக்கூடம். அக்கினி சமுத்திரம். நெருப்பு நிறைந்த காளவாய். பயங்கரமுள்ள கெபி. நன்மையொன்றுமில்லாத சபிக்கப்பட்ட ஸ்தலம். பேய்கள் வாழுஞ் சுடுகாடு. இப்படிப்பட்ட இடமாகிற நரகம் இருப்பது நிச்சயமான சத்தியம்.

உலகத்துக்கெல்லாம் அதிபதி ஆண்டவராகிய சர்வேசுரன் ஒருவர் இருப்பது நிச்சயமானல், நரகம் என்ற துன்ப ஸ்தலம் தப்பாமலிருக்கவேண்டும். மனிதர்க்குள்ளே எவ்வளவு பாவம், எவ்வளவு அநியாயம், எவ்வளவு அக்கிரமம் இருக்கின்றது! அநியாயஞ் செய்து பிறரை வருத்திக் கெடுத்து வாழ்பவர்கள் அனந்தம் பேர்கள்! அக்கிரமமே எனக்காயிற்றென்று கங்கணங் கட்டித் திரிபவர்கள் எத்தனை பேர்கள்! நீதியின் கிரமப்பிரகாரம் நடப்பவர்களோ பல சமயங்களில் நிந்தைப்பட்டு, பொருளிழந்து, துன்பப்படுகிறார்கள். இதற்கெல்லாம் இவ்வுலகில் கேள்விமுறை இல்லாவிட்டாலும், மறு உலகில் தப்பாமல் இருப்பது அவசியம். தன்னைச் சிருஷ்டித்த சர்வேசுரனை ஆராதித்து

அவருக்கு ஊழியஞ் செய்யும்படியாய் உண்டாக்கப்பட்ட மனிதன், சர்வேசுரனை அறியாமலும் ஆராதியாமலும் அவருக்கு ஊழியஞ் செய்யாமலும், மனஞ்சென்ற வழியில் தினஞ்சென்று, அவலட்சண சிலைகளை உருவாக்கி அவைகளை வணங்கிவந்தால், சர்வேசுரன் இவர்களைத் தண்டிக்கும்படி அவசியம் நரகம் ஒன்று ஏற்படுத்தியிருக்கவேண்டும்.

மனிதனுக்கு இயல்பாயுள்ள சுபாவ அறிவே நரகம் உண்டென்று சொல்லுகின்றது. இதினால் அஞ்ஞானிகளும் நரகம் உண்டென்று ஏற்றுக்கொள்ளுகிறார்கள். சர்வேசுரன் தாம் படிப்பித்த வேதத்தில் தெளிவாய் பல இடங்களில் சொல்லியிருக்கிறார். சத்திய திருச்சபையும் தன் தவறா வாக்கோடு நரகம் உண்டென்று படிப்பிக்கின்றது. நமது மனமே நமக்கு சாட்சியாயிருந்து பாவத்தைச் செய்தால் சர்வேசுரன் நரகத்தில் நம்மைத் தண்டிப்பாரென்று சொல்லுகின்றது. ஆகையால் நரகம் உண்டென்பது சத்தியம். இந்த சத்தியத்தைத் தளம்பாத மனதோடு விசுவசிப்பது நமது கடமை.

பாவி நரகத்தில் விழுந்தால் அவனுக்குத் துணையாய்க் கூட இருப்பவர்கள் யார்? பசாசுக்கள் முதல் துணை. சர்வேசுரனைப் பகைக்கும் இந்த நீச அரூபிகள், சர்வேசுரன் பேரில் தங்களுடைய கோபமும் பகையும் செல்லாதென்று கண்டு, சர்வேசுரன் சாயலாயிருக்கும் மனிதன்பேரில் தங்கள் பகையைக் காட்டும். தங்களுக்கு உரிய சுய ரூபமான அவலக்ஷணக் கோலத்தோடு தோன்றி பயம் உறுத்தி பாவியை உபாதிக்கும். பாம்பின் வாய்க்குள் அகப்பட்ட தேரைபோல் பாவி பதைத்துத் துடிப்பான். புலியின் வாய்க்குள் இரையாய் விழுந்த மனிதன்போல் அலறிப் பதறிக் கதறுவான். பாவிக்குத் துணையாய்ப் பசாசுகளுமன்றி பாவிகளே பெரும் படைபோல் சூழ்ந்திருப்பார்கள். உலகமுண்டான நாள் முதல் உலகத்தின் கடைசி நாள் மட்டும் இருக்குஞ் சகல வகைப் பாவிகளும், துன்மார்க்கரும், அநீதரும், அயோக்கியரும், அக்கிரமிகளும், கொலைபாதகரும், திருடரும், வஞ்சகரும், குடியரும், காமாதுரரும்

ஆகிய இவர்கள் எல்லாரும் அங்கே கூடி இருப்பார்கள். இப்படிப்பட்ட தீயோர் மத்தியில் பாவியும் ஒருவனயிருப்பான்.

இவர்கள் எல்லாரும் ஒருவரோடொருவர் சண்டை செய்து, துஷ்ட மிருகங்களைப்போல் ஒருவரொருவரைக் கடித்து, உதைத்து, கர்ச்சித்து, ஊளையிட்டு, கதறி அலறிப் புலம்புவார்கள். இவர்கள் அல்லாமல் இன்னும் பாவிக்கு அவன் சரீரமே, பொதுத்தீர்வை முடிந்தபின், சகிக்கக் கூடாத துணையாயிருக்கும். புழுத்து அழுகிய ஓர் பிரேதத்தை உன்னேடு, கண்ணேடு கண்ணும், முகத்தோடு முகமுமாய்ச் சேர்த்துக்கட்டி, ஒரு இராமுழுதும் இருட்டறையில் உன்னை அடைத்துப் பூட்டி வைத்தால், நீ அதற்கு சம்மதிப்பாயோ? அப்பா! நீ நரகத்திலே விழுந்தால் புழுத்து அழுகி துர்க்கந்தம் நாறும் உன் சரீரம் உன்னேடு கட்டப்பட, நீ போகும் இடமெல்லாம் அதை இழுத்துக்கொண்டு அல்லோ போவாய். இது உனக்குச் சம்மதமோ சொல்.

நரக ஆக்கினை இவ்வளவோடு முடிந்ததென்று நினைக்க வேண்டாம். நீங்கள் பாவஞ்செய்யும்போது ஆத்துமமும் சரீரமும்கூடிப் பாவஞ்செய்வதால் இவ்விரண்டும் நரகத்தில் உபாதிக்கப்படும். ஆனதால் சரீரத்தின் ஒவ்வொரு இந்திரியமும் தனக்கு உரிய வகையில் தான் பாவத்தைச் செய்வதில் கொண்ட சந்தோஷத்தின் அளவுக்குத் தக்கதாய் துன்பப்படும். ஆத்துமத்தில் ஒவ்வொரு தத்துவமும், புத்தி, மனம், ஞாபகம் ஆகிய இவைகள், தங்கள் தொழிலுக்கு இசைந்தவண்ணம் ஆக்கினைப்படும். உலகில் இருக்குங்காலத்தில், திரவியவானயிருந்து நன்ருய்ச் சாப்பிட்டு உண்டு வளர்ந்து பாவத்தில் தன் காலத்தைப் போக்கினவன், நரகத்திலே பசியாலுந் தாகத்தாலுந் தரித்திரக் கஷ்டத்தாலும் வருந்துவான். இப்போது மகிமையைத் தேடி அகங்காரம் பொங்கி, தான் தான் பெரியவனென்று பெருமை பேசி, மற்றவர்கள் நீசர் என்று பழித்து நிந்தித்து நடப்பவன் நரகத்தில், தாழ்த்தப்பட்டு, பசாசின் காலின்கீழ் மிதியுண்டு, அவமானமடைவான். இங்கே

தன் சரீரத்தைப் பேணி, மினுக்கி வளர்த்து, வாசனை பூசி, புஷ்பஞ் சூடி, ஆபரண அணிகளால் அலங்கரித்து இன்ப சுகத்தில் ஜீவித்து வருகிறவர்கள், அங்கே நரகத்தில் வாயால் விவரித்துச் சொல்லக்கூடாத அவஸ்தைப்பட்டு, பன்றிகளைப்போல் துர்க்கந்த அசுத்தத்தில் உருண்டு புரண்டு, அகோர வேதனை அனுபவிப்பார்கள். நரகத்தில் விழுந்தால் உன்னோடு துணையாயிருப்பவர் யாரென்று இப்போது நீ நன்றாய் உன் மனதில் உணருகிறாயா? நல்லது இனி நரக நெருப்பின் கொடுமை இன்னதென்று கேள்.

இரண்டாம் பாகம்

பாவிகள், பொதுத்தீர்வை நாளுக்குப்பின், ஆத்தும சரீரத்தோடு நரக அக்கினியின் சமுத்திரத்தில் வெந்து எரிவார்கள். அந்த அக்கினியோ சர்வேசுரனுடைய சத்துருக்களைத் தண்டிக்கும்படி மாத்திரம் சிருஷ்டிக்கப் பட்டதால் அதற்கும் இந்தப் பூமியிலிருக்கும் அக்கினிக்கும் வெகு புாரதூர வித்தியாசம் உண்டு. தேவ நீதியின் கோபத்தினால் மூட்டப்பட்ட அந்த அக்கினி நரக பாதாளத்தின் அடிமுதல் உச்சிமட்டும் தணலாய் எழும்பி, கொழுந்துவிட்டெரிந்து, மேலே தாவி, புகை திரண்டு கூடி அடர, கூடாமல் சுட்டு, தணியாமல் கொதித்து, சுட்ட பொருளும் நீறாகாமல் வேக, பாவிகளின் உடலுக்குள் பாய்ந்து, எங்கும் குடைந்து அறிவுள்ள அக்கினிபோல் அந்தந்த அவயவங்கள் செய்த பாவத்துக்கு அளவாய், அவைகளைச் சுட்டு, உள்ளிருந்து வெளியே, கண், காது, வாய் வழியாய் புறப்பட்டு, சரீரத்தை எப்பக்கத்திலும் துன்பப்படுத்தும். நெருப்பில் எரிந்த பெருங்கட்டை நெருப்பு பிடித்து எரியும்போது எல்லாம் நெருப்பு மயமாய்ப் போவதுபோல, பாவியும் நரக நெருப்பிலே, சர்வாங்கமும், உள்ளும் வெளியும் அக்கினிமயமாய் மாறி, அப்படி மாறினும், வேதனை அனுபவிக்கும் உணர்ச்சி மாறாமல் வெந்து துடிப்பான். அந்தப் பாதாள உலகில், மேலும், கீழும், சுற்றிலும் எங்கும் அக்கினி அடர்ந்து எரியும். சமுத்திரத்தில் திரியும் மீன், உயர தண்ணீர்மேல் மிதந்

தாலும், தாழத் தரைமட்டும் போனாலும், இந்தப் பக்கமோ, அந்தப் பக்கமோ, எந்தப் பக்கம் சென்றாலும், தண்ணீரால் சூழ்ந்து தண்ணீரிலேதானிருக்கும். ஆகாசத்தில் பறக்கும் பட்சி எந்தத் திசையிலே பறந்தாலும், அதைத் தாங்கும் ஆகாயம், அது போகுமிடமெல்லாம் அதைச் சூழ்ந்து பரவி நிறைந்திருக்கும். அதுபோலவே பாவியும் நரகத்தில் எந்தப் பக்கம் போனாலும், என்ன செய்தாலும் அக்கினி மத்தியில் அமிழ்ந்தி இருப்பான். தீய்க்குள் பாவியும், பாவிக்குள் தீயுமிருக்க, தீய்க்குப் பாவி இரையும், பாவிக்குத் தீயே இரையுமாயிருக்கும். பாவி தன் பசியை ஆற்ற உண்பதும் தீ; தன் தாகந்தீர்க்கக் குடிப்பதும் தீ; பாவி தன் உடையாய் உடுப்பதும் தீ; அவன் படுக்கும் பாயாய் இருப்பதும் தீ. அவன் உட்கொள்ளும் சுவாசமும் தீ; அவன் உள்ளிருந்து வெளியில் வரும் ஆவியும் தீ. இந்தக் கொடிய அக்கினிக்குள்ளே இருக்க யார் சம்மதிப்பார்?

நரகத் தீயின் உக்கிரம் இவ்வளவு கொடிதானாலும், இதிலும் கொடிதான ஆக்கினை இன்னும் ஒன்று நரகத்தில் உண்டு. அது ஏதென்றால், சர்வேசுரனை இழந்துபோய் அவரை விட்டுப் பிரிந்திருப்பது, இதுதான் துன்பங்களில் பெருந் துன்பம். நிர்ப்பாக்கியத்திலும் பெரும் நிர்ப்பாக்கியம். இது எப்படியென்று கவனமாய்க் கேளுங்கள். சர்வேசுரனுக்காக சிருஷ்டிக்கப்பட்ட ஆத்துமம் தான் சேரவேண்டிய கதியைச் சேராமல் தடைபட்டு, மறிபட்டு, பிரிபட்டிருப்பதைக் காணும்போது அது படும் அவஸ்தை இம்மாத்திரமென்று மனிதன் இவ்வுலகில் இருக்குமட்டும் சரியாய் அறிந்துணரமாட்டான். விஸ்தாரமாய் நாலுபக்கமும் விரிந்து பெருகி இருக்கும் சமுத்திரத்தின் ஜலப்பிரவாக மத்தியில் இருக்கும் மீன், தண்ணீருக்குள் இருக்குமட்டும், தண்ணீரைவிட்டு நீங்கி இருப்பது இன்னதென்று அது அறியுமோ? தண்ணீரிலிருந்து மீனைத் தரையில் இழுத்துப்போட்டால், அப்போதுதான் அது பதைத்துத் துடிக்கும்போது தண்ணீர் இல்லாதிருப்பது எவ்வளவு துன்பமென்று அறியும். அப்படியே மனிதன் இந்தப்

பூமியிலிருக்குமட்டும், எங்கே போனாலும், சர்வேசுர னுடைய தேவ பராமரிப்பின் காவலுக்குள் இருக்கிறான். சர்வேசுரன் சகலருக்கும் பிதாவாய், நல்லோருக்கும் தீயோ ருக்கும் தமது சூரியன் உதித்துப் பிரகாசிக்கவும், பூமி செழித்துப் பலன் கொடுக்கவும் செய்து வருகிறார். அவரே எல்லாரையும் தமது அளவில்லா வல்லமையின் கரத் தால் தாங்கி, காப்பாற்றி அணைத்துவருகிறார். இதனிமித் தம் மனிதன் உலகில் இருக்கும் நாள் அளவும் சர்வேசுரனை இழப்பது எவ்வளவு ஆபத்துள்ளதென்று அறியமாட் டான். ஒருவிசை உலகத்தைவிட்டு நீங்கி, நரகத்தில் விழுந்தால், அப்போதுதான் ஆத்துமம் சர்வேசுரனை இழந்துபோவது, எவ்வளவு பெரிய பொல்லாப்பென்று முதல்விசை அறியும். மனிதன் புத்தியை, இந்தப் பூமியில் மயக்கிக் கெடுக்கும் இந்திரஜால தந்திர வித்தை எல்லாம், மரித்தபின்பு முழுதும் நீங்கிப்போம். ஆத்துமம் சரீரச் சிறையைவிட்டு வெளிப்பட்டதும், சர்வேசுரனே தனக்குத் திருப்தியான பாக்கியானந்த நன்மையென்றும், அவரே தன் கடைசிக் கதி என்றும், அவரிடம் சேர்ந்து கூடி வாழும்படி தான் சிருஷ்டிக்கப்பட்டதென்றும், இந்த உத்தம பாக்கியத்தை தான் இழந்ததென்றும், இனி அடைய வழியில்லையென்றும் நினைக்கும்போது, அது படும் வருத்தமும், துக்கமும், சலிப்பும், வியாகுலமும் எவ் வளவென்று நரகத்திலிருக்கும் ஆத்துமங்களுக்குத்தான் ஒருவாறு தெரியக்கூடும். உன் கை எலும்பு மூட்டுப் பிசகிப்போனால், அது தனக்கு உரிய இடத்தில் திரும்ப வும் சேருமட்டும் எவ்வளவு வேதனைகொடுக்கிறது. மலையி னின்றிறங்கி தனக்கு உரிய இடமாகிற கடலை நோக்கி விரைந்து ஓடுகிற ஆறு, அப்படி ஓடாதபடி நடுவில் அணைப் போட்டு அதைத் தடுத்தால், நதியின் தண்ணீர் எப்படி பொங்கி எழும்பி கரையை உடைத்து ஓடும்படி நாலுபக்க மும் வழி தேடுகின்றது. அப்படியே பாவியும் தனக்கு ஆநந்த பாக்கிய நிலையாகிற சர்வேசுரனிடம் சேராதபடி நரகத்தில் தடுக்கப்பட்டு மறியட்டதால், அவன் மனம் பொங்கி எழும்பிக் கலங்கி உழன்று படும் துன்பம் எவ்

வளவென்று சொல்ல, எவராலும் ஏலாததாயிருக்கவேண்டும். இந்த ஒரு துன்பத்தின்முன் மற்ற துன்ப வேதனை யாவும் சிறுபிள்ளைகள் விளையாட்டுப்போல் தோன்றும்.

இப்படியாய் சர்வ நன்மை நிறைந்த சம்பூரண பாக்கியமாகிற சர்வேசுரனை இழந்த ஆத்துமம் நரக பாதாளத்தில் அக்கினிக்குள் எத்தனைநாள் இருக்கும்? அந்தப் பாதாள லோகத்தில் நாள் கணக்கு இல்லை. அப்படியானால் எத்தனை வருஷம் செல்லும்? நரகத்தில் வருஷக்கணக்குமில்லை, அப்போது எத்தனை காலம்? நித்திய காலம், என்றென்றும், ஊழியுள்ளகாலம், சதாகாலம், சர்வேசுரன் சர்வ வல்லபமுள்ள சர்வேசுரனுயிருக்குமட்டும், சர்வேசுரனைக் காணுமல், நரக நெருப்பில் வேகவேண்டும். நூறு வருஷங்கள் கடந்தபின்பு வேறு நூறு வருஷம் துவக்கும். ஆயிரம் வருஷங்கள் சென்றபின்பு, வேறு ஆயிரம் வருஷம் துவக்கும். பதினுயிரம் வருஷம் போனபின், இன்னும் பதினுயிரம் வருஷம் துவக்கும். கோடி வருஷம் துவக்கி கோடி வருஷம் முடிந்துபோகும். சதகோடி வருஷம் துவக்கி, துவக்கி, முடிந்து முடிந்துபோகும். நரக ஆக்கினையோ அப்போதுதான் துவக்கினதுபோலிருக்கும். நரக நெருப்பு பலகோடி வருஷம் கடந்த பின்னும் ஆதித் துவக்கத்தில் எவ்வளவு உக்கிரமாய் எரியத் துவக்கினதோ அப்படியே இன்னும் எரியும். பாவி நரகத்தில் விழுந்த முதல் நாளில் எப்படி நரக ஆக்கினையின் கொடுமையை உணர்ந்து பட்டு அநுபவித்தானே அப்படியே இன்னும் அநுபவிப்பான். சர்வேசுரனுடைய கோபம் இவனைச் சபித்து நரகத்தில் தள்ளின முதல் நாளில் எவ்வளவு அகோரமாயிருந்ததோ அப்படியே சற்றும் தணியாமல் பாவிமேல் பொறுத்து நிற்கும்.

கிறீஸ்துவனே! இந்தப் பயங்கரமுள்ள சத்தியத்தைக் கேட்டபின்பு இன்னும் நீ பயப்படுகிறதில்லையா? நித்திய காலம் ஏதென்று நினைக்கிருய்? நாம் சொல்வதைக் கவனித்துக் கேள். நீ ஆயிரம வருஷத்துக்கொருவிசை ஓர் துளி கண்ணீர் சிந்துகிறுயென்று உத்தேசித்துக்கொள்

இப்படி சிந்தும் துளித்துளியான கண்ணீர் எல்லாம் ஒன்று கூடி ஜலப்பிரளயமாய் உலகமெல்லாம் அமிழ்த்தும்படி எத்தனை வருஷங்கள் செல்லும்! உன் கண்ணீர்த் துளிகள் கூடி உலகத்தை அமிழ்த்தினாலும் நரக ஆக்கினையோ முடியாது. இன்னங் கேள்: ஓர் சிட்டுக்குருவி கடலின் தண்ணீரில் ஓர் துளியை வருஷத்துக்கொருவிசை வந்து எடுத்துக்கொண்டுபோனால், கடலின் விஸ்தாரமான ஜலப்பிரவாகமெல்லாம் வற்றி வரண்டுபோகும்படி எத்தனை லெட்சம் கோடி வருஷங்கள் செல்லும்! இவையெல்லாம் சென்று சமுத்திரத்தின் ஜலமே வற்றி காய்ந்து வரண்டு போனாலும் நரக வேதனை அற்பமும் குறையாது, சற்றும் மாறாது, என்றும் முடியாது.

நீ ஒரு வருஷ முழுவதும், ஒரு எண்ணுக்குப்பின் வேறொரு எண்ணை எழுதிக்கொண்டுபோ. இந்தப் பெருந்தொகையால் கூடும் எண்ணின் மொத்தம் எவ்வளவு பெரிதாயிருக்கும். இத்தால் குறிக்கப்பட்ட வருஷங்கள் ஆயிரம்விசை துவக்கி, ஆயிரம்விசை முடிந்தாலும் நரக ஆக்கினை முடியவே முடியாது. பாவிக்கு முடியுமென்ற நம்பிக்கை எவ்விதமும் பிறக்காது. சகோதரரே! காரியம் இப்படியானால், அற்ப சுக வாழ்வைத் தேடி பாவத்தைச் செய்தபிற்பாடு முடிவில்லாத நித்திய நரகாக்கினையாகிற நெருப்பிலே வெந்து தீய்ந்தும் சாகாமல் சாவது புத்தியோ? சொல்லுங்கள்.

மூன்றும் பாகம்

இப்படிக் கொடுமையாய், சர்வேசுரனை எதிர்த்து பகைத்து அவருக்குப் பணிந்து நடக்கமாட்டேனென்று வீம்பு பேசும் பாவி, நரகத்தில் தண்டிக்கப்படுவான். இந்தப் பூமியிலிருக்கும்போது நீ உன் மனப்பூர்வமாய் சர்வேசுரனாகிற உன் ஆண்டவருக்கு ஊழியஞ்செய்ய உனக்குப் பிரியமில்லையோ, மறு உலகில், உனக்கு மனதிருந்தாலும் இல்லாவிட்டாலும், சர்வேசுரனுடைய கோணாத நீதிக்கு, அடிமையாயிருந்து தொண்டு செய்

வாய். சர்வேசுரன் அதி உன்னத கர்த்தர் ஆனதால் சகல ஜீவகோடிகளும் அவருக்கு என்றும் எங்கும் பணிந்து நடப்பது அவர்களுடைய முதல் கடமை. சேசுநாதருடைய பரிசுத்த நாமத்தைக் கேட்கும்போது பரலோக பூலோக பாதாள உலகிலுள்ள சமஸ்தரும் முழங்கால் ஊன்றி நமஸ்காரம் செய்வார்களாக என்பது தேவ வாக்கியம்.

எந்த சிருஷ்டி சர்வேசுரனை வணங்கி அவருக்கு ஊழியஞ் செய்வதில்லையோ, அதை அநந்த நீதி கர்த்தர் பாரபட்சமின்றி தண்டிப்பார். இந்தக் காரணத்தால் சர்வேசுரன் பாவிகளை நரகத்தில் அகோர ஆக்கினையால் தண்டிக்கிறார் என்று நாம் முந்தின பாகத்தில் விவரித்ததைப்பற்றி நீ மலைத்து ஆச்சரியப்படவேண்டாம். இப்படி அற்ப ஜீவனைத் தண்டிப்பது சர்வேசுரனுடைய மட்டில்லா தயாள இரக்கத்துக்கு சரியோவென்று நீ சந்தேகப்பட இடமில்லை. நரகில் வேதனைப்படும் பாவிகளே, சர்வேசுரனைத் தூஷணித்தாலும், அவருடைய நீதியின் நேர்மையை அங்கீகரித்து, ஆண்டவரே! நீர் நீதி உள்ளவர், உமது தீர்மானம் ஞாயம் உள்ளதென்று அவர்களே சொல்லுகிறார்கள். ஏனெனில் பாவம் எல்லா அளவும் கடந்த தோஷமும் அக்கிரமமும் உள்ளதென்று நீ முந்தின தியானப் பிரசங்கங்களால் அற்பமாகிலும் கண்டுபிடித்திருந்தால், அளவில்லா அக்கிரம தோஷத்துக்குத் தண்டனையாக அளவில்லா ஆக்கினையே செல்லும் என்ற இந்த ஞாயம் உன் புத்தியில் உதிக்கும்.

ஆ! பாவம் அற்பமென்று அதைத் துணிந்து செய்யும் மனிதா! நீ இப்போது பயமின்றி சர்வேசுரனை நிந்திக்கிறாய். இதற்கு நீ தப்பிக்கமாட்டாய். இப்போது இந்த உலகத்தில் நீ இருக்குமட்டும் உனக்கு இஷ்டமானால் உன் துர் ஆசையைத் தேடிப் பாவத்தைச் செய். துர்க்கந்த அசுத்தத்தில், புத்தியில்லா மிருகத்தைப்போல், விழுந்து புரண்டுவா. உன் மனம்போல் அநீதமோ, கொடுமையோ அக்கிரமமோ துணிந்து செய். பண ஆசையால் பிறர்

பொருளை அநியாயமாய் அபகரித்து நீதியை உன் காலால் மிதித்து நட. கோவிலேது, குருவேது, சுவாமியேது, தெய்வமேது என்று அவிசுவாசியைப்போல் புலம்பு. ஜெபமும் தபமும் பாவசங்கீர்த்தன முதலிய வேத முறைமைகள் எல்லாம் குருக்கள் கண்ட கனவென்று வெறி கொண்டவன்போல் பேசு. மரத்தில் காய்க்கும் பலாக்காயிலும் உன் கையிலுள்ள நெல்லிக்காய்தான் பெரிதென்றாற்போல், மறு உலக வாழ்வைக் கண்டதார், கேட்டதார் என்று, இப்போது உன் கையிலிருக்கும் அற்பமான உலக சுகபாக்கிய இன்ப சந்தோஷங்களே பெரிதென்று எண்ணி இவைகளைத் தேடுவதில் உன் வாழ்நாள் எல்லாம் வீணாய்ப் போக்கு. ஆனால் நாம் சொல்வதைச் சற்று நின்று கவனித்துக் கேள். உன் கையிலிருக்கும் உலக சந்தோஷமெல்லாம், நீ நினைப்பதைப் பார்க்கிலும் அதிசீக்கிரத்தில் கனவில் கண்ட பணக் குவியல்போல், மறைந்துபோகும், புகைபோல் இருந்த இடந்தெரியாமல் கரைந்துபோம். பளிச்சென்று மின்னி, பார் என்று சொல்லுமுன், மறையும் மின்னல்போல் மறைந்து, இருளாய் முடியும் நரக நெருப்பில் நீ வேகும்போது புத்தி உனக்கு வரும். உன் மயக்கம் தீரும். ஐயோ கெட்டேனே! என்று புலம்புவாய். உன் வாயில் அடித்துக்கொண்டு ஓலமிடுவாய். மூடனைப் போல நடந்து இங்கே விழுந்தேன். கண்ணிருந்தும் காணாத குருடனைப்போல் இந்தப் படுகுழியில் பாழாய் விழுந்தேன். ஓ பணமே! பிணமே! உன்னைத் தேடி உழைத்ததற்கு வந்த கூலி இதுதானா? ஓ! உத்தியோக பெருமையே! உனக்குத் தொண்டுசெய்த என்னை இப்படியா கைவிட்டாய்! ஓ உலகமே! நீ கொடுப்பேனென்று சொன்ன பாக்கியானந்தம் இதுதானா? ஓ என் சரீரமே! உன்னை வளர்க்க நான் இராப்பகலாய்ப் பட்ட பிரயாசத்துக்கு இதுதானா சம்பாவனை? உன்னைச் சந்தோஷப்படுத்த அல்லோ நான் என் ஆத்துமத்தை பாவ அசுத்தத்தில் தள்ளினேன்? உனக்காக அல்லோ என் அழியாத ஆத்துமத்தைப் பாழாக்கிக் கெடுத்தேன்? இதோ இரண்டு பேருங்கூடி இங்கே நெருப்பில் வேகின்றோம்: ஐயோ

ஐயோ! என்று அலறுவாய், புலம்புவாய், அடித்து விழுந்து மோதுவாய், அவஸ்தைப்பட்டு அழுது கண்ணீர் விடுவாய். ஆனால் இவை எல்லாம் வீண். நீ சிந்துங் கண்ணீரால் நரக நெருப்பு அவியாது. நீ விடும் பெருமூச்சால் உன் பாவமும் நீங்காது.

ஓ கிறீஸ்துவர்களே! நாம் இங்கே சொல்வதெல்லாம் இட்டுக்கட்டிய சங்கதி என்று எண்ணவேண்டாம். கதாப் புராணங்களென்று தப்பிதமாய் நினைத்து உங்கள் மனதில் உண்டாகும் பயத்தைத் துரத்தவேண்டாம். நரகத்தைக் கண்டதார், கேட்டதார் என்று மதிகெட்ட நாஸ்திகர் போல சொல்லவேண்டாம். இப்படித்தான் ஒருவன் சொல்லிவந்தான். அவனுக்குச் சம்பவித்ததேதென்று உங்களுக்கு நாம் சொல்லப்போகிறோம். கவனமாய்க் கேளுங்கள்.

வாலிபர் இருவர் சிநேகிதர்கள். ஒருவன் அந்தோனி, பத்தி விசுவாசமுள்ளவன். மற்றொருவன் புத்தியில்லாத மூடாத்மா. ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை சாயரக்ஷை இருவரும் வெளியே உலாவப்போகையில் தேவநற்கருணை ஆசீர்வாதத்துக்குக் கோவிலில் மணி அடிக்குஞ் சத்தம் கேட்டார்கள். அந்தோனி, மித்திரா! வா, கோவிலுக்குப் போவோம். ஆசீர்வாதங் கொடுக்கப்போகிறார்கள், என்றதற்கு, அவன் தோழன் இவனைப் பரிகாசஞ் செய்து, நீ என்ன கிழவியா? சாயரக்ஷையில் கோவிலுக்குப் போக என்ன கடன் உண்டு? வேலையற்ற கிழவிகள்தான் கோவிலுக்குப்போய் செபமாலை மணியை உருட்டி முணங்கிக் கொண்டிருப்பவர்கள், என்று இப்படி தேவதூஷணங் கக்குவதை அந்தோனி கேட்டு, அப்பா இப்படி வாயில் வந்ததெல்லாஞ் சொல்லாதே. இது நரக பாஷை. இந்தப் பாஷை பேசுகிறவர்களுக்கு நரகந்தான் கதி என்றான். இவன் தோழன், கழுதை கத்துவதுபோல் மடமடவென்று சிரித்து, அடே அந்தோனி, நீ மெத்த புத்திசாலி என்று இதுமட்டும் நான் உன்னை மதித்தேன். இப்போது உன்னுடைய மட்டிக் குணம் வெட்ட வெளியானது. நரகமா? யாருடா உனக்கு இந்தப் புத்தி போதித்தது? சிறு

பிள்ளைக்குப் பயம் உறுத்தும்படி நமக்கு ஞான உபதேச காலத்தில் குருக்கள் சொல்லிக்கொடுத்த கந்தப்புராணம். அந்தக் காலம் இப்போது முடிந்துபோனது. படித்துத் தேர்ந்த புத்திமான்களாகிற நாம் இதை நம்புவது நமக்கு அழகல்ல என்று இவ்விதமாய் தூஷண அபத்தங்களை வாய் கூசாமல் சொன்னான். அந்தோணி, இந்த துஷ்டனுக்குப் புத்தி சொல்வது, கழுதைக்கு உபதேசிப்பது போல் பயனற்றதென்று நினைத்து, அவனை நோக்கி: அப்பா, உன் மனம்போல் நீ நட. மெத்தப் படித்த மூஞ்சூறு காடிப்பானையில் விழுந்ததாம் என்ற பழமொழி உனக்குத்தான் செல்லும். நான் கோவிலுக்குப் போகிறேன் என்று சொல்லி நில்லாமல் நேரே கோவிலுக்குப் போனான். ஆசீர்வாத முடிந்தபின், வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து சாப்பிட்டான். அயர்ந்து நித்திரை செய்தான்.

இவன் சிநேகிதன் நாடகம் பார்க்கப் போய் அது முடிந்தபின் நாய்போல் நாலு பக்கமும் அலைந்தபின் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுப் படுத்தான். நடுச்சாமத்துக்குப்பின் அந்தோணி வீட்டுக்கு ஓர் பெண்பிள்ளை ஆத்திரத்துடன் ஓடிவந்து, அப்பா அந்தோணி, வா, சீக்கிரம். உன் சிநேகிதன் மெத்த அவஸ்தையாயிருக்கிறான். உன்னைப் பார்க்கவேண்டுமென்று கூப்பிடுகிறான், என்று கூப்பிட, அந்தோணி உடனே எழுந்து தன் சிநேகிதன் வீட்டுக்குப் போனான். அவன் இருந்த விதத்தைப் பார்த்ததும் அந்தோணி பயப்பட்டு, சிநேகிதா, உனக்கென்ன சம்பவித்தது? சாயரக்ஷை நன்றாயிருந்தாயே, என்ன விசேஷம் என்று கேட்டதற்கு: அவன் ஐயோ என் சரீரமெங்கும் என்னால் பொறுக்கமுடியாத விதனம் இருக்கிறது. நான் சாகப்போகிறேன், சர்வேசுரன் என்னைச் சபித்து நரகத்தில் தள்ளிப்போட்டார். நேற்று நரகமில்லையென்று புத்தியில்லாமல் சொன்னேன். ஐயோ நரகமிருக்கிறது: நான் நரகத்துக்குப் போகிறேன், ஐயோ, ஐயோ, என்று சொல்லும்போது, அந்தோணி அவனைத் தேற்றி, பயப்படாதே, நீ இன்னம் நரகத்துக்குப் போகவில்லை. பூமியில்

தானிருக்கிறுய், குருவைக் கூட்டிவருகிறேன், பாவசங்கீர்த்தனஞ் செய், நரகத்துக்கு நீ போகமாட்டாய், என்றுன். துஷ்ட சிநேகிதன் இதைக் கேளாமல் தன்னைச் சபித்து, தேவ தூஷணஞ் சொல்லி, நரகமே நரகமே என்று கதறி, வாயிலிருந்து நுரையைக் கக்கி வெறி கொண்ட நாயைப் போல் ஊளையிட்டு நிர்ப்பாக்கியனுய்ச் செத்தான்.

சகோதரரே! நரகத்தைக் கண்டதார்? நரக நெருப்பு சுடுமா? யார் பார்த்தது? என்று இவ்விதமாய்ப் பேச வேண்டாம். நரகத்தைக் கண்டதாரா? நீ போய் பார்க்க வேண்டுமா? நல்லது, நாளை நீ போய் பார்ப்பாய், ஆனல் பார்த்தபின் திரும்பி வரமாட்டாய். நரகத்தை யார் பார்த்ததா? ஏன்? நரகத்தைச் சிருஷ்டித்தவரே உலகத்தில் வந்து நரகமிருக்கிறதென்று சொல்லியிருக்கிறுர். இதிலும் என்ன ஸ்திரமான திருஷ்டாந்தம் உனக்கு வேண்டும்? நீங்கள் இதுமட்டும் பாவத்தைச் செய்துவந்தாலும், இன்னும் உங்களை சர்வேசுரன் நரகத்தில் தள்ளாததால் உங்கள் பாவத்தை மறந்துபோனுரென்று நினைக்கிறீர்களோ? அப்படியும் நினைக்கவேண்டாம். உங்களை உடனே தண்டியாதது உங்கள்பேரில் சர்வேசுரன் வைத்த சிநேகத்தால் அன்றி இதற்கு வேறு காரணமில்லை. இதற்காக நீங்கள் நன்றியறிந்திருக்கவேண்டும். உங்களிலும் அதிக சொற்பமான பாவங்களைச் செய்தவர்கள் இப்போது நரகத்திலிருக்கும்போது, உங்களையும் அவர்களைப்போல் சபித்து நரகத்தில் தள்ளாததற்கு சேசுநாதருடைய இருதயத்தில் உங்கள் பேரிலுள்ள விசேஷ பட்சமே காரணமென்று நினைத்து இவ்வளவு பட்சத்துக்கு பிரதி பட்சம் காட்ட இனிமேலாக நல்ல கிறீஸ்துவர்களாய் நடக்கத் துவக்குங்கள். நரகத்துக்குத் தப்பித்துக்கொள்ள என்ன செய்யக்கூடுமோ அதுவெல்லாஞ் செய்யுங்கள். அர்ச். பெர்நர்து ஜெபித்ததுபோல: சுவாமி, இந்த உலகில் நான் இருக்குமட்டும் என்னை வெட்டும், குத்தும், நெருப்பில் சுட்டெரியும், நரக நித்திய நெருப்பில் நான் விழாதபடி என்னைக் காப்பாற்றினல் போதும், என்று நீங்களும் ஜெபித்து மன்ருடவேண்டும்.

இப்போது பாடுபட்ட சேசுநாதருடைய சரூபத்துக்கு முன் சாஷ்டாங்கமாய் விழுந்து சேசுநாதர் உனக்குக் காட்டின சிநேகத்துக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரஞ் செய்து இனிமேல் பாவத்தைச் செய்யமாட்டேனென்று பிரதிக்கினைசெய்.

பாவிகளுக்கு அடைக்கலமான தேவ்தாயாரின் தய வால்தான் நீ நரகத்துக்குத் தப்பினுய். அவளுக்கும் நன்றி யறிந்த ஸ்தோத்திரஞ்செய். அந்தத் தாயின் பாதத்தில் விழுந்து, அவள் உன்னைக் கடைசிமட்டும் காப்பாற்றி, நரக ஆக்கினைக்கு நீ எப்படியாவது தப்பித்துக்கொள்ளும்படி செய்ய, தமது தேவகுமாரன் சேசுநாதரிடத்தில் பிரார்த் திக்கும்ப்படியாய், நீ அவளைக் கெஞ்சிக்கேள்.

தியான முடிவில் பரமண்டல மந்திரம், பிரியதத்த மந்திரம் சொல்லவும்.

இரண்டாம் நாள்—ஞானபோதகம்

பாவங்களுக்குள் மகா விஷம் நிறைந்த பாவம்

இன்று செய்த இரண்டாம் தியானத்தில் அவரவர் சிறு பிராயமுதல் இதுமட்டும் செய்த பாவங்களை எல்லாம் கண்முன் வைத்துப் பார்த்தபோது, அத்தனை பாவங்களுக் குள்ளே ஓர் பாவம் மகா விஷமுள்ள நாகப்பாம்பைபோல் தன் கொடிய நஞ்சை எங்கும் கக்கி, உடலையும் உயிரையும் கெடுத்து மனதில் கலக்கமும் சலிப்பும் உண்டாக்கி, ஓயாத கவலையும் மனக்குத்தும் கொடுத்துவருகிறதாக அநேகம் பேர்கள் துக்கத்தோடு அறிந்திருப்பார்கள். அந்த விஷ முள்ள பாவம் இன்னதென்றறிந்து அதைத் தன் மனதி லிருந்து நீக்கும்படி தியானத் துவக்கத்திலே முயற்சி செய்வது வெகு பிரயோசனமாயிருக்கும்.

மகா ஞானியான சலோமோன் என்றவரைப்போல் புத்தியிலும் யுக்தியிலும் அறிவின் விசாலத்திலும் கீர்த்திப் பிரபல்லியம் பெற்றவர் மனிதருக்குள் ஒருவருமிருந்த தில்லை, இனி இருக்கப்போகிறதுமில்லை. சர்வேசுரனே இவருக்குத் தரிசனமாகி, தந்தை தன் மகனோடு பேசுவது போல் இவருடன் முகங்கொடுத்துப் பேசினார். ஆகிலும் இவர் தன் விர்த்தாப்பிய காலத்தில் தன் சர்வேசுரனை மறந்து, தன்னையும் மறந்து, பிசாசின் சிலைக்கு தூபங் காட்டி, அஷ்டாங்க சாஷ்டாங்கஞ்செய்து வந்ததாக வேத புஸ்தகஞ் சொல்லுகிறது.

வானமண்டலத்தின் உச்சியில் பிரகாச நிறைந்த நட்சத்திரம்போல் மின்னித் துலங்கினவன், கடைசியில் ஒளிமங்கி, நிலைபெயர்ந்து, கீழே விழுந்து நிந்தைபடக் காரணமென்ன? காரணமா? அசுத்த மோகபாவத்தின் கஷ்டத்தில் விழுந்து, விழுந்தவன் தப்பிவர வகையின்றி மாட்டிக்கொண்டான். கடும் விஷம் அவனைத் தீண்டினது. அவன் புத்தியும் அறிவும் மங்கிப்போனது. தேவ ஞான நிறைந்த சலோமோன் அஞ்ஞானியானான். சர்வேசுரன் மனிதனை மகிமையிலுயர்த்தி வைத்திருக்கையில், அவன் அதை மறந்துபோனதால் புத்தியற்ற மிருகங்களுக்குச் சமானமானான், என்ற வேதவாக்கியத்துக்குச் சலோமோன் உதாரணமானான். முன் எவ்வளவு ஞான அறிவால் உயர்ந்திருந்தானோ அவ்வளவு பின் மோகபாவத்தால் தாழ்ந்துபோனான்.

கிறீஸ்துவனே! முந்தின தியானங்களில் பாவம் இன்னதென்று கேட்டாய். சர்வேசுரன் பாவத்தை எவ்வளவு பகைக்கிறாரென்றும், பாவத்தோடு சாகிறவர்களை எவ்வளவு கொடுமையாய் நரகத்தில் தண்டிக்கிறாரென்றும் யோசித்தாய். பாவம் எதுவாயினும் அது நரக ஜன்மம் ஆனதால், பாவத்தில் நரகத்தின் சாயலும், ரூபமும், அச்சுப்போல் பதிந்திருக்கவேண்டும். ஆனதால் யாரிடத்தில் இந்தப் பாவம் குடியாய் புகுந்ததோ அவன் ஆத்துமத்தில் நரகத்தின் சாயலும் முத்திரையும் இருக்-

கிறதென்று சொல்லலாம். அவனுடைய அறிவும் புத்தியும் மங்கிப்போகும். நரகத்தின் அந்தகாரம் அவன் மனசில் மூடத்துவக்கும்.

பாவங்களைப்பற்றி இதுமட்டும் பொதுவாய் தியானித்தபின்பு, இந்த ஒரு பாவத்தை விசேஷித்துக் குறித்து, இதைப்பற்றி யோசிக்க காரணமேதெனில், முக்கியமாய் இந்தப் பாவத்தால் மனிதர்கள் திரளாய் நரகத்தில் விழுகிறார்கள். கிறீஸ்துவர்களுக்குள் பாவத்தால் கெட்டுப் போகிறவர்கள் அநேகமாய் இந்த அசுத்த பாவத்தால்தான் கெட்டவர்கள். ஆனதால் இந்தப் பாவத்தை மற்ற எந்தப் பாவத்தைப் பார்க்கிலும் பகைத்து வெறுக்கும்படி, இதற்குள்ள விஷமும், பொல்லாப்பும் இவ்வளவென்று சொல்வது அவசியம். இதை அறிந்தால், இந்தப் பாவத்தால் கெட்டு நரகத்தில் விழாதபடி வேண்டிய பிரயத்தனங்களெல்லாம் நீங்கள் செய்வீர்கள்.

ஆனால் இந்த அசுத்த பாவத்தின் பெயரை ஓர் சபையில் சொல்வதே அயோக்கியம். அப்படியானால் இந்தத் தேவாலயத்தில், சேசுநாதர்சுவாமிமுன் எப்படி நாம் இதைக்குறித்து தகுந்த வகையில் பிரசங்கஞ் செய்யலாம்.

ஓ! தேவ இஸ்பிரீத்துசாந்துவே! உமது தேவ அக்கினியால் என் நெஞ்சையும் நாவையும் சுத்தமாக்கும். என் வாயிலிருந்து பரிசுத்தமான வார்த்தைகள் புறப்படச்செய்யும். இங்கே சபையாய்க் கூடியிருப்பவர்களின் மனதையுஞ் சுத்தமாக்கி, தூய்மையான நினைவுகள் உண்டாகக் கிருபைசெய்யும். அமலோற்பவியாகிய தேவ கன்னித்தாய் எனக்காக இந்த மன்றாட்டைத் தமது தேவ குமாரனிடம் பெற்றுக்கொடுப்பாளாக.

முதல் பாகம்

வேதசாஸ்திரிகள் சொல்வதுபோல், மனிதன் பாவங்களைச்செய்யும்போது, அந்தந்தப் பாவத்தின் தோஷத்தைக் காட்ட அதற்குரிய ஓர் முத்திரை அவன் ஆத்துமத்தில் பதிகின்றது. அசுத்தப் பாவமாகிற மோக பாவத்தைச் செய்

கிறவனிருதயத்தில் பதியும் முத்திரை, விசேஷமாய் நரகத்தின் முத்திரை. ஆனதால் நரகத்தைக் காட்டும் சாயல் உலகத்தில் எங்கே உண்டு என்று அறியவேண்டுமானால், மோகபாவியினிருதயத்தில் பார்க்கலாம். இது எப்படி என்று நாம் விவரிக்கப்போகிறோம். நீங்களும் கவனமாய்க் கேளுங்கள்.

நரகத்தின் முக்கிய அறிகுறிகள் என்ன? வேதவாக்கியமே இன்னதென்று குறித்துக்காட்டுகின்றது. நரகம் இருள் அடர்ந்து நிறைந்த இடம். கலகமும் குழப்பமும் உள்ள சிறைக்கூடம். பாவிகள் அதில் அக்கினி விலங்கால் கட்டப்பட்டு பசாசுக்கு அடிமைகளாயிருக்கிறார்கள். ஆத்துமத்திலும், சரீரத்திலும், மனிதன் நினைவுக்கு மேற்பட்ட துன்பவேதனைகளால் நரகத்திலுள்ள நிர்ப்பாக்கியர் வருத்தப்படுகிறார்கள். இங்கே நாம் சொல்லிய இந்த நான்கு குணங்களும் மோகபாவியின் மனதில் இருப்பதை எளிதாய்க் காணலாம்.

மோகபாவியின் மனதில் நரக இருள் அடர்ந்தது போல், அவன் புத்தி மங்கிப்போகின்றது. அறிவாகிற கண் கெட்டுப்போகின்றது. அறிவில்லாததால் மிருகத்தைப்போல், தன் சரீர சுக இன்பத்தைமாத்திரம் தேடுகிறான். இந்தப் பாவியைக் குறித்து தேவ வாக்கியம், மிருகமாகிற மனிதன் சர்வேசுரனைச் சார்ந்த விஷயங்களை அறியான் என்று சொல்லுகிறது. மற்றப் பாவங்களைச் செய்யும்போது, புத்தியுள்ள வஸ்துவைப்போலவாகிலும் செய்கிறவன், அசுத்த பாவத்தைச் செய்கையில், மனிதனைப்போல அல்ல, ஓர் மிருகத்தைப்போல் செய்கிறான். அகங்காரம், பொருளாசை முதலிய பாவங்கள் புத்தியுள்ள சிருஷ்டியால் மாத்திரம் செய்யக்கூடும். மோகபாவ விஷயத்தில, புத்தியில்லாத மிருகம், எப்படித் தன்னிடம் எழும்பும் துர் ஆசையைத் தேடி அதை நிறைவேற்றத் திரிகின்றதோ, அப்படியே மோக பாவியும் சுய அறிவை இழந்து, தன் ஆசையைத் தேடி அலைகிறான். இவனுக்கும் மிருகத்துக்கும் இதின் விஷயத்திலுள்ள வித்தியாச

மேதெனில், மிருகத்துக்குப் பாவமில்லாத செய்கையாயிருப்பது இவனுக்குக் கனமான பாவமாகின்றது. நரகத்தைக் குறிக்கும் இந்த முத்திரையை இன்னம் விரிவாய் விவரிக்கப்போகிறோம். நன்றாய்க் கவனித்துக் கேளுங்கள்.

மோக பாவியின் இருதயத்தில் நரக இருள் மொய்த்திருப்பதால், அவனுக்குள்ள சுபாவ அறிவு மங்கிப்போகிறதென்று சொன்னோம். இந்த அறிவு மங்குவதால், அவன் தன்னை மறந்துபோகிறான். தான் செய்யும் பாவத்தின் கனத்தையும் அறிகிறதில்லை. தன்னைச் சிருஷ்டித்த சர்வேசுரனையும் மறந்துபோகிறான். மோக பாவி தன்னையே மறந்துபோகிறானென்று அநுபவ வாயிலாய் கண்ணால் நாள்தோறும் பார்த்துவருகிறீர்கள். இவன் துர்விஷயத்தில் பிரவேசித்தவுடன் தன் குலத்தையும், தன் வம்சத்தின் பெயரையுங் கவனிக்கமாட்டான். தான் இருக்கும் நிலைமையையும், தன்னைச் சுற்றி இருக்கும் பந்துஜனங்கள் சுற்றம் சிநேகிதர் எவரையும், எண்ணமாட்டான். தனக்கிருக்கும் கௌரவம், கீர்த்தி, பெயர் ஒன்றும் மதியான். தன் தேக சௌக்கியத்தை முதலாய் நினையான். இழிவான தன் நடத்தையால், தனக்கும் தன்னால் மற்றவர்களுக்கும் வரும் பழிச்சொல், நிந்தை, வெட்கம், அவமானம், யாதொன்றுங் கவனியான். தான் பார்த்துவரும் வேலைக்கும், தன் வாழ்வுக்கும் உண்டாகும் கஷ்ட நஷ்டங்களை யோசியான். இவன் குடும்பத்தின் தகப்பனானால், தன் பிள்ளைகளை மறந்துபோய், அவர்கள் தெருவில் திரிந்து சீரழிய விடுவான். எஜமானானால், தன் ஊழியருக்குக் காட்டவேண்டிய நன் நடத்தையின் மாதிரியை மறந்துபோய் அவர்களுக்கு ஓர் ஆவலாதியாவான். அறிமுகமுள்ள சிநேகிதனானால், தான் போகவர இருக்கும் வீட்டுக்குத் துரோகஞ்செய்து, அந்த வீட்டின் நல்ல பெயரைக் கெடுத்து, நாலுபேர் சிரிக்கும்படி செய்வான். பெண்சாதியானால், தான் திருச்சபை அறிய பரலோகமும் பூலோகமும் சாட்சியாயிருக்க, தேவாலயத்தில் சபையோர்முன் தன் புருஷனுக்குக் கொடுத்த பிரமாணிக்க வார்த்தையை

மீறி, துரோகஞ்செய்ய அஞ்சமாட்டாள். பெண்பிள்ளையானால், பெண்பாலருக்குச் சிறந்த பூஷணமாகிற கற்பையும், நாணத்தையும், காலில் மிதித்து ஊரார் பழிச்சொல்லுக்கு இலக்காகி, நாய்போல் நாலுதெருவும் அலைந்து திரிவாள். இப்படி மதிகெட்டு, பேரிழந்து திரிபவர்களெல்லாரும் தாங்கள் செய்வது இன்னதென்று சற்றுகிலுங் கவனித்து யோசித்தால், இவ்வித நடத்தையிலுள்ள அயோக்கியமும், அவலட்சணமும் அறிவார்கள். ஆனால் அவர்கள் அப்படி யோசியாதபடி அவர்கள் புத்தியாகிற கண் பாவத்தின் நஞ்சால் மறைபட்டு, ஒளி மங்கிப்போய் விட்டது. அதுவே நரக இருளின் சாயல்.

அன்றியும் அசுத்த பாவி தன்னை மறந்துபோவது மாத்திரமல்ல, தான் செய்யும் ஈனச் செய்கையின் கனத்தையும் மறந்துபோகிறான். அந்தச் செய்கை பாவமாகும்படி வேண்டிய அறிவு மாத்திரம் அவனிடமிருக்கின்றது. கிறீஸ்துவர்களே! நாம் விவரிக்கும் இந்த விஷயத்தைக் கவனித்துக் கேளுங்கள். ஒருவனுக்கு சாதாரணமாய் எந்தக் காரியத்தில் அநுபவமுண்டோ, அவன் அநுபவத்துக்குத் தக்கது, அவனுடைய அறிவும் அதின் விஷயத்தில் விர்த்தியாகும். அப்படியே வியாபாரத்தில் பழகி வருகிறவன் அதில் பழகப் பழக, அநுபவமும் பெருகும். அநுபவம் வளர சாமர்த்தியமும் வளரும். மோக பாவத்தின்மட்டில் இதற்கு முழுதும் விரோதமாய்ச் சம்பவிக்கும். யார் இந்தப் பாவத்தைச் செய்கிறதில்லையோ, அவன்தான் அதின் கனத்தையும் ஈனத்தையும் நன்றாய் அறிவான். தன் ஆத்தும இரட்சண்யத்துக்கு இந்த ஒரு பாவத்தால் வெகு மோசம் வரக்கூடுமென்றும், அதற்கு எந்தவகையிலும் தப்பித்துக்கொள்வது தன் கடமை என்றும், திண்ணமாய் எண்ணி, அதற்குத் தகுந்த உபாய வழிகளைத் தேடுவான். ஆனால் மோக பாவத்தில் பழகி வருகிறவன், இதற்குள்ள விஷமும், இழிவும், பொல்லாப்பும், எவ்வளவென்று சரியாய் அறியமாட்டான். இது அற்பக் காரியமென்று எண்ணி, எச்சரிக்கையின்றி நடந்து, பாவத்தை எளிதாய்ச் செய்வான். அவன் மனம் பாவத்தில்

பழகப் பழக, கல்போல் கெட்டியாகும். பாவத்தைப் பகிரங்கமாய், வெட்கமின்றி, துணிந்து செய்வான். செய்த பாவத்தை தன்னோடொத்தவர்களுக்கு நாணமின்றி பெருமையாய்ப் பேசிச சொல்லிக் காண்பிப்பான். இதற்கு உதாரணங் கேளுங்கள்: அர்ச். ஸ்தனிஸ்லாஸ், சரீரமுள்ள சம்மனசுபோல் இந்தப் பரிசுத்த புண்ணியத்தைப் பழுதின்றி மகா எச்சரிக்கையுடன் பாதுகாத்து வந்தார். அதனால் எவனாகிலும் அவர் காதில் விழும்படியாய் ஓர் அயோக்கியமான வார்த்தை சொன்னால், அவர் இதைக் கேட்ட உடனே, மலர்ந்த புஷ்பத்தின் நொய்ய இதழ்மேல் கொஞ்சம் வெயில் பட்டதும், வாடி வதங்கிக் கீழே விழுவது போல், ஸ்தனிஸ்லாஸ் சோர்ந்து மயங்கி கீழே விழுவார். அர்ச். சவேரியார், ஓர் சொர்ப்பனத்தில், பெண்பிள்ளை ஒருத்தி வஸ்திரம் அலங்கோலமாய் வருவதைப்போல் கண்டு, பட்ட பயத்தால் அவருடைய இரத்த நரம்புகளிலொன்று அறுந்துபோக, வாயிலிருந்து இரத்தத்தைக் கக்கினாரென்று அவருடைய சரித்திரத்தில் சொல்லி இருக்கின்றது. பரிசுத்த புண்ணியவாளர் இப்படி பாவத்தின் நிழலைக் கண்டமாத்திரம் கலங்கிப் பதறி பயப்படக் காரணமேதென்றால், இவர்கள் பரிசுத்தக் கற்பைக் கனமாய் மதித்து அதற்கு விரோதமான எந்தச் செய்கையையும், வார்த்தை, நினைவையும் அரோசித்து வெறுத்துப் பகைத்ததால், அசுத்த பாவத்தின் நிழலுக்கும் இப்படிப் பயப்பட்டார்கள்.

ஆனால் கிறீஸ்துவர்களில் அநேகர் இப்படி நினைக்கிறதில்லை. மோக பாவத்துக்கு அடுத்த செய்கைகளை வெட்கமின்றிச் செய்வார்கள். துர்பாஷையைச் சந்தோஷமாய்க் கேட்பார்கள். தாங்களும் வாய் கூசாமல் சொல்லுவார்கள். மனசுக்குள் பாவ ஆசைக்குச் சம்மதித்து பாவத்தைச் செய்து, அதன்பின் இதுவெல்லாம் ஒன்றுமில்லை என்பார்கள். வெறும் பரிகாச விநோதம் என்பார்கள். அயோக்கியமான சேஷ்டைகளைச் செய்து விளையாடி, இதுவெல்லாம் உலக வழக்கம், ஜாதி முறை, தேச ஆசாரம் என்பார்கள். கலியாண முதலிய குடும்ப சம்பந்தமான சுபநாட்

களில் பல அசுசியான சடங்கு வழக்கங்களை உண்டாக்கி, இவைகள் ஜாதி வழக்கமென்றும், இதில் பாவம் இல்லையென்றும், வேதசாஸ்திரம் படித்த பரம ஞானிகளைப் போல், ஞாயம் பேசுவார்கள். அஞ்ஞான புராணங்களையும், அவலக்ஷண கதைகளையும், சிற்றின்பப் பாட்டுகளையும் பாடியும் படித்தும் வந்து, இதுகால வழக்கம் என்பார்கள். சிறு பிள்ளைகள் அதப்பிய வார்த்தை சொன்னால், அதைக் கேட்டும் தாய் தகப்பன், பந்து ஜனம், ஆ! ஆ! பிள்ளை எப்படி சமர்த்தாய்ப் பேசுகிறதென்று மெச்சிப் புகழ்வார்கள். பெண்கள் கதைகளை வாசித்து துர்பாஷை பேசி துர்சேஷ்டைகள் செய்துவந்தால், இதுதான் தற்கால நாகரீகம் என்பார்கள். திருநாள் உற்சவ தினங்களில் பொம்மைகளைப்போல தங்களைச் சிங்காரித்து, முகத்தை மினுக்கி, வாசனை பதார்த்தங்களை எங்கும் பூசி, அடக்கமின்றி வெளியே புறப்பட்டு, பிறரைப் பார்க்கவும், பிறர் தங்களைப் பார்த்து மகிழவும், எங்கும் அலைந்து திரிவார்கள். கோவிலுக்கு வரும்போது முதலாய் தேவ ஆலயமென்று சற்றும் எண்ணாமல், தங்கள் நடை உடை பாவனையில், இலௌகீக சிந்தனையுள்ளவர்களாய் துர்க்கருத்துடன் தங்களைக் காட்ட வருவார்கள்.

சகோதரரே! நாம் சொல்லும் இவைகளைக் கேட்டபின் உங்களில் சிலர் நினைப்பதேதெனில், ஓ! இவர் அற்பக் காரியத்தைக் கனமானதென்று காட்டி பயம் உறுத்துகிறாரே! அணு மலையாகுமா? ஆறு துளி சேர்ந்து காவேரியாகுமா? என்று நினைக்கலாம், வாயாலும் சொல்லலாம். அற்பக் காரியமென்று நீங்கள் சொல்லுகிறீர்கள். சர்வேசுரன் அப்படி நினைக்கிறாரா? நீங்களே அவஸ்தையாய்ப் படுத்திருக்கும்போதும், சர்வேசுரனுடைய நீதி சிம்மாசன முன் நிற்கும்போதும், இவைகள் அர்ப்பக்காரியமென்று நினைப்பீர்களா? இவைகள் பாவமாகமாட்டாதென்று சொல்வீர்களா? பாவம் அல்லவா? அல்லவென்று யார் உங்களுக்குச் சொன்னது? இவைகள் எல்லாம் மனதறியச் செய்யும்போது பாவம்; அநேக சமயங்களில் கனமான பாவம் என்று நாம் சொல்லுகிறோம்.

உங்களில் சிலர், உலகத்தின் மத்தியில் அஞ்ஞானிகள் நடுவில் ஜீவிக்கும் நாங்கள், உலகத்தோடொத்து வாழ் என்னும் நீதிமொழிப் பிரகாரம், ஜாதி முறை ஆசாரம் சடங்குகளை அனுசரித்தால் அல்லோ, இந்து மதத்தார் எங்களை மதித்து குலாசார முறை வழுவாமல் நடக்கிறவர்களென்று எங்களை மெச்சிப் பேசி மதிப்பார்கள் என்பார்கள். ஓ! ஓ! அப்படியா? உலக மத்தியில் நீங்களிருப்பதால் சர்வேசுரனுடைய கற்பனைகளை மீறி நடக்க உங்களுக்கு உத்தரவுண்டோ? உலகத்தாரான இந்துக்களின் மதிப்பு பெறும்படி, சர்வேசுரனுக்குத் துரோகம் செய்வீர்களோ? ஆனால் சகோதரரே! அஞ்ஞான் உலகம் சேசுநாதரால் சபிக்கப்பட்டதென்பது உங்களுக்குத் தெரியாதா? உலகத்தோடொத்து வாழ் என்ற சுலோகத்தில், உலகம் அக்கிரமிகள் வாழும் மூடர்களின் உலகமல்ல. புத்திமான்களான சான்றோருடைய சபைதான் இதில் உலகமென்பது. ஆனதால் கிறீஸ்துவர்கள் புத்திமான்களான பெரியோர்போல், தாங்கள் அநுஷ்டிக்கும் வேத ஒழுங்குப் பிரகாரம் நடப்பதுதான் அவர்களுக்கு அழகும், யோக்கியமுமாகும்.

அன்றியும் நீங்கள் சொல்லும் ஞாயம் அஞ்ஞானிகளுக்குத்தான் இசைந்த ஞாயம், கிறீஸ்துவர்களுக்குத் தகுந்ததல்ல. ஏனெனில் அஞ்ஞானிகள் வணங்கும் தேவர் தேவதைகள் துன்மார்க்க செய்கையில் தங்கள் நாட்களை செலவழித்ததாக அவர்கள் புராணங்களே சொல்லுகிறபடியால், இவர்களை வணங்குகிறவர்களும் தங்கள் தேவர்களைப்போலவே அசுத்த பாவத்தின் கஷ்டத்தில் தங்கள் நாளையும் செலவழிப்பது அவர்களுக்கு இயற்கையாகும். ஆனால் சேசுநாதர் படிப்பித்த பரிசுத்த வேதத்தில் பிறந்து வளர்ந்துவரும் கிறீஸ்துவன், அஞ்ஞானியைப்போல் பேசுவானானால், அவன் கிறீஸ்துவனோ அல்லவோவென்று சந்தேகப்பட இடமிருக்கும்.

காமாதுரன் தான் செய்யும் பாவத்தின் கனத்தையும் அதின் தோஷத்தையும் மறந்துபோகிறானென்று காண்பித்திருக்கிறோம். இனி தன் சர்வேசுரனையும் மறந்துபோகிறா

னென்று காண்பிக்கப்போகிறோம். கவனமாய்க் கேளுங்கள். கிறீஸ்துவர்களுக்குள்ளே எந்த ஊரிலும், தெய்வமேது குருவேது, நரகமேது மோக்ஷமேது, யார் கண்டது யார் பார்த்தது, என்று இவ்விதமாய்ப் பிதற்றி பாவசங்கீர்த்தனமின்றித் திரிபவர்கள் உண்டல்லவா? இவர்கள் சாதாரணமாய் எவ்வழி நடப்பவர்களென்று தெரியுமா? இவர்கள் மோக பாவத்தின் கஷ்டத்தில் விழுந்தவர்கள். புத்தியாகிற கண்ணை இழந்து, விசுவாசத்தின் தேவப் பிரகாசமின்றிப்போனதால் இவர்கள் இப்படி அபத்தத்தைப் பிதற்றுகிறார்கள். இவர்கள் தங்கள் மனம்போல், யாதோர் கட்டுப்பாடின்றி, துர் இச்சையின் பிரகாரம் நடக்க விரும்புவதால், சர்வலோக ஆண்டவர் ஒருவர் இருக்கிறாரென்றும், நரகமாகிற ஆக்கினை ஸ்தலம் உண்டென்றும் நினைக்க பயப்படுகிறார்கள். இவர்கள் இப்படி தாங்கள் முன் உறுதியாய் விசுவசித்துவந்த சத்தியங்களை இப்போது இல்லையென்று நினைப்பதானது தன் கண்ணிலே தானே மண்ணை வாரிப் போட்டுக்கொள்வதற்கொப்பாகும். வேத வாக்கியம் சொல்லுவதுபோல் துஷ்டன் தன் மனசுக்குள் தெய்வமில்லையென்று சொல்லுவான். இவ்விதம் மோக பாவி, தன்னையும் தான் செய்யும் பாவத்தின் கனத்தையும், தன் சர்வேசுரனையும் மறந்துபோகிறான். அவன் மனசில் நரக இருள் அடர்ந்து இருக்கின்றது. இதுவுமன்றி நரகத்திலுள்ள கலகமும் குழப்பமும் பசாசுகளின் நிர்ப்பந்தமும் மோக பாவியின் மனசில் உண்டாயிருக்கின்றது. இது எப்படி என்று இந்த இரண்டாம் பாகத்தில் விவரிக்கப்போகிறோம்.

இரண்டாம் பாகம்

எவன் அசுத்த பாவத்தின் கஷ்டத்தில் விழுகிறானோ அவன் மனதில் சமாதானம் அமரிக்கை, ஒழுங்கு என்பது ஒன்றுமிருக்கமாட்டாது. எல்லாம் அலங்கோலையும் கலகமும், குழப்பமும், ஒழுங்கீனமுந்தான். இதற்குக் காரணமேதெனில், சர்வேசுரன் மனிதனை உண்டாக்கியபோது அவனுடைய கிரியையும் நடத்தையும் சீராய் இருக்கும்படி பத்

தியை இராஜாவாக ஸ்தாபித்து, இதற்கு மற்ற தத்துவங்கள் புலன்கள், ஆசை, எல்லாம் கீழ்ப்படிந்து நடக்கும்படி நியமித்தார். இப்படியிருக்க, ஒருவன் மோக பாவத்தைச் செய்யும்போது, தன் புத்தியின் அரசைக் கீழே தள்ளி, அதற்குப் பதிலாக ஐம்புலன்களின் பற்றையும், ஆசையையும் நிலைநிறுத்தி, அவைகளை எஜமான்களாக்குகிறான். இப்படிச் செய்வதால், புத்தியில்லாத மிருகங்கள் எவ்விதம் நடக்கின்றனவோ, அவ்விதமே இவனும் நடக்கிறான். சில சமயங்களில் மிருகங்களிலும் தாழ்வாய் ஈனமாக நடப்பான். ஏனெனில் மிருகங்களுக்கு சுபாவமாய்ப் பகுத்தறியும் புத்தி இல்லாததால், அவைகள் தங்களுடைய இயற்கை உணர்ச்சியின் பிரகாரம் செல்லுகின்றன. மோக பாவியோவெனில், தன் ஐம்புலன்களின் ஆசைப்பிரகாரம் நடக்கும்படி தனக்கிருக்கும் புத்தியை துர் விஷயத்தில் செலுத்தி, மிருகங்களும் செய்ய அறியாத இழிவான காரியங்களைச் செய்து வெகுவாய் தாழ்ந்துபோவான். அப்படித்தான் பூர்வ காலத்திலிருந்த சோதோம் கோமோரா என்ற ஐந்து பட்டணங்களிலுள்ள ஜனங்கள் அசுத்த பாவத்தை இழிவாய்ச் செய்து, நாணமின்றி நடந்துவந்ததால், சர்வேசுரன் இத்தனை அசுத்தத்தைப் பார்க்கச் சகியாமல், வானத்திலிருந்து அக்கினி, மழைபோல் ஓயாமல் விழும்படி செய்து, இந்த ஐந்து பட்டணங்களிலிருந்த அசுத்த மோக பாவிகள் அனைவரையும் சுட்டு சாம்பலாக்கி அவர்கள் குடியிருந்த பூமி, உலகத்திலுள்ள ஜனங்களுக்கு எந்தக் காலத்திலும் அச்சம் வருவிக்கும் அறிகுறியாயிருக்க அந்த ஸ்தலத்தைக் கந்தகமும் உப்புங் கலந்த அசுத்த தண்ணீருள்ள கடலாய் மாற்றி, அதற்குச் சாக் கடல் என்ற பெயரைக் கொடுத்தார். இந்த நீரில் உயிருள்ள எந்தப் பிராணியும் ஜீவிக்க முடியாது. இந்தக் கடலில் ஸ்நானம் செய்தால், தேகமும் கண்களும் காந்தலெடுக்கும். அதைச் சுற்றிலுமுள்ள தரையில் புல்லாவது செடியாவது மருந்துக்கும் அகப்படாது. சர்வேசுரனுடைய நீதியின் ஆக்கினையென்று இதைப்பார்க்கும் எல்லோருக்குந்தானே தோன்றும். அசுத்த பாவத்தின் அவலக்ஷண

ரூபத்தைக் கண்ணுக்குப் புலப்படக் காட்டும் ரூபக உதாரணம் இந்த சாக்கடல். இன்றைக்கும் அதைப்பார்க்கலாம்.

கிறீஸ்துவர்கள் சபையில் இந்த சாக்கடல் இல்லையா? ஓ! காலம் எப்படி கெட்டுப்போய்விட்டது. சிறுவரும், வாலிபரும் இந்தப் பாவக்கடலில் பெரும் சுழலில் அகப்பட்டு கெட்டு அலைகிறார்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் இயல்பில் இருக்கும் கெட்ட சுபாவம், பாவத்துக்கு அவனைத் தூண்டப் போதாதென்றாற்போல், கெட்ட புஸ்தகங்களைத் தேடிப் போகிறார்கள். அவலக்ஷண பொம்மைகளையும் சித்திரப் படங்களையும் வைத்துப் பார்க்கிறார்கள். அசுத்த விஷம் கண் வழியாகவும், காது வழியாகவும் ஆத்துமத்துக்குள்ளே பிரவேசிக்கின்றது. நாடகங் கூத்து, நடனம், தேர் திருவிழா இவைகளைப் பார்க்கப்போய் பாவத்தைப் பார்த்து படித்து வருகிறார்கள். இந்தச் செய்கைகளால் பாவம், காட்டில் காய்ந்த புல்லில் பிடித்த நெருப்புப்போல், சூழப்பரம்பி எல்லாரையும் அசுத்தப்படுத்துகின்றது. இந்தப் பாவத்தின் கொடுமை இவ்வளவு தானோ? வேதசாஸ்திரி ஒருவர் சொல்வதுபோல், மோக பாவம் மற்றப் பாவங்களோடு இணைந்து சேர்ந்து, இருதலை நாகம்போலிருக்கின்றது. இந்த ஓர் பாவத்துக்கு மற்றப் பாவங்கள் தொண்டு செய்யும் அடிமைகளாக இதின் கால் அண்டையில் காத்துக்கொண்டிருக்கின்றன.

இந்த அசுத்த பாவத்தின் நிமித்தம் கொலைபாதகன் இரத்தத்தைச் சிந்துகிறான். கொடுந் துரோகி நஞ்சு கலந்து உயிரைக் கொல்லுகிறான். வஞ்சகன் அவதூறும் புறணியும் நாலாபக்கமும் தூற்றுகிறான். ஐயோ! எத்தனை சிசுக்கள் தாயின் கர்ப்பத்தில் மடிகின்றன. எத்தனை குழந்தைகள் பிறந்தவுடனே இறந்துபோகின்றன. இந்த மோக பாவத்துக்காக, அதிகாரம் பெற்றவன் அநியாயம் செய்கிறான். பொருளாசை உள்ளவன் பணத்தைக் கூட்டுகிறான். ஊதாரி பணத்தை இறைக்கிறான். குடும்பங்களிலிருக்கும் மனஸ்தாபமும், வீட்டிலிருப்பவர்களுக்குள் வரும் சண்டையும், பகையும் விரோதமும், தரித்திரமும்,

வியாதியும், இன்னம் எண்ணுக்கள் அடங்காத துன்பங்களும், அசுத்தப் பாவத்தால் உண்டாகின்றனவென்று எல்லோருக்குந் தெரியும். ஆனால் வெளியே சொல்வது வெட்கக்கேடென்று, வேறு முகாந்தரங்களை வெளிக்குச் சொல்வார்கள்.

இதுவுமன்றி மோக பாவத்தைச் செய்பவர்களின் நெற்றியில் நரக முத்திரை இருப்பதால், இவர்கள் பசாசுக்கு அடிமைகளாய், அசைந்து அப்பால் பெயராதபடி, பலமான சங்கிலிகளால் கட்டப்பட்டிருக்கிறார்கள். ஒரு பிசாசுக்கு ஏழு பிசாசுகள் இவர்கள் மனசில் குடிகொண்டு கொடுங்கோல் அரசர்போல் இவர்களை வெகு கொடுமையாயும் ஈனமாயும் நடப்பிக்கின்றன. இதை மனிதர்களுக்குக் காண்பிக்கும்படி சேசுநாதர்சுவாமி சொல்வதாவது: ஒருவன் இருதயத்திலிருந்து ஓர் அசுத்த அரூபி வெளிப்பட்டால், அது தன்னோடு வேறு ஏழு அசுத்தப் பசாசுகளைச் சேர்த்துக்கொண்டு தான் முந்தி இருந்த ஆத்துமத்துக்குள் பிரவேசிக்க தன்னால் கூடியமட்டும் பிரயாசைப்படும். இத்தனை பசாசுகளுக்கு அடிமையான மோக பாவி, எப்படித் தப்பித்து வரக்கூடும்? ஆயிரஞ் சங்கிலிகளால் அவனைக் கட்டினதுபோல், அவன் புத்தியை மங்கச்செய்து மனசை பாவத்தின் பக்கந் திருப்பி, விசுவாசத்தைக் குறைத்து, துர்க்குணங்களைப் பலப்படுத்தி, பாவ தந்திர மாய்கைகளை அவனைச் சுற்றிலும் வலையாய் விரித்து, தேவதிரவிய அநுமானங்களை அவன் பெறாதபடி தடுத்து, இப்படியாய் அவனைக் கடும் சிறையில் அடைக்கும்.

சிறையில் அடைபட்டு, சங்கிலிகளால் கட்டுண்டு நிற்கும் பாவி, எப்படி தப்பி வெளியே வருவான்? சேற்றுக்குள் இரு காலும் இடுப்புமட்டும் பதிந்துபோனால், வெளியே நீ எப்படி வருவாய்? ஒருகாலை ஊன்றி, வேறு காலை பிரயாசையுடன் தூக்கினால், ஊன்றிய கால் இன்னம் ஆழமாய்ச் சேற்றுக்குள் பதியும். இப்படிப் பாவச்சேற்றில் மாட்டிக்கொண்ட துன்மார்க்கன், தன்னையே

பொறுக்கமாட்டாமல் வருந்துவான், புலம்புவான், தன்னையே சபிப்பான். அவன் மனசில் புழு ஒன்று உற்பத்தியாகி ஓயாமல் அவனைக் கடித்து, அவன் இரத்தத்தைக் குடிப்பதாகத் தோன்றும். அவன் சரீரமே குஷ்டரோகியின் சரீரம்போல் பெருத்துப் புழுத்து, இரணமாய் வெடித்து நாற்றம் வீசும், நரகம் இது அல்லாவிட்டால் வேறு எப்படி நரகம் இருக்கும்?

கிறீஸ்துவனே! இதுவெல்லாம் நீ நன்றாய் யோசித்துப் பார்த்தால், இனிமேல் இந்த அசுத்தப் பாவத்தைச் செய்யத் தேடுவாயோ? இந்த உலகத்திலேயே மோக பாவி படுந் துன்பங்களைக் கண்டாவது பயப்படவேண்டாமா? உன் சரீரம் தேவதிரவிய அநுமானங்களால் அர்ச்சிக்கப்பட்டு, அபிஷேகம் பெற்று, சர்வேசுரனுக்குத் தேவாலயமாயிருக்க, நீ அதைப் பசாசின் குடியிருப்பாய் மாற்றுவது தகுமோ? இதுமட்டும் கவனியாது நீ நடந்தால், இனிமேலாகிலும் கிறீஸ்துவனுக்கு யோக்கியமாய் நட. நரக விஷம் நிறைந்த இந்தப் பாவத்தை நீ பகைத்து, இனி இதைச் செய்யாமலிருக்க உனக்கு மனம் உண்டானால், நாம் மூன்றும் பாகத்தில் காட்டும் உபாய வழிகளைப் பிரயோகிக்கும்படி ஸ்திரமான பிரதிக்கினை செய்.

மூன்றும் பாகம்

முந்திய இரண்டு பாகங்களில் நாம் சொல்லிய விஷயங்களைக் கவனமாய்க் கேட்டிருந்தால், மோக பாவம் எவ்வளவு விஷமுள்ளதும் ஆபத்துள்ளதும், மோசமானதுமான பாவம் என்றும், அதில் பழகிவருகிறவர்கள் எப்படி நரக முத்திரை பெற்று சபிக்கப்பட்டவர்களாகிறார்களென்றும், கொஞ்சமாகிலும் நீங்கள் மனதில் சார உணர்ந்திருக்க வேண்டும். இப்படி உணர்ந்தால் இந்தப் பாவத்தைச் செய்யாமலிருக்க மனசு உங்களுக்கு வந்திருக்கும். ஆனால் இனி நான் இந்தப் பாவத்தை செய்யமாட்டேனென்றால் மாத்திரம் போதாது. சொல்வதற்கிசைவாய் தகுந்த முயற்சி செய்து, ஏற்ற சாதனங்களையும், உபாய வழிகளையும் தேடிப் பிரயோகிப்பதவசியம். இந்த வழிகள் இன்ன

தென்று சுருக்கமாய் இங்கே காட்டப்போகிறோம். இனிப் பின்வரும் தியானங்களில் அவைகளைப் பல இடங்களில் விரிவாய்க் காணலாம்.

அசுத்த பாவத்தைச் செய்யாதபடி ஏதுவான பல வழி உபாயங்களுக்குள்ளே மகா முக்கியமானது, பாவத்துக்கு ஏதுவாயிருக்குஞ் சகல விஷயங்களையும், சர்வ ஜாக்கிரதை யுடன் நீக்கிவைப்பது என்று நன்றாய் அறியவேண்டும். அப்படியே இந்த இடங்களுக்குப் போவதும், அந்த வகை பேர்வழிகளுடன் பேசிப் புழங்குவதும், இந்த சமயத்தில் இங்கே இருப்பதும், அந்தக் கதைப் பாட்டுகளை வாசிப் பதும் அல்லது கேட்பதும், ஆகிய இவைபோன்றவைகள் உனக்குப் பாவத்துக்கு ஏதுவான விஷயம் என்று நீ உன் அநுபவத்தால் அறிந்தால், அவைகளை முழுதும் நீக்கி வைப்பது மகா அவசியம். இல்லாவிடில் நீ தப்பாமல் பாவத்தில் விழுவாய். ஆபத்தை நாடுகிறவன் ஆபத்தில் வீழ்ந்து அழிவான் என்பது வேதவாக்கியம்.

இரண்டாம் வழி ஏதெனில், உன்னுடைய பஞ்சேந் திரியங்களை, முக்கியமாய் உன் கண், காது, வாய் என்ற இந்த மூன்றையும் அடக்கி ஒடுக்கி அவைகள் இஷ்டம் போல் நாலு பக்கமும் அலைந்து திரியும்படி விடாமல் காப் பது. துர் நினைவும் அதனால் வரக்கூடும் சந்தோஷமும் உன் மனதில் தோன்றுதபடி, இவைகளைப் பிறப்பிக்கக் கூடிய எந்த செய்கையையும் காரியத்தையும் ஜாக்கிரதை யுடன் தூர நீக்கி வைக்கவேண்டும். இதுவுமன்றி ஒவ் வொருவரும் தன் இருதயத்தின் சிநேகம், இங்குமங்கும் தகாத பேர்வழிகள்மேல் செல்லாதபடி, கண்ணுண்டா யிருந்து, கவலையுடன் காப்பாற்றுவது முக்கிய சாதனம். அநேகம் பேர்கள், முக்கியமாய் இளவயதுள்ளவர்கள், இதைக் கவனியாததால், சிநேகம் கபடமாய்ப் பின்னும் பாசவலையில் சிக்கிக்கொண்டு, வெளியே வரக்கூடாமல் பெரும் ஆபத்துக்குள்ளாகிறார்கள்.

அன்றியும் தேவநற்கருணையாகிற பரிசுத்த அப்பம் பரிசுத்தத்தைக் காப்பாற்றும் அற்புத போஜனம். எவ்

வளவில் நீங்கள் இந்தத் தேவபோஜனத்தை அடிக்கடி சாப்பிடுவீர்களோ, அவ்வளவில் நீங்கள் ஆத்துமத்திலுஞ் சரீரத்திலுஞ் சுத்தமுள்ளவர்களாயிருப்பீர்கள்.

கடைசியில் பரிசுத்த கற்பை பழுதின்றி காப்பாற்ற ஆசையாயிருப்பவர்கள், அமலோற்பவியான தேவதாயின் மேல் பத்தி சிநேகம் உள்ளவர்களாய் அவள் அடைக்கலமிருந்து வாழ்வது சுகிர்தம். ஆபத்துவேளையில், பசாசின் தந்திரம் முதிர்ந்து பலமாய் எதிர்த்து வரும்போது, தாயைத் தேடி, பிள்ளை ஓடுவதுபோல், தேவதாயின் உத்வியைத்தேடி, என் ஆண்டவளே! என் தாயாரே! என்ற அற்புத ஜெபத்தை மனசோடு சொல்ல பழகவேண்டும். எத்தனையோ பேர்கள் ஆபத்தில் அகப்பட்ட காலத்தில், தேவமாதாவைக் கூப்பிட்டதால், பாவத்தைச் செய்யாமல் பரிசுத்தமாய் நடந்து, பாக்கியமான மரணம் அடைந்தார்கள்! நீங்களும் அவர்களைப்போல் நடங்கள். தயையுள்ள தேவதாய் உங்களைக் காப்பாற்றுவாள். இந்த ஒரு பாவத்துக்குத் தப்பித்துக்கொள்வது பெரும்படைக்குத் தப்பித்துக்கொள்வது போலாகும். இந்த ஒரு பாவம் உங்கள் ஆத்துமத்தை பிடித்தால், பெருங்குஷ்டம்போல் உங்கள் இரத்தத்தை நஞ்சாக்கி, உயிரைக் குறைத்து, நித்திய சாவு வரும்படி செய்யும். ஆனதால் நாம் இங்கே சொல்லிய புத்தியை நன்றாய் உங்கள் மனசில் பதியுங்கள். இந்தப் புத்தியின் வழி நடந்தால் பரிசுத்தமாய் ஜீவித்து நித்திய மோட்சபாக்கியம் அடைவீர்கள்.

மூன்றாம் நாள்—முதல் தியானம்

நரக வேதனை

விவரம். ஒரு தியானப்பொருளை இன்னம் ஒருவிசை யோசித்துப்பார்ப்பது வெகு பிரயோசனமுள்ள தென்று அர்ச். இஞ்ஞாசியார் சொல்லுகிறார். அதினிமித்தம், நரகத்தின்பேரில் இன்னம் ஒரு தியானம் சேர்த்திருக்கிறோம். இப்படி இரண்டாம் விசை யோசிக்கும்போது, இதில் சுலபமும், பிரயோசனமும் உண்டாகும்படி, பஞ்சேந்திரியங்களின் பிரயோகத்தால் இந்தத் தியானம் செய்யும் வகையைக் காட்டுவோம். தியானம் எளிதில் யாவரும் செய்யும்படியாய் அர்ச். இஞ்ஞாசியாரே இந்த உத்தம வழியைக் காட்டியிருக்கிறார்.

அர்ச். தெரேசம்மாள் ஆத்தும குருவானவருக்குக் கீழ்ப்படிந்து, தானே தனது ஜீவிய வரலாறுகளை எழுதித் தந்த புத்தகம் 32-ம் அதிகாரத்தில் பின்வரும் அற்புதமான வர்த்தமானம் காணப்படுகின்றது. ஒருநாள் ஜெபத் தியானமாயிருக்கும்பொழுது, திடீரென்று பரவசமாகி எவ்விதமென்று தனக்கே தெரியாமல், ஒருக்ஷணப் பொழுதில் ஆத்தும சரீரத்துடன் தான் நரகத்திலிருப்பதாகக் கண்டாள். நரகத்தின் கொடிய உபாதையையும், தன் ஆத்தும சரீரத்திலும் பட்டநுபவிப்பதாக உணர்ந்தாள். நரகத்தில் குறிப்பாக ஓரிடம் அவளுக்கு காண்பிக்கப்பட்டது, பசாசுகள் அந்த இடத்தை ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்ததாகவும், இளம்பிராயத்தில் தன் ஜீவியத்தை மாற்றாதிருந்தால், தான் வந்து சேரவேண்டிய இடம் அதுவென்று தேவதிருவுளத்தால் அறிந்து, சர்வாங்கமும் அகோர வாதையுற்று பயந்து நடுநடுங்கினாள்.

“வெகு சொற்பநேரந்தான் இந்த காட்சி நீடித்திருந்தது; இது சம்பவித்து இப்பொழுது பலவருஷங்களாயும் அதன் ஞாபகத்தை மறக்க என்னால் முடியாது” என்று எழுதியிருக்கிறாள். இந்த சொற்ப நேரத்தில்

நரகத்தில் தான் கண்ட மகா பயங்கரமான காட்சிகளையும் தானே தன் சரீரத்திலும், விசேஷமாய்த் தன் ஆத்துமத்திலும் பட்டநுபவித்த கொடிய உபாதைகளையும் விரிவாய் எழுதி, நரகத்தில் தான் கண்டதையும் அநுபவித்ததையும் உள்ளபடி எடுத்துரைக்க மானிட பாஷைகளில் வார்த்தைகளில்லையென்று கூறியிருக்கிறுள். இங்கு சொல்லப்பட்ட அர்ச். தெரேசம்மாள் தன் ஜீவியகாலமெல்லாம் யாதொரு கனமான குற்றமும் செய்தவளல்ல. தன் ஜீவிய காலமெல்லாம் ஒரு சம்மனசுபோல் ஆத்தும சரீரத்தில் பரிசுத்தவதியாயிருந்தவள். இளம்பிராயத்தில் அர்ச். தெரேசம்மாளிடத்திலிருந்த குற்றங்களெல்லாம் வீண் பேச்சு, சற்றே வீண் பெருமை முதலிய சொற்ப குற்றங்களேயன்றி வேறல்ல. ஆனுல் சொற்பக் குற்றங்குறைகளும், அவைகளைத் திருத்தாதிருந்தால், வரவர பெரும் பாவங்களுக்கும், பெரும் பாவங்களால் கடைசியாய் நரகத்துக்கும் வழியாகிவிடுமென்று அர்ச். தெரேசம்மாள் கண்ட காட்சியில் தெளிவாய் அறிந்துகொள்ளலாம்.

ஓ! கிறீஸ்துவர்களும், இப்படியே தங்கள் நினைவால் சமயததுக்குச் சமயம் நரகத்திலிறங்கி, அங்கே தங்களுக்காக பிசாசுகள் தயார்செய்திருக்கும் இடத்தில் சற்று நேரம் நின்று எல்லாம் பார்த்து யோசித்து, இந்த இடத்தில் நித்தியகாலம் இருப்பது தங்களுக்கு சம்மதமோவென்று கேட்டு வருவார்களேயாகில், அர்ச். தெரேசம்மாளைப்போல் புண்ணிய வழியில் பத்தி விசுவாசத்தோடு எப்போதும் நடந்து தங்கள் ஆத்துமத்தை இரட்சிப்பார்கள். அர்ச். பெர்நார்து என்ற மடாதிபதி தமது சந்நியாசிகளைப்பார்த்து: சகோதரரே! இறந்தபின் நரகத்தில் நாம் விழாதபடி, உயிரோடிருக்கும்போதே நரகத்தில், நினைவால் இறங்கிப் பார்ப்போமாக, என்று சொல்வார். அதுபோல், நாமும் இப்போது நமது தியான யோசனையால் நரகத்தில் இறங்கிப் பார்க்கப்போகிறும். நாம் இந்தத் தியானத்தில் சொல்லும் பல விஷயங்களை நீங்கள் கண்ணுல் பார்த்து, காதால் கேட்டு, கையால் ஸ்பரிசிப்பதாக சிந்தித்துக்கொள்ளுங்கள்.

ஓ! சர்வ வல்லப சர்வேசுரா, என் விண்ணப்பத்துக்குக் காதுகொடுப்பீராக. சுவாமி! நான் இனி எப்போதாகிலும் உமது தயவையும் இரக்கத்தையும், சிநேகத்தையும் பாராமல், உமக்கு ஊழியஞ் செய்ய தவறி மறந்துபோவேனுகில் உமது நீதியின் அகோரத்தைக் கண்டு அஞ்சிப் பயந்தாகிலும் உமக்கு ஊழியஞ் செய்யும்படியாக, உமதுமட்டில் பயம் என் மனதிலும் என் மாம்சத்திலும் ஆழமாய்ப் பதியும்படி செய்ய உம்மை மன்றாடுகிறேன். இந்த தேவ பயம் என்னிடத்திலும் நான் சொல்வதைக் கேட்கிறவர்களிடத்திலும் உண்டாகும்படியாய் இஷ்டப் பிரசாதத்தின் தாயாகிய தேவ ஆண்டவள் எனக்குத் துணையாய் வருவாளாக.

முதல் பாகம்

கிறீஸ்துவர்களே! உங்களுடைய காவல் சம்மனசு இங்கே தரிசனமாய் வந்து, உங்களைத் தன் பின் வரும்படி கூப்பிட்டு, உங்களைக் கூட்டிப்போய், நரக வாசலின் கதவின் சமீபத்தில் நிறுத்திவைத்திருப்பதாக நிதானித்துக் கொள்ளுங்கள். உள்ளே பிரவேசிக்குமுன் சற்று நேரம் நின்று, நரகம் உண்டென்பது சத்தியப்பிரமாணமென்று நாம் எல்லோரும் விசுவாச முயற்சி செய்வோம். ஆண்டவரே! சத்திய சுரூபியாகிய தேவரீர் நரகம் உண்டென்று படிப்பித்தீர், இந்த சத்தியத்தை நான் உறுதியாக விசுவசிக்கிறேன். என் சொந்த மனமே தேவரீர் வாக்கு மெய்யென்று சாட்சியாயிருந்து சொல்லுகின்றது. நரகம் உண்டென்பது சத்தியம். சத்தியத்தூணுகிற கத்தோலிக் சபையும் ஆக்கினை நிறைந்த ஸ்தலமாகிற நரகம் உண்டென்று எனக்குத் தவறு வாக்கோடு படிப்பிக்கின்றது. என் சர்வேசுரா, என் விசுவாசத்தை ஸ்திரப்படுத்தும்.

கிறீஸ்துவர்களே! இதோ நரகம், பாதாள உலகம், நன்றாய்ப் பாருங்கள். பூமியின் கீழ், கண்ணுக்கு எட்டாத தூரம், நாலு பக்கமும் விஸ்தாரமாய்ப் பரம்பி விரிந்து

அகன்று இருக்கின்றது. இதின் ஆழமும் உயரமும் எவ்வளவென்று யார் அளந்து கணிப்பார்! அதோ அங்கே, எப்படி அக்கினி அடியிலிருந்து உயர உச்சிமட்டும் எழும்பி சுழன்று தாவி, பொங்கிக் கொதித்து, சுவாலை விட்டு எரிகின்றது. இது என்ன? அக்கினி சமுத்திரமோ? பெரும் நெருப்பின் சுவாலைகள் அலைகள்போல் தாவி உயர எழும்பி மோதி மோதி உடைகின்றதே! அல்லது இது ஓர் பிரமாண்டமான காளவாய்ச் சூளையோ? அல்லது கெந்தகமும் குங்கலியமும், வெடி உப்பும், கலந்து, பொங்கிக் கொதித்து, அதிர்ந்து வெடித்து, சுடாமல் எரியும் அக்கினிப் பிரவாகமோ? பாருங்கள்! அந்த அக்கினி சுடாமல் சுடுகின்றது. சுட்ட பொருளும் நீறுகாமல் வேகின்றது. இதின் காங்கையும் உக்கிரமும் கொடுமையும் வெகு விசேஷமுள்ளது. தேவ நீதியின் கோபத்தால் மூட்டப்பட்ட அக்கினி! சர்வேசுரனைப் பழித்துப் பகைத்த பாவிகளைத் தண்டிக்கும்படியாகவே சிருஷ்டிக்கப்பட்ட அக்கினி! கிறீஸ்துவனே! இதை நன்றாய் உற்றுப்பார். உன் கையால் தொட்டு உணர்ந்து அறிந்துகொள். இப்படி அறிந்தபின் இந்தக் கொடிய அக்கினியின் மத்தியில் குடியிருப்பது உனக்குச் சம்மதமோ என்று உன்னையே கேள்.

இந்த அக்கினிச் சமுத்திரத்தில் அடர்ந்து கூடி நெருங்கி விழுந்து கிடப்பவர்கள் யாரென்று கிட்ட வந்து உற்றுப்பார். இவ்வளவு அவலக்ஷணமுள்ள கோர ரூபிகள் யார்? பற்பல வகையான துஷ்ட மிருகங்களின் உருவத்துடன், நீண்ட பல்லும், அக்கினிப் பொறி பறக்கும் கண்களும், விஷத்தைக் கக்கும் நாக்கும், பெருத்து நீண்ட நகங்களுமுள்ள, இந்த ஜீவப்பிராணிகள் யார்? இவர்கள்தான் பசாசுகள். மனிதருடைய ஜென்ம சத்துருக்கள், சர்வேசுரனுடைய விரோதிகள். உலகத்தில் மனிதரைக் கெடுக்கும்படி சுற்றித்திரியும்போது வேஷம்போட்டு, அசுத்த அரூபிகளான இந்தப் பேய்கள் சிலசமயம், பிரகாசமுள்ள சம்மனசுகள்போல் தோன்றி, உங்களுக்குச் சிநேகிதர் போல் மாய நட்பு காட்டி, விஷத்தைப் பழத்துக்குள்

மறைத்தாற்போல், பாவத்தை இன்பமாய்த் தோற்ற வைத்து உங்களைக் கெடுக்கும்படி உங்களை விடாமல் இராப் பகலாய் சுற்றிச்சுற்றி வந்து, விழிப்பாயிருந்தவர்கள். நரகத்திலேயோ, தங்கள் கபட நாடக தந்திரமெல்லாம் அநுகூலமாய் முடிந்ததால் சந்தோஷங்கொண்டாடி, பாவி கடைசியில் தங்கள் கையில் விழுந்தானென்றும், இனி தப்பிப் பிழைத்துப்போக மாட்டானென்றும் துள்ளிக்குதித்து, தங்களுடைய கோபம் பகை பழியை எல்லாம் அவன்மேல் செலுத்துகிறார்கள்.

இதோ அங்கே கூடி இருக்கும் பாவிகளைப் பார். உன்னைப்போல் அவர்களும் மனிதர்களாய் உலகத்திலிருந்தவர்கள். இப்போது நரக நெருப்பில் வேகிறார்கள். எப்பேர்ப்பட்டவர்கள் இவர்கள்? ஆங்காரிகள், கோபிகள், உலோபிகள், திருடர், கொலைபாதகர், அயோக்கியர், காமாதுரர்! எவ்வகைப் பாவங்களையும் மனம்போல் செய்துவந்தவர்கள். இங்கே துஷ்ட மிருகங்களைப்போல் சிறையில் அடைபட்டிருக்கிறார்கள். சேசுநாதர் படிப்பித்த சத்திய வேதத்தை அறியாதவர்களும், அறிந்தும் அதை ஏற்றுக்கொள்ளாதவர்களுமான அஞ்ஞானிகள், குறும்பாடுகளைப்போல் கூட்டம் கூட்டமாய் கும்பலாய்க் கூடி இருக்கிறார்கள். இந்த அக்கினி சமுத்திரத்தில் கிறீஸ்துவர்கள் இல்லையா? நன்றாய்க் கவனித்து உற்றுப்பார். அதோ, அங்கே இருப்பவர்கள் யார்? அவர்கள் நெற்றியில் ஞானஸ்நானத்தின் அழியாத அக்ஷரம் பதிந்திருக்கின்றது. அவர்கள் சத்தியவேதக் கிறீஸ்துவர்கள். இதற்குச் சந்தேகமில்லை. அவர்களே சொல்லுகிறார்கள். அவர்களில் உனக்குத் தெரிந்தவர்கள் யாரும் உண்டா? உன் சொந்தத்தார், உன் சிநேகிதர், அயலார், அண்டைவீட்டார், உன்னோடு படித்துவந்தவர்கள், ஒரே வீட்டில் வளர்ந்தவர்கள். ஒரு வயசுப் பிள்ளைகள், அதோ பார் அங்கே உனக்குமுன் வந்திருக்கிறார்கள்.

சற்று அப்பால் நடந்துபோ. இதோ இந்த மூலையின் கிட்ட வா. அங்கே நெருப்புமயமாய் எரியும் அக்கினிக் கட்டிலைப் பார். அதைச் சுற்றிலும் எத்தனை பசாசுகள் பயங்

கர ரூபமாய் காத்திருக்கிறார்கள்! உன் கிட்டயிருக்கும் காவல் தூதனைப் பார்த்து: ஓ என் பிரிய சம்மனசே! இந்த அக்கினிக் கட்டிலைப் பசாசுகள் யாருக்காக தயார்செய்து காத்துக்கொண்டிருக்கிறார்கள்? யார் இங்கே வரப்போகிறான்? உன் சம்மனசு சொல்வதைக் கேள்: தம்பி! உனக்குத்தான். நீ இங்கே வருவாயென்று பசாசுகள் திண்ணமாய் எண்ணி இடம் உனக்குத் தயார் செய்து வைத்திருக்கிறார்கள். நீ அந்த நாளில் சாவான பாவஞ் செய்தாய். அன்றே நீ இங்கே வரவேண்டியது. சர்வேசுரன் கிருபையால் நீ அன்று சாகவில்லை. ஆனால் இன்னொருவிசை நீ தப்பமாட்டாய். சர்வேசுரன் கிருபை என்றும் உனக்கு வரமாட்டாது. ஆனதால் இந்த இடத்தைக் குறிப்பாய்ப் பார்த்துக்கொள். நீ நித்தியகாலம் குடி இருக்கவேண்டிய இடம் இதுதான். இதுமட்டும் கவலையின்றி நடந்தாற்போல் இனிமேலும் நீ நடப்பாயாகில், இந்த அக்கினி கட்டிலிலே நீ படுத்திருக்க வருவாய் என்பதைப்பற்றி சந்தேகப்படத் தேவையில்லை. படுகுழி இருக்கும் பாதை வழியாய் கண்ணை மூடி நடக்கிறவன் கடைசியில் குழியில் விழுவானென்று சொல்லும்படி சாஸ்திரம் படிக்கவேண்டுமா?

ஓ! கிறீஸ்துவனே! இந்த இடத்தைவிட்டு அப்பால் போகுமுன், இன்னம் கொஞ்சம் நேரம் நின்று இந்தக் கொடிய அக்கினியின் மத்தியில் இருப்பது உனக்குப் பிரியமோவென்று உன்னையே கேள்.

இரண்டாம் பாகம்

நரகத்திலுள்ள ஆக்கினைகளின் அகோரத்தைக் கண்ணால் பார்த்தபின்பு, அங்கேயிருந்து புலப்படும் சத்தத்தைக் கொஞ்சம் காது கொடுத்து கேட்போம். ஓ! என்ன பேரிடி முழக்கம்! அர்த்த இராத்திரியில் ஜனங்கள் அயர்ந்து நித்திரை செய்யும்போது, திடீரென்று ஊரிலே வீடுகள் எங்கும் நெருப்பு பிடித்தால் எவ்வளவு சத்தம், எவ்வளவு கூக்குரல், பேரிரைச்சல், எவ்வளவு அழுகையும் புலம்பலும், கதறலும் உண்டாகுமென்று சிலவிசை நீங்கள் கேட்டிருப்பீர்கள். இதிலும் இலட்சம் மடங்கு அதிகமாய்

நரகத்தில் பாவிகளும் பசாசுகளும் கதறுகிறார்கள், அலறுகிறார்கள், புலம்புகிறார்கள், பிரலாபிக்கிறார்கள், ஊளையிடுகிறார்கள், சபிக்கிறார்கள், தூஷணஞ் சொல்லுகிறார்கள், ஐயோ ஐயோவென்று வாயில் அடித்துக்கொள்ளுகிறார்கள், ஒருவரொருவரைத் திட்டுகிறார்கள்..

அதோ அங்கே அக்கினி நடுவிலிருக்கும் சிறு பிள்ளைகள் கதறிச் சொல்வதைக் கேளுங்கள். அவர்களில் சிலர் ஏழு, எட்டு, ஒன்பது, பத்து வயசுள்ள பாலர்கள். ஐயோ! நாங்கள் இந்தப் பால்ய வயசிலே நரகத்தில் விழும்படியாகவோ தாய் தந்தைகளே, நீங்கள் எங்களைப் பெற்றீர்கள்? கிறீஸ்துவ வம்சத்தில் பிறந்தும், அஞ்ஞானிகளைப்போல் நரகத்தில் விழுந்தோமே! ஏன் நீங்கள் எங்களுக்கு ஜெபமும் ஞான உபதேசமும் சொல்லிக்கொடுக்கவில்லை? ஏன் எங்களைக் கிறீஸ்துவப் பிள்ளைகளைப்போல் புண்ணிய வழியில் நடத்தவில்லை? நீங்கள் நல்ல கிறீஸ்துவர்களாய் நடந்தால், நாங்களும் உங்களைப்போல் நடந்திருப்போமே! ஓ! நாங்கள் உங்களுக்குப் பிள்ளைகளாய் பிறந்த நாள் சபிக்கப்பட்ட நாள்! உங்களுக்குப் பிள்ளைகளாய் நாங்கள் பிறவாமல் ஆடுமாடாய் பிறந்திருந்தால், இந்த நரகத் துன்பம் வந்திராதே. ஆ! சர்வேசுரா, நீதிபரனே! உயிருக்கு உயிர், ஆத்துமத்துக்கு ஆத்துமம் பழிவாங்கவேண்டும் என்று சபிக்கிறார்கள். ஓ! தாய் தகப்பன்மார்களே! இதை நன்றாய்க் கவனித்துக் கேளுங்கள். இந்தப் பிள்ளைகள் நரகத்திலிருந்து கதறிச் சொல்லும் வார்த்தைகள் உங்கள் ஞாபகத்தில் எப்போதுமிருக்கட்டும்.

இதோ! இங்கே வந்து பாருங்கள். இளவயதுள்ள வாலிபர்கள். இவர்கள் அழுது புலம்பும் வார்த்தைகளைக் கேளுங்கள்: ஐயோ! இது நரகமா! நான் கிறீஸ்துவனா? ஏன் இங்கே விழுந்தேன்? அந்தத் துஷ்டனோடு கூடி வாழ்ந்ததால் இந்தப் பெரும் துன்பம் வந்தது. துர்ப்பழக்கம் அவனால் ஆரம்பித்தது. நான் இந்த வழியில் நடக்கத் துவக்கும்போது, என் குருக்கள், என் தாய் தந்தை எனக்குப் புத்தி சொல்லி தடுக்கப் பிரயாசப்பட்டார்கள். பாவத்

தோடு பழகவேண்டாமென்று பலசமயம் சொன்னார்கள். ஆனால் நான் வாலிப மயக்கத்தால் அவர்கள் சொல்லைக் கவனிக்கவில்லை. இஷ்டம்போல் எங்கும் போவது புருஷ இலட்சணமென்று பெருமை பேசினேன். சுகபோகத்தில் உழன்று திரிவதும், குடிவெறியால் அறிவிழந்து குழியில் விழுந்து கெடுவதும், வாலிபர்க்கு அழகென்று வீம்பு பேசினேன். பாவக் கஷ்டத்தில் பலநாள் விழுந்து, அசுத்தத்தை அள்ளி அள்ளிச் சாப்பிட்டு, பன்றிபோல் திரிந்தேன். இதோ அதற்குச் சம்பாவனை என்று, இப்படிச் சொல்லி வாலிபன் தன்னைச் சபிப்பான். தன்னைக்கெடுத்த தோழர்களையுஞ் சபிப்பான். தனக்குத் துணையாய் நின்ற எல்லாரையுஞ் சபிப்பான்.

புருஷன் தன் பெண்சாதியைச் சபித்து திட்டிச் சொல்வதைக் கேள்: ஐயோ கொடுமையே! பாதகி! உனக்காக வேண்டி அல்லோ நான் என் ஆத்துமத்தைக் கெடுத்தேன். உனக்குப் பிரியப்பட அல்லோ பணங்காசு அநியாயமாய்ச் சம்பாதித்தேன். உன் அலட்டலுக்கு அஞ்சி அல்லோ நான் துர்விஷயத்தில் பிரவேசித்தேன். தங்கநகை வேண்டுமென்றும், பட்டுச் சேலை வேண்டுமென்றும், நல்ல சாப்பாடு வேண்டுமென்றும், இவள் அவளைப்போல் உண்டு உடுத்தி நடக்கவேண்டுமென்றும் நீ என்னை ஓயாமல் கேட்டாய். உனக்குத் திருப்தி வருவிக்க நான் அக்கிரமத்தைச் செய்து இந்த நரகக் குழியிலே வந்து விழுந்தேன். உன்னால் நான் கெட்டேன் என்று புலம்பி அழுவான்.

இவன் பெண்சாதி வேறுபக்கத்திலிருந்து தன்னையும் தன் புருஷனையும் சபித்து தூஷணிப்பாள். தேவநீதியின் இடி அவன் தலைமேல் விழவேண்டுமென்று பிரார்த்திப்பாள். தன் கேட்டுக்கு அவனே காரணமென்றும், அவனை நம்பி தன் தாய் தந்தையின் வீட்டைவிட்டு வந்தபின் அவனே தன்னை நரகத்தில் பிடித்து தள்ளிப்போட்டானென்றும் பழி எல்லாம் அவன் தலைமேல் சுமத்துவாள்.

தாய் தந்தை, தங்கள் பிள்ளைகளைச் சபித்து தூஷணிப்பார்கள். எல்லோருங்கூடி, ஐயோ! ஐயோவென்று அல

றுவார்கள். என் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரன் இப்போது மோக்ஷத்திலிருக்கிறானே! நானும் அவனைப்போல் மோக்ஷத்திலிருக்கலாமே! ஏன் நான் இங்கே விழுந்தேன்! எனக்கு இதெல்லாம் முன்னமே எச்சரித்துச் சொன்னார்கள். நான் தியானத்திலும், பிரசங்கத்திலும், நரக ஆக்கினையைப்பற்றி பலதரம் கேட்டிருந்தேன். ஒருநாள் ஓர் குரு பயங்கரமான ஓர் பிரசங்கம் நரகத்தின்பேரில் செய்தார். என் ஞாபகத்தில் அது இன்னம் அப்படியே இருக்கின்றது. எனக்கு நரகத்தில் பசாசு தயார் செய்திருந்த இடத்தையே அவர் காட்டினார். நானும் பார்த்தேன். பயந்தேன், பாவத்தை விடுவேனென்று பிரதிக்கினை செய்தேன். என் ஆத்துமத்தை எப்படியாகிலும் இரட்சிப்பேனென்று துணிந்து சொன்னேன். ஆனால் கோவிலைவிட்டு வெளியே வந்தவுடன் மனசு மாறினது. பிரதிக்கினை மறைந்தது. இனிமேலாகட்டும், என்ன ஆத்திரம் என்றேன். பரமகோழையாய் துணிந்ததைச் செய்ய துணிவில்லாமல் நின்றேன். நாணலைப்போல் வளைந்தேன், பாசிபோல மனந்தளம்பினேன். சரீரத்தை இன்பசுகத்தில் வளர்த்து மரணசமயத்தில் மனந்திரும்பலாமென்று பாவத்தைச் செய்தேன். பாவச்சுழலில் அகப்பட்டேன், தப்பி வெளியே வரக்கூடாமல் திகைத்தேன். நிற்பாக்கியனாய்ச் செத்து நரகத்திலே விழுந்தேன். ஓ! என்னைப்போல் மதிகெட்டவன் எங்கேயாகிலும் உண்டா? ஓ! மூடன் நான்! ஐயோ ஐயோ என்று அலறி அழுது தவிப்பான்.

கிறீஸ்துவனே! நரகத்திலிருந்து உண்டாகும் பெரிய முழக்கம்போன்ற அழுகைக் குரலையும், தூஷண வசையையும், காதால் கேட்டபின், அதிலிருந்து புறப்படும் துர்க்கந்த நாற்றத்தை நுகர்ந்துபார். அசுத்த அரூபிகள் வாழும் இடம் அசுத்தமுள்ளதாயிருக்கவேண்டும். இந்த உலகத்தில் சில சமயங்களில் ஒரே ஒரு பசாசு தன்னைக் காண்பித்தபோது அதிலிருந்து வந்த நாற்றம் எவராலும் பொறுக்கக்கூடாத துர்நாற்றமென்று சொல்லும்போது, கோடானுகோடி பசாசுகள் கூடிவாழும் இடம், துர்க்கந்தம் புழுத்துநாறும் அசுத்த கிடங்காயிருக்கவேண்டுமல்

லவா? இந்தப் பசாசின் நாற்றத்துடன் பாவிகளுடைய நாற்றமும் கூடினால், இதனால் உண்டாகும் துர்நாற்றம் நரகத்தில் உள்ளவர்களுக்கு மாத்திரந்தான் தெரியும்.

இதன்பின் நரகநெருப்பின் கொடுமையை உன் கையால் ஸ்பரிசித்துப்பார். உன்னால் இந்த அக்கினியின் உக்கிரமத்தைப் பொறுக்கக்கூடுமா? உன் வீட்டில் எரியும் தூண்டா விளக்கில் உன் சிறு விரலை ஒரு நிமிஷம் வைத்திருக்கமாட்டாத நீ, எப்படி இவ்வளவு கொடுமையாய் எரியும் அக்கினிச் சூளையிலே, ஒரு நிமிஷமல்லவே, ஒரு வருஷமல்லவே, நித்தியகாலமாய், நீடூழிகாலமாய், வெந்து வெந்து சாகாமல் வெந்து, உணர்ச்சி மாறாமல் இருந்து வேவாய்!

கிறீஸ்துவர்களே! இந்தச் சத்தியத்தைக் கொஞ்சம் ஊன்றிக் கவனமாய் யோசியுங்கள். நாம் இங்கே சொன்னதெல்லாம் மெய்யென்று, நீங்களே இப்பொது செய்தது போல் வெறும் நினைவால் மாத்திரம் அல்ல, நிச்சயமாகவே ஸ்பரிசித்து, அறிந்து உணரும் காலம் சிலவிசை வந்தாலும் வரலாம். அப்போது மனஸ்தாபப்படுவது வீண். கண்ணீர் சிந்துவது வீண். சர்வேசுரனைப் பிரார்த்திப்பது வீண். இப்போதுதான் தகுந்த காலம். மனஸ்தாபத்துடன் கண்ணீர் சிந்தினால் அந்தக் கண்ணீர் உங்கள் பாவத்தைக் கழுவும். ஆத்துமம் சுத்தமாகும். இதைப்பற்றி நீங்கள் இன்னம் நன்றாய் யோசிக்கும்படி பின்வரும் மூன்றாம் பாகத்தைக் கவனமாய்க் கேளுங்கள்.

மூன்றும் பாகம்

நரக பாதாளத்தில் நீ உன் யோசனையால் இறங்கி அங்கே பார்த்தவர்களுக்குள்ளே இத்தனைபேர் கிறீஸ்துவர்களைப் பார்த்தாயல்லவா? இந்தக் கிறீஸ்துவர்கள் யார்? சத்திய வேதத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். சேசுநாதர் ஸ்தாபித்த கத்தோலிக் சபையின் பிள்ளைகள். தேவதிரவிய அநுமானங்களைப் பெற்றவர்கள். ஒரு காலத்தில் தேவ இஷ்டப்பிரசாதத்தால் அலங்காரம்பெற்று மோக்ஷத்துக்குச் சுதந்தர உரிமை உள்ளவர்களாயிருந்தவர்கள்.

அவர்களில் சிலர் யூதாஸ், ஊத்தேர் என்பவர்களைப்போல் உன்னத அந்தஸ்துக்குத் தேவ அழைத்தல் பெற்று, திருச்சபையின் பிரபுக்களாயிருந்தவர்கள். இவர்கள் நன்றாய்த் துவக்கினார்கள், ஆனால் துவக்கினதை நன்றாய் முடிக்கவில்லை. வானமண்டலத்தில் பிரகாசிக்கும் நட்சத்திரங்களைப்போல் விளங்கினவர்கள், அதிலிருந்து விழுந்து, ஒளி இழந்து, உருக்குலைந்து சேற்றில் அழுந்திப் புதைந்தார்கள். ஆ! இவர்கள் இதற்கு ஒரு மாசத்துக்குமுன், அல்லது ஒரு வருஷத்துக்குமுன், மரித்திருந்தால், இப்போது மோக்ஷ இராச்சியத்தில் சம்மனசுகள் மத்தியில் ஆனந்த பாக்கியம் அனுபவித்திருப்பார்கள். அப்போது சாகாமல், ஒரு வருஷமோ, ஒரு மாசமோ, ஒரு நாளோ, கூட ஜீவித்தார்கள். அதற்குள் இஷ்டப்பிரசாதத்தை இழந்து, பசாசுக்கு அடிமைகளாகி, நரகத்தில் விழுந்தார்கள். ஆ! கிறீஸ்துவனே! நீ இப்போது இஷ்டப்பிரசாத அந்தஸ்திலிருந்தாலும், இதிலே நீ சாகுமட்டும் இருப்பாயென்று சொல்ல என்ன ஆதாரமுண்டு? இதை நினைக்கும்போது பயந்து நடுங்காதவன் யார்? உலகத்தை வெறுத்து சந்நியாச அந்தஸ்தைத் தெரிந்துகொண்டு, தங்கள் ஆத்துமத்தை இரட்சிக்கும்படியாய், அதே கவலையாய் இருக்க வேண்டியவர்களும் சிலசமயம் அதை மறந்து மோசம் போனால், உலக கவலைக்குள் அமிழ்ந்தி, அதின் துர்க்கந்த மத்தியில் ஜீவித்து, சோதனை தந்திரங்களுக்கு இலக்காகி இருக்கிறவர்கள் எப்படி பயமின்றி ஜீவிக்கக்கூடும்?

ஓ! என் திவ்விய கர்த்தரே! சுவாமி! என்னைச் சபித்து நரகத்தில் தள்ளவேண்டாம். தேவரீர் எனக்காக சிந்தின இரத்தத்தைப் பார்த்து, உமது இருதயத்தில் என் பேரிலுள்ள சிநேகத்தைப்பற்றி, என்னை இரட்சிக்கும்படியாய் தேவரீர் சிலுவையில் மரித்ததின்பேரால், என்னை நரகத்தில் தள்ளவேண்டாம். தேவரீர் என் நிமித்தம் பட்ட துன்ப வருத்தம் வீணாய்ப்போகும்படி சம்மதிப்பீரோ? மண்ணால் உருவாக்கப்பட்ட இந்த அற்ப வஸ்து உமது கோபத்தைத் தாங்கும்படி ஏதுவானதோ? இந்த மனிதன் நரகத்தில் விழுவானேயாகில், உம்மைப் புகழ்ந்து ஸ்துதிக்க

மாட்டானே. சுவாமி! என்னை நரகத்தில் தள்ளுவீரானால் உமது தேவ நாமத்தைத் தூஷணிக்கிறவர்களுடைய கூட்டத்திலல்லோ சேர்ந்துவிடுவேன்!

ஆனால் கிறீஸ்துவர்களே! சர்வேசுரன் நீதியுள்ளவர். அவர் சொல்லும் தீர்ப்பு நேர்மை உள்ளது. எது நீதியோ, எது கிரமமோ, அதை அணுப்பிரமாணமும் பிசகாமல் செய்வார். நீங்களும், நாமும், எந்த சிருஷ்டியும், சர்வேசுரனுக்குத் தேவையில்லை. நாம் கெட்டாலும், வாழ்ந்தாலும் அவருடைய மகிமையும் பாக்கியமும் குறையாது. ஆகையால் நாம் பாவஞ் செய்து பாவத்தோடு செத்தால் சர்வேசுரன் நம்மை யார் எவரென்று பாராமல், நீதியின்பிரகாரம் நரகத்தில் தள்ளுவார்.

சகோதரரே! நாம் சொல்வதெல்லாம் வீண் கதையென்று உத்தேசிக்கவேண்டாம். இதுவெல்லாம் சத்தியப் பிரமாணம். புண்ணிய வழியில் என்றும் நிலைநிற்க ஏற்ற புத்திகள். இதையெல்லாம் கண்டும் கேட்டும் அறிந்த பின்பு, உங்கள் மனசு இன்னம் அசையாவிடில், நீங்கள் பாவத்தைவிட இன்னம் துணியாதேபோனால், உங்களிடத்தில் தேவ விசுவாசமில்லை. அஞ்ஞானிகளிலுந் தாழ்ந்தவர்களாகிறீர்கள் என்று நினைக்கவேண்டியிருக்கும்.

இந்தப் பயங்கரமுள்ள சத்தியம் உங்கள் மனசில் நன்றாய்ப் பதியும்படி சேசுசபையாரான அர்ச். எரோனிமோ என்பவர் சரித்திரத்தில் உள்ள ஓர் வர்த்தமானத்தைக் கேளுங்கள். அர்ச். எரோனிமோ இத்தாலியா நாட்டின் ஓர் பட்டணத்தில் ஜனங்களுக்குத் தியானப்பிரசங்கம் கோவிலில் செய்துவந்தார். கோவிலுக்குச் சமீபத்திலுள்ள ஓர் வீட்டில் கத்தரீன் என்ற துர்மார்க்க ஸ்திரீ சாயரக்ஷை பிரசங்க வேளையில் நடனமும் பாட்டும், உல்லாச மகிழ்ச்சியுஞ் செய்து, பிரசங்கத்தைக் கலைக்கும்படி பார்த்தாள். எரோனிமோ என்பவர் என்ன சொல்லியும் கேளாமல் அப்படியே செய்துவந்தாள். மறுநாள் இராத்திரி எரோனிமோ நரகத்தின்பேரில் பிரசங்கஞ் செய்தார். பிரசங்க மத்தியில் சற்று நேரம் பரவச நிலையில் நின்றவர்

போல் மௌனமாயிருந்து தூரப் பார்த்தார். அதன்பின் கத்தரீன் இருந்த வீட்டின் பக்கந் திரும்பி, அங்கே சத்தம் ஒன்றுமில்லாதிருக்கிறதையும், ஒருவர் இருவர் மாத்திரம் மூடின முகத்தோடு நடமாடுகிறதையுங் கண்டார். கோவிலில் கூடியிருந்த ஜனங்கள் அச்சாதிசயமுடன் இருக்க, எரோனிமோ என்பவர் கோவிலைவிட்டு ஜனங்களோடு கூட அந்த வீட்டின் பக்கம் போனார். போய், கத்தரீன் எங்கே என்று கேட்கையில், அவள் இறந்து பிரேதமாய் கிடக்கிறாள் என்று வீட்டிலிருந்தவர்கள் சொன்னார்கள். பிரேதத்தை வெளியே கொண்டுவரும்படி செய்து, எரோனிமோ உரத்த சத்தத்துடன், ஓ! கத்தரீன், கத்தரீன்! நீ இப்போது எங்கே இருக்கிறாய்? சர்வேசுரனுடைய நாமத்தால் நீ எங்கே இருக்கிறாயென்று எல்லாருங் கேட்க சொல், என்று கற்பித்தார். உடனே பிரேதத்துக்கு உயிர் வந்தது. கத்தரீன் கண்ணைத் திறந்து நாலு பக்கமும் சூழப் பார்த்தாள். காலை ஊன்றி எழுந்து நின்றாள். கிட்ட நின்றவர்கள் பயந்து அப்பால் விலகினார்கள். பயங்கரமுள்ள சத்தத்தோடு: நான் நரகத்திலிருக்கிறேன், நரகத்திலிருக்கிறேன், நரகத்திலிருக்கிறேன் என்று மூன்றுவிசை உரத்த சத்தமாய்ச் சொல்லி கீழே விழுந்து முன்போல் பிரேதமானாள். கோவிலுக்கு எல்லாருந் திரும்பினார்கள். எரோனிமோ துவக்கின பிரசங்கத்தை முடித்தார். ஜனங்கள் எல்லாரும் பயந்து நடுங்கி வீட்டுக்குப் போகுமுன் நல்ல பாவசங்கீர்த்தனம் அப்போதே செய்து முடித்தார்கள்.

கிறீஸ்துவனே! நீ இன்னம் பயப்படுகிறதில்லையா? நரகத்திற்குப் பயந்தல்லோ எத்தனையோ பேர்கள் வீட்டைவிட்டு காட்டுக்குப் போய் வனவாசிகளாய் தவஞ் செய்து, மோக்ஷகதி சேர்ந்தார்கள். நரகத்திற்குப் பயந்தல்லோ எத்தனையோ இளவயசுள்ள வாலிபர் தங்கள் தாய் தகப்பன், சுக செல்வம் தங்களுக்கு வேண்டாமென்று வெறுத்து, சந்நியாசிகளாய் மடங்களில் பிரவேசித்து, தரித்திரத்திலும், கஷ்ட வேலையிலும், தங்கள் வாழ்நாட்களைச் செலவழித்து, எந்த வகையாலாயினும் நரகத்துக்

குத் தப்பினால் போதுமென்று எண்ணியிருக்கிறார்கள். இவர்களைப்போல் நீ நடக்க உனக்கு மனத்துணிவு இல்லாவிட்டாலும், நீ இருக்கும் அந்தஸ்திலே இருந்து நரக ஆக்கினைக்குத் தப்பிக்கும்படி உன்னால் கூடிய முயற்சி எல்லாஞ் செய்யவேண்டாமா? நீயே உன்னைக் காப்பாற்ற முயலாவிடில், பிறர் உன்னைக் காப்பாற்றுவார்களென்று எண்ணுகிறாயோ?

ஓ! எங்கள் இரட்சகரான சேசுவே! நரகம் உண்டென்கிற இந்த சத்தியத்தை இந்த ஜனங்கள் மனசில் ஆழமாய்ப் பதித்தருளும். சோதனை தந்திரம் இவர்களுக்கு வரும்போதும், உலக மாய்கையால் இவர்கள் புத்தி கலங்கும்போதும், நினைவால் இவர்கள் நரகத்திலிறங்கி அங்கே பசாசுக்கள் இவர்களுக்குத் தயார்செய்திருக்கும் இடத்தைப் பார்க்கும்படி கிருபைசெய்யும். பார்த்து அதில் இருக்கும்படி அவர்களுக்குச் சம்மதமாவென்று காவல் சம்மனசு இவர்களைக் கேட்கட்டும். கிறீஸ்துவர்களே! நாள்தோறும் ஒருவிசையாகிலும் இப்படி நரகத்தில் நினைவால் இறங்கிப் பார்த்துவந்தால், நீங்கள் பாவத்தைச் செய்யமாட்டீர்கள். சர்வேசுரனுடைய வாக்கே இதற்கு ஆதாரம்.

ஓ மரியே! இஷ்டப்பிரசாதத்தின் தாயே! என் ஆத்துமம் சரீரத்தைவிட்டுப் பிரிந்தபின், பசாசின் கையில் அது விழாதபடி காப்பாற்றும். ஓ! தாயே! என் ஆத்துமத்தை உம்முடைய கையில் ஏந்தி உமது தேவ குமாரன் சேசுநாதர் பாதத்தில் அதைச் சேர்ப்பீராக. ஆமென் சேசு.

மூன்றும் நாள்—இரண்டாம் தியானம்

சாவு

சேசுசபையின் அதிசிரேஷ்டரான பிரான்சீஸ்கு போர்ஜியா என்பவர், சபையில் சேருமுன் இஸ்பானியா

தேசத்து அரசன் மந்திரியாய் மிகக் கீர்த்தி பிரபல்லியம் பெற்றிருந்தார். அப்படியிருக்குங் காலத்தில் இராக்கினி இஸபெல்லா என்பவள் இறந்தாள். சிலநாள் சென்றபின் அவள் பிரேதத்தை இராஜ வம்ஸத்தாரை க்ஷேமிக்கும் கல்லறையில் அடக்கும்படி, பிரேதத்தைக் கொண்டுவர போர்ஜியாவை அரசன் நியமித்தான். குறித்த இடத்தில் சேர்ந்தபின், பிரேதமிருந்த பெட்டியைத் திறந்து, இராஜ சமஸ்தான உத்தியோகஸ்தர்முன், இராக்கினியின் பிரேதமென்று ருஜுப்படுத்தக் காட்டினார்கள். கிட்ட நின்ற போர்ஜியா மந்திரி இராக்கினியின் முகரூபத்தைப் பார்த்தார். அதன் அலங்காரம் மாறி, அவலக்ஷண கோலமாய் கண் ஒளி இழந்து, குழி பாய்ந்து, பவள உதடுகள் வெடித்துக் கறுத்து, பற்கள் பயங்கரமுள்ளதாயும், முகம் கோரரூபமாயும் இருப்பதைக்கண்டு பிரமித்து சற்று நேரம் நின்றபின்: ஓ! ஓ! உலக சௌந்தரிய இலக்ஷணம் இதுதானோ? சுகந்த புஷ்பம்போல் வடிவுள்ள இந்த முகம் இப்படி மங்கி வாடி நிறமாறி உருக்குலைந்ததோ? மலர்ந்து விரிந்த இராஜேஸ்திரியின் முகத்தை இப்படி மரணம் மாற்றினால், மனிதன் சீவியம் எவ்வளவு அற்பமும் ஈனமும் உள்ளது! சாகாத சுயஞ்சீவியரான சர்வேசுரனுக்கே ஊழியஞ்செய்து ஆத்துமத்தை மோக்ஷகதி சேர்ப்பதே புத்தி என்று எண்ணி தமது வீட்டின் காரியங்களை எல்லாம் ஒழுங்காய் சீர்ப்படுத்திய பின்பு உலகத்தைத் துறந்து சேசுசபையில் சேர்ந்து கடின தபசு செய்து பெரிய அர்ச்சியசிஷ்டவராய் மரித்தார்.

சகோதரர்களே! இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரன் வேத வாக்கியமாக, ஓ! சாவே! நீ கொடுக்கும் யோசனை உத்தமமானது என்று சொல்வதினாலே, இப்போது நாம் எல்லாரும் சாவை நமது கண்முன் வைத்து தியானித்து, அது கொடுக்கும் யோசனை இன்னதென்று கேட்கப்போகிறோம். இந்த உத்தம யோசனைப் பிரகாரம் நாம் நடந்தால், அர்ச். போர்ஜியாவைப்போல் உலக அநித்திய சுக வாழ்வை மதியாமல், பாவமின்றி நடந்து, மோக்ஷ கதியில் கடைசியில் சேர்வோம்.

சாவின்பேரில் நாம் சொல்லும் தியானத்தை நீங்கள் கவனமாய்க் கேட்டால், இந்தப் புத்தி, மற்ற புத்தியைப்பார்க்கிலும் ஆழமாய் உங்கள் மனசில் பதியும். எளிதாய் இதைக் கண்டுபிடிப்பீர்கள். இதினால் வரும் பிரயோசனம் வெகு அநுகூலமுள்ளதாயிருக்கும்.

ஓ மரியே! இஷ்டப்பிரசாதத்தின் தாயே! நாங்கள் செய்யும் இந்தத் தியானம் நன்றாய் எங்கள் மனதில் சாரும்படி உணர உம்முடைய தேவ குமாரன் சேசுநாதரிடத்தில் மன்றாடுவீராக.

முதல் பாகம்

உலக சுகபாக்கிய சந்தோஷத்தில் வாழும் மனிதர்கள், சாவைப்பற்றி பேசவும், கேட்கவும் பயப்படுகிறார்கள். அவர்கள் எண்ணப்படி சாவு என்ற சொல் துர்க்குறி உள்ளது. அதைச் சொல்லுவதுந் தோஷம், அதை நினைப்பதுந் தோஷம், அதைக் கேட்பதுந் தோஷமென்று அஞ்சுவார்கள். சாவைப்பற்றி இவர்கள் நினையாவிடில், சாவாகிற தூதனும் இவர்களை நினைக்கமாட்டான் என்று எண்ணுகிறார்களோ? ஆனால் எதார்த்தத்திலே சாவைப்பற்றி நினைப்பது உலக சுக வாழ்வில் அமிழ்ந்தியிருக்கும் மனிதனுக்கு ஏன் இவ்வளவு கசப்பாயிருக்கிறதென்று எளிதில் கண்டு அறியலாம்.

பணமே தனக்குக் கதியென்று இராப்பகலாய்த் தேடி உழைத்து, நியாயம் அநியாயம் பாராமலும், தன் சொத்து பிறர் சொத்து என்ற வித்தியாசம் அறியாமலும், நடந்து, சர்வேசுரனை மறந்து, தன் ஆத்துமத்தை விற்று, தன் வேதத்துக்கு துரோகஞ் செய்து நடக்கிறவனைப் பார்த்து, ஆ கிறீஸ்துவனே! இந்தப் பணம் எல்லாம் உன் கையில் தங்குமா? நீ இறந்தபின் அரைக்காசும் உன்னோடுகூட வரமாட்டாது என்று சொன்னால், அவனுக்குக் கோபம் பொங்கும். துர்க்குறியான இந்தப் பாஷை பேசி என் கைப் பணத்தைச் சபிக்க வந்தவன் நீ யார்? என்று எதிர்த்துச் சொல்வான்.

சிற்றின்ப சுகபோகத்தைத் தேடி, மிருக ஜாதிகளைப் போல் பாவத்தின் கஷ்டத்தில் புறண்டு, தன் சரீரத்தைப் பேணி, சீராட்டிப் பாராட்டி செல்வமாய் வளர்க்கும் காமாதுரனைப் பார்த்து, அடா மதிகேடா! நீ இப்படி தூபதீபங் காட்டி, மினுக்கித் துலக்கி வளர்க்கும் உன் தேகம், இன்னம் சில நாளில் பிரேதமாய்ப் போகும், புழுத்து நாறும், மண்ணோடு மண்ணாகுமே என்று சொன்னால், அவனும் கோபம் பொங்க, முகத்தைச் சுழித்து: ஆ! ஆ! இப்படியும் என்னை நிந்திக்கலாச்சுதா? என் சரீரத்தைப் பார்த்து இழிவாய்ப் பேசத் துணிந்தாயா? என வாதாடுவான்.

மகிமை பெருமையை பெரிதாய் எண்ணி அதற்காக தன் வாழ்நாளை வீணில் போக்கி உழைக்கும் ஆங்காரியைப் பார்த்து, அப்பா நீ தேடும் பெருமையும் கீர்த்தியும், நீரில் எழும்பும் குமிழிபோல் நில்லாது ஒழியுமே! மேகத்தில் தோன்றும் மின்னல்போல் உன் பெருமை பளிச்சென்று மின்னி, அதோ பார் என்று சொல்லுமுன் மறைந்து போமே! நீ தேடும் கீர்த்தி உன் கையில் நில்லாதே, என்று நாம் சொன்னால், இவையெல்லாம் கேட்பது அவனுக்கு மனவருத்தங் கொடுக்கும், அவன் காதில் நாராசம் காய்ச்சி ஏற்றினதுபோல் அவன் பதைத்துத் துடிப்பான். பிரசங்கஞ் செய்பவரைக் கோபித்து இவ்வித துர் அதிஷ்ட யோசனைகளை இள வயசுள்ள பாலிய பிள்ளைகளுக்குமுன் சொல்வது யோக்கியமல்ல, இஷ்டமானால், இவைகளைப் பூமியில் ஒரு காலும், சுடுகாட்டில் ஒரு காலும் ஊன்றி நிற்கும் கிழவிகளுக்குச் சொல்லலாம். நாங்களோ, வாலிபர், பூரண சௌக்கியமுள்ளவர்கள். உலக மகிமை, சுக செல்வம் அனுபவிக்க இப்போதுதான் துவக்குகின்றோம். துவக்கும்போதே எங்கள் முடிவாகிற சாகும் நாளைப்பற்றி யோசிக்கவேண்டுமென்றால், இளம் பயிர் கதிர்பிடிக்குமுன் அதை அறுக்கும்படி பிரயத்தனம் செய்வதுபோலாம். இது, யோசனை இல்லாத மூடர்கள் செய்யும் தொழில் என்பார்கள்.

சகோதரரே! நீங்கள் பால்யராயினும், விர்த்தாப்பியராயினும், பெரியோராயினும், சிறியோராயினும், உங்கள்

ஜீவியத்தின் கடைசி நாளாகிற சாவைப்பற்றி நினைப்பது எல்லோருக்கும் வெகு பிரயோசனமாகும். இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரன், வேதபுத்தகத்தில், நீ உன் கடைசி முடிவை நினைத்தால் பாவத்தை ஒருபோதும் செய்ய மாட்டாய் என்று சொல்லுகிறார். ஏனென்றால் சாவின் யோசனை மற்ற எந்த யோசனையைப் பார்க்கிலும் அதிக சக்தியும் பிரயோசனமும் உள்ளது. இந்தக் காலத்து மனிதர்கள் எந்த வேத சத்தியங்களைப்பற்றியும் சந்தேகப் படுகிறார்கள். மகா சாஸ்திரிகளைப்போல் வாய் சலியாமல் தாங்கள் அறிந்தும் அறியாததுமானவைகளை விரிவாய் எடுத்துப் பேசுவார்கள். நரகமென்றால் நரகத்தைப் பார்த் தவன் யார் என்பார்கள். தேவ நீதியின் கொடுமை என் றால், தேவனைக் கண்டவன் யார் என்று கேட்பார்கள். ஆனால் இவர்களுக்குச் சாவின் பயங்கரத்தைக் காட்டினால், சாவைக் கண்டவன் யார் என்று இவர்களில் எவனுஞ் சொல்லமாட்டான்.

சாவை எல்லாரும் கண்ணால் பார்த்திருக்கிறார்கள். கையால் ஸ்பரிசித்து அறிந்திருக்கிறார்கள். முற்காலத் திலே தேசங்களை ஆண்டு, பொன்முடி சூடி, செங்கோல் ஏந்தி, செல்வமாய் ஆண்ட இராஜாக்கள் இப்போது எங்கே? திரவிய சம்பன்னராய் சிறந்து விளங்கிய பிரபுக் கள் இப்போது எங்கே? கலைக்கியானம் நூல்கள் கற்றுத் தேர்ந்த சாஸ்திரிகளும், வித்துவான்களும் இப்போது எங்கே? உங்களோடு கூடி வாழ்ந்து ஒருமனமாய், ஒருடல் போல் பிரியாதிருந்த சிநேகிதர், சுற்றத்தார் இப்போது எங்கே? எல்லாரும் இன்னம் இந்த உலகில் இருக்கிறார் களா? இல்லாவிடில் எங்கே இப்போது போயிருக்கிறார் கள்? எங்கேயா! மறுலோகத்துக்குப் போய்விட்டார்கள், இறந்துபோனார்கள், போனவர்கள் இனி வரமாட்டார்கள். நீங்களும் இவர்களைப்போல் ஓர் நாள் இவ்வுலகத்தைவிட்டு நீங்குவீர்கள். நீங்களும் இறந்துபோவீர்கள். உங்களில் ஒவ்வொருவனுக்கும் அவன் பிறந்த நாளில் ஓர் எல்லை சர் வேசுரன் குறித்திருக்கிறார். அதுமட்டுந்தான் நீ வருவாய். அதுவே உன் எல்லை. அதற்கப்பால், நீ யார் எவராயிருந்

தாலும் வரமாட்டாய். உனக்கு ஆதிநாளில் குறித்த எல்லைக்கு நீ வந்ததும், நீ எங்கே இருந்தாலும், உன் அந்தஸ்து எதுவாயினும், உன் தேக சௌக்கியம் எவ்வளவு பூரணமாயினும், சாகவே சாவாய். உன்னால் கூடிய பிரயத்தனங்கள் யாவும் நீ செய்து பார். மகா பலம் உள்ள மதில்கள் சூழ்ந்த கோட்டைக்குள் நீ இருந்துபார். வெகு சுத்தமான சாப்பாடு எப்போதும் நீ உண்டுவா. உன் தேகத்தில் வியாதி வராதபடி உன்னால் கூடிய முயற்சி எல்லாம் நீ செய். உன் வீட்டிலே சாமர்த்தியமுள்ள வைத்தியரை இராப்பகலாய் வைத்து உன் தேக சௌக்கிய விர்த்தியை நாள்தோறும் நீ கவனித்துவா. நீ என்னதான் செய்தபோதிலும், சர்வேசுரன் உனக்கு முதல் நாளில் குறித்த எல்லைக்கு நீ வந்தவுடன் தப்பாமல் சாவாய். இது மனிதராய்ப் பிறந்த யாவருக்கும் சர்வேசுரன் விதித்த ஒழுங்கு. பிறந்த மனிதன் இறப்பான் என்பது தேவதீர்மானம்.

சாவு பாவத்தின் ஆக்கினையானாலும், பாவத்தின் நிழலுமின்றி, மாசில்லாமல் உற்பவித்த தேவதாய் முதலாய் சாவின் தீர்ப்புக்கு உட்பட்டு இறந்தாள். நம்முடைய ஆண்டவராகிய சேசுநாதர்சுவாமியும், பாவத்தின் விஷத்தை அழித்து, சாவின் கொடுமையை நீக்கும்படி வந்த நித்திய ஜீவனாயிருந்தாலும், அவர் சாவை ஜெயிக்க சாவின் வாசல் வழியாய்ப் பிரவேசித்து மரித்து அதன்பின் சாவை ஜெயித்து உயிர்த்தார்.

இப்படியாய் சாவின் தீர்ப்பு மனித ஜென்மத்துக்குப் பொதுவானால், நாம் எல்லோரும் சாவோம். நாம் பிறந்த க்ஷணத்திலே சாவின் புள்ளி நமது தலையில் பதியப்பட்டது. மனிதன் என்பதும் மரிப்பவன் என்பதும் ஒன்றுதான். நியாயாதிபதி விசாரணைசெய்து சாகும்படி தீர்ப்பு பெற்றவன்போல், நாமும் சர்வேசுரன் தீர்ப்பைப் பெற்றிருக்கிறோம். இந்தத் தீர்ப்பை மாற்றவோ, முறிக்கவோ, எவனாலும் கூடாது. ஆகையால் கிறீஸ்துவனே! நீ நிச்சயமாய் சாவாய் என்பதை உன் மனதில் வைத்துக்கொள்.

எந்த வகையாலும் இதற்குத் தப்பிக்க உன்னால் கூடாது. ஆ! இதைக் கவனித்து யோசித்தால் பயப்படாதவன் யார்?

இரண்டாம் பாகம்

நாம் நிச்சயமாய் சாவோம் என்பது பயம் வருவிக்கு ஏதுவான சத்தியமானாலும், நாம் எப்போது சாவோம் என்பது அதிலும் அதிக பயம் உண்டாக்கத்தக்கது. இன்னும் ஐம்பது வருஷம் கடந்த பின்போ? அல்லது இருபது வருஷம் சென்றபின்போ? ஐந்து வருஷமோ? அல்லது இந்த வருஷமோ? நாளையோ? அல்லது இன்றோ? தெரியாது. மரணம் எந்தச் சமயத்திலும் எவ்வகைப் பேரிடத்திலும் வரலாம். அதற்கு முகப்பிரீதி என்பதும், பட்சபாதமென்பதும் சற்றும் கிடையாது. எல்லா மனிதர்களும் அதற்குச் சரிதான். நவமணி பதித்து ஒளிவிட்டுத் துலங்கும் சிம்மாசன மீதிருந்து செங்கோல் செலுத்தும் இராச்சியாதிபதியுஞ் சரி, கையில் கப்பரை எடுத்து வீடு வீடாய்ப் பிச்சைவாங்கிப் பிழைக்கும் எளியவனுஞ் சரி, தேக ஆரோக்கிய சௌக்கியமாய் இருப்பவனுஞ் சரி, உடல் வாடி மெலிந்து நிற்கும் வியாதியஸ்தனுஞ் சரி, படித்துத் தேர்ந்த வித்துவானுஞ் சரி, படிப்பறியாத மூடனுஞ் சரி, இளவயதுள்ள பாலியனுஞ் சரி, நரை திரை விழுந்த விருத்தாப்பியனுஞ் சரி, இன்று பிறந்த சிறு குழந்தையும் சரி, எண்பது வயதுள்ள இராக்ஷஸனுஞ் சரி, யாவருக்கும் எந்த சமயத்திலும் சாவு வரக்கூடும். சாவு வர ஆயிரம் வாசல் திறந்திருக்கிறது.

மனிதன் படுத்திருந்தாலும், உட்கார்ந்திருந்தாலும், நடந்தாலும் சாவு வரத் தடை இல்லை. சிலர் விழித்திருக்கும்போதே மரணமானார்கள். சிலர் நித்திரை செய்யப் போனவர்கள், விழிக்குமுன் மரித்தார்கள். சிலர் சாப்பிடும்போதும், சிலர் விளையாடும்போதும், சிலர் சிரிக்கும் போதும் இறந்தார்கள். திருநாள் சந்தடி, நாடகம் கூத்து நடக்கும் சமயத்தில், சாவு நலியாமல் நுழைந்து உயிர்களைக் கொள்ளையோ கொள்ளையென்று வாரிக்கொண்டு

போய்விட்டது. கலியாண வீடும் சிலசமயம் இழவு வீடாய் மாற, மணப் பந்தல் பிணப் பந்தலானது. என்ன கொடுமை! சகோதரரே! நாம் சாவோம் என்பது பயங்காமுள்ளதாயினும், நாம் எப்போது சாவோம் என்பது அதிலும் அதிக பயம் வருவிக்க ஏதுவானது.

இதிலும் இன்னும் அதிகமான அச்சம் உறுத்தத் தக்கது வேறே எதுவும் உண்டா? உண்டு. அது இன்னதென்று நாம் சொல்லப்போகிறோம், கவனமாய்க் கேளுங்கள். நாமே இதை நினைக்கையில் நமது உடல் நடுங்கி, மயிர் சிலிர்க்கின்றது. நீங்கள் சாவது நிச்சயம், சாகும் நேரம் நிச்சயம் அற்றது. ஆனால் எப்போது இறந்தாலும் இறக்கும் நேரத்தில் இஷ்டப்பிரசாதத்தோடு இருப்பீர்களோ அல்லது சாவான பாவத்துடன் இருப்பீர்களோ? பாவசங்கீர்த்தனஞ்செய்து அவஸ்தைபூசுதல் பெற்றபின் இறப்பீர்களோ? அல்லது பாவசங்கீர்த்தனமின்றி, குருவின் உதவியின்றி, நிர்ப்பாக்கியராய் இறப்பீர்களோ? இந்த விஷயந்தான் மனம் பயந்து தடுமாறும்படி செய்ய வல்லது. மற்ற எந்த விஷயமும் அவ்வளவு பயம் உண்டாக்கத் தகுந்ததல்ல. நீ இளவயதில் இறந்தாலும், முதிர்ந்த பிராயத்தில் மரித்தாலும், எல்லாம் ஒன்றுதான். இன்னும் ஐம்பது வருஷங் கடந்தபின் இறந்தாலும் அல்லது இந்த மாதத்திலே நீ மரித்தாலும், கால வித்தியாசம் வெகு சொற்பம். நீ காட்டில் உயிர் இழந்தாலும் உன் வீட்டிலே மரித்தாலும் இட வித்தியாசம் பெரிதல்ல. நீ வியாதியின் கொடுமையால் இறந்தாலும் இருந்த நிலையிலே சடுதியில் இறந்தாலும் கவையில்லை. ஆனால் நீ எங்கே இறந்தாலும், எப்படி இறந்தாலும் இஷ்டப்பிரசாதத்தோடு, சாவான பாவமின்றி இறப்பாயோ? உன் ஆத்துமம் சரீரத்தைவிட்டு எங்கே பிரிந்தாலும், பிரிந்த உடனே அது மோக்ஷத்துக்குப் போகுமோ அல்லது நரகத்துக்குப் போகுமோ? இதுதான் முக்கியமாய் கவனிக்க வேண்டிய விஷயம். நரகத்தில் இப்போது இருப்பவர்களில் அநேகம் பேர், அந்த நாளில் சாகிறதற்குப் பதில், வேறு ஒருநாளில் அவர்கள் ஆத்துமம் பாவமின்றி இருந்த

போது, இறந்திருந்தால், இப்போது மோக்ஷவாசிகளுடன் ஆனந்த பாக்கியம் அனுபவிப்பார்கள். நீங்கள் இப்போது இஷ்டப்பிரசாதத்தோடு இருந்தாலும் உங்கள் ஜீவியத்தின் கடைசிநாளில் பாவமின்றி இருப்பீர்களென்று யார் சொல்லக்கூடும்? இதின் நிமித்தந்தான் அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பர், இரக்ஷணிய அலுவலை அச்சத்தோடும், நடுக்கத்தோடும் கவனிக்கவேண்டுமென்று வற்புறுத்துகிருர்.

நீங்கள் ஒருநாள் இறப்பீர்கள் என்பது பயங்கரமுள்ள சத்தியமாயினும், இறக்கும்போது எந்த அந்தஸ்தில் இருப்பீர்களென்பது அதிலும் அதிக பயங்கரமுள்ளதென்று இப்போது உங்களுக்குக் காண்பித்தோம். இதிலும் இன்னும் அதிக பயம் உறுத்தத்தக்க விஷயம் ஏதாகிலும் உண்டாவென்று கேட்பீர்களோ? இன்னும் ஒன்று உண்டு. அதைக் கவனமாய்க் கேளுங்கள். சேசுநாதர்சுவாமி சுவிசேஷத்தில்: நீங்கள் விழித்திருங்கள் சாவு எப்போது வருமென்று உங்களுக்குத் தெரியாது என்று சொன்னது போதாதென்று, நீங்கள் விழிப்பாயிருங்கள் ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் சாவு வருமென்று அறிவித்திருக்கிருர். திருடன் உன் வீட்டுக்குச் சடுதியில் வருவானென்ருலும், அப்படி அவன் வரும் தருணத்தில் நீயாவது வேறு யாராவது சிலவிசை விழித்திருக்கலாம். ஆனல் நினையாத சமயம் பார்த்து திருடன் வருவான் என்ருல் அதைத் தடுக்க யாரால் கூடும்? அப்படியே சாவு சடுதியில்மாத்திரம் அல்ல, நீ நினையாத தருணத்தில் வரும் என்று சேசுநாதர்சுவாமி சொல்லுகிருர். ஆகையால் நீ எந்த நாள் சாவைப்பற்றி நினையாமலிருக்கிருயோ, அந்த நாள் நீ சாவாய் என்பது திண்ணம். இங்கே கூடியிருக்கும் உங்களில் ஒவ்வொருவரும் தனக்குள் பின்வருமாறு யோசிக்கவேண்டும்: நான் இன்ஞள் சாவேன், இது நிச்சயம். எந்த நாளிலே நான் சாவேன்? அது எனக்குத் தெரியாது. எந்த ஸ்திதியில், இஷ்டப்பிரசாதத்தோடோ, சாவான பாவத்தோடோ சாவேன்?

அதுவும் எனக்குத் தெரியாது. ஒரு காரியமாத்திரம் நிச்சயம்: நான் எந்த நாளில் சாவைப்பற்றி நினையாமல் இருக்கிறேனே அந்த நாளில்தான் நான் சாவேன்.

சேசுநாதர் இந்த விஷயத்தைச் சொன்னபின் இதின் மட்டில் சந்தேகம் உண்டாகாதபடி இதைத் தெளிவாய் விவரிக்கும் உதாரணமாக ஓர் வர்த்தமானத்தைச் சொல்லியிருக்கிறார். திரவிய சம்பன்னன் ஒருவன் இருந்தான்; அவனுக்கு நிலபலம், காணிபூமி விஸ்தாரமாயிருந்தது. ஓர் வருஷத்தில் பயிர் நன்றாய் செழித்து வளர்ந்து, கதிர் பிடித்திருந்தது. தவச தானியத்தைப் போரடித்து களஞ்சியத்தில் கூட்டிச் சேர்த்தான். விளைவு எதேஷ்டமாயிருந்ததால் களஞ்சியம் கொள்ளவில்லை. இதைக்கண்டு அவன் மனம் பூரித்துப்போனது. இளவயதானதாலும், தேக சௌக்கியம் பூரணமாயிருந்ததாலும், அவன் தனக்கு மரணம் வருமென்று கனவிலும் அப்போது நினைக்கவில்லை. தன் மனதில் நிறைந்த சந்தோஷத்தை அடக்கமாட்டாமல், தன்னைப் பார்த்துச் சொல்வான்: ஆ! என் ஆத்துமமே! பார். எவ்வளவு திரவிய சம்பத்து! எவ்வளவு தவச தானியம்! களஞ்சியமே கொள்ளவில்லை. இதை இடித்து இன்னும் பெரிதாய் ஓர் களஞ்சியம் கட்டப்போகிறேன். இதிலே தானியத்தை நிறையக் கூட்டி, சுகமே பல வருஷகாலம் கவலையின்றி வாழ்வேன் என்று மகிழ்ந்து சொன்னான். இவன் சொல்லி முடிக்குமுன், கடைசிச் சொல் இன்னும் அவன் வாயிலே இருக்கும்போதே, ஓர் சத்தம் ஆகாசத்தில் உண்டானது: அடா மூடா! இந்த இராத்திரியே நீ சாகப்போகிறாய், உன் ஆத்துமம் உன் சரீரத்தை விட்டுப் பிரியும். நீ கூட்டிக் குவித்துக் களஞ்சியத்தில் சேர்த்த இவ்வளவு தானியத்தால் உனக்கு வரும் பிரயோசனமென்ன? அந்த இராத்திரியே, சாவைப்பற்றி நினையாத நேரத்தில் திரவியவான் இறந்துபோனான். நீ நினையாத நேரத்தில் சாவு உன்னிடம் வரும் என்ற தேவ வாக்குக்கு இவன் ஓர் உதாரணமானான்.

கிறீஸ்துவனே! நீ இதெல்லாம் கேட்டபின்பு, எனக்கு இன்னும் நாள் இருக்கிறது. இனிமேலாக நான் பார்த்துக்கொள்வேன், இவ்வளவு சீக்கிரத்தில் எல்லாம் ஒழுங்கு செய்து, நல்ல கிறீஸ்துவனுகும்படி இது நேரமல்லவென்று எப்படி உன் மனதைத் தேற்றி, உன் ஆத்துமத்தைக் கவனியாமல் நீ இருக்கிருய்? எப்படித் துணிந்து பாவத்தைச் செய்து சர்வேசுரனுக்குத் துரோகியாயிருக்கிருய்? சத்தியவேத பிரகாசமில்லாத அஞ்ஞானிகள் முதலாய் சாவு இன்றைக்கோ, நாளைக்கோ, எந்த நாளிலோ வரும் என்பதை நீ அறிந்து பாவத்தை விலக்கி புண்ணியத்தைச் செய்து ஒழுகவேண்டுமென்று சொல்வதை நீ வாசித்துப் படித்ததில்லையா?

இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னுது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையால்
மருவுமின் மாண்டார் அறம்.

சத்தியவேதப் பிரகாசமுள்ள கிறீஸ்துவன் இதெல்லாம் யோசித்துப்பார்த்து, இன்னும் பாவத்தைச்செய்து நடந்தால், இன்னும் உலக அநித்திய இன்பசுக வாழ்வைத் தேடிச் சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்யாதேபோனுல், இவன் தன்னையே கெடுத்து, நரகத்தில் விழும்படி, தானே ஏற்பட்டிருக்கிறுனென்றும், தனக்குத்தானே பெரும் துரோகியாயிருக்கிறுனென்றுஞ் சொல்லவேண்டுமல்லவா?

கிறீஸ்துவனே! இங்கே நாம் விவரித்த சத்தியத்தைப்பற்றி நீ எப்போதாவது சற்று கவனமாய் யோசித்ததுண்டா? இப்போதாவது நாம் உனக்குச் சாவைப்பற்றி பேசும்போது நீ இதின் பயங்கரமுள்ள விஷயங்களைக் கருத்தோடு நினைக்கிருயா? கிறீஸ்துவன் யோசிக்கத்தக்க வகையில் நீ யோசிக்கிருயா? உன் மனதில் இது பதிந்து சார்ந்து பிரயோசனம் பயக்கத்தக்க வகையாய் நீ யோசிக்கிருயா? இதை நீ கவனித்து யோசியாவிடில் வேறே என்னத்தைப் பற்றித்தான் யோசிக்கிருய்? இந்த உசித சமயத்தில் நீயே யோசியாவிடில், வேறு யார் உனக்காக யோசிக்கக்கூடும்?

ஓ! மனிதர்கள் ஆத்தும விஷயத்தில் எவ்வளவு புத்தி யோசனையின்றி நடக்கிறார்கள்! அரைக்காசு சம்பாதிக்க ஆயிரம்விசை யோசிப்பார்கள். அற்ப காரியத்துக்காக நாள் எல்லாம் செலவழிப்பார்கள். இந்த உலக வாழ்வை சீக்கிரம் நான் விடவேண்டுமே! பாடுபட்டுத் தேடிய பணங்காசு எல்லாம் என்னோடுகூட வரமாட்டாதே, என்பதைப்பற்றி நினைக்கமாட்டார்கள்.

சகோதரரே! சாவு, சத்தியந் தவறாத ஆலோசனை கொடுக்கும் மந்திரி. இதின் யோசனையைக்கேட்டு நடந்தால் ஒருபோதும் நமக்கு மோசம் வரமாட்டாது. மகா புண்ணியவான்களான அர்ச்சியசிஷ்டவர்கள், எந்த முக்கிய வேலை துவக்குமுன்னும் சாவின் ஆலோசனையைக் கேட்ட பின்னரே துவக்கி நடந்திருக்கிறார்கள். சரீரமுள்ள சம்மனசுபோல் ஜீவித்த அர்ச். ஞானப்பிரகாசியார், சாவு எப்போதும் தன் கண்முன் இருக்கும்படி ஓர் கபால ஓட்டைத் தமது மேசைமேல் வைத்திருப்பார்.

கிறீஸ்துவனே! பணத்தின்மேல் உன் மனதில் தீராத ஆசை எழும்பி, அதை எப்படியாகிலும் தேடிக் குவிக்க வேண்டுமென்று பொருளாசை உன்னிடம் உண்டாகும்போது, சாவை உன் கண்முன் வைத்து: சாவே, பணம் எதுக்குதவுமென்று கேள். சாவு உன்னை நோக்கி: தம்பி, நான் சொல்லுகிறேன்: பண ஆசை, பாவத்துக்கு வழி, ஆத்துமத்துக்கு நஞ்சு, நரகத்தின் வாசல் என்று சொல்லும். மகிமை பெருமை, கீர்த்தி பிரபல்லியம் இவைகளின் மட்டில் உன் மனதில் ஆசை உண்டாகும்போது, சாவின் யோசனையைக் கேள். மகிமையும் பெருமையும், பேரும் சீரும் எல்லாம் நிலையற்றது, மின்னலைப்போல் தோன்றி மறையும் என்று சாவு சொல்லும். உன் சரீரம் மதங்கொண்டு எழும்பி உன்னைப் பாவத்துக்குத் தூண்டும்போது, உன் சரீரம் என்ன மதிப்புள்ளதென்று சாவைக் கேள். உன் சரீரம் மண் என்றும், மண்ணோடு மண்ணாய் மாறி அழியுமென்றும், அது இறந்து விழுந்தபின்—

எரி எனக்கென்னும் புழுவோ எனக்கென்னும் இந்த மண்ணும்
சரி எனக்கென்னும் பருந்தோ எனக்கென்னும் தான் புசிக்க
நரி எனக்கென்னும் புன்னாய் எனக்கென்னும் இந்நாறுடலைப்
பிரியமுடன் வளர்த்தேன் இதனால் என்ன பேறெனக்கே.

நெருப்பும், புழுவும், மண்ணும், பருந்தும், நரியும், நாயும் இப்படியாய் எனக்கு எனக்கு என்று சண்டைசெய்து உன் சரீரத்தைத் தின்கும்படி வாதாடுவார்களே! அப்படி இருக்க நீ என் பிரியமுடன் இதை வளர்த்து பாவத்தைச் செய்து கெட்டுப்போகிறாய்.

சாவின்பேரில் அநுதினம் தியானிக்கிறவன் புத்திமான். சாவின் யோசனையை எந்தச் சமயத்திலுங் கேட்டு நடக்கிறவன் பாக்கியவான். சகோதரரே, நாம் இங்கே சொன்னதெல்லாம் நீங்கள் கண்டுபிடிக்கிறீர்களா? இந்தச் சத்தியம் உங்கள் மனதில் பதிந்ததா? தம்பி, நாள்தோறும் நீ இரவில் படுத்திருக்கும்போது, நித்திரை வருமுன், உன் கைகளை நெஞ்சின்மேல் சிலுவைபோல் கூட்டி, உன் கண்களை மூடி, இப்படித்தான் ஒருநாள் உயிரின்றிப் பிரேதமாய்க் கிடப்பேன் என்று நினைத்து, நீ எதைச் செய்திருக்க வேண்டுமென்று அப்போது ஆசைப்படுவாயோ அதை இப்போதே செய்.

சகோதரரே! அந்தக் கடைசிநாள், நம்மெல்லோருக்கும் தப்பாமல் வரும். அந்த நாள் வரும்போது நமக்கு நல்ல மரணம் வரும்படியாய் இப்போது பூரண சௌக்கியமாயிருக்கும்போதே நல்ல கிறீஸ்துவர்களாய் ஜீவிக்க வேண்டிய முயற்சி எல்லாஞ் செய்வது புத்திமான் கடமை. மனிதனுடைய ஜீவியநாள் எப்படியோ அப்படியே அவன் மரணநாளும் இருக்கும். மரணநாள் ஜீவியநாளின் எதிரொலி சத்தம் என்பார்கள். நீ இப்போது இஷ்டப்பிரசாதத்தோடு நல்ல கிறீஸ்துவனாய் ஜீவித்தால், மரிக்கும்போது இஷ்டப்பிரசாதத்தோடு நல்ல கிறீஸ்துவனாய் மரிப்பாய். இப்போது உன் ஜீவியநாள் கெட்ட நாளானால் உன் அந்தியநாளும் கெட்ட நாளாய்த்தான் இருக்கும். ஓரோர் சமயத்தில் சில வித்தியாசந் தோன்றினால் இது பொது

ஒழுங்கை விளக்கிக் காட்டும் சிறப்பு விதி என்று எண்ண வேண்டுமேயன்றி, ஒருவரிருவருக்கு சில சந்தர்ப்பத்தில் நடந்தது, உனக்கும் நடக்குமென்று நீ வீணாய் உத்தேசித்து மனப்பால் குடித்துக் கெட்டுப்போகாதே.

அந்த அந்தியநாள் நமக்குப் பாக்கியநாளாய் இருக்கும்படியாக தேவதாயார்பேரில் பத்தியுஞ் சிநேகமும் வைத்து பிரியதத்த மந்திரத்தில் கேட்கும் மன்றாட்டை பத்தியோடும் கருத்தோடும் அநுதினஞ் சொல்லவேண்டும். அர்ச். மரியே, சர்வேசுரனுடைய பரிசுத்த மாதாவே! பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்போதும் எங்கள் **மரண நேரத்திலும்** வேண்டிக்கொள்ளும். ஆமென்சேசு.

மூன்றும் நாள்—மூன்றும் தியானம்

ஒவ்வோருவனுடைய ஜீவியநாட்களின் கடைசிநாள்

பூர்விக காலத்தில் மகா பராக்கிரம அரசனாய், யுத்த வீரனாய் விளங்கிய அலெக்சாந்தர் என்பவனிருந்தான். இவன் இளவயதிலேயே அநேக யுத்தங்கள் தொடுத்து, பகைவரை முறிய அடித்து, ஜெய வீரனாய்ப் பல தேசங்களைத் தன் அடிக்குட்படுத்தி பிரபல்லியம் பெற்றிருந்ததால், வெகு கர்வங்கொண்டு ஏதோ தேவலோக பிறவி என்றாற்போல், தன்னை எவர்க்கும் மேலாய் உயர்த்தி, பெருமை பாராட்டி வந்தான். அரசன் கர்வத்தை அடக்கி இவனுக்கு நல்ல புத்தி கற்பிக்கும்படி, தியோஜனன் என்ற மகா சாஸ்திரி ஒருநாள் இராஜன் சாரிவரும் பாதையிலிருந்த சுடுகாட்டில் தன் கையிலிருந்த ஊன்றுகோலால் எதையோ ஒன்றைத் தேடுகிறவன்போல் நடித்தான். அலெக்சாந்தர் அவ்வழி வருகையில் சாஸ்திரியைப் பார்த்து: "ஓ சாஸ்திரியாரே! சுடுகாட்டில் என்னத்தை இந்நேரத்தில் தேடிக்கொண்டிருக்கிறீர்" என்று பரிகாசமாய்க் கேட்டான். அதற்கு தியோஜனன்: மகா இராஜ!

இந்த சுடுகாட்டில் அநேகம் தலைமண்டை ஓடுகள் சிதறிக் கிடக்கின்றன. இவைகளுள் தங்கள் தகப்பனார் பிலிப் என்பவரின் கபால ஓடு எதுவென்று தேடித்தேடிப் பார்க்கிறேன். இராஜ மண்டை ஓட்டுக்கும் மற்ற சாமானிய ஜனங்களின் மண்டை ஓட்டுக்கும் யாதும் வித்தியாசமில்லாததால், தங்கள் இராஜ தகப்பனாரின் கபால ஓடு இது வென்று அறிவது பிரயாசையாயிருக்கிறதென்று சாஸ்திரி சமயோசிதமாய் மறுமொழி சொன்னான். அரசன் இந்த மறுமொழியில் உள்ள புத்தியைக் கண்டுபிடித்து, தான் மற்ற மனிதரைப்போல் ஓர் சாதாரண மனிதனேயன்றி தேவலோகப் பிறவி அல்லவென்று உணர்ந்துகொண்டான்.

கிறீஸ்துவர்களே! மனிதர்களில் அநேகர், இந்த அலெக்சாந்தரைப்போல், பெருமை பாராட்டி கர்வங் கொண்டு, தேவலோக, சூரிய சந்திர வம்சத்தார் என்றாற் போல் தங்களை மதித்து, மற்றவர்களை இழிகுலத்தாரென்றும், நீசர் என்றும் நிந்தித்து, மனம் வீங்கி, தலையை உயர்த்தி, கையை வீசி நடந்துவருகிறார்கள். இவர்களுக்கு நல்ல புத்தி உண்டாகும்படி சாவைக் கையில் எடுத்துக் காட்டினாற்போல், சாகிறதின்னமென்று ஐம் புலன்களின் பிரயோகத்தால் விவரித்துக் காட்டப்போகிறோம். சாகிறதற்கு முன்னும், சாகுந்தருணத்திலும், செத்தபின்னும் நடப்பவைகளை உங்கள் கண்முன் நடப்பதுபோல் விவரிப்போம். அந்தநாள் ஒவ்வொருவனுடைய ஜீவியத்தின் கடைசிநாள். எப்படி நமது ஜீவியத்தின் முதல்நாளில் நமக்கு அறிவு இல்லையோ, அப்படியே அநேகமாய் கடைசிநாளிலும் அறிவு இருக்கமாட்டாது. அறிவு சாகும்போது இருந்தாலும், செத்தபின்பு நமது சரீரத்துக்கு என்ன சம்பவிக்குமென்று நாம் பார்க்கமாட்டோம். இப்போது நல்ல அறிவு இருக்கும்போதே, அந்த நாளில் சம்பவிப்பதை நினைவால் சிந்தித்து, கண்ணால் பார்ப்பது போல் யோசிப்பது வெகு பிரயோசனமாயிருக்கும்.

ஓ! தேவமரியே! பாவிகளின் தஞ்சமே! நான் கடைசிநாளில் அவஸ்தையாய்க் கீழே கிடக்கும்போது,

நான் என்ன செய்திருக்கவேண்டுமென்று அப்போது மன தாயிருப்பேனே, அதுவே இப்போது நான் நல்ல அறிவோ டிருக்கையில் செய்யும்படியாக என் புத்திக்குப் பிரகாசமும் மனதுக்கு உறுதியும் கொடுக்க உமது தேவ குமாரனிடம் பிரார்த்திப்பீராக.

முதல் பாகம்

ஒவ்வொருவனுடைய ஜீவியத்தின் கடைசிநாள் அவன் சாகும்நாள். சாவு என்பது இரக்கமற்ற கொடுங் கோலன். எந்த சமயத்திலும் இஷ்டம்போல் வரும். இஷ்டம்போல் எவனையும் மறு உலகத்துக்குத் தூக்கிப் போம். சாவு வருமுன் கடைசி நாளில், சாதாரணமாய் சம்பவிப்பதேதென்று நீங்கள் உங்கள் வீடுகளில் பார்த் தும், கேட்டுமிருக்கிறீர்கள். நீங்கள் பார்த்ததுங் கேட் டதும் மற்றவர்களைச் சார்ந்தது. உங்களுக்குக் கடைசி நாளில் என்ன சம்பவிக்குமென்று இப்போது தெரியாவிட் டாலும், உத்தேசமாய் இன்னதென்று நாம் அறியலாம். நாம் அறிந்ததை உங்களுக்குச் சொல்லப்போகிறோம். கவனமாய்க் கேளுங்கள்.

உங்கள் சரீரம் இப்போது நல்ல சௌக்கியமாயிருந் தாலும் அந்த நாளில் கிடந்தகிடையில் கிடக்கும், காலை யும் கையையும் அசைப்பது வருத்தமாயிருக்கும். எலும் புந்தோலுந்தான் தெரியும். கண்களின் பார்வை குறைந்து மங்கிப்போகும், காது கேட்கமாட்டாது. நாவிலொரு ருசியுமில்லை. பேசும்படி நாவெழமாட்டாது. உன்னைச் சுற்றிலுந் தாயோ, தந்தையோ, பெண்சாதியோ, பிள்ளை களோ, பந்துக்களோ, சிநேகிதரோ நின்று துக்க முகத் தோடு கண்ணில் ஜலம் ததும்ப பார்த்துக்கொண்டிருப்பார் கள். வைத்தியன் வருவான். உன் கையைப் பிடித்து நாடியைப் பார்த்து சோதித்தபின், தாய் தகப்பன் முத லியவர்களுக்கு மனவருத்தம் கொடுக்காதபடி, பயப்பட வேண்டாம், வியாதி குணமாகும், அவ்வளவு மோசமில்லை, என்று முகத்துக்குமுன் சொல்வான். வைத்தியன் தன் வீட்டுக்குப் போனபின் சொல்வதைக் கேள்: வியாதி

முற்றிப்போயிற்று. ஔஷத பிரயோகத்தில் இனி பல னில்லை. நம்பிக்கை அறவே அற்றுப்போனது. ஐயோ பரி தாபம், நான் என்ன செய்கிறது, என்று கையை விரிப்பான்.

ஆனால் நீ அவஸ்தையாயிருக்கும்போது அவசியம் வரவேண்டிய குரு வந்திருக்கிறாரா? குரு கிட்ட சமீபத்தி லிருக்கிறாரா? இருந்தாலும் அவரால் வரக்கூடுமா? அவர் வந்தாலும், உன்னிடம் அவர் வருமட்டும் உயிர் இன்னு மிருக்குமா? நாம் அறிய ஓர் ஊரில் கூப்பிடு தூரத்திலிருந்த குரு அவஸ்தைக்காரன் வீட்டின் வாசலில் சேர்ந்தார். குரு கிட்டவருமுன் அவன் இறந்துபோனான். கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை.

இருக்கட்டும், குரு உன்கிட்ட வந்திருக்கிறாரென்று வைத்துக்கொள்வோம். உனக்கு அந்தச் சமயத்தில் புத்தி தெளிவிருக்குமா? குரு சொல்லும் புத்தியை நீ கேட் பாயா? பாவசங்கீர்த்தனஞ்செய்ய அப்போது உன்னால் கூடுமோ? இப்போது பூரண சௌக்கியத்தோடும் புத்தி ஸ்வாதீனத்தோடும் இருக்கையில், நல்ல பாவசங்கீர்த்த னஞ் செய்ய அறியாத நீயோ, அப்போது அவஸ்தையாய், பேச நாவின்றி, புத்தி தெளிவின்றி, மெலிந்து வாடி, இருக்கையில், நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்வாய்? தேக சௌக்கியமாயிருக்கும்போது தூககமாட்டாத பாரமான சுமையை, உன் தேகம் மெலிந்து வாடி, கால் ஊன்றி நிற்கப் பலமின்றி கிடக்கும் சமயத்தில் அதைத் தூக்கிச் சுமப்பேன் என்றால் யார் இதை நம்புவார்?

அன்றியும் அந்தச் சமயத்தில் பெண்ஜாதி பிள்ளைக ளின் கவலை ஓர் பக்கம், பணங்காசு வியாச்சிய வியாபாரத் தின் தொல்லை வேறு பக்கம், ஆக இவைகள் உன்னைச் சுற்றி நிற்கும்போது, உன் ஆத்தும அலுவலைக் கவனித் துப் பார்க்கும்படி உனக்கு எப்படி மனது வரும்? பாரி வியாபாரி ஒருவன் தன் ஜீவிய நாளில் வியாபாரத்தில் கவ னமாயிருந்தானன்றி தனக்கொரு ஆத்துமம் இருக்கிறதாக கனவிலும் நினைக்கவில்லை. அவனுக்கும் கடைசிநாள் வந் தது. அவஸ்தையாய்க் கிடந்தவன்மேல் இரங்கி, கிட்ட

இருந்தவர்கள் ஓர் குருவை வரவழைத்தார்கள். குருவும் உடனே தாமதமின்றி வந்தார். வெகு வருஷம் பாவசங்கீர்த்தனம் செய்யாதவனுதலால், அவன் சாகுமுன் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்யும்படி குரு புத்தி சொன்னுர். வர்த்தகன் குருவைப் பார்த்து: சுவாமி! அதெல்லாமிருக்கட்டும், என்னுடைய கப்பல் சரக்கேற்றிப்போனது, துறைமுகத்தில் சேர்ந்ததா? எவ்வளவு பணம் விற்றுமுதலானது? என்று கேட்டான். குரு அவனுக்குச் சமாதானஞ்சொல்லி, ஐயா, அதைப்பற்றி இப்போது கவலைவேண்டாம். ஆத்துமத்தைக் கவனிப்பது அவசியம். நேரமாகின்றது, நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்யும் என்றதற்கு வியாபாரி, சுவாமி! இந்த ஊரிலே ரங்கன் என்ற ஒருவன் நூறு ரூபாய் கடன் எனக்குக் கொடுக்கவேண்டும். வட்டியும் முதலும் அவனிடத்திலிருந்து வாங்கக் கெடு வந்தது, என்று சொல்வதைக் குரு கேட்டு, ஐயா, இதைப்பற்றிப் பிற்பாடு பேசிக்கொள்ளலாம், இப்போது பாவசங்கீர்த்தனஞ் செய்யவேண்டும். சர்வேசுரனுடைய நீதி சிம்மாசனமுன் போக நேரம் வந்தது, என்று சொல்ல, அவன் சுவாமி, அகவிலை எப்படி இருக்கிறது? என் களஞ்சியத்திலுள்ள தவச தானியத்தை விற்க இது நல்ல சமயமா, என்று தன் பணத்தையும், வியாபாரத்தையும்பற்றிப் பேசினுனே அல்லாமல், தன் ஆத்துமத்தை நினைத்து ஒன்றும் செய்யாமல், தன் வாழ்நாளிலே பணம், பணம் என்று நடந்து வந்தவன், சாகும் கடைசி நாளிலேயும் பணம், பணம் என்று சொல்லிச் செத்தான்.

கிறீஸ்துவனே! உனக்கும் இப்படிச் சம்பவிக்குமோ, என்னமோ, தெரியாது. இப்போது சர்வேசுரனையும் உன் ஆத்துமத்தையும் நீ கவனித்து நல்ல கிறீஸ்துவனுய் நடந்தால், உன் கடைசி நாளில் நல்ல கிறீஸ்துவனுய் சாவாய். இப்போது நீ நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து பழகினுல், உன் கடைசி நாளிலும் நீ நல்ல பாவசங்கீர்த்தனம் செய்வாய்.

இப்படியாய் நாம் பல யோசனையாயிருக்கும்போது, பார், அந்த அவஸ்தைக்காரன் இறந்தான்; அங்கே கிடப்

பது மனிதனல்ல, ஓர் பிரேதம். கிட்டவந்து உற்றுப்பார். அசைவில்லை, மூச்சில்லை. கண்களைப் பார். திறந்திருந்தாலும், கண்ணில் பார்வையில்லை. காதில் கேள்வியில்லை. அந்த நாக்கு அசையமாட்டாது. நாம் இப்போது பிரேதத்தின்முன்னே எதுவும் சொல்லலாம், எதுவுஞ் செய்யலாம், அதற்குக் கோபம் வராது. அவன் உயிரோடிருக்கும்போதோ, அப்பா! ஒரு வார்த்தை பொறுக்கமாட்டான், கொஞ்சம் கைநீட்டிப் பேசினல், அடைகாக்கும் பாம்பைத் தலையில் மிதித்தால், எப்படி சீறுமோ அப்படி சீறி விழுவான். ஆ! ஆ! என்னை இப்படியும் பேசலாமா? அவன் யார்? எம்மாத்திரம்? என்னை அறியானு? அப்படியா? என்று துள்ளிக் குதிப்பான், சண்டைக்கு நான் என்று இடுப்பில் வரிந்து கட்டி வெளிப்படுவான், வாயிலிருந்து தூஷண வார்த்தைகளைக் கக்குவான். எல்லாரோடும் வலிய சண்டைக்கு நிற்பான். இப்போது, தம்பியின் ஆட்டமும் பாட்டமும் அடங்கிப்போனது. எவன் என்ன சொன்னுலும் எதைச் செய்தாலும் தன் சுண்டு விரலையும் இனி அசைக்கமாட்டான்.

அவன் கண்களை நன்றுய்க் கவனித்துப்பார். பார்வையில்லை. அவன் நாவுக்கு அசைவு இல்லை. அவன் உயிரோடிருக்கும்போதோ, அந்தக் கண்கள் நாலா பக்கமும் சுற்றும். எல்லாம் பார்க்கும்படி, அவனுக்குத் தீராத ஆசை. தெருத்தெருவாய், ஊர் ஊராய் அலைவான். எங்கே கூட்டம், எங்கே திருநாள் சந்தடி என்று தேடித்திரிவான். வாயில் வந்ததெல்லாம் பேசுவான். ஊர் புறணி, தெருப் புறணி, வீட்டுப் புறணி, எல்லாப் புறணியும் அவன் நாக்கு அறியும். சுவாமி என்றும், குருவென்றும், தாய் என்றும், தகப்பனென்றும் பார்க்கமாட்டான். இல்லாததும் பொல்லாததும், இருந்ததுபோல் இட்டுக்கட்டி, இணைத்துப் பிணைத்து எல்லாரையும் தூற்றுவான். இப்போது இவன் வாயின் கிருதும், நாக்கின் விஷமும் எல்லாம் அடங்கினது. இறந்துபோனுன்.

இறந்துபோனுன்! இறந்துபோனுன்! என்று நீங்கள் கேட்டுமிருக்கிறீர்கள், சொல்லியுமிருக்கிறீர்கள். இறந்தவ

ளைப் பார்த்துமிருக்கிறீர்கள்; ஆனால் இறந்தான் என்ற பதத்துக்குள்ள அர்த்தமின்னதென்று எப்போதாவது கவனித்து யோசித்திருக்கிறீர்களா? நாம் சொல்வோம், கேளுங்கள். இறக்கிறதென்றால், இந்த உலகத்தைவிட்டு இனி என்றும் வராதபடி போய்விடுகிறது. உங்களுக்குள்ள பூமி, திரவியம், சொத்து, தாய் தந்தை, புருஷன், பெண்சாதி, மக்கள், சுற்றம், சகோதரர், சிநேகிதர், சகலரையும் விட்டுப் பிரிகிறது. பிரிந்தபின் இனி ஒருபோதும் அவர்களைத் திரும்பிப் பார்க்க வராமலிருக்கிறது. உன் வீடும், தேடிய பணமும், யார் எடுத்தாலும், யார் கொள்ளை அடித்தாலும், யார் அனுபவித்தாலும், நீ அதைப்பற்றி கவலைப்படமாட்டாய். நீ இப்போது வருந்தி உழைத்து இவன் காலில் விழுந்து, அவனிடத்தில் கெஞ்சி, இங்கே அநியாயஞ் செய்து, அங்கே சமர்த்தாய் திருடி, உன் பெண்சாதி பிள்ளைகள் பிழைத்து நன்றாய் இருக்கவேண்டுமென்று பணந்தேடினாயே. அப்படித் தேடும்போது, என் ஆத்துமங் கெட்டால் கெடட்டும், என் மக்கள் நன்றாயிருந்தால் போதும் என்று இராப்பகலாய் அலைந்து திரிந்து தலையை உடைத்து பணந் தேடினாயே. நீ தேடிவைத்த பணம் எல்லாம், எப்படிப் போகிறதோ, யார் வாய்க்கு இரையாகிறதோ? அதெல்லாம் உனக்குத் தெரியாது. நீ உலகத்தில் வந்து விசாரிக்க மாட்டாய். இப்போது நீ உன் பெண்சாதி பிள்ளைகளை விட்டுப் பிற ஊருக்குப் போய் இருந்தால், உன் வீட்டின்மேல் எவ்வளவு கவலை உனக்கு? கடிதத்தின்மேல் கடிதம் போட்டு, அவர்களுடைய க்ஷேம யோகங்களை விசாரிக்கிறாய். என்னமோ ஏதோ என்று கவலைப்படுகிறாய். நீ சாகும்போதோ இவைகளையெல்லாம் விட்டு நீங்கவேண்டும்.

சகோதரரே! இப்படி எல்லாவற்றையும் விட்டுப் போவது அவசியமானால், ஏன் இவர்களுக்காக உங்கள் ஆத்துமத்தைக் கெடுக்கவேண்டும்? இவர்கள் உங்களால் பிழைக்கும்படியாக, நீங்கள் ஏன் நரக நெருப்பில் போய் விழவேண்டும்? இது புத்தியா?

இரண்டாம் பாகம்

இறப்பதென்றால் இன்னதென்று இப்போது நீங்கள் நன்றாய் அறிகிறீர்களா? நல்லது, இறந்தவனுக்கு அவன் பந்துக்கள் என்ன செய்வார்கள் என்று யோசித்துப் பார்க்கலாம். சில சமயங்களில் அவன் சாகுமுன்னே அவனுடைய சொத்துக்களையும் சாமான்களையும் பந்து ஜனங்கள் தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்வார்கள். அப்படித்தான் ஓர் ஆஸ்திக்காரன் பணங்காசு, விலை உயர்ந்த சாமான், வஸ்திர ஆபரணங்கள், எதேஷ்டமாய் பல வருஷமாய்த் தேடி சம்பாதித்து, பெட்டியில் பூட்டிவைத்திருந்தான். அவன் அவஸ்தையாய் சாகக் கிடக்கும்போது அவன் வீட்டிலிருந்த வேலைக்காரர்கள், இதுதான் நல்ல சமயம், கையில் வந்ததே லாபம், காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்று, எஜமான் பார்த்துக்கொண்டிருக்க, அவன் கண்முன்னே கையில் வந்ததெல்லாம் சுருட்டி மடக்கி கக்கத்தில் அடக்கிப்போகிறதை வியாதிக்காரன் பார்த்தான். லபோ லபோ என்று வாயில் அடித்துக் கொண்டு, என் பணமே, என் காசே, என் பொன் நகையே, உங்களைத் தேட நான் பட்டபாடு நாயும் பட்டிராது. தூக்கமின்றி ஊர் ஊராய் அலைந்தேன், ஐயோ பாவமே! இந்த சண்டாளப் பயல்கள் என் கண்முன்பாக இப்படியா திருட வேண்டும்? எழுந்திருக்கக்கூடவில்லையே, ஐயோ, என்று அழுது புலம்பிச் செத்தான்.

தம்பி நன்றாய்க் கேட்கிறாயா? நீ பண ஆசை மிகுந்து பணத்தை நியாயம் அநியாயம் பாராமல் தேடிப் பெட்டியில் பூட்டி வைத்தால், உனக்கும் இப்படித்தான் சம்பவிக்கும். இப்படி உன் பணத்தைக் கொள்ளையடித்த பின்பு, உன் கடைசி நாளில் உனக்கு எதை இஷ்டம் வைத்துக் கொடுப்பார்களோ அதுதான் உனக்கு வரும். அப்படி இஷ்டமாய் உனக்குக் கொடுப்பதும் வெகு சொற்பம். உன்னிடமிருந்த நகை ஆபரணமெல்லாம் ஒன்றும் விடாமல் கழற்றினபின்பு, உன் நிர்வாணத்தை மறைக்க நாலு முழத் துணியைச் சுற்றுவார்கள். இவ்வளவுதான் அவர்

கள் உனக்குப் படைப்பது. நீயும் அதிகம் கேட்கமாட்டாய். இப்போதோ உன் ஆசை கடல்போல் பொங்குகின்றது. இதுவேணும், அது வேணும், எல்லாம் உனக்கு•வேண்டும். பெரும் நெருப்பில் எவ்வளவு விறகுக் கட்டையைப் போட்டாலும் அது போதுமென்று சொல்லுமா? போடப்போட அதிக உக்கிரமாய் சுவாலித்துப் பொங்கி எழும்பும். அப்படியே இப்போதும் உன் ஆசை அளவின்றி பொங்குகின்றது. நன்றாய்ச் சாப்பிடவேண்டும், நல்ல உடுப்பு வேண்டும், காது நிறைய நகைகள் வேண்டும், கழுத்திலே தாவடம், மணிவடம் முதலிய பல வடங்கள் வேண்டும். கைவிரல்கள் ஒவ்வொன்றிலும் மோதிரங்கள் தேவை. காலுக்குங் கைக்கும், காப்புங் கொலுசும் அவசியம். உன் சரீரத்தைப் பொம்மைபோல் இப்போது அலங்கரிக்கிறாய். சரீரத்தில் பல பாகங்களில் துவாரமிட்டு அங்கே நகைகளென்று பொன்னையோ வெள்ளியையோ இரும்பையோ, அல்லது வெறும் அரக்கையோ, இடுக்கி சொருகி, என்னைப் பாருங்களென்று, அடக்கம் நாணம் மரியாதையின்றி சுற்றித் திரிகிறாய். நல்லது நல்லது. இன்னும் கொஞ்சம் நாளில் உன் கொட்டமெல்லாம் அடங்கிப் போம். முரட்டுத்துணி ஒன்றுமாத்திரம் எனக்குப் போதும் என்று நீ சொல்லக் காலம் வரும்.

இறந்தவனைத் துணியால் கட்டி பாடையில் வைத்தாயிற்று. அவன் இனி இருக்கும்படி எங்கே வீடு கட்டியிருக்கிறார்களென்று தெரியுமா? கேள். ஊருக்கு வெளியே காட்டில், ஒரு குழி வெட்டுவார்கள். நான்கு அடி ஆழம், ஆறடி நீளம், மூன்றடி அகலம்: உன் பிரேதங் கொள்ளும்படியான இடந்தான் கொடுப்பார்கள். சில ஊர்களில் நாம் அறிய அவ்வளவுங் கொடுக்கமாட்டார்கள். மரித்தோரை அடக்கம் செய்யும் இடம் வெகு சொற்பம். ஆனதால் குழிக்கும் பஞ்சம். அதிலே காலை விரிக்கவும் கையை வீசவும் புரண்டு படுக்கவும் ஏலாது. உன்னாலுங் கூடாது. அந்தக் குழியிலே உனக்கு யார் துணையென்று **யோப்** என்ற மகாரிஷி சொல்வதைக்கேள்: துர்க்கந்தம் நாறும் அழிவைப் பார்த்து, நீயே எனக்குத் தந்தையென்

றேன். புழுக்களை நோக்கி, நீங்களே எனக்குத் தாயும் தமக்கையும் என்றேன். கேட்டாயா? புழுக்கள்தான் உனக்குத் துணையாயிருப்பார்கள். அந்தக் குழியில் உன் சரீரம் அழிந்து புழுத்து நாறும். அதிலே இருந்து புழுக்கள் ஜென்மிக்கும். எவ்வளவு இப்போது உன் சரீரம் புஷ்டியாயிருக்கிறதோ, அவ்வளவு அதிலிருந்து கொழுத்த புழுக்கள் உற்பத்தியாகி அவைகளுக்கு நீ நல்ல விருந்தாவாய்.

இவ்வளவு ஈனமாய் அழியும் இந்தச் சரீரமோ, ஆ! ஆ! இப்போது உனக்கு ஓர் தெய்வம். ஆத்துமமோ, அற்பக்காரியம். சரீரத்துக்குச் சௌக்கியமும், சந்தோஷமும் உண்டாக, எல்லாம் இப்போது செய்வாய். அது உன்னிடம் என்ன கேட்டாலும் இல்லையென்று சொல்ல மாட்டாய். உன் ஆத்துமம் உன் சரீரத்துக்குத்தான் தொண்டு செய்யவேண்டும். சர்வேசுரனுடைய கற்பனைகள் உன் சரீரத்துக்கு வருத்தங் கொடுத்தால், அவைகள் உனக்குச் செல்லாது. அப்படியே அதிகாலமே கோவிலுக்குப் போகவேணுமோ? அப்பா! பனியிலே நடந்தால் ஜலதோஷம் பிடிக்குமே. பாவசங்கீர்த்தனஞ் செய்ய வேண்டுமோ? ஆ! வயிற்றுப் பிழைப்பு கெட்டுப் போகுமே. கோவிலில் முழங்காலிலிருக்கவேண்டுமோ? அப்பா! கால் தேய்ந்து தடித்துப்போகுமே. கடன் ஒரு சந்தி பிடிக்கவேண்டுமோ? அப்பா! பசியால் தேகம் வாடி மெலிந்துபோகுமே. வெள்ளிக்கிழமையோ? சுத்த போஜன நாளோ? ஆ! மாம்ஸம் சாப்பிடாவிட்டால் பலம் வருமா? என்று இப்படி இழிவான சரீர சம்பந்த போக்குகளைத் தேடி சரீரத்தைக் காப்பாற்றுகிறாய்.

கிறீஸ்துவர்களே! நாம் இங்கே விவரித்துக் காட்டியது நடவாத காரியமா? நீங்களே சாட்சியாயிருந்து சொல்லுங்கள். இங்கே இப்போது இருக்கும் உங்களுக்குள், இப்படி நினைத்து, பேசி, நடக்கிறவர்களில்லையா?

ஆனால் இந்த சரீரம், ஆகக்கூடி என்ன? வெறும் மண்தானே. ஆத்துமமோ, சர்வேசுரனுடைய சாயல் பெற்றது. சர்வேசுரனைப்போல் இனி என்றுஞ் சாகாது.

சிப்பிக்குள் இருக்கும் இராஜமுத்து பெரிதோ? அல்லது நாறும் வெறுஞ் சிப்பி பெரிதோ? நீங்களோ இராஜமுத்தாகிற உங்கள் ஆத்துமம் பெரிதல்லவென்று அதை எறிந்துபோட்டு, அசுத்தப் பாண்டமாகிற சரீரத்தைக் கனமாய் மதித்து நீராட்டி சீராட்டி வருகிறீர்கள். இது புத்தியா? மகாத்துமாக்களான பெரியோர் அப்படிச் செய்யவில்லை. அவர்கள் ஆத்துமத்தைக் காப்பாற்ற சரீரத்தை அடக்கித் தண்டித்து ஒடுக்கி, தன் இஷ்டம்போல் அது நடவாமல், புண்ணிய ஒழுக்கத்தில் பிசகாமல், நேரே நடக்கும்படி கவலையாய்ப் பார்த்துவந்தார்கள். நீங்களும் அவர்களைப்போல் நடக்கவேண்டாமா? அவர்களுக்கு ஒரு பாதை, உங்களுக்கு ஒரு பாதை உண்டென்று எண்ணுகிறீர்களோ? அப்படி அல்ல. எல்லாருக்கும் சேசுநாதர் சுவாமி காண்பித்த சிலுவையின் பாதை இது ஒரே பாதைதான். வேறு பாதை இல்லை.

நல்லது. உன் பிரேதத்தை தூக்கிப்போய் குழிக்குள் போட்டு, மண்ணால் நன்றாய் மூடினபின்பு என்ன நடக்கும் என்று பார். கல்லறைச் சடங்கெல்லாம் முடிந்தது. இழவுக்கு வந்தவர்கள் தலையில் துக்க அடையாளமாய் முக்காடு போட்டு ஸ்நானஞ்செய்து வீட்டுக்குத் திரும்பும்போது உன்னை நினைத்து என்ன பேசுகிறார்களென்று நீ கேட்க ஆசையாயிருக்கிறாயா? இப்போது நீ உயிரோடிருக்கும்போது, இவர் அவர் உன்னைப்பற்றி என்ன நினைப்பார்கள், என்ன பேசுவார்களென்று வெகு கவலையோடு அவர்களுக்குப் பிரியப்பட, நீ செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாமலும், செய்யத் தகாதவைகளைச் செய்தும் வருகிறாய். நீ இறந்த பின்பு உன் தாய், பிள்ளைகள், கிட்டின பந்து மித்திரர்கள் உன்னை நினைத்து ஏதோ சிறிது நேரம் துக்கித்து புலம்புவார்கள். பெண்கள் ஒப்பாரி வைப்பார்கள். ஆனால் அதிசீக்கிரம் இவர்களும் உன்னை மறந்துவிடுவார்கள். உலகமோ உன்னைப்பற்றி ஒன்றும் நினைக்கப்போகிறதில்லை. நீ மரித்தால் அதற்கு நஷ்டம் யாதுமில்லை, உன்னால் கஷ்ட நஷ்டப்பட்டவர்களோ, பாவி தொலைந்தானென்று சந்தோஷிப்பார்கள்.

ஒரு காக்கையைக் கொன்றால் ஊரிலுள்ள காகம் எல்லாம், செத்த காகம் கண்முன் இருக்குமட்டும், காய் மூய் என்று கத்தி முறை வைக்கும். செத்த காக்கையைக் குழியில் போட்டு மூடினால் காகக்கூட்டம் கலைந்துபோகும். மனிதர்களும் அப்படியே உனக்கும் செய்வார்கள். காரியம இப்படியிருக்க, நீ ஏன் இப்போது மனிதர்களுக்குப் பிரியப்பட உன் ஆத்துமத்தைக் கெடுக்கவேண்டும்? சர்வேசுரன் ஒருவருக்குமாத்திரம் பிரியப்படும்படி நீ நடந்தால் எல்லாம் அநுகூலமாய் முடியும். சர்வேசுரன் பிரமாணிக்கமுள்ளவர். உன்னுடைய நன்மையையும் பாக்கியத்தையும் ஆசையோடு தேடுகிறவர் அவருக்கு ஊழியஞ்செய்தால் உன் ஆத்துமத்தை நீ இரட்சிப்பாய்.

மூன்றும் பாகம்

நீ இறந்தபின்பு இன்னும் உனக்குச் சம்பவிப்பதை கவனித்துப் பார்க்கலாம். உன் பிரேதத்தைத் தூக்கிப் போய் கல்லறையில் போட்டு மண்ணைத்தள்ளி வந்துவிட்டார்கள். எட்டுநாள் சென்றபின்பு உன் கல்லறைக்குத் திரும்பிப்போய் நீ எப்படி இருக்கிறுயென்று அறியும்படி, மேலே குவித்த மண்ணை எடுத்து கல்லறையைத் திறந்து பார்க்கலாம். ஆ! என்ன அவலக்ஷணம்! சீ! துர்நாற்றம் குடலைப் பிடுங்குகிறது. இது உன் சரீரமா! எட்டுநாளையில் இவ்வளவு மாறிப்போய்விட்டதா! பார் அந்த முகத்தை! எவ்வளவு பயங்கரம்! கண்விழிகள் அழுகிப்போயிருக்கிறது. வயிறு ஊதி வெடித்திருக்கிறது! இத்தனை புழுக்கள் எங்கே இருந்து வந்தன? இவைகள் எல்லாம் அழுகிப்போன உன் சரீரத்திலிருந்தே உற்பத்தியானவை. உன் சதையை எல்லாங் கூடித் தின்கின்றன. அந்த வாலிபன் தன் சரீர சுகத்தைப் பெரிதாய் எண்ணி, அதற்கு நல்ல ருசியான சாப்பாடு கொடுத்து வளர்த்துவந்தான். இன்ப சந்தோஷங்களைத் தேடி அனுபவித்தான். இந்தப் பெண்பிள்ளை தன் சரீர அலங்காரத்தைப் பாராட்டித் தன்னைச் சிங்காரமாய் அலங்கரித்து, வாசனைத் திரவியங்களை மேலே தூவி, எல்லாரும் தன்னைப் பார்க்கும்படி சுற்றித்திரிந்தாள்.

அவனுடைய முகலக்ஷணம் இப்போது எங்கே? பயம் வருவிக்கும் ரூபம்! கிறீஸ்துவர்களே, சரீரத்தின் கதி இப்படியானால், நீங்கள் இப்போது சரீரந்தான் முக்கியமானது, ஆத்தும இரட்சணியம் இனிமேல் பார்க்கலாம் என்று, நடக்கிறீர்களே! புழுத்து நாறும் இந்தப் பிரேதத்தை இப்போது நன்றாய்ப் பாருங்கள். இப்படி அழிந்து மண்ணாய்ப் போகும் சரீரத்துக்காக அழியாத நித்திய ஆத்துமத்தைக் கெடுத்து ஏன் அதை நரகத்திலே தள்ளவேண்டுமென்று உங்களையே கேளுங்கள்.

இறந்தவன் கல்லறையில் அடக்கமாகி ஒரு வருஷமாகின்றது. இன்னுமொருவிசை அவன் கல்லறையைத் திறந்து பார்க்கலாம். என்ன இங்கே இருக்கின்றது? ஒன்றுங் காணோமே! அதோ அங்கே கிடப்பது மண்டை ஓடோ? அல்லது அலகெலும்போ? எப்படி உள்ளே இருந்த சரீரம் மாயமாய் மறைந்துபோனது? எல்லாம் மண்ணாய் அல்லோ மாறிவிட்டது. சர்வேசுரன் ஆதி காலத்தில், மனிதன் முதல்விசை பாவத்தைச் செய்தபோது அவனைச் சபித்து, நீ மண்ணால் உண்டாக்கப்பட்டவன் திரும்பவும் மண்ணாய்ப் போவாய் என்று சொன்ன வாக்கியம் சரியாய் நிறைவேறினது.

இந்த மண்ணைக் கையிலெடுத்துப்பார். இது முன் உன் சரீரத்தின் சதையாயிருந்தது. இப்போது மண்ணாய் மாறினது. இந்த இடத்தைவிட்டு அப்பால் நீ போகுமுன், உன் சரீரத்தைப் பார்த்துச் சொல். ஓ சரீரமே! நன்றாய் இதைப் பார். நீயும் இன்னும் சிலநாளில் இதே மாதிரி மாறுவாய். நீயும் மண்ணாய்ப்போவாய். இந்த மண்ணின் மேல் புல்லும் முள்ளும் முளைக்கும். மனிதரும் மிருகங்களும் இதின்மேல் ஏறி மிதித்து நடப்பார்கள்.

ஓ! மனிதன் எவ்வளவு அற்ப வஸ்து! நாட்டில் வளரும் பிரமாண்டமான தேக்குமரம் வெட்டுண்டு கீழே விழுந்தால் அதைச் செதுக்கித் துலக்கி, உத்தரமாகவும் பலகையாகவுஞ் செய்து, அரண்மனைகள் கட்டவும், தேவாலயங்களின் பீடங்களைச் சிங்காரிக்கவும் உபயோகப்படுத்து

வார்கள். சிற்பாசாரி அலங்காரமான சித்திரவேலைகள் செய்து அதைச் சிங்காரிப்பான். வெட்டுண்டு கீழே விழுந்த மரம் இன்னும் பல வருஷம் பிரயோசனமுள்ள வேலைகளுக்கு உபயோகமாகும். மனிதன் உயிரற்று அடி யற்ற மரம்போல் கீழே விழுந்தால் அவன் சரீரம் ஒன்றுக் கும் உதவமாட்டாது. இவ்வளவு நீசமான சரீரத்துக்காக அழியாத ஆத்துமத்தைக் கெடுப்பது புத்தியோ?

இந்த சத்தியத்தை அடிக்கடித் தியானித்தால் இவ் வுலக அநித்திய வாழ்வின்பேரில் வெறுப்பும், அரோசிக முழும் உண்டாகும். சர்வேசுரனுக்கு ஊழியஞ்செய்ய ஸ்திர மான மனதும் உறுதியும் பிறக்கும். இப்படி யோசிப்பவர் கள் சாவுக்குப் பயப்படமாட்டார்கள். இவர்களுக்கு இந்த உலகம் கண்ணீர்க்கணவாயாகவும் பரதேசமாகவும் தோன் றும். தங்கள் ஜென்ம நாடாகிற மோக்ஷத்திற்கு எப் போது போவோம் என்று ஆவலோடு காத்திருப்பார்கள். சரீரத்துக்கு வரும் துன்பம் வருத்தம் நோவுகளைக் கண்டு மனங்கலங்கி முறைப்படாமல் சந்தோஷமாயிருப்பார்கள். இதற்கு உதாரணமாய் நாம் சொல்லும் ஓர் வர்த்தமானத் தைக் கேளுங்கள்.

அமெரிக்கா தேசத்தில் ஓர் குரு வனாந்திரப் பாதை யாய் அடுத்த ஊரில் இருந்த கிறீஸ்துவர்களைப் பார்க்கப் போகும்போது அந்த வனாந்திரத்தில் யாரோ ஒருவன் பாடும் இனிய குரலைக் கேட்டார். மனித சஞ்சாரமில்லாத இந்தக் காட்டில் யார் இப்படிப் பாடக்கூடும் என்று மன தில் யோசித்து சப்தம் வந்த திசைவழியே மெதுவாய் நடந்துபோய் பார்க்கும்போது, ஓர் மரத்தடியில் குஷ்ட ரோகி ஒருவன், மேல் எங்கும் ரணமாய் சீழ் வடிந்தோட படுத்திருபபதைக்கண்டு, பிரமித்து, தான் கேட்ட இனிய குரல் சப்தம் இந்தக் குஷ்டரோகியின் குரலாய் இருக்கக் கூடாதென்று நினைத்து, அவனைப்பார்த்து, அப்பா, நீ யார்? எவ்விடம்? எப்படி இங்கே வந்தாய்? யாரோ இங்கே பாடுஞ் சப்தம் நான் கேட்டேன், யாருடைய குரல் அது, என்று அவனைக் கேட்டதற்கு, அவன் சொல்வான்:

சுவாமி, நான் அதோ அடுத்த ஊரான். எனக்கு பெருங் குஷ்டம் வந்ததால் ஊரார் என்னை இவ்வளவு தூரம் கொண்டு வந்து தனிவாசமாய் வைத்தார்கள். நீங்கள் கேட்ட குரல் என் சப்தந்தான். நான்தான் பாடிக்கொண்டிருந்தேன்.

குரு முன்னிலும் அதிக ஆச்சரியங்கொண்டு, பாடினவன் நீயா? எப்படி! உன் சரீரம் புழுத்து நாறி, உன் சதை கீழே விழுகின்றதே! நீயோ சாகப்போகிறாய், இந்த ஸ்திதியிலிருந்து எப்படி நீ பாடத்துணிந்தாய் என்று கேட்டதற்கு, குஷ்டரோகி புன்னகைகாட்டி சொல்வான்: சுவாமி! நான் எப்படி பாடக்கூடுமென்று கேட்கிறீர்கள்? எப்படி பாடாமலிருக்கக்கூடும் என்று கேட்டால் ஞாயமாயிருக்கும். மோக்ஷம் என்னுடைய வீடு. சேசுநாதர் சுவாமியையும் என் தாய் தேவமாதாவையும் பார்க்கும்படி வெகுவாய் நான் ஆசையாயிருக்கிறேன். அவர்களை நான் இதுமட்டும் பார்க்காதபடி இந்த சரீரம் பெரும் சுவர்போல் மத்தியில் எழும்பி என்னைத் தடுத்துக்கொண்டிருந்தது. இதோ இந்த சுவர் கொஞ்சம் கொஞ்சமாய் இடிந்து கீழே விழுகின்றது. முக்கால்வாசி விழுந்துபோயிற்று. இன்னுங் கால்வாசிதானிருக்கின்றது. இதுவும விழுந்தவுடன் நான் என் ஜென்மதேசத்துக்குப் போவேன். சேசுநாதர் சுவாமியை என் கண் களிகூரப் பார்ப்பேன். ஓ! இதை நினைக்கும்போது என் மனம் சந்தோஷத்தால் துள்ளித் துடிக்கின்றது. இந்த சந்தோஷ மிகுதியால்தான் நான் பாடிக்கொண்டிருந்தேன் என்று குஷ்டரோகி சொன்னான். குருவானவர் இதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு, இவ்வளவு பத்தி விசுவாசமுள்ள கிறீஸ்துவனைப் பார்க்கும் அதிர்ஷ்டம் தமக்கு வாய்த்ததென்று மனதில் எண்ணி, அவன் சாகுமட்டும் கிட்ட இருந்து வேண்டிய உதவி எல்லாஞ் செய்தார்.

சகோதரரே! பாவஞ் செய்யாமல் சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்வீர்களேயாகில் நீங்களும் இஷ்டப்பிரசாதத்தோடு சந்தோஷமாய் சாவீர்கள். அப்போது சாவின் பயங்கரம் உங்களுக்குத் தோன்றாது. இதுதான் சகல

வரங்களிலும் மேலான வரம். இந்தப் பாக்கியமான சாவுக்காக சர்வேசுரனை மன்றாடவேண்டும்.

அர்ச். மரியாயே! சர்வேசுரனுடைய மாதாவே! பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும்.

சேசு மரியே சூசை! உங்கள் கையில் என் ஆத்துமத்தை ஒப்புக்கொடுக்கிறேன்! சேசு மரியே சூசை! என் அவஸ்தை வேளையில் எனக்கு அடைக்கலமாயிருங்கள்! சேசு மரியே சூசை! உங்களிடம் நான் சமாதானத்தில் மரிப்பேனாக. ஆமென்சேசு.

மூன்றும் நாள்—ஞானபோதகம்

பாவசங்கீர்த்தனம்

இத்தாலியா தேசத்திலுள்ள நேயாப்போலி என்ற பட்டணத்தின் சமீபத்தில் வெசுவியஸ் என்னும் ஓர் மலை இருக்கின்றது. ஒரு காலத்தில் இந்த மலையின் அடிவாரத்தில் இரண்டு சிறந்த பட்டணங்கள் உண்டாயிருந்தன. மலையைச்சுற்றி இருந்த நிலங்கள் வெகு செழுமையாயிருந்ததால் திராட்ச தோட்டங்களும், ஒலிவமரச் சோலைகளும், பற்பல கனிவர்க்கங்களும் நிறைந்து இருந்தன. ஊர் தேக சௌக்கியத்துக்கு அநுகூலமாயிருந்ததின் நிமித்தம், அநேக பிரபுகளும், திரவிய சம்பனரும், உயர்ந்த மாளிகைகள் கட்டி, கவலையின்றி காலக்ஷேபஞ்செய்து வந்தார்கள்.

இப்படி இருக்கும் காலத்தில் ஒருநாள் மலைக்குள்ளிருந்து ஏதோ வானம் குமுறல்போல் சப்தம் உண்டாவதை ஊர் ஜனங்கள் கேட்டார்கள். மலையின் உச்சியிலிருந்து இருண்ட புகை திரண்டுகூடி உயர எழும்புவதைப் பார்த்தார்கள். பார்த்து பயந்து மனங் கலங்கி நிற்கும்போது மலையின் உச்சி படீர் படீர் என்று பிளந்து வெடித்து, பூமி

அதிர்ந்து அசைந்தது. அக்கினிப்பிரவாகம் மலைக்குள்ளிருந்து வெளியே கொதித்து பொங்கி உக்கிரமத்தோடு புறப்பட்டு, நாலு பக்கமும் விழுந்து விசையாய் ஓடி எங்கும் பரவிப் படர்ந்தது. வீடுகளும் மாளிகைகளும் இடிந்து விழுந்து சாம்பலாயின. தோட்டங்கள் அழிந்து போயின. மனிதர்களில் தப்பித்தோடினவர்கள் போக, மீதிப்பேர் அக்கினிக்கு அன்றே இரையானார்கள். முந்நூறு வருஷம் செழிப்பாய் சிறந்து விளங்கிய பட்டணமும் அதின் செல்வமும் சிங்காரவனப்பும், ஒரேமணி நேரத்தில் சாம்பலாகி, மனிதர் வாழ்ந்த நாடு சுடுகாடாய் மாறி அழிந்துபோனது.

சகோதரரே! ஆத்துமத்துக்குச் சாவான பாவத்தால் வரும் அழிவைக் காட்ட இந்த வர்த்தமானம் ஓர் சித்திரப் படம்போல் தெளிவாயிருக்கின்றது. தேவ இஷ்டப்பிரசாதம் ஆத்துமத்திலிருக்கும்போது அந்த ஆத்துமம் சிறந்த செல்வப் பட்டணம்போலிருக்கின்றது. அந்த அந்தஸ்திலிருக்கையில் நீ செய்யும் நற்கிரிகைகளெல்லாம் நித்திய சம்பாவனை தரும் மோக்ஷ பேறுள்ள கிரியைகளாகின்றன. சேசுநாதர் சுவாமி அந்த ஆத்துமத்தின் மத்தியில் பிதாவோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் வாசஞ்செய்கிறார். சம்மனசுக்கள் அந்த ஆத்துமத்தை ஆச்சரிய சந்தோஷத்துடன் பார்த்து சர்வேசுரனை ஸ்துதிக்கிறார்கள். இஷ்டப்பிரசாதமுள்ள ஆத்துமம் மோக்ஷத்தின் உத்தம சாயல். சர்வேசுரனுடைய தேவ பட்டணம். இதின் செல்வத்துக்கும் சிறப்புக்கும் மிஞ்சினது உலகத்தில் ஒன்றுமில்லை.

இவ்வித அலங்காரம் பெற்ற ஆத்துமத்திலே ஒரே ஒரு சாவான பாவம்மாத்திரம் பிரவேசிக்கட்டும். அந்த க்ஷணமே இஷ்டப்பிரசாதம் அழிந்துபோகின்றது. பேறு பலன்களும் புண்ணியங்களும் மறைந்துபோகின்றன. சேசுநாதர் இருந்த இடத்தில் பசாசு வந்து இருக்கிறது. அந்த ஆத்துமம் நரகத்தின் சாயலாய் ஒரே நிமிஷத்தில் மாறிப்போகின்றது! ஓ! என்ன பயங்கரமுள்ள மாற்

றம்! என்ன நிற்பாக்கியம்! எப்படி பிரகாசமுள்ள சுய தங்கம் ஒரு நொடியில் அவலக்ஷண நிறமுள்ள கரியாய் மாறிப்போனது!

அழிந்து சாம்பலான பட்டணத்தைத் திரும்பி ஒரே நாளையில் கட்டுவது மனிதனுல் கூடாது. அந்தப் பட்டணம் சிறப்பாய் வளர்ந்து செழித்து முன்வர மூந்நூறு வருஷங்கள் சென்றது. திரும்பவும் அது முன்போல் செல்வமுள்ள பட்டணமாகும்படி அநேக வருஷங்கள் செல்லும். நூறு வருஷமாய் வளர்ந்து விரிந்து உயர ஓங்கிய பெரிய ஆல விருக்ஷத்தை பெருங் காற்று அடியோடு கீழே தள்ளினுல், விழுந்த மரம் திரும்பவும் நிமிர்ந்து வேர் ஊன்றி முன்போல நிற்கமாட்டாது. ஆத்தும விஷயத்தில் சர்வேசுரன் கிருபையால் அப்படி அல்ல. ஐம்பது வருஷமாய் நீ இஷ்டப்பிரசாதத்தோடு இருக்குங்காலத்தில் தேடிக் குவித்த ஞான வரங்கள், பேறுபலன்கள், புண்ணிய நற்கிரியைகள் எல்லாம் ஒரே ஒரு சாவான பாவத்தால் நீ உடனே இழந்தாலும், இவைகளை இழந்த மறு நிமிஷத்தில், இவைகளை எல்லாம் திரும்பவும் நீ அடையலாம். சேசுநாதர்சுவாமி மனிதர்பேரில் அளவற்ற அன்பும் தயையும் உள்ளவரானதால், மனிதர் இழந்த நன்மை வரங்களைத் திரும்பவும் பெற்ற தமக்கு முன் போல் பிரிய பிள்ளைகளாகும்படியாய் அற்புத ஓர் வழி ஏற்படுத்தி இருக்கிறுர். அந்த வழி பாவசங்கீர்த்தனம்.

கிறீஸ்துவன் ஞானஸ்நானத்துக்குப்பின் பாவஞ்செய்தால் அந்தப் பாவத்துக்கு மன்னிப்பு பெறும்படியாய் பாவசங்கீர்த்தனம் சர்வேசுரனுல் நியமிக்கப்பட்ட வழி. இதுதான் இரண்டாம் ஞானஸ்நானம். இதுதான் பாவியான கிறீஸ்துவனை மோக்ஷத்தில் சேர்க்கும் அற்புதமான ஏணி. இதுதான் ஆத்துமத்தில் வந்த பாவமாகிற குஷ்டத்தைத் தீர்க்கும்படியாய் சேசுநாதசுவாமி தமது இரத்தத்தால் செய்த அற்புத தைலம். இதின் நிமித்தம் பாவசங்கீர்த்தனம் இன்னதென்று நன்றுய் அறிவது எல்லாருக்கும் வெகு பிரயோசனமான காரியம்.

கிறீஸ்துவர்கள் சாதாரணமாய் பாவசங்கீர்த்தனமாவது ஏதென்று விவரமாய் நன்ருய் அறியமாட்டார்கள். சிலர் இது வெறுஞ் சடங்கென்று மாத்திரம் எண்ணி இதை மதிக்கிறதில்லை. வேறு சிலர் பாவசங்கீர்த்தனம் மகா கஷ்டமான ஏற்பாடென்று பயந்து அதன் பெயரைக் கேட்டாலே நடுங்குவார்கள். பாவசங்கீர்த்தனத்தை வெறுஞ் சடங்கென்று எண்ணுகிறவர்கள், தகுந்த குணங்களோடு பாவசங்கீர்த்தனம் செய்யமாட்டார்கள். அது கடினமென்று நினைப்பவர்கள் பாவசங்கீர்த்தனஞ் செய்ய காலதாமதம் பண்ணுவார்கள். இவ்விருவகைப் பேர்களும் மோசம்போகிருர்கள். இவர்களுக்குப் பாவசங்கீர்த்தனம் இன்னதென்று நன்ருய்த் தெரியாது. இதின் நிமித்தம் நீங்கள் எல்லாரும் பாவசங்கீர்த்தனம் இன்னதென்று தெளிவாயும் விவரமாயும் அறியும்படி, இந்தப் போதகத்தில் பாவசங்கீர்த்தனமாவதேதென்றும், அதின் பிரயோசனம் எவ்வளவென்றும், அதைச் செய்யாதபடி கிறீஸ்துவர்கள் சாதாரணமாய்ச் சொல்லும் போக்குகள் எவை என்றும் விவரித்துக காண்பிப்போம். பாவசங்கீர்த்தனம் நன்ருய் செய்ய அவசியமான குணங்களைப்பற்றி நாளை உங்களுக்கு விரிவாய்ப் பேசுவோம்.

இஷ்டப்பிரசாதத்தின் தாயாகிற தேவ ஆண்டவள் நமக்குத் துணையாய் வந்து முன் நிற்பாளாக.

முதல் பாகம்

சேசுநாதர்சுவாமி ஸ்தாபித்த ஏழு தேவதிரவிய அநுமானங்களில் பாவசங்கீர்த்தனம் ஒன்று. பாவத்தைச் செய்கிற கிறீஸ்துவனுக்கு பொறுத்தலும், ஆறுதலும், மனதில் சந்தோஷமும் கொடுக்கும்படியாய் சேசுநாதர் சுவாமி ஏற்படுத்திய அற்புதமான உபாயம். ஞானஸ்நானம் பெற்றபின் மனிதன் செய்யும் பாவங்கள் தொகையிலும் கனத்திலும் விஷத்திலும் எவ்வளவு மிதந்தப்பிப் பெருகிஞலும் அவைகள் எல்லாவற்றிற்கும் மன்னிப்பு பெறும்படியாய் சேசுநாதர் காட்டின வழி பாவசங்கீர்த்

தனந்தான். பாவசங்கீர்த்தனம் ஆத்துமத்துக்குப் பாவத்தால் வந்த நஷ்டம் முழுவதையும் பரிகரிக்கும். செத்துப்போன ஆத்துமத்துக்குத் திரும்பவும் உயிர் கொடுக்கும். சர்வேசுரனுக்குப் பிள்ளைகளாக்கும். மோக்ஷ சுதந்தரத்தைத் திரும்பவுங் கொடுக்கும்.

பாவசங்கீர்த்தனம், எந்த அந்தஸ்திலுள்ளவர்களுக்கும், எந்த வேலையிலிருப்பவர்களுக்கும், பெரியோர், சிறியோர், வாலிபர் முதலிய சகலருக்கும், எந்தக் காலத்திலும் பிரயோசனமுள்ளது. யார் எவனாயினும் பாவத்தைச் செய்தவுடன் அவனுடைய மனச்சாட்சிப் புழுவைப்போல் உள்ளேயிருந்து விடாமல் அரித்துக்கொண்டிருக்கும். அவன் விசுவாசமுள்ள கிறீஸ்துவனானால், தன்னோடு சமாதானமில்லாமலும், பிறரோடு முகங்கொடுத்துப் பேசத் துணியாமலும், சர்வேசுரனைத் தலை நிமிர்ந்து பார்க்க பயந்தும் தனக்குத்தானே பெரும் பாரம்போலிருப்பான். அவன் எங்கே போனாலும், தன் நிழல் தன் கால் அடியை விடாமல் தொடர்வதுபோல, அவனுடைய மனச்சாட்சி அவனை விடாது தொடர்ந்து அவன் செய்த பாவத்தைச் சுட்டிக்காட்டி, அதின் அவலக்ஷணத்தையும், அதற்கு வரும் ஆக்கினையையும், கண்முன் வைக்கும். இவ்வளவு நிர்ப்பாக்கிய பாவி தன்னையே பொறுக்கமாட்டாமல் சில சமயங்களில் தன் உயிரைத் தானே மடித்துக்கொண்டதாக நாம் வாசித்துங் கேட்டுமிருக்கிறோம்.

ஆனால் இவன் பாவசங்கீர்த்தனத்தில் தன் மனதைக் குருவுக்குத் திறந்து காட்டுவானானால், அவனுக்கு அதனால் ஆறுதலும் சந்தோஷமும் வருவதை அவனே அநுபோக வாயிலால் அறிந்துகொள்வான். பாவசங்கீர்த்தனஞ் செய்வதால் சேசுநாதருடைய பரிசுத்த இரத்தம் அவன் ஆத்துமத்தில் விழுந்து அவனைச் சுத்தமாக்கும். சர்வேசுரனுக்கு முன்போல் பிள்ளையாகி தனக்குச் சொந்தமான ஞான வரங்களையெல்லாம் திரும்பவும் பெற்றுக்கொள்வான். இதுவுமன்றி அநேக சமயங்களில் பாவசங்கீர்த்தனம் சரீர சௌக்கியத்துக்கு முதலாய் வெகு அநுகூலமானது. எத்

தனையோ வாலிபர் துன்மார்க்கப் பழக்கத்தால் தேக மெலிந்து வாடி முகக்களையின்றித் திரியும்போது, பாவசங் கீர்த்தனஞ்செய்து சர்வேசுரனோடு சமாதானமானவுடன், மனதில் சந்தோஷமும் திருப்தியும் உண்டாகவே, அந்த சந்தோஷம் அடுத்தது காட்டும் பளிங்குபோல், அவர்கள் முகத்திலுந் தோன்ற அத்தோடு சரீர சௌக்கியமும் பெற் றார்கள்.

பாவசங்கீர்த்தனம் ஒவ்வொருவருக்கும் பிரயோசன முள்ளதானால், குடும்ப சகிதமாய் வாழ்கிறவர்களுக்கு இன்னும் அதிகமான பிரயோசனம் உள்ளதென்பது சற்று யோசித்துப் பார்ப்பவர்களுக்குத் தானே விளங்கும். புருஷன் பெண்சாதி தங்களுக்குள் சமாதான ஐக்கிய முடன் வாழவும், ஒருவருக்கொருவர் துரோகஞ் செய்யா மல் அந்நியோந்நிய சிநேகமாயிருக்கவும், பாவசங்கீர்த்த னம்போல் அநுகூலமுள்ளது வேறெது உண்டு? புருஷன் தன் பெண்சாதிக்குச் சொல்ல அறியாததையும், பெண் சாதி தன் புருஷனுக்குச் சொல்லத் துணியாததையும், சேசுநாதர் ஸ்தானத்திலிருக்கும் குரு சேசுநாதர்போல் சொல்லுவார். பாவசங்கீர்த்தன வேளையில் குரு சொல் லும் வார்த்தையை அவர்கள் அமைந்த மனதோடு சேசு நாதர்சுவாமி சொல்போல் கேட்பார்கள். இதனால் எத் தனை குடும்பங்களில் அயோக்கியமும் அவதூறும் நஷ்ட மும் மனஸ்தாபமும் உண்டாகாதபடி பாவசங்கீர்த்தனம் ஏதுவாயிருக்கின்றது! வீட்டில் வேலைசெய்கிறவர்கள் தங்கள் அலுவலை ஜாக்கிரதையுடனும், பிரமாணிக்கத் தோடும் செய்யும்படியாய் படிப்பிக்கிறதும், பிரமாணிக்கம் தப்பின ஊழியன் திருடின பொருளைத் திரும்பவும் உத்த ரிக்கும்படி செய்கிறதும், பாவசங்கீர்த்தனம் அல்லவா? யாதோர் வீட்டிலுள்ள தாயும் தகப்பனும் பிள்ளைகளும் ஊழியரும் மாதம் ஒருவிசையாகிலும் பாவசங்கீர்த்தனம் ஒழுங்காய் செய்துவந்தால் அந்த வீட்டில் சமாதானமும் சந்தோஷமும் திருப்தியும் உண்டாயிருக்குமென்பது உள் ளங்கை நெல்லிக்கனிபோல் அறிந்த விஷயமல்லவா? ஏன் சில வீடுகளிலே சண்டையும் மனஸ்தாபமும், துன்

பமும் கவலையும், பகையும் பழியும், இன்னும் எவ்விதமான அலங்கோலையுமிருக்கின்றது? ஏனென்றால் அந்த வீட்டிலுள்ளவர்கள் பாவசங்கீர்த்தனத்துக்குப் போகிறதில்லை. பாவசங்கீர்த்தனமில்லாததால் அவர்கள் குற்றத்தை அறிந்து கண்டிக்கத் தகுந்தவரில்லை. குடும்பத்தில் உண்டாகும் குற்றங்களைத் தண்டித்து நீக்கும்படி ஒருவரும் இல்லாவிட்டால் அந்தக் குடும்பம் சீரழிந்த குடும்பமாகும் என்று சொல்லவும் வேண்டுமோ?

இதுவுமன்றி பாவசங்கீர்த்தனம் பல குடும்பங்கள் கூடிவாழும் சபைகளுக்கும், பல சபைகளுள்ள ஊர்களுக்கும் வெகு நன்மை விளைவிக்கும். ஊரில் உள்ளவர்கள் யாவரும் கிரமமாயும் யோக்கியமாயும் நடக்கவும், துன்மார்க்கம் குடி களவு சூது முதலிய பஞ்சமா பாதகங்கள் ஒழியவும், திருடின பொருளை உடையவனுக்கு உத்தரிக்கவும் செய்வது பாவசங்கீர்த்தனமே! எந்த ஊரில் வாழுங் கிறீஸ்துவர்கள் பாவசங்கீர்த்தனம் சரியாய் செய்வதில்லையோ அந்த ஊர் பாழடைந்த ஊரென்றும் பசாசு அரசு செய்யும் நரகமென்றும் சொல்லலாம்.

பாவசங்கீர்த்தனத்தால் மனிதர் சபைக்கு வரும் இவ்வளவான நன்மைகளின் நிமித்தம், இந்தத் தேவ திரவிய அநுமானம், சேசுநாதர்சுவாமி தமது பிள்ளைகளுக்குச் செய்த, பல கோடி நன்மைகளுக்குள்ளே, முக்கியமானதொன்று என்று சொல்லலாம். இப்படியானல் கிறீஸ்துவர்கள் ஏன் பாவசங்கீர்த்தனமென்ருல் அஞ்சிப் பயந்து நடுங்கி சாகிருர்கள்? வேப்பிலை கஷாயங் குடிப்பதுபோல் அரோசிகப்படுகிருர்கள்? பாவசங்கீர்த்தனத்துக்குப் போவதைப் பார்க்கிலும் ஒருசந்தி இருப்பதும், தர்மஞ் செய்வதும், யாத்திரையாய் திருஸ்தலங்களைச் சேவிப்பதும், இந்தக் கிறீஸ்துவர்களுக்கு எளிதாய்த் தோன்றுகின்றது. பாவசங்கீர்த்தனம் இன்னதென்று நன்ருய் அறியாத குறையால்தான் பல போக்குகளைச் சொல்லி மோசம்போகிருர்கள். இவர்கள் வழக்கமாய்ச் சொல்லும் போலி ஞாயங்களாகிற போக்குகளை இங்கே

எடுத்துக்காட்டி அவைகளிலுள்ள தப்பிதங்களை உங்களுக்குச் சொல்லப்போகிறோம். கவனித்து நீங்களுங் கேளுங்கள்.

இரண்டாம் பாகம்

கிறீஸ்துவர்களில் சிலர் பாவசங்கீர்த்தனத்துக்குப் போகாதபடி சொல்லும் பல போக்குகளில் ஒன்று ஏதென்றால், சர்வேசுரனிடம என் பாவங்களைச் சொல்லுவது போதுமே. குருவைத்தேடி ஏன் போகவேண்டும்?

தம்பி, உன் ஞாயப்பிரகாரம் நீ சர்வேசுரனிடத்திலும் உன் பாவங்களைச் சொல்ல தேவையில்லை. சர்வேசுரன் உன் மனதிலிருப்பதெல்லாம் நீ சொல்லுமுன் அறிவதால் அவரிடம் நீ ஏன் சொல்லவேண்டும்? ஆனால் குருவிடம் நமது பாவங்களைச் சொல்லவேண்டுமென்பது மனிதனுடைய ஏற்பாடல்ல, இது சேசுநாதருடைய கட்டளை. நீங்கள் எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ அவர்கள் பாவங்களும் மன்னிக்கப்படும். எவர்களுடைய பாவங்களை நீங்கள் மன்னிக்கிறதில்லையோ அவர்கள் பாவங்களும் மன்னிப்பு பெறமாட்டாது, என்பது சேசுநாதருடைய தேவ வாக்கு. ஆகையால் நீ உன் பாவங்களுக்கு மன்னிப்பு பெறவேண்டுமானால் குருவைத் தேடிப்போவது அவசியம்.

வேறு சிலர் சொல்வதாவது: குரு என்னைப்போல் ஓர் மனுஷன்தானே. அந்த மனிதனிடத்தில் என் மனதிலிருக்கும் இரகசிய பாவங்களைச் சொல்வது சரியா?

சரிதான். ஏனென்றால் குரு மனிதனானாலும் பாவங்களை மன்னிக்கவும் மன்னியாதிருக்கவும் சேசுநாதரிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கிறார். இதுவுமன்றி குரு மனிதனாயிருப்பதால், நீ அவரிடம் உன் பாவங்களைச் சொல்ல பயமின்றிப் போகலாம். ஓர் சம்மனசு மோக்ஷத்திலிருந்து மனிதர் செய்த பாவங்களைக் கேட்கும்படி வந்தால் அவரிடம் பாவசங்கீர்த்தனஞ்செய்ய மனிதன் அஞ்சி

நடுங்குவான். அரூபியான தேவதூதனுக்கு மனித சுபாவத்துக்கு இயல்பாயுள்ள நீசச்செயல்கள் எவ்வளவோ இழிவானதென்று தோன்றும். இவைகளை மனிதன் செய்வதைக்கேட்டு அவர் அரோசிகமும் வெறுப்புங்கொள்ளுவார். ஆனால் குரு நம்மைப்போல் மனிதனானதால் மனிதனுக்குரிய ஈனசுபாவம் இன்னதென்று அறிவார். நாம் அவரிடஞ் சொல்லும் பாவங்களைக்கேட்டு அவர் பிரமித்து ஆச்சரியபபடமாட்டார். பூமி தனக்குரிய பலனைக் கொடுக்கிறதென்று தாவீது இராஜாவோடு சொல்வார்.

குரு மனிதனானாலும் அவர் சேசுநாதர்சுவாமியிடமிருந்து அதிகாரம் பெற்றிருப்பதால், அவரிடத்தில் பாவங்களைச் சொல்லும்போது சேசுநாதரிடத்திலே சொல்வது போல் பத்தி விசுவாசம் நம்பிக்கையுடன் நீங்கள் போவது சுகிர்தம்.

இன்னும் சிலர் சொல்வதாவது: பாவசங்கீர்த்தனம் சிறுபிள்ளைகளுக்கும் கிழவிகளுக்குந்தான் தகுங்கது. பாலிய வயதுள்ளவர்களுக்கும் படித்தவர்களுக்கும் யோக்கியமல்ல.

இதென்ன ஞாயம்? கிழவிகளும் சிறுபிள்ளைகளுந்தானா பாவஞ்செய்கிற துஷ்டர்கள்? படித்தவர்களும் பாலியரும் பாவஞ்செய்கிறதில்லையோ? நீங்கள் உள்ளதைப் பேசினால், வாலிபர், படித்தவர் இவர்களிடத்தில் அநேகமாய் பாவங்கள் மிகுதியாயிருக்குமென்று அங்கீகரிப்பீர்கள். இருந்தால் இவர்கள் பாவசங்கீர்த்தனஞ் செய்தல் மகா அவசியமென்று நீங்களே சொல்வீர்கள். பெரும் புசல் மனதில் எழும்பி, பாவசோதனைகள் மிஞ்சி, மனது மயங்கி கலங்கும்போதல்லவா பாவசங்கீர்த்தனஞ் செய்து ஆத்துமத்தை ஸ்திரப்படுத்தி காப்பாற்றுவது அவசியம். பல வகையான வியாதியால் கஷ்டப்பட்டு துன்பப்படும் தேக ஸ்திதியிலிருப்பவனுக்கு ஔஷதம் அவசியமல்லவென்றும், தேக சௌக்கியமாயிருப்பவர்களுக்குத்தான் மருந்து கொடுக்கவேண்டுமென்றும் புத்தியுள்ள எவனுஞ் சொல்வானா?

ஆனால் நான் பாவசங்கீர்த்தனஞ் செய்தால்தானே யோக்கியதை உள்ளவன். செய்யாவிட்டால் யோக்கியதை அற்றவனென்று உலகத்தார் என்னை மதிக்கமாட்டார்களோ? என்று சிலர் கேட்பார்கள்.

உலகத்தாருடைய மதிப்பைப் பெறும்படி கிறீஸ்துவன் நடப்பது அவனுக்கு யோக்கியமோ? உலகத்துக்கு ஞானம் பேய், ஞானத்துக்கு உலகம் பேய் என்ற சுலோகத்தை நீ கேட்டதில்லையா?

ஆனால் நான் பாவசங்கீர்த்தனஞ் செய்ய கோவிலுக்குப்போனால் என்னைப் பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள்?

அநேகம் கிறீஸ்துவர்கள் பாவசங்கீர்த்தனத்துக்கு வாராததற்குள்ள பல காரணங்களில் இது ஒன்று. உன் மனம் உன்னைத் தூண்டி நீ பாவசங்கீர்த்தனஞ் செய், அப்போதுதான் சமாதானம் உன்னிடம் இருக்குமென்று சொல்லும்போது நீ பரம கோழையாய் நான் போனால் இவன் அவன் என்ன நினைப்பானென்று பயந்து உன் மனசாட்சிக்குத் துரோகஞ் செய்கிறாய். நினைக்கிறவன் நினைக்கட்டும், சொல்லுகிறவன் சொல்லட்டும், உன் ஆத்துமத்தை இரக்ஷிப்பது உன் அலுவல். நீ உன் கடமையைத் துணிவோடு அநுசரிப்பதைப் பார்க்கும் புத்திமான்கள் உன்னை மதிப்பார்கள். துஷ்டருந் துன்மார்க்கருந்தான் உன்னை நகைக்கலாம். ஆனால் இவர்களுக்குப் பயந்து நடப்பது புத்திமானுக்கு அழகாகுமா?

ஆனால் பாவசங்கீர்த்தனஞ் செய்வது வெகு கஷ்டமானது. எனக்கு எப்படி செய்வதென்று நன்றாய்த் தெரியாது.

நீ சொல்வதுபோல் கஷ்டமானதென்று வைத்துக்கொள்வோம். கஷ்டமின்றி காலக்ஷேபஞ் செய்கிறவர்களை நீ பார்த்ததுண்டா? உன் பாவங்களின் கஷ்டத்தை நீ பாராமல் கண்ணை மூடிக்கொண்டு செய்தாய். உன் பாவத்துக்கு மன்னிப்பு பெறும்படி கொஞ்சம் கஷ்டப்பட்டாலாகாதோ? அஞ்ஞானி தன் பாவந்தீர காவடி எடுத்து,

அரிகண்டம்போட்டு, ஊரூராய் அலைகிருன். சேசுநாதர் சுவாமி இவ்வளவு கொடுமையான பாவ நிவாரணம் ஏற்படுத்தினுரா? கஷ்டமென்பது பிசாசு உன் காதில் சொல்லும் துர்ப்புத்தி. பாவசங்கீர்த்தனம் சேசுநாதருடைய சிநேகத்தையும் தயையையுங் காட்டும் அற்புத ஏற்பாடு. சற்றுக் கவனமாய் நாம் சொல்வதைக் கேள். நீதியும் அளவில்லா வல்லமையுமுள்ள சர்வேசுரனை நீ விரோதித்து பகைத்து தூஷித்தபின்பு, உன் பாவங்களுக்குப் பொறுத்தல் பெறும்படியாய் சர்வேசுரன் உன்னிடங் கேட்பதென்ன? நீ குருவைத் தேடிப்போய் அவர் காதுக்குள் வெகு இரகசியமாய் நீ செய்த பாவங்களை எல்லாம் தக்க மனஸ்தாபத்தோடு சொல்வது மாத்திரமல்லவா? எந்த மனிதன் இராஜ துரோகம் செய்தபின்பு, அதற்கு மன்னிப்பு பெற, மந்திரியினிடம் போய் இரகசியத்தில் தான் செய்ததைச் சொல்வது போதுமென்று அறிந்தால் இது கஷ்டமென்று சொல்வான்?

இன்னுஞ் சிலர் சொல்வதாவது: பாவசங்கீர்த்தனம் நல்லதுதான். ஆனுல் என்னிடத்தில் என்ன பாவமிருக்கிறது? வருஷத்துக்கொருவிசை செய்வது போதும். நான் வருஷக்காரன்.

இப்படிப் பேசும் கிறீஸ்துவர்கள் பாவசங்கீர்த்தனமென்ருல் ஏதோ ஒரு திருநாள் சடங்கு உற்சவநாளின் கோலம் என்று எண்ணி இருக்கிருர்கள்போலும். ஆனதால் திருநாள் உற்சவம் வருஷம் ஒருமுறை வருவதுபோல் இவர்களும் வருஷத்தில் ஒருவிசை தேர்த்திருநாளோடு பாவசங்கீர்த்தனச் சடங்கை நிறைவேற்றினுல் போதும் என்று எண்ணுகிருர்கள். சகோதரா! பாவசங்கீர்த்தனம் வீண் சடங்கல்ல. பாவத்தை நீக்கும் தேவ ஔஷதம். ஔஷதமானுல் வியாதி கண்டவுடனே மருந்தைச் சாப்பிடுவது புத்தியே அன்றி, வியாதி முற்றிப்போய் பலங்கொண்டபின்புதான் சாப்பிடுவேனென்பது மூடத்தனம் அல்லவா?

ஓர் குரு பிரயாணஞ் செய்தவர் இராத்தங்கலுக்காக ஒரு கிறீஸ்துவன் வீட்டில் தங்கினுர். வீட்டிலிருந்த

வன் வெகுவாய் மெலிந்து வாடி சௌக்கியமில்லாதிருப்பதை இவர் கண்டு, இதின் காரணமேதென்றும், தக்க மருந்து சாப்பிடுகிறுனென்றும் விசாரித்தார். அவன் சொல்வான்: சுவாமீ! வைத்தியர் என்னைப் பார்க்கிறதில் குறைவில்லை. அதோ அவர்கள் கொடுத்த மருந்துகளெல்லாம் வரிசையாய் மேஜைமேலிருக்கின்றது. ஆனுல் எந்த நாளிலும் மருந்து சாப்பிடுவது என் வழக்கமல்ல. நல்ல நாள், அதிர்ஷ்ட நாள் இன்னதென்று பார்த்துத்தான் நான் சாப்பிடுவேன். அதுவும் வருஷத்தில் ஒருவிசைதான் வரும்.

குரு இவன் சொன்னதைக் கேட்டு குலுங்க நகைத்து அவன் செய்வது எவ்வளவு மூடத்தனமென்று அவனுக்குக் காட்டி, மருந்தென்றுல் வியாதி தலை காட்டின உடனே சாப்பிடுவது. இதுதான் குணம் கொடுக்குமென்று சொன்னுர். அப்படியே கிறீஸ்துவனே! நீ பாவசங்கீர்த்தனஞ் செய்யும்படி திருநாள் உற்சவம் வருமட்டுங் காத்திராதே. பாவமாகிற பெரிய வியாதியில் நீ விழுந்த நாளே தாமதமின்றி தேவ ஔஷதத்தைத் தேடிப்போ. நாள் போகட்டும் என்று தாமதஞ் செய்தால் பாவத்தின்மேல் பாவம் வந்து குவியும். அசுத்தத்தின்மேல் அசுத்தஞ்சேர பெருங் குப்பைமேடாகும். பின் அதெல்லாம் எடுத்து வெளியே கொட்டுவதென்றுல் வெகு பிரயாசையுள்ள வேலையாகும்.

இந்தப் புத்தியெல்லாங் கேட்டபின்பு நீங்கள் செய்ய வேண்டிய பிரதிக்கினை ஏதென்றுல், இனிமேலாக நான் மாசத்துக்கு ஒருவிசை, இன்னுங் கூடுமானுல் எட்டுநாளைக்கொருவிசை பாவசங்கீர்த்தனஞ் செய்வேன். எப்போதாவது மதிதப்பி சாவான பாவத்தில் நான் விழுந்தால் உற்சவ நாள் வருமட்டும் நான் காத்திராமல் உடனே குருவிடம் போய் பாவசங்கீர்த்தனம் செய்து என் ஆத்துமத்தை சுத்தமாக்கி சர்வேசுரனுடன் சமாதானமாவேன். இதுவே என் தீர்மானம். இதுவே என் ஸ்திரமான மனது. தேவ தாயார் என்னைக் காப்பாற்றுவாளாக.

நாலாம் நாள்—முதல் தியானம்

உலகத்தின் கடைசிநாளில் நடக்கும் விசாரணையுந் தீர்ப்பும்

ஆபிரிக்கா தேசத்தின் தென் பாகத்திலுள்ள ஓர் பட்டணத்தில் தனவான் ஒருவன் விஸ்தாரமான நிலம் வாங்கி அதிலே திராக்ஷத்தோட்டம் உண்டாக்கி அதின் மத்தியில் தனக்கொரு வீடுகட்டி குடும்ப சகிதமாய் வாழ்ந்துவந்தான். நிலஞ் செழிப்பானதால் திராக்ஷக்கொடிகள் ஓங்கி வளர்ந்து பல ஆயிரங் குலைகள் விட்டு வெகு பலன் கொடுத்துவந்தது. ஒரு வருஷத்தில் நல்ல மழை பருவகாலத்தில் பெய்தபடியால், மற்ற வருஷங்களைப்பார்க்கிலும் அந்த வருஷத்தில் திராக்ஷக்குலைகள் அதிகமாய் விட்டு நல்ல பலன் கொடுப்பதாக இருந்தது. தனவான் பெரும் லாபம் வருமென்று நம்பியிருந்தான். அப்படியிருக்கையில் ஒருநாள் பெருங் காற்றும் புசலும் சண்டமாருதமாய் அடித்ததால் கொடிகளெல்லாம் சாய்ந்து விழுந்து திராக்ஷக்குலைகள் நாசமாய்ப் போயின. துரை வெளியே வந்து தோட்டத்தைப் பார்த்தான். தன் நம்பிக்கை எல்லாம் ஒரு நிமிஷத்திலே வீணாய்ப் போனதைப்பற்றி புத்தி தடுமாறி கோபம் பொங்கி சர்வேசுரனைத் தூஷித்து, கெட்டித்திருந்த தன் துப்பாக்கியை வெளியே கொண்டுவந்து வானத்தைப் பார்த்து வசை பேசி சொல்வான்: என் தோட்டத்தை இப்படி அழித்த தேவன் எங்கே இருந்தாலும் இதோ அவரைக் கொல்வேனென்று தேவதூஷணங் கக்கி சுட்டான். சுடவும், அவன் சொன்ன தூஷணம் இன்னும் அவன் வாயிலிருக்கும்போதே, வானத்திலிருந்து பளிச் சென்று கண்ணைப் பறிக்கும் மின்னல் மின்னினது. மின்னலோடு பேரிடி முழக்கம் சப்தித்தது. இடி அவன் தலைமேல் விழுந்தது. தனவான் அதே நிமிஷத்தில் பிரேதமாய் விழுந்தான்.

தேவ கோப ஆக்கினை இவ்வளவோடு முடியவில்லை. அவன் பெண்ஜாதியும் பிள்ளைகளும் வந்துகூடி அழுதார்

கள். பிரேதத்தைப் பாடையில் வைத்து தூக்கிப்போய் குழியில்போட்டு அடக்கி மண்ணைத் தள்ளி மூடினவுடனே வானம் குமுறி, மின்னல் மின்னி, இடி இடித்து குழிக்குள்ளே விழ, உள்ளே இருந்த பிரேதம் அதிர்ச்சியால் மேலே எழும்பி பல துண்டுகளாக ஆகாசத்தில் நாலு திசையிலுஞ் சிதறிப் பறந்து இருந்த இடமும், போன இடமுந் தெரியாமல் மறைந்துபோனது. சர்வேசுரனைத் தூஷித்த பாவி தூஷணங் கக்கின வாயை மூடுமுன்னே இவ்விதமாய் இந்தப் பூமியிலேயே தண்டிக்கப்பட்டான்.

ஆனால் இப்படிக் கொடுமையாய் பாவிகளைச் சர்வேசுரன் இந்தப் பூமியில் தண்டிக்கிறது சாதாரணமல்ல. ஓரோர் இடத்தில், தமது நீதியின் அகோரத்தைக் காட்டி, பயம் உறுத்தும்படி செய்கிறார். இது தயையின் காலம். எல்லாருக்கும் தமது இருதயத்தைக் காட்டி அவர்கள் பேரில் தமக்குள்ள அளவுக்கெல்லாம் மேலிட்ட சிநேகத்தை அனைவரும் அறிந்து தம்மிடம் வரும்படியாய்க் கூப்பிடுகிறார். தம்மை நிந்திக்கும் பாவிகளைப் பார்க்காதவர் போல் முகத்தைத் திருப்பிக்கொள்ளுகிறார்.

ஆனால் சர்வேசுரனிடத்தில் இரக்கமும் தயையும் இருப்பதுபோலே நீதியும் இருக்கின்றது. இது இரக்கத்தின் காலமானால் நீதியின் காலமும் வரும். இது மனிதன் நாளானால் சர்வேசுரனுடைய நாளும் உண்டு. அந்த நாள் உலகத்தின் கடைசி நாள். சர்வேசுரன் தீர்ப்புச் சொல்லும்படி உலகத்துக்கு வரும் பயங்கரமுள்ள நாள். தேவ கோபத்தின் நாள். துன்பமும் துயரமும் கஷ்டமும் கசப்புமுள்ள பெரிய நாள்.

சர்வேசுரனைப் பார்த்ததார் என்று சொல்லும் துரோகி அந்த நாளில் சர்வேசுரனைப் பார்ப்பான். பாவமேது புண்ணியமேது என்று பிதற்றும் பித்தன் அந்த நாளில் பாவமும் புண்ணியமும் தன் கண்முன் உருவெடுத்து நிற்பதைக் காண்பான். நரகத்தைப் பார்த்தவன் யார் என்று இப்போது துணிந்து நாவெடுத்து சொல்லும் பாவி அந்த நாளில் நரகம் தன் முன் திறப்பதைக் கண்டு அலறுவான்.

சகோதரரே! இந்தக் கடைசி நாளின்பேரில் இப்போது யோசிக்கப்போகிறீர்கள். நாம் இதைப்பற்றி யோசித்தபோது நமது மனதில் உண்டாயிருந்த பயத்தை உங்களுக்கு வெளியாக்கி, உங்கள் மனதிலும் தேவ பயம் உண்டாக்க வந்திருக்கிறோம்.

ஓ! தேவ மரியே! எங்கள் அன்புள்ள தாயே! உலகத்தின் ஈறுந்த நாள் வருமுன் அதன்பேரில் எங்கள் மனதில் பயம் உண்டாகி, இந்தப் பயத்தின் நிமித்தமாவது நாங்கள் உம்முடைய தேவ மகன் சேசுநாதருக்குப் பிரமாணிக்கத்துடன் ஊழியஞ்செய்து, எங்கள் ஆத்துமத்தை இரட்சிக்கும்படி எங்களுக்காக மன்றாடும் தாயே!

முதல் பாகம்

சர்வேசுரன் ஆதிகாலத்தில் தமது சட்டப்பிரமாணத்தை மனிதர்களுக்குக் கொடுக்க சீனாய்மலைமேல் வந்தபோது மின்னலும் இடியும் பூமி அதிர்ச்சியும் எங்கும் உண்டானது. மலை அடிவாரத்திலிருந்த ஜனங்கள் இவை எல்லாம் கண்டு பயந்து நடுங்கி, மனம் கலங்கி வெருண்டு இருந்தார்கள். ஆனால் உலகத்தின் கடைசி நாளில் சர்வேசுரன் தாம் கொடுத்த கட்டளைகளை மனிதர்கள் எவ்விதமாய் அநுசரித்தார்களென்று பிரசித்தமாய் எல்லாரும் அறிய விசாரித்து தீர்ப்புசொல்ல வரும்போது, முன் வந்ததிலும் அதிக அச்சம் உறுத்தும் வகையாய் வருவார் என்பது நிச்சயம். அந்தக் கடைசி நாளுக்கு முந்தியும் அந்த நாளிலேயும் நடப்பது இன்னதென்று சேசுநாதர்சுவாமி தாமே உலகத்திலிருந்தபோது தெளிவாய் மனிதருக்கு அறிவித்திருக்கிறார்.

உலக முடியும் சமயம், சிருஷ்டிகளெல்லாம் ஒருவாறு அறிந்ததுபோல் பல அடையாளங்களால் காண்பிக்கும். தேசங்கள் எங்கும் கொடும் யுத்தமும் சண்டையும் கலகமும் புரட்சியும் உண்டாகும். இராஜாக்களோடு இராஜாக்களும், குடிகளோடு குடியும், குடும்பத்தோடு குடும்பமும், தகப்பனோடு பிள்ளைகளும், எல்லாரோடு எல்லோரும்

சண்டை செய்வார்கள். பகையும் பழியும் கொடுமையாய் ஆளும். யுத்தம் தொடர அதன்பின் பெரும் பஞ்சம் எங்கும் பரவ, தவச தானியங்கள் விளைவின்றி, உயிர்கள் பிழைக்க வகையின்றி, பசியால் வருந்தி சாவார்கள். பஞ்சத்தின் பிரியாத துணையாய் பலவகையான பிணிவகைகள் காட்டில் பிடித்த நெருப்புப்போல் எங்கும் பரம்பும். மனிதர்களைக் கொள்ளையோ கொள்ளை என்று வாரிப்போகும்.

இதுவெல்லாம் கண்டு பூமியே பயந்தாற்போல அதிர்ந்து நடுங்கும். தனக்கு இதுமட்டுமிருந்த ஆதாரம் அற்றதுபோலே அசைந்து ஆடும். மலைகள் நிலைபெயர்ந்து கிடுகிடென்று அசையும். கடலின் அலைகள் பொங்கிக் கொதித்து மலைகள்போல் எழும்பித் தாவி விழுந்து எல்லையைக் கடந்து, வெள்ளப்பிரவாகமாய் புரண்டு ஓடி ஊர்களைப் பாழாக்கி உயிர்களைக் கொல்லும்.

வானத்தில் பயங்கரமான அறிகுறிகள் தோன்றும். சூரியன் மங்கி இருள் அடைந்ததாகக் காணும். சந்திரன் முகஞ் சிவந்து இரத்தமயமாகும். பிரகாசமுள்ள நட்சத்திரங்கள் ஒலி குன்றி வாடி வதங்கின புஷ்பம்போல் கீழே விழும். இவ்வித பயங்கர தோற்றத்தின் மத்தியில் அக்கினி மயமாய் சுவாலிக்கும் மேகங்கள் பல திசையிலுமிருந்து வந்து கூடி தலைமேல் நிற்கும்போது, வானமண்டலமே நெருப்பு பிடித்து எரிவதாகத் தோன்றும். அதன்பின் உயர இருந்து அக்கினி மழைபோல் வருஷிக்கும். விழுந்த அக்கினி திரண்டு கூடி எங்கும் பரவிப் படர்ந்து எல்லாவற்றையும் சுட்டெரிக்கும். மாளிகைகளும் வீடுகளும் இடிந்து விழும். திரவியங்களும் நகை நாணயங்களும், பொன்னும் வெள்ளியும், வஸ்திர ஆடைகளும், தவச தானியங்களும் எல்லாம் நெருப்புக்கு இரையாய் சாம்பலாகும். அக்கினி பிரவாகத்துக்குத் தப்பிக்கும்படி மனிதர்கள் மலைகளையும் கோபுரங்களையும் குகைகளையும் சுரங்கங்களையும் தேடி ஓடுவார்கள். அக்கினி அவர்களைத் தொடர்ந்து எங்கும் செல்லும். உயிருள்ள பிராணி ஒன்றும் உயிரோடிருக்காது. சகல சிருஷ்டியும் வெந்து அழிந்து சாம்பலாகும்.

அதன்பின் வானதூதர்கள் நாலு திக்கிலும் போய் எக்காளம் ஊதி இடியோசையோடு பரலோக பூலோக பாதாள லோகமெல்லாங் கேட்கும்படி: மரித்த ஜனங்களே! நீங்கள் எல்லாரும் எழுந்து சர்வேசுரன்முன் தீர்ப்பு கேட்க வாருங்கள், என்று சொல்வார்கள். உடனே சாம்பலாய்ப்போன உடல்கள் எல்லாம் தாம் முன்னிருந்த நிலையோடு திரும்பவும் உருவாகும். எலும்போடு எலும்புகள் கலகலவென்று மோதி சப்திக்கும். தசையுந் தோலும் நரம்பும் இரத்தமும் முன்போல வந்து கூடும். உருவான சரீரத்தோடு அததற்குரிய ஆத்துமங்கள் நரகத்திலிருந்தோ மோக்ஷத்திலிருந்தோ வந்து சேரும். மனிதர்கள் எல்லாரும் ஆத்தும சரீரத்தோடு உயிர்ப்பார்கள்.

மாம்ஸ உத்தானம் விசுவாச சத்தியங்களில் ஒன்று. சேசுநாதர்சுவாமி பிறக்குமுன் இருந்த யோப் என்ற மகாத்மா மாம்ஸ உத்தானத்தை மனதில் விசுவசித்து எழுதினதாவது: என் இரக்ஷகர் ஜீவிக்கிறார் என்று நான் அறிந்திருக்கிறேன். உலக முடிவாங் கடைசிநாளில் நான் உயிர்த்து என் சொந்த மாம்ஸத்தில் என் கண்களால் என் சர்வேசுரனைப் பார்ப்பேன். இந்த நம்பிக்கை என் மனதுக்குள் ஸ்திரமாய் இருக்கின்றது.

மனிதன் ஆத்தும சரீரத்தோடு உயிர்த்து தேவ நீதி முன் சம்பாவனையோ தண்டனையோ பெறும்படி வருவது ஞாயத்துக்கு இசைந்தது. ஏனெனில் மனிதன் உலகத்தில் ஆத்தும சரீரத்தோடு சர்வேசுரனுக்குக் கீழ்ப்படிந்து புண்ணியமோ, அல்லது கீழ்ப்படியாமல் பாவமோ செய்கிறான். இதினால் ஆத்துமத்துக்குஞ் சரீரத்துக்கும் தக்க சம்பாவனை கொடுப்பது உஜிதம்.

மனிதர் யாவரும் உயிர்த்து வந்ததும் சம்மனசுகள் அவர்களை இரு வகுப்பாக பிரிப்பார்கள். எந்த ஒழுங்கோடு இரு வகுப்பாய் மனிதர்களைப் பிரிப்பார்களென்று நினைக்கிறீர்கள்? உலகத்திலிருப்பதுபோல் திரவியவான்களென்றும், ஏழைகளென்றும், சாஸ்திரம் படித்த பத்தி

மான்களென்றும், படியாத அறிவிலிகளென்றும், மேன் குலமென்றும், இழிகுலமென்றும், கிறீஸ்துவர்களென்றும், அஞ்ஞானிகளென்றும், இவ்விதமான வித்தியாசங்களைப்பற்றி இருவகையாய்ப் பிரிப்பார்களோ? அப்படி ஒன்றுமில்லை. சாகும்போது தேவ இஷ்டப்பிரசாத வரத்தோடு செத்தவர்கள் சேசுநாதர்சுவாமியின் வலது பக்கமும், சாவான பாவத்தோடு இறந்த பாவிகள் இடது பக்கமும் நிற்பார்கள்.

ஓ! இந்தக் கடைசிநாளில் என்ன வித்தியாசம், எவ்வளவு மாறுபாடு தோன்றும்! ஒரு குடும்பத்தைச்சேர்ந்தவர்கள். ஒரு வீட்டில் வாழ்ந்தவர்கள், ஒரு சபையிலிருந்தவர்கள், ஒருவரைவிட்டொருவர் பிரிந்து அடிமரத்திலிருந்து வெட்டப்பட்ட கிளைகளைப்போல் ஒருவேளை சிதறி நிற்பார்கள். புருஷனைவிட்டு பெண்சாதியும், தாய்தந்தையைவிட்டு பிள்ளைகளும், அண்ணனைவிட்டுத் தம்பியும் பிரிந்து, ஒருவன் வலதுபக்கம், வேறொருவன் இடது பக்கம் நிற்கும்படியும் நேரிடலாம். அப்போது அவனவனுடைய எதார்த்தமான ரூபம் தெரியவரும். இப்போது மேன்குலத்தாரென்றும் சாஸ்திரிகளென்றும் மதிக்கப்படுகிறவர்கள் அப்போது இழிகுணமுள்ள மூடரென்று தோன்றலாம். இப்போது புண்ணியவான்கள்போல் வேஷம்போட்டு நடிக்கிறவர்கள் அப்போது வேஷம் நீங்கிப்போக சுய ரூபத்தோடு நிற்பார்கள். ஐயோ! ஐயோ! என்று அலறுவார்கள்! எவ்வளவு புத்திகெட்டதனமாய் நடந்தேன்! அதோ அவன் பாவஞ்செய்யாதபடி தரித்திரமும் துன்பமும் படுவதை நான் பார்த்து அவனைப் பழித்து பேதையென்று நிந்தித்தேன். அவன்தான் புத்திமான். நான் மூடன். அவன் சூரியனைப்போல் பிரகாசிக்கிறான். நானோ பசாசைப்போல் அவலக்ஷண கோலமாயிருக்கிறேன். இப்படியாய் ஒவ்வொருவனும் புலம்பிக்கொண்டு நிற்கும்போது சேசுநாதர்சுவாமி மேகமண்டலத்தில் தேவ மகத்துவத்தோடு எழுந்தருளிவருவார். அவர் வரும் சிறப்பலங்கார வைபவத்தை இரண்டாம் பாகத்தில் சொல்லப் போகிறோம் கவனமாய்க் கேள்.

இரண்டாம் பாகம்

உலகமெல்லாம் நெருப்பினால் அழிந்தபின்பு, சூரிய பிரகாசமில்லாததால் காரிருள் அடர்ந்து மூடிய வானமண்டலத்தில் திடீரென் கோடி சூரியர்கள் உதித்ததுபோல் அளவற்ற பிரகாசம் தோன்றும். எல்லாரும் கண்ணை விழித்து வானத்தைப் பார்ப்பார்கள். திருச்சிலுவை அந்தப் பிரகாச மத்தியில் ஒளிவிட்டுத் துலங்கி மின்னுவதை மனிதர்கள் காண்பார்கள். பரிசுத்தவான்கள் திருச்சிலுவையைப்பார்த்தவுடனே, ஓ! அர்ச்சிக்கப்பட்ட சிலுவையே! எங்கள் இரட்சணியமான சிலுவையே! உனக்கு நமஸ்காரம் என்று ஆராதிப்பார்கள். பாவிகள் சிலுவையைப் பார்த்ததும் இடி தலைமேல் விழுந்தது போலே நடுங்கிப் பதறி அதைப் பார்க்கத் துணிவின்றி அஞ்சி நிற்பார்கள்.

திருச்சிலுவைக்குப்பின் கோடான கோடி வான தூதர்கள் இராணுவ சேனைபோல் அணி அணியாய் கையில் கொடி ஏந்தி முன்னே வருவார்கள். இவர்களுக்குப் பின்னால் மேக ஆசனமீது தேவ மகத்துவம் முகத்தில் ஜொலிக்க, சர்வ வல்லமையைக் கையிலேந்தி சேசுநாதர்சுவாமி எழுந்தருளி வருவார். வந்த சுவாமி வலது பக்கம் நிற்கும் தமது பிள்ளைகளை அன்போடு பார்ப்பார். அந்தப் பார்வையே அவர்களுக்கு ஆனந்த மோட்சம். அதன்பின் இடது பக்கத்தில் வெள்ளாடுகள்போல் கூடி நெருங்கி ஒருவர்மேல் ஒருவர் விழுந்து கிடக்கும் பாவிகளை உக்கிரம முகத்தோடு பார்ப்பார். அதுவே அவர்களுக்கு நரகம்.

இருளுள்ள வீட்டில் தீபமேற்றினால் உள்ளே இருக்கும் பொருட்களெல்லாம் எவ்விதம் துலக்கமாயும் தெளிவாயும் தெரியுமோ, அவ்விதமே சேசுநாதர்சுவாமியின் பார்வை பாவிகளுடைய மனதில் தீபம் இட்டதுபோல் அவர்கள் பிறந்த நாள் முதல் செய்த பாவங்களும், அக்கிரமங்களும், சர்வேசுரனை வணங்காமல் பழித்து சொன்ன தூஷணங்களும், எல்லாம் கண்முன் தோன்றும். நீதி

பரனை சேசுநாதர் இத்தனை பாவங்களையும் சோதித்துக் காண்பிப்பார். விக்கிரகங்களைக் கையெடுத்து கும்பிட்டு அஞ்ஞான அந்தகாரத்தில் அமிழ்ந்தி, சேசுநாதர்சுவாமியை அறியாதிருந்த பலகோடி ஜனங்கள் முதல் விசை சேசுநாதரைப் பார்ப்பார்கள். தங்களுடைய அஞ்ஞானத்தை அப்போது நன்கு அறிவார்கள். சேசுநாதரே உலக இரக்ஷகரென்றும் அவர்தான் சர்வேசுரனென்றும் அப்போது அறிவார்கள்.

சேசுநாதர்சுவாமி அவர்களை இரட்சிக்கும்படியாய் தாம் உலகில் வந்து செய்ததும் பட்டதும் எல்லாம் அவர்களுக்குச் சொல்வார். அவர்கள் மனந்திரும்பும்படியாய் தாம் அநந்த பட்சத்தோடு பிரயோகித்த உபாயங்களையும் வழிகளையும் எடுத்துக் காண்பிப்பார். இவையெல்லாம் அவர்கள் கவனியாமலும், மதியாமலும், தங்கள் குலாசாரம் ஜாதியின் பெருமை வேண்டுமென்று தமது வேதத்தைப் பழித்து நிந்தித்த மதியீனத்தை அவர்களுக்கு அறிவிப்பார். உங்களை நாம் அறியோம் என்று அவர்களைத் தள்ளுவார்.

அதன்பின் இந்த அஞ்ஞானிகள் மத்தியில் பயந்து நடுங்கி, வெட்கி நாணி நிற்கும் கிறீஸ்துவர்களைச் சினந்த முகத்தோடு பார்ப்பார். இவர்கள் ஓர் காலத்தில் சேசுநாதருடைய செல்வப்பிள்ளைகளாக அவர் கையில் வளர்ந்தவர்கள். ஞானதீட்சை பெற்றபோது பிசாசையும் அதின் கிரிகைகளையும் வெறுத்துவிட்டேன் என்று சத்தியஞ் செய்தபின்பு பிசாசைத் தேடிப்போனீர்களே? நீங்கள் ஞானஸ்நானம் பெறும்போது நாம் உங்களுக்குக் கொடுத்த தூய்மையான இஷ்டப்பிரசாதம் எங்கே? நாம் கொடுத்த கற்பனைகளின் பாதையில் நீங்கள் ஏன் நடக்கவில்லை? அஞ்ஞானிகளுடைய மதிப்பு உங்களுக்கு வேண்டுமென்றல்லவா நமது வேதத்தின் ஒழுங்கை மீறி நடந்தீர்கள்? பண ஆவேச மிகுதியால் அல்லவா பணத்துக்காக உங்கள் ஆத்துமத்தை உலகத்துக்கு விற்றீர்கள்? இராவின் இருளைத் தேடிப் போய், நாம் உங்களைப் பார்க்கிறதில்லையென்று உங்கள் மனதைத் திடஞ்செய்து, பாவத்தைச்

செய்தீர்கள். பாவம் அறியாத பிள்ளைகளுக்கு நீங்கள் பாவத்தைப் படித்துக் கொடுத்தீர்கள். உங்களாலே எத்தனை பேர்கள் பாவத்தைச் செய்து கெட்டுப்போய் நரகத்தில் விழுந்திருக்கிறார்கள். ஆத்துமத்துக்கு ஆத்துமம் பழி என்று நீங்கள் கெடுத்தவர்கள் சொல்லும் வார்த்தை உங்கள் காதில் விழவில்லையா? என்று சேசுநாதர்சுவாமி கேட்பார்.

அதோ அங்கே நிற்கும் இளவயதுள்ள பாவியர் உங்கள் பிள்ளைகள் அல்லவா? ஏன் அவர்கள் கெட்டுப்போய் பசாசுகளின் கையில் விழுந்தார்கள்? நீங்கள், அவர்களைப் பெற்ற தாய் தந்தைகள், அவர்களுக்குச் சிறுபிராயத்தில் ஜெபம் ஞான உபதேசம் சொல்லிக்கொடுத்தீர்களா? கோவிலுக்கு தேவபலிபூசை காண உங்களோடு கூட்டிவந்தீர்களா? அவர்கள் பாவசங்கீர்த்தனம் செய்யவும், நன்மை வாங்கவும் நீங்கள் முயற்சி செய்தீர்களா? துஷ்டப் பிள்ளைகளோடு அவர்கள் சேர்வதை நீங்கள் பார்த்தும் ஏன் தடுக்கவில்லை? சிறுபிள்ளையாயிற்றே அவனைக் கண்டிக்கக்கூடாதே என்று இளக்காரங் காண்பித்தீர்கள். இப்போது அவனுக்கு வந்த கேட்டைப் பாருங்கள். உங்கள் தப்பிதத்தால் அவன் நரகத்துக்குப் போகிறான்.

கள்ள ஞானிகளாய் இப்போது வேஷம் போட்டு மனிதர்களை ஏய்த்துவருகிறவர்கள் அந்த நாளில் வெகு அவமானமும் நிந்தையும் அடைவார்கள். இப்போது துணிந்து பாவத்தைச் செய்து எனக்கு என்ன கேடு வந்ததென்று சபதங்கூறும் பாவியே, நல்லது அந்த நாளில் என்ன கேடு உனக்கு வந்ததென்று நீயும் அறிவாய், உலகமெல்லாம் அறியும். நீ கெடுத்து நரகத்திலே தள்ளினவர்கள் எல்லாரும் உன்னைச் சுட்டிக்காட்டி உன் தலைமேல் பழி சுமத்துவதைக் கேள். அந்தப் பெண்பிள்ளை உன்னைப் பார்த்து: அடா பாதகா! என்னைக் கெடுத்த பாவி நீதான். என் நாணம் உயிரினும் பெரிதென்று எண்ணி, நான் நடந்தேன். நீ உன் இங்கித மொழியால் என்னைப் பசப்பி மயக்கினாய், தேவ கோபாக்கினை உன் தலைமேல் விழக்கடவது என்று சொல்லி உன்னைச் சபிப்பாள்.

உன்மேல் பழி சுமத்தி குற்றம் சாட்டும் பலபேர்களுக்குள்ளே உன் மனச்சாட்சி எல்லாரிலும் அதிக சப்தத்தோடு உரத்திப் பேசும், நீ செய்ததும் சொன்னதும், செய்யாமல் விட்டதும், எல்லாம் உன் மனச்சான்று சாட்சியாய் எழும்பி பயமின்றி சொல்லும். சேசுநாதர்சுவாமியின் முன்னிலேயில் உலகமெல்லாம் அறிய அப்போது விரிவாய்ப் பேசும். சிங்கத்தைப்போல் கர்ச்சிக்கும். இப்போதோ உன் மனச்சான்று கொஞ்சம் அதட்டிப் பேசினல் நீ அதை அடக்கி வாயைக் கட்டுகிருய். உன் கண்களில் நீயே மண்ணை வாரிப் போட்டுக்கொண்டு பரிசுத்தவானைப்போல் பாசாங்கு பண்ணுகிருய். கடைசி நாளில் எல்லாம் வெளியாகும். சேசுநாதர்சுவாமி இதோ தீர்ப்பு விதிக்கப்போகிருர். கவனமாய்க் கேள்.

மூன்றும் பாகம்

மனிதர்கள் செய்த பாவங்களை எல்லாம் உலகம் எல்லாம் அறியக் காட்டின பின்பு, தேவநீதியின் கர்த்தாவான சேசுநாதர் தமது திருவாயைத் திறந்து தேவ சப்தத்தோடு சகல சிருஷ்டியும் கேட்கும்படி பேசுவார். அவர் பேசவே உலகம் நடுங்கி அதிரும். நரக பாதாளத்தின் அடிமட்டும் அவர் வார்த்தை சப்திக்கும். கோபம் நிறைந்த முகத்தோடு, கண்களிலிருந்து அக்கினிப் பொறிகள் சிதறிப் பறக்க, கோடை இடிபோல் ஆர்த்து இடது பக்கந் திரும்பி, பாவிகளைப் பார்த்துச் சொல்லுவார்: சபிக்கப்பட்டவர்களே! நம்மைவிட்டு அப்பால் போங்கள். நாம் உங்களுக்குத் தகப்பன் அல்ல, நீங்கள் இப்போது நமக்குப் பிள்ளைகள் அல்ல. உங்களுக்கு நாம் நமது வீடாகிற மோக்ஷத்தைச் சொந்தமாய்க் கொடுத்தோம். நீங்களோ அது உங்களுக்கு வேண்டாமென்று உலகத்தைத் தெரிந்துகொண்டீர்கள். ஆயிரங்கோடி அஞ்ஞான ஜனங்களிலிருந்து உங்களை நாம் தெரிந்து நமது இரத்தத்தால் உங்களைச் சுத்தமாக்கினேம். நமது மாம்ஸத்தை உங்களுக்கு உணவாய்க் கொடுத்தோம். நமது இருதயத்தைத் திறந்து அதிலிருக்கும் அளவில்லா வரங்களை உங்கள்மேல் பொழிந்

தோம். நீங்களோ நமது சிநேகத்தை மதிக்கவில்லை. நமது இரத்தப்பலன் வேண்டாமென்று நிந்தித்தீர்கள். நாம் இதெல்லாம் பொறுத்துக்கொண்டு உங்களுக்கு நல்ல மனது வருமட்டும் காத்துக்கொண்டிருந்தோம். நமது சம்மனசுகளையுங் குருக்களையும் உங்களிடம் அனுப்பினோம். மகனே! வா, வா, நம்மை அல்லாமல் உனக்குப் பாக்கிய சந்தோஷம் எங்கும் இல்லை. நமக்கு ஊழியஞ் செய்ய வா, என்று அன்போடு அழைத்தோம். நீயோ மாட்டே னென்றாய். உன் துர்க்குணம் சொல்வதைத்தான் கேட் பேனென்றாய். நல்லது அது உன் காலம். இப்போது நமது காலம். சபிக்கப்பட்டவனே! நமது கண்முன் நிற் காதே. பரலோக பூலோகம் சாட்சியாயிருக்க நாம் உன் னைச் சபிக்கிறோம். சேசுநாதர்சுவாமி சாபம் என்றவுடனே சர்வலோக மண்டலங்களும் அதிர்ந்து முழங்கி எதிரொலி கொடுத்து சாபம், சாபம் என்று சப்திக்கும். நரக பாதா ளத்திலிருந்து பெரும் ஓசை எழும்பி சாபம், சாபம் என்று கர்ச்சிக்கும்.

சேசுநாதர்சுவாமி சொன்ன தீர்ப்பு மாறாத தீர்ப்பு. அதை மறுத்து மாற்றி உடைக்கமாட்டார். பாவி பதைப் பான், துடிப்பான், தரையில் மோதி விழுவான், புலம்பு வான்; மலைகளே! குன்றுகளே! என் தலைமேல் விழுந்து என்னை நசுக்கமாட்டீர்களா? என்று தானே தன்னைச் சபிப்பான்.

ஆ! ஆ! பாவி! இப்போது மனந்திரும்பமாட்டே னென்று பிடிவாதஞ் செய்கிறாய். இரத்தக் கொதிப்பால் இன்பசுக சந்தோஷத்தைத் தேடி அதிலே அமிழ்ந்திக் கிடக்கிறாய். தேவ கோபத்துக்குப் பயப்படமாட்டே னென்று அநியாயஞ்செய்து பிழைக்கிறாய். நல்லது, உன் இஷ்டம்போல் செய். சர்வேசுரன் உன்னைக் கட்டாயப் படுத்தி இழுக்கமாட்டார். உன் ஊழியம் அவருக்குத் தேவை இல்லை. ஆனால் கேள், உன் ஆட்டமும் பாட்ட மும் முடிந்துபோகும். சர்வேசுரனுடைய மாறாத தீர்ப்பு. உன் காதில் சப்திக்கும். இதோ! அதற்கு சமயம் சமீபத் தில் இருக்கின்றது.

சேசுநாதர்சுவாமி தீர்ப்பு சொன்னவுடனே பூமி தன் வாயைத் திறக்கும். திறந்த பாதாளக் குழியிலே பசாசு களும், பாவிகளும் உருண்டு மோதி அடித்து விழுவார்கள். ஆனால் இப்படி இவர்கள் விழுமுன்னே சேசுநாதர் தமது பிள்ளைகளுக்குச் சொல்லும் அமிர்த வாக்கியங்களைக் கேட் பார்கள்.

நமது அன்புள்ள இரக்ஷகர் அன்பும் அருளும் நிறைந்த முகத்தோடு தமது வலதுபக்கம் நிற்கும் நல்லவர் களைப் பார்த்து: என் பிதாவினால் ஆசீர்வாதம் பெற்ற என் பிள்ளைகளே! உங்களுக்காக நாம் நித்தியகாலம் தயார் செய்திருக்கும் மோக்ஷானந்த பாக்கியத்தை அநுபவிக்கும் படியாய் நம்முடன் வாருங்கள் என்று சொன்னதும், இவர்கள் எல்லாரும் ஆனந்த அக்களிப்புடன் ஆத்தும சரீரத்தோடு சேசுநாதரைச் சூழ்ந்து மோக்ஷ மண்டலத் துக்கு ஏறுவார்கள்.

நரகக்குழியின் வாயில் நிற்கும் பாவிகள் இந்த அற்புத காட்சியைப் பெருமூச்சு விட்டுப் பார்ப்பார்கள்: ஆ! மோக்ஷமே! தெய்வீக பட்டணமே! சமாதானம் வாழும் வாசஸ்தலமே! எங்களுக்காக அல்லோ உன்னை தயை யுள்ள சர்வேசுரன் அலங்கரித்து சிங்கார வனப்பு நிறைந்த பட்டணமாக்கினார். ஆ! சகோதரரே! எங்களைத் தனியே விட்டு நீங்கள் போகிறீர்களோ? ஓரிடத்தில் கூடி வாழ்ந்த நாம் இப்படிப் பிரிந்திருப்பது சரியோ? ஓ! பாவமே! நரகப் பிறவியே! உன்னை நான் தேடினதற்கு வந்த பலன் இதுதானோ? அந்தோ! ஐயோ, என்று அலறி அழுவார் கள். நரகத்தின் குழிக்குள் அடித்து மோதி உருண்டு விழுவார்கள். அந்த வாசலின் கதவை சர்வ வல்லப சர்வே சுரன் அடைத்து அதின்மேல் தேவ முத்திரையைப் பதிப் பிப்பார். எவரும் யாராயினும் அதை உடைத்து முறிக்க முடியாது. சர்வேசுரனுடைய மகத்துவத்தின் பெரிய நாள் இவ்விதமாய் முடியும். இதுதான் உலகத்தின் கடைசி நாள்.

சகோதரரே! உலகத்தின் கடைசி நாளின் பயங்கரம் நிறைந்த வர்த்தமானத்தை அடிக்கடி உங்கள் ஞாபகத்தில்

வரச்செய்யுங்கள். தாவீது அரசன் தேவ தீர்ப்பின் அகோரத்தை நினைக்கும்போது, ஆண்டவரே! என் உடலின் எலும்புகளெல்லாம் நடுங்கி கலகலவென்று ஆடுகின்றன என்பார். வனவாசியான எரோணிமுஸ் உலகத்தின் கடைசி நாளை நினைக்கையில் பயந்து ஓர் பெருங் கல்லால் தமது நெஞ்சை அடித்து: ஆண்டவரே! நீர் தீர்ப்பு சொல்ல வரும் அந்த நாளில் என் மேல் இரக்கமாயிரும் என்று பிரார்த்திப்பார். நீங்களும் இவர்களைப்போல் உலகத்தின் கடைசி நாளை நினைத்தால் பாவத்தைச் செய்யமாட்டீர்கள்.

ஓ! நீதிபரரான என் சேசுவே! பாவத்தைத் *தண்டிக்கும் அதிபதியே! அந்தக் கடைசி நாள் வருமுன்னே என் பாவங்களை எல்லாம் பொறுத்தருளுஞ் சுவாமி.

அர்ச். மரியே! பாவிகளின் தஞ்சமே! நீர் சர்வேசுரனுக்குந் தாய், பாவிக்கும் தாய். நீதிபரருக்குந் தாய், நீசனான குற்றவாளிக்கும் தாய். இவ்விருவகைப் பிள்ளைகளுக்கும் நீர் தாய் ஆதலால், குற்றவாளியான பிள்ளைகோனதை நீதியுள்ள சர்வேசுரனால் சபிக்கப்படாதபடி பிரார்த்திப்பீராக.

நாலாம் நாள்—இரண்டாம் தியானம்

பாவத்துக்கு ஏதுவான சமயங்களை விலக்குதல்

திரவியவானான ஓர் வாலிபனிருந்தான். இவன் தகப்பன் காலகதி அடைந்தபின், அவன் சம்பாதித்த பொருட்களை எல்லாம் வீணிலேயும் துர்விஷயங்களினாலுஞ் செலவழித்தான். சூது விளையாடுவது இவனுக்குள்ள பல துர்ப்பழக்கங்களில் ஒன்று. விளையாடப்போய் கைப்பணத்தை இழந்து வெறுங்கையாய் வீட்டுக்கு வருவான். இவன் தாயும் பந்துக்களும் பலமுறை சொல்லியும் இவன்

கேட்கவில்லை. இவன் வெளியே விளையாடப் போகும் போது இவன்கூட சிங்கம் என்ற இவனது வீட்டு நாயும் போகும்.

ஒருநாள் இவன் வழக்கம்போல் கையில் பணமெடுத்து சூது விளையாடப் போகும்போது இவனுக்கெதிரே இவன் சிநேகிதர்களில் ஒருவன் வந்தான். எப்போதுங் கூட வருகிற நாய் அன்று வாராததைக்கண்டு காரணமேதென்று கேட்டதற்கு, இவன் சொல்வான்: நேற்று சிங்கம் என் னோடு அந்த வீட்டுக்கு வந்தபோது எப்படியோ வீட்டுக் குள்ளே நுழைந்தது. வீட்டுக்காரன் துஷ்டப்பயல் பிரம் பெடுத்து சுரீர் என்று நாயை அடித்தான். இன்றைக்கு கூட வரும்படி நான் எவ்வளவுதான் கூப்பிட்டாலும் நேற்று விழுந்த அடியை நினைத்து வரமாட்டேனென்று வீட்டிலே நின்றுவிட்டது.

இந்த சங்கதியைக் கேட்ட சிநேகிதன் புன்சிரிப் போடு: மித்திரா! நான் ஒன்று சொல்லுகிறேன். நீ கோபித்துக்கொள்ளாதே. உனக்கு இருக்கும் அறிவைப் பார்க்கிலும் உன் நாய்க்கு அதிக அறிவு இருக்கின்றது. நாய் ஒருவிசை அந்தச் சூதுவிளையாடும் வீட்டில் அடிபட்ட பின்பு திரும்பி அங்கே போகாமல் நின்றுவிட்டது. நீயோ, எத்தனைவிசை கைப்பணத்தை இழந்து வெட்க மும் அவமானமும் பெற்று வந்திருக்கிறாய்? உனக்குப் புத்தி இன்னும் வரவில்லை. அடிபட்ட பின்னும் சூது விளையாட அந்த வீட்டுக்குப் போகிறாய் என்று சொன் னான். இந்த ஞாயத்தைக் கண்கூடாய்ப் பார்த்த நாள் முதல் வாலிபனுக்குப் புத்தி வந்தது.

கிறீஸ்துவர்களில் எத்தனை பேர்கள் இந்த வாலிப னைப்போல் பாவத்தில் பழகிவருகிறவர்கள்! இந்தப் பழக் கம் கெட்டதென்று பட்டு அறிந்த பின்பும் அதை விட மனமில்லாமலிருக்கிறார்கள்! பாவத்துக்கு ஏதுவான சம யங்களில் வேணுமென்று போய் ஆத்தும நஷ்டம் அடை கிறார்கள்! நீங்கள் பாவசங்கீர்த்தனஞ் செய்த பின்பு, அது பலனுள்ளதோ அல்லவோ என்று அறியும்படி ஓர் நல்ல

அடையாளம் வேண்டுமானால், பாவத்துக்கு ஏதுவான அடுத்த சமயங்களை விலக்கி நீக்க நீங்கள் எவ்வளவு ஜாக்கிரதையாயுங் கருத்தாயும் இருக்கிறீர்களென்று சோதித்துப் பாருங்கள். இப்படி நீங்கள் சோதிக்கும்படியாய் இந்தத் தியானம் செய்யப் போகிறீர்கள். கவனமாய் நாம் சொல்வதை நீங்கள் கேட்டால் அளவற்ற பிரயோசனம் இதனால் உங்களுக்கு உண்டாகும்.

பரிசுத்த தாயே! எங்களுக்கு நல்ல அறிவும் புத்தியும் வரும்படி உமது தேவகுமாரன் யேசுநாதர்சுவாமியிடத்தில் மன்றாடும் ஆண்டவளே!

முதல் பாகம்

பாவத்துக்கு ஏதுவான சமயம் என்றால் என்ன? எந்த வஸ்து நமது பஞ்சேந்திரியங்களுக்கு தோன்றுவதால் பாவத்தின் நினைவை எழுப்பி பாவத்துக்கு நம்மைத் தூண்டுமோ அதுவே பாவத்துக்கு ஏதுவான சமயமாகும். இது தூர சமயம் அடுத்த சமயம் என்று இருவகையாகும். தூர சமயம் உடனே உன்னைப் பாவத்துக்கு இழுக்காது. ஆனால் அதின் மட்டிலும் எச்சரிக்கையில்லாவிட்டால் சன்னஞ் சன்னமாய்ப் பாவத்துக்கான சார்பை உண்டாக்கி பாவத்துக்கேதுவான அடுத்த சமயமாகவும் போகக்கூடும். அடுத்த சமயமோ, தன் இயல்பிலே உன்னைப் பாவத்துக்கு தக்ஷணமே இழுக்கும் என்பதால் அதை உடனே தூர நீக்கும்படியான கடமை உனக்கு உண்டு. அப்படியே கெட்ட படங்களையும் நாடகங்களையும் பார்க்கிறது, அசுத்த கதைகள் அடங்கிய புஸ்தகங்களை வாசிக்கிறது, துன்மார்க்கரோடு பழகித் திரிகிறது, இவைகள் எவ்வகைப்பேருக்கும் பாவத்துக்கு அடுத்த சமயம். வேறு சில சமயங்கள் எல்லாருக்கும் பாவமாயிராவிட்டாலும், சிலருக்கு சில விஷயங்களின் நிமித்தம் பாவத்துக்கு அடுத்த சமயங்களாகலாம். குடியில் பழகினவனுக்குச் சாராயக்கடையின் சமீபத்திலிருப்பதே பாவத்துக்கு அடுத்த சமயமாகும். துன்மார்க்கத்தில் நடக்கிறவனுக்கு வேசிகள் குடியிருக்கும்

வீட்டின் பக்கம் போவதே அவனுக்குப் பாவத்துக்கடுத்த சமயமாகும்.

இந்த சமயங்களில் சிலது உன்னை அறியாமல் சடுதியிலே வருகிறவைகளாகும். அப்போது உன் நம்பிக்கையைச் சர்வேசுரன்மேல் வைத்து அவருடைய உதவியை ஜெபத்தால் கேட்டால் நீ தப்பித்துக்கொள்வாய். வேறு சிலது உன் மனதறிய நீயே தேடிக்கொள்ளும் சமயங்கள். இப்படிப்பட்ட பாவ சமயங்களைப்பற்றித்தான் நாம் இப்போது பேசப்போகிறோம்.

பாவசமயம் பாவத்துக்கு அடுத்து நிற்கும் சமயமானால் அந்தச் சமயத்தில் அறிந்து நிற்பதே பாவமாகும். பாவத்தை விலக்கவேண்டும் என்ற கடமைபோல் பாவத்துக்கு அடுத்துநிற்கும் சமயத்தையும் விலக்கவேண்டுமென்ற கடமையும் உண்டு. எந்தப் பொருளோ அல்லது எந்த பேர்வழியோ- உனக்கு எவ்வளவு பிரயோசனமும் பிரியமும் உள்ளதாயினும், அது உனக்குப் பாவத்துக்கு ஏதுவான அடுத்த விஷயமானால், அதை எவ்வகையாயினும் நீக்கிவைப்பது உன்மேல் பொறுத்த கடமை. சேசுநாதர் சுவாமி இந்தப் புத்தியைத் தெளிவாய்ப் படிப்பித்திருக்கிறார். உன் கண் பாவத்துக்குக் காரணமானால் அதைப் பிடுங்கி எறி. உன் கை பாவத்துக்கு ஏதுவாயிருந்தால் அதை வெட்டிப்போடு. இதின் கருத்தேதென்றால் எவன் எவளாயினும், எந்த வேலை, எந்த இடம் எதுவாயினும், இவைகள் கண்போலும் கைபோலும் எவ்வளவு பிரியமும் பிரயோசனமும் உள்ளவைகளாயிருந்தாலும், இவைகள் பாவத்துக்கு இயல்பிலே அடுத்த சமயமாய் உனக்கு இருந்தால் இவைகளை எல்லாம் உன்னைவிட்டு முழுதும் தூர அகற்றி நீக்கவேண்டும். அப்படி நீ செய்யாவிட்டால் பாவத்தில் விழுந்து கெட்டுப்போவாய் என்பது நிச்சயம். ஆழமான படுகுழியின் ஓரத்தில் நீ நின்று பாடி ஆடிக் குதித்தால் குழிக்குள்ளே விழமாட்டாயோ? நாகப்பாம்பு அடைகாக்கும் புதரின் சமீபத்தில் நீ படுத்து பயமின்றி நித்திரை செய்வாயோ? பஞ்சை நெருப்பின் சமீபத்தில்

வைத்தால் அதில் நெருப்புப் பிடிக்காதோ? திருடர் இருக்கும் வீட்டிலே நீ பணப்பையோடு தங்கி இருப்பாயோ? தங்கம் பொன்னிலும் அதிக விலை உயர்ந்த தேவ இஷ்டப்பிரசாதத்தை நீ மகா மிருதுவான பாத்திரமாகிற உன் சரீரத்தில் வைத்து எங்கும் அலைந்து திரிந்து, ஆபத்தான சமயங்களைத் தேடிப்போனால் அதை நிச்சயமாய் இழந்துபோவாய்.

தூண்டில் முள்ளுக்கு ஒருவிசை தப்பின மீன் திரும்பவும் அதைக் கடிக்க வருமா? சிக்கின வலையைக் கிழித்து தப்பித்தோடின மான் திரும்பவும் வலைக்குள் வந்து மாட்டிக்கொள்ளுமா? சூடுகண்ட பூனை திரும்பவும் அடுப்பங்கரைக்கு வந்ததை நீ பார்த்ததுண்டா? நீ மாத்திரம், புத்தியுள்ள மனிதனானாலும், ஆத்துமத்துக்கு ஆபத்தான இடங்களிலும் நேரத்திலும் பயமின்றித்திரிகிறாய். அந்த இடத்துக்கு நீ போவதால் இந்தப் பாவத்தை நீ செய்திருக்கிறாய். திரும்பவும் அந்த இடத்தைத்தேடி ஏன் போகிறாய்? இந்த வேலையில் நீ பிரவேசித்தால் உனக்குப் பாவம் உன் நிழல்போல் உன் காலின்பின் வருகிறதென்று உனக்குத் தெரியும். ஏன் அந்த வேலையை நீ தேடவேண்டும்? அந்தப் புஸ்தகத்தை நீ வாசித்ததால் உனக்குப் பாவசோதனை வந்தது, நீயும் பாவத்தைச் செய்தாய், ஏன் அந்தக் கெட்ட புஸ்தகத்தை வீட்டில் இன்னும் இரகசியமாய் வைத்திருக்கிறாய்? ஏன் அதை எடுத்து நீயும் வாசிக்கிறாய், மற்றவர்களுக்கும் வாசிக்கக் கொடுக்கிறாய்? அஞ்ஞானிகளின் நாடகத்தை நீ பார்த்ததால் பாவத்தைப் படித்து செய்தாய். ஏன் திரும்பவும் அந்த நாடகத்தை நீ பார்க்கப்போகிறாய்? உன் இஷ்டம் பெரிதோ, சேசுநாதருடைய கட்டளை பெரியதோ? அழிந்துபோகும் அற்ப சந்தோஷம் பெரிதோ? அழியாத நித்திய மோக்ஷ பாக்கியம் பெரிதோ? ஆனால் நான் பாவத்துக்கு ஏதுவான சமயத்தில் போனாலும் நான் பாவஞ் செய்கிறதில்லையே. இதிலே என்ன மோசம் எனக்கு இருக்கிறது என்று சிலர் சொல்லுவார்கள்.

பாவத்துக்கு அடுத்த சமயம் ஏன். உனக்கும் எல்லாருக்கும் வெகு மோசமும் ஆபத்தும் உள்ளதென்று இரண்டாம் பாகத்தில் விவரிப்போம்.

இரண்டாம் பாகம்

பாவத்துக்கு ஏதுவான சமயங்களில் போகிறவன் எவன் ஆனாலும் சர்வேசுரனுடைய தெளிவான கட்டளைக்கு விரோதமாய் நடக்கிறான். வேதவாக்கியத்தில், பாவத்தின் மோசத்தை விரும்பித் தேடுகிறவன் அதிலே விழுந்து கெட்டுப்போவான், என்று சொல்லியிருப்பதால், எவன் இதை மீறி நடப்பானோ அவனுக்குச் சர்வேசுரன் தமது வரமாகிற உதவியைச் செய்யமாட்டார். தம்பி! நீ பாவமுள்ள வீட்டைத் தேடிப்போகிறாய். சேரத்தகாதவர்களோடு சேருகிறாய். வாசிக்க யோக்கியமற்ற புஸ்தகங்களை ஆசையோடு வாசிக்கிறாய். நாடகம், கூத்து, நடனம், திருநாள் சந்தடி இவைகள் நடக்கும்போது, நீ உன் இஷ்டம்போல் எல்லாம் பார்க்க ஆசைப்படுகிறாய். இவைகள் எல்லாம் பாவம் வர அடுத்த சமயங்களென்று உனக்குத் தெரியும். ஆபத்தைத் தேடிப்போவது சர்வேசுரனால் விலக்கப்பட்டதென்று நீ நன்றாய் அறிவாய். அறிந்தும் ஒன்றுங் கவனியாமல் உனது துர்ச் சுபாவத்தைப் பின்சென்று நீ போகிறாய். இப்படிப் போகிற உனக்குச் சர்வேசுரன் அற்புத புதுமை செய்து நீ பாவத்தைச் செய்யாதபடி உன்னைக் காப்பாற்றுவாரோ? சர்வேசுரன் தமது அநுக்கிரக பிரசாதமாகிற உதவியை நமது இஷ்டம்போல் அல்ல, தமது தேவ ஒழுங்கின் கிரமப்படி கொடுக்கிறார். பாவத்துக்கு அடுத்த சமயமென்று தெரிந்தும், மூடதைரியமாய் அதில் போகிறவன், சர்வேசுரனையே சோதிக்கிறான். அவருடைய வரப்பிரசாதத்தின் உதவி அவனுக்குக் கிடைப்பதெப்படி? தாவீது இராஜன் சர்வேசுரனுடைய இருதயத்துக்குப் பிரியமுள்ளவராக புகழப்பட்டாலும் பாவத்துக்கேதுவான ஓர் தகாத காரியம் தன் கண்முன் வந்தபோது, தன் கண் பார்வையை அடக்காத

தால், பாவத்தில் விழுந்து சர்வேசுரனுடைய கோபத்திற்கும் தண்டனைக்கும் உள்ளானார்.

அர்ச். இராயப்பர் அப்போஸ்தலருக்குள் முதன்மை பட்டம் பெற்றவர். அவர் சேசுநாதர்சுவாமியின் தேவத்துவத்தைப் பிரசித்தமாய் எடுத்துப் பேசினபோது அவர் காண்பித்த விசுவாசம், உறுதியும் உயிருள்ளதுமான அற்புத விசுவாசம். சேசுநாதர்சுவாமிபேரில் இவருக்கிருந்த உருக்கமான சிநேகத்தை யார் விவரித்துப் பேசக்கூடும்? சுவாமி! இவர்கள் எல்லாரும் உமக்குத் துரோகஞ் செய்தாலும் நான் ஒருபோதுந் துரோகஞ் செய்யமாட்டேன், என்று சபதங்கூறிச் சொன்னவர் இவர்தான். இவ்வளவு மேன்மை பெற்றிருந்த இராயப்பர் சேசுநாதருடைய விரோதிகளின் கூட்டத்தில், அவர்கள் பேசுவது இன்னதென்றறிய விநோதப் பிரியத்தால் போய்க் கேட்டுக் கொண்டு நின்றார். துஷ்டர் சகவாசம் தீமைக்கு ஏது என்ற சுலோகத்துக்கு உதாரணமானார். போன இடத்தில் ஓர் பெண்பிள்ளை கொஞ்சம் அதட்டிப் பேசி: நீ சேசுவின் சீஷன் அல்லவா? என்று கேட்ட உடனே, இராயப்பர் பயந்து நடுங்கி, வாய் தடுமாறி: நான் அல்ல, அவரை நான் அறியேன், என்று சத்தியஞ் செய்து சாதித்தார்.

சகோதரரே! நீங்கள் சிறு பிள்ளைகளாய் இருந்த காலத்தில் படித்த மூதுரை வாக்கியம் இன்னும் உங்கள் ஞாபகத்திலிருக்கின்றதா?

தீயாரைக் காண்பதுவும் தீதே திருஅற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே—தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோ
டிணங்கி இருப்பதுவுந் தீது.

தேவ விசுவாசத்தின் பிரகாசமில்லாத ஒளவையார், துஷ்டரோடு எவ்வகையாலாவது, சகவாசஞ் செய்வது, தீதே தீதே, என்று படித்துப்படித்துச் சொல்லும்போது, விசுவாசத்தின் தேவ ஞானப்பிரகாசம் பெற்ற கிறீஸ்துவர்கள் இந்தப் புத்தியைக் கவனியாமலிருப்பது அவர்களுக்கு யோக்கியமா?

பாவத்துக்கு அடுத்த சமயமென்று தெளிவாய் அறிந்து, அதை அகற்றக்கூடுமாயிருக்கும்போது அதை அகற்றுமல், துணிகரமாய் அதில் போகிறவனுக்குச் சர்வே சுரன் தமது விசேஷ உதவியைச் செய்யமாட்டார் என்பது மாத்திரம் அல்ல, அவர் அப்படிச் செய்வது அவருடைய திவ்விய ஞானத்துக்கே ஒருவகையில் விருத்தமாகும். ஏனென்றுல் சர்வேசுரன் அவனுக்கு அந்த உதவி செய் வாராஞல் அவன் பாவத்தைத் துணிந்து செய்யும்படியாய் அவரே அவனைத் தூண்டுவதற்குச் சமானமாகும்.

இதுவுமன்றி பாவத்துக்குச் சமீபமாய் அடுத்த சம யத்திலிருக்கிறவன் பசாசு தன்னைக் கெடுத்து நரகத்தில் தள்ளும்படியாய் அதற்கு எளிதான ஓர் வழியைக் காட்டு கிறுன். நீ பாவ சமயத்தைத் தூர நீக்கி உன் தொழிலின் கடமையைச் செய்யும்போது சர்வேசுரனுடைய தேவ செயலால் குறிக்கப்பட்ட இடத்தில் நீ இருப்பதால், உன்னைச் சுற்றி சம்மனசுகள் காவலாயிருக்கிறுர்கள். பசாசு உன் கிட்ட வர அஞ்சி நிற்கும். ஆனுல் நீயே பாவ சந்தர்ப்பத்தை வலிய தேடிப்போனுல் பசாசின் கையில் விழப்போகிறுய். நீ துஷ்டத் தோழரோடு கூடிச் சேர்ந்து அலைகிறுய். அசுத்த கதைகளை வாசிக்கிறுய். வேத விசு வாசத்துக்கு விரோதமான பத்திரிகைகளையும் புஸ்தகங் களையும் படிக்கிறுய். பார்க்கவுங் கேட்கவும் அயோக்கிய மான நாடகங்களையும், நடனங்களையும், சதுர்க்கச்சேரி களையும், உருவங்களையும் போய்ப் பார்க்கிறுய். இவைகளை நீ பார்க்கும்போதுங் கேட்கும்போதும், வாசிக்கும் போதும், உன் மனதில் அசுத்த நினைவுகள்தான் உற்பத்தி யாகும். அவைகளின்பேரில் சந்தோஷமும் பின் சம்மத மும் பிறக்கும். மனதறிய நீ சம்மதங்கொடுத்த உடனே பாவத்தைச் செய்தாய். பசாசு உன்னைக் கெடுக்க நீ அதற்கு வழி காண்பித்தாய்.

சிலபேர்கள் நினைப்பதேதென்றுல், நான் ஒருவிசை பாவ சமயத்தைத் தேடிப்போனதில் பாவத்தில் விழுந் தேன். விழுந்ததாக எனக்கு அநுபவமிருப்பதால் இனிப்

பயமென்ன? முற்றும் நனைந்தவனுக்கு ஈரமேது, என்று கவலை இன்றி இருப்பார்கள்.

நீ ஒருவிசை பாவத்தில் விழுந்தபின்பு பயந்து உடனே எழுந்து நீ வெளியேறாதேபோனால், இன்னும் அதிகமாய் பாவக்குழியின் ஆழத்தில் போவாய். போகப் போக நீ வெளியே வருகிறது அதிக கஷ்டமாயும் பிரயாசையாயுமிருக்கும். எந்தத் துர்க்குணமானாலும், அதைத் துவக்கத்திலே அடக்காவிட்டால், அது பலங்கொண்டு கொடுங்கோலனாய், உன்னைத் தனக்கு அடிமையாய்க் கீழ்ப் படுத்தி மதங்கொள்ளும். பாவ சமயத்தில் பயமின்றி நீ போகப்போக பாவத்தையே செய்வாய். உன் புத்தியும் மனதும் துர்ப்பழக்கமாகிற கொடுஞ் சங்கிலிகளால் கட்டப்படும். பாவத்தின் படுகுழியில் இன்னும் ஆழமாய் விழுவாய். இந்தப் பாதாளத்தில் சேர்ந்தபின் வேதவாக்கியஞ் சொல்வதுபோல, எவ்வித புத்தி போதகத்தைக் கேட்டாலும் நீ பழித்து நகைப்பாய்.

மலையின் உச்சியிலிருக்கும் கல் கொஞ்சம் அசைந்து புரளும் சமயத்தில் அதைத் தடுத்து நிறுத்தலாம். அது தப்பினால், பின்னால் கல் உருண்டு புரண்டு போகப்போக அதிக விசை கொண்டு, வழியில் எதிர்ப்பட்ட பொருட்களை உடைத்து நொறுக்கி கடைசியில் பாதளஞ் சேர்த்தபின் மாத்திரம் நிற்கும். சலோமோன் என்பவர் மலையின் உச்சியில் நிறுத்தப்பட்ட வயிரத் தூண்போலிருந்தார். சகல ஞான அறிவால் பூரணம் பெற்றவர். தன் நிலை தப்பிப் பெயர்ந்து முதலில் ஒரு பாவத்தைச் செய்தார். அதோடு அப்பால் போகாமல் நின்றால் தப்பித்திருப்பார். ஆனால் முதல் பாவத்தோடு நிற்காமல் பாவத்தோடு பாவத்தைக் கூட்டினார். கடைசியில் முன் தேவ ஞான அறிவால் எவ்வளவு உயர்ந்தாரோ அவ்வளவு தாழ்ந்து பாவத்தின் பாதாளக் குழியில் விழுந்து கெட்டார்.

பாவத்துக்குச் சமீபமாய் அடுத்த சமயங்களைத் தூர விலக்காததால் வரும் பல ஆபத்துக்களை இதுமட்டும் விவரித்தோம். இவைகள் எல்லாவற்றிலும் அதிகமான பெரும் ஆபத்து ஒன்று இருக்கின்றது. கவனமாய்க்

கேள். பாவத்துக்கு ஏதுவான அடுத்த சமயங்களில் நீ இருக்குமட்டும், உன் பாவங்களுக்காக மெய்யான துக்கமும் மனஸ்தாபமும் உன்னிடமிருக்கமாட்டாது. எதார்த்தமான பிரதிக்கினையும் நீ செய்யமாட்டாய் பாவத்தை வளர்க்கும் சமயங்களில் நீ இருப்பதால் நீ பாவத்தையே வளர்க்கிறாய். எப்படி பாவத்துக்குத் துக்கப்படுகிறேன் என்று நீ துணிந்து சொல்வாய்? இந்த நிர்ப்பாக்கிய ஸ்திதியில் உள்ளவன் பாவசங்கீர்த்தனஞ் செய்தால், அவனுக்குப் பொறுத்தல் சேசுநாதர்சுவாமி கொடுப்பாரோ? மனஸ்தாபமும் பிரதிக்கினையுமின்றி பாவப்பொறுத்தலேது?

ஓ! கிறீஸ்துவர்களுக்குள்ளே எத்தனைபேர்கள் இந்த விஷயத்தில் முழுமோசம் போகிறார்கள்! பாவத்துக்கு ஏதுவான சமீப சமயங்களில் எந்த நாளிலும் இருப்பார்கள். இருந்துகொண்டே பாவசங்கீர்த்தனஞ் செய்யப் போவார்கள்! இவர்கள் மனதில் பாவத்துக்காகத் துக்கம் உண்டா? இனிமேல் இந்தப் பாவங்களைச் செய்யமாட்டேனென்று உறுதியாய்த் தீர்மானிக்கிறார்களா? இல்லை. ஏன்? ஏனென்றால் பாவத்துக்கு அடுத்த சமயத்தில் இவர்கள் இருப்பதால் பாவசங்கீர்த்தனம் செய்த மறுநாள், முன்போலவே பாவங்களைச் செய்கிறார்கள். கிறீஸ்துவனே! நீ வாயினால் மாத்திரம் இனிப் பாவத்தை நான் செய்யமாட்டேன் என்கிறாய். மனதிலோ எதார்த்தமில்லை. பாவப்பற்றுதலை இன்னும் முற்றும் விட்டுவிடவில்லை. பாவத்துக்கடுத்த சமயங்கள், அடிக்கடி நீ பாவத்தில் விழுவதற்குக் காரணமாயிருக்கும் ஆட்கள், சகவாசங்கள், இடங்கள் இவைகளை விட்டுவிட உன் மனதில் உறுதியான எண்ணமில்லை. உன் மனதைப் பார்க்குஞ் சர்வேசுரன் உனக்குப் பொறுத்தல் கொடுப்பாரோ? பாவ சமயங்களை நீக்குவதைப்பற்றி எவ்வளவுதான் சொன்னாலும் சில கிறீஸ்துவர்கள் பல குருட்டு நியாயங்களை எப்போதும் வாயில் வைத்திருந்து தங்கள் நடத்தையில் தப்பிதமில்லையென்று நிரூபிக்கத் தேடுவார்கள். இவர்கள் சொல்லும் வீண் நியாயங்களைப் பின்வரும் பாகத்தில் விவரிப்போம்.

மூன்றும் பாகம்

பாவ சம்பங்களில் பழகித் திரிகிறவர்கள், அதை விட்டு நீங்க மனமின்றி, துர்ப்பழக்கத்தால் மதிமயங்கி சொல்வதேதென்ருல்: ஓ! அந்த புத்தியைக் கேட்ட நாள்முதல் என் மனம் மாறிப்போனது. நான் இப்போது பாவத்துக்குப் பயந்து நடக்கிறேன். இனிமேல் நான் பாவத்தில் விழாதபடி சர்வேசுரன் என்னைக் காப்பாற்று வார் என்று நம்பி இருக்கிறேன். ஆனுல் ஒன்றுமாத்திரம் இப்போது செய்ய சாத்தியப்படாது. இன்னுரோடு நான் போகவர இருப்பது நெடுநாள் பழக்கம். இவர்களோடு முறித்துக்கொண்டு பேசாதிருப்பது கூடாத காரியம். பாவப் பழக்கந்தான், ஆனுல் வரவரத் தீரும். இப்போது நான் என்ன செய்ய?

சகோதரா! இவ்வளவு துணிவு உனக்கில்லாதே போனுல் உன் ஆத்துமத்தை இரட்சிக்கவும் உனக்குத் துணிவு இல்லை. பாவத்துக்கு நீ பயப்படுவதாக சொன்னுயே. அது அர்த்தசாரமற்ற வீண் வார்த்தை. நீ பாவத்தைச் சந்தோஷமாய்த் தேடிப்போகிறவன், எப்படி நீ பாவத்தைப் பகைப்பாய்?

ஆனுல் அந்த வீட்டில் உள்ளவர்களுக்கும் எனக்கும் வெகுநாள் சிநேகம். அவர்கள் எனக்கு வெகு உதவி செய்திருக்கிருர்கள். எனக்குத் தேவையானவர்கள், என்று நீ சொல்லலாம்.

சேசுநாதர்சுவாமி சொன்ன வாக்கியத்தை மறந்தா போனுய்? உன் கண், உன் கை, பாவத்துக்கு ஏதுவானுல் அவைகளைப் பிடுங்கி, வெட்டி தூர எறியும்படி சொல்லவில்லையா? ஒருவன் எவ்வளவு உனக்குத் தேவையானுலும் அவன் உனக்குப் பாவத்துக்கு ஏதுவானவனுனுல் அவனுடைய சகவாசம் உனக்கு ஒருபோதும் உதவாது. இந்தப் பழக்கத்தை அறுப்பது உன் கையை வெட்டுவது போல கடினமாயிருந்தாலும், நீ மோக்ஷத்துக்குப் போகும்படி இதைச் செய்துதான் தீரவேண்டும்.

இவன் வீட்டில் நான் பிழைப்புக்காக வேலை செய்கிறேன். அவன் என்னைப் பாவமான காரியங்களைச் செய்யும்படி வலுவந்தஞ் செய்கிறான், தூதாய் அனுப்புகிறான், திருடும்படி கற்பிக்கிறான், நான் அவன் சொன்னபடி செய்யாவிட்டால் என்னை வேலையைவிட்டுத் துரத்துவான். என் கதி என்னமாய்ப் போகும், என்று சிலபேர்கள் சொல்லுவார்கள்.

பாவமுள்ள வீட்டில் நீ உன் சரீரப் பிழைப்புக்காக இருந்தால், உன் ஆத்தும கதி நரகக் கதியாய்த்தான் முடியும். சேசுநாதருடைய தேவ வாக்கின்படி, மனிதன் உலகமெல்லாம் தனக்குச் சொந்தமாக்கி ஆண்டாலும், அவன் ஆத்துமம் நஷ்டமாய் கேட்டுப்போனால் அவனுக்கு வரும் லாபமென்ன?

ஆனால் என்னைப்போல அநேகர் ஆபத்தான இடங்களில் வேலையிலிருக்கிறார்கள். அவர்கள் வேலையை விட வேண்டுமென்று ஒருவருங் கட்டாயம் செய்வதில்லையே, என்று சொல்வாயாக்கும்.

இதின் விவரம் உனக்கு எப்படித் தெரியும்? நீ உன் நடத்தையைப்பற்றி கணக்குக் கொடுக்கவேண்டுமே அன்றி மற்றவர்களின் நடத்தையைப்பற்றி உன்னிடம் சர்வேசுரன் கேட்கமாட்டார்.

ஆனால் நான் புதுக்கிறீஸ்துவனல்ல. பல தலைமுறையாய் சத்திய வேதத்தில் பிறந்து வளர்ந்தவன். ஆனதால் எனக்கு சோதனை தந்திரம் வந்தால் நான் எளிதில் சம்மதிக்கமாட்டேன். என் துர்க்குணங்களை அடக்கி ஆள எனக்குப் போதுமான சக்தி இருக்கின்றது, என்று சிலர் பெருமையாய்ப் பேசுவார்கள்.

ஆ! ஆ! உனக்கு எவ்வளவு மனத்துணிவு உன் பேச்சிலே இருக்கிறது! காரியம் பெரிதா? வீரியம் பெரிதா? காற்றில் சுழலும் நாணல்போலிருக்கிற நீயா, கற்பாறைபோல் அஞ்சயாமல் நிற்பேன் என்று சொல்லுகிறாய்? உன் நம்பிக்கைக்கு ஆதாரமென்ன? உன் சுபாவப் பலமோ? உன் மனதின் ஊக்கமோ? உன் புத்தியின்

நுட்பமோ? இவை எல்லாம் நம்பத்தக்கதல்ல. சம்சோனைப் பார்க்கிலும் நீ அதிக பராக்கிரமசாலியோ? தாவீதென்பவரிலும் நீ அதிக பத்திமானோ? சலோமோனைவிட நீ புத்திசாலியோ? இவர்கள் எல்லாரும் ஆபாசமாய்க் கீழே விழுந்திருக்க, அப்படி நான் விழமாட்டேனென்று எப்படி நீ துணிந்து சொல்லுவாய்?

ஆனால் சர்வேசுரன் கிருபையால் இவ்வித மோசம் ஒன்றும் எனக்கு வரமாட்டாது. அக்கினிச் சூளையில் இருந்த மூன்று வாலிபரை சர்வேசுரன் அற்புதமாய் காப்பாற்றினாரே. சிங்கங்களின் குகையிலிருந்த தனியேலை சர்வேசுரன் இரக்ஷிக்கவில்லையா? என்னையும் அப்படி இரக்ஷிப்பார் என்று நீ எண்ணலாம்.

இந்த மூன்று வாலிபரும், தனியேலும் தாங்களாய் அக்கினியைத் தேடியோ, சிங்கங்களைத் தேடியோ போகவில்லை. வேத விரோதிகளின் கொடும் செய்கைகள் இது. ஆனதால் சர்வேசுரன் அவர்களுக்கு அற்புத உதவி செய்தார். நீயோ உன் மனப்பூர்வமாய் பாவ சமயத்திலிருக்கிறாய். சர்வேசுரனுடைய இரக்கத்தைச் சோதிக்கும்படி மிதந்தப்பின நம்பிக்கை வைக்கிறாய். சர்வேசுரன் தம்மை இவ்விதம் நீ பழிக்கும்படி உன்னை விடுவாரா?

சகோதரரே! இன்று பாவசங்கீர்த்தனஞ் செய்து சர்வேசுரனோடு சமாதானமாய் வந்திருக்கிறீர்கள். இனிமேல் எப்போதும் அவருக்குப் பிரமாணிக்கமாய் ஊழியஞ் செய்து இந்தச் சமாதான நிலையிலிருக்க ஆசையாயிருந்தால் பாவத்துக்கு ஏதுவான அடுத்த சமயங்களைத் தூர நீக்கிப் போடுவதுதான் புத்தி. ஒவ்வொருவனுக்கும் அநுபவ வாயிலாய் எது பாவத்துக்கு ஏதுவான விஷயம் என்று தெரிந்திருக்கும். தானே தனக்கு விரோதியாயிருந்து தன்னைக் கெடுக்காமல், எதார்த்த மனதோடும் தன் ஆத்துமத்தை இரட்சிக்கவேண்டும் என்கிற நேர்மையான ஆசையோடும், தன் நடத்தையை சர்வேசுரன்முன் சோதித்து அதில் பாவத்துக்கு உன்னைக் கூட்டிப்போன வழிகள் இவையென்று அறிந்ததும், துணிந்து அவைகளை எல்லாம்

அடக்க முயற்சி செய். நீ ஸ்திரமான மனதோடு துவக்கினல் சர்வேசுரன் உனக்கு உதவி செய்வார். பாவிகளின் தஞ்சமாகிற தேவ ஆண்டவள் உனக்காக சேசுநாதரிடம் பிரார்த்தித்து உன்னைக் காப்பாற்றுவாள்.

நாலாம் நாள்—மூன்றும் தியானம்

ஊதாரிப் பையன்

சர்வேசுரனிடத்தில் சகல சுகுண இலக்ஷணங்களும் எந்த அளவுக்கும் மேலிட்டு பூரணமாய் நிறைந்திருப்பதால் அற்ப அறிவுள்ள மனிதன் அவைகளைத் தன் புத்திக்குள் அடக்கும்படி துணிவது கூடுமான காரியமல்ல. ஆகிலும் சில தேவ இலக்ஷணங்களை எவ்வளவாகிலும் நமது சொற்ப புத்திக்கு இயன்ற அளவில் கண்டு அறியலாம். அப்படியே சர்வேசுரனுடைய நீதி எவ்வளவு பயங்கரமுள்ளதாயிருக்கவேண்டுமென்று அவருடைய பரிசுத்ததனத்தின் வழியாய் அறியலாம். அதெப்படியெனில்: சர்வேசுரனிடமுள்ள பரிசுத்தம் அதி உத்தமமாயிருப்பதால், அவர் பாவமான செய்கையை அளவில்லாப் பகையோடு பகைப்பார். இதின் நிமித்தம் பாவத்தைச் செய்யும் துரோகிகளை அனந்த நீதி உக்கிரமத்தோடு தண்டிப்பாரென்பது எல்லார் புத்திக்கும் தெளிவான விஷயம்.

ஆனல் சர்வேசுரனிடத்திலிருக்கும் இரக்கத்தின் மட்டிலோ அப்படி அல்ல. நீச மனிதனுக்குச் சர்வ மகத்துவ சர்வேசுரன் தயையும் இரக்கமும் காண்பிக்கும்படியாய் அவனிடத்தில் என்ன யோக்கியதை இருக்கின்றது? எந்த அளவில் சர்வேசுரன் மனிதனுக்கு இரக்கங் காண்பிக்க சித்தமாயிருக்கிறூரென்று அவரே மனிதனுக்கு அறிவியாதேபோனல் மனிதன் தன் புத்தியால் இதை அறியமாட்டான்.

அதின் நிமித்தம் நமது தேவ இரக்ஷகர் உலகத்தில் வந்தபோது மனிதர்பேரில் தமக்கு இருக்கும் இரக்கம் எவ்வளவென்று பல சமயங்களில் பலவகையில் காண்பித்திருக்கிறார். ஏழை எளிய ஜனங்களைத் தேடிப் போவார் துன்பப்படுகிறவர்களுக்கும் வியாதியஸ்தருக்கும் ஆறுதலும் உதவியும் செய்வார். பாவிகளுக்கு விசேஷ இரக்கமுந் தயையும் காண்பிப்பார். இதினால் பரிசேயர் இவரைப் பழித்து பாவிகளின் சிநேகிதன் என்று இவரை நிந்திப்பார்கள்.

பாவிகள்மட்டில் நமது ஆண்டவர் காண்பிக்கும் இரக்கம் இன்னும் எவ்வளவானதென்று பிரத்தியட்சமாய் கண்கூடாக மனிதர் அறியும்படியாக ஓர் அற்புதமான உவமையை விரிவாய்ச் சொல்லியிருக்கிறார். சேசுநாதர்சுவாமி சொன்ன பல உபமானங்களில் இது வெகு சிரேஷ்டம் பெற்றது. அனந்த ஞானம் நிறைந்த சர்வேசுரனே இந்த அற்புத உவமையை மனிதருக்குச் சொல்லாதேபோனால், மனிதன் தானாய் இதைத் தன் சுய புத்தி யுக்தியால் கனவிலும் உத்தேசித்திருக்கமாட்டான்.

சகோதரரே! நீங்கள் பாவசங்கீர்த்தனஞ் செய்யப் போனபோது சர்வேசுரனுடைய இரக்கத்தை உங்கள் சொந்த அநுபவத்தில்: உங்கள் மனது சாக்ஷியாய் நிற்க, நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். சேசுநாதர் எவ்வளவு தயவோடு உங்களைப் பொறுத்திருக்கிறார் என்று உங்கள் மனதில் சார உணருகிறீர்கள். இந்த இரக்கம் எவ்வளவாக அவருடைய திரு இருதயத்தில் உங்கள்பேரில் இருக்கிறதென்று நீங்கள் நன்றாய் அறியவேண்டும். ஊதாரிப் பையன் உவமையை நீங்கள் கவனமாய் கேட்டுப் படித்தால் இதை ஒருவாறு அறியலாம். இந்த அறிவு உங்களுக்கு எந்தக் காலத்திலும், உடலில் உயிர் தங்குமட்டும், பிரயோசனமாயிருக்கும். மரியே! இரக்கத்தின் தாயே! உமது தேவ குமாரன் சேசுநாதருடைய இருதயத்தில் பாவிகளான எங்கள்பேரில் எவ்வளவு தயையும் இரக்கமும் இருக்கின்றதென்று நாங்கள் கொஞ்சமாகிலும் அறியும்படி எங்களுக்காக சேசுநாதரை வேண்டிக்கொள்ளும்.

முதல் பாகம்

ஓர் தகப்பன் இருந்தான். அவனுக்கு இரண்டு பிள்ளைகள்.* மூத்த மகன் நற்குணசாலி, தகப்பன் சொற்படி தவறாமல் நடப்பவன். வீட்டின் வேலையைக் கவனித்து நன்றாய் நடத்திவந்தான். இளைய பையன் தகப்பனுக்குக் கீழ்ப்படியாமலும், தன் வேலையைக் கவனியாமலும் துஷ்டரோடு சேர்ந்து நடந்தான். ஒரு நாள் இளையவன் தகப்பனிடம் போய்: அப்பா! நான் உங்கள் வீட்டில் இருக்க மாட்டேன், தேசாந்தரம்போய் பிழைக்கப்போகிறேன். ஆனபடியால் எனக்கு வரவேண்டிய சொத்தின் பாகத்தைப் பிரித்து எனக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டான். விர்த்தாப்பியனான தகப்பன் இந்த வார்த்தையைக் கேட்டதும், தன் தலைமேல் இடி விழுந்ததுபோல் பதைத்துத் துடித்து: அப்பா, மகனே! நமது வீட்டைவிட்டுப் போகவா? யார் உன்னை ஆதரித்துக் காப்பாற்றுவார்? நான் உனக்கு என்ன பொல்லாப்பு செய்தேன்? இந்த துர்ப்புத்தி யார் உனக்குச் சொன்னவன், என்று பலவாறாய்ப் பேசினான். மகன் பிடிவாதமாய்: நான் வெளியே போவேன், என் பாகத்தைக் கொடுங்கள், என்று அலட்டிக் கேட்டான். தயாள குணமுள்ள தகப்பன் அவனுக்குச் சேரவேண்டிய பாகத்தைப் பிரித்துக் கொடுத்தான். பையன் பணத்தை எல்லாம் வாரிக்கொண்டு, தூரதேசம் போய், பெரும் ஊதாரியாய் கையிலிருந்த காசை எல்லாம் குடியிலும், சூது விளையாட்டிலும், துன்மார்க்கத்திலும் இறைத்தான். இவன் கையில் பணமிருக்குமட்டும் பல துஷ்டர் இவனுக்குச் சிநேகிதராய் வந்து கூடி, காலைப் பிடித்த அட்டை இரத்தத்தை உறிஞ்சுவதுபோல், இவன் பணத்தை எல்லாம் தட்டிப் பறித்துக்கொண்டு இவனை அந்தரத்தில் விட்டு ஓடிப்போனார்கள்.

கொஞ்சநாளைக்குள் ஊதாரி கையில் காசின்றி பிச்சைக்காரனானான். குனிந்து வேலைசெய்ய இவனாலே சாத்தியப்படவில்லை. குடிக்க கஞ்சியில்லாததால் ஊருக்கு வெளியே

* லூக்காஸ் 15-ம் அதி. 11-32 வசனங்களைக் கவனமாய் வாசிக்கவும்.

பன்றிகளை வைத்திருந்த குடியானவனிடம் போய் அவன் காலில் விழுந்து: ஐயா, சாமி! நான் உன் பன்றிகளை மேய்க்கிறேன், எனக்கு கொஞ்சம் கஞ்சி ஊற்று என்று கெஞ்சிக் கேட்டான். அவனும் இரங்கி நல்லது என்று கஞ்சி ஊற்றி பன்றிகளை மேய்க்க அனுப்பினான்.

ஊற்றின கஞ்சியும் இவன் பசியை ஆற்ற போதவில்லை. ஆனதால் பசியின் கொடுமையைப் பொறுக்கமாட்டாமல் பன்றிகள் தின்னும் தவிட்டைத் தின்ன ஆசித்தான், ஆனால் அதுவும் இவனுக்குக் கிடைக்கவில்லை. இப்படி கஷ்டப்பட்டு வரும்போது ஒருநாள் மரத்தடியில் உட்கார்ந்து தகப்பன் வீட்டை நினைத்து கண்ணீர் வடிந்தோட அழுதுகொண்டு சொல்வான்: ஐயோ! என்ன நிர்ப்பாக்கியம்! இவ்வளவு மூடத்தனமாய் நடந்தேனே! என் தகப்பன் வீட்டில் நான் செல்வமாய் வாழ்ந்தேனே! இங்கே பன்றி தின்னும் தவிடு முதலாய்க் கிடையாமல் பசியால் சாகிறேனே! எவ்வளவு வித்தியாசம்! இக்ஷணமே, நான் எழுந்து என் தகப்பன் வீட்டுக்குப் போவேன். தகப்பன் காலில் விழுந்து: அப்பா! இனி நான் உங்கள் பிள்ளை அல்ல. உங்கள் ஊழியர்களில் என்னை ஒருவனாக ஏற்றுக்கொண்டால் போதும், என்று சொல்வதாக மனதைத் திடப்படுத்தி தகப்பன் வீட்டை நோக்கி பன்றிகளை விட்டுத் திரும்பினான்.

இவனது தகப்பன் பிள்ளை போன நாள்முதல் என்ன செய்தானென்று நினைக்கிறீர்கள்? போன நாள்முதல் அவன்மேல் ஏக்கமாய் அன்னபானமின்றி, கண்ணில் தூக்கமின்றி, மகனை நினைத்து நினைத்து துக்கப்பட்டு வந்தான். ஊழியர்களை நாலுபக்கமும் அனுப்பி மகனைப் பார்த்தால் கையோடு கூட்டிவரும்படி கட்டளை கொடுத்தான். தன் வீட்டின் மேல்மாடியில் ஏறி என் மகன் தகப்பனை நினைத்து வரமாட்டானோவென்று நாலு திசையிலும் ஆவலோடு சுற்றிப் பார்ப்பான்.

ஒருநாள் தூரத்திலே ஒரு வாலிபன் கந்தை உடுத்தி, கால் ஊன்றி நடக்க சக்தி இன்றி, உருமாறி நிறமாறி, உடல் கூனி, வருவதை விர்த்தாப்பியனான தகப்பன் பார்த்தான்.

பார்த்ததும் ஆ! இவன்தான் தன் பிள்ளை என்று அறிந்து அவனுக்கெதிரே விரைந்து ஓடினான். ஊதாரிப் பையன் விம்மி தேம்பி அழுது தகப்பன் காலில் விழுந்து: தகப்பனே! பரலோகமும் பூலோகமும் சாட்சியாய்ப் பார்த்திருக்க நான் உங்களுக்குத் துரோகஞ் செய்தேன். இனிமேல் உங்கள் குமாரனென்றழைக்கப்பட நான் பாத்திரனல்ல. உங்கள் வேலைக்காரரில் கடைசி வேலைக்காரனைப் போல என்னை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்வதைக் கேட்ட தகப்பன், மகனை வாரி தூக்கி மார்போடு சேர்த்து அணைத்து: மகனே! அப்படி அல்ல. நீ என் பிள்ளை, வா என்று வீட்டுக்குக் கூட்டிவந்து மகனுக்கு உடுத்த வஸ்திரமும், விரலுக்கு மோதிரமும் கொடுக்கச் செய்தான். பெரிய விருந்து செய்து தன் பந்துக்கள், சுற்றத்தார், மித்திரர் இவர்களை அழைத்தான். சங்கீத மேளவாத்திய முழங்க எல்லாரும் விருந்து சாப்பிடும் போது, மூத்த மகன் கிராமத்துக்கு வேலையாய்ப் போயிருந்தவன், சாயரக்ஷை வீட்டுக்கு வந்தான். வீட்டில் ஏக சந்தடியாயிருப்பதைப் பார்த்து இதின் காரணம் அறியாமல் திகைத்து நின்று, பின் அங்கே நின்ற ஊழியனிடத்தில் இதின் விபரமேதென்று கேட்டான். அதற்கு ஊழியன்: ஐயா! இதென்ன காலாகோலம்! உங்கள் தம்பி பணத்தை எல்லாம் வாரிக்கொண்டுபோய் வீணிலே இறைத்தபின்பு, இன்று வீட்டுக்குக் கையிலே காசின்றி திரும்பி வந்தார். உங்கள் தகப்பனார், காணாமற்போன மகன் திரும்பி வந்துவிட்டாரென்று இவ்வளவு ஆடம்பரம் செய்திருக்கிறார் என்று சொன்னான். மூத்தவன் தகப்பனைப் பார்த்து: அப்பா! இதென்ன காலக்கொடுமை! நான் இத்தனை வருஷகாலம் வீட்டிலே பிரமாணிக்கமாய் வேலை செய்துவருகிறேன். எனக்காக ஓர் நாளாவது விருந்து செய்ததே இல்லை. அந்த ஊதாரி, பணத்தைக் கொண்டுபோய் பாழாக்கித் துன்மார்க்கனாய் 'வீட்டுக்கு வந்தான். அவனுக்காக இவ்வளவு கொண்டாட்டமா? ஏன் இப்படி? என்று முறைப்படும்போது, தகப்பன் அவனைத் தேற்றிச் சொல்வான்: மகனே! நீ எப்போதும்

என் வீட்டிலே இருக்கிறாய். என் வீடு, உன் வீடு. என் சொத்து, உன் சொத்து. உன் தம்பியோ, வீட்டைவிட்டு வெளியே போய், அலைந்து திரிந்து, வாடி மெலிந்து, வீட்டுக்கு வந்ததால் அவனுக்கு நல்ல சாப்பாடு கொடுக்க வேண்டாமா? வா, நீயும் கூட, என்று அவனைக் கூட்டிப் போய் எல்லாரும் பந்தியில் அமர்ந்து சந்தோஷமாய் சாப்பிட்டார்கள்.

சகோதரரே! இந்த அற்புத உவமையை யார் கண் கலங்காமல் கேட்பார்? இதில் உள்ள அர்த்தம் தானாய் எவர்க்கும் புலப்படும். இதிலே குறித்த தகப்பன் சேசுநாதர்சுவாமிதான். ஞானஸ்நானம் பெற்றவர்கள் சேசுநாதருடைய பிள்ளைகள். அவருடைய இராச்சியத்திற்கும் பேறுபலன்களுக்கும் பூரண சுதந்தரம் பெற்றவர்கள். இவர்களில் மூத்த மக்கள் யார்? யார் என்றால், சேசுநாதர் சுவாமிக்கு எந்த நாளிலும் பிரமாணிக்கந் தவறாதவர்கள். ஞானஸ்நானத்தின் இஷ்டப்பிரசாதத்தைச் சாவான பாவத்தால் ஒருபோதும் இழக்காதவர்கள். அர்ச். ஸ்தனிஸ்லாஸ், ஞானப்பிரகாசியார், பெர்க்மான்ஸ் முதலிய பாக்கியவான்களைப்போல் பாவ மாசின்றி நடந்த சீரமுள்ள சம்மனசுகள். இளைய பிள்ளைகள் யாரென்றால், சேசுநாதருக்குப் பிரமாணிக்கம் தப்பி, மனதுபோல் நடக்க பாவத்தைத் தேடிப்போனவர்கள். நீங்கள் சற்றே நின்று உங்களைக் கவனித்து சோதித்துப்பாருங்கள். ஒவ்வொருவனுந் தன்னைப் பார்த்து: நான் இதுமட்டுஞ் சாவான பாவம் செய்யாமல் சேசுநாதர்சுவாமிக்குப் பிரியமுள்ள பிள்ளையாய் அவர் ஊழியத்தில் இருந்தேனோ அல்லது என் துர் இச்சைப்பிரகாரம் நடக்க என் தகப்பன் வீட்டைவிட்டு பாவத்தைச் செய்தேனோ? என்று கேட்கட்டும். இப்படித் தன்னைச் சோதித்துக் கேட்டால் உங்களில் எத்தனை பேர்கள் நான் சேசுநாதர்சுவாமியின் மூத்த பிள்ளை, என் மனதறிய சாவான பாவத்தை ஒருபோதும் நான் செய்ததில்லை, என்று பயமின்றி துணிந்து சொல்வீர்கள்? ஐயோ! உனக்கு ஏழு வயது, பத்து வயது வருமுன்னே, தேவ இஷ்டப்பிரசாதத்தின் பிரயோசனமும் அதின்

மேன்மையும் அறியுமுன்னே, நீ உன் பாவத்தால் அதை இழந்தாயல்லவா? ஊதாரியைப்போல் நீ உன் அன்புள்ள தகப்பன் சேசுநாதரிடத்தில் போய்: சுவாமி! உமக்கு நான் பிள்ளையாய் உமது வீட்டிலிருக்கமாட்டேன். என்னைக் கொடுமையாய் நடத்துகிறீர். என் மனதுபோல் நான் நடக்காதபடி என் கைகளையுங் கால்களையுங் கட்டி இருக்கிறீர். என் சரீர சுக இன்பத்தை நான் தேடாதபடி தடுக்கிறீர். என் இந்திரிய சந்தோஷத்தை அடக்கவேண்டுமென்று கற்பிக்கிறீர். பாவசங்கீர்த்தனங் கசப்பான மருந்து. தபசு செய்ய என்ஞல் ஏலாது. இனி நான் உமது வீட்டிலிருக்கமாட்டேன். எனக்குச் சொந்தமான என் சரீரத்தையும் என் புத்தி மனதையும் எடுத்துக்கொண்டு என் இஷ்டம்போல் நடக்கப்போகிறேன், என்று நீ சொல்லவில்லையா?

உன் தகப்பன், சேசுநாதர், அப்போது உன் மனதில் சொன்னதை நீ மறந்தாபோனுய்? ஆ! மகனே! நான் கொடுமையுள்ள தகப்பனென்று சொன்னுய்? என்னைப்போல் பட்சமுள்ள தகப்பன் எங்கே இருக்கிருர்? உனக்காக நான் என் உயிரைக் கொடுக்கவில்லையா? உன்னைத் தேடி நான் அலைந்து திரியவில்லையா? என் மாம்ஸத்தையும், என் இரத்தத்தையும் உனக்குப் போஜனமாக நான் ஊட்டவில்லையா? என் வீட்டில் எனக்குப் பிள்ளையாயிருக்கையில் உன் மனதில் எவ்வளவு சமாதானம், எவ்வளவு ஆனந்தம் பூரணமாய் நிறைந்திருந்தது.

இப்படியாய் சேசுநாதர்சுவாமி சொன்ன துயரம் நிறைந்த வார்த்தைகளை நீ மீறி, அவர் முகத்தை முறித்துக்கொண்டு தூர தேசமாகிற பாவ தேசத்துக்குப் போனுய். தேவ இஷ்டப்பிரசாதத்தையும் உன் புண்ணிய பேறுகளையும் இழந்தாய். மோக்ஷ சுதந்தர உரிமையை விற்றுப்போட்டாய். பாவத்தின்மேல் பாவத்தைக் கூட்டினுய். உன் சரீர சுக சந்தோஷத்தை மிதந்தப்பி அநுபவிக்க பசாசுக்கு உன்னைக் கையளித்தாய். பசாசுக்கு அடிமையானுய். மிருக இனத்திலுந் தாழ்ந்தாய்.

ஓ! தகப்பன் வீட்டில் செல்வமாய் வாழ்ந்த பையன் எப்படி இப்போது உருக்குலைந்து நிறமாறி அடிமையானான்! மிகுந்த பிரகாச ஒளியோடு துலங்கிய சுய பொன் இப்போது எவ்விதம் மங்கி குன்றி ஒளி இழந்தது!

அடா! ஊதாரிப் பையா! ஏன் மதிகெட்டு இப்படி தகப்பன் வீட்டைவிட்டு வந்தாய்? ஏன் இந்தப் பரதேசிக் கோலம்? சம்மனசுகளுடன் தேவ பந்தியில் உட்கார்ந்து தேவாமிர்த போஜனஞ் செய்த நீ, இப்போது பன்றிகளை மேய்த்த ஊதாரிப்பிள்ளையைப்போல் பாவியாய் இருப்பது உனக்குச் சம்மதமோ? உன் இஷ்டப்பிரசாத ஆடை எங்கே? நீ பிரயாசப்பட்டு சம்பாதித்த புண்ணியப் பலன்கள் எங்கே? உன் மனதிலிருந்த மோக்ஷ சந்தோஷம் எங்கே? எல்லாவற்றையும் இழந்துபோனாய். ஐயோ! ஊதாரி! போனது போகட்டும், எழுந்திரு, உன் தகப்பனைத் தேடிப்போ, அவர் பாதத்தில் விழுந்து பொறுத்தல் கேள்.

அப்படியே ஊதாரியும் எழுந்து தகப்பனைக் தேடிப் புறப்படுகிறான். நீங்களும் இன்று சேசுநாதர் பாதத்தில் வந்து சேர்ந்தீர்கள்.

இரண்டாம் பாகம்

சகோதரரே! ஊதாரி தன் தகப்பன் வீட்டுக்கு வந்தபோது, தகப்பன் மகனை எவ்வளவு அன்பாய் ஏற்றுக் கொண்டானென்று முதல் பாகத்தில் கேட்டீர்கள். சேசுநாதர்சுவாமி தம்மைத் தேடிவருகிற பாவிகளை இவ்வளவு தயாள அன்போடு சேர்த்துக்கொள்வாரோவென்று சந்தேகப்படுகிறீர்களோ? அப்படியானால் சேசுநாதர் இருதயத்தின் சிநேகப் பெருக்கம் எவ்வளவென்று கேளுங்கள். உவமையில் சொன்ன தகப்பன் தன் மகன்பேரில் ஏக்கமாயிருந்து, வழியை வழியைப் பார்த்தானேயன்றி அவனைத் தேடி ஊர் ஊராய் அலையவில்லை. சேசுநாதர்சுவாமியோ, பாவி தம்மை விட்டுப்போன நாள்முதல், அவன்மேல் கண்ணுங்கவலையுங் கருத்துமாயிருந்தது மாத்திரமல்ல. அவ

னைத் தேடிக் கூப்பிட்டு அவன் போகும் இடமெல்லாம் அலைந்து சுற்றிப்போகிறார். நூறு ஆடுகள் மந்தையிலிருக்க அவைகளில் ஒன்றுமாத்திரம் காணாமல் போக, மந்தை ஆயன், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மந்தையில் விட்டு, காணாமல்போன ஒரு ஆட்டைமாத்திரந் தேடி அலைந்தானென்று தம்மைப்பற்றி சேசுநாதர் சொல்லவில்லையா? மோக்ஷ இராச்சியத்தில் சகலவித பாக்கியங்களையும் சம்பூரணமாய் அநுபவிக்கும் சர்வேசுரன், தாம் இருந்த பாக்கியானந்தம் எல்லாம் விட்டு, இந்தப் பூமியில் மனுஷ சரீரம் எடுத்து யாரைத் தேடிவந்தார்? முப்பத்து மூன்று வருஷங்களாய் யாரைத் தேடி அலைந்தார்? இன்னமும் தேவநற்கருணையில் ஊர் ஊராயிருந்து யாருக்காக காத்திருக்கிறார்? தமது வீட்டைவிட்டு, என்ன சொல்லியுங் கேளாமல், ஓடிப்போன பாவியைத் தேடி அல்லவா அப்படிக் காத்துக்கொண்டிருக்கிறார்.

உன்னைத் தேடி அல்லவா தமது சம்மனசுக்களையும் குருக்களையும் நாலு பக்கமும் அனுப்பினார். வருந்தி உழைத்து பார சுமையைச் சுமந்து நடக்கிறவர்களே, நீங்கள் எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களைத் தேற்றுவேன், என்று சொல்லும் மதுர வார்த்தைகள் எல்லாருடைய காதிலேயும் எப்போதும் சப்திக்கிறதல்லவா?

சகோதரரே! நீங்கள் எத்தனைபோவிசை இந்தச் சப்தத்தைக் கேட்டிருக்கிறீர்கள்? உலக ஆரபார சந்தடி மத்தியிலேயும், இன்ப சுகமாகிற பெருஞ் சுழலிலும், துர்க்குண ஆசாபாசங்கள் புகைபோல் சூழ்ந்து எழும்பி உங்கள் மனதிலே மூடியிருந்த அர்த்த இராத்திரியிலும், உங்கள் தகப்பனுடைய குரல் சப்தம் உங்கள் காதில் விழுந்தது. எத்தனைவிசை இந்தச் சப்தத்தைக் கேட்டு உங்கள் தகப்பன் சேசுநாதர்சுவாமி பாதத்தில் வந்தீர்களோ, அத்தனை விசையும் உங்களை அவர் தயவாய் ஏற்று ஆசீர்வதித்து உங்களுக்குப் பாவ மன்னிப்பும் சமாதானமும் கொடுத்திருக்கிறார். இழந்துபோன இஷ்டப்பிர

சாதத்தையும், நீங்கள் சம்பாதித்திருந்த புண்ணிய பேறு பலன்களையும் திரும்பவும் உங்களுக்குத் தந்தார்.

நீங்கள் சேசுநாதரிடத்தில் திரும்பி வந்ததின் நிமித்தம் மோக்ஷத்திலே எவ்வளவான ஆனந்தம உண்டானதென்று நீங்கள் அறிந்தால் ஆச்சரியப்படுவீர்கள். ஒரே ஒரு பாவி மனந்திரும்பினால் அவன் நிமித்தம் மோக்ஷத்தில் பெரிதான சந்தோஷம் உண்டாகும் என்று சேசுநாதர் தாமே சொல்லியிருக்கிறார்.

ஊதாரி வீட்டிற்குத் திரும்பி வந்ததால் அவன் தகப்பன் பெரிய விருந்து செய்தான். சேசுநாதர்சுவாமி செய்யும் விருந்தோ எப்படிப்பட்டதென்று மூன்றாம் பாகத்தில் சொல்வோம்.

மூன்றாம் பாகம்

உலகத்தில் மனிதர் தங்கள் பந்து ஜனங்கள் இஷ்டாள்களுக்கு ஓர் சுபதினத்தில் விருந்து செய்தால், காய் கறி முதலிய பதார்த்த வகைகளைச் சித்தஞ்செய்து திருப்தியான போஜனங் கொடுப்பார்கள். நமது அன்புள்ள இரக்ஷகர் தமது பிள்ளைகளுக்குச் செய்யும் விருந்தோ, அற்புதமான விருந்து, மோக்ஷ மதுரம் நிறைந்த சம்மனசுகளின் போஜனம். வெளிப் பதார்த்தங்களைத் தேடாமல் தம்முடைய மாம்ஸத்தையும் இரத்தத்தையும், அப்பத்தின் வெளித்தோற்றத்தில் வைத்து தம்மையே போஜனமாகக் கொடுக்கிறார். தாய் தன் பிள்ளை வளர்ந்து பலங்கொண்டு சௌக்கியமாய் இருக்கும்படியாய், தன் இரத்தத்தை வெண்மையான பாலாக மாற்றி பிள்ளைக்கு ஊட்டுகிறாள். சேசுநாதர்சுவாமியோ, தாயினும் அதிக பட்சத்தோடு தம்மை முழுதும் தமது பிள்ளைகளுக்குக் கொடுக்கிறார்.

சகோதரரே! நாளைக்கு நீங்கள் தேவ பந்தியிலிருப்பீர்கள். இன்று உங்கள் தகப்பன் சேசுநாதர்சுவாமி நீங்கள் செய்த பாவசங்கீர்த்தனத்தில் உங்கள் பாவங்களை எல்லாம் தயவாய் மன்னித்திருக்கிறார். இஷ்டப்பிரசாத

மாகிற தேவ ஆடையையும் புண்ணியங்களின் பலன்களா கிற ஆபரணங்களையும் உங்களுக்குத் தயவாய் திரும்பவும் கொடுத்திருக்கிறார். நாளை அவர் உங்களுக்காக செய்திருக் கும் தேவ விருந்தை சாப்பிடும்படி சம்மனசுகள் மத்தியில் போவீர்கள். இந்த அற்புத போஜனம் உங்களுக்கு நன்மையும் பலனும் உள்ளதாயிருக்கும்படி, ஆசையோடும் சிநேகத்தோடும் போவது அவசியம். பசியோடு சாப்பிடும் உணவுதான் சரீரத்தில் சார்ந்து சௌக்கியங் கொடுக்கும்.

சேசுநாதர்சுவாமி இன்று உங்களுக்கு காட்டும் அணை கடந்த சிநேகத்தை ஒருபோதும் மறந்துபோகவேண்டாம். தகப்பன் வீட்டுக்கு எந்த நாளிலும் நீங்கள் திரும்பி வந்தால் அவர் உங்களை அன்போடு ஏற்றுக்கொள்வா ரென்று உங்கள் மனதில் வயிர எழுத்துக்களால் பதி யுங்கள். உடலிலே உயிர் இருக்குமட்டும் ஒருபோதும் அவநம்பிக்கை என்பது வரவே கூடாது. இந்த உவமை யில் நீங்கள் படிக்கவேண்டிய முதல் புத்தி இதுதான்.

இரண்டாம் புத்தி ஏதெனில்: உங்கள் தகப்பன் வீட் டில், சேசுநாதரோடு இருந்தால் மாத்திரந்தான் உங்களுக்கு மெய்யான பாக்கியம், குறையில்லாச் சந்தோஷம், பூரண திருப்தி உண்டாகும். உங்கள் தகப்பன் வீட்டிலிருந்தால் மாத்திரம் உங்களுக்கு மகிமையும் பெருமையும் உண் டாகும். சேசுநாதர்சுவாமிக்குப் பிரமாணிக்கத்துடன் ஊழியஞ்செய்து, தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்திலிருப்ப வர்கள்தான் எதார்த்தமாக பாக்கியவான்கள். உங்கள் தகப்பன் வீட்டை விட்டு உலகத்துக்கும் சரீரத்துக்கும் ஊழியஞ் செய்யப்போனால், உங்களுக்குத் துன்பத்தின் மேல் துன்பம் வரும். அவமானமும பெரும் நஷ்டமும் உண்டாகும்.

இந்த இரண்டு புத்திகளும் எப்போதும் உங்கள் மனதி லிருக்கட்டும். உலகம் உங்களைக் கெடுக்கும்படி பொன் வெள்ளியையும், மகிமை உத்தியோகத்தையும், பெருமை சிலாக்கியத்தையும் உங்கள் கண்முன் விரித்து, எனக்கு ஊழியஞ் செய், இதுவெல்லாம் உனக்கு நான் கொடுப்பே

னென்று சேசுநாதர்சுவாமியை ஏய்க்கப் பார்த்ததுபோல் உங்களை ஏய்க்கக் கூப்பிடும். நம்பவேண்டாம். எல்லாம் பொய். கெட்ட தோழர்கள் உன் கையில் பணமிருக்கு மட்டும், உன்னைச் சுற்றி வந்து இங்கித மொழிகளால் வஞ்சகம் பேசி உன்னைப் பசப்புவார்கள். அவர்கள் வார்த்தையில் நஞ்சு இருக்கின்றது. மோசம் போகாதே. உன் சரீரமே உன் ஜன்ம சத்துருவாய் உன்னிடத்தில் கிரமந் தப்பின சந்தோஷத்தைக் கேட்கும். அதன் இச்சையின் படி இணங்காதே. உன் தகப்பன் வீட்டை விட்டு வெளியே போய் பாக்கியந் தேடித் திரியாதே. என் சர்வேசுரா! நீரே எனக்குத் திருப்தி தரும் போதுமான பாக்கியம். உம்மையன்றி வேறு யாரிடத்திலும் நான் இனிமேல் பாக்கியந் தேடமாட்டேன்.

நமதாண்டவர் சொன்ன இந்த அற்புத உவமையில் இன்னும் ஒரு விசேஷமிருக்கிறது. ஊதாரிப் பையன் வீட்டை விட்டுப் போகும்போது அவன் தாய் அப்போது இருந்தாளோ இல்லையோ என்பதைப்பற்றி சேசுநாதர் ஒன்றுஞ் சொல்லவில்லை. அவன் தாய் வீட்டிலிருந்தால் பையன் தாயார் முகத்தை முறித்துப்போகத் துணிய மாட்டான். உங்களுக்கோ, ஓர் தாய், அவளும் மோக்ஷ தாயாயிருக்கிறாள். இந்த தேவதாயின் மனதை மறுத்துப் போவது நல்ல பிள்ளைகளுக்கு வருத்தமாயிருக்கவேண்டும்.

ஆனபடியால் உங்களுக்கு எந்த நாளிலாவது சேசுநாதர்சுவாமியைவிட்டு பாவத்தைத் தேடிப்போக யோசனை வந்தால், உங்கள் அன்புள்ள தாயான தேவதாயை நினையுங்கள். அந்தத் தாயின் அடைக்கலமாய்ப் போங்கள். அந்த நல்ல தாய் உங்களுக்காக தனது தேவகுமாரனிடம் பிரார்த்திப்பாள். உங்கள் ஜீவிய காலமெல்லாம் சேசுநாதர் சுவாமிக்குப் பிரமாணிக்கமாய் ஊழியஞ்செய்து, சந்தோஷமாய் மரித்து மோக்ஷத்துக்குப் போவீர்கள்.

நாலாம் நாள் ஞானபோதகம்

பாவசங்கீர்த்தனத்துக்கு அவசியமான குணங்கள்*

வைத்திய நூலில் சமர்த்தனான ஒருவன் குஷ்டந்தீர ஓர் கைகண்ட தைலம் செய்ய உத்தேசித்து, அதற்காக விஷம் நிறைந்த விரியன் குட்டிகளை உயிரோடு பிடித்து வரும்படி ஓர் ஊழியனை அனுப்பினான். அவன் மீன் காரன் கொண்டுபோகும் கூடுபோல், ஓர் கூட்டை எடுத்துக் கொண்டு காடு கரைகள் எங்கும் சுற்றி அலைந்து, புற்று புதர்களெல்லாஞ் சோதித்து, கடைசியாய் இருபது பாம் புக்குட்டிகளைப் பிடித்து கூட்டில் அடைத்து தன் எஜமான் வீட்டுக்குச் சாயரட்சையில் வந்து சேர்ந்தான்.

வைத்தியன் சந்தோஷமடைந்து, அந்தக் கூட்டைத் தான் படுத்திருந்த அறையில் வைத்து, அவனும் அங்கேயே இராத்திரி படுத்திருந்தான். அந்தக்காலம் குளிர்காலமானதால், பாம்புக்குட்டிகள் வெளியேவர கூட் டைச் சுற்றிலும் வழி பார்த்துக்கொண்டிருக்கையில், அதின் வாய்க்கட்டு ஓரிடத்தில் தளர்ந்திருப்பதைக்கண்டு அதன் வழியாய்க் குட்டிகள் எல்லாம் ஒன்றுக்குப்பின் ஒன்றாய் வெளிப்பட்டு, சமீபத்தில் ஓர் கம்பளத்தில் படுத் திருந்த வைத்தியனைச் சுற்றி உஷ்ணத்துக்காக வந்திருந் தன. வைத்தியன் ஏதோ தன்கிட்ட நழுவுகிறதாக உணர்ந்து திடுக்கென்று விழித்தான். பாம்புக்குட்டிகள் தன்னைச் சூழ்ந்து இருப்பதைக்கண்டு பயந்து கலங்கினாலும் புத்தியைச் சிதறவிடவில்லை. தன் ஊழியனைக் கூப்பிட் டெழுப்பி உடனே பசுவின் பால் கொண்டுவந்து தன் முன் நன்றாய்க் காய்ச்சும்படி சொன்னான். பாலின் வாசனை யைப் பாம்புக்குட்டிகள் நுகர்ந்ததும், பாலைக் குடிக்க

---

* விவரம். இந்தப் போதகத்தை இன்று பாவசங்கீர்த்தனஞ் செய்யுமுன் வாசிப்பது, நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்யும்படி வெகு அநுகூலமாயிருக்கும்.

ஆசையாய் குட்டிகளெல்லாம் பாலிருந்த பாத்திரத்தைத் தேடிப் போயின. வைத்தியன் தப்பினேன் என்று உடனே எழுந்து ஒரு குறட்டால் ஒவ்வொன்றாய்ப் பிடித்து தலையை நசுக்கி கொன்றுபோட்டு தன் உயிரைக் காப்பாற்றினான்.

சகோதரரே! சாவான பாவம் விஷமுள்ள பாம்பு. எத்தனை பாவங்கள் உன் ஆத்துமத்தில் இருக்கின்றதோ அத்தனை பாம்புக்குட்டிகள் உன் ஆத்துமத்தைச் சுற்றி சூழ்ந்து இருக்கின்றன. இவைகளில் ஒரே ஒரு சாவான பாவமாத்திரம் ஆத்துமத்தின் உயிரைக் கொன்று நரக பாதாளத்தில் உன்னைத் தள்ளப் போதுமானது.

பாவியின் ஆத்துமத்தில் பாவங்களாகிற விஷப்பாம்புகள் சூழ்ந்து நிறைந்திருக்கும்போது, இவைகள் வெளியே வரும்படி என்ன செய்யவேண்டும் என்று நீங்கள் கேட்பீர்கள். வைத்தியன் செய்ததுபோல், இதற்கென்று சேசுநாதர்சுவாமி ஏற்படுத்திய அற்புத குணங்கள் அமைந்த பாலை காய்ச்சவேண்டும். இந்தப் பால் இன்னதென்று நாம் சொல்லுமுன்னே உங்களுக்குத் தெரியும். பாவசங்கீர்த்தனத்தை நன்றாய்ச் செய்தால், பாவங்கள் எல்லாம் வெளியே வரும், தலை நசுங்கி இருந்த இடம் தெரியாமல் போகும், ஆத்துமம் சுகம் அடையும்.

நேற்று செய்த போதகத்தில், பாவசங்கீர்த்தனம் எந்த அந்தஸ்திலுள்ள கிறீஸ்துவர்களுக்கும் வெகு பிரயோசனமுள்ளதென்றும், அதைச் செய்யாதபடி கிறீஸ்துவர்கள் சொல்லும் பல போக்குகள் நியாயமற்றதென்றும், விரிவாய் விவரித்தோம. இன்று நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்யும்படி அவசியமான இன்றியமையாத குணங்கள் எவை என்று காண்பிப்போம்.

சகோதரரே! பாவிகளான நமக்குப் பாவசங்கீர்த்தனம் ஒன்றுதான் இரக்ஷணிய பாதையானதால், இதை நன்றாய் அறிவது நமக்குக் கடமை. தேவதாயார் கிருபை வைத்து நாம் இப்போது சொல்லும் புத்தி எல்லாருக்கும் பிரயோசனமாகும்படி தயை செய்வாளாக!

முதல் பாகம்

கொடும் ஜுரத்தால் வருத்தப்படுகிறவனுக்கு வைத்தியன் மாத்திரை கொடுத்து அதை வெந்நீரில் உரைத்துச் சாப்பிடச் சொல்லியிருக்க, அவன் அதை வெந்நீரில் சாப்பிட்டால் கசக்குமென்று பாலில் போட்டு குடிப்பாளுகில், அவனுக்குச் சௌக்கியம் வராமல் வியாதி பலங்கொண்டு சாவான். அப்படியே பாவசங்கீர்த்தனமாகிற தேவ ஔஷதம் உன் ஆத்துமத்துக்குக் குணங்கொடுக்கவேண்டுமாகுல், அதைக் கொடுக்கும் சேசுநாதர் என்ன ஏற்பாடு செய்திருக்கிருரோ, என்ன பக்குவத்தோடு அதைப் பிரயோகிப்பது அவசியமென்று அறிவித்திருக்கிருரோ, அந்த ஒழுங்கோடு செய்தால்தான் பாவப்பொறுத்தல் பெறலாம். இல்லாவிடில் பாவசங்கீர்த்தனம் ஆத்துமத்துக்கு நஞ்சாக மாறிப் பெரும் மோசம் உண்டாகும்.

பாவசங்கீர்த்தனம் நன்ருய்ச் செய்யும்படி ஐந்து காரியங்கள் அவசியமென்று எல்லாரும் படித்திருக்கிறீர்கள். இந்த ஐந்து விஷயங்களையும் நாம் இப்போது விவரிக்கப் போகிருேம். அவைகளில் முதல், அவனவன் பாவசங்கீர்த்தனம் செய்யுமுன், தானே தன்னுடைய பாவங்களை எல்லாம் சோதித்துப்பார்த்து, அவைகள் இன்னதென்றும், எத்தனையென்றும், எந்த விஷயங்களோடு கூடிச் சேர்ந்ததென்றும் நன்ருய் அறிவது அவசியம்.

சாதாரணமான பாவசங்கீர்த்தனத்தில், இதற்குமுன் நீ செய்த பாவசங்கீர்த்தனமுதல் இதுமட்டும் செய்த பாவங்களைக் கணித்துப்பார்க்கிறது போதும். தியான நாளில் செய்யும் பொதுப் பாவசங்கீர்த்தனத்தில் உன் ஜீவிய நாளில் அல்லது போன பொதுப் பாவசங்கீர்த்தன முதல் இது மட்டும் நீ செய்த பாவங்களை எல்லாம் உன் மனதில் யோசித்து அறிகிறது அர்ச். இஞ்ஞாசியார் கொடுக்கும் புத்தி.

இவ்வித பொதுப் பாவசங்கீர்த்தனம், இதற்குமுன் நீ செய்த தனிப் பாவசங்கீர்த்தனங்களிலிருந்த குறைகளை நிவர்த்திசெய்து, உன் மனதுக்குச் சமாதானங் கொடுக்கும்.

பத்துக்கற்பனைகள், திருச்சபையின் கட்டளைகள், ஆகிய இவைகளுக்கு விரோதமாய் நீ செய்த பாவங்களை எல்லாம் ஒழுங்காயும் விவரமாயும் குறித்துக்கொள். உன் மனதாலும், வாக்காலும், கிரிகையாலும் செய்த பாவங்கள் இத்தனையென்று உத்தேசமாயாகிலும், ஒரு நாளில் அல்லது ஒரு வாரத்தில் சராசரியில் இத்தனை இருக்கலாம் என்றாகிலும் அறிந்துகொள். சாவான பாவங்களானால் அவைகளின் கணக்கும், அவைகளின் கனத்தையும், விஷத்தையும் அதிகரிக்கக்கூடிய விஷயங்களையும் சொல்வது அவசியம். அப்படியே திருடுவது— திருடின பொருளுக்கும் இடத்துக்கும் தகுந்ததுபோல், அற்பப் பாவமாகலாம் அல்லது கனமான பாவமாகலாம். மோக பாவத்தின் மட்டில் பல விஷயங்கள் சேரும்போது, ஒரே செய்கையில் பல பாவங்களிருக்கக்கூடும்.

பொதுப் பாவசங்கீர்த்தனஞ் செய்கிறவர்கள் ஒழுங்கான முறையோடு தங்கள் பாவங்களை எல்லாம் விவரமாய் நினைத்து ஞாபகத்தில் வைத்துக்கொள்வது முதல் புத்தி. இப்படி நினைத்தபின்பு அவைகளுக்காக மனஸ்தாபப்படுவது பாவசங்கீர்த்தனத்துக்கு அவசியமான இரண்டாம் குணம்.

மனஸ்தாபமென்பது பாவத்தினால் சர்வேசுரனுக்குத் துரோகஞ் செய்ததின் நிமித்தம், பாவத்தின்மீது மனதில் உண்டாகும் துக்கம், கிலேசம், சலிப்பு, விசனம், வெறுப்பு. துக்கம் மனதில் எதார்த்தமாயிருந்தால் இனிமேல் நான் சர்வேசுரனுக்கு இவ்வித துரோகம் செய்யமாட்டேன் என்ற ஸ்திரமான மனமும் இருக்கும். இந்த ஸ்திரமான மனதே பிரதிக்கினையாகும். சேசுநாதர்சுவாமி உன் பாவங்களையெல்லாம் பொறுக்கவேண்டுமானால், நீ அவருக்கு துரோகஞ் செய்ததால் உன் மனதில் துக்கப்பட வேண்டாமா? துக்கமின்றி மன்னிப்பேது?

மனஸ்தாபம் இரு வகைப்படும். தகப்பன் சொல்லை மீறி நடந்த பிள்ளை, தன் தப்பிதத்தை அங்கீகரித்து ஐயோ! சர்வ நன்மைச் சுரூபியாகிய உத்தம தந்தையை நான் மூடப்புத்தியால் நிந்தித்தேனே, என்று துக்கப்படு

வதுபோல நீயும் உன் நல்ல தகப்பனுன சர்வேசுரனுக்கு உன் பாவத்தால் துரோகம் செய்தாய் என்று துக்கப்பட்டால் இது உத்தம மனஸ்தாபமாகும். இப்படி இல்லாமல், தேவ மகத்துவமுள்ள சர்வேசுரனுக்கு நான் துரோகஞ்செய்தேனே! அவர் என்னை நரகத்தில் தண்டிப்பாரே! நான் என்ன செய்வேன் என்று, அடி தண்டனைக்குப் பயப்படும் ஊழியனைப்போல, நீ துக்கப்பட்டால், இது அடிமை மனஸ்தாபமாகும். சர்வேசுரனுடைய அளவில்லாத நன்மைத்தனத்தை நினைத்து, அவரை முழு இருதயத்துடன் சிநேகித்து, ஆ! சகல நன்மைச் சொரூபியாகிய இவ்வளவு நல்ல தகப்பனுக்குத் துரோகம் செய்தேனே என்று மனதில் உண்டாகும் வியாகுலம், உத்தம மனஸ்தாபம் என்று சொல்லப்படும்.* அடிமை மனஸ்தாபம் பயத்தோடு கூடியதாலும பாவசங்கீர்த்தனத்துக்கு இது போதுமானது.

---

* [**குறிப்பு:—உத்தம மனஸ்தாபம், அடிமை மனஸ்தாபம்,** இவ்விரண்டு வகை மனஸ்தாபத்துக்கும் வெகு தூர வித்தியாசம் உண்டு. உத்தம மனஸ்தாபத்தின் ஊற்று **உத்தம தேவ சிநேகம்;** அடிமை மனஸ்தாபத்தின் ஊற்று **தெய்வ பயம்,**—தேவ கோபாக்கினையை நினைத்துப் ப்டும் அச்சம். **உத்தம மனஸ்தாபம்** உடனே பாவத்தைத் தொலைத்துப்போடும். சூரியன் உதயமானதும் இராவிருள் நிலைத்து நிற்குமோ? இருந்த இடம் தெரியாமல் பறந்து போய்விடுமென்றே! அதுபோல், உத்தம தேவ சிநேகம் இருதயத்தில் உதயமான அக்ஷணமே, பாவ இருள் மாயமாய்ப் பறந்து மாய்ந்துபோகும். நெருப்பைக் கண்ட துரும்பு பிழைக்குமோ? பஸ்பமாய் நீற்றுப்போகுமன்றே! அதுபோலவே, உத்தம தேவ சிநேகாக்கினிச் சுடர் எந்த க்ஷணம் இருதயத்தில் உதித்ததோ, அந்த க்ஷணமே பாவமும் பஸ்பமாய் நீற்றுப்போகும். **உத்தம தேவ சிநேகமும் சாவான பாவமும்** இவ்விரண்டும் ஒரே சமயத்தில் அதே ஆத்துமத்தில் நிலைத்திருத்தல் கூடாத காரியம்; ஒன்றுக்கொன்று ஜென்ம சத்துரு,—ஒன்றை ஒன்று அகத்தியம் மாய்த்துவிடும். ஆனால் இதில் ஒரு விஷயம் நன்கு கவனிக்கவேண்டியது. மெய்யாகவே இருதயத்தில் உத்தம தேவ சிநேகமும் அதிலிருந்து உத்தம மனஸ்தாபமும் உண்டாயிருந்தபோதிலும், செய்த சாவான பாவத்தை ஒரு குருவினிடத்தில் சங்கீர்த்தனம் செய்யவேண்டிய

மனஸ்தாபம் எதார்த்தமாயும் பலனுள்ளதாயுமிருக்கும்படியாய் அது மனதுக்குள்ளே உற்பத்தியாகி, சர்வேசுரனைச் சார்ந்த காரணங்களால் உயிர்பெற்று, சகல சாவான பாவகைளுக்கும் பொதுவாயிருந்து, அநித்திய நன்மைகளை இழப்பதால் உண்டாகும் துக்கத்தைப்பார்க்க அதிகமாயும் இருப்பது இதற்குரிய நான்கு குணங்களாகும். இரண்டாம் பாகத்தில் பிரதிக்கினை இன்னதென்று விவரிக்கப்போகிறோம்.

இரண்டாம் பாகம்

எவன் எதார்த்தத்தில் தன் பாவங்களைப் பகைத்து வெறுத்து அவைகளின் நிமித்தம் துக்கப்படுகிறானோ, அவன் மனதில் இனிமேலாக இந்த அக்கிரமக் கிரிகை

கடமை கிஞ்சித்தும் நீங்கிப்போகிறதில்லை, அக்கடமை முற்றிலும் நிலைத்தேயிருக்கின்றது. கிறீஸ்துநாதரே இந்தக் கடமையை ஒவ்வொரு கிறீஸ்துவனுக்கும் சந்தேகமற விதித்திருக்கிறார். ஆகையால் மெய்யான உத்தம மனஸ்தாபத்தால், "குருவிடம் என் பாவத்தை சங்கீர்த்தனம் செய்வேன்" என்ற நல்ல மனமும் தீர்மானமும் உட்கருத்தாகவாகிலும் அமைந்திருப்பதவசியம். ஆதலால் சாவான பாவமுள்ள பாவி ஒருவன் உண்மையாகவே உத்தம மனஸ்தாபப்பட்டால், கூடியசீக்கிரம் குருவானவரைத் தேடிப் பாவசங்கீர்த்தனம் செய்யும்படி அவ்வுத்தம மனஸ்தாபமே அவனைத் தூண்டும். பாவசங்கீர்த்தனம் செய்ய அவன் மனமில்லாதிருந்தால், அல்லது அஜாக்கிரதையாயிருந்தால் அவனிடத்தில் உத்தம மனஸ்தாபமில்லையென்பது திண்ணம். பாவசங்கீர்த்தனம் செய்ய எதார்த்தமாய் ஆசித்தும், சமயம் கிடையாமல், உத்தம மனஸ்தாபத்தோடே அவன் மரித்தால், அவன் தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் மரித்தவன்; ஆகையால் நித்திய ஜீவன் அடைவான்.—**அடிமை மனஸ்தாபமோ**, இதுவும் நல்ல மனஸ்தாபந்தான்; நல்ல பாவசங்கீர்த்தனத்துக்குப் போதுபான மனஸ்தாபம். ஆனால் உத்தம மனஸ்தாபத்தைப்போல் உடனே சாவான பாவத்தைப் போக்கும் சக்தி அடிமை மனஸ்தாபத்துக்கில்லை. பாவசங்கீர்த்தனம் செய்து பாவப்பொறுத்தல் ஆசீர்வாதம் பெறும்போதுதான் சாவான பாவம் நீங்கும்.—(**பதிப்பாசிரியர்**).]

களைச் செய்யேன் என்னும் பிரதிக்கினையுமிருக்கும். மனஸ்தாபமும் பிரதிக்கினையும் ஒன்றுக்கொன்று ஆதாரமாய் நிற்கும் குணங்கள். இதினாலே எவன் இனி எந்தப் பாவத்தையும் மனதறியச் செய்யமாட்டேன் என்று பிரதிக்கினை செய்வதில்லையோ அவனிடத்தில் பாவத்தின் பேரில் துக்கமும் இல்லையென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

நீ செய்யும் பிரதிக்கினை உண்மையானதானால் எந்த வகை பாவத்தையும் செய்யாதபடி அந்தப் பாவம் வரும் வழிகளை அடைப்பாய். பாவத்துக்கு ஏதுவாயிருக்கும் ஆள், இடம், நேரம், பொருள் முதலிய காரணங்களைத் தூர நீக்குவாய். சிலருடைய மனது காற்றாடிபோல் எப்போதும் மாறிக்கொண்டே இருக்கும். பாசிபோல் அற்ப காற்றினாலும் அசைந்து தளம்பிக்கொண்டே நிற்கும். இவ்வித மனக்கோழைகள் நரகத்திலே எதேஷ்டமாய்க் கிடக்கிறார்கள். பாவத்தை இனி செய்யாதபடி மன உறுதியும் மனதின் திட்பமும் அவசியம்.

யாதொருவனிடத்தில் பாவத்தின்பேரில் மெய்யான மனஸ்தாபமும் பிரதிக்கினையும் உண்டோவென்று முழு நிச்சயமாய் எப்போதும் சொல்லக்கூடாதேபோனாலும், சில அடையாளங்களால் கொஞ்சமாகிலும் அறியலாம். எவன் பாவத்துக்கு அடுத்து ஏதுவாயிருக்கும் சமயங்களை விட்டு விலகுவானோ, எவன் தன்னிடத்திலுள்ள துர்ப் பழக்கங்களையும், துர்க்குணங்களையும் திருத்த பிரயாசப் படுகிறானோ, எவன் தன் தப்பான நடத்தையை மாற்றி சீரான நல் வழியில் திரும்புகிறானோ, எவன் தன்னால் வந்த நஷ்டத்தைப் பரிகரிக்கத்தக்க முயற்சி செய்கிறானோ, அவனிடத்தில் எதார்த்தமான துக்கமும் பிரதிக்கினையும் இருக்கின்றதென்று சொல்லலாம்.

இப்படியாய் நீ உன் பாவங்களை எல்லாம் ஒழுங்கோடு நினைத்து, அவைகளுக்காக துக்கப்பட்டு, ஸ்திரமான பிரதிக்கினை செய்தபின்பு, குருவிடம் போய் உன் மனதில் உள்ள பாவங்களை எல்லாம் அவருக்கு வெளிப்படுத்த

வேண்டும். இது பாவசங்கீர்த்தனத்துக்கு அவசியமான நான்காம் குணம். இதை மூன்றும் பாகத்தில் விவரிப்போம்.

மூன்றும் பாகம்

வியாதி உள்ளவன் தனக்குக் குணம் வேண்டுமானுல் வைத்தியனிடத்தில் தன் வியாதியின் பல கூறுபாடுகளை எல்லாம் உள்ளபடிச் சொல்வது அவசியம். வைத்தியன் சமர்த்தனுனுல் தானே நாடியைப் பார்ப்பதாலும், நாவின் நிறத்தை அறிந்தும் வியாதியின் குணமும் பலமும் அறியக் கூடுமானுலும், வியாதியஸ்தனே தன் வாயால் தனக்குள்ள வியாதியை விவரித்துப் பேசினுல் அது தக்க மருந்து கொடுப்பதற்கு வெகு உதவியாகும். சில சமயத்தில் ஒருவனுக்குள்ள இழிவான வியாதியின் குணங்களை வெளியே சொல்லவும் காட்டவும் வெட்கப்படலாம். ஆகிலும் தக்க சிகிச்சை பெறும்படி சொல்லித்தான் தீரவேண்டும்.

அப்படியே பாவசங்கீர்த்தனத்துக்குக் குருவினிடம் போய் உன் பாவங்களை நீ அவருக்குச் சொல்லவேண்டுமென்பது சேசுநாதர்சுவாமி ஏற்படுத்திய ஒழுங்கு. பாவங்களைச் சொல்வதென்முல், ஒன்று, இரண்டு, உனக்கிஷ்டமானதுமாத்திரமல்ல. செய்த கனமான பாவங்களை எல்லாம் ஒன்றும் மனதறிய விடாமல், உள்ளது உள்ளது போல் சொல்வது உன் கடமை.

உன் பாவங்களை எல்லாம் வெளிப்படுத்துவதில், நீ எதார்த்தம் தப்பி குருவை ஏய்க்கும்படி நினைத்தால், சேசுநாதர்சுவாமியையே நீ ஏய்த்து மோசஞ்செய்ய எண்ணுவது போலாகும். தம்பி! சேசுநாதர் ஸ்தானத்திலிருந்து, அவர் பெயரால் உன் பாவங்களைக் கேட்கும், தேவ வைத்தியனை நீ ஏய்த்தால் உனக்கு வரும் லாபமென்ன? பாவங்களுக்கு நீ பொறுத்தல் ஒன்றும் அடையாமல் தேவ துரோகியாய்ப் போவாய். ஆத்துமத்தின் உயிரையும் சுத்தத்தையுந் தேடி வந்தவன், துர்க்கந்தம் வீசும் பிணமாய்த் திரும்புகிறுன். குளிக்கப்போனவன், சேற்றிலும் அசுத்

தத்திலும், புரண்டுவருகிறவனுகிருன். சர்வேசுரனோடு சமாதானமாகத் தேடினவன் அவரைப் பழித்து நிந்தித்து வருகிருன். என்ன மதியீனம்?

இப்படித் துணிந்து பாவத்தை மறைத்தவன் இதோடு நிற்கமாட்டான். சாவான பாவத்தோடு தேவ நற்கருணை வாங்கப் போவான். இந்தத் தேவதுரோக மான செய்கையை முடித்தபின்பு அவன் செய்யத் துணி யாத அக்கிரமம் ஒன்றுமில்லை.

பாவத்தை மனதறிய பயத்தாலாவது, வெட்கத்தா லாவது, ஒளிப்பது பாவமாகுமேயன்றி, மறதியால் ஒரு பாவத்தைச் சொல்லாமல் விட்டால் அது பாவமாகாது. மறந்த பாவத்தை அடுத்த பாவசங்கீர்த்தனத்தில் சொல் வது போதும்.

சில பேர்கள், நான் எப்படி வாய் கூசாமல் இந்த அசுத்தத்தை குருவுக்குச் சொல்லலாம்? நானே இதை நினைக்கும்போது வெட்கப்படுகிறேன், என்று சொல்வார் கள். சகோதரா! நீ இந்தப் பாவத்தைச் செய்யும்போது வெட்கமின்றிச் செய்தாயே. இப்போது அதற்கு மன்னிப்பு பெறும்படியாய் ஏன் வெட்கப்படவேண்டும்? இந்த வெட்கம் நன்மை பயக்கும் வெட்கமல்ல. பசாசின் துர்ப்போதனையால் உன்னைக் கெடுக்கும்படி உதித்த வெட் கம். நீ இந்தச் சமயத்தில் பசாசைப் பார்த்து: சீ! அசுத்த அரூபியே! பார், நான் உன்னை வெட்கப்படுத்தப் போகிறேன். இதோ குருவினிடம் நேரே போய், இந்தப் பாவத்தைத்தான் நான் மூந்த அவருக்கு விவரமாய்ச் சொல்வேன், என்று தீர்மானித்து அப்படியே செய். இதுமுதல் பாவத்தைச் சொல்வதில் உனக்கு வெட்கமே வரமாட்டாது. பசாசே வெட்கப்பட்டு உன்னை சும்மா விட்டுவிடும்.

இதில் நீ கவனிக்கவேண்டியது ஏதென்றால், நீ மன தறிய பாவத்தை மறைத்தபின்பு, உனக்கு கவலையும், பய மும், துக்கமும், உன் காலில் தைத்த முள்ளைப்போல், இரவும் பகலும் ஓயாமல் உன்னைத் தொடர்ந்து துன்பப்

படுத்தும். உலகத்தின் கடைசிநாளில் இந்தப் பாவத்தையும் நீ செய்த மற்றப் பாவங்களையும் நீதிபரனை ஆண்டவர் உலகமெல்லாம் அறிய வெளிப்படுத்துவாரே. அப்போது சகல ஜனங்கள்முன் எவ்வளவு வெட்கம் உனக்கு உண்டாகும்?

ஆனால் என் பாவம் பெரிய பாவம். என்னைப்போல் பாவி ஒருவனுமில்லை. எப்படி நான் துணிந்து இந்தப் பாவத்தைச் சொல்லலாம்? என்று நீ சொல்வாயாக்கும்.

உன் பாவம் பெரிய பாவமானால் அவ்வளவுக்கு அதற்குப் பொறுத்தல் பெறுவது அவசியம். உன்னைப்போல் பெரும் பாவி ஒருவனுமில்லையா? ஆ! நிர்ப்பாக்கியமாய் உன்னிலும் பெரும் பாவிகள் அநேகம் பேர்கள் இருக்கிறார்கள். சேசுநாதர்சுவாமி பெரிய பாவிகளைத் தேடித்தான் வருகிறார். அவருடைய அளவில்லாத இரக்கத்துக்குப் பெரிய பாவியும் சின்னப் பாவியும் ஏற்றவர்கள். ஆனால் இந்தப் பாவத்தை நான் குருவிடம் சொன்னால் என்ன நினைப்பார் என்று சொல்வாயோ? என்ன நினைத்தாலும் உனக்கென்ன? உன் ஆத்துமத்துக்கு மன்னிப்பும் சமாதானமும் சர்வேசுரன் கொடுப்பார். அது போதும். ஆனால் குரு என்ன நினைப்பாரென்று நீ கவலைப்பட்டால் நாம் சொல்வோம். உன் பாவங்களை எல்லாம் நீ தெளிவாயும் ஒழுங்காயும் சொல்வதை அவர் கேட்டு சந்தோஷப்பட்டு சர்வேசுரனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்வார். அப்படி நீ சொல்லாமல் அரைகுறையாய் வாய்க்குள்ளே பேசுகிறதை அவர் கண்டு: ஐயோ இவன் ஏன் இப்படி பயந்து செத்து, பாவத்தைச் சொல்ல வருத்தப்படுகிறான். பத்தி விசுவாசமில்லாதவன், என்று தனக்குள் எண்ணுவார்.

ஆனால் இந்த நீசப் பாவத்தை எப்படிச் சொல்வதென்று எனக்குத் தெரியவில்லையே, என்பாயோ? உனக்குத் தெரியாதேபோனால் குருவிடம், சுவாமி எனக்கு எப்படி இதைச் சொல்வதென்று தெரியாது என்று சொல். அவர் உனக்கு வழி காட்டுவார். ஆனால் நீ வஞ்சகமின்றி

உனக்குத் தெரிந்தமட்டும் உன் மனதிலுள்ள பாவங்களைச் சொல்வது போதும். இதற்காக பாவசங்கீர்த்தனத்துக்கு முன் சேசுநாதரையும், தேவமாதாவையும் பார்த்து உன் புத்திக்குப் பிரகாசமும், மனதுக்கு உறுதியுங் கொடுக்கும்படியாய் ஜெபஞ்செய்து கேள்.

கடைசியில் சிலர் சொல்லும் போக்காவது: நான் என் பாவங்களை எல்லாம் குருவுக்குச் சொல்ல சம்மதந்தான். ஆனால் ஒரு சந்தேகமாத்திரமிருக்கிறது. என் பாவத்தைக் கேட்குங் குரு அதை யாருக்காவது வெளியே சொல்லுவாரா?

குரு பாவசங்கீர்த்தனத்தில் அறிந்த எந்த விஷயத்தையும்பற்றி, பின் எவருக்குஞ் சொல்லமாட்டார். எவரிடத்திலும் விசாரிக்கவுமாட்டார். உன்னையே அவர் கூப்பிட்டு நீ சொன்னதின்பேரில் உன்னிடங் கேட்கமாட்டார். நீதிசாலையில் அவரைக் கூப்பிட்டு தாம் பாவசங்கீர்த்தனத்தின் வழியாய் அறிந்த சங்கதியை விசாரித்தாலும், பயமுறுத்தினாலும், அவரைக் கொல்வதாகவே சொன்னாலும் குரு ஒன்றும் தாம் அறியாதவர்போலே இருப்பார். இதின் காரணமேதென்றால்: அவர் பாவசங்கீர்த்தனங் கேட்கும்போது சேசுநாதர் ஸ்தானத்திலிருந்து அவர் பெயரால் கேட்பதால், அதைவிட்டு வெளியே வந்ததும் ஒன்றுமறியாத சாதாரண மனிதனைப்போலிருப்பார். சேசுநாதர் பெயரால் கேட்டதை அவர் வெளியே சொல்வது அவருக்குப் பெரிய பாவமாகும். இதினாலே கிறிஸ்துவர்கள் பயமின்றி, கவலையின்றி குருவிடம்போய் தங்கள் மனதில் உள்ள பாவங்களை எல்லாம் சொல்லலாம்.

பாவசங்கீர்த்தனத்தில் தான் செய்த பாவங்களை மாத்திரஞ் சொல்லவேண்டுமேயன்றி, பிறர் செய்த பாவங்களைப்பற்றிப் பேசக்கூடாது. ஒவ்வொருவருந் தானே தன்மேல் குற்றஞ் சாட்டுவதுதான் பாவசங்கீர்த்தனம். தன் பாவங்களைச் சொல்லும்போது தாழ்ச்சி மனஸ்தாபத்தோடும், மரியாதை அடக்கம் பயபத்தியோடும், வீண் கதைகளை வளர்த்துப் பேசாமல், அநாவசியமான சங்கதிகளைச்

சொல்லாமல், தெளிவாயும், சுருக்கமாயும், எதார்த்தமாயும் தன் பாவங்களைச் சொல்வது யோக்கியம்.

நீ உன் பாவங்களை எல்லாம் சொல்லி முடித்த பின்பு குரு உனக்குச் சொல்லும் புத்தியையும், கொடுக்கும் அபராதத்தையுங் கவனமாய்க் கேள். உன் அபராதத்தைக் கூடுமானால் உடனே நிறைவேற்றுவது உத்தமம்.

நாம் இங்கே விவரித்ததுபோல பாவசங்கீர்த்தனம் உன் ஜீவிய நாளில் எப்போதும் செய்து பழகிவருவாயேயாகில், உன் கடைசி நாளில் சாகும் வேளையில் நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து ஆத்தும சுத்தத்தோடு மரிப்பாய்.

சகோதாரே! நாம் இப்போது சொன்னதெல்லாம் உங்கள் புத்திக்குத் தெளிவாயிருக்கின்றதா? இனிமேலாக பாவசங்கீர்த்தனம் கவனத்தோடும் ஜாக்கிறதையோடுஞ் செய்வீர்களா? இப்படி செய்தால் மனதில் சமாதானமும் சந்தோஷமும் உண்டாகும். உங்கள் நிமித்தம் மோக்ஷத்திலுள்ள சம்மனசுகள் ஆநந்த சந்தோஷம் கொள்வார்கள்!

அர்ச். மரியே! பாவிகளுக்கு அடைக்கலமான தாயே! நாங்கள் எல்லாரும் எப்போதும் நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து தேவ இஷ்டப்பிரசாதம் பெற்று, உம்முடைய தேவ குமாரன் சேசுநாதர்சுவாமிக்குப் பிரியமுள்ளவர்களாய் ஜீவித்து சாகும்படி எங்களுக்காக பிரார்த்திப்பீராக.

தியானப் பிரசங்கங்கள்

இரண்டாம் வாரம்

சேசுநாதர்சுவாமியின் சுகிர்த நடத்தையை
நமது கண்முன் வைத்து
அவரைப்போல் நடப்பதற்கு உதவியான
தியானங்கள்

நாம் வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறோம். எவனும் பிதாவினிடம் நம்மாலன்றி வரமாட்டான். (அர்ச். அருளப்பர், 14 : 6.)

நம்மைப் பின்பற்றுகிறவன் இருளில் நடக்கிறவன் அல்ல. ஆனால் அவன் ஜீவனுக்கொளி பெறுவான். (அர்ச். அருளப்பர், 8 : 12.)

சேசுக்கிறீஸ்துநாதரின் ஜீவியத்தைத் தியானிப்பது நமது மகா உன்னத கவன முயற்சியாயிருக்கக்கடவது. (கிறீஸ்துநாதர் அநுசாரம், 1 : 1.)

கிறீஸ்துநாதருடைய போதனை பரிசுத்த மகாத்துமாக்களின் போதனைகளுக்கெல்லாம் மேலானது. (கி. அ. 1 : 2.)

கிறீஸ்துநாதரின் வார்த்தைகளைப் பூரணமாயும் சுவையோடும் நன்றாய் உணர்ந்து அறிய விரும்புகிறவன் தன் நடத்தை அவருடைய ஜீவியத்தோடு இணங்கி சமரச நிலையிலிருக்க கவனிப்பானாக.
(கி. அ. 1 : 2.)

சர்வேசுரனைச் சிநேகிப்பதும் அவர் ஒருவருக்கே ஊழியஞ் செய்வதும் நீங்கலாக, மற்ற யாவும் வீணிலும் வீண். எல்லாம் வீண். (கி. அ. 1 : 3.)

இரண்டாம் வாரம்

சேசுநாதர்சுவாமியின் சுகிர்த நடத்தையை நமது கண்முன் வைத்து அவரைப்போல் நடப்பதற்கு உதவியான தியானங்கள்

விவரங்கள்

1. முதல் வாரத் தியானங்களில் நீங்கள் எதின் நிமித்தம் சிருஷ்டிக்கப்பட்டீர்களென்றும், உங்கள் உத்தம கதியான சர்வேசுரனை மறந்து பாவத்தைச்செய்து எவ்வளவு தூரம் சீரான வழியைவிட்டுப் பிசகி நடந்தீர்களென்றும் அறிந்தபின்பு, அதற்குத் துக்கப்பட்டு சர்வேசுரனிடம் பொறுத்தல் கேட்டு, பாவசங்கீர்த்தனம் செய்து, ஆத்துமத்தைச் சுத்தஞ் செய்தீர்கள்.

2. ஆத்துமத்தைச் சுத்தஞ் செய்தபின், இனி செய்யப்போகும் தியானங்களில், சேசுநாதர்சுவாமி உலகத்திலிருந்த காலத்தில் எப்படி நடந்து மனிதர்களுக்கு மோக்ஷ பாதையைக் காட்டினார் என்று படிக்கப்போகிறீர்கள். அவர்தான் வழியும் உண்மையும் ஜீவியமுமாயிருப்பவர். அவரை அடுத்து எவ்வளவு அவர் சமீபத்திலிருப்போமோ அவ்வளவு உத்தமர்கள் ஆவோம். இந்த உத்தமதனம் மனிதனுடைய சர்வ பாக்கியம். இதைத் தேடுவது மனிதனுடைய முக்கிய அலுவல். நமது ஜீவியம் சேசுநாதருடைய ஜீவியத்துக்கு இசைந்து ஒத்ததாயிருந்தால் மாத்திரம் நமக்கு மோக்ஷ பாக்கியம் சர்வேசுரன் கொடுப்பார்.

3. இந்த இரண்டாம் வாரத்தில் கவனிக்கவேண்டிய சில புத்திகள் உண்டு. முதல் புத்தி: தியானம் செய்கிறவர்கள் சர்வேசுரன் தங்களுக்குக் காட்டும் விசேஷ பாதையைக் கைப்பற்றி அதின்வழி நடக்கும்படி எதார்த்தமான

ஆசையும், ஸ்திரமான மனத்துணிவும் உள்ளவர்களாயிருப்பது அவசியம். இந்த மனத்துணிவில்லாதவன் தியானத்தினால் வரும் முக்கிய பலனை அடையமாட்டானென்பதால் இவன் தியானத்தை இன்னுந் தொடர்ந்து செய்ய ஏற்றவன் அல்லன்.

4. தியான யோசனை செய்தபின் ஒழிந்த நேரங்களில் வாசிக்கத்தகுந்த நல்ல புஸ்தகங்களாவன: சுவிசேஷம், கிறீஸ்துநாதர் அநுசாரம், அர்ச்சியசிஷ்டவர்களின் சரித்திரம். நீங்கள் வாசிக்கும் பொருள் கூடுமானமட்டும் அந்தந்த நாளில் செய்யும் தியானத்தின் பொருளுக்குச் சார்ந்ததாயிருப்பது நலம். இப்படியின்றி இஷ்டம்போல் எதையும் வாசித்தால் மனது பல காரியங்களில் சென்று ஒன்றையும் கருத்தாய் யோசிக்காது.

5. காலமே எழுந்ததும் அன்று செய்யும் தியானத்தின் பொருளை ஞாபகத்தில் வரச்செய்து, சேசுநாதரை மேன்மேலும் அறியவும், உருக்கமாய் சிநேகிக்கவும், அவர் சமீபத்தில், அடுத்து நடக்கவும் வரங்கேட்பது எல்லாருங் கவனிக்கவேண்டிய விஷயம்.

6. தியான யோசனை நீ செய்யும்போது, இந்த வாரத்தில் நீ தியானிக்குஞ் சேசுநாதருடைய ஜீவிய வரலாற்றுக்கு இசைந்தவண்ணம், பிரகாசமும் வெளிச்சமுமுள்ள சந்தோஷகரமான இடத்திலிருப்பது யோசிப்பதற்கு அநுகூலமாயிருக்கும்.

7. சேசுநாதருடைய ஜீவிய வரலாற்றை உன் மனதுக்கு வருத்தமின்றி, சுலபமான வகையில் நீ யோசிக்க ஏதுவாயிருக்கும். பின்வரும் விஷயங்களைக் கவனித்துக் கேள். அந்தந்த வரலாற்றில் வரும் ஆட்கள், அவர்கள் பேசும் வார்த்தை, செய்யும் கிரியைகள் ஆகிய இவைகள் எல்லாம் உன் கண்முன் நடப்பதுபோல் நிதானித்து அவைகளின்பேரில் யோசிக்கலாம். அவர்கள் நல்லவர்களானால் நாம் செய்யத்தகுந்தது இன்னதென்றும், கெட்டவர்களானால் செய்யத்தகாதது இவையென்றும் அறிந்துகொள்வோம்.

8. தியான யோசனை முடிந்தபின், முதல் வாரஞ் செய்ததுபோல், அதின் அநுகூலம் அல்லது பிரதிகூலத்தைப்பற்றி யோசிப்பது பிரயோசனமுள்ளது. அந்த நாளின் தனி ஆத்துமசோதனையும் தியான முயற்சிகளையே சார்ந்துபோவது சுகிர்தம்.

ஐந்தாம் நாள்—முதல் தியானம்

சேசுநாதரின் அரசாட்சி

முதல் பாகம்

சேசுநாதருடைய தேவ அரசாட்சி எப்படிப்பட்டதென்றும், அவருடைய கருத்தும் நோக்கமும் இன்னதென்றும், இந்த அரசின் விர்த்தி அநுகூலத்திற்கு நீங்கள் செய்யவேண்டியது எதுவென்றும் நன்முய் அறியும்படியாய், பின் வரும் உபமானத்தைக் கருத்தாய் கேளுங்கள்.

மனித ஜென்மத்தை ஓர் கொடுங்கோலன் கையிலிருந்து மீட்கும்படியாய் சர்வேசுரனே உத்தம குணங்கள் நிறைந்த ஓர் இராஜாவைத் தெரிந்து அனுப்புகிறுா. இந்த அரசனுடைய நற்குணம், நற்செய்கை, சௌரிய வீரம், குணாதிசயங்களைக் கவனித்துப்பாருங்கள். உலகத்தின் பல தேசங்களில், பல காலங்களில் இருந்த இராஜாக்களிடம் விளங்கிய புத்தி விவேகமும், சாமர்த்திய திறமையும், இன்னும் மற்ற அதிசய குணங்கள் எல்லாம் இவரிடத்தில் ஒன்றுசேர்ந்து பூரணம் பெற்று பிரகாசித்தன. சிறந்த இராஜ கோத்திரத்தில் பிறந்தவர். இராஜ பட்டத்துக்குப் பூரண சுதந்தரமுள்ளவர். தன் பிரஜைகளை அன்போடு காப்பாற்றி ஆதரிக்க அநுகூலமான ஜீவகாருண்ணியம், ஈகை, இரக்கம், தயை, அன்பு, அருள் முதலிய குணங்கள் நிறையப் பெற்றவர். தேசப் பகைவரை அடக்கி ஆளும்படி ஏதுவான புஜபராக்கிரமும் மன வலி

மையுங் கொண்டவர். சலோமோனைப் பார்க்கிலும் ஞானம் அறிவு விவேகத்தில் சிறந்தவர். அலெக்சாண்டர், நெப்போலியன் முதலிய சௌரிய வீர அரசர்களைப் பார்க்கிலும் போர்வீர ஆண்மையில் நிகரற்றவர். இராஜ பட்டம் சர்வேசுரன் கையிலிருந்து பெற்றவர். சகல இராஜாக்களாலும் மதிப்பும் பெருமையும் பெற்று அவர்கள் எல்லாரும இவர் அடிபணிந்து வணங்கி நிற்க, பிரக்கியாதி பெற்ற இராஜாதி இராஜன்.

இவ்வித பேரும் பெருமையும், சீரும் சிறப்பும் கொண்ட அரசன் தன் அதிகாரத்துக்குள் அரசு செலுத்தும் இராஜாக்களையும், பிரபுக்கள், பெரியோர்களையும் தன் சமூகமுன் ஒருநாள் அழைத்து அவர்களுக்குச் சொன்ன பிரசங்கமாவது: பிரபுகாள்! நீங்கள் அனைவரும் எனது அரசின்கீழ் சமாதானமாயுந் திருப்தியுடனும் வாழ்ந்துவருகிறீர்கள். ஆனால் நீங்கள் வாழுந் தேசங்கள் அல்லாமல் இன்னும் அனேக இராச்சியங்கள் இந்தப் பூமியிலிருப்பது உங்களுக்குத் தெரியும். இந்தப் பிரதேசங்களில் வாழுங் குடிகள் சுத்தமான நடத்தையும் நாகரீகமும் இன்றி, அறியாமையிலும் அஞ்ஞானத்திலும் அமிழ்ந்தி இருக்கிறார்கள். மெய்யான சர்வேசுரனை ஆராதிக்காமல் நரகப் பேய்களைக் கைமெடுத்து கும்பிடுகிறார்கள். தங்கள் சரீரத்தின் துர் இச்சைகளைப் பூர்த்திசெய்வது இவர்களுடைய எண்ணமுங் கருத்தும் நோக்கமுமாயிருக்கிறது. புண ஆசை ஆவேசங்கொண்டவர்களாய் நியாயம் அநியாயம் பாராமல், தன் பொருள், பிறர் பொருள் என்ற வித்தியாசத்தைக் கவனியாமலும் பணத்தைத் தேடுவதில் தங்கள் ஜீவிய நாட்களை எல்லாம் செலவழிக்கிறார்கள். தன் இஷ்டம் போல் நடப்பதுதான் மனிதனுக்கு யோக்கியமென்று எண்ணிவருகிறார்கள்.

இவ்வளவான ஒழுங்கீனங்களையும் அக்கிரமங்களையும் நிவர்த்திசெய்து எங்கும் நல்லொழுக்கமும் சமாதானமும் ஸ்தாபிக்க நான் மனதாயிருக்கிறேன். துஷ்டரை அடக்கும்படி போதுமான சாதனங்கள் என் கையிலிருக்கின்றன. என்னைத் தெரிந்து அனுப்பிய சர்வேசுரன் சர்வ

வல்லபமுள்ளவர். ஆனதால் நான் தொடுக்கும் யுத்தத்தில் பூரண ஜெயம் உண்டாகுமென்பது சத்தியம்.

இந்த யுத்தத்தில் என்னோடுகூட இருப்பவனுக்கு யாதொரு ஆபத்தும் மோசமும் நேரிடமாட்டாது. துன்பமும் வருத்தமும் கஷ்டமும் வருமென்பது மெய்தான். ஆனால் நான் படும் துன்பத்திலும் அதிகம் எவனுக்கும் உண்டாகாது. நானே படைக்கு முந்தி நடப்பேன். நான் செய்யாததை எவனுஞ் செய்யும்படி நான் கேட்கமாட்டேன். என் பின் வர ஆசையாயிருக்கிறவர்களிடம் நான் கேட்பது இவ்வளவுதான்.

துணிந்த மனதோடு என்னோடுகூட வருகிறவர்களுக்கு என்ன சன்மானம், எவ்வித சம்பாவனை வருமென்று கேளுங்கள். அவனவனுக்கு வரும் சம்பாவனை அவனவன் செய்யும் வேலையின் அளவாயிருக்கும். நான் தொடுக்கும் யுத்தம் கடைசியில் எனக்கு ஜெயமாய் முடியும் என்பது சத்தியமாகையால், யுத்தம் முடிந்தபின் என் தோழர்களுக்கு இராச்சியங்கள் சாசுவத தானமாய் கொடுப்பேன். ஆனால் இந்த யுத்தத்தில் எவன் என் பக்கத்தில் சமீபமாய் அடுத்து நின்று அஞ்சாத் துணிவுடன் என்னைப்போல் தன்னை மறந்து யுத்தஞ் செய்வானோ அவனுக்கு நான் கொடுக்கும் சன்மானம் சிரேஷ்டம் பெற்றதும் சிறந்ததுமாயிருக்கும்.

இராஜா சொன்ன இந்த உன்னத சௌரிய வாக்கியங்களை அங்கே கூடியிருந்தவர்கள் எவ்வளவு ஆனந்த அக்களிப்புடன் கேட்டிருப்பார்கள்! இந்த யுத்தத்தின் காரணம் எவ்வளவு மேலானது! இதனால் வரும் நன்மைகள் எவ்வளவு மதிக்கத்தக்கது! அரசன் முன்னடந்து வழி காண்பிப்பது எவ்வளவு உறுதியும் ஊக்கமுங் கொடுக்க ஏதுவானது! ஜெயம் தப்பாமல் வருமென்பது எவ்வளவு உற்சாகம் கொடுக்கக்கூடியது! தன்னுடன் உழைப்பவர்களுக்கு இராஜா கொடுக்கும் சம்பாவனை எவ்வளவு சிறந்தது!

இதைக் கேட்டவர்கள் எல்லாரும் பூரித்த மனதோடு ஒருவாய்போல் பேசி: இதுதான் சர்வேசுரனுடைய சித்

தம்—இதுவே தேவ சித்தம், என்று யுத்தத்திற்கு அரசனுடன் புறப்படமாட்டார்களா? யாராகிலும் இப்படி புறப்பட மனமின்றி, தன் வீட்டில் உட்கார்ந்திருந்து வீண் காலம் போக்குவேன் என்று சொன்னால் அவனை மற்றவர்கள் பழித்து நகைத்து பரம கோழை என்று நிந்திப்பார்கள் அல்லவா?

இங்கே சொன்ன உபமானத்தில் குறித்த இராஜா சேசுநாதர்சுவாமி என்றும், அதில் அடங்கிய பல விஷயங்கள் எப்படி அவருக்கு மாத்திரம் பூரணமாய் செல்லுமென்றும் இரண்டாம் பாகத்தில் விவரிப்போம்.

இரண்டாம் பாகம்

சர்வேசுரன் தெரிந்தனுப்பிய உன்னத இராஜா சேசுநாதர்சுவாமிதான். இவரே இராஜாக்களுக்கெல்லாம் மேலான இராஜா. சர்வேசுரனுடைய தேவ ஏக குமாரன். வல்லமையும் அதிகாரமும் இவரிடமிருந்துதான் வருகின்றது. சகல சுகுண இலக்ஷணங்கள் இவரிடத்தில் அளவு கடந்த வகையில் நிறைந்து இருக்கின்றன. தன் பிரஜைகளின் நன்மையைத் தேடுதல், அரசின் முக்கிய குணமானதால் சேசுநாதர் மனிதர்களின் நித்திய நன்மையைத் தேடிவந்தார். ஜனங்களுக்கு எந்த வகையிலும் உதவி செய்து அவர்களைக் காப்பாற்றுவது இராஜாவின் பிரதான கடமையானதால் சேசுநாதரும மனிதர்களுக்கு எவ்வகையான உதவியும் செய்து எப்போதும் அவர்களைக் காப்பாற்றிவருகிறார்.

ஞானஸ்நானமும் பெற்ற மனிதர் யாவரும் சேசுநாதரைத் தங்கள் இராஜாவாக ஏற்றுக்கொண்டு அவருடைய இராச்சியமாகிற கத்தோலிக் சபையின் அங்கங்களாகிறார்கள். இவர்கள் எல்லாரையுங் கூட்டிச் சேர்த்து சேசுநாதர் சொல்லும் வாக்கியங்களைக் கேளுங்கள்:

என் பிள்ளைகளே! என் பிதாவின் அரசை இந்தப் பூமியில் ஸ்தாபிப்பது என் தீர்மானம். இந்த அரசை வெளியே அல்ல, உங்களுக்குள்ளே ஆதிமுதலில் நிலை

கிறுத்துவது அநுகூலத்திற்கு இன்றியமையாத சாதனம். ஒவ்வொருவரும் தன் மனதிலே சர்வேசுரனுடைய பூரண ஆளுகையை ஸ்தாபிக்க பிரயாசப்படுவது அவசியம். இந்த அரசை ஸ்தாபியாதபடி தடுக்க பல விரோதிகள் உங்களுக்குள்ளே இருக்கிறார்கள். இவர்களோடு எப்படி யுத்தஞ் செய்யவேண்டுமென்று நானே முன்னடந்து வழி காட்டுவேன். ஜெயம்பெற ஆசையுள்ளவர்கள் என் பின்னால் வந்து நான் செய்வதேதென்று கவனித்து என்னைப் போல் செய்வார்களாக. என் ஊழியத்தில் மகிமையும் பிரக்கியாதியும் பெற மனதாயிருப்பவர்கள் என்னை அடுத்து சமீபமாய் நின்று நான் செய்வதுபோல் தாராள மனதுடன் செய்வார்களாக. நான் எதிர்த்துப் போராடுஞ் சத்துருக்கள் உங்கள் சத்துருக்கள்தான். இவர்களை ஜெயித்து அடக்குவதால் வரும் சமாதானமும் சந்தோஷமும் உங்களுடைய பங்காகும்.

என்னோடு சேர்ந்து யுத்தஞ் செய்கிறவர்களுக்கு ஜெயம் வரும் என்பது நிச்சயம். இவர்களுக்கு நான் கொடுக்கும் சம்பாவனை என் இராச்சியமாகிற மோக்ஷம். நீங்கள் எதிர்த்துப் போராடவேண்டிய சத்துருக்கள் யாரென்றால்: இன்பசுக ஆசை, மகிமை பெருமையின் ஆசை, அகங்காரம். இவைகள் உங்களிடத்தில் குடியாயிருந்து உங்களை எப்போதும் கெடுக்கத்தேடும் ஜன்ம விரோதிகள். இவைகளின் கொடுமையையும் கர்வத்தையும் அடக்கி உங்கள் மனதில் என் பிதாவின் இராச்சியத்தை ஸ்தாபிப்பது, இதுவே என் நோக்கம். இதற்காக நீங்கள் எல்லாரும் என்னோடு வாருங்கள்.

சகோதரரே! சேசுநாதர்சுவாமி இவ்விதமாய் உங்களைக் கூப்பிடுவதால் அவருக்கு உங்களை முழுதும் ஒப்புக்கொடுத்து, பிரயாசை வருத்தம், இக்கட்டு இடையூறு, இவைகளுக்குப் பயப்படாமல் அவர்பின் செல்வது எவ்வளவு ஞாயம்! எவ்வளவு பிரயோஜனம்! யார் நான் வரமாட்டேனென்று சொல்வானோ அவன் எவ்வளவு புத்தியில்லாத மூடனாயிருக்கவேண்டும்! சேசுநாதருடைய வார்த்தைக்கு நீங்கள் செவிடராயிராதபடி, உங்களைக் கூப்

பிட அவருக்கு சுதந்திரமும், அவருக்குக் கீழ்ப்படிய உங்க ளுக்குக் கடமையும் எவ்வளவு இருக்கின்றதென்று பின் வரும் பாகத்தில் விவரிப்போம்.

மூன்றும் பாகம்

உங்களைத் தம்மோடு நின்று ஆத்தும சத்துருக்க ளோடு யுத்தஞ்செய்யக் கூப்பிடும் சேசுநாதர்சுவாமி சர்வ வல்லப நிறைந்த சர்வேசுரன். உங்களைச் சிருஷ்டித்து உங்களுக்குள்ள சகலமும் கொடுத்தவர் அவர்தான். அவ ரிடமிருந்து நீ பெருதது, உன்னிடம் ஒன்றுமில்லை. முதல் நாள் செய்த தியானத்தை நீ மறந்துபோனுயா? உன்மேல் அவருக்குப் பூரண சுதந்திரமிருக்கிறதென்றும் அவருக்கு ஊழியஞ் செய்வது உன் முதல் கடமை என் றும் அப்போது உன் மனதில் சார உணர்ந்தாயல்லவா? நீ அவருக்கு எந்தவகையிலும் சொந்தமானவனுனல் அவர் உன்னைக் கூப்பிடும்போது நீ பின்னுலே திரும்பிப் பார்ப் பது உனக்கு அழகாகுமா? ஞானஸ்நானம் பெற்றவன் நீ. சேசுநாதருடைய இராச்சியத்தில் அவருடைய பிள்ளைக ளோடு நீயும் சேர்ந்தவன். அவருடைய வார்த்தையைக் கேட்பது உனக்குக் கடமை அல்லவா? உன்னைத் தமது இராச்சியத்தின் பிரஜையாக்க தமது இரத்தத்தைச் சிந்தி னுர், உயிரையும் உனக்காகக் கொடுத்தார். இவ்வளவு உனக்குச் செய்தவர் உன்னைத் தம்மோடுகூட வரும்படி கூப்பிடும்போது நீ எப்படி மனஞ் சோம்பி, துணிவின்றி, மனமில்லாமலிருக்கலாம்? நான் தகப்பனுனல் எனக்கு நீ காட்டவேண்டிய சிநேகம் எங்கே? நான் எஜமானுனல் எஜமானுக்குச் செல்லவேண்டிய கீழ்ப்படிதல் எங்கே? என்று அவர் கேட்கும்போது நீ என்ன மறுமொழி சொல் வாய்?

அன்றியும் உன் நித்திய இராஜா உன்னை ஏதுக்காகக் கூப்பிடுகிறுர் என்று நீ கவனித்தால் அவரோடு கூடப் போக உனக்கு மனதும் ஆசையும் வெகுவாயிருக்கும். அவர் உன்னைப் பாக்கியவானுக்கி நித்தியகாலம் தாமிருக் கும் உன்னத மோக்ஷத்தில் உன்னைச் சேர்ப்பதே அவ

ருடைய நோக்கம். உன்னை விரோதித்துப் பகைத்துக் கெடுக்கத்தேடும் உலகம், பசாசு, சரீரம் என்ற சத்துருக்களை நீ ஜெயிக்கும்படி அநுகூலமான அநுக்கிரகப் பிரசாத வரங்கள் ஏராளமாய் உனக்குக் கொடுப்பார். இந்த சத்துருக்களை நீ ஜெயிப்பதற்கு உன் கையில் ஏற்ற ஆயுதங்களை வைப்பார். ஜெபம், தபம், தன் சுயநலம் மறுத்தல், தாழ்ச்சி, அடக்கம், பொறுமை, பிறர்சிநேகம் ஆகிய இவைகள்தான் நீ கையாடவேண்டிய ஞான ஆயுதங்கள். நீ யுத்தஞ் செய்யும்போது சம்மனசுகளும் மோக்ஷ பிரபுக்களும் சூழ நின்று பார்த்து, நீ காட்டும் செளரிய வீரத்தைப் புகழ்ந்து தகுந்த நேரத்தில் உனக்குக் கைகொடுத்து உதவுவார்கள்.

கடைசியாய், நீ செய்யும் யுத்தத்தில் சம்பாவனை பெறும்படி நீ செய்யவேண்டியது ஏதென்றால்: சேசுநாதர் சுவாமியை உன் கண்முன் வைத்து அவரைப்போலவும் அவரோடு உடன்தோழனாகவும், நீ நின்று நன்றாய் மெய் வருந்த உழைத்துப் பிரயாசப்படுவதுதான். நீ எந்த வேலை செய்யும்படி அவர் கேட்டாலும் அவர் அதைத் தாமே முந்தி செய்து உனக்கு வழிகாட்டியிருக்கிறார். நீ தாழ்ச்சியாய் நடக்கவேண்டுமென்று அவர் கேட்டால், அவர் முந்தி தாழ்ச்சியின் மாதிரி நடந்து காண்பித்திருக்கிறார். நீ உன்னை மறுத்து உன் சுயநலம் தேடாதிருக்க வேண்டுமென்று கேட்டால், அவர் சர்வேசுரனானாலும் தம்மையே மறுத்துத் தமது பாக்கிய சுகத்தை உலகத்தில் தேடாமல் திரிந்திருக்கிறார். அவர் உன்னிடம் கேட்பது சில சமயத்தில் கடினமாயிருந்தால் அது எளிதாகும்படி தமது அநுக்கிரக வரங் கொடுத்து, உனக்கு வருத்தந் தோன்றாமல் உன் மனதில் சந்தோஷம் பிறக்கும்படி செய்வார்.

சேசுநாதர்சுவாமி இவ்வித அன்போடு உங்களை அழைக்கும்போது உங்களில் யார் மன ஊக்கமில்லாத பரம கோழையாய் நான் வரமாட்டேன் என்று சொல்லுவான்? இவனுடைய சொந்த நன்மைக்காகவே இது ஏற்பட்டிருக்க மதிகெட்ட மூடனாய் இதுவெல்லாம் எனக்கு வேண்டாம்

என்று யார் நினைப்பான்? இவ்விதம் எவனொருவன் சொல்வானே அவனைப் புத்தியுள்ள எந்த மனிதனும் பழித்து நிந்தியாமலிருப்பானா? நல்ல அறிவுள்ளவனே, சேசுநாதர் சுவாமி தன்னைக் கூப்பிடுகிறார் என்று அறிந்ததும், உடனே தாமதமின்றி அவரிடத்தில் வந்து அவர் ஊழியத்துக்குத் தன்னை முழுதும் நேர்ந்து கொடுத்து சொல்லும் பிரார்த்தனை ஏதென்றால்:

ஓ! சர்வலோகங்களுக்கும் ஏகாதிபதியான இராஜாதிராஜனே! உம்மைப் பின்சென்று உம்மோடுகூட நின்று யுத்தஞ் செய்யும்படி நான் அபாத்திரனென்பது மெய் தான். ஆனால் தேவரீர் கொடுக்கும் வரப்பிரசாத உதவியில் என் நம்பிக்கை யாவும் வைத்து, என்னை முழுதும் யாதோர் குறைவுமின்றி உமக்கு நேர்ந்துகொடுக்கிறேன்: நான் ஆகிற என்னையும் எனக்குச் சொந்தமான சகலத்தையும் உமது சித்தத்துக்குக் கையளிக்கிறேன். என் இரக்ஷகரின் தாயாகிய கன்னிமரி முன்னும், சமஸ்த மோக்ஷவாசிகளின் சமூகத்திலும் நான் சொல்லும் விண்ணப்பமாவது: என் ஆண்டவரே! உமக்கு எவ்வளவு சமீபத்தில் நான் நிற்கக்கூடுமோ அவ்வளவு சமீபமாயிருப்பேன். உலக சுக செல்வத்தின்பேரில் மனப்பற்று இல்லாதிருப்பேன். இன்னும் உமது சித்தமானால் மனப்பூர்வமாய் சுத்த தரித்திரனாய் வாழச் சம்மதிக்கிறேன். தாழ்ச்சியுள்ளவனாயிருப்பேன். உமது பிரியம்போல், நிந்தை அவமானங்களை நான் படவேண்டுமானால், உம்மைப்போல் நானுமிருக்க, அவைகளை ஏற்றுக்கொள்வேன். எவ்வகையிலும் உமது பின் வருவதே என் ஆசை, என்னுடைய மாறாத் தீர்மானம், என் ஸ்திரமான மனது. தேவரீருடைய மகிமைக்காகவும் என் ஆத்தும இரக்ஷணியத்துக்காகவும் நான் எது செய்யவேண்டுமென்றும், எந்த அந்தஸ்திலிருக்கவேண்டுமென்றும் உமக்குச் சித்தமோ, அதுவே நான் இருந்தாலுஞ்சரி, இறந்தாலுஞ்சரி, அதுவே நான் செய்வேனென்று உமக்கு நான் உறுதிமொழி கொடுக்கிறேன். ஆமென்சேசு.

(தியான முடிவில் பரமண்டல மந்திரஞ் சொல்.)

ஐந்தாம் நாள்—இரண்டாம் தியானம்

சேசுநாதர் மனுஷாவதாரமேடுத்துப் பிறந்த வர்த்தமானம்

இன்று கேட்ட முதல் தியானத்தில் சேசுநாதர் சுவாமி உங்கள் நித்திய இராஜாவென்றும், நீங்கள் அவருடைய சொந்தப் பிரஜைகளென்றும் அவர் சொல்லைக் கேட்டு அவர்பின் வருவது உங்கள் கடமை என்றும் கண்டு உணர்ந்தீர்கள். அதின் பலனாக அவரோடுகூட தரித்திரத்திலும், துன்பத்திலும், அவமானத்திலும் இணைபிரியாதிருப்பீர்களென்று பரலோகவாசிகள்முன் உறுதிமொழி கொடுத்தீர்கள்.

நல்லது. இப்போது உங்கள் இராஜா எப்படி முன் நடந்து வழி காண்பிக்கிறார் என்று பார்க்கப்போகிறீர்கள். உலகத்தில் அவர் மனுஷ அவதாரமாகிப் பிறந்தபோது, என்ன காரணங்கள் நிமித்தம், என்ன ஸ்திதியில், எப்படித் தோன்றினார் என்று விவரிப்போம். சேசுநாதரை நன்றாய் அறிந்தால் அவரை உருக்கமாய்ச் சிநேகிப்பீர்கள். அவரைச் சிநேகித்தால் அவர் சமீபத்தில் அடுத்து நடப்பீர்கள்.

ஓ! தேவ மரியே! சர்வேசுரனுக்குத் தாயாகும் பாக்கியம் பெற்ற கன்னிகையே! எங்களுக்காக உமது குமாரன் சேசுநாதரிடத்தில் மன்றாடும் தாயே!

முதல் பாகம்

சர்வேசுரன் ஆதிகாலத்தில் ஆதாம் ஏவை என்ற இருவரை இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் தமது பிள்ளைகளாக சிருஷ்டித்தார். நீங்கள் இரண்டாம் நாள் செய்த தியானத்தில் கேட்டதுபோல் அவர்கள் பாவத்தைச் செய்து சர்வேசுரனுடைய கோபத்தையும், சாபத்தையும் தங்களுக்கும் தங்கள் சந்ததியாருக்கும் நிர்ப்பாக்கியமாய் சம்பாதித்தார்கள்.

அந்த நாள்முதல் மனித ஜென்மம் கெட்டுப்போனது. புத்தி மயங்கி, மனது பாவத்துக்குச் சார்புள்ளதாய், நன்மையை வெறுத்து தீமையை நாடி கெட்டழிந்துபோகின்றது. மனிதன் சர்வேசுரனை மறந்துபோய் மனம் சென்ற வழியில் திரிந்து, இரக்ஷண்யம் பெறும்படி வழிதெரியாமல், வகை அறியாமல் தன் பிராண சத்துருவாகிற பசாசின் கையில் அகப்பட்டு பரிதவித்தான்.

பரிதவித்த மனிதன் தான் இழந்துபோன இஷ்டப் பிரசாதத்தைத் திரும்பவும் பெற்று, அவன் சர்வேசுரனுக்குப் பிள்ளையாகும்படி செய்ய எந்த சிருஷ்டியாலுங் கூடுமானதோ? கூடாது. ஏன் என்று கேளுங்கள். பாவம் சர்வேசுரனுக்குத் துரோகமான நீசச்செய்கை, ஆதலால் அது அளவில்லாத் தோஷமுள்ளது. அளவில்லாத தோஷத்தை அளவுள்ள எந்த சிருஷ்டியும் பரிகரிக்கப் பலம் அற்றது. தேசாதிபதியான இராஜாவுக்கு நீசன் ஒருவன் நிந்தை செய்தால், இது ராஜ துரோகமாகும். பிரஜைகளில் எவனும் இதற்குத் தகுந்த மான நஷ்டப் பரிகாரஞ் செய்ய இயலாது. அதுபோல் மனிதன் சர்வேசுரனுக்குத் துரோகமாய்ச் செய்த பாவத்துக்கு சிருஷ்டிகளான மனிதர்களும் சம்மனசுகளுங்கூடி தபசுசெய்து கண்ணீர் சிந்தி அழுதாலும் சர்வேசுரனுக்குப் பாவத்தால் வந்த நிந்தையைப் பரிகரிக்க அவர்களால் ஏலாது. சர்வேசுரனுக்கு வந்த நிந்தையைச் சர்வேசுரன் ஒருவரே ஏற்ற வகையில் பரிகரிக்கக் கூடுமானவர்.

ஏரியில் தண்ணீர் நிறைந்திருக்கும்போது ஒரு சிறு பையன் அதின் கரையை உடைத்துப்போடலாம். தண்ணீர் கரைபுரண்டு பெரும் வெள்ளமாய் பல பக்கம் ஓடும்போது அணைப்போட்டு அதைத் தடுக்க ஊர் முழுவதுங் கூடினாலும் சாத்தியமாகாது. அப்படியே மனிதன் பாவத்தைப் பயமின்றிச் செய்தான். இதினால் துன்பமாகிற பெரும் வெள்ளம் உலகத்தில் திரண்டு கூடி பரவினது. இதைத் தடுத்து சர்வேசுரனுக்கு வந்த நிந்தைக்குப் பரிகாரஞ் செய்யும்படியாய் மனிதர் எல்லாரும் ஒன்றுகூடினபோதிலும் அவர்களால் இது ஏலாது.

ஆ! சர்வேசுரா! எத்தனைகாலம் மனித ஜென்மம் இப்படிப் பாவ வெள்ளத்தில் அமிழ்ந்தி வருந்தும்! எத்தனைகாலம் மனிதன் உமக்குச் சத்துருவாய் பூமியில் அலைந்து திரிவான்! இன்னும் எத்தனைகாலம் பசாசு கொடுங்கோலனாய் மனிதர்களைத் தன்னடிமைப்படுத்தி ஆண்டுவரும்?

இதோ! தயவுள்ள சர்வேசுரன் மனிதர்பேரில் இரக்கம் வைத்து அவர்களைக் கைதூக்கச் சித்தமாயிருக்கிறார். இதோ! மனிதனை இரக்ஷிக்க மனிதனாய் உலகத்துக்கு வருகிறார்.

பரம திரித்துவத்தின் இரண்டாம் ஆளான தேவசுதன் தாமிருந்த உன்னத மோக்ஷ ஸ்தலத்திலிருந்து, பாவத்தால் கெட்ட மனித ஜென்மத்தைப் பார்த்தார். பகையும், பழியும், பலவகை அக்கிரமங்களும் உலகத்தில் காட்டில் பிடித்த பெரும் நெருப்புப்போல் பரவி, ஆத்துமங்களை நரகத்தில் கொள்ளைகொண்டுபோவதைக் கண்டார். கண்டமாத்திரம் மனம் இளகி தமது தேவபிதாவின்முன் தம்மை ஓர் பலியாய் நிறுத்திச் சொல்வார்: பிதாவே! நீர் சிருஷ்டித்த மனிதன் எப்படி கெட்டு நரகத்தில் விழுகிறான்! உமது நீதியின் கோபத்தைத் தணிக்க அவனால் கூடாது. மனிதனை இரட்சிக்க ஏற்ற பலி ஒன்றைத் தேடுகிறீர். மிருகங்களின் பலி உமக்குப் பிரியமுள்ளதல்ல. அப்படியானால் இதோ! நான் வருகிறேன். மனித சரீரத்தை எனக்குக் கொடுக்கிறீர். இதோ! இந்தச் சரீரத்தை உமக்குப் பலியாய் நான் நேர்ந்தேன். உமது மனதுபோல் நான் செய்வேன்.

சகோதரரே! எவ்வளவு சிநேகம்! எவ்வளவு தயாளம்! சிம்மாசனமீது மகிமைப் பிரதாபத்தோடு வீற்றிருக்கும் அரசன், சாக்கடை கஷ்டத்தில் விழுந்த ஓர் பிச்சைக்காரனைத் தூக்கும்படி, தானே தன்னை மறந்து இறங்குவானாகில் ஆச்சரியப்படாதவர்கள் உண்டோ? சேசுநாதர் இதிலும் அதிகம் நமக்குச் செய்திருக்கிறார். அவர் சர்வ மகத்துவ சர்வேசுரன், மனிதனோ அவரை நிந்தித்

துப் பழித்த பெரும் துரோகி. இவனைக் கை தூக்கி இரக்ஷிக்க சர்வேசுரன் மோக்ஷத்திலிருந்து மனிதனாய் உலகத்தில் இறங்கிப் பிறந்ததற்கு அவரிடமுள்ள அணை கடந்த சிநேகமே காரணம்.

இந்த அற்புத சிநேகத்தை நீங்கள் அடிக்கடி நினைப்பது வெகு பிரயோசனமாயிருக்கும். நினைத்தால் சேசுநாதர்பேரில் உங்கள் மனதில் சிநேகம் உண்டாகும். இவருடைய சிநேகத்தின் பெருக்கம் இன்னும் போகப்போக அதிக விரிவாய் விளங்கும்.

இரண்டாம் பாகம்

அனந்த தயையுள்ள சர்வேசுரன் மனிதனைப் பாவத்திலும் பசாசின் அடிமைத்தனத்திலும் நின்று இரக்ஷிக்க மனிதனாய்ப் பிறக்க சித்தமானார் என்று முதல் பாகத்தில் கேட்டீர்கள். இவர் தாம் சிருஷ்டித்த உலகத்தில் வரும் போது எந்த வகையில் வருவது அவருடைய தேவ மகத்துவத்துக்கு யோக்கியமாயிருக்குமென்று கேட்டால் புத்தி உள்ள மனிதன் என்ன பதில் சொல்வான்? அவன் சொல்வது ஏதெனில்: நாமிருக்கும் உலகத்தில் ஓர் அரசன் தன் இராஜதானியைவிட்டு தனக்குக் கீழ்ப்பட்டிருக்கும் வேறொரு பட்டணத்துக்குப் போனால் அவனுக்கு என்ன மரியாதை, என்ன சிறப்பு ஜனங்கள் செய்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். அதுபோல் உன்னத மகத்துவமுள்ள சர்வேசுரன் மோக்ஷத்திலிருந்து இந்தப் பூமியில் வாழும் சபையில் வரச் சித்தமானால், தேவப்பிரகாச கதிர்கள் வீசும் அற்புதமான ஓர் சரீரத்தைத் தமக்கு உருவாக்குவார். சம்மனசுகள் கையால் செய்யப்பட்ட ஓர் அலங்கார மாளிகையைத் தமது வாசஸ்தலமாகத் தெரிந்துகொள்வார். அதைச் சுற்றிலும் சுகந்த வாசனை வீசும் புஷ்பச் செடிகளும், கண்ணுக்கு ரமணீயமுள்ள விருக்ஷஜாதிகளுமிருக்கும். ஆதி மனுஷனுக்காக சிருஷ்டித்த சிங்கார உத்தியான வனத்திலும் சிறந்த நந்தவனத்தைத் தமக்கு உண்டாக்குவார். தம்மிடமுள்ள தேவ மகத்துவ

ஒளி, சமயத்துக்குச்சமயம் மின்னல் கண்ணைப் பறித்து மின்னுவதுபோல், வெளியே தோன்றும்படி அதைக் காண்பிப்பார். இவருடைய இராஜசமஸ்தானத்தில் சம் மனசுகளும் பாவமில்லாத பரிசுத்தவான்களும் மாத்திர மிருப்பார்கள். மற்ற சாமானிய ஜனங்கள் கிட்ட வரப் பயப்பட்டு தூரத்தில் அஞ்சி நடுங்கி நிற்பார்கள். இவரை ஒருவிசை தூர நின்று பார்ப்பதே தங்களுக்குப் போது மான பாக்கியமென்று எண்ணுவார்கள். தேவ மகத்துவ ஆண்டவர் உலகத்தில் மனிதனிடம் வந்தால் இவ்வித சிறப்போடு வருவதுதான் அவருக்கு யோக்கியம் என் றெண்ணுவான்.

மனிதன் எண்ணம் ஒன்று சர்வேசுரனுடைய எண் ணம் வேறொன்று. கிட்ட வந்து உன் சர்வேசுரனைப் பார். உயர்ந்த மாளிகை எங்கே? பஞ்சுமெத்தை எங்கே? ஊழியர்கள் எங்கே? ஒன்றுங் காணோம். யார் அந்தப் பாலகன்? எந்த ஏழை பெற்ற பிள்ளை? ஊருக்கு வெளியே தன் வீடு என்று ஒன்றுமில்லாமல், நாலு பக்க மும் திறந்த இடத்திலே, மாடுகள் அடையும் தொழுவிலே, வைக்கோல்மேலே படுத்து பழந் துணியால் மூடப்பட்டு, குளிரிலே வருந்தி இருக்கும் அந்தப் பாலகன் யார் என்று கேள். வானமும பூமியும் அவைகளிலுள்ள சமஸ்த சிருஷ்டிகளும் அவர்தான் சர்வலோக ஆண்டவர் என்று சொல்லும். இவர்தான் சர்வ வல்லப சர்வேசுரன். இவர் வருகைக்காக மனிதர்கள் நாலாயிர வருஷம் ஆவலோடு காத்திருந்தார்கள். இனி வருங் காரியங்களைத் தூரதிர்ஷ் டியால் அறியுந் தீர்க்கதரிசிகள் இவர் அரசின் பெருமை யையும் சிறப்பையும் பாராட்டி இருடைய தேவத்து வத்தை வருணித்து புகழ்ந்திருந்தார்கள்.

காலமே சூரியன் பிரகாச ஒளியோடு கீழ்த்திசையில் உதயமாகி எங்கும் தன் கிரணங்களை சராமாரியாய் விட்டு எல்லா உயிர்களுக்கும் சந்தோஷமும் பாக்கியமும் கொடுக் குமென்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கையில், விடிந்து சூரியன் உதித்தாலும் அடர்ந்து கூடிய கார்மேகங் களுக்குள்ளே அது மறைந்து தன் பிரகாசம் நிறைந்த

முகத்தை ஒளித்தாற்போல், நமது தேவ இரட்சகரும் உலகத்தில் மனிதனாய்ப் பிறந்தபோது தம்முடைய தெய்வீக இலக்ஷண பிரகாசத்தை மறைத்து இராவின் இருளிலே பிறகக சித்தமானார்.

ஓ! திவ்விய பாலகா! அழகு வடிவுள்ள குழந்தாய்! ஏன் இந்தக் கோலத்தோடு பிறந்திருக்கிறாய்? ஏன் இவ்வளவு துன்பம் நிறைந்த இடத்தைத் தெரிந்தாய்? உலகமும் அதிலுள்ள சகலமும் உனக்குச் சொந்தமல்லவா? ஏன் இந்த தரித்திரம்? சுவாமி! நீ பேச வாயில்லாத பாலகனாய்த் தோன்றினாலும், உன்னிடத்தில் எல்லையும் அளவும் கடந்த ஞானமும், அறிவும் பூரணம் பெற்றிருக்கின்றன. அந்த வைக்கோலாகிற ஆசனத்திலிருந்து உன் இருதயத்திலிருக்கும் தேவ ஞானத்தை எங்களுக்குப் படிப்பிப்பாயாக. தேவ பாலகா, பேசு. இதோ! உன் ஊழியன் செவிகொடுத்து உன் வாயிலிருந்து வரும் அமிர்த வார்த்தைகளைக் கேட்க நான் தயாராயிருக்கிறேன்.

சகோதரரே! தேவபாலகன் சமீபத்தில் கிட்ட வாருங்கள். அவர் மழலைச்சொல்லால் பேசும் அமிர்த மொழிகளைக் கேளுங்கள். நமக்கு இரக்ஷணியங்கொடுக்க வந்திருக்கிறார். அவருடைய வார்த்தை நமக்கு வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கும்.

மூன்றும் பாகம்

நமது தேவ இரக்ஷகர் மனிதர்களுக்கு மோக்ஷத்துக்குப் போகும் நேரான வழியைக காண்பிககும்படி மனிதனாய் பிறந்ததால் பிறந்த உடனே தாமதமின்றி தமது தேவ அலுவலைச் செய்யத் துவக்குகிறார். மனிதர்கள் பாவத்தைச் செய்து சர்வேசுரனுடைய சாபத்தைப்பெற்ற நாள் முதல் அவர்கள் புத்தி மயங்கி துர்க்குண பாசங்கள் மேற்கொள்ள, நன்மையைச் செய்வது வருத்தமும், தீமையைச் செய்வது எளிதுமாய்ப் போக இன்னும் பல சமயங்களில் நன்மை இதுவென்றும் தீமை அதுவென்றுந் தெளிவாய்ப் பகுத்தறியும்படியான சக்தியுமின்றி இருக்கி

ருர்கள். இந்த மதிமயக்கம் நிமித்தம், கண்ணுக்கு எது பகட்டாயும் பளிச்சென்றும் தோன்றுதோ, அதை மதிப்பார்கள். பொன்னும் வெள்ளியும், காசும் பணமும், காணி பூமி திரவியமும், இவைகள் தான் மனிதர்கள் இராப் பகலாய் மெய்வருந்தி உழைத்து ஆவலாய்த் தேடும் ஆனந்த பாக்கியம். எது ஒருவனைப் பிரபல்லியப்படுத்தி, உயர்த்தி சப்தஞ் செய்யுமோ, அதுவே அவன் தேடிச் சம்பாதிக்கவேண்டிய பெருமை என்பார்கள். உலகத்தில் மனிதனுய் வாழவேண்டுமாஞல் புகழும் கீர்த்தியும், பணமும் திரவியமும், ஒருவனுக்கு இன்றியமையாத சாதனங்கள் என்பார்கள். இதினுல் பணமில்லாதவன் பிணம் என்றும், புகழற்றவன் இழிவுற்றவன் என்றும், சுலோகங்களை உலகத்தில் வழங்கியும், தோன்றில் புகழோடு தோன்றுக, அஃதிலார், தோன்றலில் தோன்ருமை நன்று, என்று கவிகளைக் கட்டியுமிருக்கிருர்கள்.

சேசுநாதர்சுவாமி, மனிதர் மனதில் நிறைந்த அஞ்ஞான இருளை நீக்க, ஞான சூரியனுய் வந்தவர், உலகத்தார் எண்ணமும், கொள்கையும், நோக்கமும் தப்பிதமானவைகள் என்று கண்ணுக்குப் புலப்படும்படி பிரகாசிக்க, உலகத்தில் அவர் வந்தபோது பரம ஏழையாய் ஒன்றுமில்லாதவர்போல் தரித்திரத்திலும் துன்பத்திலும் பிறந்தார்.

ஓ! திரவியவான்களே! பணமே உங்களுக்குச் சர்வ பாக்கியமென்று அதை எவ்வகையாலாகிலுந் தேடும்படி உங்கள் ஜீவியநாட்களைச் செலவழிக்கிறீர்கள். திரவியந் தேடுவதில் நியாயம் அநியாயம் பாராமல், உங்கள் மனச் சான்றின் சொல்லையுங் கேளாமல், தேவ கற்பனைகளை அலட்சியஞ்செய்து நடக்கிறீர்கள். பிறர் பொருளை அநியாயமாய் எடுத்து, எடுத்ததைத் திரும்பவும் கொடுக்க மனமில்லாமலிருக்கிறீர்கள். இதோ! இந்தக் குடிலுக்குள் வாருங்கள். வைக்கோல்மேலே, மிருகங்கள் மத்தியில் படுத்திருக்கும் பாலகனைப் பாருங்கள்! உலக சிருஷ்டிகர் இவ்வளவு பஞ்சை கோலத்தில் படுத்திருப்பதைக் கவனியுங்கள். நீங்கள் மதிக்கும் திரவியத்தை இவர்

தமது காலால் மிதித்து, நீங்கள் வெறுக்கும் தரித்திரத்தை இவர் ஆவலாய்த் தேடி இருக்கிறார்.

ஓ! பாக்கியம்பெற்ற தரித்திரமே! சர்வேசுரனுடைய மதிப்புக்குரிய எளிமையே! என்னைத் தேடி உன்னத சர்வேசுரன் இந்த உலகத்துக்கு வந்திருக்கிறார். மோக்ஷம் சகல பாக்கியமும் சம்பூரணமாய் நிறைந்த ஸ்தலமாதலால், அங்கே தரித்திரமிருக்காது. இந்தப் பூமிதான் துன்பமும் துயரமும் நிறைந்த கண்ணீர் சமுத்திரம், ஆதலால் இங்கேதான் தரித்திரம் உண்டு. சேசுநாதர் தரித்திரத்தை ஆவலாய் அணைத்து அர்ச்சித்திருக்கிறார். திரவியத்தின் பேரில் பற்றும் ஆசையும் இன்றி, மனதில் தரித்திரமுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று வைக்கோல் ஆசனமீதிருந்து படித்துக்கொடுக்கும் பாடத்தை மனதில் ஆழமாய்ப் பதியுங்கள்.

உங்களுக்குள்ளே தரித்திரத் திசையிலிருக்கிறவர்கள், சர்வேசுரன் உங்கள் நித்திய நன்மைக்காகக் குறித்த அந்தஸ்து அதுதான் என்று, முறைப்படாமல், பொறுமை இன்றி, இருப்பது உங்கள் கடமை. சேசுநாதரைப்போல் நீங்களும் ஏழைகளாயிருப்பதால் சந்தோஷப்படுவது கிறீஸ்துவர்களுக்கு அழகு.

திரவியவான்கள் உங்களுக்குள் இருந்தால் அவர்கள் வீண் கர்வங்கொள்ளாமலும் பெருமை பாராட்டாமலும் எவரையும் ஏழை என்று நிந்திக்காமலும் இருப்பது அவர்கள் கடமை. சர்வேசுரன் உங்கள் கையில் வைத்த பணத்தை, குடும்பத்தைக் காப்பாற்ற அவசியமான காரியங்களிலும் தர்ம விஷயங்களிலும் செலவு செய்வது உங்களுக்கு யோக்கியம். பண ஆவேசம் பிடித்தவர்கள் படுகுழியிலே தப்பாமல் விழுவார்கள். ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவதிலும் திரவியவான் மோக்ஷம் சேர்வது அதிக வருத்தம் என்று தேவ ஞானமுள்ள ஆண்டவர் சொன்ன இடியோசை ஒத்த வாக்கியம் எப்போதும் திரவியவான்களின் மனதிலிருக்கவேண்டும்.

தேவபாலகன் மாட்டுக்குடிலிலிருந்து சொல்லும் இரண்டாம் புத்திமைக் கேளுங்கள். மனிதர்கள் மனதில் எழும்பும் பல துர்க்குணங்களுக்குள் அகங்காரம் முக்கியம். மனிதன் அற்பனானாலும் தன்னை உயர்த்தி எவர்க்குமில்லாத அறிவு, சாமர்த்தியம், இலக்ஷணம், எதுவோ, அது தன்னிடமாத்திர மிருப்பதாக வீணாய் எண்ணி, மற்றவர்களைப் பழித்து நிந்திக்கிறான். இதிலே இருந்து பகையும், பழியும், சண்டையும், புறணியும், கடைசியில் சகலவகைப் பாவங்களும் உற்பத்தியாகி வளர்ந்துவருகின்றன.

சேசுநாதர்சுவாமி தாழ்ச்சியை மனிதர்களுக்குப் படிப்பிக்க வந்திருக்கிறார். கிட்ட வந்து அவர் சொல்வதைக் கேளுங்கள்: "நாம் இருதயத்தில் தாழ்ச்சியுஞ் சாந்தமும் உள்ளவர். நம்மிடம் வந்து இந்தப் பாடத்தைப் படியுங்கள்." சேசுநாதர் உலகத்துக்கு வருமுன்னே தாழ்ச்சி என்பது புண்ணியம் அல்ல, ஓர் இழிவான நீசக்குணம். தன்மட்டில் தாழ்ந்த எண்ணங்கொள்வதும், இன்னொருவனுக்குத் தாழ்ந்து பணிவதும் கௌரவக்குறை என்று மனிதர்கள் எண்ணி நடந்தார்கள்.

சேசுநாதர் முதல்விசை மனிதர்களுக்குத் தாழ்ச்சி சிறந்த புண்ணியம் என்றும், மற்றப் புண்ணியங்களைப் பிறப்பிக்கும் தாய் என்றும், படிப்பித்தார். சகோதரரே! தாழ்ச்சியின் பாடத்தை இந்தப் பாலகன்முன் வந்து படியுங்கள். தேவ ஞான மகிமை உள்ள சர்வேசுரன் ஒன்றும் அறியாத சிறு பிள்ளையாய் மனிதர்கள் நடுவில் வந்திருக்கிறார். நீங்களும் சிறு பிள்ளைகளைப்போல் பெருமையும் கர்வமும் இன்றி தாழ்ச்சியுடன் நடந்தால்தான் மோக்ஷத்துக்குப் போவீர்கள்.

இன்னும் ஒரு பாடம் தேவபாலகன் மனிதர்களுக்கு கற்பிக்கிறார். திரவிய ஆசை, பெருமையின் ஆசை, ஆகிய இந்த ஆசைகளோடு, மனிதர் மனதில் சரீரசுக இன்ப ஆசையும் பலமாயிருக்கிறது. இந்தச் சிற்றின்ப ஆசையால் மனிதன் ஆத்துமத்தையும் சரீரத்தையும் அசுத்தமாக்குகிறான். சரீரம் மனிதனுக்கு பெரிய சத்துருவென்

றும், அதை அடக்கி ஒறுத்து தபசின் பாதையில் நடப்பது அவன் கடமை என்றும், சேசுநாதர்சுவாமி இந்த வைக்கோல் ஆசனமீதிருந்து மனிதர்களுக்குப் படிப்பிக்கிறார்.

சரீர சுகத்தை மிதந்தப்பித் தேடி பாவத்தின் கஷ்டத்தில் விழுந்துகிடப்பவர்களே! இதோ இங்கே படுத்திருக்குந் தேவபாலகனைப் பாருங்கள்! அவருடைய மிருதுவான நொய்ய சரீரம் எப்படி பதைத்துத் துடிக்கின்றது. குளிரின் கொடுமையைத் தாங்கமாட்டாமல் பாலன் வாய்விட்டு அழுகிறான். இந்தக் காட்சியைப் பார்த்தபின் இனிமேல் உங்கள் சரீரத்துக்கு மிதந்தப்பின சுகமும், ஒழுங்கற்ற சந்தோஷமும் கொடுப்பீர்களோ? தபசு செய்து சரீரத்தை அடக்க மனமில்லாதிருப்பீர்களோ?

ஓ! தேவபாலகா! எங்களுக்கு மோக்ஷ பாதையைக் காட்டும்படியாய் மனுஷாவதாரம் எடுத்தீர். இந்தக் குடிலிலிருந்து எங்களுக்குப் படிபிக்கும் சுகிர்த புத்தியை நாங்கள் கேட்டோம். இந்தப் புத்தியின் பிரகாரம் இனிமேல் நடப்போம். திரவியம் பொருளை நாங்கள் இனிமேல் ஆவலாய்த் தேடாமல் உம்மைப்போல் தரித்திரத்தை சிநேகிப்போம். நிலையற்ற உலக மகிமையைத் தேடாமல், இனி உம்மைப்போல் தாழ்ச்சி உள்ளவர்களாயிருப்போம். சரீர சுகத்தைத் தேடாமல் உம்மைப்போல் இனி தபசின் பாதையில் நடப்போம். உம்மை அடுத்து அணுகிப் பின் சென்று, உம்மைப்போல் நடப்பதே எங்களுடைய மாறாத் தீர்மானம்.

தேவமரியே! நாங்கள் சேசுநாதரை நன்றாய் அறிந்து உருக்கமாய் சிநேகித்து, அவர் சமீபத்தில் அடுத்து நிற்கும் பாக்கியம் பெறும்படியாய் எங்களுக்காக உமது தேவமகனை மன்றாடுந் தாயே.

(தியான முடிவில் பிரியதத்த மந்திரமும், கிறீஸ்துவின் ஆத்துமமானதே என்ற ஜெபமும் சொல்.)

ஐந்தாம் நாள்—மூன்றும் தியானம்

தேவபாலகனை மூன்று இராஜாக்கள் ஆராதித்த வர்த்தமானம்

சேசுநாதர்சுவாமி சகல ஜாதி ஜனங்களுக்கும் இரக்ஷகராய் வந்ததால் தாம் வந்த சுப செய்தியை எல்லா ஜாதி ஜனங்களுக்கும் அறிவிக்கச் சித்தமானார். யூத ஜாதியார் சர்வேசுரனால் தெரிந்தெடுக்கப்பட்ட தேவப்பிரஜைகளாயிருந்ததாலும் அவருடைய இனத்தாரான சொந்த ஜனம் என்பதின் நிமித்தமும் அவர்களுக்கு, மற்ற ஜாதியாருக்கு முன், விசேஷ முறையில் தமது பிறப்பை அறிவித்தார். சம்மனசுகள் திவ்வியமான மோக்ஷாலங்காரத்தோடு மந்தைகளைப் பாாத்திருந்த கபடற்ற இடையருக்குத் தரிசனங் கொடுத்து மங்களஞ் சொல்லி அவர்கள் அனைவரும் ஒன்றாய்ச் சேர்ந்து பிறந்த இரக்ஷகரை ஆராதிக்கும்படிப் போகச் சொன்னார்கள். அவர்களும் போய் தேவ பாலகனை வணங்கி ஸ்துதி பாடி ஆராதித்தபின்பு மகிழ்ந்த மனதோடு மந்தைக்குத் திரும்பினார்கள்.

அவர்களுக்குப்பின் நமது தேவ ஆண்டவர் பிறஜாதியாரான அஞ்ஞான ஜனங்களுக்கு, அவர்களுக்கு ஏற்ற வகையில், தம்மை அறிவித்தார். இவர்களை அழைத்த வகையும், இவர்கள் பிரயாணத்தின் வரலாறும், சேசுநாதர் சுவாமியை இவர்கள் பார்த்து வணங்கிய முறையும் எல்லாம் ஆச்சரியமும் அற்புதமும் பிரயோசனமும் உள்ளது. இதின்பேரில் தியானம் இப்போது செய்யப்போகிறோம். சமுத்திரத்தின் நட்சத்திரமாகிய தேவதாயார் நமக்குத் துணையாய் முன் நடந்து வழி காட்டுவாளாக.

முதல் பாகம்

உலக இரக்ஷகர் பிறந்த அந்த இராத்திரியிலே கீழ்த் திசையில் பிரகாசமுள்ள ஓர் நட்சத்திரம் நவமாய்த் தோன்றினது. அதிலிருந்து புறப்பட்ட தெள்ளிய கிர

ணங்கள் மற்ற பிரபைகளைப்பார்க்கிலும் வெகு துலக்க மாய்த் தோன்றியதால் இந்த நவமான நட்சத்திரத்தைப் பலபேர்கள் பார்த்தார்கள். பார்த்தும் இதின் விவரம் அறியாமலும் மற்றவர்களிடம் விசாரியாமலுமிருந்துவிட்டார்கள். வானசாஸ்திரிகளான மூன்றுபேர் இதைப் பார்த்தவுடனே பாலாம் தீர்க்கதரிசியின் வாக்கியத்தை நினைத்து இது புதிதாய்ப் பிறக்கும் யூதர் இராஜாவைக் குறிக்கும் அடையாளமாயிருக்கவேண்டுமென்று மனதில் தீர்க்கமாய் விசுவசித்து, தூரம் தொலையையும் ஆபத்து வருத்தங்களையும் பாராமல் பிறந்த நாதனைக் கண்டு தரிசித்து ஆராதிக்க வேண்டுமென்ற ஆவலால் உடனே புறப்பட்டார்கள்.

இவர்கள் பிரயாணத்தில் நடந்த சங்கதியைச் சொல்லுமுன், இவர்கள் காட்டிய மனத் துணிவைப்பற்றி யோசித்து அதிலிருந்து நீங்கள் படிக்கவேண்டிய புத்தியை அறிவது சுகிர்தம். சேசுநாதர்சுவாமி சமஸ்த மனிதரையும் இரட்சிக்க ஆசையாயிருக்கிறதால் சகலரும் தம்மை அறிந்து சிநேகித்து ஊழியஞ் செய்யும்படியாய் எல்லாரையும் கூப்பிடுகிறுர். எல்லாருக்கும் ஓர் வகையான நட்சத்திரம் தோன்றும். அவனவன் அந்தஸ்து, குணம், சுபாவத்துக்குத் தக்கதுபோல் நட்சத்திரமும் வித்தியாசமாயிருக்கும். சாதாரணமாய் சர்வேசுரன் உனக்கு அனுப்பும் நட்சத்திரம்: தியானம், பிரசங்கம், ஞானவாசகம், ஜெபம், கோவில் முதலியவைகள். இந்தச் சமயங்களில் நீ கேட்கிறதும், பார்க்கிறதும் உன் மனதில் பளிச்சென்று நட்சத்திரம்போல் பிரகாசிக்கும். சர்வேசுரன் உன்னிடம் கேட்பது இன்னதென்று அறிவாய். நீ பாவத்தை விட்டு வெளியே வா, அந்தத் துஷ்டத் தோழனோடு நீ சகவாசஞ் செய்யாதே, நீ வாசிக்கும் புஸ்தகம் தகாது, உன் தாயையுந் தந்தையையும் வீட்டையும் விட்டு நமக்கு சந்நியாச அந்தஸ்தில் ஊழியஞ் செய்ய வா, பணத்தின் பேரில் மிதந்தப்பின ஆசையை அடக்கு, உன் சரீரத்தை நீ துர் இச்சையின் வழியில் நடத்துகிறுய், தபசு செய்து பஞ்சேந்திரியங்களை ஒடுக்கு, பாவசங்கீர்த்தனம் செய், தேவ நன்மை கூடுமானபோதெல்லாம் வாங்கு என்று இப்படியாய் உன்

மனதில் சப்திக்கும் இந்தப் புத்தியெல்லாம் நட்சத்திரத்தின் பிரகாசத்தால் சர்வேசுரன் உன்னிடம் கேட்பது. இதை மறுத்து, உன் மாம்ச இச்சையும், உன் சுய மனதும், உன் துஷ்டத்தோழரும், உனக்குப் பல விக்கினஞ் செய்து உனக்குப் புத்தி போதிப்பார்கள்: அப்பா! நீ இப்படிச் செய்வது உனக்கு யோக்கியமல்ல. உன் சரீரம் வாடிப்போம். பார்க்கிறவர்கள் உன்னைப் பழிப்பார்கள். உன்னைக் கோவில் பூனையென்றும் குருவுக்கு அடிமையென்றும் சொல்வார்கள். உலகத்தோடொத்து வாழ்வதை அறியாப் பேதை என்றும், இந்துக்களான பெரியோரின் மதிப்பைத் தேடாத ஜாதிப் பிரஷ்டன் என்றும், ஜெபமாலையை வெறுமனே கையிலெடுத்து உருட்டும் கிழவி என்றும் சொல்வார்கள். இப்படியாய் இவர்கள் உன்னைப் பழித்து உன் மனதைக் கலக்கி, நீ துவக்கின அலுவலை முடிக்காதபடி பல விக்கினங்களை மலைபோல் அடுக்குவார்கள்.

நீ மனத்துணிவை இழந்துபோகாமல் இந்த இராஜாக்களைப்போல், சேசுநாதர் என்னைக் கூப்பிடுகிறார். நான் போவேன். யார் என்னைத் தடுக்க வல்லவர்? அணி அணியாய் வகுக்கப்பட்ட யுத்தசேனை என்னை எதிர்த்தாலும் என் மனம் அஞ்சாது என்று சொல்லவேண்டும்.

இந்த இராஜாக்களுக்கு வழியிலே எவ்வளவு துன்பம் வந்ததென்றும், அவர்களும் எவ்வளவு மன ஊக்கத்தோடு துவக்கின அலுவலைத் தொடர்ந்து செய்தார்களென்றும் இரண்டாம் பாகத்தில் விவரிப்போம்.

இரண்டாம் பாகம்

மூன்று இராஜாக்களும் தங்கள் தங்கள் தேசத்தை விட்டு யூதர் இராஜாவைச் சந்திக்கப் புறப்பட்ட உடனே, நவமாய்த் தோன்றிய அற்புத நட்சத்திரம் இவர்கள் முன் சென்று பிரகாசம் வீசி வழிகாட்டினது. எந்தத் திசையை நோக்கிப் போகலாம் என்று இவர்கள் மனதில் கலங்கி மலைத்து நிற்கையில், இவர்கள் காட்டின மனத்துணிவின்

பலனாக சர்வேசுரன் வானப்பிரபை இவர்களுக்கு வழியின் துணையாயிருக்க அற்புதஞ் செய்தார்.

இதில் அடங்கிய புத்திமை நன்றாய்க் கவனியுங்கள். சர்வேசுரனுடைய தேவ சித்தத்தை நிறைவேற்றுவதில் ஆதித்துவக்கத்தில் பலமுறை விக்கினங்களும் இடையூறுகளும் பல வழியிலிருந்து திரண்டு மொய்த்து வரும். ஆனால் தளராத மனத்துணிவுடனே துவக்கின அலுவலை சோரவிடாமல் முயன்றால் மலைபோல வந்த விக்கினங்கள் பனிபோல் கரைந்துபோவதைச் சந்தோஷத்துடன் காண்பீர்கள். சர்வேசுரனே உங்கள் மனத்துணிவைப் பார்த்து தமது தேவ வரத்தின் உதவியால் எல்லாம் எளிதாகும்படி செய்வார். எந்த அலுவலானாலும் அதின் துவக்கம் கடினம். இதினாலே நன்றாய்த் துவக்கின வேலை அரைவாசி முடிந்த வேலை என்பது அனுபவ வாக்கியம்.

அரசர்கள் மூவரும் நட்சத்திர பிரகாசத்தில் நடந்து ஜெருசலேம் பட்டணம் சேர்ந்தார்கள். சேர்ந்தவுடனே வானப்பிரபை மறைந்துபோனது. இதைப் பார்த்ததும் அரசர்கள் என்ன செய்தார்களென்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ஐயோ! மோசம் போனோமே. துஷ்டன் ஏரோதன் கையிலே அல்லோ அந்தப் பாழும் நட்சத்திரம் காட்டிக்கொடுத்துவிட்டது. இனி என்ன செய்வோம்? ஊருக்கு வெட்கத்தோடு திரும்பிப் போகவோ? என்று இப்படி நினைத்து ஊருக்குத் திரும்பினார்களோ? அல்ல, அல்ல; அவர்கள் மனது அற்பமாகிலும் தளம்பவில்லை. சர்வேசுரன் தங்களை ஏய்த்துப்போட்டாரென்று கனவிலும் நினைக்கவில்லை. தங்களைக் கூப்பிட்ட ஆண்டவர் தங்களைக் குறித்த இடத்தில் சேர்ப்பாரென்று திண்ணமாய் எண்ணி இருந்தார்கள்.

ஆனதால், அந்தப் பட்டணத்திலிருந்த ஏரோதன் அரமனைக்கு நேரே போய் துணிந்த மனதோடு புதிதாய்ப் பிறந்த யூதர் இராஜா எங்கே இருக்கிறார் என்று கேட்டார்கள்.*

* மத்தேயு சுவிசேஷம் 2-ம் அதி. 1-12 வசனங் காண்க.

சகோதரரே! எவ்வளவு சிறந்த தர்ம நடத்தை! நான் சேசநாதரை ஆராதிக்கிறவன், நான் கிறீஸ்துவன், என்று ஓர் சபையில் சமயம் வரும்போது பயமின்றி, பகிரங்மாய்ச் சொல்லும்படியான துணிவுள்ள கிறீஸ்துவர்கள் இந்தக் காலத்தில் எங்கே இருக்கிறார்கள்? திருச்சபையின் ஆதி காலத்தில், கிறீஸ்துவர்கள் கொடுங்கோலன்முன் நிமிர்ந்து நின்று பயமின்றி, நான் கிறீஸ்துவனென்று சொல்லுவார்கள். துன்பமோ, நிந்தையோ, சாவோ ஒன்றுக்கும் பயப்படமாட்டார்கள். நான் கிறீஸ்துவனென்று சொல்வது அவர்களுக்குப் பெருமையும் மகிமையுமாயிருந்தது. இந்தக் கலிகாலக் கிறீஸ்துவர்களோ, தங்களைக் கிறீஸ்துவர்கள் என்று ஓர் சபை நடுவில் சொல்ல அஞ்சி நடுங்குவார்கள். சிலர் அஞ்ஞானிகளின் மதிப்பைப் பெற, அவர்களுடைய புராணங்களையும் கதைகளையும் படித்து அறிந்து நம்புகிறவர்களைப்போல் அவர்கள் சபையில் நடித்துப் பேசி, சாம்பலையும் சில சமயங்களில் தேகத்தில் தடவி, சந்தனப்பொட்டும் இந்த எண்ணத்தோடு நெற்றியிலிட்டு, இப்படியாய் வேஷம் போடுவார்கள். நான் கிறீஸ்துவன் என்று நாலுபேர்முன் சொல்ல அவர்கள் நாக்கு வழங்காது. இவர்கள் வீடுகளிலே சிலுவையாவது சத்தியவேத சுரூபம் அல்லது படமாவது பிரசித்தமான இடத்தில் வைக்கத் துணியமாட்டார்கள். இவைகளுக்குப் பதில் லோகார்த்தமான ரூபங்களை எல்லாரும் பார்க்கும்படியாய்க் காட்டுவார்கள். குடிகாரர் படமும், குலதேவதை படமும், பாதி நிர்வாணமான மோகினிப் பெண்களின் சன சாயலும் ஆகிய இவைகளைத்தான் சில கிறீஸ்துவப் பெரிய மனுஷாள் வீட்டில் தங்க முலாம் பூசின சட்டத்தில், நாலுபேர் கூடும் நடுச்சாலையில், நாளைக்கும் பார்க்கலாம்.

சில கிறீஸ்துவர்கள் தங்கள் பரிசுத்த வேதத்தை மறைக்கும்படியாகத்தான், தங்கள் வீடுகளில் அஞ்ஞான சடங்குகள், ஆலாத்தி முதலிய சடங்குகள், திருஷ்டிப் பரிகார முதலிய சாந்தி ஆசாரங்கள் சில விசேஷ தினங்களில் நடத்தி, அஞ்ஞானிகளான தங்கள் இஷ்டாள்களை அழைத்து, இதுவெல்லாம் அவர்கள் பார்த்து, தாங்கள்

கிறீஸ்துவர்களானாலும், இந்துக்களைப்போல் ஜாதி ஆசாரம் அனுஷ்டான முறைகளைக் குறைவின்றி அநுசரிக்கிறவர்களென்று அவர்கள் அறிந்து மெச்சிக்கொள்ளும்படியாய்க் காட்டுவார்கள்.

எவன் மனிதர்முன் தான் சேசுநாதருடைய சிஷனென்று அங்கீகரிக்க வெட்கப்படுகிறானோ, அவனைச் சேசுநாதர் கடைசி நாளில் தமது பிதாவின் முன் தமது சீஷன் என்று சொல்ல வெட்கப்படுவதாக சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறார். தியானஞ் செய்கிற நீங்கள் சேசுநாதர்சுவாமி உங்களுக்காக எவ்வளவு செய்திருக்கிறார் என்று கொஞ்சமாகிலும் அறிந்திருக்கிறீர்கள். அவருடைய பிள்ளைகளாயிருப்பது உங்களுக்குப் பெரிய மகிமையென்று மனதில் திண்ணமாய்ப் பதியச் செய்யுங்கள்.

ஏரோதன் புதிதாய் ஓர் யூதர் இராஜா பிறந்திருக்கிறார் என்று கேட்டவுடனே பயந்து நடுங்கினான். ஏன் இவ்வளவு பயம்? ஏனென்றால் இவன் அநியாயமாய்ப் பிடித்த அரசை, அக்கிரமமாய் ஆண்டுவந்ததால் தனக்கு ஏதோ மோசம் வருமென்று அஞ்சினான். ஓ! துஷ்டா! புதிதாய்ப் பிறந்த ராஜன் உலகத்தில் அரசு செலுத்த வரவில்லை. இவர் ஞான அரசு மனிதர் மனதில் ஸ்தாபித்து இரக்ஷணியங் கொடுக்க வந்திருக்கிறார். உலகத்துக்குச் சமாதானங் கொடுக்க வந்திருக்கும்போது நீயேன் மனதில் கலங்கி நடுங்குகிறாய்? தாழ்ச்சியும் அடக்கமும் பணிவும் படித்துக் கொடுக்க வந்தவர் உலக பெருமையைத் தேடுவாரா?

இந்தக் கொடிய ஏரோதனைப்போல் சில கிறிஸ்துவர்கள் சேசுநாதர் பெயரைக் கேட்டாலே நடுங்குவார்கள். இவர்கள் மனதில் பாவம் குடியாயிருப்பதால் இவர்களுக்குச் சேசுநாதருடைய சமாதானம் இல்லை. பாவிக்கு மெய்யான சந்தோஷமேது? சுத்த மனதுள்ளவர்கள்தான் எப்போதும் சமாதானமும் சந்தோஷமும் உள்ளவர்களாயிருப்பார்கள்

ஏரோதன், யூதர் இராஜா எங்கே பிறப்பாரென்று வேத சாஸ்திரிகளிடம் விசாரித்தான். அவர்கள் அவர்

பெத்லேம் ஊரில் பிறப்பார் என்று சொல்ல, மூன்று அரசர்களும் ஜெருசலேம் பட்டணத்தைவிட்டு பெத்லேம் ஊருக்குப் பிரயாணமாய் வெளியே வந்தார்கள். இனி இவர்கள் சேசுநாதர்சுவாமியைப் பார்த்து ஆராதித்ததும் அதன்பின் சம்பவித்ததுமான வர்த்தமானங்களைப் பின் வரும் பாகத்தில் விவரிப்போம்.

மூன்றும் பாகம்

ஏரோதன் அரசாண்ட ஜெருசலேம் பட்டணத்தில் பாவமும், அறியாமையும், அவிசுவாசமும் அடர்ந்து நிறைந்து காரிருள்போல் மூடியிருந்ததால் அற்புத நட்சத்திரம் அங்கே மறைந்துபோனது. இதைவிட்டு அரசர்கள் வெளியே வந்ததும் மறைந்திருந்த வானப்பிரபை முன்போல் பிரகாசம் வீசி வழிகாட்டிச் சென்றது. கடைசியாய் ஊருக்கு வெளியிலிருந்த மலையின் சார்பில் மாடுகள் தங்குந் தொழுவில் நட்சத்திரம் நின்றது. உள்ளேபோய் பார்த்தார்கள். வைக்கோல் மேலே ஒரு பாலகன் படுத்திருப்பதைக் கண்டார்கள். இவர்கள் மனதில் தேவ விசுவாசத்தின் பிரகாசம் துலக்கமாயிருந்ததால் அங்கே துன்பத்தின் கையில் படுத்திருந்த குழந்தை உலகத்தை இரட்சிக்க மனிதனாய்ப் பிறந்த சர்வேசுரன் என்று பூரணமாய் அங்கீகரித்து, அவர் பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து அவரை ஆராதித்தார்கள். அதன்பின் தங்கள் பெட்டியைத் திறந்து, பொன், தூபவர்க்கம், மீரை என்ற வெள்ளைப் போளம் ஆகிய இம்மூன்றையும் தேவபாலகன் பாதத்தில் தக்ஷிணையாய் வைத்தார்கள். பொன் இராஜாவையும், தூபவர்க்கம் சர்வேசுரனையும், வெள்ளைப்போளம் மனுஷனையும் குறித்துக்காட்டும் அடையாளங்கள். கடைசியில் தேவ குழந்தையின் ஆசீர்வாதம்பெற்று, அவரைப் பெற்ற பாக்கியவதியான கன்னித்தாயை வாழ்த்தி, சம்மனசுகள் அறிவித்தபிரகாரம் வேறே பாதை வழியாய் தங்கள் தேசத்துக்குத் திரும்பிப்போனார்கள்.

இந்த இராஜாக்கள் காண்பித்த உறுதியான விசுவாசத்தைப் பார்த்து ஆச்சரியப்படாதவன் யார்? இதுதான் உயிருள்ள உத்தம விசுவாசம். இதுதான் இரக்ஷணியத்துக்கு அவசியமான தேவவிசுவாசம். இவ்வித விசுவாசத்தைத்தான் சேசுநாதர் உங்களிடத்தில் கேட்பார். நீங்கள் கோவிலுக்குள் வரும்போது நட்சத்திரம்போல் ஓர் தீபம் பீடத்துக்கு நேரே பிரகாசிக்கிறதைப் பார்த்திருக்கிறீர்கள். ஆனால் அது எதைக்குறிக்கிறதென்று எப்போதாவது கவனித்ததுண்டா? பீடத்தின் மத்தியில் ஓர் குடில் இருக்கின்றது. உள்ளே யார் இருக்கிறார்? சேசுநாதர் சுவாமிதான். மூன்றரசர் கண்முன் இவர் சிறு பாலகனாயிருந்தார். உங்கள் கண்முன் அப்பத்தின் வெளித்தோற்றமாகிற திரைக்குள்ளே இவர் மறைந்து நிற்கிறார். நீங்களும் அவர்களைப்போல் அவர் பாதத்தில் விழுந்து ஆராதியுங்கள். மெய்யான சர்வேசுரனும் மெய்யான மனுஷனுமாயிருக்கும் உங்கள் இராஜாவென்று அங்கீகரித்து அவரைப் பார்த்துச் சொல்லுங்கள்: என் சேசுவே! உம்முடைய ஊழியத்துக்கு என்னை நான் முழுவதும் நேர்ந்து கொடுக்கிறேன். உமது சமீபத்திலிருந்து உம்மைப் பார்த்து நீர் செய்வதுபோல் நானுஞ் செய்வேன். என் விசுவாசத்தை ஸ்திரப்படுத்தும். என் நம்பிக்கையைப் பலமாக்கும். உம்மை நான் என் இருதய ஆசைக்களவாய் சிநேகிக்க கிருபை செய்யும். தேவ மரியே! நான் சேசுநாதர்சுவாமியை நன்றாய் அறிந்து, உருக்கமாய்ச் சிநேகித்து அவரை என்றும் விட்டுப் பிரியாமலிருக்கும்படியாய் எனக்காகப் பிரார்த்தியும் தாயே!

தியான முடிவில் **பிரியதத்த** மந்திரமும், **கிறிஸ்துவின் ஆத்துமமானதே** என்கிற ஜெபமும் சொல்.

ஐந்தாம் நாள்—ஞானபோதகம்

வேதசத்திய விசுவாசம்

நமது அன்புள்ள இரக்ஷகர் உலகத்தில் இருந்த காலத்தில் ஒருநாள் தமது சீஷர்களைத் தமக்கு முந்தி கப்பலில் அனுப்பி, அவர் தமது வழக்கம்போல் ஓர் மலையில் ஜெபஞ் செய்யும்படி போயிருந்தார். ஜெபம் முடிந்தபின், அவர்களிருந்த கப்பலில் சேரும்படியாய், கடல்மேல் நடந்து வந்தார். தண்ணீரின்மேல் நடந்துவருகிறவரைக் கண்டமாத்திரம் அப்போஸ்தலர்கள் என்னமோ ஏதோவென்று பயந்தார்கள். அர்ச். இராயப்பர் சேசுநாதரைப் பார்த்து: சுவாமி! தேவரீராகுல் நானும் தண்ணீர்மேல் நடக்கக் கிருபை செய்யும் என்று கேட்டார். சேசுநாதர்சுவாமி, நல்லது வா, என்றதும், இராயப்பர் கடலில் குதித்து தண்ணீரின்மேல் நடந்தார். ஆனுல் பெருங் காற்று சுழன்று அடித்ததால் அலைகள் எழும்பி மோதி வரும்போது இராயப்பர் பயந்து: சுவாமி! நான் அமிழ்ந்திப்போகிறேன். என்னை இரக்ஷியும், என்று கூப்பிட்டார். நமது ஆண்டவர் அவர் கையைப் பிடித்துத் தாங்கி, அற்ப விசுவாசமுள்ளவனே! ஏன் பயந்து நம்பிக்கை இல்லாதிருந்தாய், என்று அவரைக் கண்டித்துப் புத்தி சென்னுர்.

சேசுநாதர்சுவாமி தமது சீஷர்களிடம் கேட்பது தேவ விசுவாசம். அதுவும் ஸ்திரமான விசுவாசம். தளராத விசுவாசம். துன்ப சமுத்திரமாகிய இந்தப் பூமியில் சோதனையும், ஆபத்தும் புசல்போல் எழும்பி அடிக்கையில், இதில் அமிழ்ந்திச் சேதமாய்ப் போகாதபடிக்கு மனதாயிருக்கிறவர்கள் ஸ்திரமான தேவ விசுவாசமுள்ளவர்களாயிருக்கவேண்டும். சந்தேகத்தின் நிழல் முதலாயில்லாத உயிருள்ள தேவ விசுவாசம் எல்லாருக்கும் அவசியம். மூன்றிராஜாக்கள் சேசுநாதர் சுவாமி இடத்தில் காண்பித்த விசுவாசத்தை நீங்கள் பார்த்து அதிசயப்பட்டீர்கள். அவ்வித விசுவாசமே கத்தோலிக்கு கிறீஸ்துவர்களின் அறிகுறியான இலக்ஷணம். இதின்பேரில் இப்போது யோசிக்கப்போகிறோம்.

ஆனால் இதைக் கேட்கும் உங்களில் சிலர் நினைப்பதேதென்றால், தேவசத்திய விசுவாசத்தைப்பற்றித் தியானித்து யோசிக்க என்ன அவசியம்? நாங்கள் கிறீஸ்துவர்கள். கிறீஸ்துவர்களாயிருப்பதாலே எங்களிடத்தில் தேவ விசுவாசமிருக்கிறது என்பது நிச்சயம்.

மெய்தான், நாம் கிறீஸ்துவர்களாவதினாலே, சர்வேசுரன் ஞானஸ்நானத்தில் நமக்குத் தேவ விசுவாசங் கொடுக்கிறார். ஆனால் காலத்துக்கும், இடத்துக்கும், சந்தர்ப்பங்களுக்கும் தகுந்ததுபோல் தேவ விசுவாசம் குறையலாம், மாறலாம், சில சமயம் முழுதும் நீங்கலாம். நாம் வாழும் இந்தக் காலத்திலேயும், வாசஞ்செய்யும் இந்து தேசத்திலும், வேத விசுவாசத்துக்கு விரோதமான பலவகையான ஆபத்துகள் எங்கும் நம்மைச் சூழ்ந்துவருகின்றன. அஞ்ஞானமும், அவிசுவாசமும் நாளுக்கு நாள் ஸ்திரங்கொண்டு வளர்கின்றன. இதுமட்டும் தங்கள் சொந்த மதத்தையே கவனியாது வியாபாரத்திலும் உத்தியோகத்திலும் முக்கியமாய் கவனத்தைச் செலுத்திவந்த இந்துக்கள், இப்போது, கிறீஸ்துவப் போதகர்கள் செய்வதைக் கண்டு, இவர்களும் இந்து மதத்தை ஸ்திரப்படுத்தி விர்த்தி செய்ய சபைகள்கூடி, உபந்நியாசங்கள் செய்து, பத்திரிகைகளையும் புஸ்தகங்களையும் எந்தப் பக்கத்திலும் பரப்பி, விடாத முயற்சி செய்துவருகிறார்கள். கிறீஸ்துவர்களாயிருக்கும் இந்துதேசஜனங்களைத் தங்களைப்போல் இந்துக்களாக்க பல உபாயங்கள் செய்கிறார்கள். பாழாய்க் கிடந்த பிசாசின் கோவில்களைத் திரும்பக் கட்டவும், உற்சவ தினங்களை வெகு சிறப்பாயும் விமரிசையாயும் நடத்தவும், அபரிமிதமான திரவியங்களை நாட்டுக்கோட்டைச் செட்டிகள் முக்கியமாய் கொடுத்து உதவுகிறார்கள். இது மட்டுமில்லாத மதாபிமானம் இப்போது இந்துக்கள் மனதில் உற்பத்தியாயிருக்கின்றது.

இவ்வளவோடு நிற்காமல், சேசுநாதருடைய பரிசுத்த வேதத்தைப் பழித்து, அதற்கு விரோதமான அபாண்டப் பொய்களை சிறு தாள்களில் அச்சிட்டு எங்கும் இலவசமாய்க் கொடுக்கிறார்கள். இவர்கள் ஒரு பக்கமிருக்க, வேறே பக்

கத்தில் புரோட்டெஸ்டாண்டார், கத்தோலிக்கு கிறீஸ்துவர்களின் தேவ சத்திய விசுவாசத்தை அடியோடு கெடுக்கும்படியாய் பல ஊர்களில் எவ்வளவு அநுகூலமான தந்திர உபாயங்களைச் செய்துவருகிறார்களென்பது யாருக்குத்தான் தெரியாது? பணத்தாலும், பத்திரிகைகளாலும், புஸ்தகங்களாலும், தேசத்தை ஆளுவோரின் ஜாதியார் என்ற செல்வாக்காலும், இவர்கள் கத்தோலிக் கிறீஸ்துவர்களின் வேத விசுவாசத்தை அழிக்கும்படியாய் எவ்வளவு முயற்சி செய்துவருகிறார்கள்!

இவ்வளவு ஆபத்தின் நடுவிலிருக்கும் கிறீஸ்துவர்கள், அவிசுவாசமும் அஞ்ஞானமும் சுழல்போல் கொடும் உக்கிரமத்தோடு இவர்களைச் சுற்றிவரும்போது, இதில் அகப்பட்டு அமிழ்ந்தாதபடி சத்திய தேவ விசுவாசத்தை ஸ்திரப்படுத்துவது மகா அவசியம். அர்ச். இஞ்ஞாசியாரும் தாம் எழுதிய அற்புத ஞான முயற்சிகளில் திருச்சபையோடு ஒற்றுணர்வை உண்டாக்கும் விசுவாசத்தின்பேரில் விரிவாய் எழுதியிருக்கிறார். ஆதலால் சேசுநாதர்சுவாமி சமீபத்தில் அடுத்து நின்று அவரைப்போல் நடக்கத் தீர்மானித்திருப்பவர்கள் அவர்மட்டில் வைத்திருக்கவேண்டிய தேவ விசுவாசத்தைத் தங்கள் மனதில் ஸ்திரப்படுத்துவது முதல்தரமான அவசியமல்லவா? விசுவாசமுள்ள தேவ கன்னியே! எங்களிடத்தில் விசுவாசம் உயிருள்ளதாயிருக்கும்படி சேசுநாதரிடத்தில் மன்றாடுந் தாயே!

முதல் பாகம்

வேதசத்திய விசுவாசமாவது என்ன? சேசுநாதர் சுவாமி ஸ்தாபித்த சத்திய வேதமாகிற கத்தோலிக்கு சபை நமக்குப் படிப்பிக்கும் தேவ சத்தியங்களை எல்லாம் சர்வேசுரனே படிப்பிப்பதாக உறுதியான மனதோடு விசுவசித்து ஏற்றுக்கொள்வதுதான் வேத சத்திய விசுவாசமாகும். மனிதன் சர்வேசுரனுடைய இராச்சியமாகிற மோட்சத்துக்குப் போகவேண்டுமானால் சர்வேசுரனைச் சார்ந்த சத்தியங்களை இவன் அறிவது அவசியம். சர்வேசுரனைச் சார்ந்த

சத்தியங்களில் சிலது மனிதன் புத்திக்கு மேலிட்டிருப்ப தால் இவைகள் பரம சத்திய இரகசியங்களென்று சொல் லப்படும். சேசுநாதர் சுவாமி உலகத்திலிருந்தபோது இந்தப் பரம சத்திய இரகசியங்களை அவரே படிப்பித்தார். தாம் படிப்பித்த சத்தியங்களை உலகம் எங்குமுள்ள சகல ஜாதி ஜனங்களுக்கும், உலக முடியும் நாள்மட்டும், போதிக் கும்படியாய் கத்தோலிக் சபையை ஏற்படுத்தினார். இந்தச் சபை, தாம் படிப்பித்த சத்தியங்கள் அனைத்தையும், தாம் சொல்லித்தந்ததுபோல் தப்புத் தவறின்றி எல்லாருக் கும் பிரசங்கிக்கும்படி, தாமே இந்தச் சபையோடு உலக முடியும் நாள்மட்டும் கூட இருப்பதாக வாக்குக்கொடுத் தார். தாம் படிப்பிப்பதும் கத்தோலிக்கு சபை படிப்பிப்ப தும் ஒன்றுதான் என்று காட்டும்படியாய் திருச்சபை சொல்வதைக் கேட்பவன் தாம் சொல்வதையே கேட்கிற னென்றும், திருச்சபையை நிந்திக்கிறவன் தம்மையே நிந் திக்கிறனென்றும் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார்.

அன்றியும் நமது தேவ இரட்சகர் சத்தியத்தை ஜனங் களுக்குப் பிரசங்கிக்கும்போது, அதிகாரம் உள்ளவர் போலும், தான் சொல்வதற்குத் தாமே ஆதாரமும், தமது வாக்குக்குத் தாமே போதுமான திருஷ்டாந்தமும் என்றாற் போலவும் படிப்பித்தார். இதினிமித்தம் தாம் சொல்வதை தாம் சொல்வதின் நிமித்தம் ஏற்றுக்கொள்ளும்படி கற்பித் தார். எவனாயினும் தாம் படிப்பிப்பதை எதிர்த்துப் பேச வாவது, ஆட்சேபித்து மறுக்கவாவது, விரோதித்து வாதிக் கவாவது, குறைகூறி குற்றம் பிடிக்கவாவது அவர் சம்ம தித்தவரல்ல. இந்த கௌரவ மேன்மை நிறைந்த அதிகா ரத்தைப் பார்த்த யூதர்கள் ஆச்சரியப்பட்டு பிரமித்து, இவ ரைப்போல் எவனும் பேசினதில்லையே என்று சொல் வார்கள்.

கத்தோலிக்கு சபையும், சேசுநாதர்சுவாமியைப்போல் அதிகார மேன்மையோடு சத்தியத்தைப் பிரசங்கிக்கின் றது. எவனாயினும் தான் படிப்பிக்கும் வேத சத்தியங்களை மறுக்கவும், எதிர்க்கவும், ஆட்சேபிக்கவும், அவைகளின் உண்மையைப்பற்றி சந்தேகப்படவும் சம்மதிக்கிறதில்லை.

இந்தச் சத்தியங்கள் உன் புத்திக்கு எட்டாத பரம சத்திய இரகசியங்களாயிருந்தாலும், சில சமயங்களில் உன் அற்ப புத்திக்கு விரோதமாகவே தோன்றினாலும், நீ அவைகளைப் பூரண சம்மதத்தோடு அங்கீகரிப்பது உன் கடமை. இதற்கு ஆதாரமேதென்றால்: கத்தோலிக்கு சபையின் வாக்கு சேசுநாதருடைய வாக்கு. இதினால் கத்தோலிக்கு சபை சத்தியத்தைப் படிப்பிப்பதில் ஒருபோதும் தவறிப் பிசகிப்போக முடியாது. அர்ச். இஞ்ஞாசியார் திருச்சபையுடன் ஒற்றுணர்வுண்டாயிருப்பதைப்பற்றிக் கொடுக்கும் பல ஒழுங்குகளில் ஒன்று ஏதென்றால், விசுவாச சத்தியங்களில் உன் கண்ணுக்கு வெள்ளைபோல் தோன்றுவதைத் திருச்சபை கறுப்பென்று படிப்பித்தால், கத்தோலிக்கு சபை சொல்வதே மெய் என்று ஏற்றுக்கொள்ள தயாராயிருக்கவேண்டும். திருச்சபை வாக்கும் சேசுநாதருடைய வாக்கும் ஒன்றாதலால் இதில் தப்பிதம் வரமுடியாது.

சிலர் இதைக்கேட்டு ஆக்ஷேபித்து, கத்தோலிக்கு சபை படிப்பிக்கும் சில வகையான போதனைகளைப்பற்றி மனதுக்குள்ளே சந்தேகத்துக்கு இடங் கொடுக்கக்கூடாதோ? அப்படியே பாவசங்கீர்த்தனத்தால் பாவம் தீருமோ? அப்பமாய் கண்ணுக்குத் தோன்றுவதிலே சேசுநாதருடைய மாம்ஸமும் இரத்தமும் எப்படி இருக்கும்? நரகத்தின் ஆக்கினை நித்தியமானதென்பது புத்திக்குச் சரியென்று தோன்றவில்லையே? என்று இவ்விதமாய்ப் பேசுவார்கள்.

கிறீஸ்துவர்கள் நன்றாய் அறியவேண்டிய ஒரு புத்தியைக் கேளுங்கள். கத்தோலிக்கு சபை விசுவாச சத்தியமாக படிப்பிப்பதை எல்லாம் ஒன்றும் விடாமல் பூரணமான சம்மதத்தோடு ஏற்றுக்கொள்வது நமது கடமை. ஒரே ஒரு விசுவாச சத்தியத்தின்பேரில் முதலாய் எவன் தன் மனதறிய சந்தேகப்படுகிறானோ, அவன் கத்தோலிக்கு சபை சேசுநாதருடைய வாக்கென்பதைப்பற்றியே சந்தேகப்படுகிறான். இவன் வேத விசுவாசத்திலிருந்து தவறி விழுகிறான். அவிசுவாசமாகிற பெரிய பாதாளக்குழியில் சேருகிறான். இப்படி விசுவாசத்தை இழப்பதால் எவ்

வளவு மோசமும் பொல்லாப்பும் வருமென்று பின்வரும் பாகத்தில் விவரிப்போம்.

இரண்டாம் பாகம்

சத்தியவேத விசுவாசத்திலிருந்து தவறி விழுதல் கிறீஸ்துவனுக்குக் கனமான பாவம். மலையின் உச்சியிலிருக்கும் பாறைக்கல் தன் நிலை பெயர்ந்து ஒருவிசை புரண்டால், ஓரிடத்தில் நில்லாமல் உருண்டு புரண்டு மோதி உடைந்து கடைசியில் பாதாளத்தில் போய் விழும். அப்படியே கத்தோலிக்கு சபையின் விசுவாசத்திலிருந்து ஒருவன் பிசகித்தவறி, விசுவாச சத்தியம் ஒன்றின்பேரில் முதலாய் சந்தேகப்படுவானானால், கத்தோலிக்கு சபையின் பிள்ளையாயிருப்பதற்கு இன்றியமையாத விசுவாசமாகிற ஆதாரம் அவனுக்கு இல்லாமல்போகின்றது. தாங்கும் ஆதாரமில்லாதபோதே அவன் ஒரு பாவத்திலிருந்து இன்னொரு பாவத்தில் தடையின்றி விழுவான். இதின் காரணமேதெனில்: சர்வேசுரனுடைய வாக்கில் விசுவாசமில்லாதவன் அவரிடத்திலிருந்து வரும் தனக்கு அவசியமான வரப்பிரசாத உதவியை எதிர்பார்க்கமுடியாது. இந்தத் தேவ உதவி இல்லாவிடில், எந்த மனிதனுக்கும் தன் சுய பலத்தால் மாத்திரம் பாவ சோதனைகளுக்குத் தப்புவது சாத்தியப்படாது. நம்மையன்றி உங்களால் யாதொன்றுஞ் செய்ய ஏலாது என்று சேசுநாதர் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார்.

சில ஊர்களிலே உள்ள கிறீஸ்துவர்களின் சபையில் எத்தனைபேர்கள் பெயருக்கு மாத்திரங் கிறீஸ்துவர்கள்! நடத்தையில் கிறீஸ்துவர்கள் என்ற பெயருக்கு அயோக்கியர். திருச்சபையின் ஆசாரங்களையும், முறைமைகளையும், ஒழுங்குகளையும் அறியாமலிருக்கிறவர்கள் எத்தனை பேர்கள்! அறிந்தும் அவைகளைத் துரோகமாய் மீறி நடப்பவர்கள் எத்தனை பேர்கள்! இவர்கள் பாவசங்கீர்த்தனஞ் செய்யமாட்டார்கள். ஞாயிற்றுக்கிழமையிலும் பூசைக்கு வராதபடி பல போக்குகள் தேடுவார்கள். ஜெபம் என்

பது இவர்கள் செய்து அறியார்கள். இவர்கள் பேச்சிலும் நடத்தையிலும் கிறீஸ்துவர்களென்ற மணமுந் தோன்றுது. அஞ்ஞானிகளைப்போல் பேசி நடப்பது இவர்களுக்கு சகஜம். இவர்கள் வாழுங் குடும்பத்தில் தேவ ஆசீர்வாதமுஞ் சமாதானமும் இல்லாததால், அது பாழடைந்த குடும்பமாகும். இவர்கள் பிள்ளைகளோ, தகப்பன் எப்படியோ பிள்ளையும் அப்படித்தான் என்ற அநுபவ வாக்கியத்திற்கு உதாரணமாகிறுர்கள். சத்திய வேத விசுவாசமில்லாத குறையால் குடும்பங்களுக்கு வரும் பெரும் துன்பங்களும், சங்கடங்களும், நஷ்டங்களும் இவைகள் தான்.

வேத விசுவாசத்தை இழப்பதால் வரும் இன்னும் ஒரு ஆபத்தான மோசத்தைக் கேள். வேத விசுவாசம் மனிதர்களுக்குத் தயவாய் சர்வேசுரன் கொடுக்கும் பல நன்கொடைகளில் ஒன்று. இதைச் சர்வேசுரன் உன்னிடம் யாதோர் பேறும் சுதந்தரமும் இல்லாதபோது தாமாய் உனக்குக் கொடுத்திருக்கிறுர். உன்னைச் சுற்றிலுமிருக்கும் பல ஜாதி ஜனங்களைப் பார். எத்தனை ஆயிரம் பேர்கள் வேத விசுவாசமில்லாத அஞ்ஞானிகள்! இவர்களுக்குள்ளே எத்தனை பேர்கள் புத்திமான்கள், படித்தவர்கள், சுபாவ யோக்கியதை உள்ளவர்கள். இப்படி இருந்தும் தேவ ஞானமாகிற விசுவாசமில்லாததால் அஞ்ஞானிகளாயிருக்கிறுர்கள்! இவர்கள் புத்தி ஆத்மார்த்தமான விஷயங்களில், ஞானஸ்நானம் பெற்ற ஏழு வயதுள்ள சிறு பிள்ளைக்கு இருக்கும் ஞான அறிவு முதலாய் இல்லாமல், மங்கி மழுங்கி இருளடர்ந்து இருக்கிறது. ஆத்துமமாவது என்ன? அதை இரட்சிப்பதென்றுல் என்ன? இறந்தபின் ஆத்துமத்துக்கு என்ன சம்பவிக்கும்? இவை முதலிய மூலாதாரமான ஆதி சத்தியங்களை இவர்கள் தெளிவாய் அறியமாட்டார்கள். பிறர்சொல்லைக் கேட்டு அறிந்தாலும், அவைகளை நம்பமாட்டார்கள். நம்பினுலும் தளம்பாத மனதோடு இதுதான் சத்தியமென்று சொல்லத் துணியார்கள். இதின் காரணமென்ன? சர்வேசுரன் கொடுக்கும் அற்புத நன்கொடையாகிற விசுவாசம் இவர்களுக்கு இல்லை

தேவப்பிரகாசமில்லை, ஆத்துமக்கண் இல்லை. கண்ணில்லாதவன் பொருட்களைப் பார்ப்பானா? சூரியப்பிரகாசமில்லாவிடில் பொருட்கள் துலக்கமாய்த் தோன்றுமோ?

தேவ விசுவாசமில்லாத அஞ்ஞானிகள் இந்துதேசத்தில் எத்தனை ஆயிரம் பேர்களிருக்கிறார்கள்? நாம் எந்த ஊருக்காவது, எந்த இடத்துக்காவது போனால், நமது கண்முன் வருபவர்கள் சத்தியவேத விசுவாசமில்லாத அஞ்ஞானிகள். சகோதரரே! இத்தனை ஆயிரம் பேர்களுக்குள்ளே உங்களைப் புள்ளி போட்டாற்போல் தெரிந்து சத்தியவேத விசுவாசமாகிற விலை உயர்ந்த நன்கொடையைச் சர்வேசுரன் உங்களுக்குத் தயாளமாய்க் கொடுத்திருக்கிறார். இப்படிக் கொடுப்பதற்குச் சர்வேசுரனுடைய அளவில்லாச் சிநேகமே காரணமாயிருந்ததன்றி உங்களிடத்தில் யாதோர் ஏதுவும், பேறும் அற்பமேனும் இல்லை.

இவ்வளவு மதிப்பெல்லாங் கடந்த நன்கொடையைச் சர்வேசுரன் தாராளமாய் உனக்குக் கொடுத்திருக்க, நீ அதை மதியாமல் வேணுமென்று அதைக் குறைக்கவும், பழிக்கவும், இழக்கவும் ஏதுவாயிருக்கும் சமயங்களைத் தேடிப்போய் உன் விசுவாசத்தை ஒன்றிரண்டு விஷயங்களிலே முதலாய் இழந்துபோவாயாகில், சர்வேசுரன் திரும்பவும் அந்த நன்கொடையை உனக்குக் கொடுப்பாரோ? அர்ச். சின்னப்பா* வேதவாக்கியமாகச் சொல்வதைப் பயமின்றி நீ கேட்பாயா?—விசுவாசத்தின் பிரகாசத்தை ஒருவிசை பெற்றவர்கள் அதிலிருந்து தவறி விழுந்தால், அவர்கள் மறுபடியும் புதிதாய் மனந்திரும்புதல் அரிது என்று எழுதியிருக்கிறார்.

ஆதிகாலத்திலிருந்த கிறீஸ்துவர்கள் சத்தியவேத விசுவாசத்தைக் காப்பாற்ற எவ்வளவு துன்பப்பட்டார்கள் என்று திருச்சபை சரித்திரத்தில் வாசித்திருக்கிறீர்கள். வேத விசுவாசத்துக்குத் துரோகம் செய்யாதபடி இள

*எபிரேயருக்கு எழுதிய நிருபம், 6-ம் அதி.

வயதுள்ள ஆண்பாலரும், பெண்பாலரும் சிறையில் அடைபட்டார்கள், அடிமைகளைப்போல் கஷ்டமான கடும் வேலைகள் செய்தார்கள், காடுகளிலும், மலைகளிலும் அலைந் தார்கள், பசியாலும் தாகத்தாலும் வருந்தித் தவித்தார் கள், கசைகளாலும் தடிகளாலும் அடிபட்டார்கள், மிரு கங்களுக்கு இரையாய்விடப்பட்டார்கள், நெருப்பில் வேகும்படி எறியப்பட்டார்கள், இரத்தத்தைப் பிரளயமாய் சிந்தினர்கள்—சேசுநாதர்சுவாமிக்குப் பிரமாணிக்கமாயி ருப்பது முதல் கடமை என்று எண்ணினதால் இவ்வளவு மனத்துணிவுடன் போராடி வெற்றிமுடி பெற்றுர்கள்.

இதுதான் வேத விசுவாசம். இதுதான் உயிருள்ள விசுவாசம். இவ்வித விசுவாசம் உங்களிடத்திலிருக்கும் படி இதற்கு உரிய குணங்கள் இன்னதென்றும், இதை உங்கள் மனதில், ஸ்திரப்படுத்த நீங்கள் செய்யவேண்டி யது ஏதென்றும், மூன்றும் பாகத்தில் காட்டுவோம்.

மூன்றம் பாகம்

வேதவிசுவாசம் மெய்யானதாயும், பிரயோசனமுள்ள தாயுமிருக்கவேண்டுமானல் அதற்கு நான்கு குணங்கள் அவசியம். அதின் முதல் குணம் **உறுதி.** எவ்வித சோதனை தந்திரம் இடையூறுகளிலும் கலங்காமலிருப்பது. நிந்தை அவமானத்திலும், துன்பம் வருத்தத்திலும், இதர மதஸ்தர்கள் பழித்து வசை பேசினலும் மனதில் தத்தளி யாமல், சமுத்திரத்தின் மத்தியிலுள்ள பாறை, அலைகள் மோதினலும், புசலுங் காற்றும் சண்டமாருதமாய் அடித் தாலும், அசையாமலிருப்பதுபோல் நிற்பதுதான் கிறீஸ்து வர்களின் விசுவாசத்துக்குச் சிறந்த இலக்ஷணமாகும்.

சகோதரரே! உங்கள் விசுவாசம் இவ்வித குணம் பெற்ற ஸ்திரமுள்ள விசுவாசமோ? உங்களைச் சூழ்ந்திருக் கும் அஞ்ஞானிகள் என்ன சொல்வார்களோவென்று பயந்து, வெட்கப்பட்டு வேத விசுவாசத்தை மறைத்து வேஷம் போடுகிறீர்களோ? அப்படிச் செய்யவேண்டாம்.

வேத விசுவாசத்தின் இரண்டாம் குணம் **அது கபடற்றதாயிருப்பது.** கத்தோலிக்கு சபை சேசுநாதர்சுவாமி பெயரால் படிப்பிக்குஞ் சத்தியங்களைத் தன் புத்தி சாமார்த்தியத்தால் பரிசோதித்துக் கண்டுபிடிக்கவேண்டும் என்கிற அகங்காரமுள்ள யோசனையைத் தள்ளி, இவைகளுக்கு விரோதமாய் வேத விரோதிகள் சொல்லும் குருட்டு ஆக்ஷேபனைகளுக்குக் காது கொடாமல், கபடற்ற சிறு பிள்ளையைப்போல்: "சேசுநாதர் கத்தோலிக்கு சபைக்கு இந்தச் சத்தியங்களை அறிவித்தார். திருச்சபை எனக்கு இவைகளைச் சொல்லிக்கொடுக்கின்றது. அவ்வளவு எனக்குப் போதும்" என்று மனதில் திருப்தியாயிருப்பது கிறீஸ்துவர்களுக்கு அழகு.

வேத விசுவாசம் **உன் கிரியையில் தோன்றக் காண்பிப்பது** மூன்றும் குணம். வாயினால் மாத்திரம் சொல்லி, உன் விசுவாசத்தை உன் நடத்தையில் காட்டாதேபோனால் அது உயிரற்ற விசுவாசமாகும். சொல் ஒன்று நடத்தை ஒன்றாய் வித்தியாசப்பட்டால் அது எதார்த்தமல்ல, வஞ்சகமான செய்கை. பசாசுகளும் இப்படித்தான் விசுவசிக்கின்றன, விசுவசித்தும் சாபத்துக்குள்ளாய் நடுநடுங்குகிறார்கள் என்று வேத வாக்கியம் சொல்லுகிறது.

விசுவாசத்தின் நான்காம் குணமேதென்றால் **அது சகல விசுவாச சத்தியங்களுக்கும் பொதுவாயிருப்பது.** கத்தோலிக்கு சபை மனிதர் இரக்ஷணியத்துக்கு அவசியமென்று படிப்பிக்கும் சகல சத்தியங்களையும் ஒரே சம்மதமாய் நாம் ஏற்றுக்கொள்வது நமது கடமை. இவைகள் எல்லாம் சேசுநாதருடைய வாக்கென்று நாம் அங்கீகரிப்பது விசுவாசமானால், நமக்குப் பிரியமான ஒரு சத்தியத்தை மாத்திரம் ஏற்றுக்கொண்டு, வேறே ஒன்றை நீக்கி வைப்பது வேத சத்திய விசுவாசம் உன்னிடம் இல்லையென்று காட்டும் தப்பாத அடையாளம்.

கடைசியில் இந்தத் தேவ நன்கொடையாகிற விசுவாசத்தை உன்னிடத்தில் ஸ்திரப்படுத்திக் காப்பாற்ற பின்வரும் உபாயங்களைப் பிரயோகிப்பது அநுகூலத்துக்கு வழியாகும்.

ஆதிமுதல், ஜெபத்தால் சர்வேசுரனுடைய உதவி யைக்கேட்டு, ஆண்டவரே! என் விசுவாசத்தை ஸ்திரப் படுத்தும் என்று ஒரு நாளில் பலமுறை மன்றாடிக் கேள். அன்றியும் புத்தி, பிரசங்கம், ஞான புஸ்தகங்கள், இவை களைக் கேட்பதும் வாசிப்பதும் வெகு பிரயோசனமுள்ள வைகள். பாவசங்கீர்த்தனம் செய்தல், தேவ நன்மை அடிக்கடி வாங்குதல், தேவபலிபூசைக்குக் கூடுமானால் நாள் தோறும் வருதல், இப்படியாய் கிறீஸ்துவனுக்கு உரிய வழியில் நடந்து, திருச்சபையில் வழங்கிவரும் அனுஷ் டான முறைமைகளை அனுசரிப்பதால் நீ உன் விசுவாசத் தைப் பலப்படுத்துவாய். இதுவுமன்றி வேத விசுவாசத் துக்கு விரோதமாயிருக்கும் எந்தப் பத்திரிகையையும் புஸ் தகத்தையும் வாசியாதே. அஞ்ஞானிகள், புரோட்டெஸ் டாண்டா இவர்களுடன் வேத விஷயமாய் படித்தவன் போல் தர்க்கஞ்செய்ய வாய்கொடுத்து திண்டாடாதே. வேத சாஸ்திரத்தை நீ நன்றாய்ப் படித்து பூர்த்தி செய் திருந்தால் அப்போது பயமின்றி புரோட்டெஸ்டாண்டா ரோடும், அஞ்ஞானியோடும் தர்க்கித்து அவர்கள் சொல் லதிலுள்ள தப்பிதத்தை நீ எடுத்துத் தெளிவாய் காண்பிக் கலாம். அவ்வளவு படிப்பு இல்லாமல் அறைகுறையான அறிவோடு தர்க்கித்தால் நீதான் பேதைபோல் விழித்து வெட்கிப்போவாய். மூடன் முப்பது கேள்வி கேட்கலாம் புத்திமான் ஒன்றுக்குதான் தகுந்த சமாதானஞ் சொல் லக்கூடும் என்பது ஓர் சுலோகம். தேவ விசுவாசம் தய வுள்ள சர்வேசுரன் நமக்குத் தமது இஷ்டப் பூர்வமாய்க் கொடுக்கும் அற்புத நன்கொடை என்பதை ஒருபோதும் நீ மறந்துபோகாதே. ஆனதால் சர்வ ஜாக்கிரதையோடு இதைக் காப்பாற்ற உன்னால் கூடிய முயற்சி எல்லாம் செய்.

உன் விசுவாசத்தை ஸ்திரப்படுத்தி விர்த்தியாக்கி அது உயிருள்ளதாகும்படி செய்ய விசுவாசமுள்ள கன்னி யான தேவ தாயை அநுதினம் மன்றாடு. விசுவாச முயற் சியை நாள்தோறும் பத்தியோடு சொல். இப்படி செய்து வந்தால் நீங்கள் கத்தோலிக்கு சபையின் பிள்ளைகளாய் ஜீவித்து, கத்தோலிக்கு சபையின் பிள்ளைகளாய் வளரு

வீர்கள். கடைசியில் உங்கள் அந்தியகாலம் வரும்போது யார் உங்களை மறந்தாலும் கத்தோலிக்கு சபையாகிய உங்கள் நல்ல தாய் உங்களை மறக்கவேமாட்டாள். உங்கள் அவஸ்தை சமயத்தில் கிட்ட வந்து ஆறுதல் சொல்லி, பரிசுத்த தைலத்தால் உங்களை அர்ச்சிப்பாள். உங்கள் பாவங்களுக்கு மன்னிப்புக் கொடுத்து வழித்துணை ஆதாரமான தேவ அப்பத்தால் உங்களை ஸ்திரப்படுத்துவாள். நீங்கள் கடைசிவிசை மூச்சுவிட்டு மரித்த பின்னும் உங்கள் பிரேதத்தை வெகு ஜாக்கிரதையாய் பத்திரப்படுத்தி செய்ய வேண்டிய உத்தரக் கிரியை எல்லாம் குறைவின்றி நடக்க தகுந்த ஏற்பாடெல்லாம் செய்வாள். உங்கள் ஆத்துமத்துக்கு நித்திய இளைப்பாற்றி உண்டாகும்படி தேவ பலி பூசைகளும், ஜெபதபமும், தானதர்மமும் நடத்தும்படிக் கவனிப்பாள். இவ்வித அன்புங் கவலையுமுள்ள கத்தோலிக்கு சபையின் பிள்ளைகளாயிருப்பது நமக்கு எவ்வளவு பாக்கியம்! இந்தத் தாய்க்கு நாம் உயிரோடிருக்கும் நாள் எல்லாம் பிரமாணிக்கத்துடன் ஊழியஞ்செய்வது நமக்குப் பெருமையும் மகிமையுமாய் இருக்கவேண்டும்.

ஓ! கத்தோலிக்கு சபையே! சேசுநாதர் மலைமேல் கட்டிய சிறந்த பட்டணமே! உன் கோட்டை மதில்கள் மகா பலம் உள்ளன. சர்வ வல்லப சர்வேசுரனே உன்னைத் தாங்கி இருக்கிறார். உன் சத்துருக்களும், உன் விரோதிகளும், படைபோல் திரண்டு, அணி அணியாய்ப் பிரிந்து, உன்னை எதிர்த்துத் தாக்க எழுந்து வந்தாலும் நரகமே தன்னிடமுள்ள பசாசுகளை எல்லாம் உன்மேல் ஏவிவிட்டாலும் நீ அஞ்சமாட்டாய். உன் சத்துருக்களே வெருண்டு மருண்டு கீழே உருண்டு விழுவார்கள். நீயோ வெற்றிமுடி சூடி ஜெய வீர அரசியாய் உலகத்தின் ஈறுந்த நாள்மட்டும், மாறுமலும் குறையாமலும், சமாசமுள்ள நிலையில் தங்கி, மனிதருக்கெல்லாம் இரக்ஷணியங் கொடுக்கும் பொதுத் தாயாய் இருந்து வாழ்வாய். நீ யாருக்குத் தாய் அல்லவோ அவனுக்குச் சர்வேசுரன் பிதா அல்ல. யார் உன் வார்த்தையை மதிக்கிறதில்லையோ, அவன் சர்வேசுரன் வார்த்தையையே மதிக்கிறதில்லை. யார் உன்னைப்

பழிக்கிறானோ அவன் சர்வேசுரனையே பழிக்கிறான். யார் உன் தேவ ஆளுகைக்குள் வாழ்கிறதில்லையோ அவன் மோக்ஷத்தின் நித்திய பாக்கியத்தில் வாழமாட்டான்.

ஓ! கத்தோலிக்கு சபையே! இரக்ஷணியத்தின் தாயே! உன் செல்வப் பிள்ளைகள் உன்னைச் சூழ்ந்து உனக்கு முடியாய் வானத்தின் நட்சத்திரங்களைப்போல் பிரகாசிக்கிறார்கள். பிதாப்பிதாக்களும், தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலரும், வேதசாட்சிகளும், பரிசுத்த புண்ணியவான்களும், கன்னிகா மங்கைகளும், ஆயிரம் பதினாயிரம் லட்சம் கோடி கோடிப்பேர்கள் உன் கையில் வளர்ந்து, உன் பராமரிப்பில் நடந்து, இப்போது மோக்ஷத்தில் நன்றி உள்ளவர்களாய் உன்னை வாழ்த்திப் புகழ்ந்து மங்களம் பாடுகிறார்கள்.

ஓ! கத்தோலிக்கு சபையே! என் அன்புள்ள தாயே! நான் பிறந்த நாளில் நீதான் என்னை உன் கையில் ஏந்தி ஞானஸ்நானத்தின் அற்புத தீர்த்தத்தால் என்னைக் கழுவி சர்வேசுரனுக்குப் பிள்ளையாகச் செய்தாய். நான் பாவத்தைச் செய்து அசுத்தமானபோது நீதான் என்மேல் சேசுநாதருடைய பரிசுத்த இரத்தத்தை ஊற்றிக் கழுவிச் சுத்தஞ் செய்தாய், என் பாலப்பிராயமுதல் இதுமட்டும் எனக்குத் தேவாமிர்தமான போஜனத்தை நீதான் கொடுத்து என்னைப் போஷித்து வளர்த்தாய். நான் சாகும்போதும் நீதான் என்னை உன் கையில் ஏந்தி அணைத்து அர்ச்சிப்பாய்.

ஓ! கத்தோலிக்கு சபையே! **ஏகத்துவம்,** உன் சுபாவ இலக்ஷணம். **பரிசுத்தம்,** உன் தூய அற்புத இராஜப் போர்வை. **கத்தோலிக்கு** என்ற சமஸ்த ஸ்தல வியாபகம் **உன் மகத்துவ சிங்கார மேன்மை. அப்போஸ்தலர்** காலமுதல் விடாத தொடர்பு, உன் தெய்வீக வம்ச வரிசையின் உற்பத்தி. ஆ என் செல்வத் தாயே! உன்னை நான் என்றும் வாழ்த்துவேன். உன் புகழை என்றும் நான் பாடுவேன், உன் பெயரை எல்லா ஜாதி ஜனங்களும் அறிந்து, உன்னைத் தேடிவந்து, உன் பிள்ளைகளாகும் பாக்-

கியம்பெற்று இரக்ஷணியம் அடைய என் உடலில் உயிர் இருக்குமட்டும் ஓயாமல் நான் உழைப்பேன். ஓ! என் இனிய தாயே! உன்னை நான் மறப்பேனுகில் என் வலது கையையே நான் மறந்துபோவேனுக. உன் புகழை என் நாவு சொல்லாவிடில் அது மேல்வாயோடு ஒட்டிக்கொள் ளக்கடவதாக. உன்னை என் இருதயம் சிநேகியாவிட் டால், அது சுருங்கி வதங்கி வறண்டு வாடி மடியக்கடவது.

ஆரும் நாள்—முதல் தியானம்

இரு யுத்தக் கொடிகள்

விவரம்:—1. அர்ச். இஞ்ஞாசியார் எழுதிய ஞான முயற்சிகளின் முக்கிய நோக்கம்: முன் நாம் முதல் வாரத் துவக்கத்தில் சொன்னதுபோல், ஒவ்வொருவனும் தன் மனதிலுள்ள பாவ துர்க்குணங்களை நன்ருய் அறிந்து அவைகளை வெறுத்து அடக்கும்படி பிரயாசப்படுவதும் அதன்பின் தன் அந்தஸ்தின் மட்டில் சர்வேசுரனுடைய சித்தம் இன்னதென்று அறிந்து அதின்படி நடக்கத் துணிவதுமே ஞான முயற்சிகளின் பிரதானமான நோக்க மாகும்.

2. இரண்டாம் வார ஞான முயற்சிகளில் சேசுநாதரு டைய தர்ம ஜீவியத்தை ஓர் உத்தம மாதிரியாய் கண்முன் வைத்து யோசிக்கும்போது, ஒவ்வொருவர் மனதிலும் **தேவசித்தம்** ஏதென்று பிரகாசிக்கும். நிலை உள்ள ஓர் அந்தஸ்தைப் புதிதாய்த் தெரிந்துகொள்ள மனதுள்ளவர் களும், அல்லது தாங்களிருக்கும் நிலையான அந்தஸ்தி லேயே தங்கள் நடத்தையைத் திருத்தி, இனி எவ்விதமாய் சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்யலாம் என்று அறிய விரும்புகிறவர்களும், இனி நாம் சொல்லுந் தியானங்களைக் கருத்தாய்க் கேட்டு, மனதில் நன்ருய் யோசித்துவந்தால் தேவப்பிரகாசம் இவர்கள் மனதில் உதிக்கும்.

3. பின்வரும் தியானத்தில் அர்ச். இஞ்ஞாசியார் தெளிவான ஓர் உபமானத்தில் இரண்டு யுத்தசேனைகள் கையில் விருதுக்கொடி பிடித்து, எதிர்த்து நின்று, போராட வரவே, சேசுநாதர் ஓர் சேனையின் அதிபதியாயும், லூசிப்பேய் வேறொரு படையின் தலைவனுயும் இருப்பதாகக் காட்டுகிறுர். பசாசு மனிதரைத் தன் கைவசப்படுத்த செய்யும் கபட நாடக தந்திரசூழ்ச்சி இன்னதென்றும், சேசுநாதர்சுவாமி மனிதரை இரட்சிக்கும்படியாய்ப் பிரயோகிக்கும் தயைநிறைந்த உபாயங்கள் இத்தன்மையானதென்றும் சித்திரப் படத்தில் கண்முன் வரைந்து காட்டினுற்போல் இங்கே தெளிவாய் விவரிக்கிறுர்.

4. சேசுநாதருடைய இராணுவ சேனையையும் லூசிப்பேயின் நரக படையையும், நீங்கள் கவனித்து யோசித்தால், பசாசின் தந்திர வலையில் அகப்படாமல் தப்பித்து, நமது அன்புள்ள இரக்ஷகரோடுகூட எப்போதுமிருக்க உங்கள் மனதில் ஆசை பிறக்கும்.

முதல் பாகம்

லூசிப்பேயின் யுத்தக் கொடி

மனுஷ ஜென்ம சத்துருவாகிற லூசிப்பேய் தன் சிம்மாசனத்தை ஸ்தாபித்திருக்கும் கோரரூப மலைக்கோட்டையைக் கவனித்துப் பாருங்கள். பபிலோனிய பட்டணத்தின் சமீபத்தில் ஓர் வரண்ட மைதானம். அங்கே உயர்ந்து எழும்பிய ஓர் சிம்மாசனம். அதில் எங்குமிருந்து அக்கினி சுவாலை புறப்பட்டு நாலு பக்கமுந் தாவி எழும்பி சுழலுகின்றது. சுவாலையிலிருந்து இருண்ட புகை திரண்டு கூடி சூழ்கின்றது. இவ்வித சிம்மாசனமீதிருக்கும் பசாசு பயங்கர ரூபமாய், கண்களிலிருந்து நெருப்புப் பொறிகள் சிதறிப் பறக்க கோபாக்கினி கக்கி பார்க்கின்றது. பகையும் பழியும் கொடுமையும் குரூரமும் அதின் முகலட்சணம்.

இந்த உபமானத்தில் உள்ள பல விஷயங்களின் அர்த்தம் இன்னதென்று கேள். பபிலோன் என்பது கலகமும் குழப்பமும் நிறைந்த ஸ்தலம். அது பாவியின் மனதைக்

குறிக்கின்றது. இந்த மனதில் பசாசின் சிம்மாசனமிருக்கின்றது. பாவியின் மனதில் கலக்கமும் மயக்கமும் பயமும் கவலையும் குடியாயிருக்கின்றன. அக்கினி சுவாலை விட்டு எரிவதுபோல், பசாசு இருக்கும் மனதில் பலவகையான துர் இச்சைகளுந் துர் ஆசைகளும் எழும்பித் தாவுகின்றன. பொருளாசை, இந்திரிய சுக ஆசை, பெருமையின் ஆசை முதலிய கெட்ட ஆசைகள் திரண்டு கூடிப் பாவியின் மனதில் இருண்ட புகை மூடினதுபோல், அவன் புத்தியை மூடி, மனதைக் குழப்பிக் கலக்குகின்றது.

லூசிப்பேயின் சிம்மாசனமுன் காட்டுமிருகங்கள் போல் நிற்கும், அந்தப் பெரும் கும்பலைப் பார். இவர்கள் ஒரு காலத்தில் மோக்ஷத்தில் சம்மனசுகளாயிருந்தவர்கள். இப்போதோ சர்வேசுரனைப் பகைக்கும் துன்மனசுள்ள துஷ்ட அரூபிகள். அடிமைகளைப்போல் லூசிப்பேயின் கால் அண்டையில் காத்து நிற்கிறார்கள். நன்மையானது யாதொன்றும் இவர்களுக்கு இப்போது இல்லை. இவர்கள் நினைப்பதும், எண்ணுவதும், முயற்சி செய்வதும் எல்லாம் அக்கிரமம். இத்தனை இலட்சம் பிசாசுகளோடு மனிதர்களுங்கூடச் சேர்ந்திருக்கிறார்கள். ஆ! என்ன கொடுமை! பசாசுகளோடு மனிதர் ஏன் சேரவேண்டும்? ஐயோ! இவர்கள் பசாசுகளுக்குத் தங்களை நேர்ந்து கொடுத்தவர்கள். பசாசு செய்யும் வேலையைத் தாங்களுஞ் செய்வதாக சத்தியஞ் செய்தவர்கள். லூசிப்பேய் தன் முன் கூடி நிற்கும் இந்தப் பசாசின் கூட்டத்தைப் பார்த்து கோபம் பொங்கும் பெருங் குரலோடு இவர்களுக்குச் சொல்லும் பேச்சைக் கேள்:

கூளிகளே! மனிதரின் ஜென்ம சத்துரு நாம் என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். இவர்களைக் கெடுத்து நரகத்தில் கொண்டுவருவது நம்முடைய ஒரே நோக்கம். இதில் நமக்குப் பூரண அநுகூலம் வரும்படி தகுந்த உபாயங்களைப் பிரயோகிக்கவேண்டும். நான் சொல்வதைக் கேளுங்கள். விஷத்தை விஷமாகக் காட்டினால் எவன் அதைக் குடிப்பான்? அசுத்தத்தை அசுத்தம் என்றால்

யார் கிட்ட வருவான்? ஆனதால் பாவ அவலட்சணத்தைப் பாவமாக காட்டாமல், மறைத்து அதை இன்பமாக காட்டுவது அநுகூலத்துக்கு இன்றியமையாத சாதனம். ஆகையால் மனிதர் மனதில் பண ஆசையைத் தூண்டுவது நாம் செய்யவேண்டிய முதல் காரியம். பணத்தைத் தேடுவதில் பாவமில்லையென்று அவனே சொல்லுவான். பணமுள்ளவன் பூராக்ஷா, பணம் இல்லாதவன் பக்கிரி என்று பழமொழியை உண்டாக்குவான். திரைகடலோடியுந் திரவியந்தேடு என்று சிறு பிள்ளைகளுக்கும் படித்துக் கொடுத்து ஞானம் போதிப்பான்.

பண ஆசை மனிதன் மனதில் புகுந்தால் அதிலிருந்து மகிமை பெருமையின் ஆசை தன்னால் வளரும். பணமுள்ளவனைத்தான் உலகத்தார் மதிப்பார்கள். இந்த மதிப்புப் பெற்றவன் தன்னை எல்லாருக்கும் மேலாய் உயர்த்தி, மற்றவர்களைப் பழித்து நிந்திப்பான். இதுதான் அகங்காரம். அகங்காரமாகிற பாதாளத்தில் விழுந்தவன் செய்யத்துணியாத பாவம் ஒன்றுமில்லை. அகங்காரம் பாவங்களுக்குத் தாய். இவைகள்தான் மனிதனை நரகத்தில் தள்ளும்படி நாம் பிரயோகிக்கவேண்டிய மூன்று படிகள்: பண ஆசை, பெருமையின் ஆசை, அகங்காரம்.

இப்படிப் பேசினபின்பு லூசிப்பேய் நரகத்தில் உள்ள பிசாசுகளை எல்லாம் பூமி எங்கும் அனுப்புகிறது. தேசங்கள், ஊர்கள் ஊர்களிலுள்ள குடிகள், குடிகளிலுள்ள மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் ஓர் பிசாசைக் குறித்து அவனையோ அவளையோ எப்படியாகிலும் நரகத்தில் சேர்ப்பதே அதின் ஏக வேலையாய் நியமித்து கண்டிப்பாய்ப் பேசுகிறது.

ஆ! என்ன பயங்கரமான சங்கதி! நம்மில் ஒவ்வொருவருடைய பக்கத்தில் ஒரு பிசாசு இரவும் பகலும் நம்மைக் கெடுப்பதே வேலையாய்க் காத்துக்கொண்டிருக்கின்றதா? இந்த சத்துருவை நாம் கண்ணால் பாராதபோனாலும் அது நமது சமீபத்தில் இருக்கிறதென்று பல அடையாளங்களால் நாம் துக்கத்தோடு அறிந்துவருகிறோம். எந்த ஒரு நல்ல கிரிகையைச் செய்ய நாம் துவக்கினாலும் உடனே

பசாசின் வாடைட்யும் நாற்றமும் அடிக்கிறதைப் பார்க்கிறோம். எத்தனை பேர்களைப் பசாசு பக்தி உள்ளவர்களைப் போல் துவக்கத்தில் நடிக்கச்செய்து கடைசியில் அவர்களை ஏய்த்து, மயக்கி அவர்கள் பாவத்தில் விழும்படி முடித்து நரகத்தில் தள்ளினது! பண ஆசையால் கெட்டுப்போகிறவர்கள் அனந்தம் பேர்கள். பணத்தின்பேரிலே எப்போதும் யோசனையாயிருந்து அதைத் தேடும் வழிகளை நினைத்து நினைத்து, வாடி மெலிந்துபோகிறவர்கள் கணக்கில்லாதவர்கள். மகிமையும் பெருமையும் புகழுங் கீர்த்தியுந் தேடிக் கெட்டுப்போகிறவர்கள் எத்தனை பேர்கள்! அகங்காரம் மனதில் பொங்க, அதிலிருந்து அசுத்த பாவத்தில் விழுந்து ஆத்துமத்தை இழந்துபோகிறவர்கள் எத்தனை பேர்கள்!

ஒவ்வொருவரும் தன் நடத்தையை நன்ருய் சோதித்து அதிலே பசாசின் துர்நாற்றமாகிய பண் ஆசை, பெருமையின் ஆசை, அகங்காரம் எதிலேயாவது இருக்கிறதாவென்று கவனித்துப்பார்ப்பது ஆத்தும இரக்ஷணியத்துக்கே அவசியம்.

இரண்டாம் பாகம்

சேசுநாதர்சுவாமியுடைய யுத்தக்கொடி

நமது அன்புள்ள இரக்ஷகர் தமது பிள்ளைகளைத் தமது கொடியின் கீழ்ச் சேர்க்கும்படி தெரிந்த ஸ்தலத்தையும் அதைச்சேர்ந்த பல விஷயங்களையுங் கவனித்துப் பார்ப்போம். ஜெருசலேம் பட்டணத்தின் சமீபத்தில் சிறப்பும் வனப்பும் அமையப்பெற்ற பசுமையான மைதானத்தில், ஓர் தாழ்ந்த இடத்தில் தமது பிரஜைகளின் மத்தியில், தகப்பன் தன் பிள்ளைகள் நடுவில் இருப்பது போல், சேசுநாதர்சுவாமி இருக்கிறூர். அருளே அவதாரமாறுற்போல் தோன்றும் அவருடைய முக இலக்ஷணவடிவும், தயாள சிந்தை உள்ள நற்குணமும், தேவப்பிரதாப சொரூபமும், காந்தக்கல்போல் எல்லாரையும் அவர் கிட்ட இழுக்கின்றது. இதற்கெல்லாம் அர்த்தமென்ன?

ஜெருசலேம் நகர் சமாதானத்தின் ஸ்தானம், பரிசுத்த வான்களின் இல்லிடம், பாவமில்லாத மனது, மோக்ஷத்தின் பிரதிபிம்பம். இந்த இடத்திலே நமது தேவ இரக்ஷகர் கண்ணுக்குப் பகட்டான ராஜரீக மேன்மை பெருமை சிலாக்கியமின்றி, தயையும், அன்பும், சாந்தமும், தாழ்ச்சியும் உள்ளவராய் இருக்கிறார். இவருக்குச் சிம்மாசனமில்லை, செங்கோல் இல்லை, இராஜ கிரீடமுமில்லை. நாலுபேரைப் போல் இவரும் ஒருவராய் நடுவிலிருக்கிறார்.

இவர் மனுமக்களில் அதிக சுப சௌந்தரிய வடிவுள்ளவர். அன்பே அவதாரமானாற்போல் தோன்றுபவர். முறிந்த நாணலை ஒடிக்கமாட்டார். எரியுஞ் சணலை அவிக்கமாட்டார். அவர் வார்த்தையில் கசப்பு இல்லை. அவருடைய சகவாசத்தில் சலிப்பு இல்லை. எவர்க்குந் தகப்பன், எந்தப் பாவிகளுக்கும் சிநேகிதன்.

சேசுநாதர்சுவாமியைச் சூழ்ந்து நிற்பவர்கள் யார்? அப்போஸ்தலர்கள், சீஷர்கள், மகாத்துமாக்கள், வேத சாஸ்திரிகள், வனவாசிகள், மடாதிபதிகள், சம்மனசுகளைப்போல் பரிசுத்த இளவயதுள்ள பாலியர்கள், இன்னும் பல பேர்கள், புண்ணியங்களால் அலங்காரம் பெற்று உலகத்தில் எந்த அந்தஸ்திலும் உள்ளவர்கள், இவர்கள் அனைவரும் மலர்ந்த முகத்தோடும் தேவ இஷ்டப்பிரசாதத்தின் மாசற்ற உடையோடும் சேசுநாதர்சுவாமியைச் சுற்றி நிற்கிறார்கள்.

இவர்கள் அனைவரையும் நமது தேவ ஆண்டவர் அழைக்கக் காரணமென்ன? எல்லாருக்கும் மோக்ஷத்தில் தம்மோடு நித்திய பாக்கியம் அனுபவிக்க ஏதுவான ஓர் தவறாத நேர் வழியைக் காண்பிப்பதே அவருடைய ஒரே நோக்கம், ஒரே எண்ணம், ஒரே ஆசை. இவர் தமது பிள்ளைகளுக்குச் சொல்லும் அமிர்தமான புத்தியைக் கேளுங்கள் :

என் பிள்ளைகளே! நான் பாவிகளைத் தேடி இந்தப் பூமியில் வந்தேன். என் பிதாவின் இராச்சியத்தை ஸ்தாபிப்பது என் வேலை. சகல மனிதருக்கும் நித்திய ஜீவன்

கொடுப்பது என் ஆவல். மனிதர் இருதயத்தில் சிநேகாக்கினியை வளர்த்து அது சுவாலித்தெரிவதைப் பார்ப்பது என் தீராத ஆசை. நான் உங்களுக்குச் சொல்வதை எல்லாம் உலகம் எத்திசையிலுமுள்ள சகல ஜாதி ஜனங்களுக்கும் சொல்லிக்கொடுங்கள். உங்களோடு துணையாய் நான் உலக முடியும் நாள்மட்டும் இருப்பேன். ஜனங்களை என் ஊழியத்திற்கும் சிநேகத்திற்கும் சேர்க்கும்படி நீங்கள் பிரயோகிக்கத்தகும் உபாய வழிகள் இவை என்று நான் சொல்லுகிறேன். கவனமாய்க் கேளுங்கள் :

ஆதிமுதலில் மனிதர்கள் மனதில் பண ஆசை இல்லாதிருக்கும்படி செய்ய மனதரித்திரத்தை அவர்கள் விரும்பும்படி வருந்துங்கள். மகிமை பெருமையை அவர்கள் தேடாமல் நிந்தையும் துன்பமும் வரும்போது நல்ல மனதோடு அவைகளை ஏற்றுக்கொள்ளும்படி படிப்பியுங்கள். பண ஆசையின் பற்று இல்லாமல், நிந்தை அவமானங்களில் சந்தோஷமாயிருப்பவர்கள் தாழ்ச்சி உள்ளவர்களாவார்கள். தாழ்ச்சி சகல புண்ணியங்களுக்கும் தாய். நான் இருதயத்தில் சாந்தமும் தாழ்ச்சியும் உள்ளவனென்று என்னிடத்தில் நீங்கள் படித்துக்கொள்ளுங்கள். அப்போது உங்கள் மனதில் சமாதானம் உண்டாவதைக் காண்பீர்கள்.

சேசுநாதர்சுவாமி சொன்ன இந்த அமிர்த வார்த்தைகளைக் கேட்ட அப்போஸ்தலரும் சீஷர்களும் சௌரிய வீரர்களாய் உலகமெங்கும் போய் தங்கள் ஆண்டவர் திருவாயிலிருந்து படித்த புத்தியை சகல ஜனங்களுக்கும் சொன்னார்கள். துன்ப இடையூறுகள் நடுவில் சேசுநாதருடைய வார்த்தையில் நம்பிக்கைவைத்து பயப்படாமலிருந்தார்கள். பசாசின் அடிமைகளாயிருந்தவர்களைச் சேசுநாதருடைய பிள்ளைகளாக்கினார்கள். இளவயதுள்ள ஆண் பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும், சுத்தத் தரித்திரத்தையும், நிந்தை அவமானத்தையும், தாழ்ச்சியையும் தங்கள் பங்காகத் தெரிந்து, சேசுநாதருடைய விருதுக்கொடியின் கீழ் வந்து அவரோடு தோளுடன் தோளாய் சமீபத்தில் நின்று லூசிப்பிசாசோடும், அதின் துஷ்ட தோழரோடும்

விடாத யுத்தம் தொடுத்தார்கள். சேசுநாதருடைய இராச்சியத்தை எங்கும் ஸ்தாபிக்கும்படியாய் வருந்தி உழைத்து கடைசியில் ஜெயங்கொண்டு மரித்தார்கள். இப்போது நீங்கள் செய்யவேண்டியது ஏதென்று கேளுங்கள்.

மூன்றும் பாகம்

நமது அன்புள்ள இரக்ஷகரின் யுத்தக்கொடி ஒரு பக்கத்திலும், லூசிப்பிசாசின் நரகக்கொடி வேறு பக்கத்திலும், ஸ்தாபித்திருக்க நீங்கள் எந்தப்பக்கஞ் சேரப்போகிறீர்கள்? இந்தக் கேள்வியை உங்களிடத்தில் நாம் இச்சமயத்தில் கேட்பது தகாதென்று நீங்கள் நினைக்கிறீர்கள்! நாங்கள் சேசுநாதருடைய அரசாட்சியைப்பற்றி தியானித்தபோது அவர் எங்கள் இராஜாவென்று அங்கீகரித்தோம். அவர் கூப்பிட்டழைத்த சப்தம் இன்னும் எங்கள் காதில் சப்திக்கின்றது. அவரோடுகூடப் போவதும், அவர் கிட்ட நெருங்கி சமீபத்திலிருப்பதும், அவர் செய்வதுபோல் நாங்களுஞ் செய்வதும், எங்களுடைய மாருத தீர்மானம் என்று அவருக்கு உறுதிமொழி கொடுத்தோம். இவ்வளவு செய்தபின்பு இப்போது சேசுநாதருடைய சேனையிலிருப்பது எங்கள் சம்மதமோவென்று கேட்பது தகுதி அல்ல என்று தியானஞ் செய்யும் நீங்கள் எல்லாரும் நினைக்கிறீர்கள்.

இது மெய்தான். சேசுநாதர்சுவாமி உங்களுக்காக எவ்வளவு செய்திருக்கிறார் என்று அவருடைய ஜீவிய வர்த்தமானங்களைத் தியானத்தால் உங்கள் மனதில் உணர்ந்தபின்பு அவரோடுகூடப் போவேனே என்று இப்போது சந்தேகப்படுவதே உங்கள் அன்புள்ள இரக்ஷகருக்கு அவமானமாகும். ஆகையால் இந்தத் தியானத்தில் நீங்கள் கவனிக்கவேண்டிய விஷயம் ஏதென்றால்: பிசாசு மனிதர்களைக் கெடுக்கும்படியாய் எவ்வகையான தந்திரமுள்ள உபாயங்களைப் பிரயோகிக்கின்றது? அது கையாடும் ஆயுதங்கள் எப்பேர்ப்பட்டவைகள்? அதின் வலைக்குள் அகப்படாதபடி நான் என்ன செய்யவேண்டும்? சேசு

நாதர் என் கையில் என்ன வகையான எத்தனங்களைக் கொடுக்கிறார்? நான் இதுமட்டும் நடந்த வகையில் என்ன தப்பிதமிருக்கின்றது? என்று இவைகளைப்பற்றி யோசித்து இனிமேல் நடக்கவேண்டிய விதத்துக்கு ஏற்ற பிரதிக்கினைகள் செய்வதே இந்தத் தியான முயற்சியின் முக்கிய நோக்கமாகும்.

லூசிப்பிசாசு மனிதர்களைக் கெடுக்கும்படியாய் இவ்வளவு பிரயாசப்படுவதை நீ பார்த்து சும்மா நிற்பாயா? பண ஆசையை நீ தரித்திரத்தின் ஆசையாலும், மகிமையின் ஆசையை நீ நிந்தை அவமானத்தின் ஆசையாலும் அகங்காரத்தைத் தாழ்ச்சியாலும் ஜெயித்து, சேசுநாதருடைய இராஜ விருதுக் கொடியின் நிழலில் தங்கி நீயும் உன்னோடு பலபேர்களும் இருக்கும்படியாய், உன் உடலில் உயிர் இருக்குமட்டும் நீ பிரயாசப்பட்டு உழைப்பாயென்று உறுதிமொழி உன் ஆண்டவருக்கு இன்று சொல்.

தியானம் முடிந்தபின் முதல் ஜெபம் உன் தயாரான தேவ ஆண்டவருக்குச் செய். இரக்கம் நிறைந்த தேவ ஆண்டவரே! உமது தேவ குமாரனும் என் ஆண்டவருமான சேசுநாதருடைய யுத்தக் கொடியின் கீழ் நான் தங்கி இருந்து உத்தம மன தரித்திரத்திலும், தேவ மகத்துவத்துக்கு சித்தமானால், மெய்யான தரித்திரத்திலும், எவருக்கும் பாவம் உண்டாகாத அளவில், அவரை அதிகமாய்க் கண்டுபாவிக்கும்படி நிந்தை அவமானத்திலும், நான் நடக்கும்படியாய் உம்முடைய திவ்விய குமாரனிடத்தில் வரங் கேட்டருளும். இதன்பின் **பிரியதத்த மந்திரஞ்** சொல்.

இரண்டாம் ஜெபத்தில் சேசுநாதர்சுவாமி தமது திவ்விய பிதாவினிடம் முன் குறித்த வரங்களை உனக்குக் கேட்டுக் கொடுக்கும்படி மன்றாடு. அதன்பின் **கிறீஸ்துவின் ஆத்துமமானதே** என்ற ஜெபம் சொல்.

மூன்றும் ஜெபத்தில் தேவ பிதாவினிடத்தில் அதே வரங்களைக் கேள். அதன்பின் **பரமண்டல மந்திரஞ்** சொல்.

ஆறும் நாள்—இரண்டாம் தியானம்

சேசுநாதருடைய பிரசித்த ஜீவியம்

நமது தேவ இரக்ஷகரின் அற்புத ஜீவியத்தைச்சார்ந்த பல விஷயங்களைப்பற்றி யோசித்து தியானிப்பது ஆத்துமத்துக்கு வெகு பிரயோசனமுள்ளதென்று எல்லாருக்கும் தோன்றும். நேற்றுச் செய்த தியானங்களில் அவர் மனுஷாவதாரம் எடுத்து உலகத்தில் பிறந்ததும், இடையரும் மூன்று இராஜக்களும் அவரை ஆராதித்ததும், ஆகிய இந்த வர்த்தமானங்களில் நமக்கு எவ்விதம் முன் நடந்து மோக்ஷ பாதையைக் காண்பிக்கிறார் என்று பார்த்தீர்கள். அதன்பின் முப்பது வருஷமளவாய் தாயார் வீட்டில், நசரேத் ஊரில், உலகத்துக்கு மறைந்தவராய் ஜீவித்தபோது, நல்லொழுக்கத்துக்கும் ஒழுக்க நிலைமைக்கும் ஏதுவான அற்புத புத்தியைத் தமது நடத்தையில் காண்பித்திருக்கிறார். இதைப்பற்றித் தியானிப்பது வெகு பிரயோசனமுள்ளதாயினும் தியான நாட்கள் சொற்பமாயிருப்பதின் நிமித்தம் பல விஷயங்களை நீக்கிவைத்து, சேசுநாதர் கடைசி மூன்று வருஷங்களில் பிரசித்தமாய் எங்குஞ் சுற்றித்திரிந்து சத்திய வேதத்தைப் பிரசங்கிக்கும்போது காண்பித்த தர்ம நடத்தையை இப்போது ஒரு பொதுவான தியானத்தில் காண்பிக்கப்போகிறோம்.

உலகத்தார் மத்தியிலிருந்து பல வேலை சோலிகளில் கலந்து வாழும் கிறீஸ்துவர்களுக்கு நமது தேவ ஆண்டவரின் பிரசித்தமான ஜீவியம் ஓர் மேல்வரிச்சட்டம்போல் கண்முன் இருப்பது வெகு பிரயோசனமாகும்.

நாம் சொல்வது உங்களுக்குத் தெளிவாயிருக்கும்படி, நமது ஆண்டவரின் பிரசித்த ஜீவியத்தை மூன்று பாகங்களாக வகுத்து, முதல் பாகத்தில் சேசுநாதர் தமது தேவ பிதாவின்மட்டில் நடந்த முறை எதுவென்றும், இரண்டாம் பாகத்தில் தமதுமட்டில் எப்படி நடந்தாரென்றும், மூன்றும் பாகத்தில் மற்ற மனிதர் விஷயத்தில் அவர் நடந்த வகை ஏதென்றும் விவரிப்போம். இதைக் கவன

மாய்க் கேட்டு யோசித்தால், நீங்களும் சர்வேசுரன்மட்டிலும், உங்கள்மட்டிலும், பிறர்மட்டிலும் எவ்விதம் நடப்பது உங்களுக்குத் தகுதி என்றும், கடமை என்றும் படிப்பீர்கள்.

தேவ குடும்பத்தின் தாயான நமது ஆண்டவள், சேசுநாதர்சுவாமியை நன்றாய் நாம் எல்லோரும் அறிந்து அவர் காட்டின தர்ம வழியில் நாமும் நடக்க நமக்காக பிராத்திப்பாளாக.

முதல் பாகம்

உலக இரக்ஷகரான நமது ஆண்டவர் முப்பது வருஷந் தாயாரோடுகூட இருந்து சகல புண்ணியங்களின் உத்தம தர்ம மாதிரி காட்டினபின்பு கடைசி மூன்று வருஷங்களில் மனிதர் அனைவருக்கும் பொதுவான கடமைகள் இவை என்றும், எப்படி இவைகளைத் தங்கள் நடத்தையில் தோன்ற காட்டவேண்டும் என்றும் படிப்பித்திருக்கிறார். வீட்டுக்குள்ளே இருந்து இதுமட்டும் பிரகாசித்த தீபம் இப்போது மலையின் உச்சியில் ஏற்றிய வெளிச்சம்போல் நாலு திக்கிலும் தன் பிரகாசத்தை வீசுகின்றது.

சேசுநாதர்சுவாமி தமது தேவ பிதாவின் மட்டில் காட்டின முதல் கடமை ஏதென்றால்: தமது தேவ பிதாவின் சித்தத்துக்கு எப்போதும் அவர் அமைந்து பணிந்து நடந்தார். உலகத்தில் மனிதனாய்ப் பிறந்தவுடனே தமது பிதாவைப் பார்த்து: என் பிதாவே! இதோ நான் வருகிறேன். பலிகளும் நேர்ச்சியும் உமக்கு வேண்டாம் என்றீர். எனக்கு ஒரு சரீரத்தை உருவாக்கி ஏற்றதாக்கினீர். வேதாகமத்தின் தலைப்பில் எழுதி இருக்கிறபிரகாரம் உமது சித்தப்படி நடக்க நான் வருகிறேன் என்று தமது இருதயத்திலுள்ள ஆசையை வெளியாக்கினார். *

துவக்கினது போலவே அவர் வளர வளர இந்த ஆசையும் வளர்ந்தது. கடைசியில் தமது பிதாவின் சித்தப்பிர

* அர்ச். சின்னப்பர், எபிரே. 10-ம் அதி.

காரம் நடப்பது தமக்குப் போஜனமென்று அவரே சொல்லுவார். மனுஷ சுபாவத்தில் தமக்குப் பிரியமானதேதென்று தேடாமல் தமது தேவ பிதாவுக்குப் பிரியமுள்ளதெதுவோ அதையே தேடுவார். அவரே சகல கற்பனை, ஒழுங்கு, ஆசாரம், முறைமைகளுக்கு ஆதிகர்த்தாவாயிருந்தபோதிலும், அவைகளுக்கு உட்பட்டவர்போல் பிரமாணிக்கமாய்க் கீழ்ப்படிந்து வருவார். குறித்த காலங்களில் ஜெருசலேம் நகரிலுள்ள தேவாலயத்திற்குத் தமது பிதாவை ஆராதிக்க எல்லாரும் போவதுபோல் இவரும் போவார். தாம் படவேண்டிய நிஷ்டூரமுள்ள பாடுகளின் கசப்பான பாத்திரத்தைக் குடிப்பது மனுஷ சுபாவத்திற்கு மிகவும் வருத்தமாயிருந்தாலும், அந்தக் கொடும் நிர்ப்பந்தங்கள் தம்மைவிட்டு நீங்கும்படியாய் பிரார்த்தித்தாலும், தமது பிதாவின் சித்தத்துக்குப் பூர்ணமாய் அமைந்த மனதோடு, பிதாவே! என் மனதின்படி அல்ல உமது சித்தப்படியே ஆகட்டும் என்று ஜெபித்தார்.

உங்கள்முன் வழிகாட்டி நடந்துபோகும் சேசுநாதர் சுவாமி உங்களுக்குக் கற்பிக்கும் முதல் பாடம் இதுதான். எப்போதும் சர்வேசுரனுடைய சித்தம் இன்னதென்று அறிந்து அவர் சித்தத்தோடு உங்கள் மனதை ஒன்றித்து நடப்பது கிறீஸ்துவர்களின் முதல் கடமை. சர்வேசுரனுடைய சித்தம் மோக்ஷ இராச்சியத்தில் எவ்விதம் குறையின்றி பரிபூரணமாய் நிறைவேறிவருகின்றதோ அவ்விதமே பூமியிலும் ஒவ்வொருவர் தங்கள் நடத்தையிலேயும் அதை நிறைவேற்றுவது; இதுதான் கிரமம், இதுதான் ஒழுங்கு, இதுதான் கிறீஸ்துவர்களின் முதல் கடமை.

சர்வேசுரன் சித்தம் உங்கள்மட்டில் இன்னதென்று தேவ கற்பனைகளாலும், திருச்சபையின் படிப்பினையாலும் ஒவ்வொருவருடைய மனதில் சர்வேசுரனுடைய குரல் சப்திப்பதினாலும் அறியலாம். அன்றியும் நமக்கு இயல்பாய் நடக்கும் சகலவித சம்பவங்களும் தேவ சித்தத்தால் நடக்கும்படி உத்தரவுபெற்ற விஷயங்களாகும். ஆகையால் சர்வேசுரன் தமது சித்தத்தை நமக்கு எந்த வகையில் அறிவித்தாலும், அதை அமைந்த மனதோடு ஏற்றுக்கொள்

வது நமக்கு எப்போதும் பிரயோசனமாகும். வியாதியோ, துன்பமோ, தரித்திரமோ, நஷ்டமோ, நிந்தையோ, பழியோ, எதுவானாலும், பாவம் ஒன்றுமாத்திரம் நீங்கலாக, மற்றச் சகலமும் சர்வேசுரனுடைய அதி உத்தம சித்தப்பிரகாரம் நடப்பவைகளாகும். இந்தச் சித்தத்துக்கு அமைந்து, பிதாவே! பரமண்டலத்தில் உமது சித்தம் செய்யப்படுவதுபோல பூமியிலும் செய்யப்படுவதாக என்று நல்ல மனதோடு சொல்லப் பழகவேண்டும்.

சேசுநாதர்சுவாமி தமது பிதாவின் சித்தத்துக்குப் பணிந்துவந்ததுமாத்திரமல்ல, அந்தத் தேவ பிதாவின் மகிமை ஸ்தோத்திரத்துக்காக வருந்தி உழைத்து வேலை செய்து தம்மைச் செலவழித்தார். நான் ஏழை, இளம் பிராயமுதல் பலவாறாய் உழைக்கிறேன், என்ற வேத வாக்கியம் சேசுநாதரைக் குறிக்கின்றது. தமது பிதாவின் இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க இராப்பகலாய் எவ்வளவு முயற்சி செய்தாரென்று யார் சொல்லத்தரம்? தம்மோடு கூட ஒத்துழைக்கும்படி படிப்பில்லாத செம்படவர்களைச் சீஷர்களாகத் தெரிந்து, அவர்களுக்குத் தமது தேவ ஞான போதனைகளை இராப்பகலாய்ப் படிப்பித்து அவர்களை அதற்குத் தகுதி உள்ளவர்களாக்கினார். பாவிகளைத் தேடிப் போவார். தயாளத்தோடும் அன்போடும் அவர்களுக்குப் புத்தி சொல்லுவார். சாமானிய ஜனங்கள் தாம் சொல்வதை எளிதில் கண்டு அறியும்படி அவர்கள் புத்திக்கேற்ற உபமானங்களைச் சொல்லி விவரிப்பார். ஒரு விசை சொன்ன புத்தியைத் திரும்பவும் இரண்டாம் விசையும் சொல்லுவார்.

இந்தத் தேவ அலுவலில் அநுகூலம் பெறும்படி ஜனங்கள் மத்தியில் பகல் எல்லாம் உழைத்தபின்பு, இராத்திரியில் மலைகளுக்குத் தனிவாசமாய்ப்போய் தமது பிதாவினிடம் பிரார்த்திப்பார். சாஷ்டாங்கமாக விழுந்து பிதாவை ஆராதிப்பார். பெருமூச்சுவிட்டு அழுது ஜெபிப்பார். தமது தேவ பிதாவின் மகிமை ஸ்துதிக்காகத் தம்மை ஓர் பலியாய் நேர்ந்து கொடுப்பார்.

ஓ! சகோதரரே! உங்கள் முன் நடந்து, பிதாவின் மகிமைக்காக உழைக்கும் வகையைக் காட்டும் சேசுநாதரைப் பாருங்கள்! உங்கள் மோக்ஷ பிதாவாகிற சர்வேசுரனுடைய மகிமையை நீங்கள் தேடுகிறீர்களா? ஆத்துமங்களைச் சர்வேசுரனிடம் சேர்க்க முயற்சி செய்கிறீர்களா? உங்கள் வீட்டிலே உங்களோடுகூட இருப்பவர்களுக்குச் சர்வேசுரனுடைய இராச்சியத்தைப்பற்றி பேசுகிறீர்களா? ஓ! கிறீஸ்துவர்கள் சேசுநாதருடைய தேவ இராச்சியத்தை விர்த்திசெய்வதில் எவ்வளவு அஜாக்கிரதையும் அசமந்தமும் உள்ளவர்களாயிருக்கிறார்கள்! உங்களைச் சூழ்ந்திருக்கும் அஞ்ஞானிகளும், புரோட்டெஸ்டாண்டாரும் செய்வதைப் பார்த்தாகிலும் உங்களுக்கு வேதாபிமானம் வரமாட்டாதா! சர்வேசுரனுடைய தேவ ஆளுகையை விர்த்திசெய்து ஆத்துமங்களைச் சேசுநாதருடைய பாதத்தில் சேர்க்கும்படியாய் குருக்கள் செய்வதுபோல நீங்கள் உங்கள் ஊரையும், தேசத்தையும், பந்துஜனங்களையும் விட்டு பிரதேசம் போகத் தேவையில்லை. வீட்டிலிருந்து கொண்டே, உங்கள் அநுதின அலுவலைச் செய்து கொண்டே ஆத்துமங்களை இரட்சிக்கலாம்.

அஞ்ஞானமாகிற குருட்டுத்தனத்திலும், பதிதத்தனமாகிற அறியாமையிலும், பாவத்தின் அடர்ந்த இருளிலும் அமிழ்ந்தியிருப்பவர்கள், அறியாமை நீங்கி, ஞானப்பிரகாசமாகிற ஒளியுள்ள கத்தோலிக் சபையில் வந்துசேரும்படியாய் அவர்களுக்காக ஜெபஞ்செய்து உங்கள் அநுதினக் கிரியைகளை ஒப்புக்கொடுக்கலாம். ஜெப அப்போஸ்தல சபை இதற்காகவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதில் சேர்ந்திருக்கும் நீங்கள் சேசுநாதருடைய பரிசுத்த இருதயத்திலுள்ள கருத்துகள் நிறைவேறவேண்டுமென்கிற சுகிர்த கருத்தோடு உங்கள் கருத்தையும் சேர்த்தால், நீங்களும் அப்போஸ்தலர் செய்யும் தேவ அலுவலைச் செய்கிறீர்கள். சேசுநாதர் தமது பிதாவின்மட்டில் எப்படி நடந்தாரென்று கேட்கிறீர்கள். இனி தமதுமட்டிலே என்ன கடமைகள் செலுத்தினாரென்று இரண்டாம் பாகத்தில் கேட்கப்போகிறீர்கள்.

இரண்டாம் பாகம்

நமது அன்புள்ள இரக்ஷகர் மனிதரோடு ஓர் சாமானிய மனிதனைத் திரிந்தாலும் சர்வ வல்லப சர்வேசுரனுய், தேவப்பிரதாப நிறைந்தவராய், சகல தேவ இலக்ஷணங்களும் பூரணமாய் அமையப்பெற்றவராயிருந்தார். ஆகிலும் தமது தெய்வத்துவ மகிமையை மறந்தவர்போலே தம்மைத் தாழ்த்தி எல்லாருக்கும் ஊழியனுய் நடந்தார்.

தபோர் மலையில் மறுரூபமாய் தமது தெய்வத்துவ பிரகாச அலங்காரத்தைக் காண்பித்தபோது அப்போஸ்தலர் தாங்கள் அன்று பார்த்த அதிசயத்தை ஒருவருக்குஞ் சொல்லவேண்டாமென்று கற்பித்தார். இவரிடத்தில் விளங்கிய அற்புத குணங்களையும் ஜனங்களுக்கு இவர் செய்த நன்மைகளையும் பார்த்து, இவரைத் தங்களுக்கு இராஜாவாக்க ஜனங்கள் பிரயத்தனஞ் செய்வதை அறிந்து அவர்களைவிட்டு அப்பாலேபோய் ஒளிந்திருந்தார். கடைசி வியாழக்கிழமையில் தமது சீஷர்களை உட்காரச்செய்து ஓர் தாழ்ந்த ஊழியனைப்போல் அவர்களுடைய பாதங்களைக் கழுவினுர்.

இதுதான் தாழ்ச்சியின் உத்தம மாதிரி. சேசுநாதர் சுவாமி வருமுன்னே மனிதர்களுள் தாழ்ச்சி என்பது தாழ்வைக் குறிக்கும் ஓர் இழிவான குணம். நமது ஆண்டவர் தாழ்ச்சி உத்தமமான புண்ணியம் என்று முதல்விசை உலகத்துக்குப் படிப்பித்தார். நீங்களும் சேசுநாதரிடம் வந்து இந்தச் சுகிர்த பாடத்தை படித்துக்கொள்ளுங்கள். தம்பி! நீ உன்னைப் பெருமையாய் எண்ணுதே. எல்லாரிலும் நீதான் உயர்ந்தவனென்று வீண்கர்வங்கொள்ளாதே. சுயபட்சம், கண்கட்டி வித்தையில் கைதேர்ந்த ஜாலக்காரன். அது உன் கண்களை மயக்கி உன்னிடத்தில் இயல்பிலே இல்லாத இலட்சணங்களும் அற்புதங்களும் இருப்பதாகத் தோற்றுவிக்கும். மற்றவர்களிடத்தில் பிரகாசிக்கும் நற்குணங்களை நீ பார்க்காதபடி உன் கண்களைக் கட்டும். உன்னைப்போல் எவனுஞ் சமர்த்தன் அல்லவென்று

உனக்குச் சொல்லும். இதை நம்பி நீ மோசம்போகாதே. உனக்கிருப்பது மற்றவர்களுக்கும் இருக்கும், இன்னும் அதிகமும் இருக்கலாம் என்று நீ எண்ணி எவனுக்கும் மேலாய் உன்னை உயர்த்தாதே.

அன்றியும் நமது ஆண்டவர் பாவ மாசில்லா பரிசுத்தராயிருந்தாலும் உலகத்திலிருந்த காலத்தில் பாவப்பழக்க வழக்கமுள்ள சாமானிய மனிதர்களைப்போல் தம்மைப் பல சமயங்களில் அடக்கி தபசால் தம்மை ஒறுப்பார். நாற்பது நாள் வனாந்தரத்திலிருந்து அன்னபான ஆகாரமின்றி உபவாசமாயிருந்தார். இவர் அதி உத்தம சர்வேசுரனானதால் இவரிடத்தில் பாவத்தின் நிழலும் கிட்ட அண்டாது. இப்படி இருந்தாலும் பாவத்தின் விஷம் தீண்டினவர் போல் கடினமான தபசு செய்தார். இவ்விதமாய் நமது முன் நடந்து தபசின் வழியைக் காட்டுகிறார்.

உங்கள்முன் நடந்துபோகும் நித்தியரான இராஜாவை நன்றாய்க் கவனித்துப் பாருங்கள். நான் செய்வதுபோல் நீங்களும் செய்யுங்கள். அதிகஞ்செய்ய நான் கேட்கமாட்டேனென்று அவர் உங்களுக்குச் சொன்னது இன்னும் ஞாபகம் இருக்கிறதா? அவர் செய்வதுபோல் நீங்களும் தபசின் பாதையில் நடப்பது உங்கள் கடமை. பாவத்தில் ஜென்மித்து பாவத்தில் வளரும் பாவியான மனிதனுக்குத் தபசின் பாதையின்றி வேறு பாதை இல்லை. நீங்கள் தபசு செய்யாவிட்டால் எல்லாரும் கெட்டழிந்து போவீர்களென்று வேதவாக்கியம் முறையிடுகின்றது.

தபசு செய்ய வனாந்தரம் போகவேண்டுமோ? அர்ச். அந்தோனியார், அர்ச். சின்னப்பர் முதலியவர்கள் வனவாசிகளாய் வனத்தில் பல வருஷங்கள் கடினமான தபசு செய்தார்கள். நீங்கள் அவ்வளவுதூரம் போகத் தேவையில்லை. இருக்கிற இடத்திலே, நீ எப்படி தபம் செய்யலாமென்று கேள். உன் இந்திரியங்கள் போகிற வழியில் விடாமல் அவைகளை அடக்கு. கண்பார்வையை இஷ்டம் போல் எங்கும் செல்லவிடாதே. வியாதியுந் துன்பமும் நஷ்டமுந் தரித்திரமும் உனக்கு வரும்போது உன் பாவங்

களுக்குத் தபசாக அவைகளை நல்ல மனதோடு ஏற்றுக் கொள். இன்னமும் எந்தச் சமயத்தில் உன் சுயபட்சம், உன் இந்திரியங்களின் சுகம் ஆகிய இவைகளை நீ திருப்தி செய்யாமல், சேசுநாதரைப் பார்த்து நீ அவைகளைத் தடுத்து அடக்கி, ஒடுக்கி வருகிறாயோ அந்தச் சமயத்தில் நீ உத்தமமான தபசு செய்கிறாய்.

இதுவுமன்றி நமது திவ்விய இரக்ஷகர் மனிதர் சபையி லிருந்தபோது அவருடைய மனதில் உலக காரியங்களின் மட்டில் கவலையாவது, பற்றுவது, மிதந்தப்பின மதிப்பாவது இல்லை. அவருடைய இருதயத்தில் எவர்பேரிலாவது கிரமந்தப்பின சிநேகமில்லை. அவர் பேச்சிலுஞ் செய்கை யிலும் விபரீதமானதும், எதார்த்தமற்றதும், முகப்பிரீதி உள்ளதுமானது ஒன்றுமில்லை. இவ்வித சமநிலையும் சமாச மும் உள்ள சீரான நடத்தையைப் பார்த்தவர்கள் ஆச்சரி யப்பட்டுப் பிரமித்தார்கள்.

சகோதரரே! இதோ நீங்கள் உலகத்தில் நடக்கத்தக்க விதம். கிறீஸ்துவன் உலகத்தின் மத்தியிலிருந்தாலும் உலகத்தோடு சாராமலிருப்பது அவனுக்கு யோக்கியம். இதினால் ஆதிமுதலில் உன் இருதயத்திலிருந்து உற்பத்தி யாகும் பற்றுதல்களை எல்லாம் நீ கிரமமான வழியில் செலுத்துவது முக்கியம். உலக சுக வாழ்விலே உன் மனஞ் சிக்கிக்கொள்ளாதபடி நீ கவனிக்கவேண்டும். எவன் எவள்பேரிலும் விசேஷ பட்சம் வைக்காதே. உலகத்தா ரிடம் நீ பார்க்கிறதைப்பற்றியோ, கேட்கிறதைப்பற்றியோ மனதில் கலங்கலாகாது. முள்ளின்மேலே ஓர் துணியைப் போட்டால் எப்படி அது மாட்டிக்கொள்ளுமோ, அப் படியே சிநேக பாவம் தன் முன் தோன்றும் வஸ்துக்கள் மேலே எளிதில் மாட்டி சிக்கிக்கொள்ளும். இருதயத்தி லிருந்தே எல்லாத் துர்க்குணங்களும் உற்பத்தியாகின்றன வென்பது தேவ வாக்கு.

அன்றியும் நீ எந்த வேலையில் யாரோடு இருந்தாலும் எவனுக்கும் கடமைப்பட்டு அடிமையாகாதே. உன்னைச் சேர்ந்த விஷயங்களை வழியிலே போகும் எவனுக்கும்

சொல்லி மோசம் போகாதே. வெளிக்குப் பகட்டாய்த் திரிபவர்களும் உண்டு. வேஷம்போட்டு ஏமாற்றுகிறவர்களும் உண்டு. கண்ணை மூடி மண்ணைத் தூற்றுகிறவர்களுமிருக்கிறார்கள். காலைத் தொட்டு நமஸ்காரஞ் செய்வது போல் வாரிப்பிடித்துக் கீழே தள்ளுகிறவர்களுமிருக்கிறார்கள். இதனால் எச்சரிக்கையுடன் முன்பின் பார்த்து போ. ஆழம் அறியாமுன் காலை விடாமல் நடப்பது புத்திமான் தொழில். இப்படி நடப்பதால் உன் யோக்கியதையை நீ காப்பாற்றுவாய். இதுவே உன்மட்டில் நீ செலுத்தவேண்டிய கடமை. இனிப் பிறத்தியார் விஷயத்தில் எப்படி நடப்பது யுக்தியென்றறிய சேசுநாதர்சுவாமி உன் முன் நடப்பதைக் கவனித்துப்பார்.

மூன்றும் பாகம்

நமது தயையுள்ள ஆண்டவர் மனிதர் மத்தியிலிருக்கும்போது எல்லாருக்கும் அன்பும் தயையும் இரக்கமும் காட்டிவந்தார். அவரிடத்தில் பிரகாசித்த தர்மகுணங்களை எல்லாரும் பார்த்து அவரிடத்தில் எந்த நேரத்திலும் பயமின்றி வருவார்கள். துன்பப்படுவோர் விடும் பெருமூச்சும், ஏழைகள் சிந்துங் கண்ணீரும், அவர் இருதயத்தை இளகச் செய்யும். சிறு பிள்ளைகளைத் தமது சமீபம் வரும்படி செய்து பட்சத்தோடு அவர்களை அணைத்து ஆசீர்வதிப்பார். ஜனங்கள் திரண்டுகூடி தங்கள் வீட்டையும் வேலையையும் மறந்து சேசுநாதருடைய பிரசங்கத்தைக் கேட்கவும் அவரைப் பார்க்கவும் வெகு தூரம் போவார்கள். போனவர்கள், களைத்து சோர்ந்து இருந்தால் இவர்கள் எல்லாருக்கும் திருப்தியான போஜனம் அற்புதஞ் செய்து கொடுத்து, அவர்களைப் பந்தியில் வைத்துத் தமது கையால் போஜனம் பறிமாறுவார்.

வியாதிக்காரர், குஷ்டரோகிகள், அங்கசனர்கள், நொண்டி நடம், எந்தெந்த பிணி நோவுள்ளவர்களும் சேசுவைத் தேடி வருவார்கள். இவர் எல்லாருக்கும் நல்ல வார்த்தை சொல்லி ஆசீர்வாதஞ் செய்து பூரண சௌக்கி

யத்தோடு பாவ மன்னிப்பும், ஆத்துமத்தில் சமாதானமுங் கொடுத்து வீட்டுக்குச் சந்தோஷமாய் அனுப்புவார். உத்தம பிறர்சிநேகத்தின் பாடமிதுதான்.

ஆ! மனிதர்களுக்குள்ளே இவ்வித சிநேகபாந்தமிருக்குமானுல் பூமியே மோக்ஷமாக மாறிப்போகும்! மனிதர் சமூகத்தில் ஜீவித்துவருகிறவர்கள் தங்களோடுகூட வாழ்பவர்களோடு சமாதானமாயிருந்து நன்மை செய்ய விரும்பினுல், சேசுநாதர்சுவாமியிடத்தில் விளங்கும் பிறர்சிநேகம் அவர்களிடத்திலுமிருப்பது மகா அவசியம். சிநேகபாந்தமில்லாத மனிதர்சமூகம் காட்டுமிருகங்களின் கூட்டம்போலாகும். நமது அயலாரோடு சமாதானமாய் வாழவேண்டுமானுல் பல சமயங்களில் நமது எண்ணத்தில் பிடிவாதமாய் ஊன்றி நிற்பதை விடவேண்டும். மனிதர் சபையில் சண்டை வளர முக்கிய காரணமேதென்றுல், ஒவ்வொருவனுந் தன் எண்ணத்தை குரங்குப் பிடியாய் பிடித்து ஸ்தாபிக்கவும், தன் சுய நலத்தையே தேடவும், எதிலும் முன்னுக்கு வந்து வம்புபேசி வாதாடுவதுமேயன்றி வேறென்ன?

பிறரை நடத்த அதிகாரம் பெற்றவன் பட்சத்தோடு கட்டளை கொடுத்தால், அவனுக்குக் கீழ்ப்பட்டவர்கள் சந்தோஷத்தோடு அதைச் செய்வார்கள். அவனவன் குணத்திற்கும் அறிவுக்கும் தகுந்த வகையில் அவனவனை நடத்துவது யுக்தி. எவனையும் எந்த முகாந்தரம் நிமித்தமும், நீயாவது அவனுவது மனதில் கோபம் பொங்கிக்கொதிக்கும் வேளையில், சினந்து சீறுவது அல்லது தண்டிப்பது பிரயோசனமற்ற கொடுஞ் செய்கை. கோபந்தணிந்து உன் மனம் சாந்தமாயிருக்கும்போது நீ கண்டித்தால் அது இருவருக்கும் பிரயோஜனமுள்ளதாகும்.

நமது தேவ ஆண்டவர் மனிதர் மத்தியிலிருக்கும்போது அவர்களுடைய துஷ்ட குணத்தையும் தப்பிதமான செய்கைகளையும் பார்த்தும் பாராதவர்போல் நடந்துவந்தார். தம்முடைய மனதில் கோபமின்றி, பகையின்றி, எல்லாரோடும் சமரசமாய்க் கலந்து, எல்லாருக்கும் எல்லா

முமாயிருந்தார். அப்படியே நீங்களும் பிறர் விஷயத்தில் நடப்பது உங்கள் கடமை. பிறரிடத்தில் தோன்றும் குறைகளைப் பலசமயங்களில் நாம் பாராதவர்கள்போல் நடக்கவேண்டும். பிறரை நல்வழியில் நடத்தும் பொறுப் பேற்றவர்களானால் அப்போது அவர்கள் செய்யுந் தப்பிதங் களை அறிந்து விசாரித்து அவைகளைத் திருத்துவது நம்மு டைய கடமையாகும். மேல் நோக்காய், பாதிக் கண்ணால் மாத்திரம் பார்ப்பது அவர்களைப் பாவப் பழக்கத்தில் ஸ்தி ரப்படுத்துவதுபோலாகும். பிறர் நமக்குச் செய்யும் தப் பிதங்களை மன்னிக்க மனதாயிருப்பது பிறர்சிநேகத்துக்கு அழகு. நீங்கள் பிறர் செய்யுந் தப்பிதங்களை மன்னித் தால்தான் பரமண்டலங்களிலே இருக்கிற உங்கள் பிதா உங்கள் பாவங்களை மன்னிப்பார்.

உன்னைச் சூழ்ந்திருக்கிறவர்கள் மனிதர்களேயன்றி சம்மனசுகள் அல்லவே. மனிதர்களானால் குறையும் குற்ற மும் இல்லாமலிருப்பார்களா? இதனால் பிறரிடத்தில் நீ காணும் குற்றங்குறைகளைப்பற்றி ஆச்சரியப்படுவானேன்? நீயே பல சமயங்களில் தப்பிதஞ் செய்திருக்கிறாய். அதைப் பிறர் தயவாய் மன்னித்திருக்கிறார்கள். அப்படி இருக்க நீ ஏன் மற்றவர் செய்த தப்பிதத்தை மன்னிக்க மாட்டேனென்று பிடிவாதஞ் செய்கிறாய்? எந்த அள வோடு பிறருக்கு நீ அளப்பாயோ அந்த அளவே உனக் குங் கொடுப்பார்கள்.

சகோதரரே! சேசுநாதர்சுவாமி நமக்குக் காண்பிக் கும் உன்னத தர்ம மாதிரியை எப்போதும் நமது கண் முன் வைத்து, ஒருவரொருவரை எதார்த்தமான மன தோடு சிநேகித்து, எல்லாரோடும் சமாதானமாய், ஒரு குடும்பத்துப் பிள்ளைகளைப்போல் வாழ்ந்தால், மோக்ஷத்தி லிருக்கும் நமது தேவ பிதாவுக்கு யோக்கிய பிள்ளைகளா யிருப்போம். பிறர்சிநேகம் சர்வேசுரனுடைய பிள்ளைகள் யாரென்று காட்டும் தப்பாத அடையாளம். இந்த அடை யாளத்தால் நாம் சேசுநாதருடைய சீஷர்களென்று உலகம் அறியும்.

சேசுநாதருடைய பரிசுத்த இருதயமே! உம்மைப் போல் நாங்களும் சாந்தமும் தாழ்ச்சியும் சிநேகமும் உள்ளவர்களாகும்படி கிருபை செய்யும்.

ஆறும் நாள்—மூன்றும் தியானம்

சேசுநாதருடைய கடைசி இராப்போஜனம்

நமது அன்புள்ள இரக்ஷகர் மனிதரோடு முப்பத்தி மூன்று வருஷங்கள் இருந்து அவர்களுக்குப் பலவகை யான நன்மைகள் செய்து, தேவ ஞானம நிறைந்த உன்னத போதனைகளைப் படிப்பித்தபின்பு, அவர்களை விட்டுத் தமது பிதாவின் சமுகத்திற்குப் போக ஆன காலம் வந்தது. மனிதர்களை விட்டுப்பிரியுமுன் அவர்கள்மேல் தமக்கு இருந்த அணைகடந்த சிநேகத்தை ஓர் உத்தம அடையாளத்தால் காட்ட மனதாயிருந்தார்.

மனிதருக்காக தமது இரத்தத்தைச் சிந்தி உயிரைக் கொடுப்பதே அதி உன்னத அடையாளமாயினும், அவருடைய சிநேகத்திற்கு இது போதுமானதாகத் தோன்ற வில்லை. தமது பிரிய பிள்ளைகளாக ஏற்றுக்கொண்ட மனிதரை அநாதப்பிள்ளைகளாய் இந்தப் பரதேச பூமியில் விட்டுப்போகும்படி அவர் மனதுக்குச் சம்மதமில்லை. தமது பிதாவின் சமீபத்திலிருக்க அவருக்கு ஆசையாயிருந்தாலும், தமது பிள்ளைகளை விட்டுப்பிரிவது அவருக்கு வருத்தமாயிருந்தது. இதனால் மனிதர் இரக்ஷணியத்துக்காக மரித்த பிற்பாடும் மனிதரோடுகூட எப்போதும் இருக்கும்படியாய் உத்தேசித்தார்.

தாம் நினைத்ததை நினைத்ததுபோல் செய்யும்படியான சர்வ வல்லமையுள்ள சர்வேசுரனானதால், அற்புத தேவநற்கருணையை உண்டாக்கி அதினால் அவர் தமது பிதாவின் சமுகத்தில் எப்படி இருக்கிறாரோ அப்படியே

மனிதர் சபையிலே இப்போது இருக்கிருர். சேசுநாதர் ஏற்படுத்திய தேவநற்கருணை சகல அற்புதங்களிலும் மேலான அற்புதம். சிங்காரத்தோப்பின் மத்தியிலிருந்த ஜீவிய விருக்ஷம். 'மோட்சத்திலிருந்து ஓயாமல் இறங்கி வரும் தேவாமிர்த போஜனமாகிற அற்புத மன்ன. நமது தேவாலயங்களின் அலங்காரம். கிறீஸ்துவர்களின் உயிர் நிலை. அவர்களுடைய பாக்கியம். இரக்ஷணியத்தின் அடைமானம்.

தேவநற்கருணையிலிருக்கும் சேசுநாதரை ஒருவன் விசுவாசத்தாலுஞ் சிநேகத்தாலும் எவ்வளவு அடுத்து நிற்கிருனே அவ்வளவு அவன் உயிர்பெற்று வாழ்வான். ஆனதால் கிறீஸ்துவர்கள் தேவநற்கருணையில் பூரண விசுவாசம் வைத்து அதிலே நமக்காக இருக்கும் சேசுநாதர் சுவாமிமட்டில் செலுத்தவேண்டிய கடமைகள் இன்னதென்று, நன்ருய் அறிவது வெகு பிரயோசனமுள்ளது. இந்தக் கடமைகளை நாம் இங்கே விவரிக்கப்போவதால், நீங்கள் கவனமாய்க் கேட்டு உங்கள் மனதில் அவைகள் ஆழமாய்ப் பதியும்படி செய்யுங்கள். இஷ்டப்பிரசாதத்தின் மாதாவாகிய பரம தேவ ஆண்டவள் நமக்குத் துணை செய்வாளாக !

முதல் பாகம்

தேவநற்கருணை மனிதர் புத்திக்கு எட்டாத உன்னத பரம சத்திய இரகசியமாதலால், அதை ஏற்படுத்துமுன், மனிதர் மனதை மெதுவாய் சமரசப்படுத்தி இணக்கும்படி, சேசுநாதர் பலசமயங்களில் இந்த அற்புத நவத்தைப்பற்றிப் பிரசங்கித்தார். * அப்படியே ஒருநாள் வனந்தரத்தில் ஐயாயிரம் ஜனங்களுக்கு, ஐந்து அப்பங்களின்மேல ஆசீர்வாதஞ்செய்து, திருப்தியான போஜனம் கொடுத்தபின்பு அவர்கள் அடுத்த நாளிலும் பெருங் கூட்டமாய்த் தம்மைத் தேடி வந்தார்களென்று பார்த்து, அவர்களுக்குத் தாம் இனிமேல் கொடுக்கும் அற்புத போஜனத்தைப்பற்றிப்

* அர்ச். அருளப்பர் சுவி. 6-ம் அதி.

பேசிச் சொல்வார்: நாய் ஜீவிய அப்பம். உங்கள் முன்னோர்கள் வனாந்திரத்தில் மன்னாவைச் சாப்பிட்டார்கள். பின் இறந்தார்கள். நாம் கொடுக்கும் அப்பத்தைச் சாப்பிடுகிறவன் சாகமாட்டான். நாமே மோக்ஷத்திலிருந்து இறங்கிய அப்பம். நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் உயிராகிய என் மாம்ஸம்.

சேசுநாதர் சொன்ன இந்த வார்த்தைகளைக்கேட்டவர்களில் சிலர் தங்களுக்குள்ளே வாக்குவாதம் செய்து எப்படி இவர் தன் மாம்ஸத்தைச் சாப்பிடும்படி கொடுக்கக்கூடும் என்று தர்க்கிக்கும்போது, நமது **தேவ இரக்ஷகர்** முன்னிலும் அதிக அழுத்தமாய்ப் பேசி: சத்தியமாய் உங்களுக்கு நாம் சொல்லுகிறோம். மனுமகனின் மாம்ஸத்தைச் சாப்பிட்டு அவர் இரத்தத்தை நீங்கள் குடியாவிட்டால் உங்களிடத்தில் உயிர் இருக்காது. ஏனெனில் என் மாம்சமே மெய்யான உணவும் என் இரத்தமே மெய்யான பானமுமாயிருக்கிறது என்று திருத்தமாயுந் தெளிவாயும் சொன்னார்.

கடைசியில், தாம் சாகிறதற்கு முந்தின நாளாகிற வியாழக்கிழமை சாயரக்ஷையில் தமது சீஷர்களோடு கடைசிவிசை பந்தியிலிருந்தபோது, தாம் நித்தியகாலமாய் செய்யும்படி உத்தேசித்திருந்த அற்புத பரம தேவ இரகசியங்களில் அதி உன்னத இரகசியத்தைச் செய்யக் குறித்த காலம் சமீபத்திலிருக்கிறதாகப் பார்த்தார். தாம் செய்யப்போவது இன்னதென்று தமது மனதில் பூரண அறிவோடு அறிந்தார். இதைச் செய்யும்படியாய் வரம்பெல்லாம்கடந்த தமது ஞானத்தையும், அளவுக்கெல்லாம் மேலிட்ட திருவுள்ளத்தையும், சர்வ வல்லபத்தையும் பிரயோகிப்பது அவசியமென்று கண்டார். தாம் இதுமட்டும் செய்த அதிசய அற்புதங்களிலும் அதிக மேலான ஆச்சரிய அற்புதத்தைச் செய்யப்போவதாக உணர்ந்தார். அப்போது அவருடைய முகம் தேவபிரகாச ஒளி வீசுனது. இருதயம் பதைத்தது. கண்கள் கலங்கினது. தேவநற்கருணை ஜீவியத்தில் உலகம் முடியும் நாள் மட்டும் தமது பிள்ளைகளோடு இருந்து அவர்களுக்கு ஆறுதலும்

பாக்கியமும் தந்து, தாம் செய்யும் நன்மைகளை எல்லாம் ஒரே பார்வையில் தமது அனந்த ஞான திருஷ்டியால் பார்த்தார். அதே பார்வையில், நன்றியில்லா மனிதரும் தமது சொந்தப் பிள்ளைகளுக்குள்ளே அநேகம்பேரும், தேவநற் கருணையின் திரைக்குள் மறைந்திருக்கும் தமக்குச் செய்யும் நிந்தை அவமான துரோகங்களை எல்லாம் தமது கண் முன் நடப்பதுபோல் உணர்ந்தார். இந்தக் காட்சிமுன் அவருடைய தேவ இருதயம் பதைத்துத் துடித்து கண்கள் கலங்கி இருந்தது ஆச்சரியமோ?

அப்போஸ்தலர்கள் இந்தக் காட்சிமுன் பிரமித்து கண் நிமையாமலும், வாய் பேசாமலும் அச்சாதிசயத்துடன் நின்றார்கள். சேசுநாதர் அப்பத்தைத் தமது கையில் எடுத்து கண்களைத் தமது சர்வ வல்லப பிதாவிருக்கும் மோக்ஷ பக்கமாய் உயர்த்தி, நன்றியறிதலான ஸ்தோத்திரஞ்செய்து, அப்பத்தை ஆசீர்வதித்து, தமது சீஷர்களுக்குக் கொடுத்து சொல்வார்: நீங்கள் இதை வாங்கிச் சாப்பிடுங்கள். இது என் சரீரம். அதன்பின்பு பாத்திரத்தையுங் கையிலெடுத்து ஸ்தோத்திரஞ்செய்த பின் சீஷர்களுக்குக் கொடுத்து சொல்வார்: நீங்கள் இதை வாங்கிக் குடியுங்கள், ஏனெனில் இது என் இரத்தம். நீங்கள் இதை என் ஞாபகமாகச் செய்யுங்கள்.

இவ்விதமாய் அற்புத தேவநற்கருணையை சேசுநாதர் ஏற்படுத்தினார். தாம் முன் சொல்லியிருந்ததுபோலே ஜீவன் தரும் மோக்ஷ மதுரம் நிறைந்த அப்பமாக தமது மாம்ஸத்தையும் இரத்தத்தையும் மனிதர்களுக்குக் கொடுத்தார். சகோதரரே! நீங்களும் நல்ல பிள்ளைகளைப்போல் சேசுநாதருடைய வார்த்தையில் பூரண விசுவாசம் வைத்து தேவநற்கருணையில் மறைந்திருக்கும் அவருக்கு வணக்கமும் ஆராதனையுஞ் செய்வது உங்களுடைய முதல் முக்கிய கடமை.

சேசுநாதர் எப்படி அப்பத்தின் வெளித்தோற்றத்தில் கண்ணுக்குத் தோன்றாதவிதமாய் இருக்கிறார் என்று மனிதன் தன் அற்பப் புத்தியால் கண்டறிய சக்தி அற்றவன்

இந்த உலகத்தில் தன் கண்முன் நடக்கும் பல காரியங்களின் காரணத்தைச் சரியாய் தெரிந்துகொள்ளக்கூடாத மனிதன், ஆச்சரிய அற்புதங்களுக்குள்ளே அதி உன்னத ஆச்சரியமாகிற தேவநற்கருணையை எப்படித் தன் அற்பப் புத்தியால் அறிந்து அர்த்தம்பண்ணுவான்? நெல்லை வயலிலே நீ விதைக்கிறாய். ஒரு நெல்லிலிருந்து பல தூறுகளுண்டாகி, ஒவ்வொரு தூரிலும் பல கதிர்களும், ஒவ்வொரு கதிரிலும் பல நெல்மணிகளும் உற்பத்தியாகின்றன. ஒரே நெல்லிலிருந்து இத்தனை கதிர்களும் மணிகளும் எப்படி வந்தது என்று எந்த சாஸ்திரியும் இவை உண்டாகும் காரணத்தைத் தான் அறிவதாகச் சொல்ல மாட்டான். இது நிற்க, நெல்லை அரிசியாக்கி சமைத்து நீ சாப்பிட்டால் அது உன் மாம்ஸமாகவும் இரத்தமாகவு மாறுகின்றது. வெண்மையான சாதம் எப்படி சிவந்த இரத்தமாக மாறுதென்று உனக்குத் தெரியுமா? உனக்குந் தெரியாது, எனக்குந் தெரியாது, எவனுக்குந் தெரியாது.

ஆகிலும் அது எப்படி மாறுகிறதென்று நாம் அறியாவிட்டாலும் இந்த மாற்றத்தைப்பற்றி நாம் சந்தேகப்படுவதில்லை. அப்படியே சேசுநாதருடைய தவறாத வாக்கில் நாம் நம்பிக்கை வைத்து, தேவநற்கருணையில் அற்புத மாற்றம் எப்படி உண்டாகின்றதென்று நாம் கண்ணாலே பார்க்காதேபோனாலும், அவர் மெய்யாகவே இருக்கிறார் என்று விசுவசிப்பது நமது முதல் கடமை. இந்த விசுவாசம் உயிருள்ளதாயிருந்தால், தேவாலயத்தில் நீங்கள் போனவுடனே, அதோ சேசுநாதர் இருக்கிறார், இந்த சன்னிதிதீபம் அவர் அங்கே இருக்கிறார் என்று காட்டும் அடையாளம் என்று விசுவசித்து, வணக்கத்தோடு முழங்காலைத் தரையில் ஊன்றி அவரை நமஸ்கரித்து ஆராதிப்பீர்கள். அந்தத் தேவ சன்னிதியைச் சுற்றிலும் ஆயிரம்விசை பதினாயிரந் தேவதூதர்கள் சாஷ்டாங்கமாய் விழுந்து சேசுநாதரை இராப்பகலாய் ஆராதிக்கும்போது அற்ப மனிதன் தேவமகத்துவத்தின் முன் வணக்கமின்றி, மரியாதையின்றி இருப்பது யோக்கியமா? பேசுவதும் சிரிப்பதும் பல சேஷ்டைகள் செய்வதும் சரியா? சகோதரரே! இனி

மேல் நீங்கள் கோவிலுக்குள் பிரவேசித்தவுடனே சேசுநாதர்சுவாமி தேவநற்கருணையில் இருக்கிறாரென்று உறுதியாய் விசுவசித்து முழங்காலிலிருந்து அவரை ஆராதியுங்கள். மற்றவர்களும் அப்படிச் செய்யும்படி நீங்கள் சொல்லிக்கொடுங்கள். விசேஷமாய் கோவிலில் வேலைபார்க்கும் தொழில் பெற்றவர்கள், இதின் விஷயத்தில் முக்கிய கவனஞ் செலுத்தி கோவில் பூஜை தேவர்களுக்கு அஞ்சாது என்ற சுலோகம் தங்கள்மட்டில் செல்லாதபடி ஜாக்கிரதையாயிருப்பார்களாக.

இரண்டாம் பாகம்

நமது ஆண்டவர் மனிதரோடு எப்போதும் இருக்கும்படி சித்தமானபோது அதற்கு அநுகூலமான பலவகை வழிகளுக்குள்ளே அப்பத்தைத் தெரிந்துகொண்டதின் காரணமென்ன? அப்பம் சரீரத்துக்கு உயிரும் பலமும் கொடுப்பதற்கு அவசியமான உணவு. அப்படியே ஆத்துமத்துக்கும் உயிரும் பலமுங்கொடுக்க அற்புத போஜனமாக தேவநற்கருணையை அப்பத்தின் சாயலாய் சேசுநாதர் உண்டாக்கினார். அதின் நிமித்தம் தமது மாம்ஸத்தையும் இரத்தத்தையும் மனிதன் சாப்பிட்டால்மாத்திரம் அவனுக்கு நித்தியமான ஜீவன் வரும் என்று பல இடங்களில் சொல்லியிருக்கிறார். இதுதான் அன்றன்றுள்ள எங்கள் அப்பம். நாம் எல்லாரும் நாள்தோறும் சாப்பிடவேண்டிய தேவ போஜனம்.

நல்ல போஜனம் எல்லாருக்கும் அவசியமென்றாலும் பலவீனமுள்ளவர்களுக்கும், பிரயாசையான கடின வேலை செய்பவர்களுக்கும், உடம்பு தேறும் ஸ்திதியிலிருப்பவர்களுக்கும், இளவயதுள்ள பாலியருக்கும், விசேஷ வகையில் அவசியம். அதுபோலவே தேவநற்கருணையாகிற ஆத்தும போஜனம் முக்கியமாய், புண்ணியத்தில் தூர்ப்பலன் உள்ளவர்களுக்கும், சோதனை தந்திரங்களாகிற ஆபத்திலிருக்கிறவர்களுக்கும், உலக கவலையில் துன்பப்பட்டு வருந்துகிறவர்களுக்கும், வாலிபருக்கும், சிறு

பிள்ளைகளுக்கும், மகா அவசியம். இவர்கள் இந்தத் தேவ போஜனத்தை அடிக்கடி சாப்பிடுவதால் பத்தியிலும் விசுவாசத்திலும் ஸ்திரம்பெற்று பாவசோதனைகளை எளிதில் ஜெயித்து, இளவயதிலேயே சர்வேசுரனுக்குப் பிரமாணிக்கமாய் ஊழியஞ்செய்வார்கள். சேசுநாதருடைய ஸ்தானத்திலிருந்து திருச்சபையை ஆளும் பாப்புமார்கள் பல நிரூபங்களால் தற்காலத்துக் கிறீஸ்துவர்கள் ஆதிகாலத்துக் கிறீஸ்துவர்களைப்போல் ஒரு வாரத்தில் பலமுறையும் கூடுமானால் நாள்தோறும் தேவ நன்மை வாங்கும்படியாய் அவர்களைத் தூண்டியிருக்கிறார்கள். உதாரணமாக கத்தோலிக்கு சபையை சேசுநாதருடைய ஸ்தானத்திலிருந்து ஆண்டு வந்த காலஞ்சென்ற பத்தாம் பத்திநாதர் இதின் விஷயத்தில் முக்கிய கவனம் செலுத்தி பல அற்புத நிரூபங்களால் கிறீஸ்துவ ஜனங்களைத் தூண்டி உற்சாகப்படுத்தி, அநுதினந் தேவநன்மை வாங்குவதை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரும்படியாய் புத்தி போதித்தார். சிறுபாலகரும், பாவமிது புண்ணியமிதுவென்றும், சாதாரண அப்பத்துக்கும் தேவநற்கருணையாகிற தேவ அப்பத்திற்கும் உள்ள வித்தியாசம் இதுவென்றும், தங்கள் பால புத்திக்கு உரிய அளவில் அறியும்படியான வயதுக்கு அவர்கள் வந்தவுடன், காலதாமதமின்றி அவர்களுக்குத் தேவநற்கருணையாகிற சம்மனசுகளின் போஜனத்தைக் கொடுத்து அவர்களை மாசற்றதனத்தில் ஸ்திரப்படுத்திக் காப்பாற்ற வேண்டுமென்று நமது பரிசுத்த பிதா ஓர் அற்புத நிரூபத்தில் கற்பித்திருக்கிறார்.

தேவ நன்மையை வாங்குவதற்கு அவசியமான ஆயத்தம் ஏதென்றால்: ஆத்துமத்தில் எவ்வித சாவான பாவமும் இல்லாதிருப்பது முதல் முக்கிய சாதனம். சாவான பாவம் ஆத்துமத்தின் உயிரை அழிக்கிறபடியால் அந்த ஸ்திதியில் சேசுநாதரை உன் இருதயத்தில் அழைப்பது யூதாஸ் என்பவன் நமது அன்புள்ள ஆண்டவரை யூதர்களுக்கு விற்ற சதித்துரோகத்துக்குச் சமானமாகும். ஆகையால் நீ சாவான பாவத்தோடிருந்தால் முந்தி நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய். இனிமேல் செய்வேன், இப்போது

சாவகாசமில்லை என்று உன் மனதைத் திடப்படுத்தி சாவான பாவத்தோடு நன்மை வாங்காதே. அது அக்கிரமம். தேவ துரோகம். இந்த தேவ போஜனத்தை அயோக்கியமாய் சாப்பிடுகிறவன் தானே தன்னைச் சபிக்கிருன் என்பது வேத வாக்கியம்.

தேவ நன்மை வாங்குவதற்கு அவசியமான இரண்டாம் குணம் ஏதென்றால்: சேசுநாதர்சுவாமிக்கு அதிக மதிகமாய் பிரியப்பட்டு அவரைச் சிநேகிக்கவேணுமென்கிற நல்ல எண்ணத்தோடு தேவ பந்திக்கு நீ போகவேண்டுமேயன்றி மனிதருடைய முகப்பிரீதி, மாமூல், பெருமை முதலிய லோகார்த்தமான இவ்வித எண்ணத்தோடு நீ போகக்கூடாது.

தியானஞ் செய்ய வந்திருக்கும் நீங்கள் எல்லோரும் இன்று ஓர் நல்ல பிரதிக்கினை செய்து இனிமேலாக நான் கூடுமானல் நாள்தோறும் பரிசுத்த மனதோடும் நல்ல கருத்தோடும் நன்மை வாங்குவேன் என்று தீர்மானஞ் செய்யுங்கள்.

மூன்றும் பாகம்

தேவநற்கருணையில் சேசுநாதர்சுவாமி, தாம் சிலுவையில் ஒருவிசை செய்து முடித்த உன்னத பலியை, பீடத்தில் நாள்தோறும் நிறைவேற்ற மனிதர்களுக்காக பலியாய் வருகிருர். கல்வாரிமலையில் சிலுவைமேல் சேசுநாதர் ஒப்புக்கொடுத்த பலி இரத்தப் பலி. பீடத்தில் நாள்தோறும் கொடுக்கும் பலியோ இரத்தம் சிந்தாத பலி. இந்த ஒரு வித்தியாசமின்றி வேறு வித்தியாசம் இவ்விரண்டு வகை பலிகளுக்கும் இல்லை. இந்தத் தேவ பலி, எந்த நாளிலும், அந்த நாளின் எந்த மணி நேரத்திலும், பூமியின் ஏதோ ஒரு பாகத்திலாகிலும் எப்போதும் நடப்பதால்; தேவ பிதா எந்த நேரத்திலும் தமது குமாரனுடைய இரத்தம் அபயமிட்டுக் கூப்பிடுஞ் சப்தத்தைக் கேட்கிருர். பீடத்தின் மேல் சேசுநாதர் பலியாயிருந்து மனிதர்கள் பெயரால் பிதாவை ஆராதிக்கிருர். மனிதர் பாவங்களுக்காக பிதாவிடத்தில் பொறுத்தல் கேட்கிருர். மனிதர்கள் நிமித்தம்

பிதாவுக்கு நன்றியறிதலான ஸ்தோத்திரஞ் செய்கிறார். மனிதர்களுக்குத் தேவையான நன்மை வரங்களை இரந்து மன்றாடுகிறார்.

இவ்வித உன்னத பலி உனக்காக உன் ஊரிலுள்ள கோவிலின் பீடத்தில் நடக்கும்போது நீ போகாமலிருப்பது ஞாயமா? இன்று கடன்பூசை அல்லவென்று ஞாயம் பேசுவது யோக்கியமா? கடனை கழிக்கமாத்திரந்தானோ நீ தேவ பலிபூசைக்கு போவாய்? சேசுநாதர்சுவாமி பேரில் உன்னிடத்திலிருக்கவேண்டிய சிநேகம் எங்கே? அவருக்கு நீ காட்டவேண்டிய நன்றியறிதல் எங்கே? சேசுநாதர்சுவாமி மட்டில் தாராள குணங் காட்டுவது உனக்கு யோக்கியம் அல்லவா? எவ்வளவு நீ தாராளமாய் நடக்கிறாயோ அவ்வளவு சேசுநாதர்சுவாமியும் உனக்குத் தேவையான நன்மைகளைத் தாராளமாய்க் கொடுப்பார். முன்கை நீண்டால் முழங்கை நீளும் என்பது உனக்குத் தெரியாதா?

அன்றியும் நமது தேவ இரக்ஷகர் பூசையில் பலியாய் வந்த பின்பு மறைந்துபோகிறதில்லை. தன் பிள்ளைகள் மத்தியில் இருக்குந் தகப்பனைப்போல் சேசுநாதரும் மனிதரோடு கூட எப்போதும் இருக்கிறார். மனிதருக்கு ஆறுதலும் உதவியுந் தந்து அவர்கள் சிந்துங் கண்ணீரைத் துடைத்து அவர்களைத் தேற்றும்படியாய்க் காத்துக்கொண்டிருக்கிறார். இந்தப் பூமி துன்பம் நிறைந்த ஸ்தலமென்று அவருக்கு நன்றாய்த் தெரியும். அவர் உலகத்தில் இருந்த காலத்தில், வருந்தி உழைத்து பார சுமையைச் சுமந்து நடக்கிறவர்கள் எல்லாருந் தம்மிடம் வருமபடி கூப்பிட்டதுபோல் இப்போதும் தேவநற்கருணையிலிருந்து எல்லாரையும் தம்மிடம் வரும்படி அழைக்கிறார்.

ஓ! கேளுங்கள் சகோதரரே! உங்களுக்கு யாதோர் நஷ்டமோ, குறையோ, சிறுமையோ, வறுமையோ, ஏதோ வந்தால், உங்கள் மனது கலங்கி, இருதயம் பொங்கி, உடல் மெலிந்து, உயிரோடிருப்பதே பெரும் பாரம்போல் உங்களுக்குத் தோன்றினால், தேவநற்கருணையில் இருக்கும் சேசுவைத் தேடி வாருங்கள். உங்கள் மனதில் ஆறுதல்

உண்டாகும். சேசுநாதர் உறுதியும் திடனும் கொடுப்பார். துக்கக் கண்ணீர் ஆனந்தக் கண்ணீராய் மாறும். மனிதர் உங்களைப் பழித்து நிந்தித்து பகைத்தால், உற்ருர் உறவினர் உங்களை அலட்சியஞ்செய்தால் சேசுநாதருடைய பாதத்தில் வாருங்கள். அவர் உங்களுக்குத் தகப்பனுயிருந்து உங்களை அணைத்துத் தேற்றி ஆறுதலாயிருப்பார். பாவ சோதனையால் மனந்தடுமாறி, ஆசாபாசத்தால் நீங்கள் கலங்கி வருந்தும்போது சேசுநாதரிடத்தில் நம்பிக்கையுடன் வாருங்கள். அவர் கமது இருதயத்தைக் காண்பிப்பார். உங்கள் மனதிலுள்ள சோதனைகள் எல்லாம் சூரியப் பிரகாசத்தைக் கண்ட இருள்போல் பறந்து ஓடிப்போகும். பாவத்தை நீ உன் அஜாக்கிரதையால் செய்தபோதிலும் சேசுநாதருடைய பாதத்தில் வந்து ஊதாரிப்பிள்ளையைப் போல் விழுந்து, தகப்பனே! நான் பரலோகமும் பூலோகமும் அறிய பாவத்தைச் செய்தேன். தயவாய்ப் பொறுத்துக்கொள்ளும் என்று சொல். அவர் பொறுத்துக்கொள்வார். உன் மனதில் சமாதானம் உண்டாகும்.

எப்போதும் உயிருள்ள விசுவாசத்தோடு தேவநற்கருணையில் நமக்காகக் காத்திருக்கும் தகப்பனிடத்தில் போகப் பழகவேண்டும். மனதிலுள்ள வருத்தத்தை ஒரு நாளில் பலமுறை அவரைச் சந்திக்கப் போய் அவரிடத்தில் சொல்ல அறியவேண்டும். இவ்வித விசுவாசமும் அதின் பலனும் இன்னதென்று உங்கள் மனதில் அழுந்த அறிய ஓர் வர்த்தமானத்தைக் கேளுங்கள்.

ஓர் ஊரிலிருந்த குருவானவர் சிறு பிள்ளைகளுக்கு ஞான உபதேசஞ் செய்து தேவநற்கருணையில் சேசுநாதர் சுவாமி இருக்கிருர் என்றும், சிறு பிள்ளைகள்பேரில் எப்போதும் பட்சமாயிருக்கிருர் என்றும், ஆனதால் சிறுபிள்ளைகள் அவரிடங் கேட்கும் மன்ருட்டைத் தயவாய்க் கொடுப்பாரென்றும் விவரித்தார். அங்கேயிருந்த பிள்ளைகளுக்குள் ஏழு வயதுள்ள ஒருவன் எல்லாருங் கோவிலைவிட்டுப் போன சமயம் பார்த்து உள்ளே பீடத்தின் கிட்டப்போய், சமீபத்திலிருந்த ஓர் படியைத் தூக்கிவந்து அதன் மேலேறி தேவநற்கருணைப் பெட்டி

யின் கதவைத் தன் சிறு கையால் தட்டினான். சத்தம் வரவில்லை. இரண்டாம் விசையும் மூன்றாம் விசையுந் தட்டிச் சொல்வான் : நல்ல சேசுவே! இங்கே இருக்கிறீர், இது எனக்குத் தெரியும், சுவாமியார், எனக்கு இப்போது படித்துக்கொடுத்தார்! சிறுபிள்ளைகள்பேரில் நீர் பட்சமா யிருக்கிறதாகச் சொன்னார். நான் உம்மைப் பார்க்க வந்தேன். ஒரு காரியஞ் சொல்லவேண்டும். தயவு செய்து கதவைத் திறந்தருளும். இவன் சொல்லி முடிந் ததும் கதவு தன்னால் திறந்தது. நமது தேவ இரக்ஷகர் பட்சத்தோடு அவன் கண்ணுக்குத் தோன்றினார்: மகனே! என்ன சொல்ல வந்தாய் என்று கேட்க, சிறுவன் கண்ணில் தண்ணீர் ததும்ப : சேசுவே! உம் மைப் பார்ப்பது எனக்குச் சந்தோஷம், ஒரு உபகாரஞ் செய்யவேண்டும். அப்பா ஜெபம் செய்கிறதில்லை, கோவி லுக்கு வருகிறதில்லை. அம்மாளை அடிக்கிறார், அம்மா அழு கிறார்கள். நானும் அழுகிறேன். நல்ல சேசுவே! அப்பா வுக்கு நல்ல புத்தி கொடுக்கவேண்டும், என்று தன் மழலைச் சொல்லால் பேசினான். சேசுநாதர் சிறுவனைத் தேற்றி, மகனே! நல்லது சந்தோஷமாய் வீட்டுக்குப் போ, நீ கேட் டதுபோல் நடக்கும் என்று ஆசீர்வதித்து பையனை அனுப் பினார். சேசுநாதர் சொன்னதுபோல் அவன் தகப்பன் மனந்திரும்பி நல்ல கிறீஸ்துவனானான். வீட்டிலே அது முதல் சமாதானம் இருந்தது.

இவ்வித விசுவாசந்தான் உங்கள் மனதிலிருக்கும்படி யாய் நாள்தோறும் கோவிலுக்குப் போகும்போது சேசு நாதரைப் பார்த்துக் கேளுங்கள் :

ஓ! சிநேகம் நிறைந்த சேசுவே! எங்களுக்காக தேவ நற்கருணையில் திரைக்குள்ளே மறைந்திருக்குந் தேவனே! உம்மை நான் பத்தி விநயத்தோடு ஆராதிக்கிறேன். இங்கே மெய்யாகவே அப்பத்தின் வெளித்தோற்றத்தின்கீழ் பிர சன்னமாய் இருக்கிறீர் என்று நான் உறுதியாக விசுவசிக் கிறேன். இந்த சரீரந்தான் தேவமாதாவின் உதரத்தில் அற்புதமாய் உருவாகிப் பிறந்தது. இந்த சரீரந்தான் சிலுவையில் எங்களுக்காக பலியாகக் கொடுக்கப்பட்டது.

உம்மை ஆராதித்து உமக்கு ஸ்தோத்திரஞ் சொல்லி இனி மேல் நான் அடிக்கடி உம்மைச் சந்திக்க வருவேன். நீர் கொடுக்கும் தேவ போஜனத்தை கூடுமானால் நாள்தோறும் சாப்பிடுவேன். கோவிலில் தேவ பலிபூசை நடக்கும்போது நானுங்கூட வருவேன். உமக்காக ஜீவித்து உம்மிடத்தில் மரிப்பதே என் பாக்கியம், என் நல்ல சேசுவே! என் விசுவாசத்தை ஸ்திரமாக்கி விர்த்திசெய்யும்.

ஆறும் நாள்—ஞானபோதகம்

தன் ஜீவிய அந்தஸ்தில் தேவ சித்தம் இதுவென்று அறிந்து தன் நடத்தையைச் சீர்ப்படுத்தல்

நாம் முன் சொன்னதுபோல் அர்ச். இஞ்ஞாசியார் எழுதிய ஞான முயற்சிகளின் ஓர் முக்கிய நோக்கம் ஏதென்றால்: ஒவ்வொருவனும் தன் நடத்தையைச் சீர்ப்படுத்தி சர்வேசுரன் தனக்குக் குறித்த வழி இதுவென்று அறிந்து, அவ்வழி நடந்து தன் ஆத்தும இரக்ஷணியம் அடைவதாகும். இந்த ஞான முயற்சிகளை எவன் ஒழுங்காயும் பிரமாணிக்கத்துடனுஞ் செய்கிறானோ அவன் நாளடைவில் சர்வேசுரனுடைய சித்தம் தன்மட்டில் இதுவென்று அறிவான். தேவப்பிரகாசம் அவன் மனதில் உதிக்கும். முக்கியமாய் சேசுநாதர்சுவாமியின் தர்ம ஜீவியத்தைக் கண்முன் வைத்துத் தியானிக்கும்போது, இரு யுத்தக் கொடிகளைப்பற்றி யோசிக்கையிலும், எந்த வழியில், எந்த வகையில், சேசுநாதருக்கு எவ்வளவு சமீபத்தில் நீங்கள் நடப்பது உசிதமென்றும் அவசியமென்றும் உங்கள் புத்தியில் தோன்றியிருக்கவேண்டும்.

இதின் விஷயத்தில் உங்களுக்கு இன்னும் அதிக தெளிவும் பிரகாசமும் உண்டாகும்படியாய்ச் சில யோசனைகளையும் புத்திகளையும் அர்ச். இஞ்ஞாசியாருடைய ஞான முயற்சிகளில் இருப்பதுபோல் இங்கே உங்களுக்கு விவரிக்கப்போகிறோம்.

முதல் பாகம்

சர்வேசுரன் வரம்பெல்லாங் கடந்த ஞானமுள்ளவராதலால், மனிதர் அனைவரும் பொதுவில் தங்கள் ஆத்துமத்தை இரட்சித்துக்கொள்ளும்படியாய் அவர்களைச் சிருஷ்டித்தபின்பு, ஒவ்வொரு மனிதனுந் தன்னை இரட்சித்துக்கொள்ளும்படியாய் அவனுக்கு ஓர் விசேஷ பாதையைக் குறித்திருக்கிறார். இதின் காரணமேதெனில்: மனிதரில் ஒவ்வொருவனுடைய குணமும், அறிவும், பழக்க வழக்கங்களும், நோக்கமும் ஆசையும், பல பேதங்களால் வித்தியாசப்பட்டிருப்பதால் அவனவன் சுபாவத்துக்குத் தகுந்ததுபோல் வித்தியாசமான ஒழுக்க வழியும் இருகக வேண்டும். இதுதான் சர்வேசுரன் அவனுடைய இரக்ஷணியத்துக்குக் குறித்த விசேஷ பாதை. இதை அறிவதும், அறிந்தபின் இதில் சேர்வதும், சேர்ந்தபின் இதில் தன்னைச் சீர்ப்படுத்துவதும் ஆகிய இவைகள் ஞான முயற்சிகளின் பிரதான நோக்கம்.

உலகத்தில் இரு வகையான நிலை உள்ள ஜீவிய அந்தஸ்து இருக்கின்றது. குடும்ப சகிதமான சம்சார அந்தஸ்து ஒன்று, உலகத்தைத் துறந்த சந்நியாச அந்தஸ்து ஒன்று. இவ்விரண்டும் மாற்றமின்றி நிலையாயிருப்பவைகளாதலால், ஒன்றிலிருந்து எவனும் தன் இஷ்டம்போல் வேறொன்றுக்குப் போகக்கூடாது. இதின் நிமித்தம் நிலையான ஓர் ஜீவிய அந்தஸ்தில் நீ பிரவேசிக்குமுன் சர்வேசுரன் உனக்குக் குறித்த அந்தஸ்து எதுவென்று தீர யோசித்து விசாரிப்பது அத்தியாவசியம்.

ஒவ்வொருவனும் ஒழுங்காய் இதின் விஷயத்தில் யோசிக்கும்படியாய் பின்வரும் புத்திகளைக் கவனிப்பது உத்தமம். சிலரை சர்வேசுரன் விசேஷ ஏவுதலால் யாதொரு சந்தேகமுமின்றித் தெளிவான வகையில் தாம் குறித்த அந்தஸ்துக்கு அழைக்கிறார். அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பர் கிறீஸ்துவர்களைத் துன்பப்படுத்தவேண்டுமென்கிற துர் எண்ணத்தோடு போகும்போது சேசு

நாதர் அவரை வழியில் தடுத்து, மனதை மாற்றி, அவர் தமது தேவ நாமத்தை சகல ஜனங்களுக்கும் பிரசங்கிக்கும் அப்போஸ்தலராக அவரைத் தெரிந்துகொண்டார். அர்ச். ஸ்தனிஸ்லாஸ் தமது வீட்டில் வியாதியாயிருந்த போது தேவதாய் தரிசனமாகி அவர் சேசுசபையில் பிரவேசிக்கவேண்டுமென்று சொல்ல, அவரும் தாமதமின்றி உடனே சேசுசபையில் சேரப் புறப்பட்டார். சர்வேசுரன் இப்படி நேரே அழைப்பது அற்புத வகை. ஆனால் இது சாதாரணமல்ல, சர்வேசுரனே இவர்கள் கையைப் பிடித்து தாம் குறித்த இடத்துக்குக் கூட்டிப்போவதுபோலாகும். எல்லார்மட்டிலும் இப்படிச் செய்யமாட்டார்.

இந்த முதல் வகையில் சர்வேசுரன் அழைக்காத போது, நிலையான ஜீவிய அந்தஸ்தைத் தெரிந்துகொள்ள மனதாயிருக்கிறவன் பின்னால் வரும் ஒழுங்குப் பிரகாரம் யோசிக்கலாம். உன் மனது கலக்கமின்றி சீர்தூக்குந் துலாக்கோல்போல் எந்தப் பக்கமும் சாயாமல் நடுவு நிலைமை உள்ளதாயிருக்கச் செய். தேவப்பிரகாச உதவியை ஜெபஞ்செய்து கேள். அதன்பின் நீ சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்து உன் ஆத்துமத்தை இரட்சிப்பதே உன் முக்கிய நோக்கமாக உன் புத்தி சமுகமுன் வைத்து, சம்சார அந்தஸ்திலோ சந்நியாச அந்தஸ்திலோ, இதை அநுகூலமாய் நீ முடிக்கக்கூடுமென்று சீர்தூக்கிப்பார். இரு வகை அந்தஸ்திலும் அநுகூலமான சாதக ஏதுக்களும் அல்லது விரோதமான பாதக விக்கினங்களும் எவ்வளவு இருக்கின்றதென்று பகுத்து வகுத்துக் குறிப்பிட்டு பார். ஒவ்வொருவனுக்குந் தன் சுபாவ குணமும், பழக்க வழக்கங்களும் நன்றாய்த் தெரியும் என்பதால் இப்படி யோசிக்கும்போது தன் ஆத்துமத்தை மோக்ஷத்தில் சேர்க்க அநுகூலமான அந்தஸ்து இதுவென்று அவன் புத்தியில் தோன்றும்.

அப்படி ஓர் நிலையான ஜீவிய அந்தஸ்தை நீ தெரிந்தால் கோவிலுக்குப்போய் நீ தெரிந்த அந்தஸ்தைச் சர்வேசுரன் ஏற்றுக்கொண்டு ஆசீர்வதிக்கும்படி பிரார்த்தித்து மன்றாடு.

நிலையான ஜீவிய அந்தஸ்தை தெரிந்துகொள்ள இன்னும் ஒரு வழியைக் கேள். முகமறியாத ஓர் அந்நியன் உன்னிடம் வந்து நான் சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்து எப்படியாகிலும் என் ஆத்துமத்தை இரட்சிக்க மனதாயிருக்கிறேன். நீ என்னை அறியாதவனுதலால் உன் புத்திக்கு எது உஜிதமென்று தோன்றுதோ அதைப் பயமின்றி சொல், என்று உன்னைக் கேட்டால், நீ அவனுக்கு என்ன ஆலோசனை கொடுப்பாய்? அதுவே உனக்குத் தகுந்த புத்தியென்று ஏற்றுக்கொள்.

இன்னும் ஒரு யுக்தியைக் கேள். நீ அவஸ்தையாய் சாகும் தருணத்திலிருக்கும்போது, அந்தக் கடைசி நிமிஷத்தில், எந்த வகை நிலையான அந்தஸ்தில் நீ ஜீவித்திருந்தால், அப்போது உனக்குத் திருப்தியும் அமரிக்கையும் சந்தோஷமும் வருமோ அதுவே இப்போது உனக்குத் தகுந்ததாக எண்ணிக்கொள்.

அல்லது நீ இறந்தபின்பு தேவநீதிமுன் உன் ஜீவிய நாட்களின் கணக்கு ஒப்புவிக்கவேண்டிவருமே, அந்தச் சமயத்தில், நீ எந்த ஜீவிய அந்தஸ்தில் இருந்திருந்தால், உனக்கு மனதில் கவலையும் பயமும் இருக்கமாட்டாதென்று இப்போது தோன்றுதோ அதுவே நீ தெரிந்துகொள்ளத் தகும் அந்தஸ்தாகும்.

எந்த வகையில் நீ ஓர் நிலையான ஜீவிய அந்தஸ்தைத் தெரிந்தாலும், அப்படி தெரிந்துகொள்வதில் சர்வேசுரனுக்கு ஊழியஞ்செய்து உன் ஆத்துமத்தை மோக்ஷத்தில் சேர்க்கவேண்டுமென்பதே உன் ஏக நோக்கமாயிருக்கவேண்டுமே தவிர, வேறு எந்தக் காரண நிமித்தமும் நீ ஓர் நிலையான அந்தஸ்தைத் தெரிந்தால் அது கடைசியில் உனக்குக் கேடாய் முடியும் என்பதை உன் ஞாபகத்தில் வைத்துக்கொள்.

இரண்டாம் பாகம்

நிலையான ஜீவிய அந்தஸ்தில் ஏற்கனவே இருப்பவர்களுக்கு ஓர் அந்தஸ்தை தெரிந்துகொள்ளவேண்டுமென்கிற கவலை இல்லாததால், இவர்கள் தங்கள் அந்தஸ்திலேயே

தங்களைச் சீர்திருத்தி அதற்கு ஏற்ற தீர்மானங்களைச் செய்வது ஞானத்தியான முயற்சிகளால் இவர்களுக்கு வரவேண்டிய பிரயோசனம். இங்கே நாம் சொல்லும் விஷயங்கள் தன் நடத்தையை ஓர் திருத்தமான நல்லொழுக்கத்திற்கு கொண்டுவரும்படி அநுகூலமாயிருக்கும்.

கிறீஸ்துவர்கள் எல்லாரும் பல கடமைகளை அநுசரிக்க கட்டுப்பட்டிருக்கிறார்கள். ஜனசமுகத்தில் வாழும் எவனுக்கும் பலவகையான கடமைகள் பலர்மட்டில் அவசியம் இருக்கவேண்டும். இந்தக் கடமைகள் எல்லாம் மூன்று வகுப்பில் அடங்கும். முதல் வகுப்பில் நமது சிருஷ்டிகரும் ஆண்டவருமான சர்வேசுரனைச் சார்ந்த கடமைகளும், இரண்டாம் வகுப்பில் நமது அயலாரைச் சார்ந்த கடமைகளும், மூன்றும் வகுப்பில் ஒவ்வொருவனுக்கும் தன்னையே அடுத்த கடமைகளும் ஆகிய இவ்வித கடமைகளை எவன் ஒருவன் குறையின்றி சரியாய் அநுசரிக்கிறானோ அவன் நடத்தை சீரான நடத்தை என்று சந்தேகமின்றி சொல்லலாம்.

ஆனதால் தியானத்திலிருக்கும் நீங்கள் இங்கே சொன்ன மூவித கடமைகளை எப்படி இதுமட்டும் அநுசரித்தீர்கள், அதில் என்ன குறை, என்ன தப்பிதமிருந்தது, இனி எப்படி நடக்கவேண்டும் என்று இதுமட்டும் நீங்கள் செய்த தியான யோசனைகளால் அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் நடக்கவேண்டிய வழியும் இன்னதென்று அப்போது பார்த்திருக்கிறீர்கள். இன்று அவைகளை எல்லாம் திரட்டிக்கூட்டி ஞாபகத்தில் வைத்து இதுதான் இனி நான் நடக்கவேண்டிய வழி என்று திட்டமாய் தனக்குள் சொல்லவேண்டும்.

சர்வேசுரனைச் சார்ந்த கடமைகளில் பிரதானமானவைகள் ஏதெனில்: காலமேயும் சாயந்தரமும் ஜெபஞ்செய்தல், பூசை காணக்கூடுமானபோது பத்தியோடு பூசைக்குப் போதல், பாவசங்கீர்த்தனம் மாதத்தில் அல்லது வாரத்தில் ஒருவிசை செய்து தேவநற்கருணை அடிக்கடி, கூடுமானால் நாள்தோறும் வாங்குதல், சர்வேசுரனுடைய

ஸ்தோத்திர விர்த்திக்காக தன்னால் கூடிய அளவு உழைத்தலாகும்.

உன் அயலாரைச் சார்ந்த கடமைகளில் பிரதானம் எவை என்ருல்: எல்லாரோடுஞ் சமாதானமாய் வாழ்தல், பிறர் செய்யும் குற்றங்களை மன்னித்தல், அவதூறு பேசாமலிருத்தல், எவர்க்கும் பாவத்துக்குக் காரணமாயிராமல், எல்லாருக்கும் நன்மாதிரி காட்டல், பெரியோருக்குப் பணிந்து நடத்தல், குடும்ப சகிதமாயிருந்தால், தன் பெண் சாதி பிள்ளைகளைக் கிரமமாயும், யோக்கியமாயும் நடப்பித்தல், ஆகிய இவைகள் முக்கியம்.

உன்மட்டில் நீயே அநுசரிக்கவேண்டிய கடமைகள் பல உண்டு. உன் சுய யோக்கியதையையும், மரியாதையையும், உன் பெயரையும் காப்பாற்றுதல்; உன் வீட்டிலும் வெளியிலும், பிறர் கண்ணுக்கும் உன் கண்ணுக்கும் வித்தியாசமும் பின்னபேதமுமின்றி எதார்த்தமாயும் ஒழுங்காயும், வேஷம்போட்டு நடிக்கும் கபடநாடக தந்திரமின்றியும் நடப்பது, இதுவெல்லாம் உன்னைச் சார்ந்த கடமைகள்.

உன் நடத்தையைத் திருத்த நீ செய்யும் பிரதிக்கினைகளை ஒரு சிறு புஸ்தகத்தில் சுருக்கமாயும் தெளிவாயும் எழுதி உன் ஆத்தும குருவுக்கு அதை வாசித்துக் காட்டி அவர் சம்மதம் பெறுவது உத்தமம். மாதத்தில் ஒரு விசை இந்தப் பிரதிக்கினைகளை நீ வாசித்து இவைகளை நீ எப்படி அந்த மாதத்தில் அநுசரித்தாய் என்று சோதிப்பது தியானத்தின் பலனை என்றுங் காப்பாற்ற அநுகூலமான உபாயம்.

தங்கள் நடத்தையைச் சீர்திருத்தி ஏற்ற பிரதிக்கினை செய்ய மனதாயிருக்கிறவர்களுக்கு எப்போதும் கண் முன் இருக்கவேண்டிய தாழ்ச்சியின் மூன்று வகைகளை அர்ச். இஞ்ஞாசியார் காண்பிக்கிருர்.

தாழ்ச்சியின் மூன்று வகைகள்

தாழ்ச்சியின் முதல் வகை, உன் ஆத்துமம் இரக்ஷணியம் அடைய அவசியமான இன்றியமையாத குணம். சர்

வேசுரனுடைய கற்பனைகளுக்கு உன்னை முழுதுந் தாழ்த்தி, எந்த முகாந்தர நிமித்தமும் நீ, ஒருபோதும் சாவான பாவத்தைச் செய்யமாட்டேனென்று தீர்மானித்து உறுதி யாயிருப்பது தாழ்ச்சியின் முதல் வகையாகும். இந்தத் தீர்மானத்தால்தான் வேதசாட்சிகள் சர்வேசுரனுக்குத் துரோகமாய் சாவான பாவத்தைச் செய்வதிலும் சாவது உத்தமம் என்று தங்கள் உயிரைக் கொடுத்தார்கள்.

தாழ்ச்சியின் இரண்டாம் வகை இதிலும் உத்தமம். சகல வகை சிருஷ்டிகள்மட்டிலும் நடுவு நிலைமையோடி ருந்து, திரவியமோ, தரித்திரமோ, மகிமையோ, நிந்தையோ, நீண்ட ஜீவியமோ, குறைந்த ஜீவியமோ, இவைகள் சர்வே சுரனுடைய மகிமைக்கும் என் ஆத்தும இரக்ஷணியத்துக் கும் சமமாய் உதவுமானால், இவைகளை ஒரே சீராய் மதிக்கும் குணமுடையவனாதல். இந்தச் சமநிலையான மனது உள்ள வன் தனக்குப் பிரயோசனமானாலும் துன்பமானாலும் எவ்வளவுதான் வந்தபோதிலும் தன் மனது அறிய ஓர் அற்ப விஷயத்திலுஞ் சர்வேசுரனுடைய கட்டளையை மீற மாட்டேனென்று தீர்மானித்து இருப்பான். தன் ஆத்து மத்தை இரட்சிக்க நேர்மையான மனதுள்ளவன் எவனும் இந்த இரண்டாம் வகைத் தாழ்ச்சியில் ஊன்றி இருந்து, மனதோடு அறிந்து செய்யும் அற்ப பாவத்துக்குப் பயந் திருந்தால் அவன் எளிதில் சாவான பாவத்தைச் செய்ய மாட்டான்.

தாழ்ச்சியின் மூன்றும் வகை மகா உத்தமம். இது தான் மேலான உத்தமதனத்தின் சிகரம். சேசுநாதர் சுவாமியோடுகூட சமீபத்திலிருந்து அவரைப் பார்த்து, அவரைப்போலே அவர் நிமித்தம், எல்லாம் செய்யும் அற் புத குணம். வறுமையும், நிந்தையும், அவமானமும், சர் வேசுரனுடைய ஸ்தோத்திர மகிமைக்குச் சமமாய் உதவு மானாலும், சேசுநாதருடைய சுத்த சாயல் உன்னிடம் இருக்கவேண்டுமென்ற ஆசையால், வறுமை, நிந்தை, அவமானம், எல்லாவற்றையும் உன் பங்காகத் தெரிந்து கொள்ளுவாயானால் தாழ்ச்சியின் மூன்றும் வகை உன்னி டத்தில் பிரகாசிக்கும். திருச்சபையால் அர்ச்சியசிஷ்டவர்

களாய் வணங்கப்படுகிறவர்கள் எல்லாரிடத்திலும் இந்த உத்தம தாழ்ச்சி பூரணமாயிருந்தது. இதை யார் தெரிந்து கொள்ளுகிறுர்களோ அவர்கள் பாக்கியவான்கள்.

மூன்று வியாதிக்காரரின் உபமானம்

உன் நடத்தையைத் திருத்த நீ இப்போது பலவகையான யோசனைகளும் பிரதிக்கினைகளுஞ் செய்திருக்கிறுய். இந்தப் பிரதிக்கினைகளின்படி பிரமாணிக்கமாய் நடக்க உனக்கு ஸ்திரமான மனது உண்டோ அல்லவோ என்று நீ பரீஷ்காரமாய் அறிய ஆசையாயிருக்கிறுயா? அப்படி இருந்தால் பின்வரும் மூன்று உபமானங்களைக் கவனமாய்க் கேள்.

மூன்றுபேர் கடின வியாதியால் அவஸ்தைப்படுகிறுர்கள். வைத்தியன் வந்து பார்க்கிறுன். ஒவ்வொருவனுக்கும் வியாதிக்குத் தகுந்த மருந்து கொடுக்கிறுன். ஒருவன்: ஐயா! நான் மருந்து சாப்பிடமாட்டேன். கசப்பு என் உடம்புக்குச் சேராது. மருந்தில்லாமல் என் வியாதியைக் குணப்படுத்திஞல் மெத்த உபகாரமாயிருக்கும் என்று சொல்லுகிறுன். வேருருவன் ஐயா! நீங்கள் கொடுக்கும் மருந்து என் நாவுக்கு ருசியாயிருக்கும்படி செய்யுங்கள். அரோசிகமான ஔஷதம் எதுவுங் கிட்ட கொண்டுவர வேண்டாம், என்று கற்பிக்கிறுன். மூன்றும் வியாதியஸ்தனே: ஐயா! நான் எவ்விதத்திலும் சௌக்கியம் அடைய வேண்டும். அதிஞல் என்ன மருந்து நீங்கள் கொடுத்தாலும் நான் சாப்பிடுவேன். என் பிரியத்தைத் தேடாமல் என் வியாதியைக் கவனித்து, அதற்குத் தகுந்த ஔஷதம் எதுவோ, அதைப் பயமின்றிக் கொடுங்கள். நான் சாப்பிடுவேன், என்று அமர்ந்து பேசுகிறுன்.

சகோதரா! நீ உன் ஆத்தும இரக்ஷணியத்தின் அநுகூலத்துக்காக பல உபாயங்களைப் பிரயோகிக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறுயே. அவைகளை நீ எதார்த்தத்தில் பிரயோகிப்பாயோ, அல்லது முதல் வியாதியஸ்தனைப்போல்: நான் சும்மா இருப்பேன், வருகிறது வரட்டும். பிரதிக்கினையால் பிரயோசனமில்லை, எப்படியாகிலும்

நான் மோக்ஷஞ்சேர்வேன், என்று சொல்லுகிறாயோ? அல்லது இவ்வளவு மூடத்தனமாய்ப் பேசாவிட்டாலும், நான் ஒன்றிரண்டு எனக்கு இஷ்டமானதும், இசைந்தது மான உபாயங்களைமாத்திரம் பிரயோகிப்பேன், என் இந்திரியங்களின் இஷ்டத்துக்கு விரோதமான யோசனைகள் எனக்கு வேண்டாம். என் சுயபட்சத்துக்குக் கஷ்டமானதைக் கற்பித்தால் அது சாத்தியப்படாது என்று இரண்டாவது வியாதியஸ்தனைப்போல் சொல்வாயோ? உன் மனதை நன்றாய்த் தூண்டி எழுப்பிக் கேள். இவ்விதக் கோழை மனதால் தேவ சாபத்துக்கு உட்பட்டு எத்தனை பேர்கள் இப்போது நரகத்தில் துன்பப்படுகிறார்கள்.

சேசுநாதர்சுவாமியோடு அடுத்து நெருங்கி இருப்பேனென்று உறுதிமொழி கொடுத்த நீ மூன்றும் வியாதியஸ்தனைப்போல் சொல்வதே உனக்கு அழகு. என் சேசுவே! உமக்கு ஊழியஞ்செய்து என் ஆத்துமத்தை இரக்ஷிப்பது என் ஏக ஆசை. இதின் அநுகூலத்துக்காக நான் எப்படி நடக்கவேண்டுமென்று எனக்கு நீர் இந்தத் தியானநாட்களில் தெளிவாய் காட்டினபடியே நான் நடப்பேனென்பது என் மாறாத்தீர்மானம், என் தீர்மானத்தை ஆசீர்வதித்தருளும். உமது தேவ வரத்தால் என் மனதை ஸ்திரப்படுத்தும். நான் இருந்தாலும் இறந்தாலும் உமது சித்தப்பிரகாரம் நடப்பேன். ஆண்டவரே! நான் உமது ஊழியன். பேசும், உமது சொல்லைக் கேட்க நான் தயாராயிருக்கிறேன்.

ஓ! மரியே! என் தாயே! உமது தேவகுமாரன் சேசுநாதரை நான் நன்றாய் அறிந்து, உருக்கமாய்ச் சிநேகித்து, அவர் சித்தப்பிரகாரம் அவர் குறித்த பாதையில் நான் பிரமாணிக்கத்துடன் நடக்க எனக்காக மன்றாடும். ஆமென்சேசு.

தியானப் பிரசங்கங்கள்

மூன்றாம் வாரம்

சேசுநாதர்சுவாமி பட்ட பாடுகளைத் தியானித்து
நாம் செய்த பிரதிக்கினைகளை ஸ்திரப்படுத்த
ஏதுவான தியானங்கள்

இவ்வழி நடந்துபோகிறவர்களே! நீங்கள் அனைவோருஞ் சற்று நின்று என் துயரத்துக்குச் சமமான துயரம் உண்டோ வென்று கவனித்துப்பாருங்கள். (திரேனி, 1 : 12.)

நாங்கள் அவரைப் பார்த்தோம். அவரிடத்தில் முகலக்ஷண மில்லை. நிந்திக்கப்பட்டவரும், மனிதர்களுக்குள் கடைசியும், துன்பங்களின் மனிதனும், துர்ப்பலனை அறிந்தவருமாக அவர் தோன்றினார். (இசையாஸ், 53 : 2-3.)

என்னைப் பின்பற்ற மனதாயிருப்பவன் தன்னை மறந்து தன் சிலுவையை எடுத்து என் அடிச்சுவட்டில் நடப்பானாக. (மத். 16 : 24.)

சேசுநாதரையன்றி, இன்னும் சிலுவையில் அறையுண்ட அவரையன்றி, வேறெதுவும் எனக்குத் தெரிவதாக நான் எண்ணினதில்லை. (II கொரி. 2 : 2.)

அவர் என்னைச் சிநேகித்து எனக்காகத் தம்மையே கையளித்தார். (கொலோசியர், 2 : 20.)

சிலுவையிலே இரக்ஷணியம், சிலுவையிலே ஜீவன், சிலுவையிலே சத்துருக்களிடம் நின்று பாதுகாப்பு. (கிறீஸ்துநாதர் அநுசாரம். II 12 : 2.)

மூன்றும் வாரம்

சேசுநாதர்சுவாமி பட்ட பாடுகளைத் தியானித்து நாம் செய்த பிரதிக்கினைகளை ஸ்திரப்படுத்த ஏதுவான தியானங்கள்

விவரங்கள்

1. *நமது ஆண்டவரான சேசுநாதர்சுவாமி தமது ஜீவியத்தில் நமக்குக் காண்பித்துப் படிப்பித்த புண்ணிய தர்மப் போதனைகளை எல்லாம், தம்முடைய பாடுகளின் காலத்தில் தொகுப்பாயும், துலக்கமாயும் மனிதர் மனதில் அழுத்தமாய்ப் பதிந்து அவர்களைத் தூண்ட ஏதுவுள்ளதாயும் செய்திருக்கிறார்.*

2. *கிறீஸ்துவர்கள் சேசுநாதருடைய பாடுகளை அடிக்கடித் தியானித்து யோசித்தால் பாவத்தின்பேரில் பகையும், துன்ப வருத்தங்களைப் பொறுமையோடு ஏற்றுக்கொள்ள மனத்துணிவும், சேசுநாதர்சுவாமிபேரில் உருக்கமான சிநேகமும் உண்டாகும். அர்ச்சியசிஷ்டவர்கள் சேசுநாதருடைய பாடுகளைப்பற்றி அநுதினம் நினைப்பார்கள்.*

3. *இந்த மூன்றும் வாரத்தில் வாசிக்கத்தகுந்த புஸ்தகங்களாவன: சுவிசேஷ வர்த்தமானம், தாவீது இராஜாவின் மனஸ்தாப சங்கீதங்கள், சேசுநாதர்சுவாமி பாடுகளின் பேரிலிருக்கும் பிரசங்கங்கள்.*

4. *தியானநாட்களில் ஒழிந்த நேரத்திலும், மற்ற நாட்களில் வாரத்தின் வெள்ளிக்கிழமைகளிலும், சிலுவைப் பாதையை அமர்ந்து, மெதுவாய், பக்தி உருக்கத்தோடு செய்வது வெகு பிரயோசனமாகும். அப்படிச் செய்யும் போது சேசுநாதருடைய பாடுகளுக்குக் காரணமான நமது பாவத்தை நினைத்து மனஸ்தாபப்படுவது சுகிர்தம்.*

5. சேசுநாதர்சுவாமி பாடுகளைத் தியானிப்பது எளிதாகும்படியாய், ஒவ்வொரு தியானப் பொருளிலும் வருகிறவர்கள் யாரென்றும், அவர்கள் சொல்வதும் செய்வதும் இவையென்றும், யோசிப்பதோடுகூட, சேசுநாதர்சுவாமி தமது இருதயத்திலே படும் வருத்த துன்பம் எவ்வளவென்றும், அவர் பாடுபடுங்காலத்தில் அவருடைய தெய்வத்துவம் எப்படி மறைந்திருந்ததென்றும், இவ்வளவு துன்பப் பாடுகளும் என் பாவத்துக்காக அல்லோ சேசுநாதர் படுகிறார் என்றும் நினைப்பதால் தியான யோசனை வருத்தமின்றிச் செய்யலாம். இப்படி யோசிப்பதால் ஆத்துமத்துக்கு வரும் பிரயோசனமும் நன்மையும் அளவற்றதாகும்.

ஏழாம் நாள்—முதல் தியானம்

சேசுநாதர் ஜெத்சேமனி தோட்டத்தில் அவஸ்தைப்பட்ட வர்த்தமானம்

முதல் பாகம்

கடைசி வியாழக்கிழமையில் சேசுநாதர் தமது சிநேகத்தின் பெருக்கத்தைக் காட்டும் அடையாளமாக, தேவநற்கருணையை உண்டாக்கி மனிதர்களுக்குக் கொடுத்த பின்பு, தமது அப்போஸ்தலர்களைக் கூட்டிக்கொண்டு, இராவின் இருள் அடர்ந்துவரும் சமயத்தில், ஜெத்சேமனி என்ற ஒலிவ்மரங்களின் தோட்டத்துக்குப் போனார். தோட்டத்தின் சமீபத்தில் தமது சீஷர்களை நிறுத்தி அவர்களில் மூன்றுபேர்களை மாத்திரம் உள்ளே அழைத்துச் சென்றார். இவர்களையும் ஓரிடத்தில் இருக்கச்செய்து, சேசுநாதர் மாத்திரம் தனியே சற்று அப்பால் போய், இராவின் இருளிலே முழங்காலிலிருந்து சாஷ்டாங்கமாய் விழுந்து பெருமூச்சுவிட்டு செபஞ் செய்தார்.

சகோதரரே! கிட்ட நெருங்கி இங்கே தோன்றும் பரிதாபத்துக்குரிய காட்சியைப் பார்க்க வாருங்கள். இவருடைய கண்கள் கலங்கி இருக்கின்றன. முகம் இரத்தப் பசை இல்லாமல் வெளுத்துப்போயிருக்கிறது. உடல் நடுங்குகிறது. இருதயம் பதைத்துத் துடிக்கிறது. கைகால் தளர்ந்து பலமற்று சோர்ந்துபோனது. நேற்றும் அதற்கு முந்தியும் இந்த இடத்திலே நமது அன்புள்ள இரக்ஷகர் ஜெபம் செய்ய வந்தபோது இவ்வளவு பரிதாப அடையாளங்கள் ஒன்றும் இல்லையே. இன்றைக்கு என்ன விசேஷம்? சுவிசேஷத்தில் சொல்லியிருப்பதென்ன?

ஜெத்சேமனி தோட்டத்தில் சேசுநாதர் பயப்படத் துவக்கினார் என்று சுவிசேஷகர் சொல்லுகிறார். பயமா? சேசுநாதர் பயப்படுகிறாரா? யாருக்கு அவர் பயப்படுகிறார்? சர்வலோக ஆண்டவர், சர்வாதி கர்த்தன், சர்வ வல்லபரான சர்வேசுரன் பயப்படுகிறாரா? இவருக்குப் பயம் உறுத்தத் துணிவுள்ளவர் யார்? இவருக்குப் பயம் உண்டாக்கத் தகுந்தது எது?

ஓ! கிறீஸ்துவனே! கேள். இவருடைய மோக்ஷ பிதா இவரை இன்று இவருடைய ஜன்ம விரோதிகளின் கையில் ஒப்புவித்தார். சர்வ வல்லபரின் கைகள் கட்டப் பட்டது. துஷ்டர் கையில் விழுந்த உடனே சேசுநாதர் தமது தேவ ஞான தரிசனத்தால் இவர்கள் தமக்குச் செய்ய எத்தனித்திருக்கும் துன்பவாதைகள், நிந்தை அவமானங்கள், படுகொலை, எல்லாம் தெளிவாய்த் தமது கண்முன் இருப்பதைப் பார்த்தார். பெரிய பாதகனைப்போல் தம்மைக் கயிறுகளாலும் சங்கிலியாலும் கட்டி, பட்டணத்தின் வீதிகள் வழியாய் இழுத்துப்போகிறதையும், நியாயவாதி முன் நிறுத்தி, தமதுமேல் அபாண்டமான பழிபாதகங்களைச் சுமத்தி தம்மைச் சிலுவையில் அறைந்து கொல்லும்படி ஜனங்கள் எல்லாருங் கூக்குரலிட்டு கத்திக் கேட்கிறதையும், தம்மைத் தூணோடு சேர்த்துக் கசைகளால் இரத்தங் கீழே சிந்தி ஓட, இரக்கமின்றி அடிப்பதையும், முகத்தில் உமிழ்ந்து, துப்பி அவமானப்படுத்துவதையும், எல்லாம் தமது அனந்த ஞான திருஷ்டியால் பார்க்கிறார்.

கடைசியில் ஓர் கழுமரத்தில் அவமானப்பட்டு, அவஸ்தைப் பட்டு, எல்லாராலுங் கைவிடப்பட்டு சாகிறதையும் பார்க்கிறார். இவைகள் எல்லாம் அவருக்கு அப்போதே நடப்பதாகத் தோன்றுகின்றது.

இவ்வளவான துன்ப அவமானங்களை எல்லாம் ஒரு பார்வையில் பார்த்ததும், அதுமட்டும் கலங்காமலிருந்த அவரது திரு இருதயம் அந்தச் சமயத்தில் கலங்கி மயங்கித் தவிக்கின்றது. நிர்ப்பாக்கியனான மனிதனை இரட்சிக்கிறதற்காக நித்திய கடவுளாகிய தேவசுதன் மனிதனாய் அவதரித்தார். தேவசுபாவத்தைக் கிஞ்சித்தும் தாண்ட முடியாத பயம் கஸ்தி துன்ப துரிதமெல்லாம், மனிதன் நிமித்தம் தாம் எடுத்த மெய்யான மனுஷ சுபாவத்தில் மெய்யாகவே பட்ட நுபவிக்கத் திருவுளமானார் மனுக்குல இரட்சகர்! இத்தனை கொடிய விரோதிகள் தம்மைச் சூழ்ந்து இருப்பதாக அவர் உணர்ந்ததும் அவர் மனந் தடுமாறுகின்றது. கொடிய புலிகளின் மத்தியில் சடுதியில் அகப்பட்ட ஆட்டுக்குட்டி பயந்து கதறுவதுபோல் நமது அன்புள்ள ஆண்டவரும் பயப்படத் துவக்கினார். பயந்த பிள்ளை தன் தகப்பனைத் துணையாய்க் கூப்பிடுவதுபோல், நமது தயை நிறைந்த சுவாமியும் தமது மோக்ஷ பிதாவைப் பார்த்து: அப்பா, ஓ! தந்தாய்! இவ்வளவு துன்ப அவமானம் நான் படவோ? இவைகளை நான் பட்டு அநுபவியாதபடி தடுக்கமாட்டீரா? ஆ! இந்தக் கசப்பான பாடுகளின் பாத்திரம் என்னைவிட்டு நீங்கலாகாதா! என்று பிரார்த்தித்தார்.

நமது ஆண்டவர் இப்படியாய்ப் பிதாவைப்பார்த்து பிரார்த்தித்தும், பிதா இவருக்குத் துணையாய் வரவில்லை. மனிதர் கையில் தமது மகனைப் பலியாய் விட்டுவிட்டதால், மகன் கேட்ட மன்றாட்டுக்குப் பதில் ஒன்றுஞ் சொல்லவில்லை. தமது பிதாவும் தம்மை இரக்கமின்றி யூதர்கள் கையில் ஒப்புவித்தாரே என்று சேசுநாதர் நினைக்கும்போது மயங்கி, சோம்பி, மூர்ச்சையாகிக் கீழே விழுந்தார்.

ஓ! சேசுவே! ஓ! ஆண்டவரே! ஓ! இரக்ஷகரே! இவ்வளவு சீக்கிரத்தில் சாகவோபோகிறீர்! உமது துன்

பப் பாடுகள் இப்போதுதான் துவக்குகின்றன. நீர் பட்டுத் தீரவேண்டிய கொடிய உபாதைகள் பெருஞ்சமுத்திரம் போல் உமக்குமுன் பெருகி இருக்கின்றனவே! இவைகளைப் படுமுன் சாகவோ சுவாமி?

அதோ பாருங்கள், சகோதரரே! சேசுநாதர் சுவாமி மூர்ச்சை தெளிந்து எழுந்திருக்கிறார். முழங்காலிலிருந்து தமது பிதாவை நோக்கி: பிதாவே! அப்படியானால், நல்லது, என் மனதல்ல உமது சித்தம்போலாகட்டும் என்று ஜெபித்தார்.

ஆனால் நமது தேவ இரக்ஷகர் தமது இருதயத்தில் பட்டுத் தீரவேண்டிய அவஸ்தை இவ்வளவோடு முடிந்ததா? அல்ல, அல்ல. மோக்ஷ பிதா, தமது மகன் மனிதர் பாவத்துக்கு ஓர் பிணையாய்த் தன்னை நேர்ந்ததின் நிமித்தம், இன்னும் அதிகமான அவஸ்தைப்பட்டு, செக்கில் அரைபடும் எள்ளுப்போல் அவர் இருதயம் வெடித்துப் பிளந்து பொடித்துத் துடிக்கும்படி விட்டுவிடப்போகிறார். இன்னும் கிட்ட நெருங்கிவந்து, உங்கள் அன்புள்ள இரக்ஷகரின் இருதயம் படப்போகும் அவஸ்தையைக் கண்ணில் ஜலம் ததும்ப வணக்கத்துடன் நின்று பாருங்கள்.

இரண்டாம் பாகம்

தேவ பிதா தமது பிரிய மகனைத் துஷ்ட யூதர்கள் கையில் பூராவாய் விட்டது போதாதென்று இன்னும் அவருடைய இருதயம் அதிகமான துக்கமும் அவஸ்தையும் படும்படி, அவர்மேல் மனிதர்களுடைய பாவங்களை எல்லாம் சுமத்தினார். உலகம் உண்டான நாள் முதல் இது மட்டுமுள்ள மனிதர்கள் செய்த அக்கிரமங்களும், இனி உலகமுடியுங் கடைசிநாள்மட்டுமிருக்கும் மனிதர்கள் செய்யும் சகலவகைப் பாவங்களும் இவைகளை எல்லாம் ஓர் பெரும் சுமையாய்ச் சேர்த்து இந்த அபாரமான பாரத்தை சேசுநாதர் தலைமேல் சுமத்தினார். இப்படி சுமத்தினபின் பிதா சொல்வார்: மகனே! கேள், மனிதர் செய்த பாவங்களுக்கு உத்தரித்துப் பரிகாரஞ் செய்யும்படி, நீ உன் மனப்

பூர்வமாய் ஓர் பிணையாய் ஏற்பட்டாய். இதோ அந்தப் பெரும் பாவச் சுமை. உன் தலைமேல் அந்தப் பாரம் விழுகின்றது. நீயே இவைகளைச் செய்ததுபோல் பரிகாரஞ் செய்யவேண்டும். தேவ நீதிக்கு நீயே உத்தரிப்பாய்.

ஆ! எத்தனை பாவங்கள்! எவ்வளவு அக்கிரமங்கள்! கிட்ட வந்து உற்றுப்பார். உன்னுடைய பாவங்களும் அங்கே இருக்கின்றன. அசுத்தப் பாவங்கள், அவலக்ஷணங்கள், அக்கிரம துரோகங்கள், இராவின் இருளைத்தேடி ஒருவருக்கும் தெரியாதென்று செய்த நீசச் செய்கைகள், எல்லாம் அங்கே சேசுநாதர்மேலே விழுந்துகிடக்கின்றன. இத்தனை பாவங்களும், விஷத்தில் துவைத்த ஓர் போர்வையைப்போல், சேசுநாதர் சரீரத்தின்மேலே ஒட்டிப் பிடித்துக்கொண்டிருக்கின்றன. பாவத்தின் கடும் விஷம், இவர் இருதயத்திலும், அவயவங்களிலும், சார்ந்து பரம்புகின்றது. சரீரம் குஷ்டரோகியின் சரீரம்போல் மாறுகின்றது. பாவத்தின் விஷம் அவருடைய தெய்வத்துவத்தின் மங்கா ஒளியைத் தொடக்கூடாது. ஆனால் அவர் உத்தரவுப்பிரகாரம் அந்த விஷம் அவருடைய மனுஷீகத்தைத் தீண்டினது. தீண்டினதும் நமது அன்புள்ள இரக்ஷகரின் மாசற்ற பரிசுத்த சரீரம் உருவழிந்து, நிறமாறி, குஷ்டமானது போல் காணப்பட்டது. நமது அன்புள்ள ஆண்டவர் தம்மை முற்றும் சுற்றும் பார்த்தார். தாம்தான் என்று தமக்கே தோன்றவில்லை. பாவ விஷத்தால் தீண்டப்பட்ட பெரும் பாதகனைப்போல் தாம் மாறி இருப்பதாக அறிந்தார். பாவங்களின் துர்க்கந்தம் தமது தலை முதல் சர்வாங்கமும் வழிந்து வடிந்து விழுவதைப் பார்த்தார்.

ஆ! இந்தக் கைகள், இந்தக் கால்கள், இந்த நெஞ்சு, இந்தக் கண்கள், இந்த வாய், சர்வ பரிசுத்த சர்வேசுரனுடையதா அல்லது பாவியின் உறுப்புகளா? அந்தக் கைகள் போன இடமெல்லாம் நன்மை செய்தவரின் கைகளைப்போல் அல்ல, நிஷ்டூரச் செய்கைகள் செய்த பெரும்பாவியின் கைகளைப்போல் இரத்தக்கறை பிடித்திருக்கின்றனவே! இந்தத் தேவ வாயின் இதழ்கள் தேவஸ்துதியான ஜெபம் ஒன்றும் சொல்லாமல், தூஷணங் கக்

கும் துரோகியின் வாய்போல் தோன்றுகின்றதே! அந்தக் கண்கள் அக்கிரமமும், அசுத்தமுமான செய்கைகளைப் பார்க்கிறவன் கண்கள்போல் மாறி, மங்கி, ஒளி இழந்ததாகத் தோன்றுகின்றனவே! இவருடைய பரிசுத்த இருதயம் மனிதனுடைய பொருளாசை, அவிசுவாசம், துர் இச்சை முதலிய பாவங்களால் அசுத்தப்பட்டதுபோல் பதைத்துத் துடிக்கின்றதே.

ஓ! சேசுவே! உமது விரோதிகள் பலங்கொண்டு பெரும்படையாய்த் திரண்டு, எழும்பி, உமதுமேல் விழுந்து உம்மைத் துன்பப்படுத்துகிறார்கள். மனிதர்கள் செய்த பாவங்கள் எல்லாம் உமதுமேல் பொறுத்து நிற்கின்றதா? உமது ஜனங்களின் பாவம், உமது விரோதிகளின் பாவம், உமது பிரிய பிள்ளைகளின் பாவம், எல்லாருஞ் செய்த பாவங்கள் இங்கே இருக்கின்றனவே! எல்லா மனித ஜன்மமும் உமதுமேல் பெரும் பழி சுமத்துகிறார்களே! ஆனால் நீர் சிருஷ்டித்த மனித ஜன்மத்தில் ஒரே ஒரு சிருஷ்டிமாத்திரம் இந்தப் பெருங் கூட்டத்தில் இல்லை. உம்மைப் பெற்று வளர்த்த தாய்மாத்திரம், பாவ தோஷ விஷமில்லாத பாக்கியவதி. ஆனதால், இந்தத் துஷ்டரின் கூட்டத்தில் உமது தாய் இல்லை. ஆனால் நீர் சிலுவையின் பீடத்தில் உம்மைப் பலியாய் ஒப்புக்கொடுக்கும்போது தாயுங்கூட இருந்து தன் மகனை மனிதர் பாவங்களுக்குப் பலியாய் நேர்ந்து கொடுப்பாள்.

நமது தேவ இரக்ஷகர் பாவ தோஷ விஷத்தால் சர்வாங்கமும் குஷ்டம்பிடித்த பெரும் பாவியைப்போல் தமது தேவ பிதாவின்முன் நிற்பதைப் பார்த்தவுடனே மனதில் கொண்ட துக்கத்தாலும் வெட்கத்தாலும் இருதயம் கலங்கி, சத்தமாய்க் கூப்பிட்டுப் பேசி: பிதாவே! ஓ! அப்பா! உமது மகன் தலைமேல் இப்படி பாவத்தைச் சுமத்துவது சரியா? ஆ! கூடுமானால் இந்தப் பாடுகளின் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்வீராக, என்று பிரார்த்தித்தார். மறுமொழி இன்னமும் வராததால் சேசுநாதர்சுவாமி மயங்கி சோர்ந்து இரண்டாம் விசையுங் கீழே விழுந்தார்.

ஆ! சேசுவே! எங்களை இரக்ஷிக்கவந்த ஆண்டவரே! சுவாமி! துக்கமிகுதியால் சாகவோ போகிறீர்? மரணமட்டும் உமது ஆத்துமம் துக்கமாயிருக்கின்றதோ? சாகவேண்டாம், சுவாமி! மனிதர்களுக்காக இன்னும் அதிகம் பாடுபடவேண்டும். சிலுவையில்தான் நீர் அவஸ்தைப் பட்டு சாகவேண்டிய இடம். உம்முடைய இரத்தத்தை எல்லாம் சிலுவையிலே சிந்தி, சிலுவையிலேயே உயிர்விட வேண்டும். உமது மோக்ஷ பிதா நீர் சாகும்படி குறித்த இடம் இந்தத் தோட்டம் அல்லவே. சிலுவையைத்தான் நீருந் தெரிந்து அதைத் தேடி உலகத்துக்கு வந்தீர்.

அதோ! பாருங்கள், நமது இரட்சகர் மூர்ச்சை தெளிந்து எழுந்திருக்கிறார். இரண்டாம் முறையும் முழங் காலிலிருந்து, பிதாவைக் கலங்கிய கண்களோடு பார்த்து, பிதாவே! என் மனதின்படி அல்ல உமது சித்தமே ஆகட்டும் என்று ஜெபஞ் செய்கிறார்.

மூன்றாம் பாகம்

நமது தேவ ஆண்டவருடைய பரிசுத்த இருதயம் இவ்வளவு அவஸ்தை துன்பப்பட்டது போதுமோ? போதாது. அவருடைய பிதா தமது மகனைக் கொடிய யூதர்கள் கையில் அவர்கள் தங்கள் இஷ்டம்போல் நடத்தும்படி விட்டுவிட்டார். இதுவும் போதாதென்று உலக இரக்ஷகராய் வந்தவர் தலைமேலே சகல மனிதருடைய பாவங்களை எல்லாம் சுமத்தி, அவரே அவைகளைச் செய்ததுபோல் தமது இருதயத்தில் பட்டு உணர்ந்து அவஸ்தைப்படும்படி செய்தார். இவ்வளவு அக்கிரம பாவங்களின் கடும் விஷம் அவருடைய மாசற்ற சரீரத்தைப் புண்படுத்திக் குஷ்டரோகியின் தேகம்போல், மனித லக்ஷணமும் சாயலுமின்றி உருமாறும்படி சம்மதித்தார். ஆகிலும் இத்தனை வகை நிந்தை அவமான வேதனை துன்பங்கள் எல்லாம் மனிதர் இரக்ஷணியத்துக்கு அநுகூலமாய் முடிந்து, தமது மோக்ஷ பிதாவின் மகிமையும் ஸ்துதியும் பூமி எங்கும் ஸ்திரமாய்ப் பரம்பி விர்த்தியாகச் செய்தால்

நமது ஆண்டவருக்கு இது ஒரு ஆறுதலாகும். கிருஷிகன் தன் வயலிலே வெகு பாடுபட்டு நெற்றிவியர்வை நிலத்தில் விழ இராப்பகலாய் உழைத்து, மெய்வருந்தி நிலத்தைப் பண்படுத்திப் பயிர்செய்கிறான். அவன் உழைத்ததுக்குத் தகுந்ததுபோலே வயலும் ஒன்றுக்கு நூறு பலன் கொடுக்கும் என்ற நம்பிக்கையால் பிரயாசத்துக்குப் பின்வாங்காமல் பின்வரும் லாபத்திற்காக சந்தோஷமாய் வேலைசெய்கிறான்.

நம்முடைய இரட்சகரோவென்றால் தாம் சிந்தும் இரத்தமும் படுங் கொடிய பாடுகளும் மனிதர்களில் அநேகருக்குப் பிரயோசனப்படாமல் அநர்த்தமாய் முடியும் என்று தமது தேவ திருஷ்டி காட்சியால் அறிந்தார். நான் சிந்தும் இரத்தத்தால் வரும் பிரயோசனமென்ன? மனிதர்கள் என்னைப் பழித்து நிந்திப்பார்களே. இந்த இரத்தப் பலன் அளவில்லாததாயிருந்தாலும் மனிதர்கள் இந்தப் பலனைப் பெறமாட்டார்களே. என் இரத்தத்தின் பலன் மனிதர்களுக்குத் தாராளமாய் வரும்படியாய் நான் ஏற்படுத்தும் தேவதிரவிய அநுமானங்களை மனிதர்கள் பெற மனதில்லாமலும் அல்லது பெற்றால் அயோக்கியமாயும் பெற்று அதைத் தங்களுக்கு நஞ்சாக மாற்றுவார்களே. பாவம் முன்போல் காட்டில் பிடித்த நெருப்புபோல் எங்கும் பரம்பி ஆத்துமங்களைக் கெடுத்து அவலக்ஷணமாக்குமே. மனித ஜன்ம விரோதியான பசாசை முன்போல் மனிதர்கள் கை எடுத்து கும்பிட்டு அதற்கு ஊழியஞ் செய்வார்களே. அஞ்ஞானமும் அவிசுவாசமும் எங்கும் அரசு செய்யுமே. நான் சிந்தும் இரத்தத்தை மதியாமல் மனிதர்கள் திரவிய சுகத்தை ஆவலோடு தேடுவார்களே. நான் சிந்தும் இரத்தத்தால் வரும் பலன் என்ன?

என் இரத்தப் பலனை இழந்துபோகிறவர்கள் என் பெயரைக் கேளாத அஞ்ஞியரானால் போகட்டும் என்று சொல்வேன். ஆனால் ஐயோ! இப்படிச் செய்கிறவர்கள் என் பிள்ளைகள். நான் வளர்த்த என் சொந்தப் பிள்ளைகள். கிறீஸ்துவர்கள். இவர்கள் என்னோடுகூட ஒரே பந்தியிலிருந்தவர்கள். ஒருமனமாய் என்னோடு பழகின

வர்கள். இவர்கள் நான் செய்த நன்மைக்குத் தீமை செய்வார்கள். என் தயையைப் பழிப்பார்கள். என் இரத்தம் தங்களுக்குச் சாபமாய் மாறும்படி செய்வார்கள். என் விரோதி என்னை நகைத்து வசைபேசுவான்: பார், உன் பிள்ளைகளாய் அன்போடு நீ வளர்த்த இவர்கள் என்னைத் தேடி வருகிறார்கள். நீ இவர்களுக்காக ஏன் இரத்தத்தைப் பிரளயமாய்ச் சிந்தினாய்? நானோ ஒரு துளி வியர்வையும் சிந்தினதில்லை என்று இப்படியாய் என் முகத்துக்கு முன் பழித்துச் சொல்வான்.

இவ்வித துக்ககரமான யோசனைகள் சேசுநாதர் இருதயத்தில் பெரும் வெள்ளம்போல் விழுந்தது. மூன்றும் முறையும் தமது பிதாவைக் கூப்பிட்டு: அப்பா பிதாவே! இவ்வளவு வீணும் பிரயோசனம் இல்லாததுமான கொடிய மரணம் எனக்கு வாராதபடி தடுக்கமாட்டீரா! ஓ! தந்தாய்! கூடுமானால் இந்த பாத்திரம் எனக்கு வாராமல் போகக்கடவது என்று ஜெபித்தார். பிதாவிடத்திலிருந்து இன்னமும் மறுமொழி வரவில்லை. பிதாவே! பிதாவே! என்று மூன்றுவிசை கூப்பிட்டும் அந்தப் பிதா தமது குமாரனுக்கு ஆறுதலான ஒரு வார்த்தையுஞ் சொல்லவில்லை.

நமது அன்புள்ள இரக்ஷகரின் இருதயத்தில் பயமும் துக்கமும், சலிப்பும், ஆயாசமும் மிகுந்து பெருகுகின்றன. ஏரியில் ஜலம் பல கால்வாய்கள் வழியாய் வந்து விழும்போது, ஜலம் பெருகி கரையில் நிறைந்து அணையை உடைத்து நாலாபக்கமும் சிந்தி வடிவதுபோல் சேசுநாதர் இருதயத்தில் பயமும் துக்கமும் சலிப்பும் நிறைந்து பெருகவே அவர் இருதயத்திலிருந்த இரத்தம் பொங்கிக் கொதித்து ரோமத்துவாரங்கள் வழியாய் வெளிப்பட்டு, அவர் அணிந்திருந்த சட்டையை நனைத்து கீழே வடிந்து விழவே, அவர் இருந்த இடமெல்லாம் இரத்தம் நதிபோல் பெருகி ஓடினது. சேசுநாதர் முழங்காலிலிருக்க சக்தியின்றி, சோர்ந்து மயங்கி கீழே தமது இரத்தத்தில் விழுந்தார். விழுந்தவர் அவஸ்தையாய் பதைத்துத் துடித்தார்.

சிநேகத்தின் ஸ்தானமான அவர் இருதயத்தில் அப்போது யுத்த போராட்டந் துவக்கினது. ஓர் பக்கத்தில் பயமும் துக்கமும் சலிப்பும் ஒன்ருய்ச் சேர்ந்து அவமானமுள்ள கொடிய சாவுக்கு உட்படாதபடி அவரைத் தடுக்க வருந்தினது. வேறே பக்கத்தில் தமது மோக்ஷ பிதாவின் பேரிலும், மனிதர்பேரிலும் அவருக்கிருந்த சிநேகம் அவர் சிலுவையில் சாவது அவசியமென்று அவரைத் தூண்டினது. பயமும் சிநேகமும் செய்யும் யுத்தத்தில் எது ஜெயிக்கும்? பூமியும், மோக்ஷமும் கவலையோடுங் கருத்தோடும் இந்த யுத்தத்தின் முடிவை எதிர்பார்த்து அதிசயித்து நிற்கின்றன. நமது தேவ இரக்ஷகர் சிலுவையில் சாவேன் என்று சொன்னுல் மோக்ஷம் திறக்கப்படும். சர்வேசுரனுக்கு மகிமையும் மனிதருக்கு இரக்ஷணிய பாக்கியமும் உண்டாகும். அப்படியின்றி இந்தச் சிலுவையின் அவமானம் எனக்கு வேண்டாம் என்று சேசுநாதர் சொன்னுல், மனித ஜன்மத்துக்கு மோக்ஷமில்லை, மனிதர் சபிக்கப்பட்டவர்களாய் உலகத்தில் மிருகங்களைப்போல் ஜீவித்து மிருகங்களைப்போல் சாவார்கள்.

ஓ! சேசுவே! ஓ! இரக்கம் நிறைந்த தேவனே! இன்னும் யோசிப்பானேன்? சுவாமி! மோக்ஷத்திலிருந்து எங்களை இரட்சிக்க அல்லவா உலகத்தில் பிறந்தீர்! சிலுவை நீர் பிறந்தநாள் முதல் உமது கண்கள்முன் இருக்கவில்லையா? இதை நீர் ஆவலோடு தேடி இதில் மரித்தாலன்றி உமது சிநேகம் திருப்தி அடையாதென்று பலமுறை சொல்லவில்லையா? இரத்தத்தில் ஓர் ஸ்நானஞ்செய்யக் காத்திருக்கிறேன், அந்த நாள் வருமட்டும் என் மனம் பதைத்து அவஸ்தைப்பட்டுத் துடிக்கின்றதே என்று நீர் சொல்லவில்லையா? ஆவலோடு தேடிய அந்த நாள் இப்போது வந்திருக்கும்போது, சுவாமி! மலைத்துப்போய் மனஞ்சோம்புவதேன்? பாடுகளின் கசப்பான பாத்திரத்தைக் குடிக்க எனக்குச் சம்மதமில்லை என்று நீர் சொன்னுல் யார் எங்களை இரக்ஷிக்கத் தகுந்தவர்? நீர் சிந்தும் இரத்தத்தால் எங்கள் பாவத்தின் அசுத்தத்தைக் கழுவாவிட்டால் யாரால் இது செய்யக்கூடும்? தேவ பிதாவின்

கோபத்தைத் தணிக்க அவருக்குச் சமமான தேவசுதனால் மாத்திரங் கூடுமென்று உமக்குத் தெரியாதா?

ஓ! சகோதரரே! பயமோ சிநேகமோ ஜெயிக்கும் என்பதைப்பற்றி நீங்கள் சந்தேகப்படவேண்டாம். உங்கள் பாவங்கள் எவ்வளவு மிகுந்து அபரிமிதமாய் இருந்தாலும், சேசுநாதர்சுவாமி படும் துன்ப வேதனைகள் எவ்வளவு கொடுமையாயினும், உங்கள் கல்நெஞ்சும் நன்றியில்லாக் குணமும் எவ்வளவு நிஷ்டூரமுள்ளதாயினும், நமது தேவ இரக்ஷகரின் சிநேகம் இவை எல்லாவற்றிலும் ஆயிரம் பதினாயிரம் மடங்கு பெரிது பெரிது. ஆனதால் சிநேகந்தான் ஜெயிக்கும். அதோ பாருங்கள்.

சேசுநாதர்சுவாமி எழுந்திருக்கிறார். கசைகளால் அடிபடுமுன்னும், கைகால்களில் ஆணிகள் பாய்ந்து துளைக்குமுன்னும், இரத்தம் நதிபோல் ஓட சிந்தி இருக்கிறார். இந்த இரத்தத் தடாகத்திலிருந்து தமக்கு இன்னும் மீதியாயிருக்கும் சக்தியை எல்லாங்கூட்டி, அமைந்த மனதோடு தமது மோக்ஷ பிதாவைப் பார்த்து அப்பா! தந்தாய்! உமது மனம்போலாகட்டும். இதோ நான் வருகிறேன். இதுமட்டும் உமக்கு நேர்ந்த பலிகள் உமக்குப் பிரியப்படவில்லை. என் சரீரந்தான் உமக்கு யோக்கியப் பலி, இதோ நான் வருகிறேன், என்று சொல்லிக் கால் ஊன்றி நின்று தம்மைப் பிடிக்கவரும் சத்துருக்களுக்கு நேரே நடந்து, அவர்கள் கையில் தம்மை மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுக்க விரைந்துபோகிறார்.

கிறீஸ்துவனே! சேசுநாதர் சுவாமி தமது இருதயத்தில் உனக்காக அநுபவித்த மரண அவஸ்தையின் கொடுமையை யோசித்துப்பார். நீ செய்த பாவங்கள் எல்லாம், அன்று அவருடைய மாசற்ற இருதயத்தில் பெரும் பாரமாய் சுமத்தப்பட்டது. உன் பாவங்களுக்காக அவர் பட்ட துக்கத்தாலும் வெட்கத்தாலும் இரத்தம் அவருடைய சரீரத்திலிருந்து பொங்கிக் கீழே ஓடினது.

பாவம் எவ்வளவு கொடியதென்று இப்போது உணருகிறாயா! இனிமேல், பாவம் அற்ப செய்கைதானே, இதினால்

யாருக்கு மோசம்வரும் என்று துணிந்து செய்வாயோ? முதல் வாரத்தில், நீ பாவத்தை இனி செய்யமாட்டேனென்று செய்த பிரதிக்கினைகளை இன்று சேசுநாதர்சுவாமி முன்பாகத் திரும்பவும் சொல்.

அன்றியும் உன் பாவங்களுக்காக நீ எப்படி துக்கப்படவேண்டுமென்று உன் இரக்ஷகரிடத்தில் படித்துக்கொள். சேசுநாதர் உன் பாவங்களுக்காக இரத்தக் கண்ணீர் சிந்தி இருக்க, நீ உன் பாவங்களுக்கு மன்னிப்பு பெற பாவசங்கீர்த்தனம் செய்யும்போது, உன் மனதில் துக்கமின்றி கண்கலங்காமல் உன் பாவங்களைச் சொல்வாயா? இன்னொருவனுடைய குற்றத்தைச் சொல்வதுபோல் சற்றும் கவலையின்றி நீ பாவசங்கீர்த்தனஞ் செய்வாயா?

என் சர்வேசுரா! என் பாவங்கள் எப்போதும் என் கண்முன் இருக்கின்றன. என் பாவம் இன்னதென்று எனக்குத் தெரியும். ஆண்டவரே! உமக்கே நான் துரோகஞ் செய்தேன். என் பாவங்களைப் பார்க்காதபடி உமது முகத்தைத் திருப்பிக்கொள்ளும். என் அக்கிரமங்களைப் பொறுத்துக்கொள்ளும். எனக்குச் சுத்தமான இருதயத்தைச் சிருஷ்டியும். உமது இரக்ஷணியத்தின் பூரிப்பை எனக்குக் கொடுப்பீராக. உமக்கு நான் இனிமேல் சுத்த மனதோடு ஊழியஞ் செய்வேன், என்று இப்படியாய் தாவீது இராஜாவோடு, சர்வேசுரனுடைய பாதத்தில் விழுந்து மனஸ்தாபத்தோடு சொல்.

தியான முடிவில் **கிறீஸ்துவின் ஆத்துமமானதே** என்ற ஜெபஞ் சொல்.

ஏழாம் நாள்—இரண்டாம் தியானம்

நியாய சபையில் சேசுநாதருக்கு நடந்த விசாரணை

மனிதன் இருதயத்திலிருந்து சகல வகைப் பாவங்களும் உற்பத்தியாகிறபடியால், மனிதர் பாவங்களுக்குப் பலியாய் வந்த நமது தேவ இரக்ஷகர், தமது இருதயத்தில்தான் முதன் முதலில் துன்ப அவஸ்தைப்படத் துவக்கினர். ஜெத்சேமனி தோட்டத்தில் அவர் தமது இருதயத்தில் எவ்வளவு துக்கமும் அவஸ்தையும் பட்டாரென்று காலமே தியானித்தீர்கள். இப்போது அவர் தமது தெய்வத்துவ மகிமையிலும் சரீரத்திலும் பட்ட துன்பவேதனை உபத்திரவத்தைத் தியானிக்கப்போகிறீர்கள்.

நாம் சொல்லப்போகுந் துயரமான சரித்திரத்தை நீங்கள் துக்கமுள்ள மனதோடுங் கலங்கின கண்களோடுங் கவனமாயிருந்து கேளுங்கள். உங்கள்மேல் வைத்த அளவெல்லாங் கடந்த சிநேகத்தால், சேசுநாதர்சுவாமி எவ்வளவான அவமானமும் வேதனையும் தாமே மனப்பூர்வமாய் அநுபவித்தாரென்று நீங்கள் உங்கள் மனதில் சாரும்படி உணர்ந்தால் அவரைச் சிநேகித்து அவருக்கு ஊழியஞ் செய்து அவருக்காக எதுவுஞ் செய்யத் துணிந்து முன்னுக்கு வருவீர்கள்.

தாயே! வியாகுலமரியே! உமது தேவகுமாரனின் பாடுகளை நாங்கள் எங்கள் மனதில் நன்றாய் உணரும்படியாய் எங்களுக்காக உம்முடைய மகன் சேசுநாதரை மன்றாடும்.

முதல் பாகம்

நமது அன்புள்ள ஆண்டவர் தோட்டத்திலிருந்து வெளியே வந்தபோது, சேவகர்களும் யூத ஜனங்களும் பெருங்கூட்டமாய், கத்தி ஈட்டி முதலிய ஆயுதபாணிகளாய், கயிறும் சங்கிலியும் எடுத்துக்கொண்டு எதிரே தோன்றினர்கள். யூதாஸ் என்னும் துரோகியான சீஷன்

முன்நடந்து சேசுநாதர் சமீபம் வந்ததும் அவருக்கு முத்தம் கொடுப்பவன்போல் நடித்து அவரைக் காட்டிக்கொடுத்தான். யூதர்கள் நமது இரக்ஷகர்மேல் பாய்ந்து விழுந்து கயிறுகளால் கட்டி பெரும் பாதகனைப்போல், பட்டணத்தின் வீதிகள் வழியாய், அடித்து மிதித்துத் தூஷணம் பேசி, இழுத்துப்போனார்கள். ஜெருசலேம பட்டணத்தில் இருந்த ஜனங்கள் எல்லாரும் இந்த வேடிக்கையைப் பார்க்கக் கூட்டமாய் வந்து வழியில் நின்றார்கள்.

சேசுநாதரை இழுத்துப்போகும் வழியில் ஆனாஸ் என்பவன் வீடிருந்தது. இவன் கைப்பாஸின் பந்து என்பதின் நிமித்தம் நமது இரக்ஷகரை அவன் வீட்டுக்கு முந்தி கூட்டிப்போனார்கள். இங்கே விசாரணை ஒன்றும் நடக்கவில்லை. அதிலிருந்து கைப்பாஸ் என்னும் அதிகாரி வீட்டுக்கு அவரை நடத்திச் சென்றார்கள். இவன்முன் நமது தேவ ஆண்டவர் குற்றவாளியைப்போல் நிற்கையில், துஷ்ட சேவகன் ஒருவன் சேசுநாதரைக் கன்னத்தில் பலமாய் கையை ஓங்கி அடித்தான். நமது இரக்ஷகர் அடித்தவனுக்குச் சமாதானமான மறுமொழி சொன்னார்.

இதற்குள் இராவிருள் அடர்ந்து நெருங்கியதால் நமது தேவ இரக்ஷகரை ஓர் வீட்டுக்குள் இழுத்துப்போய் அந்த இராத்திரி முழுதும் அவரைக் கொடுமையாயும் அவமானமாயும் நடத்தினார்கள். அங்கே தயை நிறைந்த நமது இரக்ஷகரை ஓரிடத்தில் நிறுத்தி யூதர்களும் சேவகர்களும் அவரைச்சுற்றி நின்று அவரை நிந்தித்து வசைபேசி பழிக்கிறார்கள். அவர் செய்த பிரசங்கங்களையும் அற்புதங்களையும் பரியாசமாய் நகைத்துப் பேசுகிறார்கள். அவருடைய தேவ இலக்ஷணங்களைப் பகடிபண்ணி சிரிக்கிறார்கள். அவருடைய முகத்தை மறைத்து அடிக்கிறார்கள். அடித்தபின்பு அடித்தவன் யார் என்று அவரைக் கேட்கிறார்கள். இன்னும் பலவிதமான தூஷணங்களை அவர்முன் கக்குகிறார்கள். அவர் முகத்தில் காறி உமிழ்ந்து துப்புகிறார்கள். தங்கள் கைகளை மடித்து அவரைக் குத்துகிறார்கள். அவர் கன்னத்தில் அறைகிறார்கள். முகத்தில்

இடிக்கிறார்கள். இசையாஸ் தீர்க்கதரிசியின் வாக்கியம் பூரணமாய் நிறைவேறுகின்றது: என்னை அடித்தவர்களுக்கு என் சரீரத்தை விட்டுவிட்டேன். என் தாடியின் ரோமத்தைப் பிடித்து இழுத்தவர்களுக்கு என் தாடையைக் காண்பித்தேன். என்னை அவமானமாய் துப்பினவர்களுக்கு என் முகத்தை நான் திருப்பவில்லை. மனதில் பலநாள பகையும் பழியும் வளர்த்து வைத்திருந்த யூதர்கள், அந்த இராத்திரியிலே சேசுநாதருக்குத் தங்கள் பழியைத் தீர்க்கும்படியாய்ச் செய்த நிந்தை அவமானங்கள் எவ்வளவென்று உலகத்தின் கடைசிநாளில் மாத்திரந்தான் நமக்குத் தெரியும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை அதிகாலையில் பிலாத்துஸ் என்ற தேச அதிகாரி வீட்டுக்குச் சேசுநாதரைக் கூட்டிப் போனார்கள். சர்வலோக சிருஷ்டிகரான சேசுநாதர், உலகத்துக்குச் சமாதானமாய் வந்தவர், தேசத்தில் கலகமும் குழப்பமும் உண்டாக்குகிறார் என்றும், ஜனங்களை ஏய்த்து மோசஞ் செய்கிறார் என்றும், இன்னும் பலவகையான அபத்தமான குற்றங்களை நமது தேவ இரக்ஷகர்மேல் சுமத்தினார்கள்.

பிலாத்துஸ் சேசுநாதர்மேலே யூதர்கள் சொன்ன குற்றங்கள் எல்லாம் விரோதத்தாலும பகையாலுஞ் சொன்ன அபாண்டப் பொய்களென்று நன்றாய் அறிந்து கொண்டான். ஆகிலும் மனக்கோழையால் தான் நினைத்ததைச் சொல்லத் துணியாமலும், ஏது செய்வதென்று அறியாமலும் சேசுநாதரை ஏரோதன் வீட்டுக்கு அனுப்பினான்.

ஏரோதன் பெரும் துன்மார்க்கன். நமது இரக்ஷகர் இவனுக்கு ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. இவர் மௌனமாயிருப்பதை அதிகாரி பார்த்து, தேவ ஞான அவதாரமான சேசுநாதரை ஓர் பைத்தியக்காரனாக எண்ணி, எல்லாருங்கூடிய அந்தச சபையிலே அவரைப் பழித்து நகைத்து பரியாசம்பண்ணி ஊரெல்லாம் சிரிக்கத் தெருவின் வழியாய் அவரை இழுத்துப்போகக் கற்பித்தான்.

கொடிய யூதர்கள் தாங்கள் நினைத்ததுபோல் இன்னம் முடியவில்லையே என்று பார்த்து அவரைத் திரும்பவும் பிலாத்துஸ் வீட்டுக்குக் கூட்டிவந்தார்கள். அந்தச் சமயத்தில் சிறையில் பரபாஸ் என்ற ஓர் பெரிய திருடன் கொலை விஷயத்தில் அகப்பட்டு சாவின் தீர்ப்பு பெற்றிருந்தான். இந்தப் பஞ்சமா பாதகனையும், மாசற்ற சேசுநாதரையும் ஓரிடத்தில் நிறுத்தி, பிலாத்துஸ் தன்முன் கூடி இருந்த பெரும் ஜனக்கும்பலைப் பார்த்து: ஜனங்களே! உங்கள் மத ஆசாரப்பிரகாரம் வருஷத்தில் ஒருவிசை சிறையிலிருக்கிறவர்களில் உங்களுக்கு இஷ்டமான ஒருவனை விடுதலை செய்வது வழக்கமல்லவா? இதோ நிற்கும் இருவரில் எவனை நான் மன்னித்துவிடலாம்? என்று கேட்டபோது, கூடி நின்ற ஜனங்கள் எல்லாரும் கூவி இரைந்து பெருஞ் சத்தமாய், இவனை அல்ல, பரபாசை விடுதலை செய்யும் என்று சொன்னார்கள். அதிகாரி ஜனங்களின் பகை இவ்வளவு தூரம் முற்றிப் பலம் கொண்டிருப்பதைக் கண்டு பிரமித்து ஜனங்களை நோக்கி: அப்படியானால் சேசுவுக்கு நான் என்ன செய்யவேண்டும், என்று கேட்க, ஜனங்கள் முன்னிலும் அதிக இரைச்சலோடு பேரிடி முழக்கம்போல் ஆர்த்து சேசுவை சிலுவையில் அறைந்து, கொல், கொல் என்று கூவினார்கள்.

சகோதரரே! சற்று நேரம் இங்கே நின்று நடந்த விஷயத்தைப்பற்றி கொஞ்சம் யோசிப்போம். நமதாண்டவரைக் கொல்லும்படி கூவிக் கேட்ட இந்த ஜனங்கள் யார்? அந்நியரா? அஞ்ஞான இருளில் அமிழ்ந்திய கண் குருடரா? அல்ல. இவர்கள் சர்வேசுரனுடைய ஜனங்கள், பலகோடி ஜாதிகளிலிருந்து சர்வேசுரனே தெரிந்தெடுத்த தேவப் பிரஜைகள். இவர்களைத் துன்பங்களிலிருந்தும் ஆபத்திலிருந்தும், அற்புத வகையில் பல சமயங்களில் காப்பாற்றி இரக்ஷித்தார். இவர்கள் செங்கடலைக் கால் நனையாமல் கடந்து அக்கரை செல்லும்படி தண்ணீர் இருபக்கமும் மதில்போல் உயர்ந்து எழுந்து நிற்கச் செய்தவர் இவர்தான். யூத ஜனங்கள் நெடுங்காட்டின் வழியில் போஜன

பானமின்றி தவிக்கும்போது மன்னாவென்ற தேவாமிர்த மான உணவைத் திருப்தியாய் இவர்களுக்கு நாற்பது வருஷம் இவர்தான் கொடுத்தார். உலகத்தை இரக்ஷிக்க வந்த தேவசுதன் தாம் உலகத்தில் இருந்த வருஷங்களை எல்லாம் இந்த ஜனங்களின் மத்தியில் செலவழித்தார். இவர் போன இடங்கள் எங்கும் எல்லாருக்கும் நன்மை செய்து போனார். இவரைக் கொல்லும்படி இப்போது கூவிக் கேட்கும் இந்தக் கூட்டத்தில் உள்ளவர்களில் அதோ அங்கே நிற்கும் அந்த மனிதன் முப்பது வருஷம் கைகால் வழங்காமல் திமிர்வாதங்கொண்டு கிடந்த கிடையில் கிடந்த ரோகஸ்தன். சேசுநாதர் அவன் கையைப் பிடித்துத் தூக்கி சௌக்கியம் கொடுத்தார். இப்போது அவன் கால் ஊன்றி நின்று சேசுவைச் சிலுவையில் அறையும்படி ஒருவேளை கூவுகிறானாக்கும். இதோ இங்கே நிற்பவன் பிறக்கும் போதே குருடனாய்ப் பிறந்த கபோதி. அங்கே நிற்பவன் சில நாளுக்குமுன் செவிடன். இவனோ ஊமையாயிருந்தவன். இவர்களுக்குச் சேசுநாதர் தயவாய் பார்வையும் கேள்வியும் சொல்லுங் கொடுத்தார். இவர்களும் ஒருவேளை இப்போது சேசுவைச் சிலுவையில் அறைந்து கொல் என்று ஆர்ப்பரித்துக் கதறுகிறார்களாக்கும். அதோ அங்கே நிற்கும் அவர்கள் பெருங் குஷ்டம் பிடித்தவர்களாய் காட்டில் அலைந்து திரிந்தவர்கள். இங்கே நிற்கும் இவர்கள் பசாசாவேசங்கொண்டு பைத்தியக்காரராய்ப் புலம்பி ஓடினவர்கள். இவர்கள் அனைவருக்கும் நமது தேவ இரக்ஷகர் உயிரும், குணமும், பூரண சௌக்கியமும் தந்தார். இன்றோ இவர்களும் ஒருவேளை மற்றவர்களோடு சேர்ந்து சேசுநாதரைக் கொல்லும்படி கூவிக் கேட்கிறார்களாக்கும்.

நன்றி இல்லாத இந்த ஜனங்கள் கூவிச் சொன்னதை நமது ஆண்டவர் கேட்கும்போது, அவருடைய மனது துக்க மிகுதியால் பதைத்துத் துடிக்கத் தமது சொந்த ஜனங்களை நோக்கி, அவர் இருதயஞ் சொன்ன துயரம் நிறைந்த வார்த்தைகளைத் திருச்சபை பெரிய வெள்ளிக் கிழமை பூசையின் சடங்கில் எடுத்துக் காட்டுகின்றது.

என் ஜனங்களே! நான் உங்களுக்கு என்ன செய்தேன்? எதிலே நான் உங்களுக்கு மனவருத்தங் கொடுத்தேன்? பதில் எனக்குச் சொல்லுங்கள்.

எஜிப்து நாட்டிலிருந்து நீங்கள் வெளியேவர நான் உதவி செய்தேன். நீங்கள் உங்கள் இரக்ஷகருக்குச் சிலுவையைத் தயார் செய்திருக்கிறீர்கள்.

நாற்பது வருஷங்களாய் உங்களை வனாந்தரம் வழியாய் நான் கூட்டி வந்தேன். மன்னாவென்ற உணவால் உங்களை நான் போஷித்தேன். செழிப்பான பூமியில் உங்களை நான் சேர்த்தேன். நீங்கள் உங்கள் இரக்ஷகருக்குச் சிலுவையைத் தயார் செய்திருக்கிறீர்கள்.

உங்களுக்கு இன்னும் அதிகம் நான் செய்யவேண்டியதில் எதை நான் செய்யவில்லை? பதில் எனக்குச் சொல்லுங்கள்.

சகோதரரே! அநந்த ஞானமும், அளவற்ற கிருபையும், வரம்பில்லா வல்லமையும் உள்ள சர்வேசுரன் அற்ப மனிதன் முன்பாக இவ்வளவு அவமானமும் நிந்தையும் படச் சம்மதித்தது உங்களுக்கு ஆச்சரியமாகத் தோன்றுகிறதல்லவா? ஆனால் மனிதன் மனதில் அகங்காரமும் பெருமையும், தான் என்ற ஆணவமும், பலமாய் வேர் ஊன்றி இருப்பதால், இதை அடக்கி அவனுக்குத் தாழ்ச்சியைப் படிப்பிக்கும்படி நமது தேவ இரக்ஷகர் இவ்விதம் தம்மைத் தாழ்த்துவது அவசியமென்று அவருக்குத் தோன்றினது. உங்கள் முன் நடந்து வழி காண்பிக்கும் தெய்வீக அரசனைப் பார்த்து அவர் சமீபத்தில் கிட்ட நெருங்கியிருந்து அவரைப்போல் நீங்களும் செய்யுங்கள்.

இரண்டாம் பாகம்

பிலாத்துஸ் நமது இரட்சகரை விடுதலை செய்யும்படியாய் தான் எடுத்த உபாயங்கள் எல்லாம் தன் எண்ணத்துக்கு நேர் விரோதமாய் முடிந்ததாகப் பார்த்து, போகும் வழி இன்னதென்று அறியாமல், மனந்தடுமாறி, கலங்கி

நின்றான். தன் மனதுக்கு ஓர் வகையான திருப்தியும் யூத ஜனங்களுக்கு ஒரு வகையில் சமாதானமும் கொடுக்க வேண்டுமென்பது இவனுடைய நோக்கமாயிருந்ததால், தன் முன் நின்ற ஜனங்களைப் பார்த்து: ஜனங்களே! உங்கள் முன்பாக நான் இவனை விசாரணை செய்தேன். மரணத்துக்கு ஏதுவான குற்றம் யாதொன்றும் இவனிடத்தில் நான் காணவில்லை. ஆகிலும் இவனைக் கூட்டிப்போய் உங்கள் பழிதீர க்சைகளால் அடியுங்கள். அதன்பின் அவனைப்போகவிடலாம், என்று குற்றமில்லாதவரை அடிக்கும்படி உத்தரவு கொடுத்தான்.

கொடிய யூதர்கள் இவ்வளவுமட்டாகிலும் அநுகூலம் தங்களுக்கு வந்ததே என்று சந்தோஷங்கொண்டு, தயை நிறைந்த நமது ஆண்டவரை விசாலமான ஓர் மண்டபத்துக்குள் கூட்டிப்போய் அவர்மேல் அணிந்திருந்த வஸ்திரத்தைக் களைந்து அவரை ஓர் தூணோடு சேர்த்துக் கட்டுகிறார்கள். துஷ்ட சேவகர்கள் கையில் சாட்டையுஞ் சவுக்கும் எடுத்து அவர் சரீரத்தில் பலமாய் ஓங்கி அடிக்கிறார்கள். சரீரம் பதைத்துத் துடிக்கின்றது. வீங்கித் தடிக்கின்றது. இரத்தஞ் சுரந்த காயங்கள் உண்டாகின்றது. தோல் குழிபாய்ந்து வெடிக்கின்றது. இரத்தம் பல இடங்களிலிருந்து வடிந்து ஓடிப் பாய்கின்றது. கமர் வெடித்த நிலம்போல் மாமிசம் பிளந்து துண்டு துண்டாய் கீழே விழுகின்றது. கசையின் அடிகள் இரத்த நரம்புகளிலும் முதுகின் எலும்புகள்மேலும் பலமாய் விழுகின்றன. சிந்தின இரத்தம் நதிபோல் நாலு பக்கமும் ஓடுகின்றது. சரீரம் எங்கும் ஒரே காயமாய் இரத்தத்தில் தோய்ந்து நனைந்து இருக்கின்றது. ஓடி வடிந்து விழுந்த இரத்தம் தூணைச் சுற்றிலும் தேங்கி நிற்கின்றது.

எவ்வளவோ குரூர வேதனை! அக்கினிபோல் உள்ளே குடைந்து எரிகின்றது. வலியின் உக்கிரத்தின் கொடுமையால் தேவ ஆண்டவர் பெருமூச்சு விடுகிறார். அவர் கண்களிலிருந்து கண்ணீர் பெருந் துளியாய் வடிந்து விழுகின்றது. இரக்ஷகர் இருதயத்திலிருந்து பிரலாபக்குரல் தமது மோக்ஷ பிதாவின் பக்கம் சப்திக்கின்றது. ஆனால் கொலை

பாதகர் இன்னும் அடிக்கிறார்கள், இன்னும் அதிக காயம், இன்னும் அதிக இரத்தம், இன்னும் அதிக வேதனை, கடைசியில் சேசுநாதர் சாகிறவராகத் தோன்றுகிறார்.

ஓ! இரக்கமில்லா பாதகர்களே! கல்நெஞ்சுள்ள கொடியோரே! அவ்வளவு அடித்தது போதும். நிறுத்துங்கள் உங்கள் பகையும் பழியும் இன்னந் தீரவில்லையா? உங்கள் மனது இளகவில்லையா?

சகோதரரே! யூதர்களுடைய பகையும் பழியும் தீர்ந்தாலும் உங்கள் பாவங்களுக்குப் பரிகாரஞ் செய்யும்படியாய் உங்கள் இரக்ஷகருக்கு இருக்கிற ஆசை இன்னும் தீரவில்லை. மனிதர்கள் சரீர இன்பத்தைத் தேடி அசுத்தப் பாவத்தில் அமிழ்ந்தி தேவ மகத்துவத்துக்குச் செய்யும் பெரும் நிந்தையைப் பரிகரிக்கும்படி இப்படி இரத்தஞ் சிந்துகிறார்.

ஓ! ஜனங்களே! சிற்றின்பமே உங்களுக்கு ஆனந்தமென்று இராப்பகலாய்த் தேடி பாவ துர்க்கந்தத்தை ஆவலோடு அள்ளி சாப்பிடுகிறவர்களே! இங்கே கிட்ட வாருங்கள். இரத்த ஏரியில் மூர்ச்சையாய் விழுந்துகிடக்கும் சேசுவைப் பாருங்கள். இவருடைய சரீரம் பதைத்துத் துடித்து என்ன அவஸ்தைப் படுகிறதென்று கவனியுங்கள். இந்தச் சரீரம் பரிசுத்த கன்னியின் உதரத்தில் அற்புதமாய் உண்டான தேவ சரீரம் அல்லவா? பாவத்தின் மாசு அற்பமும் இல்லாத தூய சரீரம் அல்லவா? ஏனோ இப்படி காயங்களால் பிளந்து வெடித்து இரத்தத்தில் தோய்ந்து இருக்கின்றது? ஏனென்றால் நீங்கள் உங்கள் சரீரத்தைப் பாவத்தால் அசுத்தமாக்கினீர்கள். அசுத்த மோக பாவம் அற்பக்காரியமென்று துணிந்து செய்தீர்கள். மனதிலே அசுத்த நினைவுகளை வளர்த்தீர்கள். கண்ணால் அசுத்தத்தைப் பார்த்தீர்கள். உங்கள் வாய் அசுத்தத்தைக் கக்கினது. உங்களோடு இருக்கிறவர்களுக்கும் அசுத்த பாவத்தைப் படித்துக்கொடுத்தீர்கள். இத்தனை பாவங்களுக்காக நமது அன்புள்ள இரக்ஷகர் அடிபட்டு உத்தரிக்கிறார். ஆ! கிறீஸ்துவர்களே! இன்னும் உங்கள் மனது மாறவில்லையா?

இரக்ஷகர் உங்களுக்காக இதுமட்டும் பட்ட வேதனை போதாதா? இன்னும் அவர் சரீரத்தில் வேதனைப்பட வேண்டுமோ? அப்படியானால் அதோ பாருங்கள், கூர்மை யான முள்ளுகள் நிறைந்த கொடியைச் சுற்றி வளைத்து முடி பின்னி, உங்கள் ஆண்டவர் தலைமேல் வைத்து தடிக ளால் முள்ளுகள் உள்ளே இறங்க பலமாய் ஓங்கி அடிக் கிறார்கள். தலையிலிருந்த இரத்தம் கண்கள் வழியாகவும், வாய் வழியாகவும், நாசி வழியாகவும் வடிந்து ஓடிவருகின் றது.

ஓ! எங்கள் நல்ல சேசுவே! தேவரீர் வாய் திறந்து ஒன்றும் பேசாதேபோனாலும், உமது சரீரத்திலுள்ள காயங்கள் எல்லாம் அத்தனை திறந்த வாய்போல் எங்கள் பேரில் உமது இருதயத்திலிருக்கும் சிநேகம் எம்மாத்திரம் மட்டும் அளவும் கடந்ததென்று உலகமெல்லாங் கேட்கும் படியாய் உரத்திக்கூவி சப்தித்துப் பேசுகின்றன.

சுவாமி! இதோ நாங்கள் அனைவோரும் உம்முடைய பாதத்தில் விழுந்து எங்கள் பாவங்களைத் தயவாய்ப் பொறுக்கும்படி கெஞ்சிக் கேட்கிறோம். அசுத்த மோக பாவம் உம்முடைய மாசற்ற சரீரத்தில் வருவித்த இத்தனை காயங்களைப் பார்த்து அந்த பாவம் எவ்வளவு கொடிய தென்று இன்று நாங்கள் கண்டு அறிகிறோம். நீர் எங்களை மகிமையில் உயர்த்தி சிருஷ்டித்திருக்க, நாங்கள் எங்களைப் புத்தியில்லாத மிருகங்களுக்குச் சமானமாக்கினோம். இன்று எங்களுக்கு புத்தி வந்தது. உம்மைத் தேடி நாங் கள் வந்திருக்கிறோம். உமது இரத்த ஏரியில் நாங்கள் ஸ்நானஞ் செய்து சுத்தமாவோம். இனிமேல் பாவத்துக் குப் பயந்து நடப்போம். உமக்குப் பாவத்தால் இனி துரோகஞ் செய்வதைப்பார்க்கிலும் ஆயிரம் முறை சாகும் படி மனதாயிருக்கிறோம்.

ஓ! தேவமரியே! வியாகுலம் நிறைந்த தாயே! உமது தேவ மகன் அடிமையைப்போல் அடிபட்டு இரத் தஞ் சிந்தும்போது, நீர் உமது இருதயத்தில் மனிதரால் உணரக்கூடாத துக்கம் அநுபவித்தாலும், அதை எல்லாம்

நாங்கள் செய்த பாவங்களுக்குப் பரிகாரமாக தேவ நீதிக்கு ஒப்புக்கொடுத்தீர்.

தாயே! நான் இனிமேல் என் ஆத்துமத்திலுஞ் சரீரத்திலும் பாவ அசுத்தமின்றி ஜீவிக்கக் கிருபை செய்வீராக! சோதனையும், பசாசின் தந்திரமும் பலமாய் வரும் போதும், என் சரீரமே மதங்கொண்டு எழும்பி என்னைப் பாவத்துக்குத் தூண்டும்போதும், உமது பரிசுத்த போர்வையால் என்னை மூடி, உமது மடியில் என்னைக் கூட்டிச் சேர்த்து பாவ மாசில்லாமல் என்னைக் காப்பாற்றும் தாயே!

ஏழாம் நாள்—மூன்றும் தியானம்

கல்வாரி மலை

முதல் பாகம்

பிலாத்துஸ் என்ற தேச அதிகாரி நமது தேவ இரக்ஷகர்மேல் யாதொரு குற்றமும் இல்லையென்று பிரசித்தமாய்ச் சொன்னபிற்பாடு அவரை அடிக்கும்படி உத்தரவு செய்தான். யூதர்கள் நமது ஆண்டவரைத் தங்கள் பழி தீருமட்டும் அடித்தும் இன்னும் அவர்கள் பகை தீரவில்லை. அவரைச் சிலுவையில் அறைந்து கொல்வதே அவர்களுக்குத் திருப்தியான நோக்கமாயிருந்தது. அதிகாரியும் அவர்கள் இஷ்டம்போல் செய்ய நமது அன்புள்ள சுவாமியை யூதர்கள் கையில் ஒப்புவித்தான்.

கொடிய யூதர்கள் சேசுநாதரை இழுத்துப்போய், முன்னமே தயார் செய்திருந்த பாரமான சிலுவையை அவர் தோள்மேல் சுமத்தினார்கள். தேவ ஆண்டவர் சிலுவையைப் பார்த்ததும் பூரித்த மனதோடு அதைத் தமது இரு கையால் வாங்கி, சிந்தின கண்ணீரால் நனைத்து, முத்தி செய்து: ஓ! சிலுவையே! உன்னை நான் இத்தனைகாலம் ஆவலாய்த் தேடியிருந்தேன்! என் சிநேக சிம்மாசனமே!

மோக்ஷத்தின் திறவுகோலே! என் ஜெய விருதே! உன்னை நான் என் கையில் ஏந்தி மலையின் உச்சியில் உலகமெல்லாம் பார்க்கும்படி நாட்டப்போகிறேன். உன்மேல் நான் சாய்ந்து தங்கி ஆணிகளால் என் சிநேக அக்ஷரங்களைப் பதித்து எல்லா ஜனங்களின் கண்களுக்கும் தெளிவாய் எந்தக் காலத்திலும் அது தோன்றும்படியாய் அந்த எழுத்துக்களின்மேலே என் இரத்தத்தை வாரி ஊற்றித் தெளிக்கப்போகிறேன். இனிமேல் நீ, ஓ சிலுவையே! கோபுரங்களிலும், கோவிலின் முகப்பிலும், வீடுகளின் கதவிலும், மனிதர் நெற்றியிலும், கிரீடத்தின் மத்தியிலும், அலங்காரமாய்த் தோன்றி என் சிநேகத்தின் பெருக்கத்தைச் சகல ஜாதி ஜனங்களுக்குங் காட்டுவாயாக, என்று நமது இரக்ஷகர் தமது இருதயத்திலிருந்து சொன்னபின், தமது தோள் மேல் சிலுவையை வைத்து இருகையால் அதைத் தாங்கி நடந்துபோகிறார். போகும் பாதையில் பலமுறை சுமையோடு நடக்க சக்தியின்றி கீழே விழுந்தார். விழுந்தவர் தமக்கு இருந்த பலத்தை எல்லாம் கூட்டி, எழுந்து, தத்தளித்துத் தடுமாறி, கடைசியில் மலையின் உச்சியில் சிலுவையோடு சேர்ந்தார்.

அவர் சேர்ந்தவுடனே யூதர்கள் நமது ஆண்டவரைச் சிலுவைமேல் தள்ளி அவருடைய கைகளையுங் கால்களையும் கூர்மையுள்ள ஆணிகளால் மரத்தோடு சேர்த்து அறைந்து சிலுவையைத் தூக்கி குழியில் நடவே, அவர் சரீர பாரமுழுதும் கைகால்களின் காயங்களில் பொறுத்து நின்றதால் அவர் பட்ட நிர்ப்பந்த வேதனை வெகு கொடுமையாயிருந்திருக்கவேண்டும்.

இந்தக் கொடிய வேதனை நிறைந்த அவஸ்தை ஸ்திதியில் சேசுநாதர் மூன்றுமணி நேரமிருந்தார். இந்த மூன்று மணி அளவில் தாம் செய்யவந்த இரக்ஷணிய அலுவலை முற்றும் முடித்து, தமது பிதாவோடு சமாதானமான ஒப்பந்தஞ் செய்து, பத்திரம் எழுதி சிலுவையில் எல்லாரும் பார்த்து வாசித்தறியும்படியாய் அதைப் பதித்தார். இது தான் சேசுநாதர் சாகுமுன் நமக்கு எழுதித் தந்த மரண சாசனம். இது மனிதர் அனைவரையுஞ் சார்ந்தது. இதைத்

தான் உங்களுக்குத் திறந்து இப்பொது வாசிக்கப்போகிறோம். கிட்ட நெருங்கி வாருங்கள். சூழ கவனமாய் நின்று உங்கள் தகப்பன் சாகுமுன் தமது இரத்தத்தால் எழுதிய பத்திரத்தின் வாசகத்தைக் கேளுங்கள்.

இரண்டாம் பாகம்

உலக இரக்ஷகர் சிலுவையாகிற பலி பீடத்திலிருந்து தமது பிதாவோடு நித்திய சமாதான உடன்படிக்கை செய்யும்போது, ஏழு விசை வாய் திறந்து எல்லாருங் கேட்கப் பேசி இருக்கிறார். இதிலே மனிதர்கள் அறியவேண்டிய முக்கிய விஷயங்கள் இன்னதென்று காண்பித்திருக்கிறார். இந்த மரண சாசனத்தில் ஏழு விஷயங்கள் கண்டிருக்கின்றன.

சேசுநாதர் சொன்ன முதல் வாக்கியம் அவரைச் சூழ்ந்திருந்த யூதரைக் குறித்தாலும் அது மனிதர் எல்லாருக்கும் பொதுவான புத்தி போதகம். நமது இரக்ஷகர் தமது பிதாவை நோக்கி: **பிதாவே! இவர்களை மன்னித்தருளும். ஏனெனில் இவர்கள் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள்,** என்று பிரார்த்தித்தார்.

சகோதரரே! மனிதர்கள் செய்யும் பாவங்களை மன்னிக்கும்படி நமது ஆண்டவர் எப்போதுந் தயாராயிருக்கிறார். அவர்கள் செய்வது அறியாமல் செய்கிறார்கள் என்று சேசுநாதரே தமது பிதாவிடத்தில் சொல்லுகிறார். அப்படியானால் நீங்கள் மனஸ்தாபத்தோடு அவர் பாதத்தில் வரும்போது அவர் உங்களை மன்னிப்பாரோவென்று சந்தேகப்படலாமா?

சந்தேகமுண்டானால் சேசுநாதர் சொல்லும் இரண்டாம் வாக்கியத்தைக் கேளுங்கள். சேசுநாதரோடு சிலுவையில் இரண்டு திருடர்கள் அறைபட்டிருந்தார்கள். வலது பக்கமாய் இருந்த திருடன் நமதாண்டவர் சொன்ன முதல் வாக்கியத்தைக் கேட்டு, இப்படி அளவற்ற தயாளமும் அன்புங்காட்டிப் பேசுகிறவர் உலகத்தில் வந்த தேவனாய் இருக்கவேண்டுமென்று அவன் நினைத்தவுடனே

தேவப்பிரகாச ஒளி அவன் மனதில் உதித்தது. உயிருள்ள விசுவாசத்தோடும், சிநேகத்தோடும் சேசுநாதர் பக்கமாய்த் திரும்பி: ஆண்டவரே! உம்முடைய இராச்சியத்துக்கு நீர் போனபின்பு என்னை ஞபகத்தில் வைத்துக்கொள்ளும், என்று தாழ்மையாய் விண்ணப்பம் பண்ணினன். உடனே இரக்கம் நிறைந்த நமது ஆண்டவர் கிருபையாய் அவனைப்பார்த்து: **இதோ இன்றே என்னேடு மோக்ஷானந்தத்தில் நீ இருப்பாய்,** என்று அவனுக்கு ஆறுதல் சொன்னர்.

ஓ! இரக்கம் நிறைந்த சேசுவே! என்னையும் மறந்து போகவேண்டாம். சுவாமி! உமது இராச்சியத்தில் இப்போது அரசாளும் நீர் இந்தப் பரதேச பூமியில் அலைந்து திரியும் என்மேல் தயவாயிரும். என் ஞாபகம் எப்போதும் உமக்கு இருக்கட்டும். நான் அவஸ்தையாய்க் கிடக்கும்போது உம்மை நான் பிரார்த்திப்பேன். அப்போது, இதோ இன்றே நம்மோடு நீ மோக்ஷத்திலிருப்பாய், என்ற அமுத வாக்கு என் காதில் சப்திக்கக்கடவது!

பாவிகளுக்குத் தயையும் இரக்கமும் காண்பித்தபின்பு மனிதர் எல்லாருக்கும் தமது சிநேகத்தையுங் காண்பிக்கப் போகிருர். சிலுவையில் அவஸ்தையாய்த் தொங்கும் போது, தம்மை மறந்து மனித ஜென்மத்தை முழுதும் ஒரு பார்வையில் பார்க்கிருர். இவர்களைத் தாயில்லாப் பிள்ளைகளாகத் தவிக்கும்படி விட்டுப்போவது சரியல்லவென்று அவருடைய அன்புள்ள இருதயத்தில் தோன்றுகிறது. எல்லா மனிதருக்கும் ஓர் பொதுத்தாயாய் இருக்கும்படி ஏற்ற விசால இருதயமுள்ளவள் யாராய் இருக்கக்கூடும்? தம்மைப் பெற்று வளர்த்த பாக்கியவதியான தாய் அல்லாமல் வேறே யாவரும் தகுந்தவர்களாகமாட்டார்கள் என்று அனந்த ஞான புத்தியுள்ள சர்வேசுரன் அறிந்தார். உடனே சிலுவையின் கிட்ட நின்ற பிரிய சீஷனைத் தம்மைப் பெற்று வளர்த்த அன்புள்ள தாய்க்குக் காட்டி, **இதோ உன் மகன்** என்றும், சீஷனுக்குத் தாயைக் காண்பித்து **இதோ உன் தாய்** என்றும் சொல்லி, தமது சீஷர்களாகிற மனிதர்களுக்குத் தம்முடைய சொந்தத் தாயை, தாயாகக்

கொடுத்தார். தேவதாயும் அன்று சிலுவையின் அடியில் மனிதர்கள் எல்லாரையுந் தமது பிள்ளைகளாக சேசுநாதருடைய கையிலிருந்து ஏற்றுக்கொண்டாள்.

சகோதரரே! நீங்களும் சேசுநாதர்சுவாமி தயவாய் கொடுக்குந் தாயை உங்கள் தாயாக ஏற்றுக்கொள்ளுங்கள். ஓ! மரியே! தேவதாயே! உம்மைத் தாய் என்று கூப்பிடும் பாக்கியம் எனக்கு இன்று வந்தது. ஓ! சர்வேசுரனுடைய தாய் எனக்குந் தாய். தாய் என்றால் வாய்க்குத் தித்திக்குந் தேன். காதுக்கு இனிய ஓசை. மனதுக்கு ஆனந்த சந்தோஷம். ஓ! மரியே! தாய் என்று எந்த நாளும் உம்மை நான் கூப்பிடுவேன். நான் அவஸ்தையாய் படுத்திருக்கும்போதும், என் நாக்கு மேல்வாயோடு ஒட்டிக்கொண்டாலும், என் சத்துவமெல்லாங் கூட்டி தாய், தாய் என்று சொல்லி நான் சாவேன்.

நமது தேவ இரக்ஷகர் சிலுவையில் அறையுண்டு கொஞ்சநேரமானபின், மத்தியான வேளையில் உலகம் எங்கும் அடர்ந்த இருள் மூடி இருந்தது. எல்லா ஜனங்களும் மௌனமாய் நின்றார்கள். சிலுவையில் அவஸ்தையாயிருந்த சேசுநாதர் திடீரென்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு: **என் சர்வேசுரா! என் சர்வேசுரா! ஏன் என்னைக் கைவிட்டீர்,** என்று சொன்னார். இந்த உரத்த சத்தம் சேசுநாதர்சுவாமி தமது இருதயத்தில் பட்ட பெருந்துக்கம் எம்மாத்திரமென்று ஒருவாறு காண்பிக்கின்றது. உலகத்தின் இரக்ஷணியமாய் வந்தவரை உலகம் வெறுத்து வேண்டாமென்று தள்ளிப்போட்டது. அவர் உடுத்தியிருந்த வஸ்திரத்தையும் எடுத்து அவர் விரோதிகள் தங்களுக்குள் பகிர்ந்துகொண்டார்கள். அவருடைய சீஷர்களும் அவரைத் தனியே விட்டு ஓடிப்போனார்கள். தமது தாயையும் தமது பிரிய சீஷன் வசம் ஒப்புவித்தார். எங்கே அவர் பார்த்தாலும் விரோதிகளும் சத்துருக்களுந்தான் நிற்கிறார்கள். அவருடைய மோக்ஷபிதா, எல்லாருக்கும் ஆறுதலும் உறுதியுங் கொடுக்கும் நித்திய பிதா, அவரும் இப்போது தமது குமாரனைக் கைவிட்டார். இதுதான் நமது இரக்ஷகருடைய இருதயத்தில் கொடிய துக்கம் உண்டாக்குகின்

றது. இதின் நிமித்தம் சேசுநாதர் உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு: என் சர்வேசுரா! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று சொன்னார்.

இருதயத்தின் துக்கத்தோடு தமது சரீரத்தில் தாகத்தின் உக்கிரத்தையும் நமது ஆண்டவர் அநுபவித்ததால் **நான் தாகமாயிருக்கிறேன்** என்று கூப்பிட்டுச் சொன்னார். சேசுநாதருடைய சரீரத்திலிருந்த இரத்தமெல்லாம் அடியாலுங் காயங்களாலும் சிந்திப்போனதால் அவர் கொடிய தாகம் அனுபவித்தார். ஆனால் இந்தத் தாகம் மனிதருடைய இரக்ஷணியத்தின்பேரில் அவருக்கிருந்த ஆசையாகிற தாகத்தையுங் குறிக்கின்றது. உங்கள் இரக்ஷணியத்துக்காக சேசுநாதர் இவ்வளவு ஆசை காண்பித்தால் நீங்கள் உங்கள் சொந்த ஆத்துமத்தைப்பற்றிக் கவலையின்றி இருப்பது உங்களுக்குத் தகுமா? இதன்பின்பு நமது இரக்ஷகர் தாம் உலகத்தில் செய்ய வந்த தமது பிதாவின் வேலையைப் பூரணமாய்ச் செய்து முடித்ததாகப் பார்த்தார். ஆனதால் **எல்லாம் முடிந்தது** என்று ஆறும் வாக்கியமாகப் பேசினார்.

எல்லாம் முடிந்தது. மனிதர்பேரில் தமக்கிருந்த சிநேகத்தைக் காண்பிக்கும்படி சேசுநாதர் செய்ய மனதாயிருந்ததெல்லாவற்றையுஞ் செய்து முடித்தார். இன்னும் உயிர் மாத்திரந்தான் உடலில் தங்கி இருக்கின்றது. அதையும் இப்போது கொடுக்கப்போகிறார். ஆனதால் தம்மிடத்திலிருந்த சத்துவம் எல்லாங்கூட்டி உரத்த சப்தமாய் உலகமெல்லாங்கேட்டு அறியும்படி, **என் பிதாவே! உமது கையில் என் ஆத்துமத்தை ஒப்புக்கொடுக்கிறேன்,** என்று சொல்லித் தலை சாய்த்துத் தமது பிதாவின் சித்தத்தை வணங்கி உயிரைக் கொடுத்தார்.

சர்வலோக சிருஷ்டிகரான சர்வேசுரன் தாம் எடுத்த மனித சுபாவத்தில் மரித்தார். சகல ஜீவகோடிகளுக்கு ஜீவனாயிருப்பவர் ஜீவனை விட்டார். உலகத்தைத் தாங்கி நடத்தும் கர்த்தர் மரித்ததால் உலகம் தன் நிலை பெயர்ந்து தடுமாறி கலங்குவதாகத் தோன்றுகின்றது. வானத்தின் கண்ணாகிற சூரியன் தன் ஒளி இழந்து மங்

கிப்போகின்றது. பூமி ஆதாரமின்றி அசைந்து ஆடுகின்றது. மலைகள் நடுங்கி ஒன்ரோடொன்று மோதி உடைந்து வெடிக்கின்றன. கல்லறைகள் திறக்க மரித்தவர்கள் உயிரோடு வெளியே வருகிருர்கள்.

நமது ஆண்டவர் மரித்தபின்பும் தமது சிநேகத்தை மனிதர்களுக்குக் காண்பிக்கிருர். துஷ்ட சேவகன் ஈட்டியால் சேசுநாதருடைய நெஞ்சிலே குத்தி அவருடைய இருதயத்தைத் திறக்கிருன். திறந்த இருதயத்திலிருந்து இரத்தமும் தண்ணீரும் ஓடிவருகின்றது.

கிறீஸ்துவனே! கிட்டவா, உனக்காக தேவ சந்நிதியின் கதவு திறந்திருக்கிறது. அதோ தேவ இருதயம். இதுதான் நீ இருக்கவேண்டிய வீடு. உள்ளேபோ. இதற்குள் நீ தங்கி இருக்குமட்டும் உனக்கு மோசம் ஒன்றும் வரமாட்டாது. உலக சுக இன்பம் உன் கண்களை மயக்காது. பசாசு உன் கிட்ட நெருங்காது. உன் சரீரம் உன்னைத் தீண்டாது.

ஓ! சேசுவின் பரிசுத்த இருதயமே! திறந்த வீடே! சிறந்த ஆலயமே! என் வாசஸ்தலமே! உன்னிடத்தில் நான் எப்போதும் தங்கி இளைப்பாறுவேனுக! நீயே எனக்கு எந்த நாளிலும் அடைக்கலமாயிருப்பாயாக! உனக்குள்ளே அக்கினிமயமாய் எரியும் சிநேகத்தை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். என் இருதயமும் உன சிநேக அக்கினியால் சுவாலித்து எரிவதாக! உனக்காக நான் ஜீவித்து, உன்னிடத்தில் நான் மரித்து, உன்னில் நான் இளைப்பாறுவேனுக!

சகோதரரே! சிலுவையாகிற இந்த தேவ புஸ்தகத்தைப் பார்க்கிறீர்களா? இதில் பதிந்த அக்ஷரங்களை வாசிக்க இனி உங்களுக்குத் தெரியுமா? இந்தப் புஸ்தகம் உங்கள் வீட்டிலும், உங்கள் கையிலும், உங்கள் கண்முன்னும் எப்போதும் இருக்கட்டும். இதிலே உங்கள் தகப்பன் சேசுநாதர் சாகுமுன் எழுதிய மரணசாசன வாக்கியங்களை நாள்தோறும் வாசியுங்கள். அப்படி வாசித்தால் பாவத்தைச் செய்யமாட்டீர்கள். சேசுநாதர்சுவாமியை உங்கள் முழு இருதயத்தோடு சிநேகிப்பீர்கள். அவ

ருடைய ஊழியத்தில் பிரமாணிக்கமாயிருப்பீர்கள். அவருடைய ஸ்தோத்திர மகிமைக்காக எதுவும் செய்ய மனஞ் சோம்பாமல் துணிவோடும் உற்சாகத்தோடும் வருவீர்கள்.

ஓ! சேசுவே! இந்தச் சிலுவையில் நாங்கள் உம்மை ஆராதிக்கிறோம். உமது திருச்சிலுவை எங்கள் சத்துருக்களோடு நாங்கள் யுத்தஞ்செய்ய ஓர் ஆயுதமாகும். இந்த திருச்சிலுவையே எங்கள் ஜெய விருதுக்கொடி. நாங்கள் சாகும்போது திருச்சிலுவையைக் கையில் பிடித்து பத்தியோடு முத்திசெய்து பாக்கியமாய் மரிக்கக் கிருபை செய்வீராக! சிலுவையின் சமீபமாய் நின்ற உமது அன்புள்ள தாயாரும் நான் சாகும் சமயத்தில் என் கிட்ட இருந்து எனக்கு உதவிசெய்ய தயைசெய்யும்.

ஓ! மரியே! என் தாயே! உமது மூத்த மகன் மரிக்கும் வேளையில் நீர் கிட்ட இருந்ததுபோல், உமது இளைய ஏழைப்பிள்ளையாகிய நானும், எவ்வளவு ஊதாரியாயினும், அவஸ்தையாய் என் பாயில் நான் படுத்திருக்கும்போது, தாயே! என் கிட்ட நின்று என்னைத் தேற்றி ஆசீர்வதித்து, நான் இஷ்டப்பிரசாதத்தோடு தேவதிரவிய அநுமானங்களைப் பெற்று, உமது கையில் சாகும் பாக்கியம் எனக்கு வரும்படியாய் உம்மை நான் கெஞ்சி மன்றாடிப் பிரார்த்திக்கிறேன்.

எல்லாரும் பாடுபட்ட சேசுநாதர் சுரூபமுன் முழங்காலிலிருந்து உத்தம மனஸ்தாப மந்திரஞ் சொல்லுங்கள்.

ஏழாம் நாள்—ஞானபோதகம்

சேசுநாதர்சுவாமியின் பின்னே நாமும் நமது சிலுவையைச் சுமந்து போகவேண்டும்

முதல் பாகம்

சேசுநாதர்சுவாமி பிறந்தநாள்முதல் சாகுமட்டும் சிலுவை அவரோடிருந்தது. அவர் நமக்கு முன்னே சிலுவையைச் சுமந்து நடந்துபோகிறார். தம்முடைய சீஷர்களைப் பார்த்து: **நமது பின் வர உங்களுக்கு மனம் உண்டானால் நீங்களும் உங்களுடைய சிலுவையை எடுத்து நம்மைத் தொடர்ந்து கூட வாருங்கள்,** *என்று அழைக்கிறார்.*

சிலுவை என்றால் மனிதனுக்கு இந்த உலகில் வரும் பலவகையான துன்ப வருத்தம் இடையூறுகள். இந்தத் துன்பங்கள் சரீரத்தையும் சாரும். ஆத்துமத்தையும் சாரும். சரீரத்துக்கு இயல்பாயுள்ள துர்ப்பலனாலும் நம்மைச் சூழ்ந்திருக்கும் உயிருள்ளதும் உயிரற்றதுமான பலவகைச் சிருஷ்டிகளின் வழியாலும் நமக்கு வருத்தமும், நோவும், அசௌக்கியமும், தாழ்வுங் குறைவும், பழிச்சொல்லும், நிந்தையும் வரக்கூடும். எந்த வழியாய் துன்பங்கள் வந்தாலும் மனந்தளராமல் பொறுமையாயிருப்பது எல்லா மனிதருக்கும் பொதுவான புத்தி. இன்ப காலத்தில் பெருமை பாராட்டாமலும், துன்ப வேளையில் அது மனித சுபாவத்துக்கு இயல்பானதென்று மனஞ் சோம்பாமலுமிருப்பவனுக்குத் துன்பமே இல்லை என்று ஓர் அஞ்ஞானியான வித்வான் பாடி இருக்கிறான்.

> *இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்*
> *துன்பம் உறுத்தல் இலன்.*

ஆனால் கிறீஸ்துவனோ, துன்பம் வரும்போது அது தனக்குச் சேசுநாதர் தயவாய் அனுப்பும் சிலுவை என்று மனப்பூர்வமாய் ஏற்று சந்தோஷமாயிருப்பது அவனுக்கு அழகு.

சரீரத்துக்கு வரும் பல துன்பங்களைப்பார்க்கிலும் ஆத்துமத்துக்கு வரும் துன்பம் அதிக கஷ்டமும் ஆபத்தும் உள்ளதென்பதால், அதைப்பற்றி இப்போது முக்கியமாய்க் கவனிக்கப்போகிறோம். ஆத்துமத்துக்கு வரும் பெருந் துன்பம் ஏதென்றால் பாவ தந்திர சோதனைகளும் அவை களால் மனதில் உண்டாகும் கலக்கமும், கவலையும், பயமும்; போராட்டமும் ஆகிய இவைகள்தான் முக்கியம்.

யோப் என்ற மகாத்மா சொல்வதுபோல் மனிதனு டைய ஜீவியம் உலகத்தில் போர்க்களத்துக்குச் சமானம். உலகத்தில் நாம் உள்ள நாளெல்லாம் நம்மைச் சூழ்ந்திருக் கும் பல சத்துருக்களோடு யுத்தஞ் செய்வது நமது தொழில். நேற்றுக் கேட்ட இரு யுத்தக் கொடிகளின் தியா னத்தில் நீங்கள் பார்த்தது எப்போதும் உங்கள் ஞாபகத்தி லிருக்கவேண்டும். லூசிப்பேய் நம்முடைய பிரதான சத்துரு. மோக்ஷபாக்கியத்தை இந்த கெட்ட அரூபி தன் பாவத்தால் இழந்தபின்பு, தான் இருந்த மோக்ஷ சிம்மா சனத்திலிருக்கும் பாக்கியம் பெற சர்வேசுரன் மனுஷனைச் சிருஷ்டித்தாரென்று, மனதில் கர்வங்கொண்டு, நீச மனு ஷன் நானிருந்த இடத்தில் இருப்பானோ? இது எனக்கு அவமானமல்லவா? என்று மனதில் கருதி, காய்மகாரத்தால் வீங்கி, மனுஷன் அங்கே போகாதபடி தடுக்க இராப் பகலாய் தன்னால் கூடுமானவரையில் பிரயாசப்படுகின்றது.

பசாசுக்குத் துணையாய் நம்முடைய கெட்ட சுபாவ மும் சேர, நமது சொந்த சரீரமே நமக்கு ஓர் சத்துருவாய் வாய்த்தது. இவ்விரு சத்துருக்களோடுகூட, மகிமை, பெருமை, தனம், பொருள், இன்பசுகம் என்னும் மூன்று வகை ஆசை பந்தங்கள் கூடிச் சேர்ந்த உலகமாகிற மூன் றாம் சத்துரு நாம் பிறந்தநாள்முதல் சாகுமட்டும் காலைச் சுற்றின பாம்புபோல் நம்மை விடாமல் தொடர்ந்து கொண்டே வருகின்றது.

நமது ஜீவியம் யுத்தகளமாதலால் இந்த மூன்று சத் துருக்களும் நம்மோடு பல பாவ தந்திர சோதனைகளால் யுத்தம் செய்யும்படி சர்வேசுரன் அவர்களுக்கு உத்தரவு

அளித்திருக்கிறார். பாவ தந்திர சோதனை என்றால், எதெது நம்மைப் பாவத்துக்குத் தூண்டி இழுக்குமோ அதுவே பாவதந்திர சோதனையாகும். நம்முடைய பிராண சத்துருக்கள் நம்மைப் பாவத்துக்குத் தூண்டுவது அவர்களுடைய தொழிலாதலால் பாவ தந்திர சோதனை நமக்கு வருவது பாவமல்ல, அவ்வித சோதனை வரும் போது நாம் அதை வெறுத்து பகைத்துத் தள்ளினால் அது நமக்கு ஜெயம். மோக்ஷத்தில் நித்திய சம்பாவனை சர்வேசுரன் அதின் பலனாகக் கொடுப்பார்.

பாவ தந்திர சோதனையிலிருந்து பாவம் உண்டாக மூன்று படிகளிருக்கின்றன. ஆதிமுதலில் விலக்கப்பட்ட தீமையான ஓர் நினைவு அல்லது ஓர் செய்கை உனக்குமுன் தோன்றும். இது பிறருடைய வார்த்தையாலாவது, செய்கையாலாவது வரலாம். அல்லது உனக்குள்ளிருந்தே உன் பாவப் பழக்க வழக்கத்தாலும் அல்லது இந்திரிய தோற்றத்தாலும் அது பிறக்கலாம். இவ்விதமாய் உன்னிடத்தில் உற்பத்தியாகும் நினைவும், தோற்றமுந் தன்னிலே பாவமல்ல. இவைகள் தகாதவைகளென்று நீ அறிந்தவுடனே தள்ளுவதால் உனக்கு ஜெயமும் மோக்ஷத்தில் பேறுபலனும் உண்டாகும்.

தகாத நினைவும், தோற்றமும், மனதில் உற்பத்தியான பின் அதின்பேரில் சந்தோஷகரமான உணர்ச்சி உன்னை அறியாமல் உண்டாகலாம். இது இரண்டாம் படி. துர்ச்சுபாவமுள்ள மனிதன் இயல்பிலே தீமைக்குச் சார்புள்ளவனாயிருப்பதால் இவ்விதத் தகாத தோற்றத்தால் மிருக சுபாவத்தைச் சேர்ந்த இந்திரியங்களால் இவனை அறியாமல் ஓர்வித சந்தோஷம் பிறக்கக்கூடும். இதில் நீ உன் பூரண சம்மதத்தோடு சந்தோஷப்படாதமட்டும உனக்குப் பாவமில்லை. ஆகிலும் பாவம உண்டாகலாம் என்பதால் உன் மனதில் தோன்றிய இந்தத் தகாத தோற்றத்தை அறிந்தவுடனே தாமதமின்றித் தள்ளிப்போடுவது உன் கடமை.

பாவத்துக்கு அவசியமான விஷயம் ஏதென்றால்: யாதோர் நினைவோ, சொல்லோ, அல்லது செய்கையோ,

தப்பிதமென்று உன் மனது நன்ருய் அறிந்து அதன்பின் நீ அதற்குப் பூரண சம்மதங் கொடுத்திருந்தால்தான் பாவ மாகும். இந்த சம்மதம்தான் பாவத்தின் மூன்ரும் படி. மனது அப்படி அறிந்து தன் பூரண சம்மதங் கொடாதே போனுல் பாவம் உண்டாகாது. ஆகையால் நீ தப்பித மென்று அறிந்த ஓர் காரியத்துக்கு, உன் மனது அறிய உன் பூரண சம்மதம் நீ கொடுப்பது மாத்திரம் பாவமா கும். எவ்வளவுக்கு இந்த சம்மதங் குறையுமோ அவ்வள வுக்குப் பாவத்தின் கனமும் குறையும். பாவம் இன்ன தென்று காட்டிய பின்பு, இனி அடுத்த பாகத்தில் பாவம் வரும் வாசல் அல்லது வழிகள் இவை என்று விவரிக்கப் போகிறேரும்.

இரண்டாம் பாகம்

ஓர் பட்டணத்தைச் சுற்றி இருக்கும் கோட்டை மதில்களும் அதின் கதவுகளும் கெட்டியாயும், பலமாயு மிருந்தால் சத்துருக்கள் உள்ளே எளிதில் வரமாட்டார்கள். ஆனுல் எந்தப் பக்கத்திலாவது பிளப்போ வெடிப்போ இருக்கும்பட்சத்தில் அதின் வழியாய் சத்துரு எப்படி யாகிலும் உள்ளே வருவான். அதுபோல நமது ஆத்தும மாகிற கோட்டைக்குள்ளே மனித ஜென்ம சத்துரு தான் வரும்படியாக ஓர் வழி உண்டாக்க பல வகையில் பிரயாசப் படும். இந்தச் சத்துரு வரும் வழி எப்பேர்பட்டதென் றும், எங்கே இருக்கலாம் என்றும் நீங்கள் முந்தியே அறிந் தால், அதைப் பலப்படுத்தி காவல் வைத்து மோசம் வாராத படி ஜாக்கிறதையாயிருப்பீர்கள்.

பாவம் வரும் முதல் வழி பஞ்சேந்திரியங்கள். கண் காது, வாய், மூக்கு, கைகால் ஆகிய இவைகள் பாவத்தை மனதுக்குள் கொண்டுவரும் முக்கிய வாசல்களாகும். இந்த வாசல்களை ஜாக்கிரதையாய்ப் பார்த்து எச்சரிக்கை என்ற காவலை வைப்பது புத்தி. இந்த ஐந்து வாசல்களுக்குள்ளே கண், செவி, வாய் முக்கியமானது. கண்களைக் காப்பாற்ற சர்வேசுரன் இமை கொடுத்திருக்கிருர். இதனுல் யாதொன்

றைப் பார்க்க நமக்கு மனமில்லாவிட்டால் நிமையால் கண்களை மூடிக்கொள்ளலாம். உலகத்தில் பார்க்கும்படி யோக்கியதை உள்ளதும் யோக்கியதை அற்றதும், பரிசுத்த மானதும் அசுத்தமுள்ளதும் உண்டு. அவனவனுக்கு எது பார்க்கத் தகுந்தது, எது தகாதது என்று பகுத்தறியும் சக்தியுமிருக்கின்றது. இளம்பிராயத்தில் அநேகரிடம் பாவம் பார்வையால்தான் ஆதிமுதலில் உள்ளே பிரவேசிக்கின்றது. யோப் என்பவரைப்போல் தன் கண்களோடு ஓர் ஒப்பந்தஞ் செய்து பாவம் உண்டாக்கும் எதையும் நான் மனதறிய பார்க்கமாட்டேன் என்று தீர்மானஞ் செய்வது எல்லாருக்கும் உத்தம புத்தி.

கேள்விப் பலனுகிற காதும் பாவத்தின் முக்கிய வாசல். எத்தனை சிறுவர்கள் பாவம் இன்னதென்று அறியாமல் மாசற்றவர்களாய் வீட்டில் வளர்ந்தார்கள். ஆனால் தூஷணமான கெட்டவார்த்தைகளையும் அசுத்த கதைகளையும் கேட்டார்கள். கேட்டதிலிருந்து பாவம் உள்ளே பிரவேசித்தது. அதுமுதல் அவர்கள் நினைவில் வந்த பாவம் வார்த்தையிலும், வார்த்தையிலிருந்து செய்கையிலும் விஷம் ஏறுவது போல் பரம்பினது. ஆனதால் துஷ்டர்கள் கூடி இருக்கும் இடத்துக்கும், சண்டை செய்கிறவர்கள் வாயால் வழிந்து கொட்டும் இடத்துக்கும் போகாமலிருப்பது உத்தமம்.

வாய், பாவம் வரும் மூன்றும் முக்கியமான வழி. மனிதனுடைய நாக்கு அக்கினி என்று வேதவாக்கியஞ் சொல்லுகின்றது. நாவினுல் எவ்வளவு மனஸ்தாபம், எவ்வளவு சண்டை, எவ்வளவு பகை, விரோதம் உண்டாகின்றது! அக்கினிபோல் அது போன இடமெல்லாம் பரம்பிப் பிடித்துக் குடும்பங்களையும் உயிர்களையும் பாழாக்கி இருக்கின்றது. நீ எதைக் காப்பாற்றுவிட்டாலும் உன் நாவையாகிலும் காப்பாற்றக்கடவாய். இல்லாவிடில் உன் சொல்லில் பிசகிப்போய் துன்பப்படுவாய் என்று அர்த்தம் பட,

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

என்று ஓர் வித்வான் பாடியிருக்கிறுன்.

ஐம்புலன்களின் வாசலால் மாத்திரம் அன்று ; ஞாபகம் அல்லது ரூபகசக்தி என்ற உட்புலன் வழியாயும் பாவம் வரலாம். நீ முன் பார்த்ததையும் கேட்டதையும் அறிந்ததையும் உன் ரூபகசக்தி சித்திரப் படத்தைப்போல் உனக்குள் தோன்றச்செய்யும். இது அசுத்தப் படமானால், நீ மனதில் கலங்காமலும், பயப்படாமலும் சுலபமாய் அந்த அசுத்தப் படத்துக்குப் பதில் சுத்தமான நல்ல ரூபம், அல்லது ஓர் நல்ல யோசனை வரும்படி செய். இப்படி வந்த தோற்றத்தை மாற்றுவதில் பதஷ்டமும் கலக்கமும் படபடப்பும் வெகு மோசமானது. உன் முகத்தில் வந்த ஈயை நீ கையால் மெதுவாய் துரத்தினால் அது அப்பாலே போகும். கையை ஓங்கி பலமாய் அதை அடித்தால் அடியின் கொடுமையை நீதான் படுவாய்.

அன்றியும் பாவம் புத்தியின் வழியாயும் வரலாம். மனிதன் புத்தி வெகு அற்பமானாலும், அவன் எல்லாந் தன்னால் அறியக்கூடும் என்று பிரமாதமாய் தன்னை உயர்த்தி மதிக்கிறான். இதின் நிமித்தம் வேதசத்தியங்களையெல்லாம் தன் சொற்ப புத்திக்குள் அடக்கும்படி எண்ணுகிறான். எண்ணியபடி முடியாதேபோனால் அந்தச் சத்தியத்தின் உண்மையின் மட்டில் சந்தேகப்படுகிறான். இதுதான் அவிசுவாசமாகிற பாதாளம். சத்தியவேத விசுவாசத்தைப்பற்றி முந்தி சொன்ன ஞானபோதகம் இன்னம் உங்கள் நினைவிலிருக்கலாம். திரும்பவும் அதை வாசிப்பது பிரயோசனமாயிருக்கும். ஆனதால் விரிவாய் இங்கே அதைப்பற்றிப் பேச அவசியமில்லை.

பாவம் வெளியே இருந்து உனக்குள் வரவேண்டுமானால், நாம் இங்கே காட்டிய பல வாசல்கள் வழியாய்த்தான் வரலாம். இந்த வாசல்களை நீ சர்வஜாக்கிரதையுடன் காப்பாற்றினால் உன் சத்துருக்கள் எவ்வளவு பலங்கொண்டு உன்னை எதிர்த்துவந்தாலும் உள்ளே உன் மனச்சம்மதம் இல்லாமல் வர அவர்களால் சாத்தியப்படாது. இனி அடுத்த பாகத்தில் பாவ தந்திர சோதனைகளோடு யுத்தஞ் செய்து ஜெயங்கொள்ள என்ன செய்வது அவசியம் என்று காண்பிப்போம்.

மூன்றும் பாகம்

பாவ தந்திர சோதனைகள் எந்த வழியால் மனதாகிற கோட்டைக்குள் வரக்கூடுமென்று காண்பித்தபின்பு, பாவம் உள்ளே வராதபடி தடுக்க நாம் செய்யவேண்டிய முதல் காரியம், நமது பஞ்சேந்திரியங்களையும், ரூபகசக்தி, புத்தியையும், தங்கள் இஷ்டம்போல் எந்த விஷயத்திலும் போக விடாமல், காப்பாற்றுவது முக்கியம். அதன்பின் இவைகளைத் தூண்டி, எழுப்பிக் கெடுப்பதற்கு ஏதுவாயிருக்கும் பாவசமயங்களையும் தூர நீக்கவேண்டும். பல விஷயங்களில் ஆபத்து எந்த விதமாயும் எந்த வழியாயும் வருமென்று முன்னதாய்க் கிரகித்து அறிவது வெகு பிரயோசனமாகும். ஆபத்து வந்தபின் காப்பதிலும் அது வருங்கால் காப்பது அதிக யுக்தி. வருங்கால் காப்பதிலும், ஆபத்து வருமுன் காப்பது அதிலும் அதிக அநுகூலமான யுக்தி என்று ஓர் சுலோகமிருக்கின்றது.

பாவ தந்திர சோதனைகள், நீ எவ்வளவு ஜாக்கிரதையுடனிருந்தபோதிலும், சிலசமயங்களில் உன்னை அறியாமலே வரும். அர்ச். அந்தோணியார் வனத்தில் தனிவாசமாயிருந்து தபமும் ஜெபமும் செய்துவரும்போதும், பல வகையான தந்திர சோதனைகள் அவருக்கு வந்ததாக அவருடைய சரித்திரத்தில் சொல்லியிருக்கின்றது. நமது தேவ இரக்ஷகர் உலகத்தில் இருந்த காலத்தில் அவரையும் தந்திரமாய்ச் சோதிக்கப் பசாசு துணிந்து வந்ததென்று சுவிசேஷத்தில் வாசித்திருக்கிறோம். மனிதன் ஜீவியம் யுத்தகளம் என்ற வேதவாக்கியத்தை நாம் மறந்துபோகக்கூடாது. அப்படி தந்திர சோதனை வரும்போது சர்வேசுரன்பேரில் முழுநம்பிக்கை வைத்து ஜெபத்தால் அவர் உதவியைக் கேட்பது நமது கடமை. சேசுநாதர்சுவாமி படிப்பித்த ஜெபத்தில், எங்களைச் சோதனையில் பிரவேசிப்பியாதேயும், என்று நாம் பசாசின் தந்திர மாய்கைகளுக்குள் சிக்கி அகப்படாதபடி மோக்ஷபிதாவிடம் பிரார்த்திக்கக் கற்பிக்கிறார்.

பாவ தந்திர சோதனைவேளையில் தைரியமிழக்காமல், நம்பிக்கையுடனும் சந்தோஷகரமான மனதோடும் யுத்தஞ் செய்வது ஜெயம்பெற முக்கிய சாதனம். சர்வேசுரனுக்காக நாம் யுத்தம் செய்கிறோம் என்றும், சர்வேசுரன் ஊழியத்தில் பிரமாணிக்கம் தவறாதிருக்கவும், சேசுநாதர்சுவாமியின்கிட்ட, அவர் சமீபத்திலிருக்கவும் நாம் போராடுகிறோம் என்றும் நினைத்தால் யாருக்குத்தான் மனவுறுதி வரமாட்டாது? ஆண்டவர் என் உயிரின் இரக்ஷகர்: யாருக்கு நான் அஞ்சுவேன் என்று தாவீது இராஜாவோடு துணிந்து சொல்லலாம். பாவசோதனையின் யுத்தம் முடிந்தபின்பு நீ உன் நடத்தையைப்பற்றி யோசித்துப் பார்க்கையில் உன் தப்பிதத்தாலோ, எச்சரிக்கைக் குறைவாலோ நீ பாவத்துக்குச் சம்மதித்ததாக உன் மனது சொன்னால், உடனே நல்ல பிள்ளையைப்போல் மனஸ்தாபப்பட்டு சேசுநாதரிடத்தில் பொறுத்தல் கேள். கூடிய சீக்கிரத்தில் பாவசங்கீர்த்தனஞ் செய்து சர்வேசுரனோடு சமாதானமாய்ப்போ. பாவத்தோடு பாவத்தைச் சேர்த்து, பின் எல்லாவற்றையுங் கூட்டி கடைசியில் ஒரு பாவசங்கீர்த்தனஞ் செய்வேனென்று மூடப் புத்தியாய் நடவாதே.

ஆனால் சோதனைவேளையில் தேவ உதவியால் நீ பாவத்தைச் செய்யாமல் அதை எதிர்த்து 'ஜெயித்தாய்' என்று உன் மனது சாட்சியாயிருந்து உனக்குச் சொன்னால், சர்வேசுரன் உனக்குச் செய்த உதவிக்காக அவருக்கு நன்றியறிதலான ஸ்தோத்திரம் சொல். இனிமேலும் அவர் உனக்கு உதவிசெய்து உன்னைக் காப்பாற்றுவார். ஆனால் நீயே உன் சுயபலத்தால் ஜெயங்கொண்டவன்போல உன் சமர்த்தைப்பற்றி பெருமை பாராட்டாதே.

கடைசியில் பசாசோடு செய்யும் யுத்தத்தில் தோல்வி காணாதபடி கையில் எப்போதும் வைத்திருக்கத்தக்க வெகு அநுகூலமான ஓர் ஆயுதத்தை அர்ச். இஞ்ஞாசியார் ஞான முயற்சிகள் செய்கிறவர்களுக்குக் காண்பிக்கிறார். அது **தனி ஆத்தும சோதனை** என்று சொல்லப்படும். ஒவ்வொருவனுக்கும் தன் ஆத்துமமாகிற கோட்டை மதிலில் பலக்குறையுள்ளதும் பிளப்புள்ளதுமான பாகம் எது

வென்று தெரியவேண்டும். எந்தத் துர்க்குணம், எந்தப் பாவநாட்டம், உன் மனதில் பலமாயிருக்கிறதென்று தியான நாட்களில் உன் ஆத்துமத்தைச் சோதிப்பதால் நீ அறிவாய். அறிந்த அந்த பிரதான துர்க்குணத்தின் மட்டில் நீ கண்ணுண்டாயிருந்து அதை அடக்கி ஒடுக்கி தேவ உதவியால் கடைசியில் அதை அழிப்பதுதான் தனி ஆத்தும சோதனையின் பிரதான நோக்கம். இது கிரமமாயும் அநுகூலமாயும் நடக்கும்படி அர்ச். இஞ்ஞாசியார் சொல்லும் ஒழுங்குகளைக் கேள் :

முதலாவது: காலமே எழுந்தவுடனே, நீ யுத்தம் செய்து அடக்கவேண்டிய உன் விசேஷ துர்க்குணம் இது வென்று நன்றாய்க் குறித்துப் பார்த்து உன் மனதைத் திடம்பண்ணி சர்வேசுரனுடைய உதவியைக் கேள்.

இரண்டாவது: மத்தியானம் அல்லது இராத்திரியில் அந்த நாளில் எத்தனைவிசை நீ காலமே குறித்த துர்க்குணத்தில் விழுந்தாய் என்று உன்னிடத்தில் விசாரணை செய். விழுந்தது எத்தனைவிசை என்று ஓர் சிறு புஸ்தகத்தில் கணக்காய் குறித்துக்கொள்.

மூன்றவது: நீ தப்பிப் பிசகி விழுந்ததற்காக துக்கப் பட்டு சர்வேசுரனிடம் பொறுத்தல் கேள். அடுத்த நாளில் அதிகக் கவனமாயும் ஜாக்கிரதையாயும் இருப்பாய் என்று பிரதிக்கினை செய்.

நான்காவது: ஒவ்வொரு நாளிலும் நீ குறித்த கணக்கை சோதித்து ஒப்பிட்டுப் பார். தொகை குறைகிறதோ அதிகப்படுகிறதோ? நீ ஸ்திரமான மனதோடு கவனித்து ஜாக்கிரதையாயிருந்தால் நாளடவில் தொகையும் குறைந்துகொண்டே வரும் என்பதற்குச் சந்தேகமில்லை.

இப்படித் தனி ஆத்தும சோதனையை நாள்தோறும் செய்வதால் என்றும் நீ விழிப்பாயிருப்பாய். பாவத்தில் எளிதில் விழமாட்டாய். இவ்வித ஆத்தும சோதனை விழிப்பாயிருந்து ஆயுதபாணியாய் காவல் காக்கும் போர்ச்சேவகனைப்போல் உன் ஆத்துமத்தைப் பேயின் சோதனை தந்திரங்களின் ஆபத்திலிருந்து காப்பாற்றும்.

கடைசியாய் பசாசோடு நீ யுத்தம் தொடுக்கும் வேளை யில், பசாசின் தலையைத் தன் காலில் நசுக்கி மிதித்த தேவ தாயை நினைத்து அந்தத் தாயின் உதவியைக் கேள். என் ஆண்டவளே! என் தாயாரே என்ற அற்புத பலனுள்ள ஜெபத்தைச் சொல்ல மறந்துபோகாதே. தேவதாய் தன் பிள்ளைகள் கூப்பிடுஞ் சப்தங் கேட்டவுடனே, தாமதமின்றி அவர்களுக்கு உதவிசெய்ய வருவாள் என்பது உலகமெல் லாம் அறிந்த சத்தியம். தாயே! உமது உதவி சகாயத் தைத் தேடினவர்களுக்குள்ளே ஒருவனாகிலும் உம்மால் கைவிடப்பட்டதாக நான் ஒருபோதும் உலகத்தில் கேள் விப்பட்டதே இல்லை என்று நீ தானே உன் தாயைப் பார்த்து எத்தனையோவிசை சொல்லி இருக்கிறாய்.

பசாசாலும் நமது துர்ச்சுபாவத்தாலும் வரக்கூடு மான பாவ தந்திர சோதனைகள் இன்னதென்று அறிந்து, அவைகளில் அகப்பட்டு மோசம்போகாதபடி, நாம் இங்கே சொல்லிக்காட்டிய புத்திகளை எப்போதும் உங்கள் ஞாபகத் தில் வைத்து ஜாக்கிரதையாய் நடந்தால் பாவஞ்செய்யாமல் சர்வேசுரனுக்குப் பிரமாணிக்கமாய் ஊழியஞ் செய்வீர்கள். கடைசியில் சர்வேசுரனுக்காகவும், உங்களுடைய ஆத்தும இரக்ஷணியத்துக்காகவும் நீங்கள் செய்யும் யுத்தம் அநுகூல மாய் முடியும். நீதிபரரான சேசுநாதர்சுவாமி உங்களைப் பார்த்து, பிரமாணிக்கந் தவறாத நல்ல ஊழியனே, நன்றாய்ச் செய்தாய். ஜெயம்! ஜெயம்! உன் ஆண்டவர் உனக்குத் தயார்செய்திருக்கும் பாக்கியானந்த சந்தோஷத்தை அநுப விக்க உள்ளே வா, என்று மோக்ஷபாக்கியத்துக்கு உங்களை அழைப்பார்.

தியானப்

பிரசங்கங்கள்

நான்காம் வாரம்

சேசுநாதர்சுவாமி உயிர்த்த வர்த்தமானத்தை சார்ந்த சத்தியங்களை யோசித்து அவருடைய ஊழியத்துக்கு நம்மை முழுதும் நேர்ந்து கொடுக்க ஏதுவான தியானங்கள்

நமக்கு இப்போதிருக்கும் துன்பங்கள் அற்பமுஞ் சொற்ப காலம் உள்ளதுமானவை. ஆனுல் அவைகள் நித்தியமும் அபரி மிதமுமான மகிமையை நமக்குப் பெறுவிக்கும்.

(II கொரிந்தியர் 4 : 17.)

கிறீஸ்துநாதரோடு நீங்கள் உயிர்த்தால், மேல் உலகிலிருப்ப வைகளைத் தேடுங்கள். மேல் உலகிலிருப்பவைகளினிடம் சுவை கொண்டு நாடுங்கள். (கொலோசியர் 3 : 1, 2.)

ஏனெனில் என் இரக்ஷகர் ஜீவிக்கிறரென்று எனக்குத் தெரியும். ஈறுந்தநாளில் நான் மண்ணுக்குள்ளிருந்து உயிர்ப்பேன். இந்த நம்பிக்கை என் மனதின் மத்தியில் ஸ்திரமாய் தங்கி இருக்கின்றது. (ஜோப் 19 : 25, 27.)

என் கற்பனைகளை ஏற்றுக்கொண்டு அவைகளை அநுசரிப்பவன் எவனே அவனே என்னை சிநேகிக்கிறவன்.

(அர்ச். அருளப்பர் 14 : 21.)

சிநேகத்தின் பரிக்ஷார்த்தம் செய்கையின் அநுஷ்டானம். சிநேகத்தின் அளவுபோல் செய்கையும் விரிந்து பெருகும்.

(அர்ச். கிரகோரி.)

நான்காம் வாரம்

சேசுநாதர்சுவாமி உயிர்த்த வர்த்தமானத்தைச் சார்ந்த சத்தியங்களை யோசித்து அவருடைய ஊழியத்துக்கு நம்மை முழுதும் நேர்ந்து கொடுக்க ஏதுவான தியானங்கள்

விவரங்கள்

1. *நமது அன்புள்ள இரக்ஷகர் உயிர்த்தபின் அவருடைய பரிசுத்த ஆத்துமம் சந்தோஷத்தால் பூரணமாய் நிறைந்திருந்தது. இந்த வாரத்தின் ஞானமுயற்சிகள் நமது மனதிலும் சேசுநாதர் நிமித்தம் சந்தோஷம் உண்டாகும்படி செய்ய வெகு அநுகூலமானவைகள்.*

2. *சேசுநாதரோடு அவர் நிமித்தம் நாமும் சந்தோஷப்படுவதால் அவருக்கும் நமக்கும் ஒற்றுணர்ச்சியும் ஒரே மனமும் உண்டாகும். இதிலே இருந்து தேவசிநேகம் நமது இருதயத்தில் உற்பத்தியாகும்.*

3. *நமது மனதில் ஞான சந்தோஷத்தைப் பிறப்பிக்க ஏதுவான சத்தியங்களைப்பற்றி நாம் அடிக்கடி யோசிப்பது வெகு பிரயோசனமுள்ளது. எப்படியெனில்: சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்வதால் இந்த உலகத்திலே முதலாய் மனதுக்குத் திருப்தியான பாக்கியமுண்டாகுமென்று நாமே நமது சுய அநுபவ வாயிலாய் அறிந்தால் அவருககு அதிக பிரமாணிக்கத்துடன் ஊழியஞ் செய்ய நமக்கு ஆசையும் மனதும் வரும்.*

4. *நமது தேவ இரக்ஷகர் உயிர்த்து தரிசனமான வர்த்தமானங்களில் கவனிக்கவேண்டிய இரண்டு விஷயங்களிருக்கின்றன. முதலாவது: அவர் பாடுபடும்போது மறைந்துகொண்டதுபோல் தோன்றிய அவருடைய தெய்வீகம் இப்பொழுது அவர் உயிர்த்த உன்னத புதுமையாலும் மற்றும் ஆச்சரியமான சம்பவங்களாலும் பரிஷ்காரமாய் விளங்குகின்றது. இரண்டாவது: நமது ஆண்டவர் உயிர்த்தபின்பு எல்லாருக்கும் சமாதானமும் சந்தோஷமுங் கொடுக்க ஆவலோடு பலமுறை தரிசனங்கொடுத்தார்.*

எட்டாம் நாள்—முதல் தியானம்

சேசுநாதர்சுவாமி உயிர்த்த வர்த்தமானம்

முதல் பாகம்

வெள்ளிக்கிழமை நமது தேவ இரக்ஷகர் சிலுவையில் மரித்தவுடனே அவருடைய பரிசுத்த ஆத்துமம் பாதாள லோகத்தில் இறங்கி அங்கே உலக இரக்ஷகரின் வருகைக்கு எதிர்பார்த்திருந்த புண்ணியாத்துமங்களுக்கு மோக்ஷபாக்கியங் கொடுக்கச் சென்றது. அவர்கள் சேசுநாதரைப் பார்த்தபோது எவ்வளவு ஆனந்த சந்தோஷம் பெற்றிருக்க வேண்டும்! பிதாப்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும் தூரதிர்ஷ்டிவரத்தால் பல நூறு வருஷங்களுக்குப்பின் வரப் போகிற உலக இரக்ஷகர் அப்போது தங்கள் கண்முன் நிற்பதைப் பார்த்தார்கள். சேசுநாதர் ஆறுதல் தரும் வார்த்தைகளால் அவர்களைச் சந்தோஷப்படுத்தினர்.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கல்லறை திறவாமலே நமது இரக்ஷகர் கல்லறையிலிருந்து ஆத்தும சரீரத்தோடு ஜெயசீலராய் வெற்றிமுடி சூடி, மகிமைப் பிரதாபத்தோடு உயிர்த்தார். சேசுநாதர் இறந்த நாளில் துக்கத்தால் மங்கி மறைந்துபோன சூரியன் அன்று அதிகாலமே அற்புதப் பிரகாச ஒளியோடு உதயமானது.

நீங்களும், சகோதரரே! உயிர்த்த உங்கள் அன்புள்ள இரக்ஷகர்முன் சாஷ்டாங்கமாய் விழுந்து அவரை ஆராதியுங்கள். அவருக்கு வந்த மகிமையின் நிமித்தம் சந்தோஷப்படுங்கள். உயிர்த்த நமது ஆண்டவர் இனிமேல் சாக மாட்டார் என்பதால் அவரை வாழ்த்திப் புகழுங்கள்.

இரண்டாம் பாகம்

காலமே உதிக்கும் சூரியன் தன்னுடைய இளங்கதிர்களைப் பூமியின் நாலு திசையிலும் அனுப்பி, இருளில் அமிழ்ந்தி இருந்த பல ஜீவகோடிகளுக்குப் பிரகாசமும்,

அலங்காரமும் சந்தோஷமுங் கொடுக்கின்றது. அப்படியே நமது ஆண்டவர் உயிர்த்தவுடனே, தமது மரணகாலத்தில் தம்மைப்பற்றித் துக்கப்பட்டு மனஞ்சோம்பியிருந்த சீஷர்கள், புண்ணிய ஸ்திரீகள் முதலிய பலபேர்களுக்குத் தரிசனமாகி எல்லோருக்கும் ஆறுதலும் சந்தோஷமும் பூரணமாய்க் கொடுத்தார்.

ஆனால் இவர்களிடம் போகுமுன்னே நமது தேவ இரக்ஷகர் தம்மைப் பெற்று வளர்த்த தாயிடம் போய் அவளுக்கு ஆறுதலும் சந்தோஷமும் கொடுப்பது, மகன்மேல் பொறுத்த முதல் கடமை. ஆதலால், அப்படியே அவருஞ் செய்தார் என்பதைப்பற்றி, மனிதருக்கு இயல்பாயிருக்கவேண்டிய சுபாவ அறிவுள்ள எவனுஞ் சந்தேகப்படமாட்டான்.

உயிர்த்த தேவ மகன் தமது தாயாரிருந்த வீட்டுக்கு நேரே போனார். அவர்கூட நீதிமான்களின் ஆத்துமங்கள் எல்லாம் வந்தன. மகனும் தாயும் சந்தித்தார்கள். தேவ கன்னி தன் மகன் மூன்று நாளைக்குமுன் இருந்த பரிதாப நிலைமைக்கும், இப்போது இருக்கும் நிலைமைக்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்த்தாள். மகன் தாயை அணைத்து மங்களஞ் சொல்ல தாயும் மகனை அன்பாய் அணைத்து வாழ்த்தி ஸ்துதித்தாள். சூழ நின்ற பலநூறு புண்ணிய ஆத்துமங்கள் தங்களை இரக்ஷித்தவரின் தாயாகும் பாக்கியம்பெற்ற தேவ கன்னியைப் புகழ்ந்து மங்களஞ் சொல்லி ஸ்துத்தியம் பாடினார்கள். ஓ! பரலோக இராக்கினியே! அகமகிழ்ந்து சந்தோஷங்கொள்ளும். அல்லேலூயா! ஏன் என்றால், உமது உதரத்தில் நீர் தாங்கப் பேறுபெற்ற தேவ மகன் தாம் சொன்னதுபோல் இதோ உயிர்த்தார். அல்லேலூயா! ஓ! கன்னிமரியே! அகமகிழ்ந்து பூரித்து ஆனந்தம் கொள்வீராக. ஏனெனில் ஆண்டவர் மெய்யாகவே உயிர்த்தார். அல்லேலூயா! ஆனந்தம், ஸ்துத்தியம், நித்திய மங்களம் உண்டாவதாக என்று வாழ்த்தி இருப்பார்கள். சேசுநாதர் தமது தாயாரைப் பார்த்தபின்பு, அப்போஸ்தலர்கள், சீஷர்கள், புண்ணிய ஸ்திரீகள் முதலிய

பலபேர்களுக்குத் தரிசனங் கொடுத்தார். சில சமயங்களில் தனியே ஒருவருக்கும், சில சமயங்களில் ஓரிடத்தில் கூடியிருந்த பலபேருக்கும் தம்மைக் காண்பித்தார். அவர் தரிசனங் கொடுக்கும்போதெல்லாம், உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக என்ற மங்கள மொழிகளைச் சொல்வார். தம்மை நினைத்து அழுதுகொண்டிருந்த மரியமக்தலேன் அம்மாளுக்குத் தமது தரிசனங் கொடுத்து அவளை அன்பாய்த் தேற்றினார். ஆண்டவர் உயிர்த்ததை இன்னும் விசுவசியாமல், பிடிவாதமாய்ப் பேசின தோமையாருக்குத் தயவாய்த் தம்மைக் காண்பித்து அவரை விசுவாசத்தில் உறுதிப்படுத்தினார். தமது அப்போஸ்தலர்களுக்குப் பாவங்களை மன்னிக்கும் ஞான வல்லமையைக் கொடுத்தார். அர்ச். இராயப்பரைத் தமது தேவ மந்தையாகிற திருச்சபையின் தலைவராய் நியமித்து அதைப் பராமரித்து ஆளும் அதிகாரத்தை அவருக்குத் தந்தார்.

சேசுநாதர்சுவாமி உயிர்த்தபின்பு நாற்பதுநாள் உலகத்திலிருந்தபோது பல சமயங்களில் தமது பிரிய தாயாரைப் பார்க்க வந்திருப்பார். அப்படி வரும்போது, தாம் ஸ்தாபித்த சபையின் பாலப் பருவத்தில் அதை அன்பாய் அணைத்துத் தேற்றி ஆதரிக்கும்படியாய் அவள் இன்னுஞ் சில காலம் உலகத்தில் இருப்பது அவசியமென்றும், அந்தச் சபையோடு தாம் உலகமுடியும் நாள்மட்டும் இருப்பது போல், தம்முடைய தாயுங்கூட இருந்து மனித ஜென்மத்துக்கு பொதுத் தாயாய், நன்மை வரங்களைத் தாராளமாய் எல்லா மனிதருக்குங் கொடுத்து, எல்லாரையுந் தாய்க்கு இயல்பான கனிந்த பட்சத்தோடு சிநேகித்துக் காப்பாற்றுவது அவளைப் பொறுத்த கடமை என்றும் பலமுறை சொல்லியிருப்பார். தேவமரியும் தமக்கு மகன் குறித்த இந்த இரண்டாம் தாயின் பெரிய பாரத்தை அமைந்த மனதோடு ஏற்று: மகனே, உமது வாக்குப்போல் ஆகக்கடவது என்று சொல்லியிருப்பாள்.

சகோதரரே! தேவதாய் தன் மகன் உயிர்த்ததால் ஆனந்த சந்தோஷங்கொண்டதுபோல், நீங்களும் சந்தோஷ

மகிழ்ச்சியோடு பாக்கியவதியான தேவ ஆண்டவளை வாழ்த்தி ஸ்துதித்து பரலோகத்துக்கு இராக்கினியே! மனங் களிகூரும், என்ற ஜெபத்தைச் சொல்லுங்கள்.

மூன்றும் பாகம்

சேசுநாதர்சுவாமி உயிர்த்த சத்தியம் இரு வகையில் நமக்குப் பிரயோசனமாயிருக்கின்றது. முதலாவது இந்தச் சத்தியம் நமது விசுவாசத்துக்கு ஆதாரமாயிருந்து அதை ஸ்திரப்படுத்தும். எப்படியென்றால்: உலக இரக்ஷகராய் வந்தவர், தாம் சர்வேசுரனென்று ஜனங்களுக்கு தரிசனமாய் நிரூபிக்கும்படி பலவகையான அற்புத நவங்களைச் செய்தாலும், தாம் மரித்தபின்பு கல்லறையிலிருந்து உயிர்ப்பதையே பிரதான திர்ஷ்டாந்தமாகக் குறித்து முன் அறிவித்திருந்தார். அவருடைய விரோதிகளான யூதரும் இதைததான் முக்கியமாய்க் கவனித்து சேசுநாதர்சுவாமி மரித்தபின்பு உயிர்க்காதபடிக்கு தங்களால் கூடிய பந்தோபஸ்தெல்லாம் செய்துபார்த்தார்கள். இப்படிச் செய்தும் அவர் சொன்னதுபோல் மூன்றும் நாள் உயிர்த்தாரென்ற சமாச்சாரம் பட்டணமெங்கும் பரம்பினதால் அதை அடக்கும்படி காவல்காத்த சேவகர்களுக்குக் கைலஞ்சம் கொடுத்து, தாங்கள் தூங்கும் வேளையில் அவருடைய சீஷர்கள் வந்து அவருடைய பிரேதத்தைத் திருடிக் கொண்டுபோனார்களென்று சொல்ல படித்துக்கொடுத்தார்கள்.

தூங்கினவன் சாட்சியாய் வந்து, தான் தூங்கும்போது ஒருவன் திருடினன் என்று சொல்வது முதிர்ந்த மூடத்தனம் என்பது அவர்களுக்கு அப்போது தோன்றவில்லை. சேசுநாதர்சுவாமி உயிர்த்தது எவராலும் மறுக்கக்கூடாத சத்தியம். அப்படி தாமே தமக்கு உயிர் கொடுத்து உயிர்க்கக்கூடுமானவர் சர்வேசுரனுயிருக்கவேண்டும். ஆனதால் சேசுநாதர் உயிர்த்த சத்தியம் அவர் மெய்யான சர்வேசுரனென்று நிஜப்படுத்துவதால் அது நமது விசுவாசத்தின் மூலாதாரமான சத்தியமாகும்.

அன்றியும் இதுவே நமது நம்பிக்கைக்கு உறுதியும் ஊக்கமுங் கொடுக்கும் சத்தியம். சேசுநாதர்சுவாமி மனிதர் கோத்திரத்தில் பிறந்ததால் நமக்குச் சகோதராகிறார். இதுகாரணத்தால் தமது சீஷர்களைப் பலமுறை சகோதரர்களென்று கூப்பிட்டிருக்கிறார். நமது மூத்த சகோதரர் எப்படி ஆத்தும சரீரத்தோடு உயிர்த்தாரோ அப்படியே நாமும் நம்முடைய காலம் வரும்போது ஆத்தும சரீரத்தோடு உயிர்ப்போம் என்பது சத்தியம். இதுதான் மாம்ஸ உத்தானம் என்று சொல்லப்படுவது. உயிர்த்த நமது இரக்ஷகர் இனி ஒருபோதுஞ் சாகமாட்டார். அப்படியே நாமும் உலகத்தின் கடைசி நாளில், ஆத்தும சரீரத்தோடு உயிர்த்தபிற்பாடு என்றுஞ் சாகாமல் நித்தியகாலம் மோக்ஷத்தில் சேசுநாதரோடு ஜீவிப்போம்.

சகோதரரே! சேசுநாதர் மெய்யான சர்வேசுரனும் மனுஷனும் ஒன்றானவர் என்று உறுதியாய் விசுவசித்து, அவர் உங்களுக்குக் காட்டின தர்ம நடத்தை உங்கள் நடத்தையில் தோன்றக் காண்பித்து நடந்தால், நீங்களும் ஒரு நாள் ஆத்தும சரீரத்தோடு உயிர்த்து மோக்ஷத்துக்குப் போவீர்கள். ஆனதால் நீங்கள் தியான நாட்களில் செய்த பிரதிக்கினைகளை எல்லாம் ஸ்திரப்படுத்துங்கள். உங்கள் முன் வழிகாட்டி நடந்துபோகும் மோக்ஷ இராஜாவின் சமீபத்தில் கிட்ட நெருங்கியிருந்து, அவர் செய்வதுபோல் நானுஞ் செய்வேன் என்று இரண்டாம் வாரத் துவக்கத்தில் அவருக்கு உங்கள் மனப்பூர்வமாய்ச் சொன்ன உறுதி மொழியை இன்றைக்குப் புதுப்பியுங்கள். அவருக்காகத் தளராத மனதோடு யுத்தம் செய்தால் அவரோடுகூட ஜெயங்கொண்டு வெற்றிமுடி சூடி மோக்ஷத்துக்குப் போவீர்கள்.

எட்டாம் நாள்—இரண்டாம் தியானம்

சேசுநாதர்சுவாமி மோக்ஷத்துக்கு எழுந்தருளிய வர்த்தமானம்

நம்முடைய அன்புள்ள இரக்ஷகர் உயிர்த்தபின்பு உலகத்தில் இன்னும் நாற்பது நாள் இருந்தார். திருச்சபையாகிற தமது சிறந்த வீட்டை அசையாத பாறைக்கல்லின் மேல் கட்டி ஸ்திரமாய் ஸ்தாபித்து, அதற்கு உயிரும் பலமும், அழகும் அலங்காரமும், சிறப்பும் செல்வமும விர்த்தியுங் கொடுக்குந் தேவதிரவிய அநுமானங்களையும், இரக்ஷணிய வழிகளையும் ஏற்படுத்தி, செய்யவேண்டிய யாவுஞ் செய்து முடித்தபின்பு, தமது பிதாவின் சமுகத்துக்குப் போகிற காலம் சமீபத்தில் வந்தது.

மனுஷ சுபாவத்தில் தமக்கு உரித்தான மோக்ஷ மகிமையைச் சுதந்தரிக்கவும், பாவத்தால் அடைபட்டிருந்த மோக்ஷ வாசலைத் திறந்து, நமக்குச் சொந்தமான மோக்ஷ பாக்கியத்தை நமக்குக் காண்பித்து, நமது விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகத்தை உறுதிப்படுத்தவும், இஸ்பிரீத்துசாந்து நம்மை அர்ச்சித்து ஸ்திரப்படுத்தும்படியாய் அவரை அனுப்பவும், ஆகிய இந்தக் காரணங்களின் நிமித்தம் சேசுநாதர் தமது பிதாவின் சமுகத்துக்குப் போவது அவசியமாயிருந்தது.

நமது ஆண்டவர் தமது சீஷர்களை ஜெருசலேம் பட்டணத்தில் சேர்த்து அவர்களுடன் கடைசிவிசை போஜனஞ் செய்து தமது கடைசியான புத்திகளை அவர்களுக்குச் சொன்னபின்பு, தம்முடைய பாடுகள், துவக்கின ஒலிவ் மரங்களின் மலைக்கு அவர்கள் அனைவரையுங் கூட்டிப் போனார். மலையின் உச்சியில் சேர்ந்தபின் சகலரையும் அன்பாய் ஆசீர்வதித்தார். அந்த ஆசிர்வாதத்தின் பலன் ஞானமுயற்சிகள் செய்யும்படி இங்கே கூடியிருக்கும் ஒவ்வொருவருக்கும் வருகின்றது. அதன்பின்பு நமது இரக்ஷகர் தமது தெய்வீக பலத்தால் மெதுவாய் உயர எழுந்தார்.

தேவ மகத்துவம் அவருடைய முகத்தில் ஜொலித்தது. அற்புத வல்லமை அவரைச் சூழ்ந்திருந்தது. மேலே உயர எழும்பவே பிரகாசமுள்ள ஓர் மேகம் தோன்றினது. சீஷர்கள் கண் நிமையாமல் பார்த்து நின்றார்கள். தேவ காட்சியை அவர்கள் பார்த்ததால் சந்தோஷப் பூரிப்புடன் தங்கள் ஆண்டவரை ஆராதித்தார்கள். சமமனசுகள் அங்கே தரிசனமாகி: ஏன் வானத்தைப் பாரத்தவண்ணமாய் நிற்கிறீர்கள்? இப்போது மோக்ஷத்துக்குப் போன சேசுநாதர் இனி வரும் ஓர்நாளில் மனுஷருக்குத் தீர்ப்பு சொல்லும்படியாக வருவார் என்ற பின்பு, அவர்கள் போய் தங்கள் வேலைகளைக் கவனிக்கும்படி அவர்களை அனுப்பினார்கள். அப்போஸ்தலர்களும் இஸ்பிரீத்துசாந்துவின் அற்புத வரங்களைப் பெற்றபின்பு, பூமியின் நாலுதிசையிலும போய் சகல ஜனங்களுக்கும் சேசுநாதருடைய வேதத்தைப் பிரசங்கித்தார்கள்.

சேசுநாதர்சுவாமி மோக்ஷத்துக்குச் சென்றதால், சீஷர்கள் ஆனந்த மகிழ்ச்சி கொண்டதுபோல் நாமும் இன்னும் இந்தப் பரதேச பூமியிலிருந்தாலும் நமது நித்திய வீடாகிற மோக்ஷத்தை அண்ணார்ந்து பார்த்து சந்தோஷங் கொண்டு மகிழ்வோமாக. ஏனெனில் மோக்ஷம் நமக்குச் சொந்தம். நமது சகோதரர் மோக்ஷத்தை நமது பேரால் சொந்தமாய்ச் சுதந்தரிக்கிறார். நமக்குப் பாத்தியமுள்ள இந்தச் சுதந்தரம் நம்மைச் சேராதபடி நாமே நமக்கு விரோதிகளாய் ஏற்படாவிட்டால் அவர் தடுக்கவேமாட்டார். ஆகையால் மோக்ஷத்தை இன்று பெருமை உரிமையோடு நிமிர்ந்து பாருங்கள். அதோ நமது சொந்தப் பூமி, அதோ நமது சொந்த வீடு, அதோ நாம் நித்திய காலம் வாசம்செய்யவேண்டிய நமது வாசஸ்தலம்.

ஞான முயற்சிகளை செய்து முடித்து நீங்கள் உங்கள் வேலைகளைக் கவனிக்க வீட்டுக்குப் போகுமுன் இன்னும் சற்று நேரமிருந்து உங்களுக்குச் சுதந்தரமான மோக்ஷ பாக்கியத்தைப்பற்றி நாம் சொல்வதைக் கவனமாய்க் கேளுங்கள்.

முதல் பாகம்

மோக்ஷம் என்றால் என்ன? சர்வேசுரன் தமக்குப் பிரமாணிக்கத்துடன் ஊழியஞ் செய்கிறவர்களுக்காகத் தயார் செய்திருக்கும் தேவ இராச்சியம், சிறந்த மாளிகை. மோக்ஷம் சர்வேசுரனுடைய பிள்ளைகளின் வாசஸ்தலம். நாம் பார்க்கும் பரதேசமாகிற இந்தப் பூமியே இவ்வளவு அலங்காரமும், செல்வமும், சிறப்பும் நிறைந்ததானால், அனந்த ஞானமும் அளவில்லா வல்லமையும் உள்ள சர்வேசுரன் தமக்காகவும் தமது செல்வப் பிள்ளைகளுக்காகவுஞ் சிருஷ்டித்த மோக்ஷம் எவ்வளவோ இலட்சங்கோடி பங்கு அதிகமாய் உயர்ந்து மேன்மையும் இலக்ஷணமும், சிறப்பும் செல்வமும் பூரணமாய் அமையப் பெற்றிருக்கவேண்டும்!

அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பர் பரவச நிலையில் வானத்தின் மூன்றாம் மண்டலமட்டும் போய்த் திரும்பி உலகத்துக்கு வந்தபின் சொல்வதைக் கேளுங்கள்: சர்வேசுரன் தம்மைச் சிநேகிக்கிறவர்களுக்குத் தயார் செய்திருக்கும் மோக்ஷானந்த பாக்கியம் இத்தன்மைத்தென்று மனிதனுடைய கண் பார்த்ததுமில்லை, செவி கேட்டதுமில்லை, அவன் இருதயத்தில் தோன்றினதுமில்லை. அவ்வளவு அதி உந்நத ஆனந்த பாக்கியம் தயவுள்ள சர்வேசுரன் உங்களுக்காக தயார்செய்து வைத்துக் காத்திருக்கிறார்.

மகா வேதசாஸ்திரியான அர்ச். அகுஸ்தீன் என்பவர் மோக்ஷபாக்கியம் இன்னதென்று துலக்கமாய் விவரித்துக் காட்ட ஓர் புஸ்தகம் எழுதத் துவக்கினார். அப்போது அவர் இருந்த அறைக்குள் கண்களைப் பறிக்கும்படியான பிரகாசம் மின்னலைப்போல் பளிச்சென்று தோன்ற, மோக்ஷ மதுரம் நிறைந்த சுகந்த வாசனை எங்கும் கமகமவென்று வீசினது. சாஸ்திரியார் பயந்து இது என்னமோ ஏதோவென்று இங்கும் அங்கும் பார்த்தார். ஓர் சப்தம் உண்டானது: அகுஸ்தீன்! சமுத்திரத்திலுள்ள ஜலப்பிரவாகத்தில் எத்தனை துளிகள் உண்டென்று எண்ண உன்னால் கூடுமோ? ஆற்றின் அடியிலும், கரையிலுமிருக்கும் மணல்

மணிகளின் தொகை எவ்வளவென்று கணிக்க உன்னால் இயலுமோ? ஆகாசத்தில் இரவில் பிரகாசிக்கும் நட்சத்திரங்களை நீ எண்ணுவாயோ? பரலோக பூலோக பாதாள உலகங்களின் எல்லையை அளந்து கணக்கிட்டுச் சொல்ல நீ துணிவாயோ? ஆகிலும் இவைகள் எல்லாஞ் செய்வது உன்னால் கூடுமாயினும் மோக்ஷத்தில் உள்ள ஒரே ஒரு பிரகாச கிரணத்தை விவரித்துப் பேசுவது உனக்குச் சாத்தியமல்ல. மனிதரில் எவனும் அறியக்கூடாததை நீ எப்படி விவரிக்கப்போகிறாய்? இந்தச் சப்தத்தைக் கேட்டதும் அகுஸ்தீன் தாம் எழுதத் துவக்கினதை அவ்வளவோடு நிறுத்திவிட்டார்.

வரம்பிலா ஞானமும் அளவெல்லாம் மேலிட்ட வல்லமையும் உள்ள சர்வேசுரன் பிரத்தியட்சமாய் அரசாளும் மோக்ஷம் இன்னதென்று திட்டமாய் இந்தப் பரதேச பூமியில் வாழும் அற்ப மனிதன் அறியக்கூடாதேபோனாலும், அதின் மொத்த இலக்ஷணம் இவ்விதமானதென்று வேத வாக்கியத்தின் ஆதாரத்தால் ஒருவாறு கிரகித்துப் பேசலாம். மோக்ஷமென்பது சகல பாக்கியானந்த நன்மை சம்பூரணமாய் நிறைந்த ஸ்தலம். துன்பமானதொன்றும் அங்கே இல்லை. வியாதியும் நோவும், பசியுந் தாகமும், வறுமையும் தரித்திரமும், பகையும் பழியும், யுத்தமும் சண்டையும், குளிரும் உஷ்ணமும், இவை யாவும் அங்கே தோன்றாது. சகல பாக்கியமும், சந்தோஷமும், திருப்தியும், சமாதானமும் பூரணமாய் நிலையாய் இருக்கின்றது. மனிதனுடைய புத்தியும் மனதும் ஞாபக சக்தியும் தெளிந்த பிரகாசத்தில் ஸ்திரம்பெற்று எந்த விஷயத்திலும் எள்ளளவும் தவறிப் பிசகிப்போகாமல் நேரான சமரசநிலையில் நிலைநிற்கின்றது. மோக்ஷமாவது இன்னதென்று சொன்னபின், இனி அதிலுள்ள பாக்கியம் எத்தன்மைத்தென்று காட்டுவோம்.

இரண்டாம் பாகம்

மோக்ஷபாக்கியமென்பது சர்வேசுரன்தான். நாமே உனக்கு அதிமிக்க சம்பூரண சம்பாவனை என்று சர்வே

சுரனே வேதத்தில் அறிவித்திருக்கிறார். ஆனதால் நாம் மோக்ஷத்தில் **சர்வேசுரனைப் பார்ப்போம்,** சர்வேசுரனைச் சிநேகிப்போம். சர்வேசுரனை நமக்குச் சொந்தமாய் அநுபவிப்போம். மோக்ஷத்தில் சர்வேசுரனுடைய பிரத்தியக்ஷ தரிசனமிருப்பதால் அவரை நாம் அவர் இருப்பதுபோல் பார்ப்போம். மேகமண்டலங்களுக்குள் மறைந்திருக்கும் சர்வேசுரனை அல்ல, அல்லது இந்தப் பூமியில் சிருஷ்டிகளின் மத்தியில் புத்தியின் கண்களுக்கு மாத்திரந் தோன்றும் சர்வேசுரனைப்போல் அல்ல நேருக்குநேராய் முகத்துக்கு முகமாய் இருந்து அவர் இயல்பிலே இருப்பதுபோலே அவரை நமது பூரண சக்திக்குத் தக்காப்போல் நாம் காண்போம். தீர்க்கதரிசியான மோசேஸ் சீனாய் மலையில் சர்வேசுரனைப் பார்த்து அவரோடு பேசினபின் கீழே இறங்கி வரும்போது அவர் முகத்திலிருந்து பாய்ந்த தேவ காந்தியின் ஒளியை யூதஜனங்கள் பார்க்கக்கூடாமல் தங்கள் முகத்தைக் கைகளால் மறைத்துக்கொண்டார்கள். தபோர் என்ற மலையில் நமது தேவ இரக்ஷகருடைய சரீரத்திலிருந்து தெய்வீக கிரணங்கள் கண்களைப்பறிக்கும் பிரகாசத்தோடு தோன்றினதைப் பார்த்த மூன்று அப்போஸ்தலர்கள் மயங்கிச் சோர்ந்து கீழே மூர்ச்சையாய் விழுந்தார்கள். மோக்ஷத்திலோ மயக்கமின்றி கலக்கமின்றி சர்வேசுரனுடைய பூரண இலக்ஷண காந்தியை நாம் நமது ஆத்மாவில் தரிசிப்போம்.

சர்வேசுரனை நாம் பார்ப்பது மாத்திரமல்ல. **அவரைச் சிநேகிப்போம்.** நமது இருதயத்தின் சத்துவமெல்லாங் கூட்டி அவரை நமது ஆசைக்களவாய், பூரண திருப்தியோடு சிநேகிப்போம். மனிதர் இந்த உலகத்தில் சர்வேசுரனைத் தங்கள் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு சத்துவத்தோடும் சிநேகிக்கும்படி தேவ கட்டளை இருந்தாலும் இதைச் சரியாய் நிறைவேற்ற நம்மால் கூடாதென்று துக்கத்தோடு நாம் கண்டுவருகிறோம். எப்படியென்றால்: சிருஷ்டிகளில் பல ஆயிரம் பேர்வழிகள் நம்மைவிடாமல் இரவும் பகலுஞ் சூழ்ந்து, நமது இருதயத்திலுள்ள அற்பமான சிநேகத்தை, எனக்குக் கொடு,

எனக்குக் கொடு, என்று நம்மை நாலுபக்கமும் இழுக்கின்றன. நாமும் மதிதப்பி நமது இருதயத்தை ஆயிரம் பங்காய்ப் பகுத்து, சகல சிருஷ்டிகளுக்குங் கொடுத்தபின்பு மீதியாய் ஏதுவுமிருந்தால் அதைத்தான் நம்மைச் சிருஷ்டித்த ஆண்டவருக்குக் கொடுக்கிறோம். மோக்ஷத்தில் போனபின்பு மாத்திரம் சர்வேசுரனை நமது பூரண இருதயத்தோடு பங்கு பாகஞ் செய்யாமல் சிநேகிப்போம். சிருஷ்டிகளில் எதுவும் இந்தத் தேவசிநேகத்தை தனக்காவது பிறருக்காவது கேட்கத் துணியமாட்டாது. சர்வேசுரனே நமது ஏக சிநேகமாயிருப்பார்.

ஆண்டவரே! எங்கள் இருதயம் உமக்காக சிருஷ்டிக்கப்பட்டது. உம்மிடம் வந்து நாங்கள் தங்காதிருக்குமட்டும் இந்த இருதயத்துக்குச் சுகம் என்பது இருக்காது. மோக்ஷத்தில் மாத்திரம் உம்மிடத்தில் பயமின்றி கவலையின்றி நாங்கள் தங்குவோம். அங்கேதான் உம்மை எங்கள் முழு இருதயத்தோடு சிநேகிப்போம்.

இதுவுமன்றி மோக்ஷத்தில் நாம் சர்வேசுரனைச் சிநேகிப்பதோடு **சர்வேசுரனை** நமக்குச் சொந்தமாய் **அநுபவிப்போம்.** என் இனிய அன்பர் எனக்குச் சொந்தம், நான் அவருக்குச் சொந்தம்: என்ற தேவ வாக்கியத்தை மோக்ஷத்தில்தான் நாம் பூரண அர்த்தத்தோடும் நிமிர்ந்த முகத்தோடுஞ் சொல்லுவோம். சர்வேசுரன் நமக்குச் சொந்தமென்று சொல்வது அர்த்தசாரமற்ற வீண் வார்த்தை அல்ல. தகப்பனுக்கு உள்ள சொத்துகளுக்கெல்லாம் மகன் எவ்விதம் சுதந்தரம் பெறுகிறானோ அவ்விதமே சர்வேசுரனுக்குள்ள நன்மை வரங்கள், பாக்கிய செல்வம், தேவ இலக்ஷணங்கள் அனைத்தும் நமக்குச் சொந்தமாகும். ஊதாரிப் பையனுடைய உபமானத்தில் தகப்பன் சொல்வதுபோல், மகனே! என் வீடு உன் வீடு, என் சொத்து உன் சொத்து, என்று சேசுநாதர்சுவாமி நம்மில் ஒவ்வொருவருக்குஞ் சொல்வார்.

இந்தப் பாக்கிய சம்பூரணம் யாவும் நாம் மோக்ஷத்தில் அநுபவிப்பது ஒரு வருஷம் அல்ல, பத்து வருஷமும் அல்ல, ஆயிர வருஷம், லக்ஷ வருஷமுமல்ல, கோடானு

கோடி வருஷம் லக்ஷம் விசை துவக்கி லக்ஷம் விசை முடிந் தாலும் முடியாதகாலமாய் நாம் அநுபவிப்போம். நித்திய காலம், நீடூழி காலம், மாருமலும், ஓயாமலும், குறையா மலும், என்றென்றும், சர்வேசுரன் மோக்ஷத்திலிருக்கும் காலமட்டும் மோக்ஷபாக்கியம் நிலைநிற்கும்.

சந்திர சூரிய நட்சத்திரங்கள் எல்லாம் ஒளி இழந்து நிலைபெயர்ந்து விழுந்து, அழிந்து, ஒழிந்துபோகும். வான மும் பூமியும் மாறி மறைந்துபோகும், இராச்சியங்களும் தேசங்களும் பாழாய் அழிந்து சிதைந்து போகும். மோக்ஷத்தின் பாக்கியானந்தமோ, அழியாமலும், மாரும லும், குறையாமலும், என்றும் சம்பூரணம் பெற்று நிலை யாய் நிற்கும்.

ஓ! மோக்ஷமே! முடியாத ஆனந்தமே! சகல நன் மையும் மலிய நிறைந்த பாக்கிய ஸ்தலமே! சர்வேசுரன் கட்டிய தேவ அரண்மனையே! அழகிய இராஜ நகரே! என் சொந்த வீடே! சர்வேசுரனை நான் கண்கூடாய்ப் பார்க் கும் பரிபூரண தரிசனமே! நித்தியகாலம் அவரைச் சிநே கிக்கச் செய்யும் அற்புத வரமே! சர்வேசுரனை எனக்குச் சொந்தமாய்க் கொடுக்கும் நிறைந்த செல்வமே! ஓ! மோக்ஷமே! வாழ்க! வாழ்க! உன்னைப் பார்த்தபின் இந்த அற்ப உலகத்தைப் பார்ப்பது அரோசிகம். உனக்கு முன்பாக இந்த உலக சுகபாக்கியம் நீசமானது. நீதான் எனக்குத் திருப்தியான ஆனந்தம். நீதான், நான் என் றும் வாசஞ்செய்யவேண்டிய நித்திய வீடு. நீதான் என் ஆசையளவுக்கு உரிய ஸ்தலம்.

ஆ! எப்போது நான் உன்னிடம் வருவேன்! எப் போது உன்னில் நான் தங்கி சமாதானமாயிருப்பேன்! ஓ! மோக்ஷமே! என் சொந்த பூமியே! உன்னை நினைத்து, உன்னைப் பார்த்து, உனக்காக நான் உலகத்தில் இருக்கும் நாளெல்லாம் உழைத்து, உன்னிடத்தில் கடைசியில் நான் வந்து சேரும்படியாய் என்னால் கூடிய யாவும் நான் செய் வேன்.

மூன்றும் பாகம்

சகோதரரே! மோக்ஷமாவது இன்னதென்று கொஞ்சமாகிலும் உங்களுக்கு இப்போது தெரியுமா? மோக்ஷத்துக்கும் இவ்வுலகின அற்ப சுகவாழ்வுக்கும் உள்ள வித்தியாசம் எவ்வளவென்று மனதில் சார உணருகிறீர்களா? இவ்விரண்டில் எது உங்களுக்கு பிரியம்? உலக பாக்கியம் உங்களுக்குத் திருப்தி தருமா? சேசுநாதரால் சபிக்கப்பட்ட உலகமல்லவா? எல்லாருக்காகவும் பிரார்த்தித்த தேவ இரக்ஷகர் உலகத்துக்காகப் பிரார்த்திக்கமாட்டேனென்று சொல்லவில்லையா? உலகம் ஆத்துமத்துக்குச் சத்துரு. உலகத்துக்கு ஊழியஞ்செய்கிறவர்களை உலகம் பெருஞ் சங்கிலிகளால் கட்டி தன் காலின் கீழ் அடிமைகளாகப்போட்டு கொடுமையாய் நடத்துகின்றது.

பருவத்தே பயிர்செய். இதுதான் புண்ணியப்பயிர் செய்யும் பருவகாலம். நீங்கள் தியானகாலத்தில் செய்த பிரதிக்கினைகளை ஸ்திரப்படுத்தி, என்ன வந்தாலும் என்ன போனாலும், யார் எவர் எதைச் செய்தாலும், எப்படி நடந்தாலும், நான் மோக்ஷத்துக்கு எப்படியாகிலும் போவேன் என்று தீர்மானம் பண்ணுங்கள். இந்தத் தீர்மானத்துக்கு இசைந்தவண்ணம் உங்கள் நடத்தையைச் சீர்ப்படுத்துங்கள்.

நமது அன்புள்ள ஆண்டவர் உங்களுக்குத் தகுந்த இடம் மோக்ஷத்தில் தயார் செய்யும்படி போயிருக்கிறார். உங்கள் முன்னோர்களான சுற்றத்தாருஞ் சிநேகிதரும் உங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். சம்மனசுகளும் உங்கள் பாதுகாவலான பரிசுத்தவான்களும் நீங்கள் எப்போது வருவீர்களென்று வழிபார்த்து நிற்கிறார்கள். முக்கியமாய் உங்கள் அன்புள்ள தாயாகிய தேவ கன்னிமரி உங்களைப் பார்த்து ஆனந்தங்கொண்டு, ஜெயவீரராய் வரும் தன் பிள்ளைகளுக்கு முடிசூட்ட ஆவலாய் இருக்கிறாள்.

சகோதரரே! சர்வேசுரனுக்கு மனந்தளராமல் ஊழியஞ் செய்யுங்கள். தைரியமாய்ப் போராடுங்கள். இன்னும்

சொற்பக்காலமாத்திரந்தான். துன்பமும் போராட்டமும் முடிந்துபோகும். உலக மாய்கை மறைந்துபோகும். அதன் பின் அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பர் சொன்னது போல்: நான் இதோ தளர்ந்து சோர்ந்துபோகிறேன். என் தேகவியோக காலம் சமீபித்திருக்கின்றது. நல்ல யுத்தம் நான் செய்தேன். என் ஜீவியகாலவட்டம் முற்றும் சுற்றி முடிந்துபோனது. பிரமாணிக்கம் தவருது நான் காத்தேன். நீதியின் முடி எனக்குத் தயாராயிருக்கிறது. நீதி செலுத்தும் நியாயாதிபதியான ஆண்டவர் அந்தக் கடைசிநாளில் அதை எனக்குச் சூட்டுவார், இந்த நம்பிக்கை என் மனதில் ஸ்திரமாய் பதிந்திருக்கின்றது, என்று நீங்களுஞ் சொல்லி சந்தோஷமாய் மரித்து நித்தியமான மோக்ஷ பாக்கியம் சர்வேசுரனோடு அநுபவிக்கப்போவீர்கள்.

எட்டாம் நாள்—மூன்றும் தியானம்

தேவசிநேகம் நம்மிடத்தில் உண்டாக ஏதுவான யோசனை

சிறப்பும் அலங்காரமும் நிறைந்த உயர்ந்த கோபுரத்தைக் கட்டி முடித்தபின், அதின் சிகரத்தில் பொற்கலசம் நிறுத்திக் கும்பாவிஷேகஞ் செய்தாற்போல், அர்ச். இஞ்ஞாசியார் ஞான முயற்சிகளாகிற மோக்ஷாலங்காரம் பெற்ற ஞானக் கோபுரத்தை அரும் பிரயாசையோடு கட்டிமுடித்த பின்பு, கடைசியில் தேவ சிநேகம் என்னும் பொற்கலசத்தை ஸ்தாபித்து, சர்வேசுரனுடைய பாதத்தில் ஞான முயற்சிகளைச் செய்யப் பாக்கியம் பெற்றவர்களைக் கூட்டி வந்து சேர்க்கிறுர். இவர்கள் சர்வேசுரனுடைய சிநேகத்தால் அபிஷேகம் பெற்று அர்ச்சிக்கப் படுவார்கள்.

இந்த உன்னத பதவிக்கு வருமுன் ஒவ்வொருவனுந் தன் ஆத்துமத்தைப் பாவத்துர்க்குணங்களிலிருந்து சுத்தஞ்செய்வது அவசியமாயிருந்தது. முதல் வாரத்தில்

நடந்த ஞான முயற்சிகள் எல்லாம் இதற்கு அநுகூலமாயிருந்தன. அந்த வாரத்தின் கடைசியில் நீங்கள் செய்த நல்ல பாவசங்கீர்த்தனத்தால், சர்வேசுரன் தயவாய் உங்கள் பாவங்களை எல்லாம் மன்னித்து, தேவ இஷ்டப்பிரசாதமாகிய சிறந்த உடையைக் கொடுத்தார். அதன்பின் நமது அன்புள்ள இரக்ஷகரான சேசுநாதர் சுவாமியை உங்கள் கண்முன் வைத்து, உங்கள்பேரில் வைத்த சிநேக மிகுதியால் அவர் வருந்தி உழைத்ததும், துன்ப அவஸ்தைப் பட்டதும், தாராளமான மனதோடு அவர் தம்மை மறந்து செய்ததும் இம்மாத்திரமென்று நீங்கள் மனதில் நன்றாய்ச் சார உணரும்படி அர்ச். இஞ்ஞாசியார் இரண்டாம் வாரம், மூன்றாம், நான்காம் வாரங்களில் நீங்கள் செய்த ஞான முயற்சிகளில் காண்பித்தார்.

சிநேகத்தின் உத்தம அடையாளம் தன் சிநேகிதனுக்காகத் தன் உயிரைக் கொடுப்பதானால், சேசுநாதர் மனிதர்களுக்காக சிலுவையில் மரித்து தமது உயிரைக் கொடுத்தது உத்தம சிநேகத்தின் அதி உன்னத அடையாளம். இந்தச் சிநேகத்துக்குப் பிரதி சிநேகம் காண்பிப்பது நமது கடமை.

எதார்த்தமான சிநேகத்துக்கு இரண்டு இலக்ஷணங்கள் உண்டு. முதன்முதல் **சிநேகம் வெறும் வார்த்தையில்மாத்திரம் நிற்காமல் கிரிகையால் தோன்றும்.** சிநேகத்தின் உரைகல் செய்கை என்பது மூத்தோர் வாக்கியம். அதன்பின் சிநேகிதர் இருவரும் தங்களுக்கு இருக்கிறதும், இருப்பதும், இருக்கக்கூடுமானதுமான **நன்மைகளை ஒருவர் ஒருவருக்குப் பரஸ்பர அன்போடு தாராளமாகக் கொடுப்பது** சிநேகத்தின் இரண்டாம் இலக்ஷணமாகும். சர்வேசுரன் மனிதர்களுக்குக் காட்டுஞ் சிநேகத்தில் இந்த இரண்டு குணங்களும் பூரணமாய்ப் பிரகாசிக்கின்றது. சர்வேசுரன் தம்மிடத்தில் இருக்கும் நன்மைகளை மனிதர்களுக்கு அவர்கள் சுபாவ இயல்புக்கு இசைந்த வண்ணமாய், அளவெல்லாங் கடந்த வகையில் தாராளமாய்ப் பொழிந்திருக்கிறார். அந்த நன்மைகள் இன்னதென்றும், எம்மாத்திரம் என்றும், நீங்கள் நன்றாய்

உங்கள் மனதில் சாரும்படி உணர்ந்தால், சர்வேசுரன் உங்களுக்குக் காட்டுஞ் சிநேகம் எவ்வளவு எதார்த்தமுள்ள தூய சிநேகமென்று ஒருவாறு கண்டு அறிவீர்கள். இந்த அறிவு இருந்தால் நீஙகளும் உங்களை அளவற்ற சிநேகத்தோடு சிநேகிக்கும் தேவ மகத்துவ சர்வேசுரனைச் சிநேகித்து அவருக்கு எந்த வகையிலும் ஊழியஞ் செய்ய மனதாயிருப்பீர்கள். பின்வரும் நான்கு பாகங்களிலும் சர்வேசுரன் நமக்குக் காண்பிக்குஞ் சிநேகம் எவ்வளவு பெருகி விரிந்து உயர்ந்து பிரகாசிக்கிறதென்று சுருக்கத்தில் சொல்லப்போகிருேம். நீங்கள் இதைக் கேட்டபின் ஒவ்வொருவரும் தகுந்த யோசனை செய்து இந்தச் சிநேகத்திற்கு ஏற்ற நல்லுணர்ச்சிகள் உங்கள் மனதில் உண்டாகச் செய்வது வெகு பிரயோஜனமாகும். நீ இந்தத் தியானம் செய்யும்போது சம்மனசுகளும், மோக்ஷவாசிகளும் சேசுநாதர்சுவாமிமுன், உனக்காகப் பிரார்த்திப்பதாக சிந்தித்து உரூபிகரித்துக்கொள்.

முதல் பாகம்

கிருபாசமுத்திரமான **சர்வேசுரன்** நம்மில் ஒவ்வொருவருக்குஞ் **செய்த பலவகையான நன்மைகள்** எவ்வளவானதென்று அறியும்படியாய், அவர் நம்மை மனிதர்களாக சிருஷ்டித்ததும், பின் நம்மை இரக்ஷித்ததும், இரக்ஷிப்பைச் சார்ந்த பலவகையான நன்மைகளும், எல்லாம் ஒவ்வொன்ருய் நமது ஞாபகத்தில் வரும்படி செய்வது அவசியம். நீங்கள் இந்த எட்டு நாளாய் சர்வேசுரன் சமூகத்திலிருந்து அவர் உங்களுக்குச் செய்த நன்மை எல்லாம் ஆதியோடந்தமாய் தியானித்திருப்பதால், இப்படி இன்று நினைப்பது உங்களுக்குச் சுலபமாயிருக்கும். மனிதர் அனைவருக்கும் பொதுவான இந்த நன்மைகளன்றி ஒவ்வொருவருக்குந் தனித்தனியே விசேஷமான பல நன்மை உபகாரங்களைச் செய்திருக்கிருர். நீ பிறந்த நாள் முதல் இதுமட்டும் உனக்காக விசேஷமான தயவும், அருளும், அன்பும் காண்பித்து நன்மை வரங்கள் எவ்வளவு உனக்குக் கொடுத்திருக்கிருர் என்று நீயே யோசித்துப் பார்.

கிரேசஸ் என்ற திரண்ட ஐசுவரியம் படைத்த இராஜா பூர்வகாலத்திலிருந்தான். கிரேசியன் ஒருவன் அரசனிடம்போய் தனக்குக் கொஞ்சம் பொன் கொடுக்கும்படி தாழ்மையாய் விண்ணப்பம் பண்ணினன். அரசன் நல்லதென்று அவனைத் தன் பொக்கிஷசாலைக்குள் அனுப்பி அங்கே இருந்து அவன் எவ்வளவு பொன் கொண்டுபோகக் கூடுமோ அவ்வளவு எடுத்துப்போக பூரண உத்தரவு கொடுத்தான். கிரேசியன் உள்ளே போய் பொன் குவியல் மலைபோலிருக்கக்கண்டு தன்மேலும், தன் உடையிலும், தன் வாய்க்குள்ளேயும் பொன்பொடிகளைக் கண்டமட்டும் நிரப்பி வெளியே வருவதை அரசன் பார்த்து அவனுக்கிருந்த பொன்னாசையைப்பற்றிக் குலுங்க நகைத்தான். இந்தப் பேராசைகொண்ட மனிதனிடத்திலிருந்த ஒவ்வொரு பொன் பொடியும் கிரேசஸ் அரசனின் தாராள குணத்தால் வந்தது. நீயும் அப்படியே சர்வேசுரனுடைய தயாள உதார குணத்தின் நன்மை வரங்களால் நிறைந்து சூழ்ந்து இருக்கிறாய். உனக்குள்ளும், உன்மேலும், உன்னைச் சூழ்ந்தும் இருக்கும் யாவும் அவருடைய நன்கொடைகள். உன் சரீரம், உன் ஆத்துமம், உன் உயிர், உன் புத்தி, உன் கலைக்கியான ஞானம், உன் தாய்தந்தை, உன் சிநேகிதர், உன் திரவியம், மனிதர்கள் உனக்குச் செய்த பலவகையான நன்மை உபகாரங்கள், தேவதிரவிய அநுமானங்களால் உனக்கு வரும் இஷ்டப்பிரசாதங்கள், நீ பெற்ற பாவமன்னிப்பு, நித்திய பாக்கியத்தின்மட்டில் உன் மனதிலூன்றிய நம்பிக்கை, இவை அனைத்தும் சர்வேசுரன் உன்மேல் பொழிந்த நன்மைகள். சர்வேசுரனுடைய பொக்கிஷசாலையிலிருந்து உன் மேலுங் கீழும், உள்ளும் புறம்பும், எங்கும் ஏகமாய்ப் பொன் பொடிகளாகிய சர்வேசுரனுடைய நன்கொடைகளால் நிறைந்து சூழ்ந்து வெளியே நீ வந்திருக்கிறாய்.

இவ்வளவு நன்மைகளுக்கெல்லாம் பிரதிநன்றி காட்டுவது உன் கடமை அல்லவா? சர்வ வல்லபரான சர்வேசுரனுக்கு அற்ப மனிதன் என்ன நன்றி செய்யலாம்? கேள், நீ செய்யக்கூடியது இதுதான். உனக்குச் சொந்தமானதெல்லாவற்றையும் உன்னையுங் கூட்டிச்சேர்த்து சந்தோ

ஷத்தோடு சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்து நல்லுணர்ச்சி பொங்கும் கனிந்த மனதோடு பின் வரும் ஜெபத்தை அமர்ந்து மெதுவாய், அர்த்தம் உன் மனதில் சார நிதான மாய்ச் சொல்:

ஆண்டவரே! என் பூரணமான மனஸ்வாதீனம், என் ஞாபகம், என் புத்தி, என் முழுமனம், எனக்கு உள்ளதும், எனக்குச் சொந்தமுமான எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளும்; நான் இவைகளை உமக்குக் கொடுக்கிறேன், ஏற்றுக்கொள்ளும். ஆண்டவரே! இவைகள் அனைத்தையும் எனக்குத் தந்தவர் நீர்தான். நான திரும்பவும் இவைகளைக் கொடுக்கிறேன். எல்லாம் உமக்குச் சொந்தம். உமது சர்வசித்தம்போல் இவைகளை நடத்தும். உமது சிநேகமும் இஷ்டப்பிரசாதமும் எனக்குத் தந்தருள்வீராக. இவைகள் எனக்குப் போதும். வேறு எதுவும், உம்மிடத்தில் நான் கேட்கமாட்டேன்.

இரண்டாம் பாகம்

அனந்த தயையுள்ள சர்வேசுரன் மனிதர்கள்பேரில் தமக்குள்ள சிநேகத்தை, இவ்வளவான நன்மைகளைப் பொதுவாகவும் தனித்தும் செய்வதால், உத்தம வகையில் காண்பித்திருக்கிறார். ஆனால் அவர் காண்பிக்கும் சிநேகம் இதோடு மாத்திரம் நிற்கிறதில்லை. மனிதனுக்கு அவர் கொடுக்கும் நன்மைகளோடு **அவரே பிரசன்னமாய் வருகிறார்.** உலகத்தில் உள்ள சிருஷ்டிகள் எல்லாவற்றிலும் தமது வல்லமையாலும், ஞானத்தாலும், அருளாலும் அவர் இருந்து அவைகள் தங்கள் சுயநிலையில் தங்கி, தங்களுக்கு இயல்பான பல தொழில்களை ஒழுங்காயும், கிரமமாயும் செய்ய சக்தியும் பலமும் கொடுக்கிறார். சர்வேசுரன் எங்கும், எந்தத் திசையிலும், சமஸ்த சிருஷ்டிகளிடத்திலும் வியாபித்திருக்கிறார். வானமண்டலத்தின் உச்சிமட்டும் உயர ஏறிச் சென்றாலும், பூமியிலுள்ள சமுத்திரத்தின் கடைசி எல்லையின் முனையில், பட்சிபோல் நீ பறந்துபோனாலும் அங்கேயும் சர்வேசுரன் பிரசன்னமாயிருக்கிறார்.

சர்வேசுரன் எங்கும் பிரசன்னராயிருக்கிறார். ஆனால் அந்தந்த வஸ்துவின் சுபாவத்துக்கும் நிலைமைக்கும் தகுந்த படியே அவருடைய பிரசன்னமும் அந்த வஸ்துவில் அதிகாதிக உத்தமமான வகையாயிருக்கும்.

பல தினுசான கோடானுகோடி சிருஷ்டிகளில் சர்வேசுரனுக்கு அதிக பிரியமுள்ள சிருஷ்டி எதுவென்றால்: தேவ இஷ்டப்பிரசாதத்தால் அர்ச்சிக்கப்பட்ட ஆத்துமம். இந்த ஆத்துமம் சர்வேசுரனுக்கு ஆலயம். இதிலேதான் சர்வேசுரன் பூரண திருப்தியோடும், சந்தோஷத்தோடும் இருந்து வாசஞ்செய்கிறார்.

இந்த உத்தம வகையில் சர்வேசுரன் உங்களிடத்திலிருக்கும்படியாய் நீங்கள் ஆசைப்பட்டு, இதற்காக என்ன பிரயாசப்படவேண்டுமோ அதுவெல்லாஞ் செய்து, எப்போதும் தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்திலிருங்கள். அப்போதுதான் சர்வேசுரன் உங்கள் மனதில் உத்தம வகையில் பிரசன்னமாயிருப்பார்; நீங்களுஞ் சர்வேசுரனிடத்தில் உத்தம வகையில் தங்கி இருப்பீர்கள். சர்வேசுரன் உங்களிடத்தில் வாசஞ்செய்வார். நீங்களுஞ் சர்வேசுரனிடத்தில் வாசஞ்செய்வீர்கள்.

மூன்றாம் பாகம்

சர்வேசுரன் மனிதருக்குக் காண்பிக்கும் உத்தம சிநேகத்தைச் சரியாய் அறிந்து விவரிக்கத் தகுந்தவர்கள் யார்? தாம் சிருஷ்டித்த மனிதனுக்குப் பலகோடி நன்மைவரங்களைத் தாராளமாய்க் கொடுக்கிறார். கொடுப்பது போதாதென்று தாம் கொடுக்கும் நன்மைவரங்களோடு பிரசன்னமாய்க் கூட இருக்கிறார். இவ்வளவான சிநேகங் காண்பிப்பதும் போதாதென்று இன்னும் தாம் சிருஷ்டித்த சமஸ்த பொருட்களில் தங்கியிருந்து, அவைகளை எத்தனமாய்க்கொண்டு உழைத்து வேலை செய்கிறார். யாருக்காக இப்படி உழைக்கிறார்? எனக்காக என்று உங்களில் ஒவ்வொருவனுஞ் சொல்லலாம். வானத்திலிருக்கும் சூரியன் தன் பிரகாசத்தையும் உஷ்ணத்தையும் உனக்கு

அளிக்கும்படி சர்வேசுரன் செய்கிறார். செடிகளும் மரங் களும் தகுந்த காலத்தில் பூ, காய், கனிகளை உனக்குக் கொடுக்கும்படி அவர் தான் செய்கிறார். உலகத்தில் வாழும் சகல ஜீவகோடிகளும் உனக்கு அநுகூலமாயிருந்து நன்மை செய்யும்படி அவர்தான் அவைகளைப் போஷித்து வளர்த்துக் காப்பாற்றுகிறார்.

சர்வேசுரனுயிருந்து இவ்வளவு உனக்காக உழைப்பது போதாதென்று, மனுஷனாய் அவதாரமெடுத்து, நீ வாழும் பூமியில் உன்னைத் தேடிவந்து உனக்காகக் கஷ்டமான கடும் வேலைகள் செய்தார். நெற்றிவெயர்வை நிலத்தில் விழ பரம ஏழையைப்போல் உனக்காக உழைத்தார். வெயர்வையோடு இரத்தத்தையும் சிந்தினார். சிலுவை யைச் சுமந்து, வருத்தப்பட்டு நடந்து, விழுந்து விழுந்து எழுந்து, மலையின் உச்சியில் ஏறி சிலுவையில் உனக்காக மரித்தார்.

இன்னமும் நமது கோவிலின் பீடங்களில் நாள் தோறும் தம்மைத் தேவ பிதாவுக்குப் பலியாய் ஒப்புக் கொடுக்கிறார். தேவநற்கருணையிலிருந்து அவர் மனிதரின் இரக்ஷணியத்துக்காக ஓயாது செய்யும் அபாரமான வேலை கள் எவ்வளவென்று நாம் மோக்ஷத்துக்குப் போனபின்பு மாத்திரம் சரியாய் அறிவோம். உலகத்தில் அவர் இருந்த காலத்தில் ஒரு தேசத்திலுள்ள சில ஊர்களில்மாத்திரஞ் செய்த பலவகையான நன்மைகளை இப்போது பூமி எங்கு முள்ள பல ஆயிரம் இடங்களிலிருந்து எந்த நாளிலுஞ் செய்துவருகிறார்.

இவ்விதம் சர்வேசுரன் உனக்காக ஓயாமலுஞ் சலியாம லும் உழைத்து வேலைசெய்யும்போது, நீ சர்வேசுரனுக்காக உன் சத்துவமெல்லாம்கூட்டி வேலை செய்யாமலிருப்பாயோ! உன் சிநேகம் எங்கே? இனிமேல், உனக்கு இருக்கும் ஜீவிய நாட்களை எல்லாம் சர்வேசுரனுடைய ஸ்தோத்திர மகிமைக்காக செலவழிப்பேனென்று நல்ல பிரதிக்கினை செய்து, முதல் பாகத்தில் சொன்ன ஜெபத்தைச் சொல்லி உன்னை முழுதும் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுப்பாயாக.

நாலாம் பாகம்

முந்தின மூன்று பாகங்களில் சர்வேசுரன் மனிதர்களை எவ்வளவு எதார்த்தமான அன்போடு சிநேகிக்கிறார் என்று பார்த்தீர்கள். நமக்கு அவர் செய்ததும் இன்னும செய்துவருகிறதுமான எண்ணிலடங்காத நன்மைகளின் நிமித்தம் நாம் அவரைச் சிநேகிக்கக் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம் என்பது எல்லாருக்குந் தெளிவாய்த் தோன்றி இருக்கும். ஆனால் சர்வேசுரன் நமக்குப் பெரிய உபகாரியாய் இருக்கிறார் என்பதைப்பற்றி அவரைச் சிநேகிப்பதிலும், அவர் சகல சுகுண இலக்ஷணங்களும், நன்மையும்; பூரணமாய் அமைபப்பெற்ற சர்வேசுரனாய் இருப்பதால் அவரைச் சிநேகிப்பதுந்தான் தூய சிநேகத்தின் உயர்ந்த உச்சியின் கொடுமுடி.

சிருஷ்டிகள் இடத்தில் எவ்வளவு இலக்ஷணம், எவ்வளவு அலங்காரம், எவ்வளவு நன்மைகள் இருந்தபோதிலும், இவைகள் எல்லாம், சர்வேசுரனிடத்திலுள்ள அளவு, எல்லை, மட்டு, வரம்பு எல்லாங்கடந்த தேவ இலக்ஷணங்கள், தெய்வீக அலங்காரம், அதிஉத்தம நன்மைகள் முன்பாக, சமுத்திர ஜலப்பிரவாகமுன் ஒரு துளித் தண்ணீரிலும அற்பமாகவே தோன்றும். பலகோடி சிருஷ்டிகளிடம நாம் பார்க்கும் அலங்கார இலக்ஷண நன்மைகள் யாவுஞ் சர்வேசுரனிடத்திலிருந்துதான் வந்தது.

சூரியனிடத்திலிருந்து பிரகாசக் கிரணங்கள் விடாமல் புறப்படுவதுபோலும், மலையின் உச்சியிலுள்ள ஊற்றிலிருந்து தெளிந்த ஜலம் ஓயாமல் சுரந்து ஓடி வருவதுபோலும், சகல நன்மை நிறையப்பெற்ற கிருபா சமுத்திரமான சர்வேசுரனிடத்திலிருந்து, சிருஷ்டிகளிடம் உள்ள அலங்கார இலக்ஷண நன்மைகள் அனைத்தும் வருகின்றது. சூரியன் மறைந்தால் அதின் பிரகாசக் கிரணங்களும் ஒழிந்துபோம். ஊற்றுக்கண் வற்றினால் ஜலமுஞ் சுரந்து ஓடாது. அப்படியே சர்வேசுரன் சிருஷ்டிகளைப் பார்க்காமல் தமது முகத்தைத் திருப்பினால் சிருஷ்டிகள் அனைத்

தும் அலங்கார மிழந்து, இலக்ஷணமிழந்து, நின்ற நிலை யினின்றழிந்து, விழுந்து சகலமும் அழிந்துபோகும்.

இவ்வளவு உயர்ந்த எல்லா ஜீவகோடிகளுக்கும் மேலாய் இருக்கும் சர்வ உத்தமமான சர்வேசுரனை நாம் சிநேகிப்பது நமக்கு மகிமையும் பெருமையுமாயிருக்க வேண்டும். நாம் நம்மை மறந்து, நமது சொந்தப் பாக்கிய நன்மையைத் தேடாமலுங் கவனியாமலுமிருந்து, சர்வே சுரனை, அவர் சர்வ உத்தம சர்வேசுரனுயிருப்பதினுலே மாத்திரம், ஸ்துதித்து வாழ்த்தி சிநேகிப்பது, இதுதான் சுயநலந் தேடாத உத்தம சிநேகம்.

ஞான முயற்சிகளின் கடைசி நோக்கம் இந்த உத்தம சிநேகத்தில் அமர்ந்து தங்கியிருக்கிறது.

சகோதரரே! சமஸ்த நன்மைப் பூரணராய், சர்வாலங் கிர்த காரணராயிருக்கும் சர்வேசுரனை நமது இருதயத்தி லுள்ள பட்சமெல்லாஞ் சேர்த்து சிநேகிப்போமாக! அவர் ஒருவரே நமது சிநேகத்துக்கு முழுதும் உரியவர். நமக்கு ஆயிரம் இருதயங்களிருந்தாலும் அவரைத் தகுந்த வகை யில் நாம் சிநேகிக்க அவை எல்லாம் போதாது. மோக்ஷத் திலிருக்கும் அநந்தகோடி சம்மனசுக்களும், அர்ச்சியசிஷ்ட வர்களும் கூடிச்சேர்ந்து சர்வேசுரனைச் சிநேகிக்கிறுர்களே, அதுவெல்லாம் இன்னும் போதாது. சர்வேசுரனை சர்வே சுரன் மாத்திரம் தகுந்த அளவிலும் வகையிலுஞ் சிநேகிக் கலாம்.

இவ்வித மகத்துவமுள்ள உன்னத சர்வேசுரன்முன் சாஷ்டாங்கமாய் விழுந்து அவரை ஆராதித்து, உன்னை முழுதும் அவருடைய ஊழியத்துக்கு நேர்ந்து ஒப்புக் கொடுத்து, அவரை உன் முழு இருதயத்தோடு சிநேகிப் பாயாக!

முதல் பாகத்தின் கடைசியில் செய்த ஜெபத்தை இந்தத் தியான முடிவிலும் பத்தி விசுவாசத்தோடு நிதானமாய்க் கவனித்துச்சொல்.

எட்டாம் நாள்—ஞானபோதகம்

இஷ்டப்பிரசாதத்தில் முற்றும் முடிய நிலைநிற்கும் வரம்

முன்னொரு காலத்தில் கீழ்த்திசை நாட்டில் இலக்ஷப் பிரபுவும் வித்வான்களை ஆதரித்து உற்சாகப்படுத்தும் தர்ம குணம் உள்ளவனுமான அரசனிருந்தான். இவனிடத்தில் ஆஸ்தியும் திரவிய சம்பத்தும் அபரிமிதமாயிருந்ததால் தனக்குச் சமமானவர்கள் ஒருவரும் இந்தப் பூமியிலே இல்லையென்று திண்ணமாய் எண்ணி பெருமை பாராட்டி வந்தான். அந்தக் காலத்திலேயிருந்த சோலோன் என்ற மகா சாஸ்திரி பல தேச சஞ்சாரஞ்செய்து ஒரு நாள் இந்த அரசன் அரண்மனைக்கு வந்தான். அரசன் சாஸ்திரியாருக்கு வேண்டிய மரியாதை உபசாரஞ்செய்து தன் அரண்மனையிலுள்ள திரவிய பொக்கிஷம் சிறப்பலங்காரம் எல்லாங் காட்டி: சாஸ்திரியாரே! நீர் பல இராச்சியங்களைச் சுற்றிப்பார்த்து வந்ததில், என்னைப்போல் அதிர்ஷ்டசாலியான பாக்கியவந்தனை எங்கேயாகிலும் பார்த்ததுண்டா? என்று கேட்டான். சாஸ்திரியார்: மகாராஜ்! எவன் பாக்கியவான், எவன் துர்பாக்கியன் என்பது அவனவன் இறந்தபின் மாத்திரஞ் சொல்லலாமேயன்றி, உயிரோடிருக்கும்போது சொல்வது சரியாயிராது, என்று வெகு யுக்தியோடு பதில் சொன்னார்.

சாஸ்திரியார் சொன்னதும் ஞாயந்தான். எத்தனை பேர்கள் ஓர்காலத்தில் தனவந்தர்களாய் சுகமே வாழ்ந்தவர்கள், பின் கஷ்டகாலம் வரவே தரித்திரத்திலோ, அபகீர்த்தியிலோ விழுந்து துன்பப்பட்டு, நிந்தைக்குள்ளாகி துர்ப்பாக்கியராய் மரித்தார்கள். காலம் போகப்போக அவனவன் வாழ்வுந் தாழ்வுந் தெரியும். சுகமும் துக்கமும் ஒருநிலையல்ல. உயிரோடிருக்குமட்டும் மனிதன் கடலின் அலையைப்போல் மாறி, மயங்கி, எழுந்து, விழுந்து தவிக்கிறான். அவன் இறக்கும்போது மாத்திரம் பாக்கியவந்தனோ துர்பாக்கியனோவென்று குறிப்பாய் சொல்லலாம்.

அப்படியே சர்வேசுரனுடைய சிநேகத்தில் சாகுமட்டும் நிலைநிற்பவன் எவனே அவன்தான் பாக்கியவான். சர்வேசுரன் மனிதர்களுக்குத் தயவாய்க் கொடுக்கும் அநந்தங்கோடி வரங்களுக்குள்ளே முற்றுமுடிய நிலைநிற்கும் வரமே மேலான வரம். ஒருவனிடத்தில் விசுவாசம், நம்பிக்கை, சிநேகமும், பேறுபலன்களும் எவ்வளவுதான் இருந்தபோதிலும், அவனுக்கு மரணமட்டும் இஷ்டப்பிரசாதத்தில் நிலைநிற்கும் கடைசிவரம் மாத்திரம் இல்லாவிடில் அவைகள் எல்லாம் பிரயோசனமில்லாமல் போகும். எத்தனைபேர்கள் பரிசுத்தவான்களாய் ஒருகாலத்திலிருந்தார்கள்; ஜெபமும் தபமும் பேறுபலன்களும் நிறையக் கொண்டவர்கள். ஆனால் கடைசிகாலத்தில் புத்தி தடுமாறி, இஷ்டப்பிரசாதத்திலிருந்து தவறி விழுந்து சர்வேசுரனுக்குத் துரோகிகளாய் மரித்தார்கள்.

வீடு கட்ட ஸ்திரமான அஸ்திவாரம் போடுவது நல்லதுதான். ஆனால் அதை விடாத ஊக்கத்துடன் தொடர்ந்து செய்து முடிப்பது எல்லாவற்றிலும் முக்கியம். அதுபோல் ஆத்தும இரக்ஷணிய வேலையை ஸ்திரமான மனதோடு துவக்கினபின்பு, அது முற்றுமுடியுமட்டும் ஜாக்கிரதையாயிருந்து அந்த வேலையைக் கவனித்துச் செய்வது வெகு அவசியமென்று நீங்கள் எல்லாரும் உங்கள் மனதில் நன்றாய் பதியும்படி செய்யவேண்டும்.

முற்றுமுடிய இஷ்டப்பிரசாதத்தில் நிலைநிற்க தன்னுடைய சொந்த முயற்சியும் வேண்டும், சர்வேசுரனுடைய விசேஷ உதவியும் தேவை. நீயே உன்னால் கூடியவரையில் இந்த மேலான வரத்தைப் பெறும்படியாய் உழைத்து பிரயாசையோடு முயற்சி செய்வது உன் கடமை. ஆனால் எவ்வளவு நீ செய்தாலும் சர்வேசுரன் விசேஷ வகையில் உனக்கு உதவி தகுந்த சமயத்தில் செய்யாவிட்டால், உன் சொந்த முயற்சியால் மாத்திரம் உன் கடைசிகாலமட்டும் இஷ்டப்பிரசாதத்தில் நிலைநிற்பது உன்னால் கூடாது. உனக்கு இப்போது இருக்கும் நல்ல புத்தியும் ஊக்கமுள்ள மனமும் எந்நாளும் உன்னோடிருக்குமென்று

நிச்சயமாய் நீ சொல்வாயா? அப்படிச் சொல்லும்படியான ஆதாரம் எந்த மனிதனுக்கும் இல்லை.

சலோமோன் என்ற மகா ஞானியைப்போல் புத்தியும் அறிவும் ஊக்கமும் உள்ளவன் யார்? உத்தம குணங்கள் எல்லாம் அவரிடத்தில் அமையப்பெற்றிருந்தன. அவருடைய பாலிய வயதிலேயே சர்வேசுரன் அவருக்குத் தாராளமாய் ஞானமும் அறிவும் தெய்வபக்தியும் கொடுத்திருந்தார். இவரும் ஞானத்தில் வளர்ந்து சர்வேசுரனுக்குப் பிரியமுள்ளவராயிருந்தார். அப்போதே அவர் இறந்திருந்தால் மோக்ஷத்தில் பிதாப்பிதாக்களோடு பிரதாப மகிமையில் நித்திய பாக்கியம் பெற்றிருப்பார். ஆனால் அப்போது சாகாமல் உயிரோடு மகிமையிலிருந்தார். அவருடைய கடைசி முடிவு உலகத்துக்கு அச்சமும் பயமும் உறுத்தும் கண்காட்சிப் பாடமாய் இப்போதும் எப்போதும் இருக்கும்.

மனிதருக்குள் மகா புத்திசாலியாயிருந்தவர் மிருகத்திலுந் தாழ்ந்துபோனார். எல்லாருக்கும் மேலாய் பக்திமானாய் உயர்த்தப்பெற்றவர் கீழே சேற்றுக்குள் புதைய விழுந்தார். உலகத்துக்கு அதிபதியாயிருந்தவர் அந்நிய பெண்களுக்கு அடிமையானார். சர்வேசுரனோடு முகங்கொடுத்துப் பேசும் பாக்கியம்பெற்றவர் விக்கிரகங்களைக் கையெடுத்து கும்பிட்ட நிர்ப்பாக்கியனானார். ஓ! என்ன விநோத விகாரம்! என்ன கொடிய மாற்றம்! என்ன பயங்கர காட்சி! நன்றாய்த் துவக்கினவன் நன்றாய் முடிக்கவில்லை. சுகந்த வாசனை வீசி மலர்ந்த புஷ்பம் காயாய் வளர்ந்து, கனிந்து பழுக்கும் பருவத்தில் புழுத்து, நாறி, கீழே விழுந்தது.

பாவமில்லாமல் ஜீவித்த மகா பெரிய அர்ச்சியசிஷ்டவர்களும் மரணமட்டும் இஷ்டப்பிரசாதத்தில் நிலைநிற்கும் வரம் தங்களுக்கு வருமோ வாராதோவென்று நினைக்கும் போது பயந்து நடுங்கினதாக அவர்கள் சரித்திரத்தில் வாசிக்கலாம். மகாப் பேர்பெற்ற அர்ச்சியசிஷ்டவரான பிலிப் நேரி என்பவர் தேவபலிபூசை செய்யும்போது தேவ நற்கருணையைத் தமது கையில் எடுத்து: சுவாமி! இன்று

என்னைத் தயவாய்க் காப்பாற்றும். காப்பாற்ருவிடில் நான் உமக்குத் துரோகியாய், எவனுஞ் செய்யாத அக்கிரமம் எல்லாஞ் செய்து கெட்டுப்போவேன், என்று சொல்லுவார்.

மகா பெரிய புண்ணியவான்களும் தபசிகளும் இப்படி பயத்தோடு நடந்திருக்கும்போது, பாவம் நிறைந்த உலகத்தின் மத்தியில் ஜீவிக்கும் சாமானியரான கிறீஸ்துவர்கள் பயமின்றி எப்படி இருக்கக்கூடும்? கிறீஸ்துவர்களில் அநேகம்பேர்கள் சாவான பாவத்தோடு கவலையின்றி ஜீவிக்கிருர்கள். இப்படி ஜீவிக்கிறவர்கள் எப்படியாவது சாகும்போது இஷ்டப்பிரசாதத்தோடு சாவோம் என்று மிதந்தப்பின நம்பிக்கையை வளர்த்துவருகிருர்கள். சிலர் இப்போது சாவான பாவஞ் செய்யாததால் இனிமேலுஞ் செய்யமாட்டேனென்று கவலையின்றி காலத்தைக் கழிக்கிருர்கள். ஐயோ! எத்தனைபேர்கள் சிறுபிராயத்தில் நல்லவர்களாய் நடந்தார்கள். வாலிபப்பருவத்தில் பாவத்தில் விழுந்து கெட்டுப்போனுர்கள்! சிலர் தங்கள் சொந்த வீட்டில் இருந்தகாலத்தில் சாவான பாவம் செய்யாதவர்கள், வேறிடத்துக்குப் போனதும் பாவத்தில் விழுந்தார்கள். எத்தனைபேர்கள் ஒரு பாவத்தை முதல்விசை செய்தபின்பு, மனக்குத்தை மாற்ற இன்னும் பாவத்தைக் கூட்டி வளர்த்து பாவசங்கீர்த்தனம் செய்யாமலிருக்கிருர்கள்! எத்தனைபேர்கள் பாவப்பழக்கத்துக்கு அடிமையாய்ப்போய், ஜெபமின்றி, தேவதிரவிய அநுமானங்களின்றி, கோவிலுமின்றி இருக்கிருர்கள்! எத்தனைபேர்கள் துஷ்டர் சகவாசத்தால் கெட்டு, அவர்கள் கையில் நின்று வெளியே வர மனதின்றி, மனதிருந்தாலும் சக்தியின்றி தவித்து நிற்கிருர்கள்! எத்தனை பேர்கள் தியான காலத்தில் நல்ல பிரதிக்கினைகளெல்லாம் செய்தபின்பு, வீட்டுக்குப் போனதும், பிரதிக்கினைகளை மறந்து பாவப்பழக்கத்தில் முன்போல் விழுகிருர்கள்!

என்ன ஆத்தும நஷ்டம், எவ்வளவு பெரும் மோசம் இந்த உலகத்தில் உண்டாகின்றது!

சகோதரரே! நீங்கள் இவைகளையெல்லாம் கேட்கும்போது உங்கள் மனங்கலங்கி தைரியமின்றி: இஷ்டப்

பிரசாதத்தில் நான் சாகுமட்டும் நிலைநிற்பது என்னால் கூடுமானது காரியமா! நான் என்ன செய்வேன், என்று மனந்தளம்பலாம். நாம் இவைகளை உங்கள் மனதைக் கலக்கும்படியாய் சொல்லுகிறதில்லை. உங்களுக்குத் தேவ பயம் உண்டாகும்படிதான் உள்ளகாரியத்தைச் சொல்லு கிறோம். தேவபயம் ஞானத்தின் ஆதித்துவக்கம் என்பது நீதிவாக்கியம். நான் தியானஞ் செய்தேன், எல்லாம் முடிந்தது, இனி எனக்குப் பயமில்லை என்று சொல்லிக் கவலையின்றி நீங்கள் இராதபடி, முன்னெச்சரிக்கையாய் இதைச் சொல்லுகிறோம். அடுத்திருக்கும் ஆபத்தை முன் அறிந்தால், அதைத் தடுக்க ஏற்ற பிரயத்தனங்கள் செய்யலாம். ஆனதால் ஞானமுயற்சிகளின் முடிவில் நாம் உங்களுக்குச் சொல்லும் புத்திகளைக் கவனமாய்க்கேட்டு, ஞாபகத்தில் வைத்து, உங்கள் வீட்டுவேலைகளைப் பார்க்கப் போகும்போது இவைகளைப்பற்றி அடிக்கடி நினையுங்கள்.

முற்றுமுடிய இஷ்டப்பிரசாதத்தில் நிலைப்பது என்னால் கூடாதென்று மிதந்தப்பிப் பயப்படவேண்டாம். பாவத்தில் விழுவதைப்பற்றி உங்கள் மனதில் பயமிருந்தால் மாத்திரம் போதும். ஆயிரம் வந்தாலும் ஆயிரம் போனாலும் நான் பாவத்தைச் செய்யமாட்டேன் என்ற ஸ்திரமான மனது ஒன்றுமாத்திரம் அவசியம். பாவத்துக்குப் பயம் உங்கள் மனதிலிருந்தால் பாவத்தை மனதறியச செய்யமாட்டீர்கள். அதன்பின்பு பாவத்துக்கு உங்கள் மனதில் உள்ள பயம் பாவத்துக்கு ஏதுவாயிருக்கும் சமயங்களைச் சர்வ ஜாக்கிரதையுடன் தூர நீக்கிவைக்க உங்களைத் தூண்டும். இந்தத் தியான நாட்களில் செய்த யோசனையில், அவனவனுக்குப் பாவத்துக்கு ஏதுவான சந்தர்ப்பங்கள் எவையென்று தோன்றி இருக்கும். இடம், ஏவல், காலம், தொழில், கூடும் பேர்வழிகள் எப்பேர்ப்பட்டவைகள் என்று சோதித்தீர்கள். இவைகள் வழியாய் பாவம் எப்படி வந்ததென்று உங்களுக்கு இப்போது தெரியும். தெரிந்தால் பாவம் வரும் வழிகளை அடைத்துப்போடுங்கள். பாவ சோதனைகள் வரும்போது உங்

கள் மனதில் உங்களை அறியாமலே பயம் உண்டாகும்படி பழகவேண்டும்.

மேலும் உங்களிடத்திலிருக்கும் நற்குண நற்செய்கைகளைப்பற்றி பெருமை பாராட்டிப் பேசவேண்டாம். தன்னைப் பெருமையாய் மெச்சிப்பேசுகிறவன் சிறுமைப்பட்டுச் சீரழிவான். வேத சம்பந்தமான அநுஷ்டான முறைமைகளைப் பழித்ததுபோல் குற்றம்பிடித்து குறைகூறவேண்டாம். உலகத்தை வெறுத்து, சந்நியாசிகளாய், தர்ம ஒழுக்கத்தில் நடப்பவர்களை நிந்தித்துப் பழிக்கவேண்டாம். பஞ்சேந்திரியங்கள் இஷ்டம்போல் செல்லும் வழியில் விடாமல் காப்பது அவசியம். கண் வ ழி யா ய் ப் பாவம் எளிதாய் உள்ளே வரும். யோப் என்பவரைப்போல் உன் கண்களோடு ஒப்பந்தம்செய்து, அலங்காரமுள்ள எந்த முகத்தையும் நீ உற்றுப்பார்க்காதே. மனிதன் நாக்கு வெகு விஷமுள்ளது. வாயிலிருந்து வரும் வார்த்தை அம்புபோல் கேட்பவர் மனதில் தைக்கும். பேசுஞ் சொல்லை நிதானமாய்ச் சொல்லுவது புத்தி. உன் மனதில் உதிக்கும் ஒழுங்கற்ற யோசனைகளைத் துவக்கத்திலேயே அடக்கிச் சீர்ப்படுத்துவது நலம். நீ தனியே இருக்கும் போது சர்வேசுரன்முன் நிற்கிறாய் என்பதை மறவாதே. இருளிலும் மருளின்றி தெளிவாய் எல்லாம் அவர் அறிகிறார்; தேவ சந்நிதிமுன் நீ எப்போதும், எந்த இடத்திலுமிருக்கிறாய் என்பதை நினைத்து நடந்தால் பாவத்தைச் செய்யமாட்டாய்.

நாள்தோறும் காலையிலும் இராத்திரியிலும் ஜெபஞ் செய்வது கிறீஸ்துவர்களுக்கு யோக்கியம். குடும்பத்திலிருப்பவர்கள் குடும்ப சகிதமாய் ஜெபமாலை பிரார்த்தனை செய்வது குடும்பத்துக்கு இரக்ஷணிய ஆதாரம். தேவ பலி பூசையைக் கூடுமானபோது நாள்தோறும் காண்பது அந்த நாளில் செய்யும் வேலைகளுக்கு அநுகூலமானது. தேவநற் கருணையில் உனக்காகக் காத்திருக்கும் உன் அன்புள்ள இரக்ஷகரை ஒருநாளில் ஒருவிசையாகிலும் சந்திக்கும்படி போ. விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேக முயற்சிகளை அடிக்கடி சொல்லி உன் மனதை வேதசத்தியங்களில் ஸ்திரப்படுத்து.

பாவசங்கீர்த்தனத்தைக் கூடுமானபோது வாரத்துக்கு ஒருவிசை செய்யப் பழகு. தேவநற்கருணை அன்றாடம் அவசியமான அற்புத போஜனம். சுத்தமான இருதயத்தோடு, தக்க ஆயத்தத்துடன், கூடுமானால் நாள்தோறும், இந்தத் தேவ போஜனத்தைச் சாப்பிடுவது உன் இரக்ஷணியத்தின் நிச்சயமான அடைமானம். சேசுநாதருடைய பரிசுத்த இருதயத்தின்பேரில் உன் மனதில் பத்தியும் சிநேகமும் உண்டாக ஏதுவாயிருக்கும் அநுஷ்டானங்களைப் பிரமாணிக்கமுடன் செய். ஜெப அப்போஸ்தல சபை இதற்கு வெகு அநுகூலமான வழி. நீயும் உன்னோடிருப்பவர்களும் இந்தச் சபையில் சேர்ந்து ஒழுங்காய் நடக்கும்படி உன்னால் கூடிய முயற்சி யாவும் செய். ஞான முயற்சிகள் அடங்கிய தியானத்தை வருஷத்துக்கு ஒரு விசை செய்யும்படி உன்னால் கூடிய பிரயத்தனமெல்லாஞ் செய்வாய் என்பது உன் தீர்மானமாயிருக்கட்டும்.

அன்றியும் தேவதாயான தேவமரியை உன் தாயாய்த் தெரிந்துகொண்டு அந்தத் தாயின் அடைக்கலஞ் சேர். உன் இரக்ஷணிய அலுவலை உன் தாயின் கையில் ஒப்புவித்து அவள் உனக்கு உதவி செய்யும்படி நாள்தோறும் மன்றாடு. ஆபத்து சோதனை வேளையில் உன் தாயைத் துணையாய்க் கூப்பிட மறந்துபோகாதே. என் ஆண்டவளே! என் தாயாரே! என்று நீ சொந்தம் பாராட்டி கூப்பிட்டால், உன் தாயும் சொந்தம் பாராட்டி உனக்குத் துணையாய் வருவாள்.

உன் தாய் இஷ்டப்பிரசாதத்தில் ஜென்மித்து, இஷ்டப்பிரசாதத்தில் வளர்ந்து, இஷ்டப்பிரசாதத்தில் பூரணம் பெற்று மரித்த பாக்கியவதி. நீயும் இஷ்டப்பிரசாதத்தில் என்றும் வளர்ந்து இஷ்டப்பிரசாதத்தில் முற்றுமுடிய நிலைநின்று, உன் தாய்க்கு யோக்கிய பிள்ளையாய் மரிக்கும்படி உன் தாயை நாள்தோறும் கேள். உன் தாய் உனக்குத் தேவையான வரங்களெல்லாங் கொடுக்கும்படி செல்வாக்கும் அதிகாரமும் பெற்ற அற்புத உத்தமி. அவளுடைய தயாள அன்புக்கு அளவுமில்லை எல்லையுமில்லை. நீயே உனக்கு நன்மை செய்ய ஆசையாயிருப்பதைப்பார்க்கிலும்

உன் தாய் அதிக ஆசையாயிருக்கிறாளென்பதை மறந்து போகாதே.

உன் ஜீவியத்தின் கடைசி நாளிலே நீ அவஸ்தையாய் விழுந்து, உடல் வாடி, நாடி சுருங்கி, இருதயம் பதைத்து, முகம் வெளுத்து, கண்கள் மங்கி, வாய் விரிந்து, பேச சக்தியின்றி, கிடந்த கிடையில் மரக்கட்டைபோல் நீ கிடக்கும்போது, யார் உன்னை மறந்தாலும் தேவதாயான உன் தாய் உன்னை மறக்கமாட்டாள். உன் மோக்ஷ தாய் உன் கிட்ட வந்து உனக்கு உதவியாய் நின்று, பரிசுத்தமான நினைவுகள் உன் மனதில் உண்டாகச்செய்து, தேவதிரவிய அநுமானங்களைத் தகுந்தவிதமாய் நீ பெற்றுச் சாகும்படி கிருபை செய்தால் நீயே பாக்கியவான்.

உன் ஜன்ம சத்துருவான பசாசு அந்தக் கடைசி நாளில் உன்னைத் தன் கைக்குள் இழுக்கும்படி, கர்ச்சிக்குஞ் சிங்கம்போல் உன்னைச் சுற்றி நெருங்கிவந்து உனக்குள் பிரவேசிக்க வழி பார்க்கும். அப்போது நரக பசாசின் தலையை நசுக்கி மிதித்த பரம தேவதாய் உன் சமீபத்தில் நின்றால் உனக்குப் பயம் உண்டோ? நீ அவஸ்தையாய்ப் படுத்திருக்கும் பாயின் அருகில் உன் தலைமாட்டின் ஒரு பக்கத்தில் உன் அன்புள்ள தாய் தேவ மரியும் வேறே பக்கத்தில் நீ உருக்கமாய் சிநேகித்த சேசுநாதரும் இருந்து உனக்கு ஆறுதலான வார்த்தைகள் சொல்லி, உன் மனதில் விசுவாசமும், நம்பிக்கையும், சிநேகமும், பிரகாசிக்கும்படி தூண்டி வளர்த்தால் உன் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம், உன் பாக்கியமே பாக்கியம். சேசுநாதரும் தேவ ஆண்டவளும் இருக்கும் இடத்தில் சம்மனசுகள் இருக்கிறார்கள்; மோக்ஷவாசிகளுமிருக்கிறார்கள். உன் மோக்ஷமே அங்கே துவக்குகின்றது. பாக்கியமான மரணத்துக்குப் பாதுகாவலான அர்ச். சூசையப்பருடைய அடைக்கலத்தை நீ தேடி வந்தால் அவர் உன் அவஸ்தை வேளையில் உன்னைக் கைவிட மாட்டார். விசேஷித்தவிதமாய் உனக்கு உதவிசெய்வார்.

ஓ! சேசுவின் பிரிய பிள்ளைகளே! அவஸ்தை நாளாகிற உங்கள் ஜீவியத்தின் கடைசி நாள் ஒருநாள் இல்லா

விடில் ஒருநாள் சடுதியில் வரலாம். உங்கள் இளம்பிராயத்தில் வரலாம். நரைதிரை விழுந்த விர்த்தாப்பிய வயதிலே வரலாம். உங்கள் வீட்டிலோ, பந்து ஜனங்கள் மத்தியிலோ, அல்லது காட்டிலோ, தன்னந்தனியனாகவோ, அவஸ்தையாய் நீங்கள் விழலாம். ஆனால் எந்த இடத்திலும் உன் கடைசிநாள் வந்தாலும், உன் மோக்ஷ தாய் உன்னை ஆதரித்தால் உனக்கு யாதொரு ஆபத்தும் வரமாட்டாது. அந்த நாள் உனக்குப் பாக்கியமுள்ள நாளாகவே இருக்கும். உன் தாய் உன் ஆத்தும இரக்ஷணியத்துக்கு ஏதுவானதெல்லாம் உன் கடைசி நாளில் யாதொரு குறையின்றி இருக்கும்படி வேண்டிய பிரயத்தனங்களெல்லாம் செய்வாள். ஆபத்து வருமுன் அதை அறிந்து தடுப்பாள். விக்கினங்களைத் தூர அகற்றுவாள். நீ போகும் பாதையைச் சீர்ப்படுத்துவாள்.

கடைசியில் சர்வேசுரனே உனக்குக் குறித்த உன் ஜீவிய நாளின் கடைசி மணிநேரம் வரும். அதே நிமிஷத்தில் இந்தப் பரதேசமாகிய பூமியைவிட்டு உன் நித்தியமான வீட்டுக்குப் போவாய். அங்கே பாவமில்லை, பயமில்லை, துன்பமில்லை, துரோகமில்லை, நோவில்லை, சாவில்லை; முடியாத பாக்கியம், குறையாத சந்தோஷம், நித்திய ஆனந்தம், நிலைநிற்கும் ஜீவியம், பேரின்ப சிநேகம், சதாகாலம் என்றென்றும் நீ அநுபவிப்பாய். தயையுள்ள சர்வேசுரன் ஞான முயற்சிகளை நல்ல மனதோடு செய்து இன்று முடிக்கும் உங்கள் அனைவோருக்கும் இந்த சம்பூரணமான மோக்ஷானந்த பாக்கியம் கிருபையாய்க் கொடுப்பாராக.